# நாட்டுப்புற வழிபாட்டு மரபுகளும் நம்பிக்கைகளும்



பதிப்பாசிரியர்
முனைவர் இரா. சந்திரசேகரன்

**மகாகவி பாரதியார் அறக்கட்டளை
நிதியுதவியுடன் இந்த நூல்
வெளியிடப்படுகிறது**

இந்த நூலின் விற்பனையில் வருவாய் ஏதேனும் கிடைக்குமாயின், மகாகவிபாரதி அறக்கட்டளை வழியாகத் தமிழியல் ஆய்வரங்குகள் / இலக்கிய நிகழ்ச்சிகள் மற்றும் ஏழை மாணவர்களுக்கு உயர் கல்விக்கான நிதியுதவி ஆகியவற்றிற்காக அத்தொகை முழுதும் செலவழிக்கப்படும்

**மகாகவி பாரதியார் நூலகம்
மகாகவி பாரதியார் அறக்கட்டளை**

# நாட்டுப்புற வழிபாட்டு மரபுகளும் நம்பிக்கைகளும்

முதன்மைப் பதிப்பாசிரியர்

**முனைவர் இரா. சந்திரசேகரன்,**

எம்.ஏ.,எம்.ஏ.,எம்.ஏ.,எம்.ஏ.,பிஎச்.டி.(சென்),பிஎச்.டி.(கலி)

தமிழியல் துறைத்தலைவர்,

பாரதியார் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர் – 641 046.

பதிப்பாசிரியர்

**முனைவர் முல்லை வீ. சண்முகம்,** எம்.ஏ.,எம்ஃபில்.,பிஎச்.டி.,

**முனைவர் இ. சேனாவரையன்,** எம்.ஏ.,எம்ஃபில்.,பிஎச்.டி.,

## BIBLIOGRAPHICAL DATA

| | | |
|---|---|---|
| TITLE OF THE BOOK | * | NAATTUPPURA VAZHIPAATTU MARAPUGALUM NAMBIKKAIGALUM |
| SUBJECT | * | TAMIL LITERATURE / ESSAYS IN FOLKLORE |
| LANGUAGE | * | TAMIL |
| EDITION/DATE | * | FIRST EDITION : DECEMBER 2003 |
| SIZE OF THE BOOK | * | DEMY 1/8 PRINTING POINT : 11 |
| NO. OF PAGES | * | 320 |
| NO. OF COPIES | * | 1000 |
| COMPUTER DESIGN | * | K. MURUGESAN |
| WRAPPER/DESIGN/RPINTING | * | MAKKAL ACHAGAM, CHENNAI - 2 |
| PUBLISHER | * | MAHAKAVI BHARATHIAR NUULAGAM |
| PRICE | * | Rs. 170/- |
| SALES | * | PUBLISHERS |



## CHIEF EDITOR

**Dr. R. CHANDRASEKARAN**
PROFESSOR AND HEAD,
DEPARTMENT OF TAMILOLOGY
BHARATHIAR UNIVERSITY
COIMBATORE - 641 046.

## EDITORS

**Dr. MULLAI V. SHANMUGAM,**
M.A., M.Phil.,Ph.D.,

**Dr. E. SENAVARAYAN,**
M.A., M.Phil.,Ph.D.,



## நூல் வெளியீடு : குறிப்பு

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | * | நாட்டுப்புற வழிபாட்டுமரபுகளும் நம்பிக்கைகளும் |
| பொருள் | * | தமிழ் இலக்கியம்/ நாட்டுப்புறவியல் கட்டுரைகள் |
| மொழி | * | தமிழ் |
| பதிப்பு : நாள் | * | முதற்பதிப்பு : டிசம்பர் 2003 |
| நூலின் அச்சின் அளவு | * | டெமி 1/8 : புள்ளி : 11 |
| பக்கங்கள் | * | 320 |
| படிகள் | * | 1000 |
| கணினி வரைவு | * | க. முருகேசன் |
| அட்டை/வடிவம்/நூலச்சு | * | மக்கள் அச்சகம், சென்னை – 2 |
| வெளியீடு | * | மகாகவி பாரதியார் நூலகம், கோவை – 641046 |
| விலை | * | ரூ. 170/– |
| விற்பனை உரிமை | * | வெளியீட்டாளருக்கு |

## நூல் வெளியீடு : விற்பனை உரிமை

மகாகவி பாரதியார் நூலகம்
யு.வி.ஆர். அரங்கம்மாள் இல்லம்
எண். 7, ஆர்.கே. நகர்,
நவாவூர் பிரிவு, மருதமலை சாலை
பாரதியார் பல்கலைக்கழகம் (அஞ்சல்)
கோயம்புத்தூர் – 641 046.

**MAHAKAVI BHARATHIAR NUULAGAM**
U.V.R RANGAMMAL ILLAM,
No. 7, R.K. NAGAR
NAVAVUR PIRIVU, MARUTHAMALAI ROAD,
BHARATHIAR UNIVERSITY POST
COIMBATORE - 641 046.

## நூலாக்கச் செயற்பாட்டில் பங்கேற்றோர்

### புரவலர்கள்

**பொறியாளர். திருமதி. ரம்யா இலட்சுமிநாராயணன்**
*பாஸ்டன் பல்கலைக்கழகம், அமெரிக்கா.*

**பொறியாளர். திரு. வெங்கடேசன் இலட்சுமிநாராயணன்**
*ஸ்டேட்சிடி நிறுவனம், பாஸ்டன், அமெரிக்கா.*

**மருத்துவர். செல்வி சௌம்யா சந்திரசேகரன்**
*பிரட்போர்டு மருத்துவமனை, இங்கிலாந்து.*

### நூல் வடிவாக்கம்

***முனைவர் மே.து. இராசுகுமார்,*** எம்.ஏ.,பிஎச்.டி.,
வரலாற்றியல் தமிழறிஞர் : சென்னை.

### நூல் வரைவாக்கம்

***முனைவர் க. முருகேசன்,*** *எம்.ஏ.,எம்ஃபில்.,பிஎச்.டி.*
***பேராசிரியர் து. மூர்த்தி,*** *எம்.காம்.,எம்ஃபில்.,பிஜிடிசிஏ.,*

### துணைப்பதிப்பாசிரியர்கள்

*சேலம் திரு. த. அண்ணாதுரை, எம்.ஏ.,எம்ஃபில் : பிஎச்.டி.,*
*கொத்தங்குளம் திரு.மு. நாகபாண்டி, எம்.ஏ. : பிஎச்.டி.,*
*வாதாபட்டி திரு. கு. சிவப்பிரகாசம், எம்.ஏ.,எம்ஃபில் : பிஎச்.டி.,*
*உடுமலைப்பேட்டை செல்வி. கோ. சுகன்யா, எம்.ஏ.,எம்ஃபில்,*
*பங்களாபுதூர் திரு. இரா. அருள்மணி, எம்.ஏ. : பிஎச்.டி.,*
*சேலம் திரு. அ. இலட்சுமிநரசு, எம்.ஏ.,எம்ஃபில்,*
*சேலம் திரு.ப. மோகன், எம்.ஏ.,எம்ஃபில் : பிஎச்.டி.,*

### அலுவல் செயலர்

***திரு. இரா. விஜயசந்திரன்,*** *எம்.ஏ.,எம்ஃபில்.: பிஎச்.டி.,*

# முன்னுரை

மண்ணும் புழுதியும், மரமும் செடிகளும், விலங்குகளும் பறவைகளும் என்று இயற்கையின் எளிமையான அடையாளங்களோடு தம் வாழ்தலின் சத்தியங்களை அனுபவித்துக்கொண்டிருக்கும் நாட்டுப்புறமக்கள் - வறுமையும், இயலாமையும், அறியாமையும் என்பவையான சிக்கல்களினூடே தம்மை ***வாழ்தலுக்குத்*** தகவமைத்துக் கொண்டு இருக்கிறார்கள். அழுகையும், அவலமும், அடக்குமுறையும், ஒதுக்குமுறையும் என்ற நசிவுகளினூடே தம்மைக் கரைந்து போகவிடாமல் எழுவதற்காக முயன்று கொண்டு இருக்கிறார்கள். ***வாழ்தல்*** என்பது உண்பதும், கழிப்பதும், அல்ல ; செல்வமும் செழிப்பும் அல்ல ; அவையனைத்திற்கும் மேலாக, ஏதோ ஒன்று என்பதாக வாழ்தலின் அர்த்தங்களை அவர்கள் தேடிக்கொண்டிருக்கிறார்கள் ; அன்பு, கருணை, கூட்டுறவு, தோழமை, கூடிவாழ்தல், பகிர்ந்தேற்றல் என்பன போன்ற அறக்கூறுகளையெல்லாம், புத்தகங்களில் படித்து மூளைக்குள் தகவல்களாகச் சேர்த்து வைத்துக் கொள்வதற்குப் பதிலாக, தத்தம் அனுபவங்களின் வழியாகச் செயல்படுத்திக்கொள்கிறார்கள். வழிபாடுகளும் நம்பிக்கைகளும் ஒருவகையில் இதற்கான வாயில்கள் தாம். நம்பிக்கையின் குரலாகவும், அடக்குமுறைகளுக்கு எதிரான வெடித்தெழுதல்களாகவும், மாறுதல்களை நோக்கிய சலனங்களாகவும் வரலாற்றின் பதிவுகளாக அவற்றை அமைத்துக்கொள்கிறார்கள். நாட்டுப்புற மக்களின் வழிபாட்டு மரபுகள் என்பவை, மூடத்தனமான பழக்கவழக்கங்கள் அல்ல ; அவை அவர்கள் வாழ்தலின் அசைவுகள், எத்தனை இழிவுகள், துன்பங்கள், அழிவுகள் வந்தாலும் நொறுங்கிப்போய்விடாமல் தம்மைத் தக்கவைத்துக் கொள்வதற்காக, தம்மைச் சிதைவுக்குள் புதைத்துவிடாமல் நிலைநிறுத்திக்கொள்வதற்காக மேற்கொள்ளும் அசைவுகள். நவீனப்படுத்தப்பட்ட அறிவியல் வெளிப்பாடுகள் இல்லாமல் இருக்கலாம் : அணுகுமுறைகள் இல்லாமல் இருக்கலாம் ; ஆனால், காலங்களைக் கடந்த அறநெறிக் கூர்மையுடன், மானுடப் பேரமைதியைத் தொலைநோக்கிய இயக்கம் இருக்கிறது. தமது வாழ்தலை மகிழ்ச்சிப்படுத்திக் கொள்ளும் ஆக்கம் இருக்கிறது.

தமிழ்நாட்டின் பல்வேறு வட்டாரங்களில், பல்வேறு இனக்குழுக்களிடையே நிகழ்ந்து வரும் வழிபாட்டு மரபுகளும், வழக்காற்று நம்பிக்கைகளும் சமூக, பண்பாட்டு வரலாற்றின் பதிவுகள்; நமது பீடும் பெருமையும் காணக்கிடைக்கும் அதே நேரத்தில், இழிவும், துன்பமும் சேர்ந்துதான் கிடைக்கின்றன. குரூரங்களும், அடக்குமுறை களும் சேர்ந்துதான் கிடைக்கின்றன. அவற்றை அறிந்து கொள்வதென்பது, எங்கிருந்து மீண்டெழ வேண்டுமென்பதையும் உள்ளடக்குவதாகும். இவற்றை ஆவணப்படுத்துதல் நாட்டார் வழக்காற்றியல் ஆய்வில் மிக முக்கியமான அசைவு. இதில் ஈடுபாடு கொண்ட அறுபத்தியாறு அறிஞர்கள், ஆய்வாளர்கள் இந்நூலில் கைகோர்த்திருக்கிறார்கள். பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் முதல் இளைய ஆய்வாளர்கள் வரை பல்வேறு தரநிலைகளில் அவர்கள் இயங்கியுள்ளார்கள். குறைகள் இருக்கக்கூடும் ; பலவீனங்கள் இருக்கக்கூடும் ; தெளிவின்மை இருக்கக்கூடும். ஆனால் முயற்சி என்னவோ சத்தியமானது. குறைகள் இருக்கிறது என்பது தெரியும்போதுதான், அவற்றை நீக்குவதற்கான செயற்பாடும் தொடங்கி மேலெழ முடியும்? இத்துணைபேர் கூடுவதும், கூடிக் கருத்தாடுவதும், பகிர்ந்து கொள்வதும், புதியன பெற்று வளம் கொள்வதும், தம்மைச் செழுமைப்படுத்திக் கொள்வதும் எவ்வளவு நல்ல செயற்பாடு !

இந்தச் செயற்பாட்டில் கைசேர்த்துக் கொண்ட இவர்கள் போற்றுதலுக்குரியவர்கள். தேடிச்சோறு நிதம் தின்று, வெட்டிச் சிறுக்கதைகள் பேசும் வீணர்களாக - செயல்படுபவர்களையெல்லாம் குறைசொல்லிக்கொண்டு வாயடித்து வாழும் வம்பர்களாக - மண்ணின் மேலே வாழ்ந்தாலும் சிந்தனையாலும் செயலாலும் தம்மை மண்ணுக்குள் புதைத்துக்கொண்டவர்களான ஜடங்களாக-வாழ்தலை நசித்துக் கொள்ளாமல், சிறகுகளை விரித்து மேலெழ, கைகளை விரித்துச் செயல்தழுவ வந்த இந்த அறிஞர் பெருமக்களுக்கு ஆயிரம் ஆயிரம் வணக்கங்கள், ஆயிரம் ஆயிரம் நன்றிகள்.

கட்டுரைகளின் கருத்துக்கள் அனைத்தும் அவற்றைப் படைத்தவர்களின் அறிவுரிமை, அவற்றை ஒருங்கிணைக்கும் வாய்ப்பு எமக்கு மிகப்பெரும் பேறு. சிறுமணலளவான முயற்சி என அறிவோம். எனினும் மலையளவான மகிழ்ச்சியை உணர்கிறோம்.

**முனைவர் இரா. சந்திரசேகரன்**

# மகாகவி பாரதியார் நூலகம்

## சிறந்த நூல்கள்

1. உடுமலை நாராயணகவி : பன்முகப் பார்வை. : விலை ரூ. 100.

*(எண்பத்திரண்டு அறிஞர்களின் ஆய்வுக் கட்டுரைகள்)*

2. நாமக்கல் கவிஞர் : பன்முகப்பார்வை. : விலை ரூ. 100.

*(முப்பத்தைந்து அறிஞர்களின் ஆய்வுக் கட்டுரைகள்)*

3. நாமக்கல் கவிஞர் : பன்முக ஆய்வு. : விலை ரூ. 100.

*(முப்பத்தைந்து அறிஞர்களின் ஆய்வுக் கட்டுரைகள்)*

4. சங்க இலக்கியம் : பன்முகப் பார்வை. : விலை ரூ. 100.

*(முப்பத்தைந்து அறிஞர்களின் ஆய்வுக் கட்டுரைகள்)*

5. சங்க இலக்கியம் : பன்முக ஆய்வு. : விலை ரூ. 100.

*(முப்பத்தொன்பது அறிஞர்களின் ஆய்வுக் கட்டுரைகள்)*

6. சங்க இலக்கியம் : பன்முக நோக்கு. : விலை ரூ. 100.

*(நாற்பத்தியொரு அறிஞர்களின் ஆய்வுக் கட்டுரைகள்)*

7. மொழிஞாயிறு தேவ நேயப் பாவாணர் : பன்முகப் பார்வை : விலை ரூ. 125.

*(நாற்பத்து மூன்று அறிஞர்களின் ஆய்வுக்கட்டுரைகள்)*

8. கிறித்துவ இலக்கியம் : பன்முகப் பார்வை. : விலை ரூ. 125.

*(நாற்பத்தியொரு அறிஞர்களின் ஆய்வுக் கட்டுரைகள்)*

9. இசுலாமிய இலக்கியம் : பன்முகப் பார்வை : விலை ரூ. 125.

*(நாற்பத்து நான்கு அறிஞர்களின் ஆய்வுக் கட்டுரைகள்)*

10. தமிழ் இலக்கியம் : வாழ்வியல் விழுமியம் : பன்முகப் பார்வை : விலை ரூ. 125.

*(நாற்பது அறிஞர்களின் ஆய்வுக் கட்டுரைகள்)*

11. மகாகவி பாரதி : பன்முகப்பார்வை : விலை ரூ. 125.

*(முப்பத்தொன்பது அறிஞர்களின் ஆய்வுக் கட்டுரைகள்)*

## மகாகவி பாரதியார் நூலகம்

12. மகாகவி பாரதி : பன்முக ஆய்வு : விலை ரூ. 150.
*(ஐம்பத்து மூன்று அறிஞர்களின் கட்டுரைகள்)*

13. தமிழ் கற்பித்தல் : அணுகுமுறைகளும் செயல் நெறிகளும் : விலை ரூ. 100.
*(முனைவர் இரா. சந்திரசேகரன்)*

14. உ.வே.சா. காலத்தில் தமிழர் வாழ்வியல் : விலை ரூ. 100.
*(முனைவர் செ. சுப்பிரமணியன்)*

15. தமிழ் இலக்கியம் : வாழ்வியல் அறம் : விலை ரூ. 150.
*(நாற்பத்து எட்டு அறிஞர்களின் ஆய்வுக் கட்டுரைகள்)*

16. நாட்டுப்புற வழிபாட்டு மரபுகள் : விலை ரூ. 150.
*(ஐம்பத்தியொரு அறிஞர்களின் ஆய்வுக் கட்டுரைகள்)*

17. சங்க இலக்கியம் : இலக்கிய வளமும் வாழ்வியல் அறமும்: விலை ரூ. 150.
*(அறுபது அறிஞர்களின் ஆய்வுக் கட்டுரைகள்)*

18. தமிழ் இலக்கியம் : வாழ்வியல் நெறி : விலை ரூ. 150.
*(நாற்பது அறிஞர்களின் ஆய்வுக் கட்டுரைகள்)*

19. கவியரசு கண்ணதாசன்: : விலை ரூ. 150.
கவிதைச் செழுமையும் கருத்தியல் மேன்மையும்
*(ஐம்பத்தியொரு அறிஞர்களின் ஆய்வுக்கட்டுரைகள்)*

20. மகாகவி பாரதி : கருத்தியல் திரட்டு : விலை ரூ. 150.
*(நாற்பது அறிஞர்களின் ஆய்வுக் கட்டுரைகள்)*

21. மகாகவி பாரதி : பன்முக நோக்கு : விலை ரூ. 125.
*(முப்பத்து ஐந்து அறிஞர்களின் ஆய்வுக் கட்டுரைகள்)*

22. உடுமலை வட்டார நாட்டுப்புறப் பாடல்கள் :
கருத்தமைப்பும் மக்கள் பங்கேற்பும் : விலை ரூ. 125.
*(முனைவர் சு. சுப்பிரமணியன்)*

23. இசுலாமியச் சிறு கதைகளில் வாழ்நெறி மதிப்பியல் : விலை ரூ. 125.
*(முனைவர் ச. அ. சையது அகமது பிரோசு)*

# பொருளடக்கம்


1. **அமிர்தஜோதி இரா. சந்திரசேகரன்,** *எம்எஸ்ஸி பிஎச்டி*

   மாடு கட்டிபாளையம் ரங்கம்மா வழிபாடு 13

2. **ந. அமுதா,** *எம்ஏ எம்ஃபில் பிஎச்டி*

   நாட்டுப்புற நம்பிக்கைகள் 21

3. **சி. அயோத்தி,** *எம்ஏ எம்ஃபில் பிஎச்டி*

   முத்தாலம்மன் கோவில் : கொடிமரம் கொணர்தல் தேவேந்திரகுலத்தவரின் பங்களிப்பு 25

4. **இரா. அருள்மணி,** *எம்ஏ எம்ஃபில் : பிஎச்டி*

   பிரம்ம தேசம் பெத்தாரணசாமி வழிபாடு 31

5. **கே.பி. அழகம்மை,** *எம்ஏ எம்ஃபில் பிஎச்டி*

   நாட்டுக்கோட்டை நகரத்தார் சமுதாயத்தில் படைப்பு மரபும் நோக்கமும் 36

6. **இரா. அனந்தலட்சுமி,** *எம்ஏ எம்ஃபில் : பிஎச்டி*

   ஸ்ரீபாலகுருநாதசாமி வழிபாடு 41

7. **ந. இரகுதேவன்,** *எம்ஏ எம்ஃபில் : பிஎச்டி*

   எட்டிமாணிக்கப்பட்டி – கன்னிமார் இருவர் வழிபாடு 44

8. **வே. இரஞ்சித்குமார்,** *எம்ஏ எம்ஃபில் : பிஎச்டி*

   தண்டு மாரியம்மன் வழிபாடும் விழாக்களும் 50

9. **இரா. இரமேஷ்குமார்,** *எம்ஏ எம்ஃபில்*

   தென்னம்பாளையம் முத்தையன் கோயில் பங்குனித் திருவிழா 52

10. **இராசப்பா பெரியசாமி,** *எம்ஏ எம்ஃபில் பிஎச்டி*

    பட்டிப் பொங்கல் 58

11. **க. இராமலிங்கம்,** *எம்ஏ எம்ஃபில்*

    நாட்டுப்புற சிறுதெய்வ வழிபாடுகள் 62

12. **சு. இராஜேந்திரன்,** *எம்ஏ எம்ஃபில்*

    பேளுக்குறிச்சி மூப்பனார் வழிபாடும் பாட்டப்பன் வழிபாடும் 66

13. **கு. இராஜேந்திரன்,** *எம்ஏ எம்ஃபில் பிஎச்டி*
முதுவான் பழங்குடியினரின் பொங்கல் வழிபாடு 70

14. **கு. கதிரேசன்,** *எம்ஏ எம்ஃபில் பிஎச்டி*
பத்திரகாளியம்மன் வழிபாடும் பண்பாட்டு மரபுகளும் 76

15. **ச. கலைச்செல்வன்,** *எம்ஏ எம்ஃபில் பிஎச்டி*
வேனூர்புதூர் காளியம்மன் : வழிபாட்டு மரபுகள் 82

16. **ச. கலைவாணி,** *எம்ஏ எம்ஃபில் : பிஎச்டி*
நரிக்குறவரின் வழிபாட்டு மரபுகள் 88

17. **எ. கற்பகம்,** *எம்ஏ எம்ஃபில் : பிஎச்டி*
மேட்டு மகாதானபுரம் : மகாலட்சுமி வழிபாடு
தேங்காய் உடைப்பு – நேர்த்திக்கடன் 92

18. **மா. கார்த்திகேயன்,** *எம்ஏ எம்ஃபில்*
மாரியனூர் மாரியம்மன் வழிபாடு 95

19. **வே. சசிகலா,** *எம்ஏ எம்ஃபில் பிஎச்டி*
கணக்குப்பிள்ளைவலசை புன்னை வனத்தம்மன் வழிபாடு 98

20. **செ. சத்தியநாதன்,** *எம்ஏ எம்ஃபில்*
பக்கநாடு ஸ்ரீபெரியாண்டிச்சி அம்மன் வழிபாட்டு மரபுகள் 102

21. **பி. சத்யா,** *எம்ஏ எம்ஃபில் : பிஎச்டி*
மரப்பரை அங்காள பரமேஸ்வரி அம்மன்,
பெரியாண்டிச்சி அம்மன் வழிபாடு 108

22. **இரா. சந்திரசேகரன்,** *எம்ஏ எம்ஃபில் பிஎச்டி*
நாட்டுப்புற வழிபாடும் – மக்கட்பெயரும் 113

23. **இரா. சந்திரசேகரன்,** *எம்ஏ பிஎச்டி*
கூத்தாண்டை : வழிபாட்டு மரபு 116

24. **சந்திராகிருட்டிணன்,** *எம்ஏ எம்ஃபில் பிஎச்டி*
ஒடுப்பறை – நாகரம்மன் விழாவும் வழிபாடும் 129

25. **செ. சரவணன்,** *எம்ஏ எம்ஃபில் : பிஎச்டி*
திருச்சுழி – மாணிக்கக்கூத்த ஐயனார்
வழிபாட்டுச் சடங்குகள் 131

**26. ஜோ. சரவணன்,** *எம்ஏ எம்ஃபில் பிஎச்டி*

படுகரின் வேளாண்மை வழிபாடுகள் 137

**27. கோ. சாமிதுரை,** *எம்ஏ எம்ஃபில்*

ஒட்டடி பெரியசாமி வழிபாட்டு மரபுகள் 141

**28. இரா. சிவங்கரி,** *எம்ஏ எம்ஃபில் பிஎச்டி*

நாட்டுப்புற வழிபாட்டு மரபுகளில் கிடாவெட்டு 146

**29. கு. சிவப்பிரகாசம்,** *எம்ஏ எம்ஃபில் : பிஎச்டி*

தாழமுனியப்பன் வழிபாடு 151

**30. அ. சின்னதுரை,** *எம்ஏ எம்ஃபில்*

வீரங்கி அய்யனார் வழிபாடு 153

**31. ஆ. சின்னதுரை,** *எம்ஏ எம்ஃபில்*

தோட்டப்பாடி கன்னிமார் தேவதைகளின் வழிபாட்டு மரபு 157

**32. அரு. சுந்தரபாண்டியன்,** *எம்ஏ எம்ஃபில்*

குலாலர் குல – கன்னிமார் கருப்பண்ணசாமி
வழிபாட்டு மரபுகள் 162

**33. மா. சுப்புரத்தினம்,** *எம்ஏ எம்ஃபில் பிஎச்டி*

ஆவி வழிபாட்டின் எச்சம் 165

**34. வே. செல்வசுப்பிரமணியன்,** *எம்ஏ எம்ஃபில் பிஎச்டி*

திரௌபதி அம்மன் வழிபாடும் வேண்டுதல்களும் 169

**35. ச. சோமசுந்தரம்,** *எம்ஏ எம்ஃபில் பிஎச்டி*

கொல்லிமலை மக்களும் மரபுகளும் 164

**36. சு. ஞானப்பூங்கோதை,** *எம்ஏ எம்ஃபில் பிஎச்டி*

பருவாச்சிப்பட்டத்தாரின் கன்னிமார்சாமி வழிபாடு 179

**37. வை.தர்மலிங்கம்,** *எம்ஏ எம்ஃபில்*

சார்வாய்ப்புதூர் கிராமச் சிறு தெய்வங்கள் 185

**38. செ. தேவராஜ்,** *எம்ஏ எம்ஃபில் : பிஎச்டி*

காஞ்சிக்கூவல் நாட்டுச் சீதேவியம்மன் வழிபாடு 190

**39. மு. நடராசன்,** *எம்ஏ எம்ஃபில்*

தொட்டிய நாயக்கர் சமூக நடுகல் வழிபாடு 194

**40. மு. நாகபாண்டி,** *எம்ஏ எம்ஃபில் : பிஎச்டி*
பெரிய கருங்கு வழிபாட்டு மரபுகள் 198

**41. வெ.அ. நாகரத்தினம்,** *எம்ஏ எம்ஃபில் பிஎச்டி*
அகமுடையார் குலதெய்வ வழிபாடு 201

**42. கோ. நாராயணன்,** *எம்ஏ எம்ஃபில் : பிஎச்டி*
அகமுடையார் குலதெய்வ வழிபாடு 205

**43. எஸ். நிர்மலா,** *எம்ஏ எம்ஃபில் பிஎச்டி*
கீரம்பூர் எடுக்கை அம்மன் வழிபாடு 208

**44. பா. நேருஜி,** *எம்ஏ எம்ஃபில் : பிஎச்டி*
கருப்பண சாமி வழிபாட்டு மரபுகள் 212

**45. சு. பழனிக்குமார்,** *எம்ஏ எம்ஃபில்*
முனியப்ப சாமி வழிபாட்டுக் கூறுகள் 218

**46. ச. பாலமுருகன்,** *எம்ஏ எம்ஃபில் பிஎச்டி*
கொல்லிமலை பழங்குடி மக்களின் நம்பிக்கைகள் 222

**47. ஜெ. பிறீடா மேபல் ராணி,** *எம்ஏ எம்ஃபில் : பிஎச்டி*
குமரி மாவட்ட இஸ்லாமியர்களின் தர்கா வழிபாடு 227

**48. சி. பிரபாகரன்,** *எம்ஏ*
மேலப்பழுவூர் கிராம வடபத்ர காளியம்மன் வழிபாட்டு மரபுகள் 232

**49. கு. பெரியசாமி,** *எம்ஏ எம்ஃபில் : பிஎச்டி*
முத்தலாம்மன் வழிபாட்டு மரபு 235

**50. க.இல.மகேந்திரன்,** *எம்ஏ எம்ஃபில் : பிஎச்டி*
தேவேந்திர குல வேளாளரின் சந்திரசூரியன் குலதெய்வ வழிபாடு 240

**51. வெ. மனோகரன்,** *எம்ஏ எம்ஃபில் : பிஎச்டி*
நீலகிரித் தோதவர் இனமரபும் வழிபாடும் 245

**52. பெ. முருகன்,** *எம்ஏ எம்ஃபில் பிஎச்டி*
அண்ணன்மார் வழிபாட்டில் பன்றி 249

**53. மு. முருகேஸ்வரி,** *எம்ஏ எம்ஃபில் : பிஎச்டி*
பழனி முருகன் கோயில் வழிபாட்டு முறைகளும் உணவுகளும் 254

**54. முல்லை சண்முகம்,** *எம்ஏ எம்ஃபில் பிஎச்டி*

குடி தொம்பரா இனமக்களின் குலதெய்வங்களும் வழிபாட்டு முறைகளும் 260

**55. எம். மெஹமுதா,** *எம்ஏ எம்ஃபில் : பிஎச்டி*

இஸ்லாமிய வழிபாடுகளும் மரபுகளும் 265

**56. தி. ரமா,** *எம்ஏ எம்ஃபில் : பிஎச்டி*

சிறுதெய்வ வழிபாடுகளும் கருவிகளும் 269

**57. ரா.ச. ராஜஸ்ரீ,** *எம்ஏ எம்ஃபில் : பிஎச்டி*

காணிக்காரர்களின் வழிபாட்டு முறைகள் 274

**58. அ. லட்சுமிநரசு,** *எம்ஏ எம்ஃபில்*

வனப்பிடாரி அம்மன் வழிபாட்டு மரபுகள் 280

**59. தா. லிற்றில் மேரி,** *எம்ஏ எம்ஃபில் : பிஎச்டி*

கொல்லங்கோடு முடிப்புரை அருள்மிகு பத்திரகாளி அம்மன் கதைப்பாடல் காட்டும் வழிபாட்டு மரபும் – நம்பிக்கையும் 283

**60. சி. வாசுகி,** *எம்ஏ எம்ஃபில் பிஎச்டி*

நாட்டுப்புற வழிபாட்டுச் சடங்குகள் 290

**61. எஸ். விமலா,** *எம்ஏ எம்ஃபில் : பிஎச்டி*

வெள்ளக்கோவில் வீரக்குமார சாமி வழிபாடு 293

**62. இரா. விஜயன்,** *எம்ஏ*

நவாப்பழத்தம்மன் குலதெய்வ வழிபாட்டு மரபுகள் 297

**63. க. வெங்கடேசன்,** *எம்ஏ எம்ஃபில் : பிஎச்டி*

வேளாண்மைத் தொழிலாளர்களின் வழிபாட்டு மரபுகள் 300

**64. நா. வேல்முருகன்,** *எம்ஏ*

அய்யனூர் வண்டிக்கருப்பசுவாமி வழிபாட்டு மரபுகள் 306

**65. க. ஜெயலட்சுமி,** *எம்ஏ எம்ஃபில் : பிஎச்டி*

நடுகல் வழிபாடும் நாட்டுப்புறக் கதைப்பாடல்களும் 310

**66. முனைவர் வெ. ஜெயலெட்சுமி,** *எம்ஏ எம்ஃபில் பிஎச்டி*

காட்டு நாயக்கர் வழிபாட்டுநெறி 316

# மாடுகட்டிபாளையம் ரங்கம்மா வழிபாடு

**முனைவர் அமிர்தசோதி இரா.சந்திரசேகரன்**
எம்.ஏ.,எம்.ஏ.,எம்.ஏ.,எம்.ஏ.,எம்.எஸ்ஸி., எம்.எட்., பிஎச்.டி., எட்டெக்.,
*கிருஷ்ணா பொறியியல் மற்றும் தொழில்நுட்பக்கல்லூரி, கோவை.*

ரங்கம்மா வழிபாடு, கம்மகுலத்தின் நம்புரார் துக்கின்னார் குலப்பிரிவினரால் மாடுகட்டிபாளையம் ரங்கம்மா கோவிலை மையமாக வைத்து ஏறத்தாழ நான்கு நூற்றாண்டுகளாக நடைமுறையில் இருந்து வருகிறது. பெரியார் மாவட்டம் விஜயமங்கலம் - சென்னிமலை சாலையில் விஜயமங்கலத்திலிருந்து ஆறு கிலோமீட்டர் தொலைவில் மாடுகட்டிபாளையம் அமைந்துள்ளது. தீயில் இறங்கி (அக்கினி குண்டம்) மரணமடைந்த ரங்கம்மா நினைவாக, அவள் தந்தை கொண்டமநாயுடு அவர்களால் கட்டப்பட்ட கோயில் இது என்று நம்புகிறார்கள். ஒரே கல்லில் சிலைவடிக்கப்பட்டு, உள்ளே நேரே செல்லமுடியாமல் கற்பலகைகளால் அமைக்கப்பட்ட கோவில் பூசாரி பக்கவாட்டில் அமர்ந்துதான் செல்லமுடியும். நானூறு ஆண்டுகட்கு முன் கட்டப்பட்ட கோவில் இன்றும் அப்படியே உள்ளது. சுற்றிலும் கருடகம்பம், எல்லம்ம ரேணுகாதேவி, அங்காளம்மன் கோவில்கள் கட்டப்பட்டுள்ளன. நம்புரார், துக்கின்னாரின் குலத்தெய்வமாக ரங்கம்மா கருதப்படுகிறாள். ரங்கம்மா வழிபாட்டின் தோற்ற வரலாற்றுக் கதையையும், உள்ளடக்கத்தையும் அறிமுகம் செய்வது இக்கட்டுரையின் நோக்கம்.

## குலவரலாறு

ரங்கம்மா வழிபாட்டை அறிந்து கொள்வதற்கு, மூலமாக அமைகிற கம்மகுல வரலாற்றை அறிந்துகொள்வதும் அவசியம். ஆந்திர மாநிலப்பகுதிகளிலிருந்து புலம்பெயர்ந்து நான்கு ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன்பு தமிழகத்துப் பகுதிகளில் குடியேறியவர்கள் கம்மகுல மக்கள். முகம்மதியர் படையெடுப்பு, வறட்சி போன்றவை காரணங்கள். ஆனால் முகம்மதிய அரசன் பெண் கேட்டு வற்புறுத்த மறுக்கமுடியாமல், ஏமாற்றிவிட்டுப் புலம்பெயர்ந்து வந்த கதையே பெரும்பாலான குலவரலாற்றுக் கதைவழக்காறுகளில் காணப்படுகின்றது. முகம்மதிய அரசர்களால் பெண் தொடர்பான ஆக்கிரமிப்பு அச்சவுணர்வே புலம்பெயர்தலுக்கான காரணமாக இருந்தது என்பதே

வரலாற்றுப்பதிவின் எச்சம் என்று கொள்ளலாம். நம்புரார், துக்கின்னார் குலமரபினர் இடம்பெயர்ந்த வரலாற்றின் வழக்காற்றுக் கதையைச் சுருக்கமாகக் கீழ்க்காணுமாறு அறிமுகம் செய்யலாம்.

சில நூற்றாண்டுகளுக்கு முன்பு கன்மகிரி பட்டினத்தை சத்தியகுல கஜ்ஜபாவுடு அரசாட்சி செய்து வந்தான். அவன் மனைவி காந்தாமணி. டெல்லி முகம்மதியப் பேரரசன் நவாப் அஜீஸ் முகம்மதுவுக்குக் கப்பம் கட்டும் சிற்றரசாகக் கன்மகிரி இரந்தது. கஜ்ஜா பவுடுவுக்கு பதினாறு குழந்தைகள் பிரிந்து, பல்வேறு இடங்களில் குடித்தனம் செய்து வந்தார்கள். ரேணுகை கம்மகுலத்தவரின் குலத்தெய்வம். ரேணுகாதேவி விழாவை கன்மகிரியில் சிறப்பாகக் கொண்டாடப்படுவது வழக்கமாக இருந்தது.

## கம்மவார் புலம்பெயர்வு

கன்மகிரி பட்டனத்தில் ரேணுகாதேவிக்கு விழா எடுத்துப் பூசை செய்வதற்காகக் கம்மகுல மக்கள் ஆயிரக்கணக்கில் வந்து குவிந்து கொண்டிருந்தார்கள். இந்த விழாவைப் பார்ப்பதற்காக டில்லி பேரரசன் ஜனாப் அஜீஸ்முகமதுவின் மகன் இளவரசன் சையதுஅலி என்பவர். கன்மகிரி தெருக்களின் வழியே வந்தபோது, கன்மகிரி காகல்லலர் வெங்கடப்ப நாயுடு மகன் பேரம்மாள் வீட்டு முற்றத்தில் நின்று கொண்டிருந்தவளைப் பார்த்து, அவள் அழகில் மயங்கித் திருமணம் செய்து கொள்ள விரும்பித் தன் தந்தையிடம் போய்ச் சொல்கிறான். வேறுமதம், வேறு சாதி, வேறுகுலம் என்று அரசன் தயங்கினாலும், பிறகு இளவரசனின் பிடிவாதத்தால் பெண்கேட்கக் கன்மகிரி வந்து சேர்ந்து, ஊருக்கு வெளியே இருந்து வெங்கடப்பநாயுடுவை வரச்சொல்லி ஆணை செய்தார். பேரரசர் பெண் கேட்கும்போது மறுத்தால் எல்லோருக்கும் தொல்லை வரும் என்றுணர்ந்த கம்மகுலப் பெரியோர்கள் முகம்மதியப் பேரரசனைத் தந்திரமாக ஏமாற்ற வேண்டுமென்று திட்டமிடுகின்றனர். பெண் தருவதாக இசைவு தெரிவித்து, பத்துநாட்கள் கழித்து முகூர்த்தம்குறித்து மாப்பிள்ளைக்கோலத்துடன் இளவரசன் வரலாம் என்று கூறிவிட்டு வீடுதிரும்புகின்றனர். குறிப்பிட்ட நாளில் வெங்கடப்பநாயுடு வீட்டை கல்யாணவீடு போல அலங்காரம் செய்து, மணவறை கட்டி அலங்கரித்துப் பானைகள் வைத்து, நாயை மணப்பெண் போல அழகுபடுத்தி மணவறையில் கட்டிவைத்து விட்டு, விளக்கெண்ணையால் வீடு முழுதும் மெழுகி, மேலே கேழ்வரகு தானியத்தைத் தூவிவிட்டு, கதவை மூடிவைத்துவிட்டு ஊரைவிட்டு எல்லோரும் வெளியேறிவிட்டனர் திருமணம் செய்து கொள்வதற்காக இளவரசனும், பேரரசனும்

மற்றவர்களும் கன்மகிரி பட்டனம் வந்து, மணவீட்டிற்குள் நுழைகிறார்கள். விளக்கெண்ணெய் கேழ்வரகு மீது வழுக்கி வழுக்கி விழுகிறார்கள். மணவறையில் நாய் கட்டி வைக்கப் பட்டிருப்பதைப் பார்த்து அதிர்ச்சியடைகிறார்கள். அவமானமும் ஆத்திரமும் பொங்க, கம்மகுலத்தினரை அழிப்போம் என்று துரத்திக் கொண்டு வருகிறார்கள். *பின்னால் முகம்மதியப்படை துரத்திக் கொண்டு* வர, வேகமாக முன்னே சென்று கொண்டிருந்த கம்மகுல மக்களுக்கு இடையே கோதாவரி குறுக்கிட்டது. வெள்ளம் புரண்டு ஓடிக்கொண்டிருக்க, தப்பிக்க வழிதெரியாமல், ரேணுகாதேவியை அவர்கள் வணங்குகிறார்கள். உடனே கோதாவரி ஆறு இரண்டாகப் பிரிந்து அவர்களுக்கு வழிவிட்டது. கம்மகுல மக்கள் ஆற்றைக் கடந்தவுடன் மறுபடியும் நீர் பெருகத் தொடங்கி முகம்மதியரைத் தடுத்துவிட்டது. இக்கதை பெரும்பாலும் எல்லா கம்மகுலத்தின் எல்லா குலக்குழுக்களின் ***பேரண்டாலு*** வரலாறுகளிலும் மூலமாகப் பேசப்படுகிறது.

முகம்மதிய அரசர்களின் பெண் தொடர்பான தொல்லையின் காரணமாகக் கம்மகுலமக்கள் தெற்கில் இடம்பெயர்ந்தார்கள் என்பதுதான் இவ்வழக்காற்றின் மூலவிதை. இக்கதை நிகழ்வை மேன்மைப்படுத்து வதற்காக, வேறுசில துணைக்கதைகளும், சொல்லாடல்களும் அதில் இணைக்கப்பட்டன.

1. முகம்மதிய அரசர் பெண்கேட்க வந்தபோது, கலங்கிய கம்மகுலப் பெரியவர்களுக்கு, ரேணுகாதேவியே (நீர்குண்டார் நாரப்பநாயுடு மனைவி சாயம்மாவின் மீது அருள்வந்து) இப்படி ஒரு நாடகம் ஆடி ஏமாற்றச் சொன்னதாக ஒருகதைத் திரிபு. 2)கோதாவரி ஆற்றில் வெள்ளம் புரண்டு வந்தபோது, ரேணுகாதேவியை வழிபட ஆறு இரண்டாகப் பிரிந்து வழிவிட்டது. அப்போது ஆற்றுமணலால் விளக்குச்செய்து, ஆலம்விழுதால் திரிசெய்து, தண்ணீரை எண்ணெயாகவிட்டு வைக்கத் தானே தீப்பற்றி விளக்கு எரிந்தது. 3)கம்மகுலப் பெரியவர்களுக்கு ஆறுவழிவிட்டது, தண்ணீர் விளக்கெரிந்தது போன்றவை கண்ட முகம்மதிய அரசன் வியப்படைந்து, தாம் செய்தது தவறு என்று ஒப்புக் கொண்டு மீண்டும் ஊருக்கு வரவேண்டுமென்று வேண்டினார். விட்டுவிட்டு வந்த ஊருக்குத் திரும்ப மாட்டோம் என்று கம்மகுலத்தார் சொல்லி முகம்மதிய அரசர்களை மன்னித்ததாகவும் கோபம் எதும் இல்லை எனவும் சொன்னார்கள். அப்படியானால் இனி, முகம்மதிய மக்களும் கம்மகுலமக்களும் மாமன்–மச்சான் உறவுமுறை கொண்டாடலாம் என்று கேட்டுக் கொண்டனர்.

## சென்னிமலைப்பகுதியில் குடியமர்வு

சந்திரகிரிப்பகுதியில் நம்பூர், துக்கின்னி ஆகிய பகுதிகளில் கம்மகுலக் குடும்பங்கள் குடியேறி, வேளாண்மை செய்து வாழ்ந்து வந்தனர். அப்போது ஒரு காலப்பகுதியில் கடும்வறட்சி ஏற்பட்டது. வாழ்வதற்கு வழியில்லாமல் துயரப்பட்ட கம்மகுலத்தவர் ரேணுகாதேவியிடம் தம் துயரம் போக்க வேண்டிக் கொள்ள, ரேணுகாதேவி மனம் இரங்கினாள். கொங்கு நாட்டில், சென்னிமலையில் குடிகொண்டுள்ள சென்னிமலையாண்டவருடன், ரேணுகா பரிந்து பேசி, அவர்கள் இருவரும் பவளவியாபாரிகள் போல மாறுவேடம் கொண்டு கம்மகுலத்தவரிடையே வந்து, சென்னிமலைப் பட்டணத்திற்குப் போகலாம் என்று அறிவுரை கூறுகின்றனர். நம்புரார் கொண்டமநாயுடு துக்கின்னார் நாரப்பநாயுடு தலைமையில் உப்பட்ல, நீர்குண்டார், சென்னார், ஆதுரார் தோணாதலார் குலத்தினர் வருகின்றனர். சென்னிமலை அருகே, வழியில் எதிர்ப்பட்ட ஒரு பண்டாரம், கையில் தீர்த்தப் பிரசாதத்துடன் வந்து, கம்மகுலமக்களை அழைத்துக் கொண்டு காணியாள கவுண்டர் எனப்படும் கந்தசாமிகவுண்டரிடம் வந்து அறிமுகம் செய்து, சென்னிமலை ஆண்டவரின் தீர்த்தபிரசாதம் என்று கொடுத்துவிட்டு உடனே மறைந்துவிடுகிறார். சென்னிமலை ஆண்டவரின் தீவிர பக்தரான காணியாளக்கவுண்டர், பண்டாரமாக வந்தவர் சென்னிமலை யாண்டவரே என்று நம்பி, கம்மகுலத்தவரை வரவேற்று எல்லா உதவிகளையும் செய்தார். கம்மகுலத்தாருக்கும் காணியாள கவுண்டர் வகையறாவுக்கும் இதுமுதல் நல்ல உறவும், நட்பும் வளரத் தொடங்கியது. கம்மகுலத்தவர் சென்னிமலையருகே வந்து குடியமர்வு பெற்றதன் வழக்காற்று வரலாறு இது.

காணியாள கந்தசாமிக்கவுண்டர், சென்னிமலையாண்டவர் அழைத்துவந்த விருந்தினர்கள் ஆகையால் கம்மகுலத்திற்கு குடியிருந்து விவசாயம் செய்ய நிலங்களைத் தானமாக அளிக்க முன்வந்தார். காணியாள கந்தசாமிக்கவுண்டரின் ஆதரவுடன் கம்மகுலத்தினர் விவசாயம் செய்து வளம்பெறத் தொடங்கினர். காணியாள கந்தசாமிக் கவுண்டரும் மற்ற சமூகத்தினரும் கம்மகுல நல்ல - தீய நிகழ்ச்சிகளில் பங்கேற்று ஒத்திசைந்து வாழத்தொடங்கினர்.

## ரங்கம்மா வரலாறு

நம்புரார் கொண்டமநாயுடு மனைவி மங்கம்மாவுக்கு நீண்ட நாட்களாகக் குழந்தை இல்லை. இதனால் வருந்திய மங்கம்மா திருப்பதி ஏழுமலையானை வணங்கி நோன்பிருந்து, நடை பயணமாகத் திருப்பதி

சென்று திரும்பினார். திருமலைநாதனின் அருளால் மங்கம்மா குழந்தைப் பேறடைந்து, குழந்தையைப் பெற்றெடுத்தார். அக்குழந்தைக்கு ரங்கம்மா என்று பெயரிடப்பட்டது. குழந்தை பிறந்த ஆறுமாதத்தில் மங்கம்மா உடல்நலிவுற்று மரணம் அடைகிறாள். தாயில்லாத குழந்தையாகிய ரங்கம்மாவை பாட்டி லட்சுமியம்மாள் வளர்த்து வந்தாள். ஏறத்தாழ பத்துவயது ஆன பிறகு, சிறிது விவரம் தெரிந்த பிறகு தன் தந்தையாரை மறுமணம் செய்து கொள்ளும்படி ரங்கம்மாள் வற்புறத்துகிறாள். முதலில் தயங்கிய தந்தை பிறகு இசைந்து, ஊஞ்சப்பாளையம் துக்கின்னார் நாரப்பநாயுடுவின் மகள் கோனம்மாவைத் திருமணம் செய்து கொள்கிறார். கோனம்மாவுக்கு ஒரு ஆண்குழந்தையும் பெண் குழந்தையும் - ஐயப்பநாயுடு, லட்சுமி பிறக்கிறார்கள். இடையே ரங்கம்மாவின் பழக்க வழக்கங்களில் பலமாறுதல்கள் ஏற்படுகின்றன. எப்போதும் பூசை செய்வது, தியானத்தில் ஆழ்வது, இயல்பான செயல்களில் கவனமின்றி இருப்பது என்றவாறு இருக்கிறாள். முதலில் அன்பாக இருப்பது போலக் காட்டிக்கொண்ட கோனம்மா நாளடைவில் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடந்து கொள்ளத் தொடங்கினாள். உணவு உடை அளிப்பதிலிருந்து, எல்லாச் செயல்களிலும் வேறுபாடு காட்டத் தொடங்கினாள். ரங்கம்மா அடிக்கடி பூசை, தியானம் என்று இருப்பதும், அதற்கு ஏதுவாக அமைந்தது. இடையே ஒருநாள் குழந்தைகள் விளையாடிக் கொண்டிருக்கும்போது ஒரு பெரிய நாகப்பாம்பு வர, குழந்தைகள் ஓடிஒதுங்கிவிட பயந்து நின்று கொண்டிருந்த ரங்கம்மா மேல் தலைக்குமேல் பாம்பு படமெடுத்து ஆடி ஆசிர்வதிப்பது போல கீழிறங்கிச் சென்று விடுகிறது. அதைப்பார்த்த பலரும் ரங்கம்மாவுக்கு ரேணுகையின் அருள் இறங்கியிருப்பதாகக் கருதத் தொடங்கினர். ரங்கம்மாவை அருள்கொண்டவராகச் சிலரும் மனப்பிறழ்வு ஏற்பட்டவராகச் சிலரும் பேசத் தொடங்கினர். கோனம்மாவின் தம்பி பேரநாயுடு பைத்தியம் போல நடந்து கொள்பவர்; அதனால் திருமணம் கைகூடவில்லை. கோனம்மா, ரங்கம்மாவைப் பேரநாயுடுவுக்குத் திருமணம் செய்ய எண்ணங்கொண்டு, ரங்கம்மாவைப் பெண்கேட்டு வந்தவர்களை யெல்லாம் வேறு வேறு பொய்களைச் சொல்லி அனுப்பிவிட்டு இறுதியில் வற்புறுத்தி ரங்கம்மா பேரநாயுடு திருமணம் செய்து வைக்க ஏற்பாடு செய்கிறார்.

மனவளர்ச்சி குன்றிய பேரநாயுடுவுக்குத் திருமணம் என்பதே என்னவென்று தெரியாமல்,குழந்தைத்தனமான ஆசைகளுடன், வியப்புடன், அச்சத்துடன் நிகழ்ச்சிகளில் ஈடுபடுகிறார். அன்று இரவு மணப்பெண் அறையில் தனியாக அனுப்பப்பட்டவுடன் பெண்ணைக் கண்டு பயந்து வெளியே ஓடிவிடுகிறார். எவ்வளவுதான் அழைத்து

வந்தாலும் கம்பளியாபட்டி பெண் வீட்டில் தங்காமல், பெண்ணைக் கண்டதுமே அஞ்சி ஓடி, தன்ஊரான ஊஞ்சம்பாளையம் சென்று விடுவார். கணவன் மனைவியிடையே உறவும் இல்லாமல், இணக்கமும் இல்லாமலே நாட்கள் கரைகின்றன. ரங்கம்மா பைத்தியம் பிடித்தவளாக இருப்பதால்தான் பேரநாயுடு அவளோடு சேரவில்லை என்பதாகக் கோனம்மா பிரச்சாரம் செய்கிறாள். நாட்செல்லச் செல்ல ரங்கம்மா முழுக் முழுக்க அருள்வந்தவள் போல் மாறிவிடுகிறாள். பூசைகள் செய்தல், அருள்வாக்குத் தருதல், ஆடுதல், பாடுதல், மரங்கள் மீது ஏறுதல் என்று பித்தேறிய நிலையில் செயல்படுகிறாள். கோனம்மா, ரங்கம்மாவை விட்டுவிட்டுத் தன் தம்பியை விலக்கிவிடும் வகையில், ஊஞ்சப்பாளையம் சென்று விடுகிறாள். ரங்கம்மா ரேணுகையின் அருளால் பல வினோதமான செயல்களைச் செய்து வருகிறாள். வெறும் கைகளிலிருந்து மலர்கள், எலுமிச்சை போன்ற பழங்கள், மஞ்சள், குங்குமம் போன்ற மங்கலப் பொருட்களை வரவழைத்தல் போன்ற செயல்களை அவள் செய்ததாக நம்பினர்.

இதற்கிடையே நாரப்புநாயுடுவின் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த சென்னி என்ற வேலையாள் திருட்டு வேலை செய்து கண்டுபிடிக்கப்பட்டு பேரநாயுடுவால் காட்டிக் கொடுக்கப்பட்டு கடுமையாகத் தண்டிக்கப்படுகிறான். எனவே பேரநாயுடு மேல் கோபம் கொண்டுப் பழிவாங்கக் காத்திருக்கிறான். (பெருந்துறை அருகே மலையபாளையம் சென்று சூனியமந்திரவாதியாகிய கருப்பவலையன் என்பவனிடம் சொல்லி பேரநாயுடு மேல் சூனியம் வைத்ததாக ஒரு வழக்காறு) பேரநாயுடு உண்ணும் உணவில் விஷம் கலந்ததாக ஒரு வழக்காறு. உடம்பெல்லாம் வலிவந்து, நுரைதள்ளி, கொப்புளங்கள் தோன்றி, பேரநாயுடு மரணமடைகிறார்.

கணவர் பேரநாயுடு இறந்த செய்தி கிடைத்ததும் ரங்கம்மா புதுஆடை, ஆபரணங்கள் அணிந்துகொள்ள ஆரம்பிக்கிறாள். உறவினர்கள் இவள் மனநிலை பிறழ்ந்து விட்டதாகக் கவலையுறுகிறார்கள். தன் அப்பாவிடம் ஒரு புதுச்சட்டி உடைத்து, உடைந்த ஓட்டில் பாலும் சோறும் போட்டுக் கலந்து சென்னிக்குத் தருமாறு கூறுகிறாள். சென்னி அதை உண்டு முடித்தவுடன் உடம்பு வலி வந்து இறந்து விடுகிறான். ***என் கணவரைத் திருட்டுத்தனமாக வஞ்சித்துக் கொன்றவனை நான் என் தெய்வ சக்தியால் கொன்றுவிட்டேன்*** என்று எக்காளமிட்டுச் சிரிக்கிறாள். புத்தாடை, அணிகலன் அணிந்து ஆரவாரமுடன் அவள் புறப்பட உறவினர்கள் திகைத்துப் பின்தொடர கணவன் வீட்டுக்கு வரும் அவளை உள்ளேவிட கணவன் வீட்டார் மறுத்துவிடுகிறார்கள். ஆனாலும் அதைப் பற்றிக் கவலைப்படாமல்

ரங்கம்மா உள்ளே நுழைந்து கணவன் பிணத்தருகே அமர்ந்து கொள்கிறாள். கணவன் பிணத்தை எடுக்கும் போது ***தானும் அக்கினிகுண்டம்*** இறங்குவதாக அறிவிக்கிறாள். முதலில் ஒப்புக்கொள்ள மறுத்த உறவினர்களை வற்புறுத்தி இசைய வைக்கிறாள். அக்காலத்தில் இதற்கு ஆட்சி செய்து வந்த மகம்மதிய அரசனின் உத்தரவு வேண்டும். துலுக்கன்பாளையம் அரண்மனைத் தோட்டத்தில் இருந்த முகம்மது இப்ரகீம் என்ற மன்னனிடம், பாம்பு வடிவில் ரேணுகை பேசி உத்தரவு வாங்கியதாக வழக்காறு.

பிறகு எட்டுநாட்கள் குண்டம் எரிந்து, ஒன்பதாம் நாள், குதிரையில் ஊர்வலமாக அழைத்து வரப்படுகிறாள் ரங்கம்மா. ஆயிரக்கணக்கானோர் பார்த்துக் கொண்டிருக்க நெருப்புக் குண்டத்தல் இறங்கி மரணமடைகிறாள் ரங்கம்மா. அந்த இடத்தில் நீண்ட நாட்கள் கம்மகுல துக்கின்னார் நம்புரார் வழிபார்டு செய்து வந்தனர். காலப்போக்கில் கம்மகுலத்தினர் அப்பகுதியை விட்டு வெளியேறி வேறு ஊர்களுக்குச் சென்றுவிட்டதால் வழிபாடு அற்றுப்போய் விட்டது. ஏறத்தாழ நூறு ஆண்டுகளுக்கு முன் அந்த வழியே பயணம் செய்த மலையாள நாட்டு வியாபாரிகளைக் கொள்ளையடிக்க வந்த தீவட்டிக் கொள்கைக்காரர்களை இந்தப் பகுதியருகில் ரங்கம்மா விரட்டியடித்துக் காப்பாற்றியதாக வழக்காறு. அந்த மலையாள வணிகர்கள் ரங்கம்மா கோவிலை மீண்டும் பூசைகள் செய்யும் வகையில் புதுப்பித்தனர். பிறகு கம்மகுலத்தினரால் வழிபாடு, பூசை தொடரலாயிற்று.

## ரங்கம்மா வழிபாடு

ரங்கம்மா வழிபாடு அடிப்படையில், ஓர் அவல மரணமடைந்த பெண்ணின் நினைவு வழிபாடு. இளமையில் தாயை இழந்து, சிற்றன்னையின் கொடுமைக்கு ஆளாகிச் சரியான அறிவு முதிர்ச்சி பெறாத கணவனுடன் எவ்வகை இல்லற உறவும் கொள்ளாத கன்னியாக, எவ்வித மகிழ்வும் அடையாமல் வாழ்ந்து, கணவன் மடிந்தவுடன், நெருப்பில் உயிர் விட்ட ஒரு பெண்ணின் கதைதான் ரங்கம்மா கதை. ஆனால், இக்கதை ரங்கம்மாவை வழிபடும் தெய்வமாக உருவாக்கப்படுவதாகப் பல்வகைக் கிளைக்கதைகளுடன், இயற்கை இறந்த நிகழ்ச்சிகளுடன் இணைக்கப்பட்டு மேன்மையாக்கப்பட்டுள்ளதைக் காணமுடியும்.

விஜயமங்கலம் - சென்னிமலை பகுதியில் மாடுகட்டிபாளையம், ஊஞ்சப்பாளையம், கம்பளியாபட்டி, கொண்டையம்பாளையம் போன்ற பகுதிகளில் நடைபெற்ற நிகழ்வுகள், வரலாற்றின் பதிவாக - கம்மகுலத்தினர் இந்தப் பகுதியில் கால்கொண்ட வரலாற்றைக் குறிக்கும்

ஒரு பெண்ணின் அவலமான மரணம் - தீக்குளிப்பு - மேன்மைப்படுத்தப்படும் நிலையில், எவ்வெவ்வாறு நிஜத்தன்மையாக்கப் படுவதற்காக அதேநேரத்தில் புனிதப்படுத்தப்படுவதற்காகக் கிளைக் கதைகளை உள்ளேற்றுக் கொள்கிறது என்பதற்கு இக்கதை சான்றாக அமைகிறது. பாத்திரங்களின் பெயர்கள் - ஒவ்வொரு நிகழ்வுக்கூறிலும், பொருத்தமாக அமைக்கப்படுகின்றன. உறவுநிலைகள், மாமா, பெரியப்பா, அண்ணன் என்பத போலச் சரியாகச் சுட்டப் படுகின்றன. நம்புரார், துக்கின்னார், ஆதூரார்வார், காங்கல்லார், பாடபட்லார், நீர்குண்டார், உப்பட்ல போன்ற குலப்பெயர்கள் விளக்கமாகத் தரப்படுகின்றன. ஊர்ப்பெயர்கள், இடப்பெயர்கள் நிஜத்தன்மையுடன் காட்டப்படுகின்றன. காணியாள் கந்தசாமி கவுண்டர், புனுகு கொல்ல ரங்கராசு, ரங்கபோயன், சென்னிமலை வீராசாமி செட்டியார் என்பது போல சாதிப்பெயர்களும் வழக்காற்றில் கலந்து பேசப்படுகின்றன. சென்னிமலையை அடுத்த துலுக்கன்பாளையம் அரண்மனைத் தோட்டமும், அரசன் இப்ரகீம் அவன் ஆணைக்குட்பட்ட சென்னிமலைப் பிரதேசம் என்பது போல வரலாற்றிழைகளும் பின்னப் படுகின்றன.

சிற்றன்னை எவ்வளவு கொடுமை செய்தபோதும் பொறுத்துக் கொள்வது, கணவனுடைய நிலையுணர்ந்த பிறகும் பொறுமையாகச் சகித்துக் கொள்வது, எல்லோரிடமும் அன்பாக இருப்பது, பூசை முதலியவற்றில் ஈடுபாடு காட்டுவது, தன் கணவனுக்கு நச்சு வைத்த சென்னியின் மறைசெயலை அறிவது, அவனுக்குச் சாபமிடுவது, என்பது போல ரங்கம்மாவின் பண்புகளிலும், செயல்களிலும் மிகைமானுடப் பண்பு சிறிதுசிறிதாகத் திணிக்கப்படுகிறது. ஓர் அவல வாழ்வு வாழ்ந்த பெண்ணில் தெய்வீக அம்சங்களைக் கலக்கும் அதே நேரத்தில், அவள் நம்முடைய குடும்பத்துப்பெண் என்பதான உணர்வு நெருக்கத்தை இது காட்டுகிறது. பிறந்த வீடான துக்கின்னார், புகுந்தவீடான நம்புரார் குலமக்கள் ரங்கம்மாவைக் குலதெய்வமாக வழிபட்டு வருகிறார்கள். திருமணமானவுடனே தம்பதியர் கோவிலுக்கு வந்து பொங்கல் வைத்தல், பிறந்த குழந்தைக்கு முடிஇறக்குதல், பல்வேறு மங்கலச் செயல்களுக்கான வேண்டுதல்கள், பௌர்ணமி பூசை என்று இந்தக் கோயிலில் ரங்கம்மா வழிபாடு சிறப்பாக நடைபெற்று வருகிறது. தீப்பாய்ந்து மடிந்த ஒரு பெண்ணின் அவல வாழ்வு பற்றிய வழக்காறு, சமூக அரசியல் வரலாற்றின் பதிவுகளைச் சுமந்து நிற்கிறது. பெண்ணை அடிமைப்படுத்தி ஆக்கிரமித்தது ஒருபுறம் ; மேன்மைப்படுத்தியதான வேடம் மறுபுறமாக சமூக வரலாறு நிகழ்ந்ததன் பதிவு இது.

# நாட்டுப்புற நம்பிக்கைகள்

**முனைவர் ந. அமுதா**, எம்.ஏ.,எம்.ஃபில்.,பிஎச்.டி.,
*பி.ஜி.பி. கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நாமக்கல்.*

நாட்டுப்புற மக்களின் பழக்கவழக்கங்களையும் பண்பாடுகளையும் நம்பிக்கைகளையும் இலக்கியங்களையும் அறிவியல் அடிப்படையில் ஆராயும் இயல் நாட்டுப்புறவியலாகும். நாட்டுப்புற இயலை நாட்டுப்புற மக்களின் மரபுவழிப்பட்ட படைப்புக்கள் என்பர். நாட்டுப்புற வழக்காறுகள் தலைமுறை தலைமுறையாக வாழையடி வாழையாக நிலவி வருகின்றன. நாட்டுப்புறப் பாடல், கதைகள், பழமொழி, விடுகதை போன்றவைகள் பல்லாண்டு காலமாக வாய்மொழியாகப் பரப்பப்பட்டு வருகின்றன. நாட்டுப்புறவியல் பேரறிஞர். ரிச்சார்டு எம். டார்சன் அவர்களும் நாட்டுப்புற வழக்காற்றில் மக்களின் வாய்வழியே பல தலைமுறைகள் வாழ்ந்ததாக இருக்க வேண்டும் என்கிறார். மனிதனின் சடங்குகள், நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் இவையாவும், பண்பாட்டினை வாழ்முறையாகக் கொண்டு தோன்றி உள்ளன. பழக்க வழக்கங்களும், நம்பிக்கைகளும் சமுதாயத்தின் தேவைகளின் அடிப்படையில் தோன்றியவையாகும். நம்பிக்கைகளும் பழக்க வழக்கங்களும், பண்பாட்டு வளர்ச்சியின் படிக்கற்கள் எனலாம். அறிவு நிலைக்கு அப்பாற்பட்ட எண்ணங்களையே நம்பிக்கைகள் என்பர்.

நம்பிக்கைகள் மக்களால் உருவாக்கப்பட்டு, அம்மக்கள் சமுதாயத்தால் பாதுகாக்கப்படுகின்றன. மனிதனின் தன் உணர்வும், சமுதாய உணர்வுமே நம்பிக்கைகளை வளர்த்து வருகின்றன. நம்பிக்கைகள் காலம் காலமாகத் தொடர்ந்து வரக் கூடியவை. காரண காரியத் தொடர்புகளுக்கு உட்பட்டுச் சான்றுகளின் வாயிலாக நிறுவ முடிவதை நம்பிக்கை என்றும், சான்றுகளின் அடிப்படையிலோ, காரண காரியத் தொடர்பின் வாயிலாகவோ விளக்க முடியாதவற்றை மூடநம்பிக்கை என்றும் வகைப்படுத்துவர். பண்டைக்காலம் முதல் மனிதன் இயற்கையோடியைந்து வாழ்ந்து வருகின்றான். இயற்கை மாறுதலுக்கேற்ப மனித மனமும் மாறுபடுகின்றது. இயற்கையோடு இணைந்து மனித வாழ்க்கையில் நம்பிக்கைகள் தோன்றின. பண்டைத் தமிழரின் நம்பிக்கைகளைப் பல வகையாகப் பிரித்தும் பார்க்கலாம்.

***கூகை அலறினால் சாவு வரும்*** என்ற நம்பிக்கை பண்டைத் தமிழரிடையேயும் இன்றும் தமிழகத்தில் நிலவி வருவதை அறியலாம். இதனைப் புறநானூறு நமக்குக் காட்டுகின்றது. ***அஞ்சுவரு குராஅல் குரலுந் தூற்றும்.*** தன்னை ஒருவர் நினைத்தால் தும்மல் வரும் என்ற நம்பிக்கையைச் சங்க இலக்கியங்களில் காணலாம். ***சென்றவர் உள்ளிய தன்மையர் போலு மடுத்தடுத்து ஒள்ளிய தும்மல் வரும்*** குழந்தை தும்மினால் தாய் ***நூறு*** எனக் கூறுவது ***நூறாண்டு வாழ்க*** என்ற பொருள் ஆகும்.

நாட்டுப்புற மக்களிடையே எண்ணற்ற நம்பிக்கைகள் நிலவுகின்றன. 1. குழந்தை பற்றிய நம்பிக்கைகள், 2. திருமணம் பற்றிய நம்பிக்கைகள், 3. மழை பற்றிய நம்பிக்கைகள், 4. மச்சங்களின் பலன் பற்றிய நம்பிக்கைகள், 5. கடவுள் பற்றிய நம்பிக்கைகள், 6. மரணம் பற்றிய நம்பிக்கைகள், 7. சோதிடம் பற்றிய நம்பிக்கைகள, 8. கனவு பற்றிய நம்பிக்கைகள் என்ற வகையில் அவற்றை வகைப்படுத்தலாம்.

***குழந்தை பற்றிய நம்பிக்கைகள் :*** திருமணமான பெண்கள் விரைவில் தாய்மை அடைந்துவிட வேண்டும் என விரும்புவர். குழந்தை இல்லையெனின் சமுதாயத்தின் தூற்றுதலுக்கு ஆளாக வேண்டுமே என எண்ணினர். அதற்காகப் பெண்கள் அரசமரத்தைச் சுற்றி வருதல் உண்டு. அரசமர வழிபாடு மலட்டுத் தன்மையைப் போக்கவல்லது எனச் சங்கர் சென்குப்தா தமது நூல் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். குழந்தைகளுக்குக் கண்ணேறு கழிப்புச் செய்வதுண்டு. சில கண்களுக்குத் தீமை விளைவிக்கும் சக்தி உண்டு. எனவே அத்தகையோரது கண்பட்டால் குழந்தைகளுக்கு நோய்நொடி வரும் என நம்புகின்றனர். எனவே தான் ***கல்லடி பட்டாலும் கண்ணடி படக் கூடாது*** என்று கூறுவர். குழந்தைக்குச் சிறு காயம் ஏற்படாவிட்டால் எமன் அக்குழந்தையைத் தூக்கிச் சென்று விடுவான் என்ற நம்பிக்கையின் காரணமாக காது குத்தும் வழக்கம் தமிழ்நாடு மட்டுமின்றி ஆசியா, எகிப்து போன்ற நாடுகளிலும் காணப்படுகின்றது.

***திருமணம் பற்றிய நம்பிக்கைகள் :*** இரண்டு திருமணங்கள் ஒரே வீட்டில் ஒரே நேரத்தில் நடந்தால் ஒரு குடும்பம் சிறக்கும், மற்றொரு குடும்பம் தாழ்நிலை அடையும். திருமணத்திற்குப் பின் மணப்பெண்ணை வெள்ளியன்று கணவன் வீட்டிற்கு அனுப்பக்கூடாது. திருமணம் பற்றிய கனவு நல்லதன்று. ஆடி மாதத்தில் பெண் பார்த்தால் நல்லதல்ல. சுமங்கலிகள் தாம் திருமணச் சடங்கில் பங்கு பெறவேண்டும். புதுமணத் தம்பதிகள் புது வீட்டில் குடியேறக் கூடாது என்ற நம்பிக்கைகள் இன்றைய நிலையிலும் பின்பற்றப்படுகிறது.

*மழை பற்றிய நம்பிக்கைகள் :* வடக்கே, தெற்கே மின்னல் தோன்றினால் மழை வரும் என நம்புகின்றனர். நிலவைச் சுற்றிப் பெரிய வட்டமாக இருந்தால் மழை பெய்யும் என்றும் சிறியதாக இருந்தால் சில நாட்கள் ஆகும் என்றும் நம்புகின்றனர். ஆடு கூடிகூடி அலைந்தால் மழை வரும். கருப்பு எறும்பு முட்டை தூக்கிச் சென்றால் மழை வரும். தட்டான் தாழப் பறந்தால் மழை வரும். கோழி சிறகை விரித்து மண்ணில் பதுங்கினால் மழை வரும் என நம்புகின்றனர்.

*மச்சங்களின் பலன் பற்றிய நம்பிக்கைகள் :* நெற்றியில் மச்சமிருந்தால் சிறப்பான பலன் கிடைக்கும். உச்சந்தலையில் மச்சமிருந்தால் இலட்சியப் பிடிப்பு உள்ளவராக இருப்பர். கண்ணில் மச்சமிருப்பின் அறிவாளியாக இருப்பான். மூக்கில் நுனிப்பகுதியில் மச்சமிருப்பின் வக்கிரபுத்திகாரனாக இருப்பான். மூக்கின் வலதுபுறம் மச்சமிருப்பின் அறிவாளியாக இருப்பான். உதட்டில் மச்சமிருப்பின் நல்ல நடத்தை உள்ளவனாக இருப்பான்.

*கடவுள் பற்றிய நம்பிக்கைகள் :* இறைவன் அருளால் மக்கட்பேறு கிட்டுமென அனைவரும் நம்புகின்றனர். வாழ்வில் துன்பம் நேரும் போது இறைவனிடம் முறையிட்டுப் பால், தேன் போன்றவற்றை இறைவனின் படிமத்திற்கு அபிஷேகம் செய்தால் துன்பம் தீரும் என மக்கள் நம்புகின்றனர். பழனிமுருகன் கோவிலுக்கு மக்கள் பரல் அபிஷேகம் செய்வது இங்குக் குறிப்பிடத்தக்கது.

நாட்டில் மழை பெய்து நாடு செழிக்க மாரியின் அருள் வேண்டுமென நம்பினர் மக்கள். மாரியை வேண்டி வரங்கிடந்தமையால் தான் மாரி எனப்பட்டாளோ என எண்ண வேண்டி உள்ளது. நாட்டில் உண்டாகும் அம்மை முதலிய நோய்களுக்கு மாரிதான் காரணம் என்றும். அதனை நீக்குவதும் மாரிதான் என்றும் மக்கள் நம்புகின்றனர். அத்தகைய மாரிக்குச் செலுத்த வேண்டிய கடனைச் செலுத்தாவிட்டால் பிழைக்க முடியாது என்று மக்கள் நம்பினர் என்பதை, ***ஆரு கடன் நின்றாலும் மாரிகடன் ஆவாது மாரிகடன் தீர்த்தவர்க்கு மனக்கவலை தீருமம்மா*** என்ற வரிகள் காட்டுகின்றன. கோயிலில் பூக்கட்டிப் போட்டுச் சிறு குழந்தைகளை எடுக்கச் சொல்லி நல்லதா, கெட்டதா என்பதைப் பற்றி அறிந்து கொள்வார்கள்.

*மரணம் பற்றிய நம்பிக்கைகள் :* ஒருவர் மார்கழித் திருவாதிரை நாளிலோ, ஏகாதசியன்றோ இறந்தால் அவர் பெரும் பேறு செய்ததாக நம்பப்படுகிறது. மூத்த குழந்தை இறப்பின் வீட்டினுள்ளே புதைப்பர். இறந்த அன்று மழை பெய்தால் நல்லது. இறந்தவர் வாயில் அரிசி

போடவேண்டும். மரண ஊர்வலம் எதிரே சென்றால் போகும் காரியம் வெற்றியடையும். மரணவீட்டில் இரவு முழுவதும் விளக்கு எரிய வேண்டும். மரண வீட்டிற்குச் செல்பவர்கள் குளித்தபின்புதான் வீடு திரும்ப வேண்டும். மரண வீட்டில் பெண்கள் மாரடித்து அழுதால், மறுஉலகம் கிட்டும் என நம்புகின்றனர்.

***சோதிடம் பற்றிய நம்பிக்கைகள் :*** சோதிடம் பார்க்கும் பழக்கம் நாட்டுப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் இன்றும் உள்ளது. பிறந்த நேரத்தை வைத்து அதன் வருங்காலத்தைச் சொல்லுவார்கள், திருமணம் செய்யும் ஆணுக்கும் பெண்ணுக்கும் சாதகப் பொருத்தம் பார்ப்பதுண்டு. சோதிடங்கள் தெய்வங்களின் பெயர்களைக் கோள்களுக்கு இட்டு வழங்குகின்றன. திருத்தக்கதேவர் காலத்திலேயே குழந்தை பிறந்தவுடன் சாதகம் எழுவதும், திருமணத்திற்குச் சாதகம் கேட்பதும் இருந்தது என்பதால் அக்கால மக்கள் சோதிடத்தில் வைத்திருந்த நம்பிக்கை தெரியவருகிறது.

***கனவு பற்றிய நம்பிக்கைகள் :*** கனவுகள் மக்களுக்கு வாழ்வில் பின் நிகழப்போவதை முன்னர் உணர்த்துகின்றன என்று நம்புகின்றனர். உளவியல் பேரறிஞர்கள் அடக்கி வைக்கப்பட்ட விருப்பத்தின் மறைமுகமான வெளிப்பாடே கனவு என்பர். கனவுகளையே நல்ல கனவு, கெட்ட கனவு என இரு வகையாகப் பார்ப்பர். மக்களுக்கு நன்மையோ தீமையோ வருவது கனவு மூலம் தெரிந்து வரும் என நம்புகின்றனர். கனவில் மரணம் என்றால் சுபம். திருமணம் என்றால் இழவாகும். அதாவது கனவுக்கு நேரில் காண்பதற்கும் பலன்கள் எதிரிடையாக உள்ளதைக் காணலாம். அதிகாலை கனவு பலிக்குமென நம்புகின்றனர். கனவில் சாவைக் காண்பது நல்லது. கனவில் திருமணத்தைக் காண்பது நல்லதன்று. கனவில் மலத்தைத் தொட்டதாகக் கண்டால் செல்வம் பெருகும். கனவில் ஆகாய விமானத்தைக் கண்டால் வரவிருக்கின்ற ஆபத்தைக் குறிக்கும். கனவில் ஆமையைக் கண்டால் அதிர்ஷ்டத்தைக் குறிக்கும்.

இவ்வாறு நாட்டுப்புறத்தில் நம்பிக்கைகள் என்ற அடிப்படையில் பழக்கவழக்கங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மனித வாழ்வில் நம்பிக்கைகள் என்று தோன்றின என்று திட்டவட்டமாகக் கூற முடியாது. எனினும், மக்களின் நடைமுறை வாழ்வில் இந்நம்பிக்கைகள் தொடர்ந்து வருவதைக் கூர்ந்து நோக்கினால் இதனைச் சமுதாயப் பண்பாட்டின் உணர்ச்சிக் கூறுகளின் தொகுதி எனக் கூறலாம்.

# முத்தாலம்மன் கோவில் : கொடிமரம் கொணர்தல் : தேவேந்திரகுலத்தவரின் பங்களிப்பு

**முனைவர் சி.அயோத்தி**, எம்.ஏ.,எம்.ஃபில்.,பி.எட்.,பிஎச்.டி.,
*அரசு கலைக்கல்லூரி, உடுமலைப்பேட்டை-642 126.*

நிலக்கோட்டை சோழவந்தான் சாலையில் 13 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள வனப்புமிக்க ஊர் விளாம்பட்டி கிராமம். முல்லையாறு வைகையாறு என்ற இரண்டு ஆறுகளும் அருகருகே ஓடிக்கொண்டிருக்க, பச்சைப் பசேலென்று இயற்கை குடிகொண்டிருக்கும் எழில்மிகு இவ்வூரில் நூற்றாண்டு கால பாரம்பரியமிக்க முத்தாலம்மன் கோவில் ஒன்று உண்டு. வரலாற்றுச் சிறப்புமிக்க இவ்அம்மனுக்கு ஆண்டுதோறும் நடைபெறும் திருவிழாவில் முக்கியமானதாக இடம்பெறும் புத்தம் புது மூங்கிலால் உருவாக்கப்படும் கொடிமரம் கொணர்தலுக்குத் தேவேந்திரகுலத்தவர் ஆற்றியுள்ள பங்களிப்பினை அறிமுகம் செய்யும் நோக்கில் இக்கட்டுரை எழுந்துள்ளது.

## முத்தாலம்மன் உருவாகிய வரலாறு

ஆதிகாலத்தில் ஊருக்கு வெளியே முல்லையாற்றங் கரைக்கு வடபுறத்தில் பிராமணர்கள் குடியிருந்துள்ளனர். அவர்கள் வசித்த பகுதியில் வழிபடும் கோயிலாக சுப்பிரமணிய சுவாமி கோவிலும், நீராடுவதற்குரிய தெப்பக்குளமும் உருவாக்கப் பட்டிருந்தன. இவற்றிற்குத் தென்புறத்தில் தனிப்பட்ட நபரொருவருக்குச் சொந்தமான உழவடை நிலமொன்று இருந்துள்ளது. அந்நிலத்தில் பருவ காலத்தில் உழவு செய்யும் பொழுது ஏர்முனையின் கொழுவில் அம்மன் சிலையொன்று தட்டுப்பட்டுள்ளது. பச்சை மண்ணால் உருவாக்கப்பட்டுள்ள அச்சிலையினைக் கண்டெடுத்தவர் தேவேந்திர குலத்தில் பிறந்தவராவார். தமக்குக் கிடைத்த அச்சிலையின்மேல் கொண்ட பக்தியினால், கண்டெடக்கப்பட்ட அந்த இடத்திலேயே பச்சைக் கீற்றுக்களால் குடிசையொன்றினை அமைத்து வழிபட்டு வந்துள்ளார். அரண்மனைக்காரர்களால் நிருவகிக்கப்பட்டடு வந்த அப்பகுதி *பிள்ளையார்நத்தம்* அரண்மனைக்கு உட்பட்ட பகுதியாக

அமைந்திருந்தது. அதனால் சிலை கண்டெடுக்கப்பட்ட செய்தி உடனடியாக அரண்மனையாருக்குச் சொல்லப்பட்டுள்ளது. அன்றைய நாளில் பொறுப்பில் இருந்த அரண்மனையாரின் தலைமையில் மூன்று நாட்கள் அம்மனுக்கு வழிபாடுகள் செய்து நான்காம்நாள் காலையில் ஊர்ப்பொதுக் கிணற்றுக்குக் கொண்டு சென்று கரைக்கப்பட்டுள்ளது. இதுவே முத்தாலம்மன் தோன்றிய வரலாறாகும்.

அம்மன் வைக்கப்பட்டிருந்த பச்சைக்கீற்றுக்குடில் காலப்போக்கில் பொருளாதார வசதியும் பொதுநல உணர்வும் கொண்ட பிள்ளைமார் இனத்தைச் சேர்ந்த முன்னோர்களால் நிரந்தரக் கட்டிடமாக எழுப்பப்பட்டு வருடந்தோறும் திருவிழா நடத்தப்பட்டு வருகின்றது. ஆதியில் இருந்துள்ள பிராமணர் குடியிருப்பும் தெப்பக்குளமும் நீங்கின நிலையில் சுப்பிரமணிய சுவாமி கோயில் மட்டுமே தற்பொழுது வரலாற்றுத் தரவாகக் காட்சியளிக்கின்றது. வருடந்தோறும் விழா எடுப்பதற்குப் புதியதாக அம்மன்சிலை செய்யும்பொழுது அரண்மனையார் குடும்பத்தில் இருந்து ஒருவர் வந்து முந்தைய வருடத்தில் கரைக்கப்பட்ட கிணற்றிலிருந்து பிடிமண் எடுத்துச் சென்று புதிய அம்மன்சிலை செய்வதற்குத் தயார் செய்யப்பட்டுள்ள மண்ணோடு கலந்து செய்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

## கொடிமரம் உருவாக்க வரலாறு

திருவிழா தொடங்குவதற்கு அறிகுறியாகக் கொடிமரம் நட்டுக் கொடியேற்றிச் செய்தி தெரிவிப்பது வழமையான ஒன்றாகும். அக்கொடிமரம் ஒவ்வொரு வருடமும் புத்தம்புது மூங்கிலால் உருவாக்கப் படுகின்றது. புதுமூங்கில் வெட்டிக் கொண்டு வருதலைத் தமக்குரிய கடமைகளுள் ஒன்றாகக் கருதுகின்றனர் தேவேந்திரகுலத்தார்கள். பச்சை மண்ணாலாகிய அம்மன் சிலையைக் கண்டெடுத்த பெருமைக்கு உரியவர்களாக இவர்கள் விளங்குவதால் அவர்கள் மூலமாக, அவ்அம்மனுக்கு நிகழ்த்தப்படும் திருவிழாவின் முக்கியமான கூறுகளில் ஒன்றான கொடிமரம் - மூங்கில் கொணர்தல் பற்றிய செய்திகளை ஈண்டு விளக்கமாகக் காண்போம்.

## திருவிழா - தொடக்கம்

அம்மன் சாற்று என்னும்முறையில் திருவிழா நடத்தப்போவது குறித்துச் செய்தி அறிவிப்பது நாட்டுப்புற வழிபாட்டு மரபாகும். பெரும்பான்மையான ஊர்களில் அம்மன் சாற்றுத் தொடங்கி ஒருவார காலத்திற்குள் திருவிழா நடத்தப்பட்டு முடிக்கப்படுகின்றது. ஆனால் விளாம்பட்டி முத்தாலம்மன் கோவில் திருவிழா மூன்று மாத கால

எல்லைக்குள் சிறப்பாக நடத்தப்படுகின்றது. தமிழ்மாதம் தை கடைசி வாரம் செவ்வாய்க்கிழமை அம்மன் சாற்று பறையறிவித்துத் தெரிவிக்கப் படுகின்றது. மூன்று மாதம் கழித்துப் பங்குனி மாதக் கடைசிச் செவ்வாய்க்கிழமை இரவு அம்மன் எடுப்புத் திருவிழா தொடங்குகின்றது. மூன்று மாத எல்லையாக 90 நாட்கள் என்ற கணக்கீட்டை மனத்துள் கொள்ளாமல் தை, மாசி, பங்குனி என்ற மூன்றுமாதப் பெயர்கள் என்ற கணக்கீடாகக் கொண்டு திருவிழா தொடங்குகின்றது. புதன், வியாழன், வெள்ளி ஆகிய மூன்று நாள் இரவுகள் பல்வேறு வழிபாடுகளும், சடங்குகளும், கேளிக்கை நிகழ்வுகளும் நடத்தப்பட்டு சனிக்கிழமை அதிகாலை கரைப்பு நிறைவேற்றப்பட்டு, திருவிழா மனநிறைவுடன் நடத்தி முடிக்கப்படுகின்றது.

## மூங்கில் கொணர்தல் - ஆரம்ப நிலை

திருவிழா தொடங்கப்படும் செவ்வாய்க்கிழமைக்கு மூன்று நாட்களுக்கு முன்பாக ஞாயிற்றுக்கிழமை கொடிமர மூங்கில் கொணர்தலுக்குரிய ஆரம்ப நிலை துவங்குகின்றது. உழவடை நிலத்தில் அம்மன் சிலையைக் கண்டெடுத்த காரணத்தினால் தேவேந்திரகுலச் சந்ததியினருக்கே ஆண்டுதோறும் கொடிமர மூங்கில் புதியதாகக் கொணர்தலுக்குரிய பொறுப்பு அளிக்கப்படுகின்றது. கோயில் நிர்வாகத்தினரும் ஊர்ப்பொது மக்களும் ஒன்றுகூடி, எந்தத் திசையிலிருந்து மூங்கில் வெட்டிவர வேண்டும் என்று சகுனம் குறிபார்த்துக் கேட்டு முடிவு செய்து கொள்கின்றனர். அதன்படி மூங்கில் கிடைக்கும் இடத்திற்குச் சென்று முன்பணம் கொடுத்து மூங்கிலைத் தேர்வு செய்து அடையாளப்படுத்தி விட்டு வருகின்றனர்.

மூங்கில் கொணரச் செல்லும் ஒவ்வொருவருக்கும் பணமும் படிஅரிசியும் கோவில் நிர்வாகத்தினர் கொடுத்து விடுகின்றனர். படிஅரிசியினில் ஒருபிடி எடுத்து அவரவர் வீட்டில் உள்ள அரிசியோடு சேர்த்துக் கட்டுச் சோறாக்கிச் சாப்பாட்டிற்கு எடுத்துக் கொள்கின்றனர். படி அரிசியினில் மீதமுள்ள அரிசியினை ஒன்றுசேர்த்து மூங்கில் வெட்டப் போகும் இடத்தில் சமையல் செய்வதற்குக் கொண்டு செல்கின்றனர். கட்டுச்சோறு எடுத்துச் செல்வதும் கால்நடைப் பயணமும் இன்று அருகிப்போய்ப் பேருந்துப்பயணமும் உணவகமும் பெருகிவிட்டதனால் ஆரம்ப கால வழக்கம் சற்று மாறுபட்டு நிற்கின்றது. ஒன்றுசேர்த்த படி அரிசியினைச் சமையல் செய்யப் பாத்திரங்கள் கிடைக்காத ஊர்களில் அரிசியினை விற்றுப் பணமாக்கிச் செலவுகளைச் சரிசெய்யும் நடைமுறைப் பழக்கம் இன்றைய காலச்சூழலுக்கு ஏற்பப் புதிய பரிமாணம் கொண்டுள்ளதைக் காண்கின்றோம்.

## மூங்கில் கொண்டுவரப் புறப்படுதல்

ஞாயிறு இரவு புறப்பட்ட தேவேந்திரகுலத்தார் கால்நடைப் பயணமாகவே இரவோடு இரவாக மூங்கில் வெட்டப்பட வேண்டிய ஊருக்குப் போய்ச் சேருகின்றனர். தொலைவில் உள்ள ஊர்களுக்குக் கால்நடையாகவே சென்று வந்த பயணம் இன்று பேருந்துகளின் வரவால் சற்று மாற்றமடைந்துள்ளது. ஊர் எல்லைவரை நடந்து சென்று அதன் பிறகு பேருந்து ஏறிப்புறப்பட்டுச் செல்வதாக மாற்றம் பெற்றுவிட்டது. போகும்பொழுது பேருந்து பயணமாக அமைந்தாலும், மூங்கில் வெட்டித் திரும்பும்பொழுது கால்நடைப் பயணமாகவே அமைந்து எவ்வித மாற்றமும் பெறாமல் மரபு காப்பாற்றப்பட்டுள்ளது. இரவு தூங்கி ஓய்வெடுத்துவிட்டு அதிகாலை எழுந்து குளித்து முடித்து மூங்கில் வெட்டத் தொடங்குகின்றனர். நூறு அடி அளவிறகு நான்கு மூங்கில்கள் வெட்டியெடுத்து மரங்களைச் சீர்செய்து, செம்மைப்படுத்தித் தலைச்சுமைக்கு ஏற்பக் கட்டுக்கள் இட்டு அதன் பிறகுதான் காலையுணவு உண்கின்றனர். கால்நடையாகவே மரங்களைத் தூங்கித் தலைச்சுமையாகச் சுமந்து வருகின்றனர். அம்மனின் இருப்பிடத்திற்குச் சரிபகுதித் தொலைவில் அமைந்த ஊரினுள் மூங்கில்களை இறக்கி வைத்து மதிய உணவு உண்கின்றனர்.

நண்பகல் வேளையில் அனைவரும் ஓய்வெடுத்து விட்டு மாலையில் மீண்டும் புறப்பட்டு இரவுக்குள் ஊர்வந்து சேர்ந்து விடுகின்றனர்.* நான்கு மூங்கில்களையும் சுமந்து வருவதற்கு பத்துப் பன்னிரெண்டு பேர் அளவுக்குப் போதுமென்றாலும் கூடுதலாக வரக்கூடிய் நபர்கள் சிறிது சிறிது தூரத்திற்குச் சுமைய்ய மாற்றி மாற்றித் தூக்கி வருவதற்குப் பயன்படுகின்றனர். முதல்நாள் இரவு புறப்பட்டு அடுத்த நாள் இரவுக்குள் மூங்கில்களை வெட்டியெடுத்து அம்மன் கோவிலுக்கு அருகில்உள்ள மண்டுக்கரப்புச்சுவாமி கோயில் அருகே கொண்டு வந்து சேர்த்து விடுகின்றனர். மறுநாள் காலையில் ஊர்மக்களோடு சேர்ந்து வழிபாட்டிற்குரிய பொருளாக அமைந்த அக்கொடிமர மூங்கிலை அம்மன் கோவில் திடலுக்குக் கொணர்ந்து சேர்த்து விடுகின்றனர். கொண்டு வரப்பட்ட நான்கு மூங்கில்களையும் தம் குலத்தார்கள் சார்பாக ஒன்றையும், காவற்காரர்கள் என அழைக்கப்படும் தேவர் குலத்தார்க்குப் பிறிதொன்றையும், முத்தரையர் குலத்திற்கென்று மற்றொன்றையும் எஞ்சிய ஒன்றை மற்ற குலத்தார்க்கென்று பொதுவாகவும் பிரித்துக் கொடுத்துத் தமது கடமையினையும் பொறுப்பினையும் எவ்விதக் குறைபாடும் இன்றி அம்மனுக்காக நிறைவேற்றித் தருகின்றனர் தேவேந்திரகுலத்தார்கள்.

## வழியெங்கிலும் நிகழும் உபசரிப்புகள்

கொடிமரம் சுமந்துவரக்கூடிய ஊர்களில் உள்ள பொதுமக்கள் புனிதப் பொருளைச் சுமந்துவரக்கூடியவர்களுக்கு உரிய அனைத்து உபசரிப்புகளையும் மனமுவந்து செய்கின்றனர். அவர்கள் வரக்கூடிய பாதைகளில் நீர்தெளித்துக் குளிர்ச்சியூட்டுகின்றனர். குடிப்பதற்கு மஞ்சள்நீர் கொடுத்து மகிழ்கின்றனர். புளிப்பும் இனிப்பும் கலந்த *பானக்கம்* எனும் சுவைநீரினைக் கொடுத்துத்தாகம் தணிவிப்பதும் உண்டு. கொடிமரம் கொணர்பவர்களுக்கு உணவு அளிப்பதாக நேர்த்திக்கடன் செய்து கொள்பவர்களும் உள்ளனர். அதேபோல் மூங்கில் உரிமையாளர்களில் சிலர் தம் தோட்டத்து மூங்கில்கோவில் காரியத்திற்குப் பயன்படுவதனை மனதுள் கொண்டு பெருந்தன்மையுடன் மிகக் குறைந்த தொகையினை மட்டும் வாங்கிக் கொள்பவர்களும் உண்டு. திருவிழாதோறும் பொருளாதார நிலைக்கேற்பக் கோவில் நிர்வாகத்தினரும் கொடிமரம் கொணர்பவர்களுக்குரிய செலவுப் பணத்தினை அதிகரித்துக் கொடுக்கின்ற வழக்கமும் நடைமுறையில் உள்ளது.

## தேவேந்திரகுலத்தார்களுக்கு உரிய கடமைகளும் சலுகைகளும்

வருடந்தோறும் திருவிழா கொண்டாடுவதற்கு ஒருவார காலத்திற்கு முன்பு கோவில் சுற்றுப்புறத்தில் மண்டியுள்ள புற்களையும் முட்களையும் துப்புரவு செய்தல், மேடுபள்ளங்களைச் சரிசெய்தல், ஆகிய பணிகளை இச்சமூகத்தினர் தம் கடமையெனக் கொள்கின்றனர். கொடிமரம் கொணர்தல் இச்சமூகத்தினருக்கு வழிவழியாக உரிமையாக்கப் பட்டுள்ளதுபோல். அக்கொடிமரத்தினை நிலத்தில் ஊன்றி நிலைநிறுத்துவதற்கு உரிய வைக்கோல் பழுதைகளைப் பிரி செய்து தயாரித்துக் கொடுப்பதனையும் உரிமையாகப் பெற்றுள்ளனர். அடிப்படை வேலைகளாகிய உடல் உழைப்புத் தொடர்பான கடினமான செயல்களைத் தேவேந்திர குலத்தார்கள் எளிமையாகச் செய்து கொடுக்கின்றனர். அதற்கு ஏற்ப விழாக்காலங்களில் அம்மனுக்கு நேர்த்திக் கடனாகச் செய்யப்படும் தீச்சட்டி சுமந்து வருதல், மாவிளக்குப் போடுதல் ஆகியனவற்றுக்கு உரிய கட்டணச் சலுகை இக்குலத்தவர்களுக்கு அன்றுதொட்டு இன்று வரை உண்டு.

## மரியாதைகள்

கொடிமரம் சுமந்து வருபவர்களைத் தெய்வமாகவே கருதும் மனப்பான்மை காலங்காலமாக மக்களின் மனதினில் வேரூன்றியுள்ளது.

தம் ஊர்களைக் கடந்து செல்லும் இவர்களை வணங்கி வழிபடும் பண்டைய மரபுகள் இன்னும்தொடர்ந்து கொண்டேயுள்ளன. சுமந்து வருபவர்கள் என்ன குலத்தைச் சார்ந்தவர்கள் என்று பார்க்கும் குறுகிய எண்ணத்தினைத் தம் மனதினை விட்டு நீக்கிய தன்மையுடையவராய் உள்ளனர். மக்களாகப் பிறந்தார்கள் அனைவரும் தெய்வங்களுக்கு நடத்தப்படும் திருவிழா நிகழ்வுகளில் ஒன்றுபட்ட உள்ளத்தினராக ; உறவினர்களாகக் கலந்து பழகும் மனிதநேய உணர்வுடையவர்களாகத் திகழ்கின்றனர். பச்சைக்கீற்றுக்குடில் அமைத்து அம்மனுக்கு விழா எடுத்த காலத்திலும் கான்கிரீட் வசதி செய்து கட்டிட அமைப்பல் கோவிலெழுப்பி விழா எடுக்கிகன்ற காலத்திலும் ***விளாம்பட்டி முத்தாலம்மன் கோவிலில்*** அனைத்துக்குலத்தார்களும் எவ்வித மனவேறுபாடும் பார்க்காமல் மனம் ஒன்றுபட்டவாகளாக அம்மனைச் சென்று தரிசிக்கும் நாகரிக முதிர்ச்சிக்கு எடுத்துக்காட்டுகளாய் இன்றுவரையும் திகழ்ந்து வருகின்றனர்.

## தொகுப்புரை

தமிழ்நாட்டில் அமைந்துள்ள நாட்டுப்புறக் கோவில்களில் திருவிழா என்றால் ஒருவார உற்சாகமும், வழிபாடுகளும், சடங்குகளும், நேர்த்திக்கடன் நிறைவேற்றலும் ஆகிய பல்வகை மரபுகள் பின்பற்றப் படுவது வழக்கம். கொடியேற்றம், கொடிமரம் தொடர்பான மரபுகள் மட்டுமே இக்கட்டுரையில் விளக்கம் பெற்றுள்ளன. குறிப்பிட்ட ஒரு குலத்தவரே கொடிமரம் கொணர்தலில் இந்நாள் வரையிலும் மனமுவந்து ஈடுபட்டு நாட்டுப்புற வழிபாட்டு மரபுகளைப் பின்பற்றி நடப்பதனைத் தமக்குரிய கடமையாகவும் பொறுப்பாகவும் கைக்கொண்டுள்ளனர். ஒன்றேகுலம் ஒருவனே தேவன் என்ற திருமூலர் வாக்கிற்கு ஏற்ப, வரலாற்றுத் தொடர்பான நிலையில் தோற்றம் கண்ட அம்மனுக்கு வருடந்தோறும் எடுக்கப்படும் விழாவினை அனைத்துக் குலமக்களும் வேற்றுமை மறந்து ஒற்றுமையுடன் மனமொன்றி நிகழ்த்தி முடிக்கும் மரபினை நாட்டுப்புற வழக்காற்றில் வழிவழியாகக் காணமுடிகின்றது. விளைச்சல் பெருக உதவி செய்த இயற்கைக்கு நன்றி செலுத்தும் முகமாகவும், வருடந்தோறும் இதேபோல் அமோக விளைச்சல் காணவேண்டும் என்ற எதிர்பார்ப்பு உணர்வுடன் திருவிழாக்கள் நடத்தப் படுவது உண்டு. அத்திருவிழா நிகழ்வுகளில் ஊர்மக்கள் ஒவ்வொருவரும் தத்தமக்கு முடிந்த நிலையில் ஒரு பொறுப்பினை ஏற்று நடத்தி அதனையே தம் சந்ததியினரின் கடமையாகவும் விட்டுச் சென்றுள்ளனர் என்பதனையும் அறியமுடிகின்றது.

# பிரம்ம தேசம் பெத்தாரணசாமி வழிபாடு

**இரா. அருள்மணி**,எம்.ஏ., பிஎச்.டி.,
*பாரதியார் பல்கலைக்கழகம், கோவை.*

ஈரோடு மாவட்டம் பவானி வட்டத்தில் அந்தியூரிலிருந்து 4-வது கிலோ மீட்டரில் பிரம்மதேசம் என்ற கிராமத்தில் நடைபெறும் பெத்தாரணசாமி வழிபாட்டை அறிமுகம் செய்வது இக்கட்டுரையின் நோக்கம்.

## பிரம்மதேசம்

பிரம்மதேசம் பெத்தாரணசாமி பற்றி ஒரு வழக்காற்றுக் கதை நிலவுகிறது. சதுர்வேதி மங்கலம், பிரம்மதேசம், பிரம்மதேயம் ஆகியவை பல்லவர், சோழர்காலங்களில் பிராமாணர்களுக்கு வழங்கப்பட்ட இறையிலி நிலங்கள். இவற்றில் பிராமணர்கள் அதிக அளவில் குடியிருந்தனர் என்றும் பிரம்ம தேசத்தில் அந்தணர் அல்லாதோர் பெத்தாரணசாமிக்கு கோவில் அமைத்து வழிபட முயன்று அதை விரும்பாத சில அந்தணர் அதைத் தடுத்தனர். கப்பரை வளர்த்துக் கோயிலை வலம் வந்து ஊருக்குப் புகலாம் என்று கோயிலை விட்டு வெளியில் கொண்டுவந்தவுடன் அந்தணர் தங்களின் மந்திரசக்தியை ஏவி கப்பரை அந்தரத்தில் பறக்குமாறு செய்வர். இதைக் கண்டு பயந்த பூசாரியும் ஊழியக்காரரும் சிறிது நேரத்தில் கப்பரை கைக்கு வந்தவுடன் கோயிலுக்குக் கப்பரையை வைத்துவிட்டு திருவிழாவை நிறுத்திவிடுவர். இவ்வாறு அந்தத் திருவிழாவை நடத்தவிடாமல் பல ஆண்டுகள் செய்துள்ளனர்.

இதைக் கண்டு மனம் வருந்திய ஊழியக்காரர் பிரம்ம தேசத்திலிருந்து சுமார் 2 கி.மீ. தொலைவில் உள்ள ஓசபட்டி என்னும் ஊரில் பெத்தாரணனுக்கு கோயில் அமைத்துத் திருவிழா சிறப்பான முறையில் நடைபெறுவதை அறிந்து அங்கு சென்று அருள் வாக்கு கேட்கத் தீர்மானித்தார். அதன்படி திருவிழாவின் போது எவருக்கும் தெரியாமல் இரவோடு இரவாக ஓசபட்டி பெத்தாரணன் கோயிலை அடைந்தார். அப்போது ஊமையன் மீது அருள்வந்து. சாமியாடியபடி அக்ககோயிலிலுள்ள வீச்சரிவாளை எடுத்து ***எனக்கு அடிமை செய்ய ஒரு ஊட்டு பாப்பானை தவிர 1000 ஊட்டு பாப்பானையும் அடியோடு அழிக்கிறேன்*** பிடி என்று அரிவாளை ஊழியக்காரரிடம் கொடுத்தார். அரிவாளை வாங்கியதும் ஊழியக்காரர் மீது அருள் ஏற்றப்பெற்று

ஓட்டமாக பிரமதேசத்து பெத்தாரணன் கோயிலை அடைந்து எடு கப்பரையை என்று பூசாரியிடம் கூற பூசாரி கப்பரை எடுத்து கோயிலை வலம் வந்து ஊருக்குள் கொண்டு செல்ல மற்றவர்கள் பின்தொடர்ந்தனர். அவ்வாறு செல்லும் போது கப்பரை மீண்டும் அந்தரத்தில் சென்றது அருள் ஏறப் பெற்ற ஊழியக்காரர் திருநீறை வீசியதும் கப்பரை மீண்டும் கைக்கு வந்தது ; திருவிழா சிறப்பாக நடந்தது.

பெத்தாரணசாமி அக்கோயிலில் முழுமையாக ஆட்சி செய்யும் போது அந்தணர்கள் அங்கே இருக்க விரும்பவில்லை. அந்தணர்கள் திடீர் என்று மரணமடைவதும், கைகால்கள் விளங்காமல் போவதும் என்று நிகழ்ந்தன. இத்தகைய தீய நிகழ்வுகளுக்குக் காரணம் பெத்தாரணசாமியின் கப்பரையை அந்தரத்தில் பறக்கவிட்டதால ஏற்பட்ட தெய்வ குத்தமே என்பதை உணர்ந்து பெத்தாரணசாமியிடம் விழுந்து மன்னிப்புக் கேட்டுவிட்டு ஒரு அந்தணர் குடும்பம் தவிர 1000 வீட்டு அந்தணர்களும் ஊரைவிட்டு வெளியேறினர். பெத்தாரணன், வள்ளி, தெய்வானை, ஆறுமுக முருகன், சிவன் பார்வதி, காமாட்சி, உத்தண்டராயர், நடராஜர், நைனார், கன்னிமார் எழுவர், கருப்புச்சாமி, பாட்டப்பன் போன்ற தெய்வங்களின் சிலைகள் பெத்தாரணன் கோயிலில் அமைந்துள்ளது.

***வாரக்கட்டு பூஜை :*** ஒவ்வொரு வாரமும் செவ்வாய்க்கிழமைகளில் இக்கோயிலில் பூசை நடைபெறுகிறது. இதற்கு வாரக்கட்டு பூசை என்று பெயர். வாரந்தோறும் பூசையானது முதலில் பூசாரியின் வீட்டில் உள்ள வேங்கை மரத்தாலான பெத்தாரணன், காமாட்சி, பெருமாள் போன்ற கடவுளுக்கு நடைபெறுகிறது. சாமி சிலைகளுக்கு அலங்காரம் செய்யப்பட்டு வெற்றிலை, பாக்கு, பழம், தேங்காய், பொங்கல் போன்றவற்றைப் படைத்து பூசாரி தார் கோமணம் கட்டி, வாயைத் துண்டால் கட்டி ஒரு கையில் மணியையும் மறுகையில் சாம்பிராணி தூபமும் கொண்டு பூசை செய்கிறார். வாய்க்கட்டை அவிழ்த்துவிட்டு கற்பூர ஆராதனை செலுத்தி மீண்டும் பூசை செய்கிறார். அப்பொழுது ஊழியக்காரர் சாமி அழைப்பார். பிறகு பூசைமுடிந்ததும் ஊழியக்காரர் பழம், தேங்காய், பொங்கல் போன்றவற்றை எடுத்து சின்ன ஊழியக்காரர்களுக்கும் மக்களுக்கும் கொடுப்பார்.

***அபிசேகபூசை பச்சபூசை :*** அபிசேக பூசை, பச்சபூசை என்பது வாரந்தோறும் நடைபெறும் பூசைகளில் சிறப்புப் பூசையாகும். மக்கள் தாங்கள் நினைத்த காரியம் நிறைவேறினாலோ அல்லது நோயிலிருந்து குணமானாலோ அபிசேக பூசை மற்றும் பச்சபூசை செய்வர். அபிசேக பூசையில் பழம், தேங்காய், முந்திரி, திராட்சை, ஏலக்காய், தேன், கல்கண்டு, நல்லெண்ணெய் போன்றவற்றை ஒன்றாகப் பிசைந்து சிலைகள் மீது

ஊற்றிப் பூசை செய்வர். பிறகு சாமிக்கு அலங்காரம் செய்யப்பட்டு பச்சரிசி மாவினால் சுடப்பட்ட கச்சாயமும் பச்சையும் படைக்கப்பட்டு பூசை நடைபெறுகிறது. இதற்கு பச்சபூசை என்று பெயர்.

## திருவிழா : ஆதீனம் : நான்கு ஊர்மிராசுதாரர்:

பிரம்மதேசம் புதூர், பிரம்மதேசம், காட்டுப்பாளையம், சந்திபாளையம் ஆகிய நான்கு ஊர்மக்களும், மிராசுதாரர்களும் பெத்தாரணசாமி கோயில் திருவிழாவில் கலந்துகொள்கின்றனர். இந்தக் கோயிலில் கொண்டாடப்படும் எந்தத் திருவிழாவானாலும் நான்கு ஊர் மிராசுதாரர்களையும் அழைத்து இசைவு கேட்டபின்னரே கொண்டாடப் படுகிறது. அந்த வகையில் மிராசுதாரர்கள் மற்றும் நான்கு ஊர்க்காரர்களின் ஆதினத்தைப் பின்வருமாறு காணலாம்.

*பிரம்மதேசம் புதூர் :* பிரம்மதேசம் புதூர் ஊர்க்கவுண்டரும், பூசாரியும் ஒருவரே. கோவில் இவருக்கு உடமையானது. நிர்வாகப் பொறுப்புக்கள் கோவில் வசூல் அனைத்தும் இவருக்குரியது. இவர் வன்னியர்.

*பிரம்ம தேசம் :* பிரம்மதேசம் நாட்டாமை முதலியார் இனத்தவர். கொடியேற்றுதல், காமாட்சி அம்மனுக்குத் தேர்கட்டி எடுத்தல், தேர் புறப்படும் முன் கிடாய் வெட்டுதல் ஆகியவை இவர் ஆதினம்.

*காட்டுப்பாளையம் :* இந்த ஊர் சார்பாகக் கலந்து கொள்ளும் ஊர்கவுண்டர் வன்னிய இனத்தைச் சார்ந்தவர். பெருமாள் சாமிக்குத் தேர்கட்டி எடுத்தல் இந்த ஊர்க்காரர்களின் ஆதினம்.

*சத்திபாளையம் :* இந்த ஊர் சார்பாக நாயக்கர் இனத்தைச் சார்ந்த ஊாக்கவுண்டர், பட்டக்காரர், சின்னகவுண்டன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். பெத்தாரணசாமிக்குத் தேர்கட்டி எடுத்தல், தேர் கோவிலிலிருந்து மடப்பள்ளிக்குப் புறப்படும் முன்கிடாய் வெட்டுதல் ஆகியவை இவர்கள் ஆதினம்.

## திருவிழா

பெத்தாரணசாமி கோயில் திருவிழாவானது மாசிமாதம் சிவராத்திரி அன்று பூச்சாட்டுதலுடன் தொடங்குகிறது. பூச்சாட்டுதலுக்கு முன்பு நான்கு ஊர் மிராசுதாரர்களுக்கும் அழைப்புவிடுகின்றனர். பிறகு அபிசேக பூசை செய்து, அலங்கார பூசயின் போது பழம் தேங்காய் வைத்துப் பூசை செய்து பூசையை நிறுத்தி வைப்பர். நான்கு ஊர் மிராசுதாரர்களும் வரும்போது வெற்றிலை பாக்கு கொடுத்து அவர்களை வரவேற்றுப் பூ சாட்டலாம் என்று அவர்களின் இசைவு கேட்டபிறகு தளிகையை வைத்துப் பூசை செய்வர். இது பூச்சாட்டுதல் எனப்படும்.

*படிவிளையாடுதல், கோடியேற்றல் :* பூச்சாட்டிய பின்பு வீச்சரிவாள், திண்டுத்தடி, பிரம்பு, கிழுக்குத்தடி, வேல் போன்றவற்றை எடுத்துக்

கொண்டு ஊழியக்காரர்கள் வீடுவீடாக நான்கு ஊர்களுக்கும் செல்வர். மக்கள் தானியங்களையோ, பணத்தையோ காணிக்கையாகக் கொடுப்பர். இந்த நிகழ்ச்சியானது மூன்று நாட்கள் நடைபெறுகிறது. இதற்கு படிவிளையாடுதல் என்று பெயர். படிவிளையாடுதல் முடிந்து 8-வது நாள் கொடியேற்றுதல் நிகழ்ச்சி நடைபெறுகிறது. இங்கு கொடியேற்றுதல் என்பது கோவிலுக்கு 60 அடி மூங்கில் கொண்டுவரப்பட்டு பழம், தேங்காய் வைத்துப் பூசை செய்து வெள்ளைக் கொடியை மூங்கிலில் கட்டி மூங்கிலைக் கோயிலுக்கு எதிரில் உள்ள அரசமரத்தோடு கட்டி வைப்பர். இந்த நிகழ்ச்சிக்குக் கொடியேற்றுதல் என்று பெயர்.

***மக நட்சத்திரத்தில் தேர் ஓட்டம் :*** மாசி மாதம் மகநட்சத்திரத்தில் தேர் ஓட்டம் நடைபெறுகிறது. இங்கு தேர் என்பது இரண்டு பெரிய மூங்கில்களை வைத்து அதற்கு மேல் சிறு மூங்கில் குச்சிகளை வைத்துக்கட்டி தேர்வடிவில் செய்வர். இதில் காமாட்சி அம்மனுக்கு ஒருதேர், பெத்தாரணசாமிக்கு ஒரு தேர், பெருமாள் சாமிக்கு ஒரு தேர் என்று மூன்று தேர்கள் இடம்பெறுகின்றன. இந்த மூன்று தேர்களையும் சத்திபாளையம், காட்டுப்பாளையம், பிரம்மதேசம் ஆகிய மூன்று ஊர்க்காரர்களும் சேர்ந்து தேர்களை வடிவமைக்கின்றனர். பிறகு நான்கு ஊர்ப் பெரியவர்களும் மேளதாளத்துடன் வருகின்றனர். அவர்களைப் பூசாரியும் ஊழியக்காரரும் வெற்றிலை பாக்கு கொடுத்து வரவேற்கின்றனர்.

அதை அடுத்து காமாட்சி அம்மன் பெத்தாரணன் பெருமாள் ஆகிய மூன்று சிலைகளையும் அவற்றிற்கு உரிய தேரில் வைத்துப் பூசை செய்து, தீர்ததம் தெளித்துக் கிடாய் வெட்டப்படுகிறது. பிறகு காமாட்சி அம்மன, பெத்தாரணன், பெருமாள் ஆகிய மூன்று தேர்களும் ஒன்றன் பின் ஒன்றாகச் சென்று கோயிலை அடைகிறது. இந்நிகழ்ச்சியை அடுத்து மூன்று சிலைகளுக்கும் பூசை செய்யப்பட்டு கோவிலின் மகாமண்டபத்தில் இறக்கி வைக்கின்றனர்.

***கப்பரை எடுத்தல் :*** தேர் கோயிலை அடைந்த அன்று இரவு பரம்பரை அந்தணர் வந்து பூசாரிக்கும் ஊழியக்காரருக்கும் பூணூல் போட்டு கங்கனம் கட்டுவார். அன்று அதிகாலை ஆறுமுகம் பதிக்கப்பட்ட மண்பானையில் நெருப்பு மூட்டப்பட்டு அக்னி வளர்த்தப்படுகிறது. பின் உத்தண்டராயர் அழைக்கப்பட்டு பூசாரி மீது சாமிவந்து கப்பரையை எடுத்துக் கோயிலைக் வலம் வந்து பொன்காளியம்மன் கோவிலுக்குச் சென்றுவிட்டு பின் கோயிலுக்குத் திரும்புவர். அப்பொழுது நான்கு ஊர் பெரியவர்களும் அவரவர் ஊருக்கு அழைத்துச் செல்வர். நான்கு ஊரையும் சுற்றிவிட்டு இறுதியாக பெத்தாரணன் கோயிலை அடைவர்.

*தேர் மடப்பள்ளியை அடைதல் :* கப்பரை எடுத்தல் நிகழ்ச்சி முடிந்து அடுத்த நாளில் கோயிலில் உள்ள சிலைகளை எடுத்து மீண்டும் சிலைகளைத் தேரில்வைத்து பூசை செய்து கிடாய் வெட்டியபின் தேர் மீண்டும் மடப்பள்ளியை அடைகிறது. பிறகு சிலைகள் இறக்கிவைக்கப்படுகிறது. இவ்வாறாக திருவிழா நிறைவு பெறுகிறது. திருவிழா முடிந்த அடுத்த நாள் நான்கு ஊர்மக்கள் அனைவருக்கும் வீடுவீடாகப் பழம் கொடுக்கப்படுகிறது.

*பாட்டப்பன் திருவிழா :* ஆவணி மாதத்தில் 2-வது புதன் கிழமை நான்கு ஊர்க்காரர்களும் சேர்ந்து பூசை செய்து பெத்தாரணன் கோயிலில் உள்ள பாட்டப்பசாமியை அழைத்துக் குறிகேட்டுப் படிவிளையாடுவர். இந்நிகழ்வை அடுத்து 15 நாள் கழித்து நான்கு ஊர் மிராசுதாரருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டு காலையில் தேங்காய் பழம் வைத்துப் பூசை செய்வர். உச்சிகாலப் பூசையில் கிடாய் வெட்டப்படுகிறது. இரவு 8 மணிக்கு காவுக்கிடாய் வெட்டப்பட்டுப் பாட்டனுக்குக் காவு கொடுத்தலுடன் திருவிழா முடிவடைகிறது.

*வன்னிமரம் குத்துதல் :* வன்னி மரம் குத்துதல் என்பது இங்கு சிறப்பான பூசை முறையாகும். இது நவராத்திரியன்று கொண்டாடப்படுகிறது. நவராத்திரியன்று பாட்டப்பனுக்கு சிறப்புப் பூசை செய்யப்பட்டுப் பெத்தாரணன் சன்னதியிலிருந்து வேல் கொண்டு வரப்படுகிறது. பின் சாமி அழைக்கப் பெற்று பூசாரியின் மீது அருள் ஏற்றப்படுகிறது. அருள் ஏற்றப்பெற்ற பூசாரி வேலால் வன்னி மரத்தை மூன்று குத்து குத்துகிறார். முதல் குத்து நாட்டிற்கு இரண்டாவது குத்து பூசாரி வீட்டிற்கு மூன்றாவது குத்து ஊழியக்காரர் வீட்டிற்கு என்பர். வன்னி மரத்தைக் குத்தும் போது பால் வந்தால் நாடு மழைபெய்து செழிப்பாக இருக்கும் என்றும் இரத்தம் போன்று சிவப்பாக வந்தால் வறுமை ஏற்படும் என்பதும் ஐதீகம். அதே போன்று பால், மற்றும் இரத்தக் குறிகளைக் கொண்டு அந்த வருடம் பூசாரி, ஊழியக்காரர் ஆகிய இருகுடும்பங்களின் நிலவரம் அறியப்படுகிறது.

## முடிவுரை

பெத்தாரணசாமி வன்னியர் இனத்திற்குக் குலத் தெய்வமாக அமைந்தாலும் அனைத்துப் பிரிவு மக்களும் பங்கு கொண்டு வழிபடுகின்றனர். பில்லி, சூனியம், பேய்பிடித்தவர், நோய்வாய்ப்பட்டவர், மனநலம் குன்றியவர் என்று அனைத்துவகை நோயாளிகளும் இக்கோவிலில் தங்கியிருந்து பெத்தாரணசாமி அருளால் நலம் பெற்றுச் செல்கின்றனர்.

# நாட்டுக்கோட்டை நகரத்தார் சமுதாயத்தில் படைப்பு மரபும் இலக்கு நோக்கும்

**முனைவர் கே.பி. அழகம்மை**, எம்.ஏ., எம்பில்., பிஎச்.டி., எம்.ஏ., எம்.எட்.,
*ஜே.கே.கே. நடராஜா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, குமாரபாளையம்.*

நாட்டுக்கோட்டை நகரத்தாரின் பூர்வீக இடம் காவிரிப்பூம் பட்டினம். இது நகரம் எனப்படும். காவிரிப்பூம்பட்டினம் கடலால் கொள்ளப்பட்ட நிலையில் இம்மக்கள் அங்கிருந்து வந்து மறவர் நாட்டில் குடியேறி, கோட்டை போல் இல்லங்களை அமைத்து, நகர்களை உருவாக்கினர். இதனாலும் பூம்புகாரினின்றும் குடிபெயர்ந்து வந்தாலும் நகரத்தார் என்ற பெயரைப் பெற்றனர். இதனை சோமலெ அவர்களின் கூற்றும் (1 : 16) அரண்மனை போலும் வீடமைத்து இவர்கள் வாழ்ந்தமையால் இவர்களுக்கு நாட்டுக்கோட்டை நகரத்தார் என்ற காரணப் பெயர் ஏற்பட்டு வழங்கலாயிற்று என்ற ஔவை *துரைசாமிப்பிள்ளையின் (2: 143) கருத்தும் உறுதிசெய்கின்றன.* சிவகங்கை, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களிடையே 96 ஊர்களாக இருந்து இன்று சுமார் 72 ஊர்களாகி, அவற்றை நிலை இடமாகக் கொண்டு வாழ்ந்து வரும் நாட்டுக்.கோரட்டை நக்ரத்தார் சமுதாயத்தின்ரின் விராமதி என்னும் கிராமத்தில் நடைபெறும் *படைப்பு* எனும் வழிபாட்டு மரபு இங்கு ஆய்வுப் பொருளாகின்றது.

## படைப்பு

நாட்டுப்புற தெய்வங்களையும், இறந்த தம் மரபின் முன்னவர்களையும் நினைத்து வழிபாடு செய்யும் நிகழ்வு படைப்பு என்று அழைக்கப்படுகிறது. ஏழுவகைக் கோவில் பிரிவுகளை உடைய நகரத்தார் தத்தம் கோவில் பங்காளிகளுடனும், தாய்பிள்ளைகளுடனும், இணைந்தும், தம்குடும்பத்தவருடன் மட்டும் தனியாகவும் இவ்வழிபாட்டை மேற்கொள்வர். இந்நிகழ்ச்சி பூர்வீக இடத்தில் (72 ஊர்களில்) உள்ள இல்லங்களிலேயே நிகழ்வுறும். பெரும்பான்மை இலையுதிர்காலம் முடிந்த வசந்த காலத்துவக்கத்தில் ஆடி, ஆவணி மாதங்களில் நடைபெறுகிறது. சில இடங்களில் கல்வி, அலுவல், தொழில் ஆகிய நிகழ்காலக் கட்டமைப்புக்கேற்ப விடுமுறைகளை ஒட்டியும் நிகழ்த்தப்பெறுகிறது. இவற்றுடன் பூ, மாலை, வெற்றிலைபாக்கு,

தேங்காய், பழம், பால் ஆகியனவும் வேட்டி, துண்டும், பெண் வாழ்வரசியாக இறந்திருப்பின் சேலை, மஞ்சள், குங்குமத்துடன் மிஞ்சி கழுத்துரு தாலி போன்ற அணிகலன்களும் வைத்துப் படைப்பு நடத்தப்படும்.

## விராமதிப்படைப்பு

விராமதி என்பது ஒருசிறிய கிராமத்தின்பெயர். எந்தெந்த ஊரில் படைப்பு நிகழ்வுறுகிறதோ அந்தந்த ஊர்ப்பெயருடன் இணைத்துக் கூறுவது இவ்வினத்தவரின் மரபு வழிப்பட்ட பழக்கமாகும். அவ்வகையில் விராமதி என்னும் சிற்றூரில் ஒவ்வொரு ஆண்டும் நிகழ்ந்துவரும் படைப்புமுறை இங்கு முதன்மைப்படுத்திப் பேசப்படுகின்றது.

இங்கு படைப்பு நிகழ்வு இரண்டு நாட்கள் நடைபெறுகின்றது. ஆயின் சுமார் ஒருவாரத்திற்கு முன்பே இதற்கான ஆயத்தப்பணிகள் துவங்கும். பங்காளிகளில் மூத்தவரே பூசாரியாக இருப்பார். வருடத்திற்கு ஒரு குடும்பத்தவர் (ஒருபுள்ளி) இப்படைப்புக்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அனைத்து நிகழ்வுகளையும் பிறபங்காளிகளின் ஒத்துழைப்புடன் இவரே பொறுப்பேற்று நடத்த வேண்டும். இதற்கான செலவுகள் ஒவ்வொரு புள்ளிக்காரரிடமிருந்து வசூலித்தும், ஏலப்பணத்திலிருந்து எடுத்தும் மேற்கொள்ளப்பெறும் வழிபாட்டு நிகழ்ச்சி இரவில் நடைபெறும்.

சிவகங்கை மாவட்டத்தில் உள்ள விராமதி, கீழ்ச்சிவல்பட்டி, புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள பி. அழகாபுரி என்னும் மூன்று ஊர்களில் உள்ள இளையாத்தக்குடிக் கோவிலின் பெருமருதூருடையார் பிரிவினைச் சேர்ந்த பங்காளிகள் இணைந்து இவ்வழிபாட்டை நிகழ்த்தி வருகின்றனர். இப்படைப்பு ஒவ்வோராண்டும் ஆடிமாதம், முதலில் வரும் திங்கள், செவ்வாயில் நடைபெறுகிறது. புதன்கிழமையன்று ஏலம் நிகழ்த்துதலுடன் விழா இனிது நிறைவுறுகிறது. இவ்வழிபாட்டிற்கு எந்த ஊரிலிருந்தாலும், அவசியம் வந்து கலந்து கொள்ளும்படி காரியக்காரர் கடிதம் எழுதுவார். பெரும்பான்மை அனைவரும் இப்படைப்பில் கலந்துகொள்வர். இன்றெனின் குடும்பத்தில் ஒருவராவது அவசியம் வந்து கலந்து கொண்டு காளாஞ்சி வாங்கிச் செல்வர்.

## படைப்பின் வரலாறு

இப்பங்காளிகளின் முன்னவர் பெயர் மின்னன் செட்டி, இவர் காளியை உபாசித்தவர். காளி குடவரையிலிருந்து வந்ததாகக் கூறப்படுகிறது. 'தேனாச்சியம்மன் கோவிலில் இருந்தது.

மின்னஞ்செட்டியாரின் கருத்தொருமித்த வழிபாட்டால் நாளடைவில் காளி அவர் இட்ட கட்டளைகளையெல்லாம் நிறைவேற்றி வந்ததாம். பின்னர் காளியின் ஆட்டம் அதிகமாக ஆட்டத்தைத் தவிர்க்கும் நோக்கில் அதன் கை கால்கள் உடைக்கப்பட்டன. உடைபட்ட நிலையில் உள்ள சிலை தேனாச்சியம்மன் கோவிலின் நுழைவாசலில் இன்றும் உள்ளது. பின் அதன் அடிமண்ணை எடுத்துப்பக்கத்தில் உள்ள கோவிலில் சிலை நிர்மாணிக்கப்பட்டதாம். இது ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்குச் செவிவழியாக இறக்குமதியான கதை. எனவே செய்தியின் தொடர்புகள் ஆய்வுக்குரியதாகிறது. இருப்பினும் மின்னன் செட்டியார் இருந்ததும் காளியை வழிபட்டதும் மட்டுமே தெளிவாகத் தோற்றம் தருகிறது. இப்பொழுதும் படைப்பின் துவக்கநாளில் இக்கோவிலுக்குச் சென்று அபிடேகம் அர்ச்சனை செய்து, தீர்த்தம் எடுத்து வந்து வைத்துப் படைப்பு நிகழ்த்தப்பெறுவது மேற்கருத்தை உறுதி செய்கிறது.

## வழிபாட்டிற்குரிய தெய்வங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | ஊர்க்காவலர் | 5. | மின்னன்செட்டி |
| 2. | பெரிய கருப்பர் | 6. | நல்லம்மை |
| 3. | சாத்தய்யா | 7. | முன்னோர்கள் |
| 4. | குடவரைக்காளி | | |

இந்த ஏழுதெய்வங்களில் நல்லம்மை வாழ்வரசி (கணவனுக்கு முன்பாக இறந்தவர்). இருவருக்கு சேலை, மிஞ்சி, தாலி ஆகியவற்றுடன் பெண்கள் அணியும் அணிகலன்களும் வைத்து வணங்கப்படும். ஏனைய தெய்வங்கட்கு வேட்டி, துண்டு வைக்கப்பெறும். இப்படைப்பில் பெரியகருப்பர், மின்னன்செட்டி, காளி, அசைவ உணவுப்பழக்கம் கொண்டிருந்த முன்னோர் ஆகியவர்க்கு அசைவ உணவும் ஏனையோர்க்கு சைவ உணவும் படையல் செய்து வழிபாடு நிகழ்வுறும்.

## சிறப்பம்சம்

1) படைப்பில் பள்ளயத்தில் வைத்து வழிபடவேண்டிய உணவுப் பொருட்களின் ஆக்கம் பங்காளிவீட்டுப் பெண்களைச் சார்ந்தது. அதற்காகக் கண்ணிமைக்கும் நேரத்தில் செய்து முடிக்கக்கூடிய அறிவியல் கண்டுபிடிப்புக்கள் வந்துள்ள இக்காலத்திலும், ***உரலில் நெல்லைக்குற்றுதல், குற்றியெடுத்த அரிசியை இடித்து மாவாக்குதல் அம்மியில் மிளகாய் அரைத்தல் பள்ளயத்திற்குரிய உணவுப் பொருட்களைச் சமைத்தல்,*** போன்ற அலுவல்களைப் பங்காளி வீட்டுப் பெண்களே செய்கின்றனர். இச்செயல் மரபுவழிப்பட்ட பழக்கத்தை,

தொன்மைத் தொடர்ச்சியைத் தம் குழந்தைகட்கு உணர்த்தும் குடும்பநிறுவனக் கோட்பாட்டை நினைவுறுத்துவதாகத் தோற்றம் தருகிறது. சிறிது சிறிதாக மறக்கப்பட்டுவரும் இச்செயல்கள், இன்றைய உடற்பயிற்சிக்கான பழக்கமாகத் தொடர்வுறும் நிலையில் இது குழந்தைகட்கு முற்றிலும் தெரியாத நிலையை உருவாக்காது எளிதில் இல்லத்திலிருந்தே பயிற்சியை மேற்கொள்வதற்கு உரிய வாய்ப்பாகவும் அமையும்.

2) படைப்பின் பள்ளய இலைக்கு அந்தந்தக் கரைக்குப்பட்டவர் மட்டுமே உரிமையுடையவர் மற்றவர்களுக்கு அதிலிருந்து பிரசாதம் மட்டுமே வழங்க வேண்டும். 3) படைப்பின் நிகழ்வில் உணவு உண்டபின் இலையையோ, மிஞ்சிய உணவுகளையோ குப்பையில் கொட்டுவது கூடாது. அனைத்தும் படைப்பு வீட்டின் எல்லைக்குள் உள்ள இடத்தில் சேமம் சேர்க்கப்பட வேண்டும்.

## ஏலம்

இருநாள் படைப்பும் முடிந்தபின் மூன்றாம் நாள் காலையில் ஏலம் துவக்கப்பட்டு மாலைவரை தொடர்புற்று மகிழ்ச்சியுடன் நிறைவடையும். ஏலம் நடத்துவதன் நோக்கம் :

1. வழிபாட்டுக்குப் பணம் சேர்த்து படைப்பு இடையீடின்றி நடைபெற
2. செல்வம் உள்ளவர் கொடுத்து – அதிகரிக்கும் செலவை எதிர்கொள்ள
3. மரபு வழிபட்ட நம்பிக்கை என மூன்று நோக்கங்களில் ஏலம் நடைபெறுகிறது.

## ஏலம் எடுப்பதன் நோக்கம்

1. விநாயகப்பானை எடுத்தல்– விக்னம் நீங்கும் செல்வம் சேரும்
2. மஞ்சள் எடுத்தல் – மனச்சிலேசம் நீங்கும்
3. உப்பு எடுத்தவர்க்கு – ஒன்று நூறாக உயர் செல்வம் தங்கும்
4. இனிப்புபொருட்கள் – வாழ்வில் இனிமை உருவாகும்.

## நிவர்த்திக்கடன்

நினைத்த காரியங்கள் நடைபெறா நிலையில், படைப்பில் வந்து கலந்து கொண்டு, அக்காரியம் முடிந்தால் இன்னது செய்கிறேன் என்று வேண்டிச் செல்வர். நிவர்த்தி செய்ய வேண்டுதல் என்பது :

1. கேட்டது கிடைக்கும் என்ற தெய்வ நம்பிக்கை
2. குழந்தை நீடிய ஆயுளோடு இருக்கும் என்ற நம்பிக்கை
3. படைப்பு தெய்வங்களை நினைத்து, பின் எச்செயலை மேற்கொளினும் வெற்றி கிட்டும் என்ற நம்பிக்கை

4. குழந்தை பிறக்கும். திருமணம் கைகூடும் என்ற நம்பிக்கை என வேண்டுதல் வேண்டிக்கொள்பவரின் மனநிலையைப் பொறுத்து அமைகிறது. இவையனைத்தையும் கண்ணம்மை ஆச்சியின் தாலாட்டுப்பாடல் உறுதி செய்கிறது.

## சமுதாய இலக்கு

நம்மை நாளும் காக்கும் தெய்வங்களை வணங்குவதாகவும் முன்னோர்களின் நினைவாகவும், அவர்களின் ஆசீர்வாதத்தை வேண்டும் நிலையிலும், ஆசீர்வாதம் கிட்டும் என்ற நம்பிக்கையிலும் உருவாக்கப்பட்டது. இவ்வழிபாடு பலர் ஒன்று சேர்ந்து, ஒற்றுமையுடன், ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து நடத்தும். இச்செயல் மனிதம், மனிதநேயம், மனிதத்துவத்துடன் கூடிவாழ்வதற்கான களத்தை உருவாக்கிக் கொடுப்பதாகத்தோற்றம் தருகிறது. உறவினர்களுடன் உறவாடும் வாய்ப்பு அனுபவப்பகிர்வு, குழந்தைகளின் வளர்ச்சி அறிதல் - அவர்களைத் தகுநிலைப்படுத்தல் போன்றவற்றிற்கும் இந்நிகழ்ச்சி வாய்ப்பினை உருவாக்குகிறது. இங்கு ஆடிப்பாடி விளையாடி, சின்னஞ்சிறு கதைகள் பேசி, ஒப்பார் குழுவுடன் இணைவுற்று மூத்தோரின் கொஞ்சல் கெஞ்சல்களுடன் பெற்ற அனுபவங்கள் எத்தனை செல்வம் கொடுத்தாலும் கிடைக்கப்பெறாத சுகமான அனுபவங்கள். நெருக்கடி மிகுந்த வாழ்வுக் கலப்பிடையே மனதின் சுமையை லேசாக்கும் சுகஉணர்வு, சுமார் நான்கு நாட்களில் மனத்தை ஆரோக்கியப்படுத்திய இப்பயிற்சி, பின்னர் சமுதாயத்துடன் கலந்து பழகும் போது,

*விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையை*
*ஒன்றுமை உணர்வை, உதவும் பாங்கை............*
*அன்போடும் உருவாக்கத்தை*

என மொத்தத்தில் ஒரு புத்தணர்ச்சியை, நல்ல ஆளுமைப் பண்பை உருவாக்குவதுடன் இது சமுதாயத்திற்கு நல்ல குடிமக்களை, உருவாக்கும் களமாகவும் இலங்குகிறது.

## துணைநூல்கள்

1. *சோமலெ* : செட்டிநாடும் செந்தமிழும்
2. *இராமநாதன் செட்டியார்* : நமதுமரபு நகரத்தார் மாநில மாநாட்டு மலர்
3. *சுப. கண்ணமை ஆச்சி* : அழகஞ்செட்டியார் தாலாட்டு, செந்தமிழ் பதிப்பகம், காரைக்குடி.

# ஸ்ரீ பாலகுருநாதசாமி வழிபாடு

**இரா. அனந்தலட்சுமி**, எம்.ஏ.,எம்.ஃபில்.,
*அழகப்பா பல்கலைக்கழகம், கோவைமையம்.*

நாட்டுப்புறத் தெய்வங்களின் மீதான நம்பிக்கைகளும் அவை தொடர்பான செயல்பாடுகளும் மக்களின் உணர்வோடும் வாழ்வோடும் கலந்து காணப்படுகின்றன. *நாட்டுப்புறவியல் என்பது அறிந்தோ, அறியாமலோ நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றில் பாதுகாக்கப்படும் ஒரு குறிப்பிட்ட மக்களின் பண்பாடேயாகும்.* நம்பிக்கைகளின் அடிப்படையில் மக்களின் வழிபாடும் மரபுகளும் அமைந்து காணப்படுகின்றன. மதுரை மாவட்டத்தில் வாழும் மக்களிடையே ஸ்ரீ பாலகுருநாதசாமி மீது கொண்ட நம்பிக்கையின் காரணமாக பின்பற்றி வரும் வழிபாடும் மரபுகளும் குறித்து இக்கட்டுரை விளக்குகின்றது.

*ஸ்ரீ பாலகுருசாமி வழக்காற்றுக் கதை :* பாலகுருநாதசாமி தோற்றம் பற்றிய வழக்காற்றுக் கதை ஒன்று நிலவுகிறது. பல நூற்றாண்டுகளுக்கு முன் காவட்டூர் என்னும் ஊரிலிருந்து ஒரு பிராமணக் குடும்பத்தினர் கால்நடையாய் மதுரை மாவட்டம் பிள்ளையார் பாளையம் என்னும் கிராமத்திற்கு வரும் போது பாதிவழியில் ஒரு குழந்தை வந்து, *நானும் உங்களுடன் வருகின்றேன். என்னையும் கூட்டிக் கொண்டு போகவும்* என்று கேட்டது. அதற்குப் பிராமணக் குடும்பத்தினர் *நீ சிறு குழந்தை. உன்னை நாங்கள் எங்கே கூட்டிச் செல்வது* என்று மறுத்தனர். அதற்கு அந்தக் குழந்தை நான் உங்களுக்குத் துணையாக வருகிறேன். நல்ல வசதிகளைச் செய்து தருகின்றேன் என்று சொல்லிவிட்டு மறைந்து விட்டதாம். பின்னர், பிள்ளையார்பாளையம் வந்து சேர்ந்தனர் பிராமணக்குடும்பத்தினர். பிள்ளையார்பாளையம் காடும் மேடுமாக இருக்க அவ்விடத்தில் ஒரு கிணற்றருகில் ஒரு தென்னைமரத்தடியில் தங்கியிருக்க, சற்றுத் தள்ளியிருந்த ஊரிலிருந்து பிள்ளைமார்கள் இவர்களைப் பார்த்து, மளிகைச் சாமான்கள் வாங்கிக் கொடுக்க, பிராமணர்களும் சமைத்துச் சாப்பிட்டார்கள். பிறகு, அப் பிராமணக் குடும்பத்தினரை அரைபல்லாங் தூரத்தில் உள்ள அயன்பாப்பாகுடி என்னும் ஊரில், ஒருவீட்டில் தங்கி கொள்ளவும் உதவி செய்தனர். தொடர்ந்து காவட்டூரிலிருந்து பல குடும்பங்களும் வந்து அயன்பாப்பா குடியில் குடியேறத் தொடங்கினர். இவ்வேளையில் முதலில் வந்த

பிராமணக் குடும்பத்தினர் அக்ரஹாரத்தில் வீடுகட்ட, அப்போது துணையாக இருப்பேன் என்று கூறிய அக்குழந்தை அங்கு வந்து எனக்குத் தனியாக ஒரு இடம் ஒதுக்கி, நீங்கள் விளைவிக்கும் நெல் அறுவடையான உடன் ஒருமண் குடுவையில் 4 மரக்கால் நெல் கொட்டி, அதை அடுத்தவருடம் எடுத்துக் குத்தி புடைத்துப் பொங்கல் நிவேதனம் செய்து வீட்டில் உள்ளவர்கள் மற்றும் பங்காளிகள் சாப்பிடவேண்டும். வேறுயாரும் அதைச் சாப்பிடக் கூடாது என்றும் கூறியது. இவ்வாறு கூறிய குழந்தைதான் பாலகுருநாதசாமி என்றும், பாலகுருநாதனுக்கு ஒரு கோயிலும் கட்டிவைத்தனர். பாலகுருநாதன் லிங்கவடிவினன் என்றும், பாலகுருநாதனின் தாயார் அங்காள பரமேஸ்வரி என்றும் கூறும் பிர்ராமணர்கள் அக்கோயிலுக்குள் பிரதிஷ்டைச் செய்து வழிபட்டு வந்தனர். சிலகாலம் கழித்து அக்கோயில் பராமரிக்கப்படாமல் பாழடைந்து பாலகுருநாதன் மற்றும் அங்காளபரமேஸ்வரி சிலைகள் மண்ணில் புதையுண்டு போயின.

## கோயில் குடமுழுக்கும் வழிபாடும்

மண்ணுக்குள் புதைந்துபோன கோயிலும், சிலைகளும் பற்றி பிள்ளையார்பாளையம் அயன்பாப்பா குடியில் வசித்து வந்த தெய்வபக்தி கொண்ட தையல்காரர் ஒருவரின் கனவில் தோன்றி, புதையுண்ட செய்தியைக் கூறி, கோயிலைப் புதுப்பித்து குடமுழுக்கும், வழிபாடும் செய்யுமாறு பாலகுருநாதசாமி உணர்த்தியதாக ஒரு செய்தி நிலவுகிறது. அத்தையல்காரரும் தன் கனவைப் பற்றிக் கிராமமக்களிடம் சொல்லி கிராமமக்கள் உதவியோடு கோயிலைப் புதுப்பித்துக் குடமுழுக்கும் செய்து வழிபாடு நிகழ்த்தினர். அது முதற்கொண்டு கிராம தேவதையாய் அங்காளபரமேஸ்வரியும், குலத்தெய்வமாக ஸ்ரீபாலகுருநாதரும் அருள்பாவிப்பதாக அம்மக்கள் வழிபட்டு வருகின்றனர்.

## வழிபாட்டு முறையும், நம்பிக்கையும்

கிராமதேவதையான அங்காளபரமேஸ்வரிக்கும், குலதெய்வமான ஸ்ரீ பாலகுருநாதசாமிக்கும் வருடாவருடம் சிவராத்திரி ஒட்டிய மூன்று நாட்களுக்கு விசேட வழிபாடு நிகழ்த்தப்படுகிறது. குழந்தை அவதாரமாக ஸ்ரீ பாலகுருநாதனைக் கருதும் மக்கள் பொங்கல் வைத்து வழிபாடு செய்து வந்தனர். ஒரு சமயம் பொங்கல் வைக்கையில் ஒரு பெண் ஏதோ ஓர் ஆசையில் பொங்கலைக் கரண்டியில் எடுத்து வாயில் போட்டுச் சுவைக்க அக்கரண்டி ஒட்டிக் கொண்டது. இந்நிகழ்வை அடுத்து பொங்கல் வைக்கும் முறை மாற்றப்பட்டது. கோயிலில் ஒரு இடத்தில் கரும்பினால் பந்தல் போட்டு ஆண்கள் வாயில் துணிக்கட்டிக் கொண்டு, அவர்களே நெல்குத்தி பொங்கல் வைத்து வழிபட்டு

வந்துள்ளனர். இத்தகைய வழிபாட்டுமுறை வெகுகாலத்திற்கு முன்னர் நடைபெற்று வந்ததாகவும், தற்போது படையல் போட்டு வழிபடும் முறை கடைப்பிடிக்கப்பட்டு வருவதாகவும் கூறுகின்றனர். பொங்கல் வைக்கும் பொறுப்பு பூசாரியிடமே தரப்பட்டுள்ளது. பொங்கலுக்குத் தேவையான எல்லாப் பொருட்களும் பூசாரியிடமே தரப்படுகின்றன. பொங்கலைச் செய்து அம்மனுக்கும், பாலகுருநாத சாமிக்கும் நிவேதனம் செய்து பின்னர் பக்தர்களுக்கு விநியோகிக்கும் வழிபாடுதான் தற்போது நடைபெற்று வருகிறது. மேலும், படையல் இடுவதில் வெற்றிலை, பாக்கு, பழம், பொங்கல் எல்லாவற்றையும் ஒரு வாழை இலையில் படைத்துச் சூடம் காட்டி வழிபடப்படுகிறது.

## சிவராத்திரி விழாவும் வழிபாடும்

கிராமதேவதையான அங்காள பர்மேஸ்வரியும், குலதெய்வமான பாலகுருநாதசாமியும் துடியான தெய்வங்கள் என்பதால் எந்தவிதமான ஒழுக்ககேடுகளும் இல்லாதவர்கள் மட்டுமே இக்கோயிலுக்குச் சென்று வழிபடவேண்டும் என்னும் நம்பிக்கை கொண்டுள்ளனர். இக்கோவிலில் வருடா வருடம் சிவராத்தரி விழாவும், வழிபாடும் நடத்தப்படுகின்றன. சிவராத்திரியன்று இக்கோயில் பூசாரியின் கால்களில் மற்றும் கைகளில் சங்கிலியால் கட்டி, நடுநிசியில் கையில் சுருட்டு சாராயம் மற்றும் உணவு உருண்டைகளுடன் 4 வீதிகளையும் சுற்றி வந்து கையில் உள்ள அனைத்துப் பொருட்களையும் ஆகாயத்தை நோக்கி வீசுவார். பூசாரியும் வானத்தை நோக்கிப் பார்க்கமாட்டார். அவரது உடம்பிலெல்லாம் சங்கிலியால் பிணைத்து இழுத்துச் செல்பவர்களும் மேலே நிமிர்ந்து பார்க்கமாட்டார்கள். மேலே எறிகின்ற இந்த உணவுப் பொருட்கள் ஒரு துளிகூட கீழே விழாது என்றும் அவற்றை வானமெல்லாம் வியாபித்து நிற்கும் குருநாதசாமி விழுங்கிவிடும் என்றும் நம்புகின்றனர். சிவராத்திரி விழாவின் போது பக்தர்கள் மேல் சாமி இறங்கி ஆவேசமாக ஆடி, அருள்வாக்கு கூறும் நிகழ்ச்சியும் நடைபெறுகிறது. அருள்வாக்கு கூறும் பக்தர்கள் மீது பூசாரி விபூதி வைத்தபின் அடங்கிப்போய் சுயஉணர்வை அடைவார்கள். மேலும், பக்தர்கள் அவரவர்கள் சக்திக்கு ஏற்ப மாலைகளும், ஆடைகளும், அலங்காரப் பொருட்களும், தாம்பூலப் பொருட்களுமாக கொண்டு வந்து இறைவனுக்கு அர்ப்பணித்து நன்கு மனதார வணங்கிச் செல்கின்றனர்.

# எட்டிமாணிக்கப்பட்டி - கன்னிமார் இருவர் வழிபாடு

**ந. இரகுதேவன்,** எம்.ஏ.,எம்.ஃபில்.,பிஎச்.டி.,
*அரசு கலைக்கல்லூரி. சேலம்.*

## முன்னுரை

நாட்டுப்புற மக்களின் அன்றாட இறைவழிபாட்டு முறைகளில் சிறுதெய்வ வழிபாட்டு முறைகள் மிகவும் இன்றியமையாதவையாகக் கருதப்படுகின்றன. கிராமப்புற மக்களின் பண்பாட்டுடனும், பழக்க வழக்கங்களுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டவைகளாக சிறுதெய்வங்கள் இருந்து வருகின்றன. இச்சிறு தெய்வங்களில் ஊர்த்தெய்வம், எல்லைத்தெய்வம், குலத்தெய்வம் என்ற வகையில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இந்தத் தெய்வங்கள்தான் கிராமப்புற மக்களைக் காத்து வருவதாக நம்பிக்கை கொண்டுள்ளனர். ஊர் மக்களையும், அவர்களுடைய உடைமைகளையும் காத்து வரும் இந்தத் தெய்வங்களுக்கு நன்றிக்கடன் செலுத்தும் வகையில் விழாக்களும், வழிபாடுகளும் நடத்தப்பட்டு வருவது நோக்கத்தக்கது.

கிராமப்புறங்களில் குடிகொண்டிருக்கும் இச்சிறுதெய்வங்கள் வேதக்கடவுளுடனும், புராணங்களுடனும் எவ்விதத் தொடர்பும் இல்லாதவைகளாக இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். ஒவ்வொரு சாதியினருக்கும் ஏற்பக் குலத்தெய்வங்களும், ஊர்த்தெய்வங்களும் இருந்து வருகின்றன. ***நாட்டுப்புறத் தெய்வங்களைத் தான் சிறுதெய்வங்கள் என அழைக்கிறோம். குடும்ப தெய்வ வழிபாடும், குலதெய்வ வழிபாடும் ஊர்த்தெய்வ வழிபாடும் இவற்றில் அடங்கும்*** (1:225) என்று சு. சக்திவேல் கூறும் கருத்து இதற்குச் சான்றாக அமைந்துள்ளது.

நாட்டுப்புற மக்களின் சிறுதெய்வவழிபாட்டு முறைகளில் குலத்தெய்வ வழிபாட்டு முறை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. குலத்தெய்வ வழிபாட்டில் கன்னிமார் இருவர் வழிபாட்டு முறை சப்த கன்னியர்களுடன் தொடர்புடையதா என்றும் வேதக்கடவுள்களுடனும், புராணங்களுடனும் தொடர்புடையதா என்றும் ஆய்வது இக்கட்டுரையின் நோக்கமாக அமைந்துள்ளது.

சேலம் மாவட்டம், சேலம் வட்டம், எட்டிமாணிக்கம்பட்டி கிராமம் ஆதிதிராவிட (கொங்கு பறையர்) இனமக்கள் வாழும் பகுதியாகும். இவ்வூர் சுமார் முந்நூறு வீடுகளைக் கொண்டு கிழக்குவலவு, மேற்குவலவு, நடுவலவு என்ற மூன்று பிரிவுகளில் மக்கள் இங்கு வாழ்ந்து வருகின்றனர். ஒருவலவு என்பது ஒன்பது வீட்டுப் பங்காளிகளின் குடும்பங்களை உள்ளடக்கியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இவ்வூரிலுள்ள கிழக்குவலவுப் பங்காளிகளின் குலதெய்வமாக உள்ள கன்னிமார் இருவர் வழிபாட்டு முறைகள் இங்கு ஆய்வுப்பொருளாக அமைந்துள்ளது.

## கன்னிமார் இருவர் பற்றிய வரலாறு

இரண்டு மூன்று தலைமுறைகளுக்கு முன்னர் கிழக்குவலவைச் சேர்ந்த, சுமார் பத்து வயது மதிக்கத்தக்க ஒரு பெண் பிள்ளை அந்தக் காலத்தில் இருந்த நடைகிணற்றுக்குத் தண்ணீர் எடுக்கச் சென்ற போது கிணற்றுப்படி வழுக்கித் தண்ணீரில் விழுந்து விட்டது. கிணற்றில் விழுந்த செய்தியை அறியாமல் பிள்ளையின் பெற்றோர்கள் பிள்ளையைத் தேடி அலைந்து திரிகின்றனர். நான்கைந்து நாட்களுக்குப் பிறகு பிள்ளையை நடைகிணற்றில் கண்டெடுக்கின்றனர்.

கிணற்றில் விழுந்த பெண் நான்கைந்து நாட்களுக்குப் பிறகு உயிருடன் மயங்கிய நிலையில் தண்ணீரில் மிதந்து வந்ததாகவும், அதை எடுத்து வந்து மணல்மேல் கிடத்தி வைத்தியம் செய்து கொண்டிருந்தபொழுது கண்விழித்துப்பார்த்து அங்கிருந்தவர்களிடம் நீண்டநேரம் பேசிக்கொண்டிருந்ததாகச் செய்திகள் நிலவுகின்றன. பிள்ளையின் பெற்றோர்கள் மகளைக் காப்பாற்ற நினைத்த போது என்னை யாரும் காப்பாற்ற வேண்டாம். ***நான் செத்தவ செத்தே போறன். மாண்டவ மாண்டே போறன்*** என்று சொல்லிவிட்டு இறந்ததாகச் செய்திகள் இருந்து வருகின்றன. அந்தப் பெண் இறக்கும் தறுவாயில் சில செய்திகளைக் கூறிவிட்டு இறந்ததாக நம்புகின்றனர். முதல் பெண்ணின் இறப்பிற்குப் பிறகு பல ஆண்டுகள் கழித்து கிழக்குவலவைச் சேர்ந்து மற்றொரு பெண்ணும் அதே நடைகிணற்றில் விழுந்து, நான்கைந்து நாட்களுக்குப் பிறகு தண்ணீரில் மிதந்து வந்ததாகவும் அப்போது அந்தப் பெண்ணுக்கு உயிர் இருந்ததாகவும் செய்திகள் நிலவுகின்றன.

இதுபற்றி கிழக்குவலவுப் பங்காளிகளின் குடும்பத்தில் பிறந்த ஒருவரிடம் கேட்டபோது அவர் கூறிய செய்திகள் பின்வருமாறு. ***இந்த கன்னிமார் சாமியோட கதைய எனக்கு எங்கப்பா சொன்னார். எங்கவலவச் சேர்ந்த ஒரு பொண்ணு அந்தக் காலத்துல இருந்த***

*நடகிணத்துக்குத் தண்ணிக்குப் போனப்ப படிக்கட்டு பாசம் வழுக்கி தண்ணீல விழுந்து நாலஞ்சு நாளுக்கு அப்பறம் தண்ணீல மெதந்து வந்ததுன்னு சொன்னாங்க. அத மேல எடுத்துட்டு வந்து மணலுமேல போட்டு காத்து வீசினப்ப உசுறு வந்து கண்ண முழுச்சிப் பார்த்து பேசிச்சின்னும் சொன்னாங்க. எனக்கு வெவரம் தெரிய கிழக்குவலவச் சேர்ந்த நாசரக்காற கருவாயப்பன் ஊட்டுப்புள்ள ஒன்று இந்த நடகிணத்துல விழுந்து அதுவும் நாலஞ்சு நாளுக்கப்பறம் தண்ணில மெதந்து வந்தது. அத மேல எடுத்துக்கிட்டு வந்து வைத்தியம் பண்ணிட்டு இருக்கறப்ப அந்தப்புள்ள கண்ண முழிச்சிப் பார்த்துட்டு செத்துப் போச்சு. முதல் பெண்ணின் வேண்டுகோளுக்கு இணங்க கிழக்குவலவுப் பங்காளிகளின் குடும்பங்களில் பிறக்கும் குழந்தைகளுக்கு கன்னிமார் இருவரின் நினைவாகத் துண்டு படைப்பதும், அதையும் குழந்தைகளுக்குப் பல் விழாத போதே இந்தச்சடங்குகளை முறையாகச் செய்து வருகின்றனர்.*

இதுகுறித்து மற்றொரு தகவலாளியிடம் கேட்டபோது. *கன்னிமார் சாமிய வேண்டி துண்டு படைக்கிறது எங்க பங்காளி வகைய்றாவுல தொடர்ந்து நடந்துட்டு இருக்குது. அதே மாதிரிதான் என்னோட அஞ்சு புள்ளங்கிளுக்கும் கன்னிமார் சாமிய வேண்டி துண்டு படச்சோம். அதுக்கப்பறம் என் மகனுங்க வீட்டுப் புள்ளைகளுக்கும் செஞ்சாங்க. இத்தத்துண்டு படைக்கிறத காலத்துக்கு செய்யலன்னா குடும்பத்துல ஏதாவது கஷ்டத்தக் காட்டுது. இந்தத் துண்டு படைக்கிற சடங்கு எங்க மாமனார்மாமியார் காலத்துல இருந்தே செஞ்சுட்டு வர்றாங்களாம். அத நாங்க எங்க குடும்பத்துல பொறக்கும் குழந்தைகளுக்கு செஞ்சுட்டு வர்றோம். அதயும் காலகாலத்துல செய்யணும்னு எங்க மாமனார் மாமியார் சொல்லிட்டே இருப்பாங்க* என்று தகவலாளி - 2 அளித்த செய்தி குறிப்பிடத்தக்கது.

இரண்டு பெண்களின் இறப்பிற்குப் பிறகு நடைகிணறு மூடப்பட்டுள்ளது. அந்த இடத்தில் கிணறு இருந்ததற்கான அடையாளமாகவும், இரண்டு பெண்களின் இறப்பை நினைவுபடுத்து வதற்காகவும் இரண்டு சிறிய கற்கள் நட்டு வைக்கப்பட்டு விளக்கு வைப்பதற்கென்று மண்ணால் செய்யப்பட்ட விளக்குக் கூடாரம் ஒன்றும் இந்த இடத்தில் காணப்படுகிறது.

## கன்னிமார் எழுவர் பற்றிய செய்திகள்

ஏழு கன்னிமார்களின் தோற்றம் குறித்து கதையொன்று கூறப்படுகிறது. தேவர்களை துன்புறுத்திய அந்த அசுரனை அழிக்க

சிவபெருமான் முற்படுகிறார். திருமாலும், பிறகடவுளரும் சிவபெருமானுக்கு உதவி செய்கின்றனர். சிவபெருமான் அந்த அசுரன் மீது அம்புமாரி பொழிகிறார். அசுரனது இரத்தம் மண்ணில் விழாமல் தடுப்பதற்குச் சிவபெருமான் யோகேசுவரி என்னும் சக்தியைப் படைக்கிறார். யோகேசுவரியும் அந்த அசுரனது இரத்தத்தை மண்ணில் விழாமல் கையில் பிடித்துக்கொள்கிறார். இதைப்பார்த்த இந்திரன், திருமால் முதலானவர்கள் தங்களுடைய சக்திகளை அனுப்பி சிவபெருமானுக்கு உதவிசெய்கின்றனர். பெண் தெய்வங்களாகிய பிராமி, வைணவி, இந்திராணி, சாமுண்டி, மகேசுவரி, கௌமாரி, வராகி, என்ற இவர்கள் எழுவரும் கடவுளர்களின் சக்திமார்களாகக் கருதப்படுகிறது. இவர்கள் தான் சப்தக்கன்னியர்கள் என்று கருதவும் இடமளிக்கின்றன.

சப்தக்கன்னியர்களின் வரலாறு புராணங்களுடன் தொடர்புடையதாகக் காணப்படுகிறது. ஆனால் சிறுதெய்வ வழிபாட்டில் கன்னிமார் இருவர் பற்றிய கதைகள் புராணங்களுடன் எவ்விதத் தொடர்பும் இல்லாதவைகளாக இருக்கின்றன.

சப்தகன்னியர்களின் வரலாற்றுடன் கன்னிமார் இருவரைப் பற்றி கதையை ஒப்புநோக்கும் பொழுது எவ்விதத் தொடர்பும் காணப்படவில்லை. சப்தக்கன்னியர்கள் அந்த அசுரனை அழிக்க சிவபெருமானுக்கு உதவியதை நினைவு படுத்தவதற்காகவே சப்தகன்னியர்களின் வழிபாட்டு முறை சிவாலயங்களில் நடத்தப்படுகிறது. ஏழு கன்னிமார்களும் பெருதெய்வங்களோடு, புராணங்களோடும் கொண்டிருக்கும் தொடர்பை அறிந்துகொள்ள முடிகின்றன.

## கன்னிமார் இருவர் : பூசைகளும் வழிபாடும்

சிறுதெய்வ வழிபாட்டில் கன்னிமார்சாமிக்கென்று முறைப்படியாக அமைக்கப்பட்ட கோயில் இல்லை. வெட்டவெளியில் கோயில் அமைந்தள்ளது. முறையான பூசை நடத்தப்படுவதில்லை. விமரிசையான திருவிழாக்கள் இல்லை. புரட்டாசி ஐந்தாம் சனிக்கிழமையன்று கிழக்குவலவுப் பங்காளிகளின் குடும்பத்தினர் ஒன்று சேர்ந்து நடைகிணற்றுப் பகுதியில் அமைந்துள்ள கூடாரம் இருக்கும் இடத்தில் பந்தல் போட்டு பூசை நடத்திவிட்டுச் செல்கின்றனர். அதுவும் அமைதியான முறையில் நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

ஐந்தாம் சனிக்கிழமையன்று நடத்தப்படும் பூசையில் படையலுக்காகத் தேங்காய் பழம், காதோலை - கருகுமணி, பானக்கம் (புதுசட்டியில் புளியும் வெல்லமும் சேர்த்தக் கலக்கிய பானகம் என்று

சொல்லப்படும் புளிச்சாறு) என்று கூறப்படும் புளிச்சாறும், பச்சரிசியும், வெல்லமும் சேர்த்து கலக்கிய பொருட்கள் பூசைப்படையலில் வைக்கப்படுகின்றன.

கன்னிமார் இருவரின் நினைவாக வைத்திருக்கும் நடுகல்லிற்கு நிறைசொம்பில் தண்ணீரை எடுத்துச் சிலைக்கு நீராட்டி, சந்தனம் மற்றும் குங்குமப் பொட்டிட்டு, ஊதுபத்தியும், கற்பூர ஆராதனையும் காட்டப்படுகிறது. பூசையின் பொழுது மணியடித்துப் பூசை நடத்தப்படுவதில்லை. பூசையின் போது கிழக்கு வலவுப் பங்காளிகளின் குடும்பத்தைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு *சாமி* வந்து பங்காளிகளின் குடும்பங்களில் ஏற்படும் துன்பங்களுக்குக் காரணத்தைக்கூறி அதற்கு உண்டான பரிகாரத்தையும் சாமியாடும் பெண் கூறுவது குறிப்பிடத்தக்கது.

## துண்டுபடைக்கும் நிகழ்ச்சி

கன்னிமார் சாமியை வேண்டி துண்டு படைக்கும் பொழுது ஒன்பது வீட்டுபங்காளிகளும் அழைப்பாளர்களாக வந்திருந்து துண்டு கட்டிய குழந்தைகளுக்கு வாழ்த்துக்கூறும் முறையும் இருந்தவருகிறது. மரபு சார்ந்த இந்த வழக்கு முறைகளைக் கிழக்குவலவுப் பங்காளிகள் இன்றளவும் கடைப்பிடித்து வருகின்றனர் என்பது தெரியவருகின்றது. கிழக்குவலவுப் பங்காளிகளின் குடும்பங்களில் பிறக்கும் குழந்தைகளுக்கு இன்றளவும் கன்னிமார் சாமியை வேண்டித் துண்டு படைக்கும் நிகழ்ச்சி நடத்துவருகிறது. இதை விமரிசையாகக் கொண்டாடாமல் அமைதியான முறையில் பூசை நடத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. பூசையின் போது உயிர்ப்பலி எதுவும் கொடுக்கப்படுவதில்லை. இதற்கென்று பூசைசெய்ய பூசாரி இல்லை அந்தந்தக் குடும்பத்தைச்சேர்ந்த மூத்த வயதுடைய ஒருவரே இந்த பூசையை நடத்துபவராக இருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். ***சிறுதெய்வங்கள் வேதக்கடவுளோடு பெரும்பாலும் தொடர்பு கொள்ளாதவை. முழுமுதற் கடவுளாகக் கருதி வணங்கப்படாதவை. பூசை, திருவிழா, முதலியற்றில் திட்டவட்டமான வரையறை கிடையாது. பிராமணர் அல்லாதோா பூசாரியாகயிருப்பர். கோவில் போன்ற அமைப்பு பெரும்பாலும் கிடையாது.*** (1:225, 226) என்று ச.சக்திவேல் கூறும் கருத்து சான்றாகிறது.

## முடிவுகள்

1. பெண்தெய்வ வழிபாட்டில் கன்னிமார் இருவர் பற்றிய வழிபாட்டு முறை எட்டிமாணிக்கப்பட்டி கிராமத்திலுள்ள ஆதிதிராவிட இனமக்களின் குறிப்பாக கிழக்குவலவைச்சேர்ந்த ஒன்பது

வீட்டுப்பங்காளிகளுக்கே உரிய குலதெய்வ வழிபாடாகக் காணப்படுகிறது.

2. கன்னிமார் இருவர் பற்றிய வரலாறு வேதக்கட்வுளோடும், புராணங்களுடனும் எவ்விதத்தொடர்புமில்லாமல் இருப்பது குறிப்பிடத்தக்கது.

3. கன்னிமார்சாமி வரலாறு என்பது செவிவழிச் செய்திகளாகவே இன்றளவும் இருந்து வருகிறது. செவிவழிச் செய்திகளே முழுமையான ஆவணங்களாகவும் கருதப்படுகிறது. தகவலாளர்களின் தகவல்களை முதன்மை ஆதாரமாகக் கொண்டு இக்கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது. எழுத்து வடிவத்தில் எந்த ஆவணங்களும் காணப்படாததால் தகவலாளர்களின் தகவல்களின் வாயிலாக கன்னிமார்சாமி வரலாறும், வழிபாடு முறைகளும் அறிமுகக்கட்டுரையாக அமைக்கப்பட்டுள்ளது.

4. உயர்ந்த சாதி இந்துக்களிடையே குடும்பத் தெய்வங்களில் பெண்தெய்வ வழிபாடு இருந்து வருகின்றன. இந்த சப்தகன்னிமார் வழிபாடு உயர்சாதி மக்களிடையே காணப்படுகிறது. பெண்குலத் தெய்வ வழிபாட்டை ஒப்புமையாக்கத்தின் வழியாக இங்கு தோன்றி இருக்கலாமென்று கருத இடமளிக்கிறது. மேலும் அந்தப்பண்பாட்டின் வழியாக உருவாக்கியிருக்கலாம் என்றும் நம்புவதற்கு இடமளிக்கிறது.

## துணைநூல்


1. ***சு. சக்திவேல்*** : நாட்டுப்புறஇயல் ஆய்வு, மணிவாசகர் பதிப்பகம் சென்னை.


## தகவலாளிகள்

1. ***இரா. சம்பூர்ணம்*** : வயது 55 (தகவலாளி)
2. ***செ. செல்லாயி*** : வயது – 75 (தகவலாளி)

# தண்டுமாரியம்மன் வழிபாடும் விழாக்களும்

**வே. இரஞ்சித்குமார்,** எம்.ஏ.,பிஎச்.டி.,
*அரசு கலைக்கல்லூரி, சேலம்.*

நாட்டுப்புற மக்களின் பண்பாட்டினை அறிய வேண்டுமானால் அவர்கள் வாழும் சிற்றூர்களில் உள்ள வழிபாடுகளைத் தெரிந்து கொள்ள வேண்டும். நாட்டுப்புறக் கடவுள் மக்கள் இனத்தில் ஒற்றுமையை வெளிப்படுத்தும் சின்னங்களாக விளங்குகின்றன. அந்தவகையில் தண்டுமாரியம்மனின் வழிபாட்டு முறைகளைப் பற்றி விளக்குவது இக்கட்டுரையின் நோக்கமாகும். குடும்பக் கடவுள் வழிபாடு தோன்றிய பின்னர் பொது கடவுள் வழிபாடு தோன்றியிருக்கலாம். சங்க இலக்கியத்தில் இதற்குச் சான்று உண்டு. ***தொன்னுறை கடவுள் சேர்ந்த பராரை மன்றப் பெண்ணை (1 : 303) (3-4)*** என்பது நற்றிணைப்பாட்டில்.

***கோயில் அமைவிடம் :*** தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், கடத்தூரில் இருந்து ஏறத்தாழ 7 கி.மு. தொலைவில் தாள நத்தம் என்ற சிற்றூர் அமைந்துள்ளது. இங்கு அனைத்துக் குலங்களைச் சார்ந்த மக்களும் வாழ்ந்து வருகின்றனர். தங்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்காக நகரத்திற்குச் சென்று குடிபெயர்ந்தவர்கள், தங்கள் சிற்றூருக்குத் திரும்பும் போது தண்டுமாரியம்மனை வழிபடாமல் செல்வது இல்லை.

***கோயில் தோன்றிய வரலாறு :*** பல ஆண்டுகளுக்கு முன் சமயபுரத்து மாரியம்மன் வானில் உலா வந்துகொண்டு இருந்தாராம். அப்பொழுது தாளநத்தம் சிற்றூரில் தாழம்பூ இருந்ததாகக் கூறப்படுகிறது. தாழம்பூவின் வாசனை மீது ஆசைகொண்ட மாரியம்மன் தாளநத்தம் சிற்றூரிலேயே குடி கொண்டதாகக் கூறப்படுகிறது(2) தண்டின் மூலமாகவும், வேப்பங்குச்சி மூலமாகவும் இக்கடவுள் குடிகொண்டதாகக் கூறப்படுகிறது(3) மாரியம்மன் பல வடிவங்களில் ஒன்று தண்டுமாரியம்மன் என்பர். பெரிய ஆலமரத்தின் கீழ் இக்கடவுள் குடிகொண்டுள்ளது. மூன்று பக்கம் நடுக்கல்லைக் கொண்டும் மேற்பரப்பில் ஒரு கல்லால் மட்டுமே மூடப்பட்டு இக்கோயில் அமைக்கப்பட்டுள்ளது. ஒரு புறம் திறந்தவெளி.

***விழா எடுத்தலும் கொண்டாடுதலும் :*** ஆண்டுதோறும் மார்கழித் திங்களில் சமயபுரத்தில் மாரியம்மனுக்கு விழா கொண்டாடுவதையொட்டி இங்கும் ஆண்டுதோறும் மார்கழித் திங்களில் விழா

கொண்டாடப்படுகிறது. தைத்திங்கள் முழுவதும் கிடா வெட்டுதல் நிகழ்ச்சி நடைபெறுகிறது. கோயிலுக்குப் பூசாரி என்று தனியாக யாரும் இல்லை. காப்புக் கட்டுதல் நாளன்று கோயிலுக்கு வெள்ளை அடிப்பர். பின்பு மூங்கில் மரத்தில் கொடி ஏற்றுவர். மறுநாளன்று பொங்கல் வைத்து வழிபடுவர். பொங்கல் நாள் முடிந்து பதினைந்தாவது நாளில் எருது விரட்டுதல் விழா வெகு சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. அப்பொழுது இச்சிற்றூரைச் சுற்றியுள்ள ஏழு சிற்றூர் மக்களும் இவ்விழாவில் கலந்து கொள்வர். அப்பொழுது தண்டு மாரியம்மனுக்குச் சிறப்பான பூசைகளும், வாணவேடிக்கைகளும் நடைபெறும்.

*படையலும் நோன்புக் காணிக்கையும் :* அம்மனை முதலில் நீரால் கழுவி, பின்பு சிவப்பு மஞ்சள், தேங்காய், பழம், பத்தி, வெற்றிலை பாக்கு, கற்பூரம் முதலியன படைக்கப்படுகின்றன. இவற்றுடன் பச்சைமாவும் படைக்கப் படுகிறது. வளையல் மற்றும் பட்டுத்துணிகளும் படைக்கப் படுகின்றன. மக்கள் தாங்கள் வேண்டிய வரங்கள் கிடைக்குமென்று நம்புவதால் தங்கள் வேண்டுதலுக்கு ஏற்பக் காணிக்கை செலுத்துகின்றனர். முகத்திலும், முதுகிலும், ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளும் அலகு குத்து நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கின்றனர். இவர்களில் ஆண்கள் முதுகில் அலகு குத்தி அதில் சிறுதேரையும் இழுக்கின்றனர். இந்நிகழ்ச்சி பார்ப்பவர் மனதை நெகிழச் செய்கின்றது. பெண்கள் தங்களுக்குக் குழந்தைச் செல்வம் வேண்டி நோன்பு இருந்து வேண்டிய வரங்கள் பெறுகின்றனர். ஆண் குழந்தை பெற்றால் ஆண் பொம்மையும், பெண் குழந்தை பெற்றால் பெண் பொம்மையும் அம்மனுக்குச் செய்து வைப்பது இப்பகுதி மக்களின் வழக்கமாக உள்ளது.

ஆடு, கோழி, எருமைக்கடா ஆகிய உயிர்களும் அம்மனுக்குப் பலியிட்டு வழங்கப்பட்டு வருகிறது. வேண்டிய வரங்கள் கிடைக்கும்பொழுதும், ஊர்ப்பண்டிகையின்போதும் இத்தகைய வழிபாடுகள் நடைபெறுகின்றன.

முடிவுரை : இப்பகுதி மக்கள் தங்களின் வேண்டுதல்கள் நிறைவு பெறுவதாக நம்புகின்றனர். குழந்தைப்பேறு இல்லாப் பெண்கள் அம்மனை வழிபட்டால் குழந்தைப்பேறு அடைவர் என்ற நம்பிக்கை இருந்து வருகிறது. அனைத்துச் சமூக மக்களும் இக்கடவுளை வழிபடுகின்றனர். அம்மன் திருவிழாக்கள் மூலம் கலைப்பட்டறிவும், கலையும், கலையாற்றலும் வளர்க்கின்றன. அம்மனை நினைத்துக் கொண்டால் பேய், பிசாசுகள் பிடிக்காது என்பது நம்பிக்கையாக உள்ளது.

# தென்னம்பாளையம் முத்தையன்கோயில் பங்குனித் திருவிழா

**இரா. இரமேஷ்குமார்**,எம்.ஏ.,எம்.ஃபில்.,
*பார்க்ஸ்கல்லூரி, திருப்பூர்.*

## முன்னுரை

அச்சமும் நன்றியுணர்ச்சியும், மக்களின் இறையுணர்விற்கு காரணமாயின என்பதும் கடவுள் பற்றிய சிந்தனையின் மூலமாக விளங்குகிறது என்பது ஆராய்ச்சியாளரின் கருத்து. இதிகாசங்களிலும், புராணங்களிலும் கூறப்படுகின்ற கடவுளின் கதைகள் இட்டுக்கட்டப்பட்ட கற்பனையாகவே உள்ளன. ஆனால், கிராமத்துத் தமிழ் கடவுளர்களின் கதைகளில் கற்பனை கலந்தபோதும், அவர்கள் தாம் மூதாதையர்கள் ஆவர். அவர்கள் வாழ்ந்ததற்கான வரலாறுகள் உள்ளன. அவர்களின் செயல்கள் மாயாஜாலங்கள் அல்ல. சாதாரண மனிதச் செயல்களாகவே உள்ளன. கிராமப்புறத் தமிழ்க் கடவுளர்களின் பண்புகள், நமக்குச் சிறந்த சமூக வாழ்வியலைக் கற்றுக்கொடுக்கின்றன. நம் நாடு முழுவதும் மக்கள் தங்கள் தங்கள் குலத்திற்கென பல்வேறு வகையான குலதெய்வங்களையும், தம்குலத்திற்கு நற்செயல் புரிந்த, காவல் புரிந்த முன்னோர்களைக் காவல் தெய்வங்கள் எனப் போற்றி வழிபட்டு வருகின்றன. அவ்வாறு கொங்கு நாட்டின் ஒருபகுதியான, திருப்பூரில் அமைந்துள்ள தென்னம்பாளையம் என்ற கிராமத்தில் வாழும் பல சமூகத்தைச் சேர்ந்த மக்கள் இக்காவல் தெய்வத்தைக் கோவில் அமைத்து வழிபட்டு வருகின்றனர்.

***தென்னம்பாளையம் :*** ஐவகை நிலங்களில் குறிஞ்சிநிலத்தில் அமைந்திருக்கும் கொங்கு நாட்டின் ஒரு பகுதி திருப்பூர். அதற்குட்பட்ட ஒரு அழகிய கிராமம் தென்னம்பாளையம். தென்னம்பாளையம் கிராமம் மிகப்பழமையானதாக இருந்தாலும் தற்போது நகரப்பகுதிகளுக்குள் ஐக்கியமாகி உள்ளது. ஆனால் அதன் தெருப்பெயர்கள் எல்லாம் பழைய குடிகளின் அடிப்படையிலேயே உள்ளது. இவ்வூரின் பெரும்பான்மையோர் வெள்ளாள சமூகத்தினர். இவர்களை வேளாளர்கள், காணியாளர்கள், குடியானவர்கள் என்றும் அழைக்கின்றனர். இவர்களுக்கு உழவே முக்கியத்தொழிலாகும். தென்னைமரங்கள் நிறைந்திருந்த பகுதியாதலால் இக்கிராமத்தை ***தென்னம்பாளையம்*** என்று அழைத்தனர்.

## முத்தையன் கோவில்

*கோவில் இல்லாத ஊரில் குடியிருக்காதே* என்ற பழமொழிக்கேற்ப அந்தந்த ஊரில் வாழ்ந்த முன்னோர்கள் நினைவாக கோவில்கள் அமைத்து வழிபடுகின்றனர் மக்கள். முத்தையன் கோவில் 300 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியது என்பது வரலாறு (1:16). இவ்வூரில் இக்கோவிலைத் தவிர தன்னாசியப்பன் கோவில் வீரமாத்தியம்மன் கோவில், மாகாளியம்மன் கோவில், பிள்ளையார் கோவில் ஆகிய ஐந்து பழங்கோவில்கள் உள்ளன.

ஒவ்வொரு கோவிலும் ஒவ்வொரு நோக்கத்தில் தோற்றுவிக்கப்பட்டாலும், முத்தையன் கோவில் தோற்றுவிக்கப் பட்டதற்கும் முத்தையன் யார் என்பதற்கும் சான்றுகள் உள்ளன. இவை அனைத்தும் செவி வழிச்செய்திகளே. கோவிலின் சுவர்கள் மண்ணால் ஆனவை. உள்ளேசென்றவுடன் கம்பீரமாக நிற்கும் குதிரைகள் மண்ணும் சிமிண்டாலும் உருவாக்கப்பட்டவை. இவை எல்லைக்காவலாக நிற்கின்றன. மக்கள் அமர்ந்து செல்ல மண்டபமும், இதமான காற்றைத் தரும் எட்டிமரமும், கம்பீரமாய் காட்சிதரும் முத்தையனும் அக் கோவிலின் அங்கங்கள். முத்தையன் மக்களின் காவல்தெய்வமாய் விளங்குகிறார்.

## முத்தையன்

முத்தையன் பொதுவுடமைச்சிந்தையாளர். சிறந்த பண்பாளர், மனிதநேயப்பற்றாளர், கட்டுப்பாடுகளை விரும்புவர், கோபக்காரர் எல்லா செயல்களையும் சுறுசுறுப்பாகவே செய்ய வேண்டும் என விரும்புபவர் என்பதை அவரது வாழ்முறைக்கதைகள் நமக்கு அறிவுறுத்துகின்றன. முத்தையன் ஊரை கண்ணும் கருத்துமாகக் காத்துவந்துள்ளார். அவர் வேட்டையாடுவதற்காகக் குதிரைமீதேறிச் செல்வார். அப்போது தாரை, தப்படைகள் முழங்கும். 'அவருடன் வேல்கத்தி' அரிவாள் ஆகிய ஆயுதங்களுடன் மக்கள் பின் செல்வர். ஊரைச்சுற்றிக் கம்பீரமாய் பவனிவந்து, மக்களுக்கு எவ்விதத் தீங்கும் வராமல் காத்து வந்துள்ளார். இந்நிகழ்வுகளை நினைவு கூறும் விதமாய் இப்போதும் கூட நடுசாமம் 12 மணிக்கு பெரிய கோவிலில் ***திடீடும்*** சத்தம் கேட்கும். முத்தையனுக்கு தென்னம்பாளையத்தில் ஊருக்குள் ஒரு வீடு உள்ளது. இதைக் ***கோவில்வீடு*** என்று அழைக்கிறார்கள். ஊரைஅடுத்து ஆற்றின் கரையோரம் இன்னொரு சொந்தமான பெரிய வீடு முத்தையனுக்கு உள்ளது. இதைப் ***பெரியகோவில்*** என்று அழைக்கிறார்கள். முத்தையன் தான் வேட்டையாடி வந்த உணவை

எல்லோருக்கும் பகிர்ந்து கொடுத்து உண்பது வழக்கம். எனவே அவர் விருத்தோம்பல் காக்கும் மாண்புமிக்கவராகத் திகழ்ந்திருக்க வேண்டும். அதைத்தான் இப்போதைய திருவிழாக்கள் நமக்கு உணர்த்துகின்றன. தென்னம்பாளையத்திலிருந்து வடக்கே அரண்மனைப்புதூர், கிழக்கே பெரிச்சிபாளையம், தெற்கே பழவஞ்சிபாளையம், மேற்கே இருக்கும் குளம் வரை முந்தையனின் எல்லைப்பகுதிகளாக இருந்து வந்துள்ளன. மேலும் இப்பகுதியைச் சார்ந்த 18 பட்டிகள் இவர் ஆட்சிப்பகுதியாக இருந்ததாகக் கூறப்படுகிறது (1:22). எனவே இப்பகுதியில் வாழ்ந்த குலமக்களின் தலைவராக முத்தையன் விளங்கியுள்ளார் என்பது தெரியவருகிறது.

## பூசைகள் மற்றும் திருவிழா

பங்குனி மாதத்தில் நடைபெறுகின்ற திருவிழாவில் மக்கள் பொங்கல் வைக்கின்றனர். ஆடு சேவல் ஆகியவற்றைப் பலியிட்டும், முடியெடுத்தும் மகிழ்ச்சி கொள்கின்றனர். தமிழக அரசின் கோவில்களில் பலியிடும் தடைச்சட்டம் வந்தபிறகு இனி அவர்களின் செயல்பாடுகள் பற்றிக் கூற இயலவில்லை. இவ்விழாவைத்தவிர கார்த்திகைத் தீபத்தின் போதும், மாசி மாதத்தின் மகா சிவராத்திரியின் போதும் முத்தையன் ***சாமி*** எடுக்கிறார்கள். அப்போது கொள்ளு, மொச்சை, பாசிப்பயிர், நரிப்பயிர் ஆகியவைகளை வேகவைத்து மக்களுக்கு வினியோகம் செய்கின்றனர். ***உப்பில்லாத கொள்ளு*** வேகவைத்து கோவிலைச்சுற்றி வீசப்படுகிறது. அது முத்தையனின் குதிரைகளுக்குச் செல்வதாக நம்பப்படுகிறது.

***பங்குனி மாத கருவா திருவிழா :*** எழில்பொங்கும் பின்பனிப் பருவப் பங்குனிமாதத்தில் வருகிற கருவா அதாவது அம்மாசையன்று திருவிழாகொண்டாடப்படுகிறது. இத்திருவிழா நான்கு நாட்கள் நடைபெறுகின்றது. இந்நாட்களில் முதலில் தென்னம்பாளையம் மற்றும் மூன்று ஊர்களைச் சோர்ந்தவர்கள் ***தீர்த்தம்*** எடுத்துவர அவினாசி செல்கின்றனர். தீர்த்தக்காவடி எடுதுதுக்கொண்டு அடுத்தநாள் மதியம் 12 மணிக்குள் பெருங்கோவில் செல்கின்றனர். அந்தக் காவடியில் உள்ள புனித நீரை வைத்து ***உச்சி பூசை*** 12 மணிக்கு நடைபெறுகிறது. பெண்கள் பொங்கலிடுவதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்கின்றனர். தீர்த்தக்காவடி வரும்போது, பெண்கள் குடம்குடமாகத் தண்ணீர் கொண்டுவந்து காவடி சுமக்கும் பக்தர்கள் மீது ஊற்றுகின்றனர். அப்போது இளைஞர்கள் மகிழ்வுடன் காவடியைச் சுழற்றி சுழற்றி ஆடுகின்றனர். பூசை நடைபெறுகிறபோது கோவில் ***முரசு*** கொட்டப்படுகிறது. வாயில், சிவப்புத் துணியைக் கட்டிக்கொண்டு ***கணந்தகுல*** பூசாரி, இடைவிடாது மணி அடித்துக்கொண்டு

பூசைசெய்கிறார். கணந்த குலத்தைச் சார்ந்தவர்களும், அவர்தம் மாமன்மார்குல உறவினர்களும் வெகுவேகமாகத் தலைவாழை இலை போட்டு உணவுபரிமாறுகின்றனர். முத்தையனின் வேல், கத்தி, அரிவாள் போன்ற ஆயுதங்களுக்கும் பூசை செய்கின்றனர். இப்பூசைகள் அனைத்தும் வேகவேகமாகவும், கட்டுப்பாட்டுடனும் கவனமாகவும் செய்யப்படுகிறது. இந்நிகழ்வு மூலம் - முத்தையன் எந்த வேலை செய்தாலும் சுறுசுறுப்பு மற்றும் கட்டுபாட்டுடன் நிகழ்த்துவார் என அறியலாம். மேற்கண்ட பூசை வழிபாடுகள் கோவிலின் தடுப்புவேலிக்குள் நடைபெறுகின்றன. அனைத்துப் பெண்களும் வெளியே எட்டி நின்று வழிபடுகின்றனர்.

முத்தையனை நிறைந்த பூக்களால் அலங்கரித்து மூன்று நாட்கள் வைக்கின்றனர். இறுதி நாள் பகலில் தென்னம்பாளையத்தின் அனைத்து வீதிகளும் ஊர்வலம் எடுத்துச்செல்கின்றனர். ஆங்காங்கே முத்தையசாமிக்கு மாலைமரியாதை செய்து வழிபடுகின்றனர். சிலர் வேல் எடுத்து ஆடுகின்றனர். இந்த விளையாட்டை போயர் சமூகம் நடத்துகின்றது (1:22). மேற்கண்ட பூசைகள் மூலம், முத்தையன் மக்களை நேரடியாகச் சென்று அவரவர்களின் குறைகளைக்கேட்டுள்ளார் அதன் வழக்கமாகவே இன்றும் முத்தையர் சாமியை ஊர்முழுவதும் எடுத்துச்செல்கின்றனர்.

***காவடி ஆட்டம் :*** பங்குனி மாதத் திருவிழாவின்போது ***புனித நீர்*** எடுத்துவர அவினாசி வரை நடந்தே செல்கின்றனர். அவர்களுக்கு உணவு தென்னம்பாளையத்திலிருந்து மாட்டு வண்டியில் எடுத்துச்செல்லப்படுகிறது. தற்போது லாரிகளை மக்கள் பயன்படுத்துகின்றனர். கோவில் வீட்டைச்சுற்றிய பல வளவுகளைச் சேர்ந்த மக்களும் முத்தையன் கோவிலுக்கு சம்பந்தப்பட்ட நான்கு ஊர்க்காரர்களும் காவடி எடுக்கின்றனர். புனித நீர் எடுத்துவரும்போது முக்கியமான சில இடங்களில் ***காவடியாட்டம்*** நடைபெறுகிறது.

***கத்தி ஆட்டம் :*** காவடி ஆட்டம் முடிந்தவுடன் இரண்டுபேர் ஆளுக்கு ஒரு கத்தி எடுத்துக்கொண்டு, எதிர் எதிர் திசையில் நின்று விளையாடுவர். பின் ஒருவருக்கொருவர் கைகுலுக்கிக்கொள்வர். அதற்குப்பின் இரண்டு கத்திகளை வைத்துக்கொண்டு நான்கு திசைகளிலும் ஒருவரே சுழன்று ஆடுகிறார். கடைசியாக இரண்டு கத்திகளிலும் முதுகை வெட்டிக்கொள்கிறார்கள். மார்பிலும் கைகளிலும் வெட்டிக்கொள்கிறார்கள். இரத்தம் வடிகிறது. இவ்விளையாட்டின் மூலம் முத்தையன் மக்களுக்குப் போர்பயிற்சி கொடுத்துவந்ததும், தனியாகவே எதிரிகளை எதிர்கொள்ளும் மனப்பக்குவத்தை வளர்த்துக்கொள்ளும் மனோதிடத்தையும் பெறப் பயிற்சி கொடுத்துள்ளார்.

*சாட்டை விளையாட்டு*.: கத்தி விளையாட்டிற்குப் பிறகு சாட்டை விளையாட்டு நடைபெறுகிறது. பெரியவர் ஒருவர் சாட்டையைச் சுழற்றி அடித்து விளையாடுகிறார். அவர் தன்னைத்தானே சாட்டையால் அடித்துக்கொள்கிறார். மேலும் மக்கள் அவர்களிடத்துச் சாட்டையடி பெற்றுக்கொள்கிறார்கள். முத்தையன் அக்காலத்தில் தவறு செய்வோரை சாட்டையடி தந்து (கசையடி) நியாயத்தை நிலை நாட்டியிருப்பார். எனவே இதுபோன்ற நிகழ்வுகளை மக்களுக்கு எடுத்துக்காட்டியும் இவ்விளையாட்டுகள் நடைபெறுகின்றன. அல்லது நாம் எப்படி இந்நாட்களில் ராணுவ தினங்களைக் கொண்டாடும்போது நம்மிடம் இருக்கும் தற்காப்பு ஆயுதங்களை மக்களுக்கு உணர்த்தச்செய்வது போல முத்தையன் இத்தற்காப்பு கலைகளை மக்களுக்குச் செய்துகாட்டி தைரியமூட்டியிருக்கலாம். எனவேதான் அவ்வழக்கம் இன்றும் திருவிழாக்களில் இடம்பெறுகிறது.

## சுடுமண் பொம்மைகள்

இவ்விழாக்களில் *சுடுமண்பொம்மைகள்* நேர்த்திக்கடனாக செலுத்தப்படுகின்றன. இது தொன்றுதொட்டே வழக்கமாக இருந்து வருகிறது.

*நம் ஊர் மட்டுமல்லாது, திருப்பூரிலிருந்து 50, 60 கிலோமீட்டர் தூரத்திலிருந்தும் கூட வருவாங்க......, முன்கூட்டியே தவழு குழந்தைகள் வேட்டை நாய்கள், கண்ணுக்குட்டி இப்படி ஆர்டர் கொடுத்து செய்வாங்க .(அ)*

*இதையெல்லாம், இவங்க ஏன் செஞ்சாங்கன்னா.... அவங்க அன்பா வளத்தின சொழந்தைங்க, நாய்குட்டிங்க, கண்ணுகுட்டிங்க இறந்துபோனா, அதன் நினைவா செஞ்சாங்க........(அ) இல்லைன்னா.... குழந்தை நோய்வந்துபடுத்தா, அது நல்லாப்போனா, நேந்துகடன் செய்யரோம்ன்று முத்தையனுக்கு வேண்டியிருப்பாங்க,.. அதனால அவங்க இவ்வுருவங்களை செய்யறாங்க.(அ)*

*குழந்தை இல்லாமபோனா...... முத்தையன வேண்டி கொழந்த பெறாந்திருந்தா தவழுகுழந்தை செஞ்சுவப்பாங்க..... இப்பல்லாம் முன்னமாதிரி நெறய உருவங்கள் செய்யச்சொல்லி ஆர்டர் வந்ததில்ல....* என்கிறார் சுடுமண் கலைஞர் எம்.துரைசாமி.

## முடிவுரை

இத்திருவிழா மூலம் நாம் பற்பல, உண்மைகளை அறியமுடிகிறது. வேல், கத்தி, ஆகியவைகளும் வழிபடும் பொருளானது,

அதற்குகாரணம், முத்தையன் வீடுகள், கோவில்வீடு, பெரியகோவில் என்று இருவேறு இடங்களில் அமைந்துள்ளன. ஊரின் நடுவில் உள்ள வீடு முத்தையன் தங்கும் இடமாகவும், ஆற்றோரம் உள்ள வீடு காவல் நிலையமாகவும், ஆயுதம் தானியம் போன்றவைகளைச் சேமிக்கும் இடமாகவும் இருந்திருக்கலாம் அதனால்தான் பெரிய கோவிலில் கத்திகள், வேல், அரிவாள் உள்ளன. அந்த இடத்தில் எதிரிகளிடமிருந்தும், காட்டு மிருகங்களிடமிருந்தும், எப்படி தற்காத்துக் கொள்வது என ஒரு சிறிய ***காவல்படை*** அமைத்துப் பயிற்சி தந்திருக்கலாம் அவர்கள் முத்தையனுக்குக் காவல்புரியும் கடமையில் உதவி புரிந்திருக்கலாம். அவைகளே மேற்கூறிய விளையாட்டுகளில் வெளிப்படுவதைக் காண்கிறோம். எல்லாக் கிராமங்களைப்போல், அவர்கள் குலத்தெய்வங்களுக்கு நடத்தும் வழக்கமான திருவிழா போல் தென்னம்பாளையம் முத்தையன் கோவில் திருவிழா இருந்தாலும், பண்பாளனைப் போற்றும் விழாவாக இது இருப்பதாலும், இது போன்ற அன்பு, அறிவு, வீரம்மிக்க இளைய தலைமுறையினர் உருவாக இதுபோன்ற திருவிழாக்கள் உதவுகின்றது என்பதாலும், இத்திருவிழாவின் நோக்கத்தை வெளிப்படுத்தியுள்ளோம். வாழ்க்கையின் இலக்குமாறி மனிதநேயம் மறந்து..... எங்கோ போய்க்கொண்டு இருக்கும் இச்சமூகத்தில் திருவிழா என்ற ஒரு காரணம் தொட்டாவது அனைவரும் ஒன்று கூடி மகிழ்ந்து கொண்டாடும் இப்பழக்கம் இருப்பதாலும், சமூகத்திருவிழாவாய் இந்நிகழ்வு இருப்பதாலும், முத்தையன்கோவில் பங்குனித் திருவிழா போன்ற ஆங்காங்கே சமூகத்தில் விழாக்கள் நடக்கவேண்டும். அன்பும் மகிழ்வும் கூடி இருத்தலின் சுகமும் மனித சமுதாயத்தில் மறக்கப்படாமல் இருக்கவேண்டும்.

## துணைநூல்கள்


1. முத்தையன் கோவில் திருவிழா மலர்.


***தகவலாளர்***

அ) எம் முத்துசாமி

# பட்டிப்பொங்கல்

**முனைவர் இராசப்பா பெரியசாமி**, எம்.ஏ.,எம்.ஃபில்.,பிஎச்.டி.,
*அரசு கலைக்கல்லூரி, கரூர்.*

தமிழைத் தாய்மொழியாகவும், உழவுத்தொழிலைப் பரம்பரைத் தொழிலாகவும் அதே நேரம் உழுதுண்பதையே தங்கள் கடமையாகவும் கொண்டு ஆல்போல் தழைத்து அருகுபோல் வேரூன்றி இருக்கும் கொங்கு வேளாளர் இனம் தேனையொத்த விருந்தோம்பல் பண்பையும், தேனீயை விஞ்சும் சுறுசுறுப்பும் உழைப்பும் கொண்டவர்கள். உழவர்களுக்கு உறுதுணையாக இருப்பவை ஆடுகளும் மாடுகளுமே ஆகும். அவர்களுக்குப் பணம் தேவைப்படும் போதெல்லாம் ஆடு மற்றும் குட்டிகளை விற்றுச் செலவு செய்யவும் நிலத்திற்குப் பட்டி போட்டு வளமாக்கவும் பயன்படுத்துகின்றனர். அதே வேளையில் மாடுகள் உழவிற்கும், நீர்இறைப்பதற்கும் உதவுகின்றன. இவைகள் இல்லையேல் இவர்களது வாழ்வே கானல்நீராகிவிடும். எனவே இவ்விரண்டையும் தங்களது உயிரைவிட மேலானதாகவும், தெய்வமாகவே வணங்கி வழிபாடு செய்கின்றனர்.

தமிழர் திருநாளாம் அறுவடைப் பெருநாள் தைமாதம் முதல் தேதி தொடங்கிப் பொங்கல் விழா இனிதே நடைபெறும். அன்று அனைவருமே தங்களை வாழ வைத்த ஆடுகளுக்கும் மாடுகளுக்கும் விழாவெடுப்பதையே பெரும்பணியாகக் கொள்வர்.

## காப்புக் கட்டுதல்

விழாவின் தொடக்கம் காப்புக் கட்டுதல். மார்கழி இறுதித்தேதியில் தங்களது கழனிகளுக்கும் காடுகளுக்கும் பட்டி தொட்டிகளுக்கும் இருப்பிடத்திற்கும் நான்கு மூலைகளிலம் அவிரை, வேம்பு, சிறுபூளைப்பூ மூன்றையும் சேர்த்துக் காப்புக் கட்டுவர். இதன் அடிப்படை, தங்களது நிலத்திற்கும் வீட்டிற்கும் எவ்வித இடர்ப்பாடும் மனிதர்களாலோ தெய்வங்களாலோ பேய் பிசாசுகளாலோ வந்துவிடக் கூடாது என்ற அச்சமே காரணமாகலாம். மேலும் தங்களது வீடுகளைச் சுத்தம் செய்து வெள்ளை அடிப்பதும் ஆண்டுக்கு ஒருமுறையாகிய இக்காலத்தில்தான்.

## புடவை நோன்பு

தைமாதம் முதல்நாள் விழா பொங்கல் விழா. இதைப் பெரும்பொங்கல் என்றும் சூரியனுக்குப் பொங்கல் படைப்பதால் சூரியப் பொங்கல் என்றும் பெயர் வழங்கப்படுகின்றது. பயிர் வளர்ச்சிக்கும், மழைக்கும் சூரியஒளியே மூலதனம் என்பதால் இவ்வழிபாடு ஏற்பட்டிருக்கலாம். அதிகாலையில் ஒரே தெருவில் இருப்பவர்கள் ஒன்றுகூடி வாசலில் கோலமிட்டுப் பொங்கல் வைத்துச் சூரியனை வழிபடுவர். தங்களது முன்னோர்களை நினைவுகூறும் முகத்தான் அன்று மதியம் அவர்கள் நினைவாக ஆண்டுதோறும் பாதுகாத்து வரும் புடவையை (வேட்டி அல்லது சேலையை) அன்று ஆறு அல்லது கிணற்றில் சுத்தம் செய்து வீட்டிற்கு எடுத்து வந்து, விரதம் இருந்து சமைத்த உணவையும், புடவையையும் வைத்து வழிபாடு நடத்துவர். இதைப் புடவை நோன்பு என்று அழைப்பர்.

## பட்டிப்பொங்கல்

தைமாதம் இரண்டாள் நாள் விழாவை மாட்டுப்பொங்கல் என்றும், பட்டிப்பொங்கல் என்றும் அழைப்பர். அன்று உழவோ, கிணற்றில் நீர் இறைப்போ பெரும்பாலும் இல்லாதநிலையில் மாடுகளுக்கு அன்று ஓய்வு நாளாகும். மாடுகளுக்கு விழா என்பதால் வயிறு நிறைய மேயவிடுவர். மாலையில் நன்கு குளிப்பாட்டிக் கொம்புகளுக்குக் காவிக்கல்லைப் பொடிசெய்து, விளக்கெண்ணெய் அல்லது நீர் விட்டுக் கலக்கிப் பூசி அழகுசெய்வர்; அன்று காலையில் ஆடுகள் அடைக்கப் பட்டிருக்கும் இடமாகிய பட்டியைக் கிடைமாற்றிப் புதிய இடத்தில் எடுத்து வைப்பர். ஆடுகளையும் குளிப்பாட்டிக் கொண்டு வருவர். மாலையில் பெண்கள் வீடுகளைச் சாணம் கொண்டு மெழுகிச் சுத்தப்படுத்திப் பொங்கலுக்குத் தேவையான பொருட்களைக் கூடையில் எடுத்து வைத்துக்கொண்டு ஊரிலுள்ள விநாயகப் பெருமானை வழிபட்டுப் பொங்கல் நல்லமுறையில் பொங்க வேண்டும் என வேண்டிப் பட்டிக்கு வருவர். அங்கு ஏற்கனவே அடுப்பையும் எள்ளுக் குச்சியையும் ஆண்கள் தயார் செய்து வைத்திருப்பர். பொழுது சாயும் நேரம் இரு புதுப்பானையில் பொங்கல் வைப்பர். சில நேரம் பொங்கல் பொங்குவதில்லை. எவ்வளவு விறகு வைத்து எரித்தும் பொங்கல் பொங்காமல் போனால் ஏதோ குற்றம் செய்து விட்டதாக நினைத்து இனி எத்தவறும் நேராது என்க்கூறி வேறொரு புதுப்பானையில் பொங்கல் வைப்பர்.

ஆண்கள் தங்களது பட்டியின் தென்மேற்கைச் சுத்தம் செய்து சாணி தெளிப்பர். மத்தியில் ஒரு சிறு குழிபறித்து அதில் பசுமாட்டுச் சாணத்தைக் கரைத்து அதில் நவதானியங்களை இட்டுக் கலக்குவர். இதைத் தெப்பக்குளம் என்பர். சாணம் மற்றும் மஞ்சளில் பிள்ளையார் பிடித்து அதில் அருகம்புல்லை நுனியில் சொருகுவர். அதன்பின் கரும்பு, மஞ்சள், முடக்கத்தான் கொடி, ஊஞ்சல்தடி மூன்று, புதுக்கயிறு ஆகியவற்றைப் பட்டிப்படலில் சாத்துவர். தெப்பக்குளத்தின் முன்புறம் கொட்டை இலையை (சிற்றாமணக்கு) இரண்டிரண்டாக நுனியைக் கிள்ளி, அங்கிருக்கும் ஆட்களின் அடிப்படையில் ஒற்றைப்படையில் வருமாறு பள்ளயம் (படையல்) வைப்பர். இதில் பொங்கல் சோறு, கருப்பட்டி, வெண்ணெய், பழம் ஆகியவற்றை வைப்பர். அதில் ஒரு பள்ளயத்தில் சிறிது பொங்கல் வைத்து அதில் செம்மறியாட்டுக்குட்டியின் (ஊமைத் தலைக்குட்டி) காதை அறுத்து அதில் வரும் இரத்தத்தை அப்படையலில் இடுவர். இப்படையலையும் முன்புள்ள அப்படையலோடு வைப்பர்.

தேங்காய் உடைத்து வைத்து, பத்தி கொளுத்தி, சாம்பிராணி புகையிட்டுச் சூடம் பற்ற வைத்துப் படத்தாயி அம்மனை வழிபடுவர். ஆடுகளுக்கும் மாடுகளுக்கும் சாம்பிராணி ஊற்றி வைத்த கழுநீரும் அதில் சொருகிய (அவரை, வேம்பு, பூளைப்பூ அடங்கிய கட்டு) தழையையுடைய சட்டியை ஒரவரும், இரத்தப் பள்ளயத்தை ஒருவருமாக எடுத்துக்கொண்டு ஒவ்வொரு மாடு ஆடுகளின் வாயில் வைப்பர். பின்னர் ***ஆசனம்*** என்றும் சட்டியை வைத்திருப்பவர் கழுநீரில் நனைத்த தழைகளையுடைய கொத்தை எடுத்து ***வாபூசனம்*** என்றும் சொல்லிக் கொண்டு வருவர்.

இதுமுடிந்ததும் விரதம் இருந்த ஆடுமெய்த்த பெண் முதலில் விரதம் முடிக்க அனைவரும் அதன்பின் பள்ளயத்தைச் சாப்பிட்டு முடிப்பர். பின் பொங்கல் பானை, பழம், தேங்காய் கரும்புகள் அடங்கிய கூடை ஆகியவற்றை ஆளுக்கொன்றாக எடுத்துக் கொண்டு வாய் பேசாமல் பட்டியை மூன்றுமுறை வலமாகச் சுற்றி வந்து வெளியில் வரும்போது குடும்பப் பெரியவர் ஒரு கையில் அரிக்கேன் விளக்கையும் மறுகையில் இரத்தப் பள்ளயம், கொள்ளிக்கட்டை ஆகியவற்றை எடுத்துக்கொண்டு ஊர் எல்லை வரை வருவர். எல்லையை அடைந்ததும் இரத்தப் பள்ளயத்தையும், கொள்ளிக்கட்டையையும் எறித்துவிடுவர். அப்போது அந்த இரத்தப் பள்ளயத்தை ஏதோ ஒன்று கீழே விழாமல் எடுத்துக் கொள்வதாகவும் ஓர் நம்பிக்கை. பின்னர் அனைவரும் வீடு வந்து சேர்வர்.

## விளக்கங்கள்

*படத்தாயி :* பட்டித் தாயைத்தான் படத்தாயி என வழங்குகின்றனர். தாய் தன் மகவைக் காப்பது போல இப்பட்டித் தாய் ஆடுகளின் வளர்ச்சியால் அவற்றை மேய்க்கும் உழவர் பெருமக்கட்குப் பணச்சுவை வரும்போது தேவைக்கேற்ப அக்குட்டிகளை விற்றுச் சுமையைக் குறைத்துக் கொள்வர்.

*கொள்ளிக்கட்டை :* புதுப்பானையில் பொங்கல், தேங்காய், பழம், கரும்பு வைத்த கூடைகளைச் சுமந்து வரும் பெண்கள், சிறுவர் சிறுமிகளுக்குத் தீய சக்திகளால் துன்பம் வரக்கூடாது என்பதற்காக ஊர் எல்லைவரை கொள்ளிக்கட்டையை எடுத்து வருவர். பேய்கள் கூடத் தீயைக்கண்டால் அஞ்சும் என்பர்.

*இரத்தப் பள்ளயம் :* அருவ வழிபாடாகிய இப்படத்தாயி அம்மனை வழிபடும்போது வேறு தீயசக்திகளுக்கும் படையல் இடவேண்டும் என்பதற்காக இருக்கலாம்.

*ஊஞ்சல்தடி :* இதுபற்றி இருவேறு கருத்துக்கள் நிலவுகின்றன. ஒன்று ஆடுமேய்ப்பதற்கும் மாடுகளை ஏரில் பூட்டி உழும்போதும் இத்தடிகள் பயன்படுகின்றன. அதை நினைவுபடுத்துவதற்காக இருக்கலாம். இரண்டாவதாக அன்று இரவு எலிவேட்டையாடச் செல்லும் போது இத்தடிகளைப் பயன்படுத்துவதற்காகவும் இருக்கலாம்.

*புதுக்கயிறு :* பட்டி என்பது தாம்புகளால் ஆனது. மின்னல் மாறு (குச்சி) அல்லது மூங்கில் மாறால் கட்டப்படுவது தாம்பு. சிறியதைப் படல், கடவு என்றும் பெரியதை தாம்பு என்றும் கூறுவர். இருதாம்புக்களை இணைப்பதற்குக் கயிறு வேண்டும். இப்புதுக்கயிற்றை எடுத்து அன்று பூசை முடிந்து பட்டியைச் சார்த்தும்போது இப்புதுக்கயிற்றால் கட்டுவர்.

*முடக்கத்தான் கொடி :* வட்டமாகச் சுற்றி வைக்கப்பட்ட இக்கொடியை நீள விரித்து மாட்டைத் தாண்டச் செய்வர். இது மாடுகளுக்கு எவ்வித நோயும் அண்டக்கூடாது என்பதற்காக இருக்கலாம். இக்கொடி முடக்குவாதத்தை நீக்கும் ஒருமருந்துச்செடி என்பதும் நினைவு கூறத்தக்கது.

*தெப்பக்குளம் :* பசுஞ்சாணத்தைக் கரைத்து அதல் நவதானியங்களை இடுவது, தெப்பக்குளத்தில் வளரும் தானியங்கள் போல, காடுகளிலும், தோட்டங்களிலும் செழிப்பாகப் பயிர் வளர வேண்டும் என்ற நோக்கமே காரணமாகும்.

# நாட்டுப்புற சிறுதெய்வ வழிபாடுகள்

**க. இராமலிங்கம்**, எம்.ஏ., எம்.ஃபில்.,பி.எட்.,
*கே.எஸ்.ஆர்.கலை அறிவியல் கல்லூரி, திருச்செங்கோடு.*

கிராமங்களில் உள்ள மக்களின் பண்பாடு, தொழில் இவற்றை ஆராய்வதே நாட்டுப்புற ஆய்வாகும். கிராமங்கள் மிகுந்த தமிழ்நாட்டில் இவற்றை ஆராய்வதன் மூலம் பழமையின் சிறப்பினையும் மக்கள் காலம்காலமாகப் பின்பற்றி வருகின்ற பண்பாட்டுச் சிறப்பினையும் அறியலாம். நாட்டுப் புறத்தை நுணுகி ஆராய்ந்து தெளிவது நாட்டுப்புறவியலாகிறது. நாட்டுப்புறம் என்பது கிராமங்களைக் குறிக்கிறது. ***நாட்டுப்புற மக்களின் பழக்கவழக்கங்களை ஆராயும் இயல்*** என டாக்டர் சக்திவேல் நாட்டுப் புறவியல் என்ற நூலில் கூறுகிறார்.

## பண்பாட்டுக் கருவூலம்

நாகரிகம் வளர வளர சமுதாய அமைப்பும் மாறி வருகின்றது. இருப்பினும் சமுதாயப் பழக்க வழக்கங்கள் முற்றிலும் மறையவில்லை. அவற்றின் சிதைவுகள் நாட்டுப்புறங்களில் இன்னும் காணப்படுகின்றன. இச்சிதைவுக் கூறுகளைப் பழங்காலப் பண்பாட்டின் எச்சம் என வில்லியம்ஸ் ஜான் தாமஸ் கூறுகிறார்.

## தெய்வ வழிபாடு

பண்பாட்டுச் சிறப்பின் முதல் கூறு தெய்வ வழிபாடாகும். காலம் காலமாகத் தெய்வ நம்பிக்கைகள் பேணப்பட்டு வருகின்றன. ***கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்*** எனக் கருதி கிராமங்களில் கோவில் வழிபாடுகள் மேலோங்கி இருந்தன. நாட்டுப்புறத் தெய்வங்களைப் பெருந்தெய்வங்கள், சிறுதெய்வங்கள் என இரண்டாகப் பிரிக்கலாம். மதத்தின்கண் அமைந்துள்ள பிரிவின் அடிப்படையில் பெருந்தெய்வங்கள் அமைகின்றன. சிவன், பிரம்மன், திருமால், முருகன், கணபதி, இலக்குமி, சரஸ்வதி, அம்பிகை போன்றவைகளைப் பெருந்தெய்வங்கள் எனலாம். கிராமங்களில் காணப்படும் அம்மன், காளி போன்றவைகள் சிறுதெய்வங்களாகும்.

## சிறுதெய்வ வழிபாடு

சிறு தெய்வக் கோயில்கள் கிராமங்கள் தோறும் இருக்கின்றன. சிறுதெய்வ பெருந்தெய்வ வேறுபாட்டிற்குச் சமுதாய ரீதியான கருத்தை கைலாசபதி கூறுகிறார். சமுதாயத்திலேயே உயர்ந்தோர், தாழ்ந்தோர், மேலோர், கீழோர், பெரியவர், சிறியவர் முதலிய பாகுபாடுகள் தோன்றி வளர்ந்ததைத் தொடர்ந்து மனிதனது நிலையில் பிரதிபலிப்பது போலத் தெய்வங்களும் பெருந்தெய்வம் - சிறுதெய்வம் எனப் பகுக்கப்பட்டன என்பது சமுதாயத்தின் பொருளாதார சமய வேறுபாடுகளைக் காட்டக் கூடியதாக உள்ளது. சிறுதெய்வங்கள் மனிதனுடன் நெருக்கமான தொடர்புடையவை. ***அவை மக்களின் அன்றாடத் தேவைகளைத் தருவனவாகக் கருதப்பெறுவதால் அவை என்றும் வழிபடப் பெற்று வருகின்றன*** என ச. கணபதிராமன் கூறுவது உடன்பாடான கருத்தாகும். தமிழக நாட்டுப்புறத் தெய்வம் சிறு தெய்வங்கள் என்று சொல்வதெல்லாம் திராவிடத் தெய்வங்கள் என்று கூறுகின்றார் டாக்டர் துளசி இராமசாமி.

ஊர்த் தெய்வங்கள் சிறு தெய்வங்கள் என்றழைக்கப்படுகின்றன. சிறுதெய்வக் கோயில்களில் வடமொழி மந்திரங்கள் ஓதப்படுவதில்லை. சிறு தெய்வங்களை கிராமப் பொதுத் தெய்வங்கள், குல தெய்வங்கள் எனப் பிரிக்கலாம்.

## கிராமப் பொதுத் தெய்வங்கள்

கிராமத்தில் பலசாதிப் பிரிவினையுடைய மக்கள் வசிக்கிறார்கள். அவர்கள் அனைவரும் இணைந்தோ அல்லது தனித்தனியாகவோ வழிபடும் பொதுவான தெய்வங்கள் கிராமப் பொதுத் தெய்வங்கள் ஆகும். தமிழகத்தில் பரவலாக ஊர்ப் பொதுத் தெய்வங்களாக மாரியம்மன் வழிபாடும் காளி வழிபாடும் சிறப்புற நடைபெற்று வருகின்றன. அந்தந்த கிராமத்தில் உள்ள கோயில்கள் அந்தந்த கிராம மக்களால் வழிவழியாகப் போற்றி பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

### மாரியம்மன்

எல்லா ஊர்களிலும் மாரியம்மன் கோயில்கள் உள்ளன. அந்தந்த இடத்திற்குத் ஏற்றாற்போல் பெரிய மாரியம்மன், சிறிய மாரியம்மன் என்று அழைக்கப்படுகிறது. இறைவன் இருக்குமிடம் சிறிய அமைப்பிலும் முன் மண்டபம் பெரிய அமைப்பிலும் அமைக்கப்பட்டுள்ளது. சிலை வடிவில் மாரியம்மன் காட்சி தருகிறாள். நாள்தோறும் காலை மாலை இருவேளைகளிலும் பூஜை நடைபெறுகிறது. ஆண்டுதோறும் சித்திரை மாதமும் கார்த்திகை மாதமும் திருவிழாக்கள் நடத்தப்படுகின்றன.

கோடைக்கால வெப்பத்தால் மக்களைத் தாக்கும் கொடிய நோய்களான காலரா, அம்மை போன்ற நோய்களுக்கு மாரியம்மன் வழிபாடு குறைவே என்ற காரணமும் மக்களிடம் நிலவி வருகிறது. மாரியம்மனை வேண்டி வழிபடுவதன் மூலம் அந்நோய்களிலிருந்து தப்பலாம் என்று கருதியும் திருவிழாக்களை மக்கள் எடுக்கின்றனர். மாரி என்றால் மழை என்று பொருள். மாரியம்மன் மழைத் தெய்வம். நாட்டுப்புறத்தில் மழையைப் போற்றுகின்ற தன்மை உண்டு. மழை இன்றி இவ்வுலகில் ஏற்றம் இல்லை என்பதை உணர்ந்தே ***நீரின்றி அமையாது உலகு என்றும் மாமழைப் போற்றுதும் என்றும் வரப்புயர நீர் உயரும் நீர் உயர நெல் உயரும், நெல் உயர குடி உயரும், குடி உயர கோன் உயர்வான்*** என்றும் இலக்கியங்களில் கூறப்படுகிறது. மழைநீரை நம்பியே கிராமப்புற விவசாயம் அமைந்துள்ளதால் கிராம மக்கள் மழைவேண்டி இறைவனை வழிபடுகின்ற பாங்கு உள்ளது. வெப்ப நோயைத் தணிக்கவும் மழைவேண்டி மக்கள் விழா எடுப்பதும் கிராம மக்களிடம் நடைமுறையில் உள்ளது. பண்டைத் தமிழர் போற்றிய வருணனே இக்கால மாரியம்மன். நீர் சார்ந்த நெய்தல் நிலக்கடவுளாக வருணனைத் தொல்காப்பியர் கூறுவர்.

## காளி

கிராமங்களில் காளிகோயில் ஊருக்கு வெளியே அமைந்துள்ளது. பெரும்பாலும் மூன்று அல்லது நான்கு ஊர்களுக்குப் பொதுவாக இக்கோயில்கள் உள்ளன. காளி உருவம் அச்சம் தரும் தோற்றத்தை உடையது. இத்தெய்வம் ஊரின் காவல் தெய்வமாகக் கருதப்படுகிறது. இக்கோயிலுக்குப் பொங்கல் படையலிட்டுப் பூசை நடத்தப்படுகிறது. ஆடு கோழி உயிர்ப்பலி கொடுப்பர். பெரும்பாலும் நள்ளிரவில் உயிர்ப்பலி கொடுப்பது வழக்கமாக உள்ளது. திருவிழாக்கள் ஒரு சில ஊர்களில் ஆண்டுக்கு ஒரு முறையோ அல்லது இரு முறையோ நடைபெறுகிறது. வழி வழியாக உரிமை பூண்ட பூசாரி விரதம் இருந்து வழிபாடு செய்வதும் சிலநேரங்களில் தெய்வம் ஏறப்பெற்று குற்றங்களைச் சுட்டிக் காட்டுவதும் வழக்கமாக உள்ளது. தெய்வ வெறியில் ஆட்டுக் குட்டியின் கழுத்தை அரிந்து குருதி குடிப்பதும் உண்டு. அக்கால பாலைநிலத் தெய்வமாகிய கொற்றவையே இக்கால காளி வழிபாடாக நாம் கொள்ளலாம்.

## குலத்தெய்வம்

கிராமங்களில் குலதெய்வ வழிபாடுகள் பன்னெடுங்காலமாகவே நடைபெற்று வருகின்றன. இறந்த முன்னோர்களின் நினைவாகவே

இவ்வழிபாடுகள் தோன்றின. ஒவ்வோர் சாதிக்கும் குலம் கோத்திரத்திற்கும் ஏற்பத் தனித்தனியே குலத் தெய்வ கோயில்களும் வழிபாடும் உண்டு. ஒரு குலத்தில் தோன்றிய குடும்பங்கள் பல ஊர்களில் வசிக்கின்றதால் ஓர் ஊரில் குலத் தெய்வக் கோயில் இருக்கும். ஊருக்கு வெளியே காட்டுப் பகுதியில் கோயில்கள் அமைத்தும் ஒரு சில இடங்களில் மரத்தடியிலும் கோயில் அமைக்கப்பட்டு வழிபாடுகள் நடைபெறுகின்றன. கிராமத் தெய்வத்திற்குப் பூசை செய்வதைப் போலவே இங்கும் விலங்குகளையும் பறவைகளையும் உயிர்ப் பலி கொடுப்பர். வழிபாட்டின்போது தாரை, மணி, கொட்டு போன்ற பழங்கால இசைக் கருவிகள் இசைக்கப்படும்.

## நடுகல் வழிபாடு

பண்டைக் காலத்தில் நிகழ்ந்த நடுகல் வழிபாட்டின் வளர்ச்சியே குலத்தெய்வ வழிபாடாகக் கருத இடமுண்டு. போர்க்களத்தில் வீர மரணம் அடைந்த வீரனுக்கு நடுகல் இட்டு வழிபடுவது அக்கால வழக்கம். காலப்போக்கில் வீரர்களுக்கு அளிக்கப்பட்ட நடுகல் வணக்கம் குடும்பத்தில் இறந்தோர்க்கும் எடுக்கப்படலாயிற்று. இது பின்னாளில் குலத் தெய்வ வழிபாடாக மாறியது.

நாட்டுப்புற மக்களின் வழிபாட்டு முறை பண்டைத் தமிழர் போற்றிய உணர்வு வயப்பட்ட வழிபாடு என்பதும் மக்கள் நம்பிக்கையுடன் சிறு தெய்வங்களையும் குலத் தெய்வங்களையும் வழிபட்டனர் என்பதையும் அறிய முடிகிறது.

# பேளுக்குறிச்சி மூப்பனார் வழிபாடும் பாட்டப்பன் வழிபாடும்

**சு. இராசேந்திரன்,** எம்.ஏ., எம்.பில்.,
*அறிஞர் அண்ணா கலைக்கல்லூரி, நாமக்கல்*

## பேளுக்குறிச்சி மூப்பனார் பாட்டப்பன் சுவாமி

நாமக்கல்லில் இருந்து 23 கி.மீ. தூரத்தில் பேளுக்குறிச்சி கிராமம் உள்ளது. முற்காலத்தில் இவ்வூர் எல்லையில் மூப்பனார் பாட்டப்பன் சுவாமி கோயில் அமைந்திருந்தது. ஊர் விரிவடைய விரிவடைய தற்போது ஊரின் மையத்தில் இக்கோவில் அமைந்துள்ளது. *மாவுளி* மரத்தடியில் நடுகல் போன்று மூப்பனார் பாட்டப்பன் சுவாமி உள்ளது. கோயிலுக்குக் கோபுரம் இல்லை. திறந்த வெளியாகச் சுற்றுச் சுவர் மட்டும் கட்டப்பட்டுள்ளது. மாவுளி மரத்தின் கீழ் மையத்தில் மூப்பனார் வலது பக்கம் சின்னண்ணன் பெரியண்ணன் சுவாமிகளும் இடது பக்கம் வடுவச்சாயி புடவைக்காரி சுவாமிகளும் அமைந்துள்ளன. இம்மரத்தைச் சுற்றி வேல்களும், இரும்பாலான துண்டுத் தடிகளும் நடப்பட்டுள்ளன.

***மூப்பனார் பாட்டப்பனின் உருவ அமைப்பு :*** முன் குஞ்சம், பின்குஞ்சம் வைத்த தலைப்பாகையும் உடம்பில் மடிப்புத் துண்டும், கீழ்ப்பாச்சி வேட்டியும் மூப்பனார் பாட்டப்பன் சுவாமி அணிந்துள்ளார். நெற்றியில் திருநீறும் சந்தனம் குங்குமத்தால் பொட்டும் உள்ளன. மிரட்டும் பார்வையோடு வலது கையில் கொடுவாளும் இடது கையில் துண்டுத் தடியும் உள்ளன. நாமக்கல்லில் இருந்து 10 கி.மீ. தொலைவில் உள்ள ***களங்காணி மூப்பனார்*** பாட்டப்பன் சுவாமியும் இத்திருக்கோலத்திலேயே வடிவமைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## திருவிழா

மாசி மாதம் திருவிழா நடைபெறுகின்றது. மாசி அமாவாசைக்கு முன்பு நல்ல நாள் பார்த்து முதல் பூசையும், அமாவாசையன்று சிறப்பான பூசையும், மூன்றாம் பிறை அன்று மறு பூசையும் நடைபெறுகின்றன. தை மாதம் இறுதி நாளில் ஊரின் பெரியதனக்காரர், வாரியார், சாம்பார் (சாம்பான்) இவர்களோடு ஊர் மக்கள் அனைவரும் கூடி திருவிழா நாளை நிர்ணயம் செய்து வரியைத் தீர்மானிப்பார்கள். அடுத்த நாள் காலையில் ஊர் மக்களுக்கு இந்தச் செய்தி அறிவிக்கப்படும்.

*முதல் பூசை :* மாசி மாதத்தில் அமாவாசைக்கு முன்பு நல்ல நாளன்று மாலை நேரத்தில் ஊர் மக்கள் கூடுவார்கள். வெண் பொங்கல் படையலிட்டுப் பொதுவில் ஆட்டுக்கிடாய் ஒன்றை வெட்டிப் பலியிட்டு மூப்பனார் பாட்டப்பன் சுவாமிக்கு பூசை நடைபெறுகின்றது. பிறகு வெட்டப்பட்ட ஆட்டுக்கிடாய் மீது சாம்பார் (பூசாரி) தீர்த்தம் தெளித்து, பின் ஊர் மக்களுக்குத் தீர்த்தம் தெளித்து திருநீறு வழங்கப்படுகின்றது.

## உலை மேட்டுக் காளி

முற்காலத்தில் பேளுக்குறிச்சி கிராமத்தில் வார்ப்பு இரும்பு உருக்கி அதில் தேவையான ஆயுதங்கள் தயாரிக்கும் பணி சிறப்பாக நடைபெற்றது என்றும், இவ்வேலை இரவு பகலாக நடைபெற்றது என்றும் இடர்ப்பாடின்றி இப்பணி நடைபெற ***உலைமேட்டுக்காளி*** துணை இருந்ததாகக் கூறப்படுகின்றது. முதல் நாள் பூசை மூப்பனார் பாட்டப்பன் சுவாமிக்கு நிகழ்கிறது. அடுத்த நாள் காலையில் உலைமேட்டுக் காளிக்கு ஊர்ப் பொதுவில் ஆட்டுக்கிடாய் வெட்டிப் பூசை நடைபெறுகிறது.

*இரண்டாம் பூசை (அமாவாசைப் பூசை) :* இப்பூசையே சிறப்பாக நடைபெறுகின்றது. கோயில் முழுக்க வெள்ளையடித்து, தென்னங்குலை, பனங்குலை, கூந்தப்பனைக் குலை ஆகியவற்றை அழகான [illegible] தொங்கவிடுவார்கள். ஈஞ்சி, வாழைமரம் கட்டுவார்கள். வண்ண வண்ணத் தோரணங்கள் கட்டுவார்கள்.

Dr. U.V. SAMINATHAIY

## சக்தி அழைத்தலும் கிணற்று மேட்டுப் பூசையும்

சக்தி அழைத்தல் ஊர் ஓரத்தில் உள்ள கிணற்று மேட்டருகே தொடங்கி ஊரைச் சுற்றி வந்து கோயிலை மும்முறை வலம் வந்து கோயிலினுள் முடிவடைகின்றது. ஊர்க் கிணற்றிலிருந்து நீர் இறைத்து ஒரு குடத்தில் நிரப்பப்படுகிறது. அக்குடத்தின் மீது மஞ்சள் பூசப்பட்ட ஒரு தேங்காயை வைத்து, அத்தேங்காயைச் சுற்றி மாவிலை வைக்கப்படுகிறது. அக்குடத்தை மஞ்சள் நூலால் அலங்கரித்துத் தேங்காயிற்கும், குடத்திற்கும் சந்தனம், குங்குமம் பொட்டு வைக்கப்படுகிறது. அக்குடத்திற்குப் பூமாலையிட்டுத் தென்னம்பூவால் இரு பக்கங்களிலும் அலங்கரித்து சாம்பிராணி சூடம் காட்டிப் பூசை செய்யப்படுகிறது. மேள தாளம் முழங்கவும், மணி சேம்மகலம் அடிக்கவும், சங்கு ஊதவும் பூசாரி அருளுடன் அக்குடத்தை எடுத்துத் தலையில் வைத்துக் கொண்டு நடப்பார். மிகுந்த ஆரவாரத்தோடு சக்தி அழைத்தல் இவ்வாறு தொடங்கும். இச்சக்தி அழைத்தல் ஊர்வலமாக வரும்போது ஒவ்வொரு வீட்டிலிருந்தும் பொங்கல் பொருள்கள், ஆடு, கோழி, பன்றி அவரவர்கள் ஊர்வலத்தில் சேர்த்துக் கொள்வார்கள்.

சாம்பாரின் தம்பி அதாவது பூசாரியின் தம்பி உலைமேட்டுக் காளி கோவிலில் புதுப் பானையோடும் பச்சரிசியோடும் தயாராகக் காத்திருப்பார். இது அரண்மனைப் பொங்கல் என்று அழைக்கப்படுகிறது. சாம்பாரின் தம்பி சக்தி அழைத்தல் ஊர்வலத்தில் ***அரண்மனைப் பொங்கல்*** பானையைத் தூக்கித் தலையில் வைத்து ஆடிக்கொண்டே வருவார். அப்படி அருளோடு ஆடிக்கொண்டு வரும்போது அருள் வாக்கு சொல்லுவார். மிக ஆரவாரத்தோடு சக்தி அழைத்தல் ஊர்வலம் போய்க்கொண்டிருக்கும். பிறகு கோயிலை மும்முறை சுற்றிவந்து, பொங்கல்பானை, அலங்கரிக்கப்பட்ட குடம் இவற்றுடன் கோயிலினுள் புகுவார்கள். அக்குடத்து நீரைப் பொங்கல் பானையில் ஊற்றிப் பொங்கல் வைப்பார்கள். அதன் பிறகுதான் ஊர்மக்கள் அனைவரும் பொங்கல் வைக்கும் அடுப்பைப் பற்றவைக்க வேண்டும்.

***சுவாமி அலங்காரம் :*** எல்லா சுவாமிகளுக்கும் சீகைக்காய் தூள் திருநீறு தேய்த்து நன்கு கழுவி, பின் திருநீறு பட்டையிட்டு சந்தனம் குங்குமம் பொட்டு வைக்கப்படுகின்றது. மூப்பனார் பாட்டப்பன் சுவாமிக்கு முன்குஞ்சம் பின்குஞ்சத்துடன் கூடிய தலையப்பாகை கட்டப்படுகிறது. எல்லா சுவாமிகளுக்கும் பூமாலை சூட்டப்படுகின்றது. தென்னம்பூ அலங்காரம் மிகச் சிறப்பானது. தென்னம்பூவால் எல்லா சுவாமிகளுக்கும் சிறப்பான முறையில் அலங்காரம் செய்வார்கள்.

## படையல்

மூப்பனார் பாட்டப்பன் சுவாமி, ஏழுகன்னிமார்கள், சின்னண்ணன், பெரியண்ணன், புடவைக்காரி, வடுவச்சாயி, முன்னுடையான் சுவாமிகளுக்கு இலையிட்டுப் பால் பொங்கலை உருண்டையாக வைத்து அதன்மேல் பஞ்சாமிர்தம் வைக்கப்படுகிறது.

அதன்பிறகு ஊர் மக்கள் பொங்கல் பானையில் இருந்து ஒவ்வொரு உருண்டையை எடுத்துத் தட்டில் வைப்பார்கள். இதனுடனே வாழைப்பழம் தேங்காயும் எடுக்கப்படுகிறது. இவைகளைக் கோயிலினுள் வைப்பார்கள். மிக அமைதியான நடு இரவில் மணி ஓசை முழங்க சாம்பிராணி, சூடம் ஆகியவற்றுடன் பூசை நடைபெறுகின்றது. பிறகு குடம் நிறைய தீர்த்தம் எடுத்துக் கொண்டு பூசாரி கோயில் வாயிலில் சாமியாடுவார். இதன் பிறகு ஏழு கன்னிமார்கள், புடவைக்காரி, வடுவச்சாயி ஆகிய சுவாமிகள் வெள்ளை துணியால் மூடப்படுகின்றது. கோயில் பூசாரி குடத்தில் உள்ள தீர்தத்தை (பொது ஆடு) அரண்மனை ஆட்டுக்கிடாய் மீது தெளிப்பார். அது சிலிர்த்தவுடன் வெட்டப்படுகிறது. பிறகு மற்ற ஆடு, கோழி, பன்றி ஆகியவைகளும் பலியிடப்படுகின்றன.

பன்றி வேலால் குத்திப் பலியிடப்படுகிறது. பொது ஆட்டுக்கிடாயின் ஈரலை எடுத்து சுடப்படுகின்றது. பன்றியைக் குத்திய இடத்தில் குறிப்பிட்ட அளவு தசையை எடுத்துச் சுடப்படுகிறது. சுடப்பட்ட ஆட்டின் ஈரல், பன்றியின் தசை இவைக்கு ***சுடுவான்*** என்று கூறுவர். பலியிட்ட ஆடு, கோழி, பன்றியின் இரத்தம் கொஞ்சம் கொஞ்சம் ஒரு காவு சட்டியில் (புதுச்சட்டி) பிடிக்கப்படுகின்றது. இந்த இரத்தத்தோடு சோற்றைப் பிசைந்து வைப்பார்கள்.

***மாமிச பூசை :*** சுடுவானை மூப்பனார் பாட்டப்பன், சின்னண்ணன், பெரியண்ணன், குன்னுடையான் ஆகிய சுவாமிகளுக்கு முன் படையல் இடுவார்கள். மேலும் மூப்பனார் பாட்டப்பனுக்குக் கள், சாராயம் போன்ற மது வகைகளையும், சுருட்டும் வைக்கப்படுகின்றது. பிறகு கோயில் பூசாரி முன்குஞ்சம் பின்குஞ்சம் வைத்த தலைப்பாகையுடன், வாயை துணியால் கட்டிக் கொண்டும், வேட்டியை கீழ்ப்பாய்ச்சி போட்டுக் கட்டியபடி பூசை செய்வார். பூசை முடிந்தபிறகு மக்களுக்குத் தீர்த்தம் போட்டு, திருநீறும் கொடுப்பார். அதன்பிறகு ஏற்கனவே பலிகொடுக்கப்பட்ட ஆடு, கோழி, பன்றி இவைகளின் மீது தீர்த்தம் தெளித்து திருநீறு போடுவார். மேளதாளம் முழங்கப் பலியிடப்பட்ட ஆடு, கோழி, பன்றி இவற்றுடனும் பொங்கல் பானையுடனும் ஊர் மக்கள் வீடுகளுக்குச் செல்வார்கள்.

***காவு கொடுத்தல் :*** அனைத்து மின் விளக்குகளையும் நிறுத்திவிட்டு, ஒரே ஒரு நெய் விளக்கை மட்டும் ஏந்திக் கொண்டு, கோயில் பூசாரி, அவர் தம்பி, மற்றொருவர் ஆகிய மூவரும், காவு சட்டியில் உள்ள சோற்றை உருண்டையாகப் பிடித்து, சனிமூலை தவிர மீதமுள்ள மூலைகளிலும் ***இதோபிடித்துக் கொள்*** என்று கூவி வீசுவார்கள். கடைசியில் தென் கிழக்கில் வீசும் போது காவு சட்டியோடு வீசிவிடுவார்கள். ***இந்த நேரத்தில் எங்களையும் அறியாத ஒரு சக்தியினால் நாங்கள் வானத்தில் பறப்பது போன்று தெரியும். ஆவிகள் கண்களுக்குப் புலப்படும். மிகவும் துணிச்சலாக நாங்கள் இருப்போம்*** என்று பூசாரி கூறுகிறார்.

## மறுபூசை

மூன்றாம் பிறையன்று மறு பூசை நடைபெறுகிறது. அன்று மாலை ஊர் மக்கள், கூடி வெண்பொங்கல் படையலிட்டு, அதனோடு சக்கரைப் பொங்கலும் வைத்துப் பூசை நடைபெறுகின்றது. பூசை முடிந்த பின் ஊர் மக்கள் அனைவருக்கும் சக்கரைப் பொங்கலும் திருநீறும் கொடுத்து விழா முடிவடைகின்றது.

# முதுவான் பழங்குடியினரின் வழிபாடு:பொங்கல்

**முனைவர் சு. இராஜேந்திரன்**,எம்.ஏ.,எம்.ஃபில்.,பிஎச்.டி.,
*பல்கலைக்கழகக் கல்லூரி, திருவணந்தபுரம், கேரளா.*

முதுவான் பழங்குடி மக்கள் கேரளத்தில் இடுக்கி மாவட்டத்திலுள்ள மலையோரக் காடுகளில் குடிகளை (Settlements) அமைத்து வாழ்ந்து வருகின்றனர். இவர்களுடைய முன்னோர்கள் பாண்டிய மன்னர்களுடைய ஆட்சிக் காலத்தில் மதுரையில் இருந்து இங்கு வந்து குடியேறியதாகக் கூறுகின்றனர். இம்மக்களின் வாய்மொழி இலக்கியங்களும் இதனை உறுதிபடுத்துவதாக உள்ளன. முதுவான் மக்கள் தமிழர் விழாக்களான, வருடப்பிறப்பு, தீபாவளி, ஆடித்திருவிழா, பொங்கல் விழா போன்ற விழாக்களைக் கொண்டாடி வருகின்றனர். பொங்கல் விழாவினோடு வழிபாட்டுச் சடங்குகளையும், இணைத்து பொங்கல் வழிபாடாக மாற்றி இருப்பதையே இக்கட்டுரை ஆராய்கிறது. காட்டில் விவசாயம் செய்து வாழ்ந்து வரும் இப்பழங்குடிமக்கள் பொங்கல் விழாவினை ஒரு வழிபாட்டுச் சடங்காக நிகழ்த்துகின்றனர். பொங்கல் திருநாள் என்பது ***சூரியன் மகரராசியில் பிரவேசிக்கும் நாளான தைமாதம் முதல் நாளன்று சூரியனைப் பூசித்துப் பொங்கல் நிவேதனம் செய்யும் திருவிழா எனக் குறிப்பிடுகிறது தமிழ் அகராதி*** (Tamil Lezcicean : Vol. V, Part I, P. 2911) பொங்கல் விழாவினை இப்பழங்குடி மக்களும் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர். பொங்கலைத் தைமாதம் முதல் நாளன்றுதான் கொண்டாட வேண்டும் என்ற கட்டாயம் இவர்களிடையே இல்லை. ஆனால் தை மாதத்தில் கொண்டாட வேண்டும் என்பது முக்கியமான ஒன்று. ஒரு குடும்பத்திற்கு ஐம்பது ரூபாய் முதல் ஆயிரம் ரூபாய் வரையிலும் செலவு செய்கின்றனர். ஊர்த்தலைவர் ஊராரைக் கூட்டி இன்ன நாள் பொங்கல் வழிபாடு நடத்த வேண்டும் என்றும், அதற்கு ஆகும் செலவையும் குறிப்பிடுவார். வசதி இல்லாதோர் வரிப்பணம் கொடுக்கத் தேவை இல்லை.

## பொதுக் கோயிலும் வழிபாடும்

எல்லாக் குடிமக்களும் பொதுவான பொதுக் கோயிலில் கணபதியின் உருவச்சிலையை வைத்து வழிபடுகின்றனர். ஆற்றோரத்தில் அமைக்கப்பட்டிருக்கும் இக் கோயிலுக்கு வழிபாடு

செய்யப் பூசாரியுண்டு. குடிக்கோயில்களில் பொங்கல் காலத்தில் பூசை தொடங்குவதற்கு முன்னரே பொதுக் கோயில் பூசை தொடங்கப்படுகின்றது. இங்கு பூசை முடிந்த பின்னர்தான் குடிக்கோயில்களில் பூசை வைக்கவேண்டும் என்பது கட்டாயமான ஒன்று. பொதுக் கோயில் பூசாரி, குடிக் கோயில்களில் பொங்கல் விழா தொடங்குவதற்குப் பதினைந்து நாட்களுக்கு முன்னரே நோன்பு இருக்கின்றார். பொதுக் கோயிலில் ஓர் உயரமான மேடையை வைத்து அதில் கணபதியின் உருவச்சிலையை (கல்லால் ஆன சிலை) வைக்கின்றனர். பொங்கல் விழா தொடக்கத்திற்கு அறிகுறியாக முதலாவதாகப் பொதுக் கோயிலில் இருக்கும் கணபதிக்குப் பூசையும், பொங்கலும் இடுகின்றனர். இந்நிகழ்ச்சியின் போது கணபதி சிலைக்கு முன்னால் ஐந்து வாழை இலைகளைஇட்டு மூன்று இலைகளில் ஐந்து வெற்றிலைகளுடன் ஒவ்வொரு பாக்கினையும் வைக்கின்றனர். ஆனால் ஓர் இலையில் மட்டும் தேங்காய், பழம், வெற்றிலை, பாக்கு, அவல், பொரி, சுண்டல் பத்தி, சூடம் போன்றவற்றை வைக்கின்றனர். கடைசி இலையில் திருநீறுடன் ஒரு தாம்பளத் தட்டையும் வைக்கின்றனர். பூசையில் கலந்து கொள்ள வருபவர்கள் காணிக்கையைத் தட்டில் வைக்கின்றனர். பூசாரி திருநீற்றைக் கையில் எடுத்து, மந்திரம் ஓதி அவர்கள் தலை மீது பூசுவார்.

***பொங்கல் உண்டாக்குதல் :*** கோயிலுக்கு அருகில் உரலையும் உலக்கையையும் கொண்டு வந்து அங்கே வைத்து நெல்லைக் குத்தி அரிசி எடுக்கின்றனர். பின் பொங்கலில், அரிசியுடன் பழம், முந்திரிப்பழம், சர்க்கரை, சுண்டல், பொரி, அவல், பேரிச்சம் பழம், ஏலக்காய், பருப்பு, தேங்காய் இவற்றையும் சேர்த்துப் பொங்கல் ஆக்குகின்றனர். பின்னர் இலைகளில் பொங்கலை எடுத்து வைக்கின்றனர்.

***கணபதிக்குச் செய்யும் சடங்கு :*** பொதுக் கோயிலுக்கு வருபவர்கள் பூமாலையைக் கொண்டு வருகின்றனர். இது நேர்ச்சைக்காகக் (காணிக்கை) கொண்டு வருவதாகும். பூசாரி இப்பூமாலைகளை வாங்கி இறைவனுக்குச் சாத்துகிறார். அங்கு வரும் பெண்கள் செம்பு நிறைய தண்ணீரைக் கொண்டு வந்து இறைவனை வழிபட்டுச் சிலை மீது ஊற்றுகின்றனர். இதற்கு ***மஞ்சணைத் தண்ணீர் ஊற்றுதல்*** என்று பெயர். இதுவும் நேர்ச்சையாகும். திரும்பச் சொல்லும்போது பூசாரியிடமிருந்து விபூதி பெற்றுச் செல்கின்றனர்.

***சிதறொடைப்பு :*** தேங்காய் உடைத்து சிதறும்படி செய்வதற்குச் சிதறொடைப்பு என்று பெயர். நோய் நொடிகளிலிருந்து விடுபடவும், எண்ணிய காரியம் கைகூடவும் இறைவனுக்குச் செய்யும் நேர்ச்சையாகும்.

ஒரு தேங்காய் தொடங்கி இருபதுக்கும் அதிகமான தேங்காய்களைச் சிதறொடைப்புச் செய்கின்றனர். ஒரு காரியம் வெற்றியடைந்தால் சிதறொடைப்புச் செய்யலாம் என்று வேண்டி பின் அக்காரியம் நடைபெறாமல் இருந்தால் சிதறொடைப்புச் செய்வதில்லை எந்தக் காரியமும் சிதறொடைப்பால் வெற்றி பெறும் என்று நம்புகின்றனர்.

***கன்னிபூஜை :*** குடிக்கோயில் பொங்கல் வழிபாடு செய்வதற்கு முன் தை மாதம் முதல் நாளில் கன்னிப்பூசை வீட்டில் நடத்துகின்றனர். இது குடும்பத்தில் இளமையிலேயே இறந்தாருக்காகச் செய்யும் பூசையாகும். பொங்கல் நாளில் உடுத்துவதற்கு வாங்கி வைத்திருக்கும் புத்தாடைகளை இறந்தோர்களுக்குப் படைக்கின்றனர்.

## குடிக்கோயிலும், பொங்கல் வழிபாடும்

பொதுக் கோயிலில் பூசையும் பொங்கலும் இட்ட பின்னர் குடிகளில் உள்ள ஒவ்வொரு கோயில்லிலும் பூசையும் பொங்கலும் இடுகின்றனர். பொதுக்கோயிலைக் குடிக்குப் பொதுவான ஓர் இடத்தில் சற்று தள்ளி அமைத்துக் கொள்கின்றனர். பெரும்பாலும் குடிக்கோயிலில் தினந்தோறும் அல்லது திங்கள், வெள்ளி ஆகிய தினங்களில் தீபம் ஏற்றிப் பூசை செய்வர். முக்கியமாகப் பொங்கல் விழாவின்போது பத்து நாட்கள் பூசையும் வழிபாடும் நடைபெறும். பொங்கலின் போது ஊரார் அனைவரும் வந்து கலந்து கொள்ள வசதியாக ஒரு பெரிய பந்தலை கோயிலின் முன்பக்கம் அமைக்கின்றனர். இரவில் சுமார் ஏழு மணி அளவில் பூசை தொடங்கும். பூசையின் போது சிவன், விஷ்ணு, பிரமன், கணபதி, முருகன், பகவதி, இராமன், அனுமன் போன்ற தெய்வங்களின் படங்களை வைத்து வழிபாடு செய்வர். பூசை முடிந்ததும் விடிய விடிய ஆட்டமும் பாட்டும் நடைபெறும்.

***தெய்வங்களை வைத்திருக்கும் இடங்கள் :*** கோயிலுக்கு வெளியே வாசற்படியின் வலது புறத்தில் கணபதியின் படத்தை வைத்துப் பூசை செய்வர். இடது புறம் சற்றுத் தூரத்தில் கோயிலின் வெளியே மாரிக்கும், காளிக்கும் பூசை வைக்கின்றனர். கோயிலின் வலது புறம் சற்று தூரம் தள்ளி அம்மனுக்குப் பூசை வைக்கின்றனர். கோயிலுக்கு வெளியே பின்புறத்தில் ***மாடனுக்கும், கறுப்பசாமிக்கும்*** பூசை வைக்கின்றனர்.

## குடிக் கோயிலும் தெய்வ வழிபாடும்

இரண்டாம் நாள் அதிகாலையில் குடியிலுள்ள அனைவருமே குடிக்கோயிலுக்கு வந்து விடுகின்றனர். எல்லோருமே புத்தாடை உடுத்திப் புதுப் பொலிவு பெறுகின்றனர். சுமார் பத்து மணி அளவில்

பூசை ஆரம்பம் ஆகிறது. பூசையின் தொடக்கமாகக் கோயிலுக்கு வெளியே இருக்கும் கணபதிக்குப் பூசை செய்கின்றனர்.

***கணபதி பூசை :*** பொதுக் கோயிலில் வைக்கப்பட்டிருக்கும் கணபதிக்குச் செய்யும் பூசையைப் போலவே குடிக் கோயிலில் இருக்கும் கணபதிக்கும் பூசை செய்யப்படுகிறது. பூசையின் போது சங்கு ஊதப்படுகிறது. மணிகளையும் ஒலிக்கின்றனர். ஒவ்வொரு தெய்வத்திற்கும் பூசை செய்யும் முன்னர் பூசாரி எந்தத் தெய்வத்திற்குப் பூசை இடப்போகின்றாரோ அந்தத் தெய்வத்தின் பெயரைச் சொல்லிக் கும்பிடச் சொல்கின்றார். இந்தப் பூசைகள் முடிந்த பின்னர் பூசாரி சூடம் ஏற்றிய தீபத்தை எல்லோரும் தொட்டுத் தொழும்படி மக்களிடையே கொண்டு வருவார்.

***அம்மன் பூசை (கன்னி பகவதி) :*** அம்மனுக்கு ஒன்பது இலைகளில் பூசைப் படையல் வைக்கின்றனர். கூடவே ஒன்பது இலைகளிலும் முழுத் தேங்காயினையும் வைக்கின்றனர். அதில் ஒன்றின் கண்ணைத் துளைத்துக் கூர்மையான ஓர் ஈற்றைத் தண்டில் வெள்ளைத் துணியால் கட்டப்பட்ட பந்தத்தினைக் கொளுத்தி வைக்கின்றனர். வேறு ஓர் இலையில் மூன்று பந்தங்களை மட்டும் பொருத்தி வைக்கின்றனர். அம்மனைத் தொழ வரும் பெண்கள் மஞ்சள் நீரைக் கொண்டு வருகின்றனர். மற்ற பூசை முடிந்த பின் பூசாரி அருள் வந்தவர் போல அங்கு குழுமி நிற்கும் அனைவர் மீதும் மஞ்சள் நீரைத் தெளிப்பார். இதனை ***மஞ்சணநீர் தெளித்தல்*** என்கின்றனர். இறுதியில் சூடம் கொளுத்தி அம்மன் பூசையினை முடிக்கின்றனர்.

***காளி – மாரி பூசை :*** காளி - மாரி ஆகிய தெய்வங்களைப் பந்தலுக்கு வெளியே ஒரு மரத்தின் அடியில் அம்மனுக்கு எதிர்ப்புறத்தில் வைத்து வழிபடுகின்றனர். காளிக்கும் மாரிக்கும் ஒரே இடத்தில் இரண்டு இலைகளையிட்டு அதில், பழம், வெற்றிலை, பாக்கு, பொங்கல் சோறு போன்றவற்றை மட்டும் வைத்துப் பூசை செய்கின்றனர். பூசையின் போது ஏராளமான கோழிகளைப் பலியிடுகின்றனர். முதலில் ஒரு கோழியைக் காளிக்கும், அடுத்து மாரிக்கும் திரும்பக் காளிக்கும் மாறி மாறிப் பலியிடுகின்றனர். (கள ஆய்வின் போது 28 கோழிகளை நேர்ச்சையாகப் பலி கொடுத்ததைப் பார்க்க முடிந்தது) நோய் நொடியிலிருந்து தங்களைக் காப்பாற்றும் பொருட்டே இவ்வாறு பலி நேர்ச்சை இடுகின்றனர்.

***கறுப்பசாமி பூசை :*** நான்கு இடங்களில் அடுப்பைக் கூட்டி நான்கு பானைகளில் (சிறிய) பொங்கல் வைக்கின்றனர். பின்னர் நான்கு இலைகளையிட்டு அதில் பொங்கல் சோற்றை எடுத்து வைக்கின்றனர். அடுத்து ஆட்டுக்கடாவைப் பலி கொடுக்கின்றனர். ஆட்டுக் கடாவின்

இரத்தம் பொங்கல் வைக்கப்பட்டிருக்கும் இலையின் மீது விழும்படி செய்கின்றனர். (கள ஆய்வின் போது ஐந்த ஆட்டுக்கடாக்களைப் பலி கொடுத்ததைக் காண முடிந்தது). மறுநாள் ஆட்டுக்கடாவைக் கூறு போட்டு எல்லோரும் பகிர்ந்து கொள்கின்றனர்.

***சூரியன் இந்திரன் - சக்தி, பகவான் - பூசை :*** சூரியனைத் தெய்வமாக வழிபடும் இம்மக்கள் தங்களைச் ***சூரிய குலத்தவர்*** என்கின்றனர். பொங்கலின் போது பிற தெய்வங்களுக்குப் பூசை செய்வது போன்ற சூரியபகவானுக்கும் பூசை செய்கின்றனர். இது போலவே இந்திர பகவானுக்கும், சக்தி, பகவானுக்கும் பூசை செய்கின்றனர்.

***சாஸ்தா பூசை; வனதெய்வ பூசை :*** சாஸ்தா சாமியை நடைபாதை ஓரத்தில் வைத்துள்ளனர். வழியே வருவாரும், போவாரும் அருகில் நிற்கும் செடிகளின் இலையைக் கிள்ளியெடுத்து சாஸ்தா சாமிக்கு இடுகின்றனர். ஒரு முறை வலமாகவும் சுற்றி வருகின்றனர். இவ்வாறு செய்வதால் செல்லும் காரியம் நன்முறையில் நடைபெறும் என்று நம்புகின்றனர். பொங்கலின் போது ஓர் இலை இட்டு பொங்கலுடன் பூசை சாமான்களை வைத்து வழிபாடு செய்கின்றனர். ***வனதெய்வ பூசையாக*** : ஏழுமலை ரெங்கநாதன், கட்டளை மாரியத்தா (சின்னாத்தா) விளக்கு நாச்சியம்மா, பட்டாளத்தம்மா, மணியாச்சியம்மா, திருமூர்த்தி ஆண்டவர், போன்ற வன தெய்வங்களுக்கும் பொங்கலிட்டுப் பூசை செய்கின்றனர்.

## தீ மிதித்தல்

பொங்கல் விழாதொடங்குவதற்கு முன்னரே மூன்று மாதம் விரதமிருந்து ஆணும், பெண்ணும் தீவளர்த்து தீக்கனலின் மீது நடந்து வருவர். இதற்கு தீ மிதித்தல் என்று பெயர். தீராத நோய் வந்தாலோ, துன்பம் வந்தாலோ அதிலிருந்து விடுபட வேண்டி இந்நேர்த்தியினைச் செய்கின்றனர்.

## பொங்கல் வழிபாடும், கோமாளியும்

பொங்கல் வழிபாட்டின் போது முதுவான் மக்கள் கோமாளிகளைத் தேர்வு செய்கின்றனர். இது பண்டைக் காலத்தில் முருகக் கடவுள் கோமாளி வேடம் புனைந்து எல்லோருக்கும் இன்பம் அளித்த நிகழ்ச்சியினை நினைவு கூரும் பொருட்டு தங்கள் முன்னோர் செய்து வந்ததை இவர்கள் ஒரு மரபாகக் கடைப் பிடித்து வருவதாகக் கூறுகின்றனர். முதற் பூசையன்று கோமாளியைத் தலைமைப் பூசாரி தேர்வு செய்கின்றார். பூசை நடக்கும் வேளை பூசாரியின் மீது அருள் வர, அங்கு கூடி நிற்பவர்களில் ஒருவரைக் கோமாளி என்று சொல்லி

பூசாரி தொட்டுவிட்டால் பின்னர் அவர் கோயில் கோமாளி ஆகிவிடுவார். கோயில் கோமாளி வேறுபல ஊர்க் கோமாளிகளைத் தேர்வு செய்வார். கோயில் கோமாளி யாரையாரைத் தொடுகின்றாரோ அவர்கள் எல்லோரும் ஊர்க் கோமாளி ஆகிவிடுவார்கள். கோயிலில் விழா முடியும் வரை மாமிசம் உண்ணக் கூடாது. குளிக்கக் கூடாது, பல் துலக்கக் கூடாது, ஆடை மாற்றக் கூடாது, யாரிடமும் தங்கள் உண்மையான குரலில் பேசக் கூடாது. ஆனால் பல வேடங்களில் நடக்கலாம், நகைச்சுவை பேசலாம். இதைப் போலவே ஊர்க் கோமாளிகளும் நடப்பர். இவர்கள் குடியிலுள்ள எல்லோர் வீட்டிற்கும் செல்லலாம். எதை வேண்டுமானாலும் செய்யலாம். ஊரிலுள்ளோர் இவர் பேச்சையோ, கோலத்தையே கண்டு நகைக்கும்படி நடந்து கொள்வர். ஆனால் கோயில் கோமாளி கோயிலில் மட்டுமே நகைச் சுவையைக் காட்டுவர். பத்து நாள் பூசையில் இரண்டாம் நாளில் முக்கியமான பூசைக் கருமங்கள் நடைபெறுகின்றன. பத்து நாட்களுமே இரவு வேளைகளில் இசைக் கருவிகளை முழக்கி இன்னிசைக்கேற்ப ஆண்களும் பெண்களும் சேர்ந்து ஆடிப்பாடி மகிழ்கின்றனர். பத்தாவது நாளோடு பொங்கல் வழிபாடும். பொங்கல் விழாவும் இனிதுடன் நடந்து முடிகின்றன. ஓர் ஆண்டு சம்பாதிக்கும் பணத்தின் பெரும் பகுதியும் இந்த பொங்கல் வழிபாட்டிற்காக இம்மக்கள் செலவு செய்கின்றனர்.

நூற்றாண்டுகளாகக் காட்டில் வாழ்ந்து வந்த போதும் தங்கள் முன்னோர்கள் விட்டுச் சென்ற வழிபாட்டு மரபுகளை மறக்காமல் கடைப்பிடித்து வருவது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். பொங்கலைத் தைமாதம்முதல் தேதிதான் கொண்டாட வேண்டும் என்ற கட்டாயமின்றி தைமாதம் எப்பொழுது வேண்டுமானாலும் கொண்டாடலாம் என்பது சிந்திக்கத்தக்கது. பொங்கல் விழாவோடு வழிபாட்டு மரபுகளை இணைத்திருப்பது ஆழ்ந்த இறை பக்தியைக் காட்டுவதாக உள்ளது. காட்டில் வாழும் இப்பழங்குடிகள் பெரும் தெய்வங்களையும், சிறு தெய்வங்களையும், இயற்கையினையும், வன தெய்வங்களையும் வழிபாடு செய்வது மேலும் ஆய்வுக்குரியது. சாஸ்தாசாமி வழிபாடும், பொங்கலின் போது பலி இடுவதும் கோமாளியின் பங்கும் சில குறிப்பிடத்தக்க அம்சங்களாக உள்ளன.

# பத்திரகாளியம்மன் வழிபாடும் பண்பாட்டு மரபுகளும்

**முனைவர் கு.கதிரேசன்**, எம்.ஏ.,எம்ஃபில்.,பிஎச்.டி.,
*ஆதித்தனார் கல்லூரி, திருச்செந்தூர்-628 216.*

நாட்டுப்புற மக்கள் வழிபாட்டில் பெண்தெய்வ வழிபாடு மிக அழுத்தமான இடத்தைப் பிடித்திருப்பதை அம்மன், காளி, கன்னி, குமரி, இயக்கி ஆகிய பெண்தெய்வ வழிபாட்டின் ஆளுமை நன்குணர்த்தும். இவை மணம் புரியாத தேவியராகக் கருதப்படுகின்றனர். இத்தேவியரில் பல, கடவுளரோடு இணைப்புப் பெற்றுவிட்டன ; காளி தனியாகவே வணங்கப்பட்டது. அது சைவ சமயத்தில் பார்வதியோடு சேர்ந்து ஒரு அம்சமாகிவிட்டது என்பார் நா.வானமாமலை (தே.லூர்து:1997:406) தேவியரில் பெரும்பாலானவை மூர்க்க தேவதைகளே என்பது நா.வானமாமலையின் கருத்து. இவை பெண்ணாதிக்கச் சமுதாயத்தின் எச்சமாக நிற்கின்றன என்பர் (1997:404). சமூக மேலாதிக்க உணர்வு இன்றும் இருந்தாலும் இன்று பெண்தெய்வங்களையெல்லாம் பார்வதியின் அவதாரங்களாகவும் ஏனைய ஆண்தெய்வங்கள் சாபம் பெற்று மண்ணில் பிறந்தவர்களாகவும் குறிப்பிட்டு இந்துமயமாக்கும் ஒரு படிமுறையும் நடைபெற்று வருகின்றது. அந்தவகையில் பத்திரகாளியம்மன் வழிபாட்டையும் வழிபாட்டு முறைகளையும் இக்கட்டுரை ஆராய முற்படுகின்றது.

பெண் தெய்வங்கள் அம்மன் என்னும் பெயருடன் வணங்கப்பட்டு வருகின்றன. அந்தவகையில் முத்தாரம்மன், முத்தாலம்மன், மாரியம்மன், காளியம்மன், பத்திரகாளியம்மன், தோட்டுக் காளியம்மன், அங்காளம்மன், குமரியம்மன், பேச்சியம்மன், காட்டாளம்மான், சந்தனமாரியம்மன் என்னும் பலவகையான அம்மன் தெய்வங்கள் பெண்தெய்வங்களின் பிரதானமாக விளங்குகின்றன. இவ்வம்மன்களுள் சில வானுலகில் கைலாயத்தில் பிறந்தவை ; வேள்வித்தீயில் பார்வதியின்வியர்வைத் துளிவழித் தோன்றியவள் முத்தாரம்மன், காளியம்மனும், பத்திரகாளியம்மனும் சிவனின் வலக்கண்ணிலிருந்து அல்லது ஒருபானை அல்லது முட்டைக்குள்ளிலிருந்து பிறக்கின்றனர். உச்சிமாகாளி விட்டுணுவால் கொல்லப்படும் இரணிய கசிபுவின் குருதியில் பிறக்கின்றாள் என்பார் தே.லூர்து(1997:404). இவ்வம்மன்கள் பழிவாங்கும் தன்மை கொண்டவை

என்பது ***என்போர்***(Elmore) ***ஒப்பெரிட்*** (Oppert) ***ஏ.கே.இராமானுஜம்*** ஆகியோரின் கருத்து. கிராம தேவதைகளைப் பெருந்தெய்வ இந்து சமய வழிபாட்டுக்குள் அடக்கும் நோக்கத்தோடு அவற்றைக் காளியின் அவதாரம் அல்லது சிவனின் உறவினர் என்றும் இணைக்கின்றனர் (1997:404). இந்தப்பின்னணியில் பத்திரகாளியம்மன் தொன்மமும் வழிபாட்டு முறைகளும் ஆராயப்பட்டால் நாட்டுப்புற மக்களின் மறைந்து கிடக்கும் பல பண்பாட்டுக்கூறுகள் இனம் காணப்படும். அது பல அரிய ஆய்வுகளுக்கு வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை.

வலங்கைநூல் அல்லது வலங்கை சரித்திரம் என்னும் ஏட்டுச்சுவடி பத்திரகாளி சிவபெருமாளின் வாயினுள்ளிருந்து பிறந்தவள் என்று குறிப்பிடுகின்றது(பதிப்பிக்கப்படாத ஓலைச்சுவடி) சிவபெருமான் பாற்கடலைக் கடைந்து அமுதம் எடுக்கப் பணித்தார். தேவர்களும் அசுரர்களும் பத்துமுறை பாற்கடலைக் கடைந்தனர். முதல்முறை அமிர்தம் கிடைத்ததாகவும் தொடர்ந்து பல அதிசயப் பொருடகள் தோன்றியதாகவும் பத்தாவது முறை விசம் தோன்றியதாகவும் குறிப்பிடுகிறது. பத்தாவது முறையாகத் தோன்றிய விசத்தை மண்ணில் போட்டால் மண் எரிந்து போய் உலக உயிர்கள் அழிந்து உலகே நின்று போய்விடும். இக்கருத்தோட்டத்தினடிப்படையில் பத்தாவது முறை பாற்கடலைக் கடையும்பொழுது தோன்றிய விசத்தை வாய்க்குள் போட்டு உடலுக்குள் அடக்க முயன்றார். பார்வதிதேவி ஓடிச்சென்றுவிசம் சிவனையே அழித்துவிடும் என்று கருதி கண்டத்தைப் பற்றிகொள்ள விசம் வாய்க்குள் நுழையமுடியாமல் அடைபட்டு வெளியேறியது. அதனை வெளியேற்றும்பொழுது வாயின் வழியாகக் கொடூரமான பெண் உருவம் கையில் வாளாயுதத்துடன் பிறந்தது (பத்திரம் என்பது வாளாயுதத்தைக் குறிக்கும்.) எனவே, பத்திரம் எனப்படும் வாளாயுதத்துடன் பிறந்தமையாலும் கொடிய காளி போன்றிருந்தமையாலும் அவளைப் பத்திரகாளி என்றனர். ஆய்வுக்களத்தில் பனை ஓலைக்குப் பத்திரம் என்னும் பெயரும் உண்டு. பனைமரத்தின் ஓலை ஏடு தயாரிக்கப் பயன்படும் முக்கியத்துவத்தினாலும் அம்மரத்தை உருவாக்கியவள் பத்திரகாளி என்னும் தன்மையினாலும் பத்திரம் என்று எடுத்தாளப் பட்டிருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது. புராணக் கருத்து முன் கூறப்பட்ட பத்திரகாளியம்மன் தோற்றம் பற்றிய நிகழ்வுகளிலிருந்து வேறுபட்டு அமைவதாக அமையலாம். எனவே பத்திர காளியம்மன் சிவனின் வலக்கண்ணிலிருந்து தோன்றியவள், சிவனின் வாயிலிருந்து தோன்றியவள் என்னும் இருவேறு கருத்துக்கள் இருப்பினும் சிவனின் உடலிலிருந்து தோன்றியவள் என்னும் கருத்து அடிப்படையாக அமைகிறது.

சிவனிலிருந்து தோன்றிய பத்திரகாளி, எட்டுருணி காளி படைகள் அதாவது ஒரு குருணி எள்ளை எடுத்து எண்ணினால் எத்தனை எள் இருக்குமோ அத்தனை காளிகள் படைவீரர்களாக வேண்டும் என்றும், அப்படையைக் கண்டால் காலனும் நடுங்க வேண்டும் என்றும் அதன்மூலம் குடிமக்களைக் காக்க வேண்டும் என்று பக்கத்துணையாக வேதாளம் ஒன்று வேண்டும் என்றும் தன்னை எதிர்த்தவர்களை அழிக்கும் வல்லமை வேண்டும் என்றும் வணங்கியவர்களை இரட்சித்து அருள வேண்டும் என்றும் புட்டாபுரம் என்னும் இடத்தில் கோயில் கொள்ள வேண்டும் என்றும் சிவபெருமானிடம் வேண்டி நின்றாள். சிவபெருமானும் அவ்வாறே ஆகட்டும் என்று கட்டளையிட அத்தனை ஆற்றல்களையும் பெற்று புட்டாபுரம் என்னுமிடத்தில் அவள் கோயில் கொண்டாள். இத்தொன்மைக் கூறு கொல்லும் தாயார் அல்லது அல்லவை செய்யும் தாயாரின் பண்பாட்டுக்கூறுகளுடன் பொருந்தி நிற்கின்றன. எனவே, பத்திரகாளியம்மன் பெண்ணாதிக்கச் சமுதாயத்தின் எச்சமாக எழுந்த வழிபாட்டுக்குறியீடு எனலாம்.

கன்னிமைத் தன்மை கெடாத நிலை, அடிப்படை தனி உரிமை, நெருக்கடி விளைவிக்கும்பாங்கு, துன்பத்தைக் கொடுத்து வழிபடத் தூண்டும் தன்மை, நோய்களைக் கொடுத்து நீக்கும் போக்கு, கிராம எல்லைக்கு வெளியில் கோயில் கொள்ளும் நிலை, கரடு முரடாக வெட்டப்பட்ட படிமங்கள், பெரும்பாலும் கிராமத்துடனோ, இனத்துடனோ தொடர்பு கொள்ளும் தன்மை, அச்சமூட்டுதல், அருள்பாலித்தல் ஆகிய இருமுகப் பண்பு கொண்ட நிலை, சடங்கில் ஒரு பகுதியாகத் தெய்வமுறல் நிகழும் பாங்கு, இரத்த பலியிடும் வழக்கு, பிராமணர் அல்லாதார் பூசையிடும் வழக்காறு ஆகிய பல்வேறு பண்பாட்டு மரபுகளும் வழிபாட்டுக் கூறுகளும் பத்திரகாளியம்மன் வழிபாட்டிலும் வெளிப்பட்டு நிற்பதால் இத்தெய்வ வழிபாட்டை அல்லவை செய்து ஆட்கொள்ளும் தாயார் என்னும் நிலையில் அடக்குவது ஏற்புடையதாகும்.

பத்திரகாளியம்மன் வழிபாடு நெல்லை, குமரி, தூத்துக்குடி மாவட்டங்களில் மிக அதிகமாக வழக்கில் உள்ளது. அத்தோடு நாடார் இனத்தவர்கள் அதிகமாக இத்தெய்வத்தைக் குலதெய்வமாகவும், ஊர்த்தெய்வமாகவும் ஏற்று வழிபடும் வழக்கைக் காணமுடிகின்றது. இம்மக்கள் தமிழகத்தில் தென்பகுதியில் அதிகம் வாழ்வதால் அப்பகுதிகளில் இத்தெய்வ வழிபாடு அதிகமாகப் பரவியிருக்கும் நிலை ஏற்பட்டது. நாடார் இனமக்கள் தங்கள் இனத் தெய்வமாகப் பத்திரகாளியம்மனை வழிபடுவதால் அவ்வினத்தின் சாதிய பண்பாட்டு

மரபிற்கும் பத்திரகாளியம்மன் வழிபாட்டிற்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதை இனம்காண முடிகிறது. பத்திரகாளியம்மன் வழிபாடும் அதில் இடம்பெறும் பண்பாட்டுக் கூறுகளும் நாடார் சமுதாயத்தின் முழுமையான வெளிப்பாடுகளாகவே அமைகின்றன. இத்தொடர்பு குறித்த புராணக்கதை வலங்கை நூல் எனனும் எட்டுச்சுவடியில் இடம்பெறுகிறது. அதோடு அப்பகுதியில் வழிபாட்டுச் சடங்கு நிகழ்த்திச் சுவையான வில்லிசையில் பாடப்படும் பத்திரகாளியம்மன் கதைப்பாடல் இவ்வம்மனைப் பற்றிய முழுமையான செய்திகளையும் நம்பிக்கை, சடங்குகள், வழக்காறுகளையும் படம்பிடித்துக் காட்டுகின்றன.

சக்தியின் தூண்டுதலினால் சிவபெருமான் நடனம் புரிந்தார். அந்நடனம் ருத்திரதாண்டவமாக முடிந்து மூவுலகையும் அழித்தது. மூவுலகும் அழியக் காரணமாயிருந்தமையால் சக்தி பாவ விமோசனம் வேண்டினாள். பூவுலகில் சென்று நந்தவனம் அமைத்து அதில் தினமும் 12 கூடை மலர்கள் எடுத்து இறைவனாகிய சிவபெருமானுக்குப் பாத பூசை செய்து 12 ஆண்டுகள் தொடர்ந்து வழிபட்டு வரவேண்டும். ஒருநாள் ஒரு பூ குறைந்தாலும் மறுபடியும் முதலிலிருந்தே மலர்பூசை நடத்த வேண்டும். இத்தகைய கடுமையான நிபந்தனையுடன் சக்தி பூவுலகு வந்து நந்தவனம் அமைத்து தினமும் பன்னிரு கூடை மலர்களைப் பறித்து சிவபெருமானுக்குப் பாதபூசை செய்து வருகின்றாள். இந்நிலையில் ஒருநாள் தேவலோகத்திலிருந்து உலவுவதற்காகச் சென்ற சப்தகன்னியர்கள் நந்தவனத்தைக் கண்டு மிக விரும்பி பூலோகத்தில் இறங்கி நந்தவனத்தில் உள்ள மலர்களைப் பறித்துத் தலையில் சூடிக்கொண்டு போய் விடுகின்றனர். சிவன் பூசைக்கு மலர்கள் இல்லாமையை எண்ணித் தன் தமையனான கண்ணனிடம் முறையிட்டாள் சக்தி. மாய கண்ணனோ, மாய மலர்களை உருவாக்கிக் கொடுக்க சிவபூசையை முடிக்கிறாள் சக்தி. மறுபடியும் திருட்டுப் போய்விடாதவாறு தடுக்க கண்ணன் நந்தவனக் காவலாக புன்னைமரத்தில் மறைந்திருந்தான். மறுநாளும் சப்தகன்னியர் மலர் பறிக்கப் புறப்பட்டனர். அங்குள்ள நீர்ச்சுனைக்கருவில் ஆடைகளைக் களைந்து வைத்துவிட்டு நீராடுகின்றனர். இதனைக் கண்ட கண்ணன் அவர்கள் ஆடைக்ளைக் கவர்ந்து புன்னைமரத்தில் மறைத்து வைத்தான். நீராடி விட்டு வெளியேறிய சப்தகன்னியர் ஆடையின்றி தேவர் உலகம் செல்ல முடியாமல் அங்கேயே தங்கினர்.

வாடைக்காற்யையும் சாரல் மழையையும் உருவாக்கினான் கண்ணன். அதில் அகப்பட்ட கன்னியர் குளிரில் நடுங்கிப் போயினர். அச்சமயம் பார்த்துக் கண்ணன் ஒரு இடத்தில் நெருப்பாக மாறுகின்றான். குளிரில் நடுங்கிய சப்தகன்னியர் நெருப்பைக் கண்டதும் மிகுந்த

வேட்கையுடன் ஒருசேரக் கட்டிப் பிடித்தனர். அதனால் ஏழு பெண்களும் ஒரே சமயத்தில் கருத்தரித்தனர். *ரிஷி கர்ப்பம் ராத்தங்காது* என்ற கூற்று மொழிக்கேற்றவாறு ஏழு கன்னிப் பெண்களும் அன்றே ஏழு ஆண் குழந்தைகளைப் பெற்றெடுக்கின்றனர். குழந்தைகளுடன் தேவலோகம் செல்ல முடியாததால் கண்ணனைத் துதித்து வணங்குகின்றனர். அவனிடம் முறையிட்டு ஏழு குழந்தைகளையும் பராமரிக்குமாறு வேண்டி ஆடைகளைப் பெற்றுச் செல்கின்றனர். அப்பொழுது அப்பெண்கள், இன்று கண்ட திருமுகத்தை இனிமேல் பார்க்க மாட்டோம் என்று சூளுரைத்து விட்டுப்புறப்பட்டனர்.

ஏழு குழந்தைகளையும் புட்டாரபுரத்தில் எழுந்தருளியிருக்கும் பத்திரகாளியிடம் அடைக்கலப்படுத்தி அவர்களை வளர்த்து ஆளாக்குமாறு வேண்டுகிறான் கண்ணன். அவன் கோரிக்கையை ஏற்று ஏழு ஆண்குழந்தைகளையும் பத்திரகாளியம்மன் வளர்க்கிறாள்.

*பொங்கு சமுத்திரம் தென்கரையோரம்*
*புணல் கரைமண் எங்கும் திசைஎட்டும்*
*பேர் தொனிக்கும் எங்கள் குறவர் கான்*
*ஈன்றால் இளம் கன்றுக்கே பாலளிப்பாய்*
*கன்றால் கறந்த கற்கண்டு மேனியழகன்*
*ஈந்தாள் பராசக்தி பத்திரகாளிபிள்ளை*
*விவசாய சத்திரியர் என்பர் காண்* (வலங்கை ஏடு)

என்னும் ஏட்டுச்சுவடி அடிகள் விவசாய சத்திரிய பிள்ளைகளாக நாடார் இனத்தைக் கூறி அவ்வினத்தினரின் தாயாகிய பத்திர்காளியம்மனின் புராண பண்பாட்டுக்கூறுகளை வெளிப்படுத்துவதாக அமைகின்றது.

சிறுவர்களுக்குப் பன்னிருவயது நிரம்பியபொழுது விளையாடப் புறப்பட்டனர். அப்பொழுது பத்திரகாளி அவர்களிடம் வட்திசை செல்ல வேண்டாம் ; முனிவர்கள் தவம் செய்து கொண்டிருப்பர் என்று எச்சரிக்கிறாள். ஆனால், சிறுவர்கள் வடதிசையை நோக்கிச் செல்கின்றனர். முனிவர் ஒருவர் தவம் செய்து கொண்டிருந்தார். புற்றிலிருந்த ஒரு பாம்பை அடித்து முனிவரின் கையில் மாலையாகப் போட்டு விளையாடினர். தவம்கலைந்து கோபம் உற்று ஏழுபேர் அண்ணன் தம்பிகளும் ஐக்கியமின்றி இணைபிரிந்துபோவீர்கள் என்று சாபமிட்டார். தொடர்ந்து ஏழுபேரில் இருவர் சோழராஜன் ஆணைக்கு மண் சுமக்க மறுத்ததால் கொல்லப்படுகின்றனர்.

இவ்வாறு ஏழு ஆண் மக்களில் இருவர் இறந்திட மீதமுள்ள ஐவரில் முதலாம் மகன் குடிமகனாகி சக்திக் கொண்டு சேவை செய்யும்

நாளிதனாகவும், அடுத்தவன் நாட்டை ஆளும் அரசனாகவும் மூன்றாமவன் அமைச்சனாகவும் நான்காமவன் விவசாயக் கூலியாகவும் ஐந்தாமவன் பனை மரத்தைப் பராமரித்து விவசாயம் செய்யும் விவசாயியாகவும் மாற அன்னை பத்திரகாளி காத்து அருள் பாலித்து வரலானாள். என்று வலங்கை நூல் என்னும் எட்டுச் சுவடி வாயிலாக பத்திரகாளியம்மன் பற்றிய புராணக்கூறுகளை விளக்கிக் கொள்ள முடியும்.

பத்திரகாளியம்மன் தெய்வமும் புராணக் கூறுகளும் வழிபாட்டு வழக்காறுகளும் தற்போதைய சமூக அமைப்பில் நாடார் இனத்தவர்களோடு தொடர்புடையாகவே அமைகின்றன. நாடார் சமூகத்தவர்களே பத்திரகாளியம்மனை குலதெய்வமாகவும், ஊர்த் தெய்வமாகவும் வைத்துப் போற்றுகின்றனர். முத்துக்குட்டி சுவாமியை அடிப்படையாகக் கொண்ட அய்யா வழிபாட்டிலும் பத்திரகாளியம்மனுக்கு முக்கிய இடம் கொடுக்கப்படுகிறது. இதற்குக் காரணம் பத்திரகாளியம்மனை வழிபடும் மக்களுக்கும், அம்மனுக்கும் உள்ள தொடர்பே ஆகும். இவ்வழிபாட்டில், பத்திரகாளியம்மன் ***புத்தித்தாய்*** என்றும், ***பத்தரத்தாள்*** என்றும், ***பத்திரகாளி*** என்றும் தனி விக்கிரமம் அமைத்து வழிபடப் படுகிறாள். நாடார் இனத்தவர்கள் வாழும் பல கிராமங்களில் ஊரின் புறத்தே, கோயில் எழுப்பப்பட்டு வழிபடப்படுகிறாள். அய்யாவழிபாட்டில், அவர் எழுதிய அகிலத்திரட்டில் பத்திரகாளியைத் ***தம்கை*** என்று பல இடங்களில் விளக்கினார். பத்திரகாளியின் தமையன் திருமால் அத்திருமாலின் அவதாரமே நாராயணராகிய தான். எனவே, தன்னை திருமாலாக எண்ணிக் கொண்ட முத்துக்குட்டிசாமி தன் குலதெய்வமாகப் போற்றி வணங்கிய பத்திரகாளியைத் தங்கா்ய் என்று விளித்தார். அய்யா வைகுண்ட சுவாமிக்கும், பத்திரகாளிக்கும் உள்ள சகோதர உறவு நாடார் சமூகத்திற்கும் பத்திரகாளியம்மனுக்கும் உள்ள உறவை வெளிப்படுத்துவதாக அமைகிறது. மேலும் பனை மரங்களை உருவாக்கியதும் ஒரு மகன் பதனீர் எடுக்க உதவியதும் அவனுக்கு அருள்வாலித்ததும் சஞ்சீவீ மருந்தைக் கொடுக்க முயன்ற அன்பும் பனைத் தொழிலைப் பூர்வீகத் தொழிலாகக் கொண்ட நாடார் இனத்தவருக்குப் பத்திரகாளியம்மன் அருள்பாவித்த நெறியும் இத்தெய்வத்தை நாடார் இனத்தவர்களே குலதெய்வமாகவும் ஊர்த் தெய்வமாகவும் வைத்து வழிபடும் தன்மையை உறுதிப்படுத்துகின்றன.

# தேவனூர்புதூர் காளியம்மன் : வழிபாட்டு மரபுகள்

**முனைவர் ச. கலைச்செல்வன்**, எம்.எ., எம்.ஃபில்.,பிஎச்.டி.,
*அரசு கலைக்கல்லூரி, உடுமலைப்பேட்டை.*

உடுமலை வட்டாரத்தில் வழிபடப் பெறும் காளியம்மன் தெய்வத்தின் வழிபாட்டு மரபுகளை விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது. காளி என்னும் பெயருக்கு கருத்தவள் அல்லது இருண்டவள் என்று பொருள் வழங்குகிறது. காளியம்மன் என்னும் தெய்வம் பாலை நிலத்ததிற்குரிய தெய்வமாகக் கருதப்படுவதால் ***காடு கிழவோள்*** என்று அழைக்கப்படுகிறாள் (1: 58). காளியம்மன் என்ற தெய்வம் என்றும் இளமையான தோற்றத்தினை உடையவள் என்ற கருத்தினுக்கு ஏற்ப ***கன்னிகுமரி*** என்ற பெயரும் பெற்று விளங்குகிறாள். இத்தெய்வம் அனைவரையும் காத்து தாய் போன்று விளங்குவதால் அம்மை என்ற பொருளில் வழங்கினர். அம்மன் என்ற சொல் அம்மா என்ற சொல்லின்று பிறந்ததாயினும் தெய்வத்தன்மை பொருந்தியவர்களையே அம்மன் என்று வழங்குவது மரபாகக் காணப்படுகிறது. (2: 29) காளியம்மன் தெய்வம் பெரும்பாலும் ஒவ்வொரு ஊரிலும் எல்லைகளில் அமைத்து வழிபடுவது மரபாக உள்ள நிலையில் உடுமலை வட்டராத்தில் தேவனூர்புதூர் என்ற கிராமத்தில் எழுந்தருளியிருக்கும் காளியம்மன் தெய்வமும் ஊரின் கிழக்கு எல்லையில் ஒதுக்குப்புறத்தில் அமைந்தள்ளது. இத்தெய்வம் தன் கற்பினைக் காக்கும்பொருட்டு கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி வந்து இவ்வூரில் பதிகொண்டதாகக் கூறப்பட்டு அனைத்து மக்களும் வழிபடப் பெறும் பொது தெய்வமாக விளங்குகிறது. இத்தெய்வம் இவ்வூரின் காவல் தெய்வமாகவும், பிணி அகற்றும் தெய்வமாகவும், வேட்டைத் தெய்வமாகவும் வளமைத் தெய்வமாகவும் பல வடிவுகளில் காட்சி தந்து விளங்குகிறது.

## திருவிழா கொண்டாடும் முறைகள்

*தீபம் போடுதல் :* காளியம்மனுக்கு நடைபெறும் திருவிழாக்கள் பெரும்பாலும் வைகாசி மற்றும் பங்குனி மாதங்களில் நடைபெறுகிறது. தெய்வத்திற்குத் திருவிழா எடுக்கும் பொருட்டாக ஊரில் உள்ள

பெரியவர்களும், முதன்மையானவர்களும் ஒருங்கு கூடித் திருவிழா நடைபெறும் நாளை முடிவு செய்வர். திருவிழா முடிவு செய்ததும் ஒரு நல்ல நாளில் ஊரில் உள்ள விநாயகர் கோயிலிலும், காளியம்மன் கோயிலிலும் தீபம் போடுதல் நடைபெறுகிறது. இதனை ***நந்தா தீபம் போடுதல்*** என்று வழங்குகின்றனர். இதன் பின்னரே திருவிழா நடைபெறுகிறது.

*நோன்பு சாட்டுதல் :* காளியம்மன் தெய்வத்திற்குத் திருவிழா எடுக்கும் பொருட்டுத் தீபம் போட்டு முடிந்ததும் ***நோன்பு சாட்டுதல்*** நிகழ்வு நடைபெறுகிறது. நோன்பு சாட்டுதல் பெரும்பாலும் வைகாசி மாதம் வளர்பிறை காலங்களில் அமையுமாறு பார்த்துத் திருவிழா கொண்டாடுகின்றனர். நோன்பு சாட்டுதலைப் பறையர் இனத்தவரே மேற்கொள்கின்றனர். அவர் தன்னிடம் உள்ள துடும்பினை ஒலித்து நோன்பு பற்றிய செய்தியை அறிவிக்கிறார். அவருக்கு வெற்றிலை, பாக்கு, பணம் போன்றவை கொடுத்து மரியாதை செய்யப்படுகிறது. இவ்வாறு நோன்பு சாட்டுதலை ஊர்மக்களிடம் தெரிவிக்கும் பழக்கம் முன்னரே இருந்துள்ளதைச் சிலப்பதிகாரச் செய்யுளால் அறியலாம். இதனை, ***கால்கோள் விழாவின் கடைநிலை சாற்றித் தாங்கிய கொள்கைத் தருநிலைக் கோட்டத்து*** (3 : 88) என்ற அடிகள் நமக்கு புலப்படுத்துகின்றன.

***தீர்த்தம் எடுத்து வருதல் :*** நோன்பு சாட்டுதல் என்ற நிகழ்வு முடிந்தவுடன் அடுத்த நாள் காலை தீர்த்தம் எடுத்து வருதல் என்ற நிகழ்வு அமைகின்றது. தீர்த்தம் எடுத்து வருதல் என்பது சாமியைப் புனிதப்படுத்துதல் என்பதன் பொருட்டும் மழை பெய்வதற்காக இறைவனை வேண்டியும் இச்சடங்கு மேற்கொள்ளப்படுகிறது. இந்நிகழ்வில் ஆண்களும், பெண்களும், சிறுவர்களும் அதிக அளவு பங்கு பெறுகின்றனர். தீர்த்தம் எடுத்து வரும்போது ஊரில் உள்ள பெண்கள் தீர்த்தம் எடுத்து வருபவரின் மேல் ஊர்க்கிணற்றில் இருந்து நீர் எடுத்து வந்து ஊற்றுவர். இங்கு தீர்த்தம் எடுத்து வருபவர் இறைவனாகக் கருதப்படுகிறார். அவரின் மீது நீர் ஊற்றி வழிபட்டால் மழை பெய்து ஊர் வளம் பெறும் என்பதன் அடிப்படையில் தீர்த்தம் எடுத்து வழிபடுதல் சடங்கு மேற்கொள்ளப்படுகிறது.

*கும்பம் தாளித்தல் :* நாட்டுப்புறத் தெய்வங்களுக்குத் திருவிழா நடைபெறும்போது ***கும்பம் தாளித்தல்*** என்ற ஒரு சடங்கு மேற்கொள்ளப்படுகிறது. இதனை ***சக்திக் கரகம் எடுத்தல்*** என்று வழங்குவர். திருவிழாவின் தொடக்கமான செவ்வாய்க்கிழமை இரவு சுமார் 10 மணிக்கு ஊர் மக்கள் அனைவரும் மேளதாளம் முழங்கப்

பொதுக் கிணற்றுக்குச் சென்று ஒரு புதிய மண் கலயத்தில் நீர் எடுத்து வந்து அதனை வேப்பிலைகளால் நீர் வெளியே வராதவாறு அடைத்து அதன் முன்புறம் அம்மன் உருவத்தினைப் பொறித்து அதனை மேளதாளம் முழங்கக் கோயிலுக்கு எடுத்து வருவர். இதனை ***எழுந்தருளச் செய்தல்*** (4) என்று குறிப்பிடுவர். சக்திக் கும்பம் எடுக்கும்போது ஒரு கிடாய் வெட்டுகின்றனர். *இதற்குச் சக்திக் கிடாய்* என்று பெயர். இவ்வாறு ஊர்க்கிணற்றிலிருந்து மேளதாளம் முழங்கக் கோயிலுக்கு எடுத்து வரும் கும்பம் அம்மனாகக் கருதப்பட்டுக் கோயிலினுள் வைத்து வழிபடப் பெறுகிறது. இவ்வாறு புனித நீர் எடுத்துச் சென்று வழிபடும் முறை முற்காலங்களில் *நிலவியிருந்தது என்பதனை,* ***புண்ணிய நன்னீர் பொற்குடத் தேந்தி மண்ணகம் மருள வானகம் வியப்ப*** (3 : 170) என்ற சிலப்பதிகார அடிகளால் அறியலாம்.

***திருக்கல்யாணம் நடைபெறல் :*** இவ்விழாவில் மனிதர்களுக்கு நடைபெறும் திருமண நிகழ்வைப் போன்றே கோயிலில் உறையும் தெய்வங்களுக்கும் திருமணம் நடத்தப்பெறுகிறது. திருமணத்திற்குத் தேவையான சீர்வரிசைப் பொருட்களான தேங்காய், பழம், பால், வேட்டி, துண்டு, மாங்கல்யம், பன்னீர், மஞ்சள் கயிறு, பூ, மலர் மாலைகள் போன்றவை அம்மன் முன்பு வைத்து வழிபாடு செய்யப்படுகிறது. பின்னர் கோயிலில் உள்ள கும்பத்தினைப் பெண்ணாகவும் சக்தி வேலினை ஆணாகவும் உருவம் செய்து மலர் மாலைகள் சூட்டி அலங்காரம் செய்யப்படுகிறது. பின்னர் பூசாரி சக்திவேலின் மீது உள்ள மஞ்சள் கயிற்றினை எடுத்துக் கும்பத்தில் கட்டுகிறார். இதனை திருக்கல்யாணம் நடைபெறுதல் என வழங்குகின்றனர்.

***மாவிளக்கு எடுத்தல் :*** நாட்டுப்புறத் தெய்வங்களுக்குத் திருவிழா நடைபெறும்போது மக்கள் மாவிளக்கு எடுத்து வழிபடுகின்றனர். பச்சரிசியினை மாவாக இடித்து அதனுடன் வெல்லப்பாகுவினைச் சேர்த்து அதனைச் செவ்வகமாகவோ அல்லது சதுரமாகவோ உருவம் செய்து அதன் மேற்புறத்தில் வண்ணக் காகித மலர்களையோ அல்லது பூவினையோ வைத்து அவற்றின் மையப் பகுதியில் நெய்யூற்றித் தீபம் போட்டு மேளதாளம் முழங்கக் கோயிலுக்கு எடுத்து வந்து வழிபடுதலைக் குறிக்கிறது. இதனை மாவிளக்கு எடுத்தல் என்றும் விளக்கு மாவு எடுத்தல் (5) என்றும் வழங்குகின்றனர்.

***பொங்கல் வைத்தல் :*** நாட்டுப்புறத் தெய்வங்களை வழிபடும் பொருட்டு திருவிழா நடைபெறும் நாட்களில் மக்கள் தங்கள் இல்லங்களில் பொங்கல் வைத்து அதனைக் கோயிலுக்கு மேளதாளம் முழங்க எடுத்து வந்து இறைவனுக்குப் படைத்து வழிபடுதலைப் பொங்கல் வைத்தல்

என்று வழங்குகின்றனர். பொங்கல் வைத்தல் காளியம்மன் கோவில்களில் வெள்ளி மற்றும் செவ்வாய்க்கிழமைகளில் நடைபெறுகிறது. பொங்கல் எடுத்து வரும்போது யானை, குதிரை போன்றவை அலங்கரித்துக் கோயிலுக்கு அழைத்து வருபவரும் உண்டு.

***அரண்மனைக் குதிரையெடுத்தல் :*** காளியம்மன் திருவிழாவில் அரண்மனைக் குதிரையெடுத்தல் என்ற ஒரு சடங்கு மேற்கொள்ளப்படுகிறது. அரண்மனைக் குதிரை என்பது மண்ணினால் செய்யப்படும் குதிரையைக் குறிக்கிறது. நோன்பு சாட்டியதும் கோயிலில் உள்ள முக்கியஸ்தர் குயவரை அழைத்து அவரிடம் பிடிமண் கொடுத்து குதிரை உருவம் செய்யச் சொல்கின்றனர். குயவரும் கோயிலில் இருந்து பெறப்பட்ட மண்ணை எடுத்துச் சென்று தன்னிடம் உள்ள மண்ணில் கலந்து குதிரை உருவம் செய்கின்றார். இதனைத் திருவிழாவன்று கோயிலுக்கு மேளதாளம் முழங்க எடுத்து வருவர். குதிரையெடுக்கும்போது ஒரு கிடாய் வெட்டுகின்றனர். குதிரை செய்யும் மண்ணுடையார்க்குத் தட்சணையாக வேட்டி, துண்டு, பணம் கொடுத்து சிறப்பு செய்யப்படுகிறது.

***பூவோடு எடுத்தல் :*** திருவிழாவில் அரண்மனைக் குதிரை எடுத்து வழிபாடு செய்ததும் அன்று மாலை சுமார் 4 மணிக்குப் பூவோடு எடுத்தல் என்ற நிகழ்வு நடைபெறுகிறது. அகன்ற மண் கலயத்தில் தீ போட்டு அதனை ஊர்க்கிணற்றிலிருந்து கோயிலுக்கு எடுத்து வந்து வழிபட்ட பின்னர் மீண்டும் நீர்நிலைகளில் விடப்படுகிறது. தனக்கு ஏற்பட்ட துன்பத்தினை நீக்குமாறு வேண்டி இவ்வழிபாடு நடைபெறுகிறது. இதனைத் தீச்சட்டி எடுத்தல் என்றும் வழங்குவர்.

***கிடாய் வெட்டுதல் :*** மக்கள் தங்கள் வாழ்வில் நன்மை புரிந்த தெய்வங்களுக்கு நன்றி செலுத்தும் பொருட்டாக அவற்றுக்கு உயிர்களைப் பலியிட்டு அவற்றைப் படைத்து வழிபடுகின்றனர். பலியாக ஆடு, கோழி, சேவல், பன்றி போன்ற உயிரினங்கள் பயன்படுத்தப் படுகின்றன. கிடாய் வெட்டும்போது மஞ்சள்நீர் தெளித்து துளுக்கு கேட்கின்றனர். ஆடு தலையை ஆட்டிச் சிலிர்த்ததும் சாமியிடம் உத்தரவு கிடைத்ததாகக் கருதி அவற்றைப் பலியிடுகின்றனர். சங்க காலத்திலேயே உயிர்களைப் பலியிடும் வழக்கம் இருந்துள்ளது என்பதனை, ***கள்ளும் கண்ணியும் கையுறையாக நிலைக்கோட்டு வெள்ளை நால்செவிக் கிடாஆய் நிலத் துறைக் கடவுட்கு உளப்பட ஓச்சித் (7 : 149)*** என்ற அகநானூற்றுப் பாடல் அடிகளால் அறியலாம்.

***கும்பம் கிணற்றை அடைதல் :*** விழாவின் இறுதியாக நீர்நிலைகளில் தயாரிக்கப்பட்ட கரகம் விழா முடியும்வரை கோயிலில் வைத்து

வழிபடப்பட்டு வரும். பின்னர் விழா முடிந்ததும் கோயிலில் இருந்து கும்பம் மேளதாளத்துடன் எடுத்து வரப்பட்டு மீண்டும் நீர்நிலைகளில் விடப்படுகிறது. கும்பம் விடுதலுடன் திருவிழா நிறைவுபெறுகிறது.

***அடசல் பூசை :*** கும்பம் கங்கையில் விட்டதும் அன்று இரவு மகாமுனிக்கு அடசல் பூசை நடைபெறுகிறது. பொங்கல் வைத்து அதனுடன் பச்சைக் கோழியை அறுத்து ஒரு ஓட்டில் அவை இரண்டையும் போட்டுப் பிசைந்து மகாமுனிக்கு முன்பாக அவற்றை வைத்து அதனுடன் கஞ்சா, ரொட்டி, சாராயம், முட்டை போன்றவற்றை வைத்து வழிபாடு செய்த பின்னர் பூசாரி அவ்வோட்டினை எடுத்துக் கொண்டு கோவிலைச் சுற்றி இறைத்து வருவர். இதனை எறிசோறு எறிதல் என்று வழங்குகின்றனர். முற்காலத்திலேயே இவ்வழிபாடு நடைமுறையில் இருந்துள்ளது என்பதனை, ***வால் அரிசிப் பலி சிதறி (பட்டினப் பாலை 165) மறிக்குரல் அறுத்துத் திணைப்பிரப்பு இரீஇ (8 : 212)*** என்ற பட்டினப்பாலை பாடலடிகளாலும் குறுந்தொகைப் பாடலடிகளாலும் அறியலாம். மகாமுனிக்கு வழிபாடு செய்யும்போது கிடாய் வெட்டி இரத்தத்தைப் படைத்து வழிபடுகின்றனர். பலி கொடுப்பதன் அடிப்படை நோக்கமே தெய்வத்தினைத் திருப்திப் படுத்துவதே ஆகும். நாட்டுப்புறத் தெய்வங்கள் ரத்ததாகங் கொண்டவைகளாகவே விளங்குவதால் உயிரினங்களைப் பலியிட்டு அவற்றைப் படைத்து வழிபடும் நிலை ஏற்பட்டது.

***குதிரை உருவ வழிபாடு :*** நாட்டுப்புறத் தெய்வங்கள் இரவு நேரங்களில் ஊரினையும், நீர்நிலைகளையும் காவல் புரிவதற்காக உலா செல்லும் என்றெண்ணி அவற்றுக்குக் குதிரை உருவங்களை அமைத்து வழிபடுகின்றனர். இவ்வாறு குதிரை உருவங்களை அமைத்து வழிபடுவதன் மூலம் தனது பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்றெண்ணிப் பெரிய உருவங்களைச் செய்து வைத்து வழிபடுகின்றனர். குதிரை உருவத்திற்கு வேட்டி, துண்டு, பொட்டு, சந்தனம், மாலைகள் சூட்டித் தலைவாழை இலையில் அருகம்புல் படைத்து வழிபடப் பெறுகிறது.

***நாக வழிபாடு :*** கோயிலினுள் இருக்கும் நாகப்புற்றுக்குப் பெண்கள் பால், பழம் படைத்து வழிபடுகின்றனர். தங்கள் குடும்பம் செழிக்கவும், தங்களுக்குக் குழந்தைப்பேறு வாய்க்கவும், குழந்தை தீங்கின்றி பிறக்கவும் பெண்கள் வேண்டுகின்றனர். மேலும் பாம்பினை ***நாகம்மா*** என்று பெயரிட்டு அழைத்து வழிபடுவதும் உண்டு.

***மஞ்சள் நீராடல் :*** திருவிழாவின் இறுதியாக அமைவது மஞ்சள் நீராடல் என்ற நிகழ்வாகும். இந்நிகழ்வில் சாமியை ஊர்வலமாக எடுத்து வருவர்.

மக்கள், மஞ்சள் நீருடன் தேங்காய், பழம் கொடுத்து இறைவனை வழிபடுவர். இறுதியில் வழிபாடு செய்த பின்பு கொடுத்த மஞ்சள் நீரினை அருகில் உள்ள உறவினர் மற்றும் நண்பர்கள் மீது தெளித்து மகிழ்வர். இந்நிகழ்வு, சுற்றுப்புறத்தைக் காப்பதுடன் மக்களிடையே நிலவி வரும் சமுதாய ஏற்றத்தாழ்வுகளை நீக்கி அனைவருக்கும் மகிழ்வை ஏற்படுத்தும் ஒரு நிகழ்வாக அமைகிறது.

*பூக்கேட்டல் :* செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் பூக்கேட்டல் நிகழ்வு நடைபெறுகிறது. வலதுபுறம் வெள்ளைப்பூவும், இடதுபுறம் சிவப்புப்பூ என்ற இரண்டு வகைகளில் பூக்கேட்டல் நடைபெறுகிறது. கல்யாணம் நடைபெறுதல், வீடு வாங்குதல், நிலங்கள் வாங்குதல், கிணறு வெட்டுதல் போன்ற காரணங்களுக்காகப் பூ கேட்கப்படுகிறது.

*வேண்டுதல்கள் :* மக்கள் வேண்டுதல்களாகத் தீர்த்தம் எடுத்தல், மடிப்பிச்சை எடுத்தல், மகாமுனிக்கு நீர் ஊற்றுதல், தவறுபுள்ளை செய்து வைத்தல், கிடாய் வெட்டுதல், மொட்டையடித்தல், பெயரிடுதல், குதிரை எடுத்தல், தீச்சட்டி எடுத்தல் போன்ற வேண்டுதல்கள் செய்து வழிபடுகின்றனர்.

இந்த வகையில் உடுமலை வட்டாரத்தில் பொதுத் தெய்வமாக விளங்கி அனைத்து இன மக்களாலும் வழிபடப் பெறும் காளியம்மன் என்னும் தெய்வம் மக்களுக்கு ஏற்படும் துன்பத்தினைப் போக்கி நன்மை செய்யவும், ஊரினைத் துன்பம் அணுகாதவாறு காக்கவும், விளைச்சல் பெருகவும் வளம் தரும் தெய்வமாக அமைந்து அனைத்து மக்களாலும் வழிபடப்பெறும் தெய்வமாக விளங்குகிறது.

## துணைநூல்கள்


1. *கருப்பாயீ.அ.* : நாட்டுப்புறச் சிறு தெய்வ வழிபாடு, 1999
2. *தேவநேயப்பாவணர்* : தமிழர் மதம், 2000
3. *ஜெ. சந்திரன்* : சிலப்பதிகாரம் மூலமும் தெளிவுரையும், 1999
4. கள ஆய்வு, கிருஷ்ணசாமி, வயது 55, செல்லப்பம்பாளையம்
5. கள ஆய்வு, ராமாத்தாள், வயது 87, செல்லப்பம்பாளையம்,
6. *சண்முகசுந்தரம்.சு.* : திருநெல்வேலி நாட்டுப்புறப் பாடல்கள், 1986
7. *மாணிக்கனார்.அ.* : அகநானூறு மூலமும் உரையும், 1999
8. ***சண்முகம்பிள்ளை. மு.*** : சங்கத்தமிழரின் வழிபாடும் சடங்குகளும்,

# நரிக்குறவரின் வழிபாட்டு மரபுகள்

**ச. கலைவாணி**, எம்.ஏ., எம்.ஃபில்.,பிஎச்.டி.,
*அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், மதுரை*

நரிக்குறவர் எனப்படும் நாடோடிப் பழங்குடிமக்கள் தமிழகத்தின் பல்வேறு இடங்களில் பரவலாகக் காணப்படுகின்றனர். இவர்கள் இன்னும் நாகரிகத்தின் கீழ்நிலையில் அல்லது அடித்தளத்திலேயே வாழ்கின்றனர். பழமையான சில பழக்க வழக்கங்கள் இவர்களிடம் காணப்படுகின்றன. இவ்வினத்தவரின் பண்பாடு, பழக்கவழக்கம், நாகரிகம் ஆகியவை பிற இனத்தவரிடமிருந்து சற்று வேறுபட்டுக் காணப்படுகின்றன. குறிப்பாக இவர்களது வழிபாட்டு முறைகள் பெரும்பாலும் வேறுபட்டுக் காணப்படுகின்றன. தமிழகத்தில் சிறுதெய்வ வழிபாடு செய்யும் பிற இனத்தவரைப் போன்று சிறு தெய்வங்களுக்கு ஆடு, மாடு போன்றவற்றைப் பலியிடும் வழக்கம் கொண்டிருந்தாலும் இவ்வினத்தவர் வழிபடும் தெய்வ உருவம். வழிபாட்டு முறை ஆகியன அவர்தம் இல்லத்திலேயும் இருப்பிட வளாகத்திற்குள்ளேயும் நிகழ்த்தப்படுகின்றன. பலியிடுதலில் பூசாரி ரத்தம் குடித்தல் மட்டுமின்றி குடும்பத்தாரில் ஆண்கள் அனைவருக்கும் குடிக்கக் கொடுத்தல், பொங்கலிடுதலின் போது கொதிக்கும் பானைக்குள் கைவிட்டுத் துளாவுதல் போன்ற வேறுபட்ட வழிபாட்டு மரபுகளைக் கொண்டுள்ளனர்.

நரிக்குறவரின் தெய்வ வழிபாட்டின் அடிப்படையில் சாதிப்பிரிவுகள் காணப்படுகின்றன. எருமை பலி கொடுப்பவர்கள், ஆடு பலி கொடுப்பவர்கள் என இவர்கள் வழிபாட்டுப் பழக்கங்களின் அடிப்படையில் பாகுபடுத்தப்படுகின்றனர். இவர்களுள் மீனாட்சி கும்பிடுபவர்கள், காளி கும்பிடுபவர்கள், மாரியம்மன் கும்பிடுபவர்கள் உள்ளனர். காளியையும், மாரியையும் வழிபடுவோர் எருமையையும். மீனாட்சியை வழிபடுவோர் ஆட்டையும் பலியிடுகின்றனர். இவர்களைப் போல பன்றிக் குளுவர்கள் காளியம்மன், மாரியம்மன், மீனாட்சி ஆகிய பெண் தெய்வங்களை வணங்குகின்றனர். அவர்கள் வணங்குகின்ற இத்தெய்வங்களின் அடிப்படையில் மூன்று கிளைகளாகப் பிரித்துள்ளனர் என்கிறார் குளோரியதாஸ்.

***வழிபடும் தெய்வ உருவம் :*** நரிக்குறவர் தமது தெய்வங்களைத் தமது இல்லத்தில் வைத்து வழிபடுகின்றனர். பலியிடுதலும் அவர்தம்

இருப்பிடத்திலேயே நடைபெறுகிறது. இவ்வினத்தவர் வெள்ளியால் ஆன பெண் உருவத்தைத் தெய்வமாக வணங்குகின்றனர். இதனை தேவதை என்று கூறலாம். வெள்ளி வார்ப்புகளில் அமைந்த தேவதைகளின் நான்கு வடிவங்கள் பத்து செ.மீ உயரம் உடையவை. இவை முக்கோண வடிவமுடைய மெத்தை போன்றவைகளில் வைக்கப்பட்டிருக்கும். அந்த உருவங்கள் நான்கு கைகளை உடையதாய் இருக்கும். அதில் ஒருகை கூட வழக்கமான தேவதைகளின் அபயம் அளிக்கும் தோற்றத்தில் அமையவில்லை. ஒவ்வொரு உருவமும் நீண்ட பாவாடையும், உயர்ந்த தலையணியும், வளையல்களும் கைப்பட்டையும், சங்கிலியும் அணிந்துள்ளன. பெரிய வயிறுடையதாய் இரண்டு கைகளிலும் பூவினை ஏந்தி இரண்டு முனைகளிலும் இணைக்கப்படாத ஒரு நீண்ட மாலையையும் அணிந்துள்ளன. இவ்உருவம் துணியால் ஆன மூட்டைக்குள் வைக்கப்படுகிறது.

***சாமி மூட்டை (அ) சாமிப்பெட்டி :*** தெய்வ உருவங்களோடு ரத்தத்தில் தோய்க்கப்பட்ட ***சாமிப்பாவாடை*** மற்றும் பூசைப்பொருட்கள் அடங்கிய மூட்டையை ஒரு பெட்டிக்குள் வைத்து வழிபடுவது சாமி மூட்டை எனப்படும். இச்சாமி மூட்டையை நரிக்குறவர் பெண்கள் தொட அனுமதிக்கப்படுவதில்லை. அத்துடன் ஒரு பிரிவைச் சேர்ந்தவர்களின் சாமி மூட்டையை அடுத்தபிரிவைச் சேர்ந்தவர்கள் தொடக்கூடாது. பிற இனத்தவருக்கு இவர்கள் சாமி மூட்டையைப் பிரித்துக் காட்ட விரும்புவதில்லை. வழிபாடு நடத்தும் போது குடும்பத்தலைவன் சாமி மூட்டையைத் திறப்பான்.

***வழிபாடும் பூசையும் :*** பணமுள்ளபோது குலதெய்வத்துக்கு ஒவ்வொரு குடும்பத்தினரும் பூஜையிடுவர். இது சிறிய பூஜை எனப்படும். இதில் சாமிப்பெட்டி திறக்கப்பட்டு பூவும், குங்குமமும் மஞ்சள் தூளும் தேவதைகளின் முன்படைக்கப்படுகின்றன. பின்னர் பச்சரிசி மாவில் ரொட்டி செய்து வழிபாடு நடத்துகின்றனர். வருடத்திற்கு ஒரு முறை புரட்டாசி, ஆடி, பங்குனி ஆகிய மூன்று மாதத்தில் ஏதாவது ஒரு மாதத்தில் பலியிடும் பூஜை நடத்துகின்றனர். இதற்குப் பெரிய பூஜை என்று பெயர். புரட்டாசி மாதம் முழுவதும் விரதமிருந்து புரட்டாசி கடைசி வெள்ளிக்கிழமை இரவு முழுவதும் ஆட்டம் பாட்டத்துடன் ஒரு பை அரிசி பனிரெண்டு தேங்காயுடன் படையலிடுவர். அதன் பின் பச்சரிசி மாவு, கருப்பட்டி நெய்விட்டுப் பிசைந்து ரொட்டி செய்து எண்ணெயில் பொரித்து வைக்கின்றனர். அன்றிரவு ஆடல் பாடலோடு மதுவருந்துகின்றனர். பின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் குடும்பத்தலைவன் சாமி மூட்டையைப் பிரித்துப் படையலிட்டு வழிபடுகின்றான். பின் தெய்வம் ஏறப்பெற்று சாமியின் முன் நடனமாடி

பூஜைக்காக நிறுத்தியிருக்கும் எருமை மாடு, ஆடு இவற்றை வெட்டி இரத்தத்தைச் சாமியின் தலையில் ஊற்றுகின்றனர். பின்னர் அதனைத் தானும் குடித்துத் தன் குடும்பத்து ஆண்களிடமும் குடிக்கக் கொடுக்கின்றனர். இவ்வாறு வெட்டிய ஆட்டையும், மாட்டையும் உணவு சமைத்துக் குடும்பத்தினர் அனைவரும் உண்கின்றனர்.

***ஏழு பானை பூஜை :*** நரிக்குறவர் பலியிடும் விழா தவிர ஏழுபானை பூஜை என்ற மற்றொரு விழாவும் எடுக்கின்றனர். இவ்விழாவை தை அல்லது பங்குனி மாதத்தில் கொண்டாடுகின்றனர். முன்பு பிற இனத்தவர் அறுவடை செய்யும் நாளில் அறுவடைக் காலத்திற்குச் சென்று தானியங்களை வாங்கி அத்தானியத்தைக் கொண்டு (நெல்) பொங்கலிட்டுப் பூஜை செய்தல் உண்டு. தற்பொழுது நரிக்குறவர் இருப்பிடம் நகர்புறங்களை ஒட்டியுள்ள புறப்பகுதியில் வாழ்வதால் இதுபோன்று அறுவடை காலங்களில் செல்ல இயலுவதில்லை. இதனால் கடைகளில் அரிசி வாங்கிப் பொங்கலிடுகின்றனர். ஏழு பானை பொங்கல் இடுதல் - நிலத்தில் அடுப்பு மூட்டி அதில் ஏழு பானைகளை ஒன்றின் மேல் ஒன்றை விட ஒன்று சிறிதாக இருக்கும்படி வைத்துப் பொங்கல் இடுவதை நரிக்குறவர்கள் *ஏழு பானை பூஜை* எனக் குறிப்பிடுகின்றனர். இவ்விழாவைப் பற்றித் தகவலாளர் பாபுதுரை விவரிக்கிறார்:

மூன்று கற்களால் அடுப்பமைத்து ஒன்றிலிருந்து ஒன்று அளவில் குறைந்த ஏழுபானைகளைத் தேர்ந்தெடுக்கப்படுகின்றன அவற்றில் மிகவும் பெரிய பானை ஒன்று அதிலிருந்து படிப்படியாகக் குறைந்த *ஏழு பானை* வைக்கப்படுகின்றன. இப்பானைகளில் நன்கு கழுவிய பச்சரிசி பயன்படுத்தப்படுகிறது. கீழே நெருப்பு பற்ற வைக்கப்படுகிறது. இக்குழுவினர் குடித்துவிட்டுப் பானையைச் சுற்றி ஆடிப்பாடுகின்றனர். பானையில் உள்ள அரிசியை வெற்றுவிரலில் கிளறுகின்றனர். மேலே உள்ள பானையில் அரிசி பொங்கி வடியும் வரை ஆடலும், பாடலும் நீடிக்கின்றன. இது இறக்கி ஒதுக்கி வைக்கப்படுகிறது. முன்போலவே அடுத்த பானை பொங்கும் வரை மீண்டும் ஆடலும், பாடலும் நீடிக்கின்றன. அடுத்த பானையிலுள்ள அரிசி வெற்று விரல்களால் துளாவப்பட்டு இறக்கப்படுகிறது. ஏழுபானையும் இறக்கியவுடன் அதனுடன் கருப்பட்டி சேர்த்து படையலிட்டு அனைவருக்கும் விநியோகிக்கப்படும்.

ஆனால், இப்பொங்கல் தம் இனத்தார் கூடிக் கூடாரம் அமைத்து அதற்குள்ளேயே செய்கின்றனர் என்றும் இதனைத் தம் இனத்தவரைத் தவிர வேறுயாரும் பார்ப்பதற்கு அனுமதிப்பதில்லை என்றும் கூறுகின்றனர். சிலர் இப்படியொரு விழா முன்பு இருந்தது. இப்பொழுது

அருகி விட்டது என்கின்றனர். இவ்வினத்தவர் தவிர வேறு இனத்தவருள் ஒருவரான மீனாட்சி என்பவர் தான் சிறுவயதில் இருக்கும்போது இதுபோன்று விழா நரிக்குறவர் நடத்துவர் என்றும், அதனைக்காண சிறுவர் சிறுமியரைக் கூட அனுமதிப்பதில்லை என்றும் கூறுகிறார்.

1. நரிக்குறவர், வழிபாட்டின் அடிப்படையில் தமது குலத்தில் பாகுபட்டுக் காணப்படுகின்றனர். தெய்வங்களின் அடிப்படையில் குலத்தினை (சாதிப்பிரிவினை) அழைப்பதால் தெய்வத்தின் மீதும், தெய்வ வழிபாட்டிலும் ஈடுபாடு கொண்டவர் என்பதை அறியமுடிகிறது.

2. இவ்வினத்தவர் தெய்வ உருவங்களைத் தமது இல்லத்தில் வைத்தே வழிபடுகின்றனர். இதற்கான தனியான கோயில் அமைப்பதில்லை. வெள்ளியால் ஆன தெய்வ உருவத்தை வைத்தே பலியிடும் பூஜை செய்கின்றனர். ஒவ்வொரு குடும்பத்திலும் ஒரு வெள்ளிச்சிலை இருக்கும். இது இவர்களது சொத்தாகக் கருதப்படுகிறது. இவ்வெள்ளிச்சிலை இதன் அளவு ஆகியவற்றை வைத்து ஒரு நரிக்குறவக் குடும்பத்தின் பொருளாதாரம் நிர்ணயிக்கப்படுகிறது.

3. இவ்வெள்ளி உருவம் இவ்வினத்துப் பெண்களின் உடைபோல் அணிந்துள்ளது. தெய்வங்களோடு நரிக்குறவர் அதிக தொடர்பும், மரியாதையும் கொண்டுள்ளனர் என்பதை அறியலாம்.

4. தெய்வங்களைத் தமது இருப்பிடத்தில் வைத்திருப்பதால் தமது இனத்தவர் வாழும் பகுதிக்குள் வரும்பொழுது இவ்வினத்தவர் காலில் செருப்பு அணிவதில்லை. சைக்கிளில் இருப்பிடத்திற்குள் வருவதில்லை. குறிப்பாகப் பெண்களை சைக்கிளில் ஏற்றி வருவதில்லை.

5. பலியிடும் விழாவில் கலந்து கொள்வதிலும், பூஜை செய்வதிலும், சாமிப்பொருட்களை அலங்கரிப்பதிலும் இதுபோன்ற சாமி சார்ந்த நிகழ்ச்சிகளில் பெரும்பாலும் பெண்கள் கலந்துகொள்ள அனுமதிப்பதில்லை. தெய்வத்திற்கான படையல் பொருட்கள், பொங்கலிடுதல் போன்ற வேலைகளைச் செய்வதில் பெண்கள் பங்கு கொண்டாலும் இவ்வினத்தவரின் பண்டைய மரபாகக் கருதப்படும் பலியிடும் இரத்தத்தைக் குடிக்கும் வழக்கத்தினைப் பெண்களுக்கு இவர்கள் வழங்குவதில்லை.

6. பெரும்பாலும் இவ்வினத்தவர் கொண்டாடும் வழிபாட்டு விழாக்களைப் பிற இனத்தவர் பார்ப்பதற்கு அனுமதிப்பதில்லை. இவர்கள் தங்களது தெய்வங்களைத் தமக்கு மட்டும் சொந்தமாகக்கருதுகின்றனர். இவற்றிலிருந்து இவர்களது வழிபாட்டு மரபுகள் பிற இனத்தின் வழிபாட்டு மரபுகளிலிருந்து வேறுபட்டுள்ளது என்பதனை அறிய முடிகின்றது. நரிக்குறவர் பிற சமூக இனத்தாருடன் பழக்கவழக்கங்களிலும், வழிபாட்டு முறைகளிலும் மாறுபட்டுத் தனக்கெனத் தனித்ததோர் உலகை உருவாக்கிக் கொண்டு வாழ்கின்றனர்.

# மேட்டு மகாதானபுரம் : மகாலட்சுமி வழிபாடு : தேங்காய் உடைப்பு - நேர்த்திக்கடன்

**எ.கற்பகம்**, எம்.ஏ., எம்.ஃபில்.,
*அரசு கலைக் கல்லூரி, கரூர்.*

நாட்டுப்புற மக்கள் இயற்கையன்னையின் மடியில் தவழ்ந்து விளையாடி இன்பம் நுகர்கின்றனர். ஆறுகளிலும் குளங்களிலும் நீராடி மகிழ்கின்றனர். சோலைகளிலும்; மலைச்சாரல்களிலும், அண்டவெளிகளிலும் இயற்கையின்பம் நுகர்கின்றனர் ; உழைப்பே அவர்களது தெய்வம். ஆண்டுதோறும் கிராம தெய்வங்களுக்குத் திருவிழாக்கள் கொண்டாடுகின்றனர். ஊரின் ஒற்றுமைக்கு இவ்விழாக்களே அடிப்படை. தமக்குள்ளிருக்கும் வேற்றுமைகளை மறந்து அனைவரும் ஒன்றுபட்டே திருவிழாவை நடத்துகின்றனர்.

## நேர்த்திக்கடன்

தங்கள் எண்ணம் ஈடேற இறைவனை வேண்டி விண்ணப்பம் செய்வது, அதற்காகப் பொருள்களைக் காணிக்கையாகச் செலுத்துவது, தங்களைத் தாங்களே வருத்திக்கொள்வது போன்றவை. இதில் தன்னை வருத்திக் கொள்ளும்போது இறைவனின் அருள், அத்துன்பத்தை நீக்கும் என்ற நம்பிக்கை மக்களிடையே உள்ளது. பூமிதித்தல், அக்னிச்சட்டி எடுத்தல், அலகு குத்துதல் போன்று தலையில் தேங்காய் உடைப்பதும் இதன் அடிப்படையிலேதான். கரூர் மாவட்டம் லாலாப்பேட்டையை அடுத்த மேட்டு மகாதானபுரத்தில் (கரூரிலிருந்து 30 கி.மீ.தூரத்தில்) காவிரிக்கரையின் ஓரத்தில் அமைந்துள்ளது மகாலட்சுமி அம்மன் கோயில். இக்கோயில் குரும்பர் மற்றும் 24 மனை தெலுங்குச் செட்டியார் ஆகிய இரு சமுதாய மக்களின் குலதெய்வமாக விளங்குகிறது. சுமார் 400 ஆண்டுகளுக்கு முன் கிருஷ்ணதேவராயரால் கட்டப்பட்டது இக்கோயில். கோயிலைச் சுற்றி சுமார் நான்கு ஏக்கர் பரப்பளவிற்குப் பரந்த இடம் உள்ளது. ஆண்டுதோறும் ஆடிமாதம் இவ்விரு இனத்தவரும் சேர்ந்து கொண்டாடும் இத்திருவிழா ஆடிமாதம் 18ஆம் தேதி துவங்கும், மறுநாள் தேங்காய் உடைக்கும் நேர்த்திக்கடன் நிகழ்ச்சி நடைபெறும்.

*திருவிழாவிற்கு ஆயத்தம் :* இவ்வினங்களைச் சார்ந்த மக்கள் இந்த ஊரில் யாருமில்லை. எல்லோரும் வெளியூர்களில் வாழ்கின்றனர். தங்களுக்குள் ஏற்படுத்திக்கொண்ட ஓர் அமைப்பு, ஆண்டுதோறும் விழாவிற்கான ஏற்பாடுகளைச் செய்து அம்மக்களுக்கு அழைப்பிதழ் அனுப்புகின்றது. விழாவிற்குப் பத்து நாட்களுக்கு முன்பாக எல்லோரும் இங்கு வந்து கூடி கோயிலைச் சுற்றியுள்ள இடங்களில் தங்குமிடம் அமைத்துக் கொண்டு விரதம் இருப்பர். இவர்கள் தங்குமிடத்தை ஒரு குறிப்பிட்ட சமூகத்தைச் சார்ந்த மக்கள் தூய்மை செய்வது மரபாக உள்ளது.

## திருவிழா

திருவிழா ஆடிமாதம் 18ஆம் தேதி தொடங்கி மூன்று நாட்கள் தொடர்ந்து நடைபெறும். முதல்நாள் இரவு ஏழு மணியளவில் அனைவரும் தாரை தப்பட்டை முழக்கத்துடன் ஆற்றுக்குச் செல்வர். அங்கு கரகம் பாலித்துப் பூக்களால் அலங்கரிப்பர்.

*பூசை :* இரவு முழுவதும் அங்கேயே தங்கியிருந்து விட்டுக் காலை பத்து மணியளவில் வாணவேடிக்கையுடன் கரகம் ஊர்வலமாக ஊரைச் சுற்றி வந்து கோயிலை வந்தடையும். அம்மனுக்குச் சிறப்புப் பூசைகள் நடைபெறும். கோயிலுக்கு முன்புறம் உள்ள கொடிமரத்தில் தீபம் ஏற்றப்படும். பின்னர் பூசாரி ஆணிசெருப்பு அணிந்து, சிறப்பு வழிபாடுகளும், பூசைகளும் செய்வார். அப்போது அம்மனின் அனுமதியாக வானில் கருடன் மூன்றுமுறை வலம் வரும்.

*தலையில் தேங்காய் உடைத்தல் :* சப்த கன்னிமார்களைக் குறிக்கும் வகையில் குரும்பர் இனத்தவர் ஏழுபேரும், செட்டியார் இனத்தவர்கள் ஏழுபேரும் அமர்ந்திருப்பர். அம்மன் அனுமதிக்குப் பிறகு கரகம் எடுத்து வந்த பூசாரிக்கு அருள் வந்தபின் ஒரு பூசாரி தேங்காய் கூடையுடனும், மற்றொருவர் திருநீற்றுடனும் வந்து முதலில் இந்த 14 பேர் தலையில் தேங்காய் உடைத்து நிகழ்ச்சியைத் தொடங்கி வைப்பார். பின்னர் நேர்த்திக்கடனை நிறைவேற்ற வரிசையாக அமர்ந்திருக்கும் பக்தர்களின் தலையில் மடார் மடார் என்று சுவாமி அருளுடன் உடைப்பார் பூசாரி இதில் சிறுவர்களும் கலந்து கொள்வர். தேங்காய் முழுமையாக உடைந்து சிதறினால் தங்கள் வேண்டுதல் முழுமையாக நிறைவேறியது என்றும், துன்பங்கள் விலகியது என்றும் நம்பிக்கை கொள்கின்றனர். தலையில் இரத்தம் வந்தால் அவர்கள் வேண்டுதல் முழுமையாக முறையானதாக இல்லை என்று எண்ணித் திருநீறு வைத்திருக்கும் பூசாரி அவர்கள் தலையில் திருநீற்றினை வைத்து அழுத்திவிடுவார்கள். இவர்கள் அடுத்த

ஆண்டும் இதேபோல நேர்த்திக்கடன் செய்வதாக அம்மனை வேண்டிக் கொள்வார்கள். இந்த ஆண்டு அம்மனிடம் அருள் வேண்டுபவர்கள் தங்கள்மனதில் நினைத்த செயல் கைகூடினால் அடுத்த ஆண்டு இவ்விழாவின்போது தேங்காய் உடைக்கும் நேர்த்திக்கடன் செய்து விடுவதாக வேண்டிக் கொள்வர். உடல்நலனில் குறையிருந்தாலும், அந்நோயைத் தீர்த்து வைக்க அம்மனிடம் வேண்டி, நேர்த்திக் கடன் செய்வர். தலையில் தேங்காய் உடைத்துக் கொள்ளும் பக்தர்கள் ஆடி 1 ஆம் தேதியிலிருந்து 18 நாட்களுக்கு விரதம் இருப்பர்.

***கலைநிகழ்ச்சிகள் :*** இவ்வின மக்கள் தவிரப் பிற இனத்தார்களும் இவ்விழாவில் பங்கு கொண்டு அம்மன் அருள்பெற்றுச் செல்வர். அன்று இரவு அம்மன் அலங்கரிக்கப்பட்டு ஊர் முழுவதும் உலா வரும். மக்கள் அனைவரும் அம்மனை வழிபட்டு இன்பம் எய்துவர். கரகாட்டம், மயிலாட்டம் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறும். இவ்விழாவின் வழிபாட்டுப் பொருள்கள் (பிரசாதம்) அனைத்தும் அனைவருக்கும் பகிர்ந்தளிக்கப்படும். இம்மூன்று நாட்களும் தங்கள் இனத்தாரைக்கண்டு பேசி மகிழ்வதற்கு இவ்விழா ஒரு வாய்ப்பாக அமைகிறது. இவ்வூரில் இவ்வின மக்கள் ஒருவர்கூட இல்லையென்பது ஓர் ஆச்சரியமான உண்மை. விழா முடிந்ததும், வழிபாட்டுப் பொருள்கள் அனைத்தும் ஒரு பெட்டியில் வைத்துப் பூட்டிப் பூசாரியிடம் கொடுத்துப் பாதுகாக்குமாறு கூறிவிட்டு இவர்கள் தங்கள் ஊர்களுக்குப் புறப்பட்டுச் செல்வர்.

## குடமுழுக்குவிழா

இந்த அம்மன் கோயிலுக்கு இரண்டுமுறை 1978, 2002 ஆகிய ஆண்டுகளில் குடமுழுக்கு விழா நடைபெற்றது. ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் இக்கோயில் அமைந்துள்ள இடத்தில் ரயில்பாதை அமைக்கத் திட்டமிடப்பட்டது. இதற்கு அப்பகுதி மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். இதனால் கோபமடைந்த ஆங்கிலேய அதிகாரி ஒருவர் பக்தர்களிடத்தில் தேங்காய் வடிவிலான உருண்டைக் கற்களைக் கொடுத்து இந்தக் கற்களைத் தலையில் உடைத்துக் கொள்ளுங்கள். இரயில்பாதை அமைப்பதை நிறுத்தி விடுகிறோம் என்று சவால் விடுத்தார். பக்தர்கள் கல் தேங்காய்களைத் தங்களது தலையில் உடைத்துக் கொள்ளத் தயாராயினர். தலையில் படும் முன்னரே கற்கள் சிதறி விழுந்தன இதன்மூலம் அம்மன் சக்தியை அறிந்துகொண்ட ஆங்கிலேய அதிகாரி ரயில்பாதை அமைக்கும் முயற்சியைக் கைவிட்டார். இவ்வாறு சொல்லப்படும் வரலாற்றிற்கு ஆதாரமாக இக்கோயில் சுற்றுச்சுவர் கட்டும்போது, பூமிக்கு அடியில் இருந்து எடுக்கப்பட்ட கல் தேங்காய்கள் கோயிலுக்குள் தற்போதும் வைக்கப்பட்டுள்ளன.

# மாரியனூர் மாரியம்மன் வழிபாடு

**மா. கார்த்திகேயன்,** எம்.ஏ., எம்.ஃபில்.,
*கே.எஸ்.ஆர். கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருச்செங்கோடு*

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டிலிருந்து வேலூர் செல்லும் வழியில் மணியனூர் என்னும் கிராமத்தில் அமைந்திருக்கும் மாரியம்மன் பற்றிய வழிபாட்டு அமைப்பை அறிமுகம் செய்வது இக்கட்டுரையின் நோக்கம். நாட்டுப்புறத் தெய்வங்களுக்குப் பெரும்பாலும் தனிப்பட்ட கோயில் அமைப்பு கிடையாது. ஆனால் மணியனூரில் அமைந்திருக்கும் கோயில் ஓரளவுக்கு அடிப்படை வசதி கொண்டதாகவே அமைந்துள்ளது. இக்கோயில் 50 அல்லது 60 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தாகும். ஆரம்ப காலத்தில் தென்னங்கீற்றுகளால் பந்தல்போட்டு வழிபாடு நடத்தினர். பின்னர் வழிபாட்டிற்கு வரும் பக்தர்கள் மற்றும் குலதெய்வ வழிபாடு நடத்தக் கூடியவர்கள் சிறுக, சிறுக பணத்தைச் சேர்த்து ஓரளவிற்கு வசதிபடைத்த கோயிலாக அமைத்துள்ளனர்.

## கோயில் அமைவிடம்

திருச்செங்கோடு பேருந்து நிலையத்திலிருந்து வேலூர் செல்லும் சாலையில் 20-வது கிலோ மீட்டரில் அமைந்திருக்கும் ஊர் மணியனூர். இவ்வூரில் அமைந்திருக்கும் கோயில் தான் மணியனூர் மாரியம்மன் கோயில். இக்கோயில் பெரும்பாலும் முதலியார் சமூகத்தினரால் வழிபாடு நடத்தக் கூடிய கோயிலாகும். முதலியார் அல்லாத பிற சமயத்தினர்களும் இக்கோயிலில் வழிபாடு நடத்துகிறார்கள். இக்கோயில் விழாக்காலங்களில்தான் சிறப்பாக நடத்தப்படுகின்றன. மற்ற நேரங்களில் அவ்வளவாக வழிபாடு கிடையாது. இக்கோயிலுக்கு அருகில் ஊரின் எல்லையில் பாதுகாப்புக் கடவுளாக கருதப்படக் கூடிய முனியப்பன கோயிலும், மாசாணி (மண்ணால் செய்யப்பட்ட உருவம்) கோயிலும் உள்ளன.

## வழிபாடு

இக்கோயிலில் ஆண்டுக்கு ஒருமுறை இவ்அம்மனைக் குலதெய்வமாகக் கருதும் முதலியாரின் சமூகத்தினர் வெகு சிறப்பாக

விழா நடத்துவார்கள். இக்கோயிலில் உள்ள அம்மன் சிலை மிகச் சிறப்பாக அலங்கரிக்கப்பட்டு இருக்கும். கோயிலில் தோரணங்கள், வாழை மரம் ஆகியவை கட்டியிருப்பார்கள். அருகில் உள்ள மாசாணி கோயிலுக்கும் பூசை நடைபெறும்.

***பூசாரி :*** இக்கோயிலில் ஒரு குறிப்பிட்ட இனத்தவர் மட்டுமே பூசாரியாக இருப்பார்கள். எல்லா இனத்தவரும் இருக்க முடியாது.

***அன்னதானம் :*** இக்கோயிலில் விழாக் காலங்களில் குலதெய்வ வழிபாடு நடத்தக் கூடியவர்கள். தம்முடைய உறவினர்களையும், சுற்றத்தார்களையும் அழைப்பார்கள். பூசையானது ஒரு குறிப்பிட்ட நேரத்தில் நடைபெறும். பூசை நடைபெற்றவுடன் வழிபாட்டில் ஈடுபட்டுள்ள எல்லா உறவினர்களுக்கும், சுற்றத்தார்களுக்கும் அன்னதானம் வழங்கப்படும். இவ்அன்னதானத்தில் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட நபர்கள் பங்கேற்பார்கள்.

***பூசையில் மாமிசம் :*** கோயில்களில் பெரும்பாலும் இறைச்சியைச் சேர்ப்பதில்லை. ஆடு, கோழி போன்ற உயிரினங்களைப் பலியிடுவதில்லை. ஆனால் இக்கோயிலில் உட்பகுதியில் அமைந்துள்ள மற்றொரு தெய்வத்திற்கு பழக்கப்படி, பெரும்பாலும் முதலியார் அல்லாத பிற சமயத்தினர் ஆடு, கோழி போன்றவற்றைப் பலிகொடுப்பார்கள். ஆடு, கோழி போன்ற உயிரினங்கள் கோயிலின் உட்புறத்திலேயே வெட்டப்பட்டு அங்கேயே சமையலும் செய்து வழிபடுவர். அதோடுமட்டுமல்லாது மதுபானங்கள் போன்றவற்றையும் வைத்து வழிபடுவர்.

***காணிக்கை :*** தான் எண்ணிய எண்ணம் நிறைவேறினால் மக்கள் தங்களுடைய தலைமுடியைக் காணிக்கையாக அளிப்பார்கள். அதோடு நேர்த்திக் கடனாக ஆடு, கோழி போன்றவற்றையும் நேர்த்திக் கடனாக கொடுப்பார்கள். பொதுவாக மாரியம்மனுக்கு தேங்காய், பழம் ஆகியவற்றுடன் பொங்கல் படையலிட்டுப் பூசை நிகழ்த்தப் பெறும். உயிர்பலியாக ஆடு கோழி முதலியவற்றையும் கொடுப்பார்கள்.

## குலதெய்வங்கள்

மரணமடைந்த குலமுன்னோர்களை அவர்கள் வழிவந்த குடும்பத்தினர் தெய்வமாகக் கருதுவர். ஒவ்வொரு சாதியிலும் பல குலங்கள் உள்ளன. முதலியார் சமுதாயத்தில் இதைக் கோத்திரம் என்பார்கள். ஒவ்வொரு கோத்திரத்திற்கும் தனித்தனியே குலத் தெய்வங்கள் இருக்கின்றன. ஒரு கோத்திரத்தில் தோன்றியவர்கள் பங்காளிகள் எனக் கருதப்படுவர்.

## நடுகல்

குலதெய்வ வழிபாடு பண்டைக் காலத்தில் நிலவிய நடுகல் வணக்கத்தை நினைவூட்டுவதாகவுள்ளது. இலக்கணம், இலக்கியங்களிலும் நடுகல்பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

*நிரையிவட் பந்து நடுக லாகிய*
*வென்வேல் விடலை யின்மையிற் புலம்பி* (புறம் : 261)

என ஆவூர் மூலங்கிழார் போற்றியுரைப்பார். மேலும் அந்நடுகல்லிற்குப் பலியிட்டு வழிபாடு இயற்றுவதை,

*இல்லடு கள்ளின் சில்குடிச் சீறூர்ப்*
*புடைநடு கல்லி னாஉ பலியூட்டி* (புறம் : 261)

என்ற அடிகளால் அறியலாம். காலப்போக்கில் வீரர்களுக்கு அளிக்கப்பட்ட நடுகல் வணக்கம், குடும்பத்தில் இறந்தோருக்கும் எடுக்கப்படலாயிற்று. இது குலதெய்வ வழிபாடாக மாறியது.

## முடிவுரை

மக்கள் நம்பிக்கையுடன் சிறுதெய்வ வழிபாட்டை வழிபடுகின்றனர். தான் வேண்டிக் கொண்டதற்கு இணங்கி முடிகளையும் தானமாக கொடுத்துள்ளனர். ஆடு, கோழி முதலியவற்றைப் பலியிட்டும் வழிபடுகின்றனர். அன்னதானம் படைத்தும் வழிபாடு நடத்துகின்றனர். நாட்டுப்புற மக்களின் குலதெய்வ வழிபாட்டு முறை பண்டைத் தமிழர் போற்றிய உணர்வு வயப்பட்ட வழிபாடாகும். வழிபாட்டுப் பொருள்களுள் உயிர்பலி மிக முக்கியமாகக் கருதப்படுகிறது.

*குறிப்பு :* இக்கட்டுரையில் சிறுதெய்வ வழிபாட்டில் காட்டப்படுகின்ற தகவல்கள் விழாக்கள் நிகழ்ந்த போது நேரில் கண்டறிந்தவையாகும். மேலும் ஊர்பொதுமக்களிடமும் நேரடியாக விசாரித்துத் தெரிந்து கொண்ட செய்தியும் உண்டு.

## துணைநூல்கள்

1. *லூர்து :* நாட்டார் வழக்காற்றில்
2. *ஆறு.இராமநாதன் :* நாட்டுப் புற ஆய்வுகள்

# கணக்குப்பிள்ளைவலசை புன்னைவனத்தம்மன் வழிபாடு

**முனைவர் வே. சசிகலா**, எம்.ஏ.,எம்.ஃபில்.,பிஎச்.டி.,
*ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி, குற்றலாம்.*

தென்காசியிலிருந்து ஆறு கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது கணக்குப்பிள்ளைவலசை கிராமம். இக்கிராமத்தில் அமைந்தள்ள புன்னைவனத்தம்மன் கோவில் வரலாறு, வழிபாடு ஆகியவற்றை இக்கட்டுரை ஆராய்கிறது.

***கோவில் வரலாறு*** : சங்கரன் கோவிலுக்கருகே ***புன்னைவனம்*** எனுமிடத்தில் வாழ்ந்த தேவர் இனத்து மக்கள் ஒரு காலத்தில் பிழைப்புக்கு வழி தேடித் தவித்துக் கொண்டு இருந்தனர். வான்மழை பொய்த்து வறட்சி மிகுந்து பஞ்சம் பெரிதும் பரவி பசி அவர்களை வாட்டிக் கொண்டிருந்தது. இனியும் அவ்வூரில் வாழ்ந்து பிழைக்க முடியாது என்ற நிலை ஏற்பட்டவுடன் தங்களிடம் இருந்த சில ஆடு, மாடுகளை ஓட்டிக்கொண்டு செங்கோட்டைக்கு அருகேயுள்ள பெரியபிள்ளைவலசை என்னும் ஊரை வந்தடைந்தனர். அவ்வூரில் தோப்புக்காவல் வேலைப்பொறுப்பினை ஏற்று, வேலை செய்து, பிழைத்து வரத் தொடங்கினர். பெரியபிள்ளைவலசைக்கு அருகில் உள்ள கணக்குப்பிள்ளைவலசை என்னும் ஊரில் பிள்ளைமார் இனத்துமக்கள் மிகுதியாக வாழ்ந்தனர். இவ்வூரில் களவும், திருட்டும் மிகுதியாகி, மக்கள் அவதியுற்று வந்தநிலையில், பெரியபிள்ளை வலசையில் திறம்படக் காவல் தொழில் புரிந்து வரும் புன்னைவனத்து மக்களைத் தங்கள் ஊருக்கு அழைத்து வர முடிவு செய்தனர். கணக்குப்பிள்ளை வலசையில் தங்குவதானால் தங்களுக்கு வணங்குவதற்குத் தெய்வம் வேண்டுமே என்று நினைத்துப் புன்னைவனத்திலிருந்த பிடிமண் எடுத்து வந்து புன்னைவனத்தம்மனுக்கு ***நிலையம்*** அமைத்தனர். ***நிலையம்*** எந்த இடத்தில் அமைய வேண்டும் என்பதை அம்மன் அவ்வூர்ப் பிரமுகரான ஏட்டுப்பிள்ளையின் கனவில் தோன்றி உரைத்தாள். சிற்றெறும்புச் சாரை எங்கு சென்று முடிகிறதோ அங்கு நிலையம் அமைக்க வேண்டும் என்று அம்மன் கனவில் தோன்றி உரைத்ததற்கேறப் புன்னை வனத்தம்மனுக்குக் கோவில் எழுப்பப்பட்டது.

***வரலாறு -2:*** சங்கரன்கோவிலக்கு அருகிலிருக்கும் ***புன்னைவனம்*** என்ற ஊரில் இருந்த அம்மன் சரியான கவனிப்பின்றி இருந்தது. ஊர்மக்கள்

இடையே நோய், நொடி, பரவி, அவர்கள் அம்மன் பார்வை தங்களுக்கு இல்லை என்று கருதி அம்மன் சிலையை ஊரை விட்டகற்ற முடிவு செய்தனர். அதன்படி அம்மனை வண்டியில் ஏற்றி கணக்குப்பிள்ளை வலசையில் உள்ள மிராசுபிள்ளை கிணற்றுக்கு வடபுறத்தில் போட்டுவிட்டுச் சென்றனர். அந்த இடத்தில் மூங்கில், மா, வேம்பு, இலுப்பை மரங்கள் நிறைந்து வளர்ந்திருந்தன. அந்நிலையில் அவ்வூரில் வாழ்ந்து வந்த முக்கியப் பிரமுகரான ஏட்டுப்பிள்ளை என்பாரின் தந்தையிடம் அம்மன் கனவில் தோன்றித் தன்நிலையை எடுத்துக்கூற, அவரும் ***இன்ன இடத்தில் உன்னை நிறுத்த*** என்று கேட்டவுடன் தான் இருக்கும் இடத்திலிருந்து செல்லும் எறும்புச் சாரை முடிவடையும் இடத்தில் தன்னை ***சக்தி நிறுத்துமாறு*** அம்மன் கூற அதன்படி நிறுத்தப்பட்டது என்பது மற்றுமொரு கதையாகும்.

புன்னைவனத்தம்மன் கோவில் வரலாறு தொடர்பாக இரு வேறு கதைகள் உள்ளன. இவ்விரண்டிலும் கும்பிடக் குலதெய்வம் வேண்டும் என்று கருதிப் பிடிமண் கொணர்ந்து நிலையம் நிறுவிய கதையே மிகப் பொருத்தமாக உள்ளது. எப்படியெனினும் புன்னைவனம் என்ற ஊரிலிருந்து அம்மன், கணக்குப்பிள்ளை வலசை வந்ததும், எறும்புச் சாரி அடையாளம் காட்டி நிலையம் உருவானதும் தெரிய வருகிறது.

***கோவில் அமைப்பு :*** கணக்குப்பிள்ளைவலசையில் ஊரின் மேற்கில் வடதிசை நோக்கிப் புன்னைவனத்து அம்மன் கோவில் உள்ளது. அம்மன் அருகில் கிழக்குத்திசை நோக்கி பேச்சி, மாடன், மாடத்தி ஆகிய தெய்வங்கள் உள்ளன. மாடன், மாடத்தி ஆகிய தெய்வங்கள் காளை வடிவ முகத்தைப் பெற்றுள்ளன. தெற்குத் திசை நோக்கி வயிரவன் வீற்றிருக்கிறார். இவர்கள் புன்னைவனத்தம்மனின் வண்டிக் காரர்கள் என்பதால் இவர்கள் அம்மன் அருகிலேயே இருப்பார்கள் என்று சொல்லப்படுகிறது. புன்னைவனத்தம்மன் கோவிலை அடுத்து வடதிசை நோக்கி மாரி, சந்தனமாரி ஆகிய தெய்வங்கள் உள்ளன. அம்மன் கோவிலுக்கு எதிரில் கிழக்குத் திசை நோக்கி ஐந்து தெய்வக் கற்கள் நிறுவப்பட்டுள்ளன. ஒரு மேடைத்தளம் மீது அமைந்துள்ள இந்த இடத்தை ***மாக்கோவில்*** என்று ஊரார் வழங்குகின்றனர். கோவிலின் எதிரே சீவநல்லூர் குளம்.

***மாக்கோவில் - கதை :*** சின்னணஞ்சி, பெரியணஞ்சி, பூவணஞ்சி, முத்தணஞ்சி, நல்லணஞ்சி என்ற பெயர்களைக் கொண்ட ஐந்து சகோதரர்கள் வடகரை என்ற ஊரில் இருந்தனர். இவர்கள் வருடம் ஒரு முறை குற்றாலத்திலுள்ள குற்றாலநாதர் கோயிலுக்குத் தானம் அளிப்பர். அவர்கள் மாவடிக்குளம், இலஞ்சி, காசிமேஜர்புரம் ஆகிய ஊர்களில்

மண்டபங்கள் கட்டி வைத்தனர். வழிப்பயணங்களில் தங்கிச் செல்ல வசதியாக இவை கட்டப்பட்டன. இந்தச் சகோதரர்களுக்குப் பகையாளிகள் கூட்டம் பெருகியது. மேலும் வெள்ளையர்கள் கேட்ட கப்பத்தையும் இவர்கள் தர மறுத்தனர். அவர்களுடன் ஏற்பட்ட போரில் நால்வர் இறந்துபட ஒருவர் மட்டும் தப்பித்து ஒளிந்து வாழ்ந்தார்.

தேன்பொத்தை என்னும் ஊரில் ஆசாரி இனத்தவர் மிகுதி. தப்பித்தவர் (சின்னணஞ்சி என்று சொல்லப்படுகிறது) அங்கு சென்று வாழை நாரைப் பூணூல் போல் போட்டுக் கொண்டு ஆசாரி இனத்தவருடன் இருந்து ஒளிந்து வாழ்ந்தார். அவரைக் கண்டு கொண்ட பகைவர்கள் அவரைத் தாக்க அவர் கணக்குப்பிள்ளை வலசை நோக்கி ஓடி வந்து புன்னைவனத்தம்மன் கோயில் முன் வந்து அம்மனிடம் வேண்டி நின்றார். அம்மனுக்குப்படைத்துப் பின் இருக்கும் எச்சில் மட்டும் கிடைத்தால் போதும் என்று கேட்டுக்கொண்டதற்கிணங்க அந்த ஐந்து சகோதரர்களுக்கும் அங்கு இடமளிக்கப்பட்டது. பஞ்சம் பிழைப்பதற்காகப் புன்னைவனத்திலிருந்து புறப்பட்ட பெரியணஞ்சி சகோதரர்கள் காட்டில் விறகு வெட்டியும், கரிமூட்டம் போட்டும், விற்றும் பிழைத்து வந்தனர். அந்த வேளையில் கடைக்குட்டியான சின்னணஞ்சி ஒரு கொக்கினைச் சுட அதன் இரத்தம்பட்ட இடத்தில் இருந்து ஒரு கிடாரம் நிறையப் பெரும் பொருள் கிடைத்தது. அப்பொருளைப் பல ஊர்களிலும் தானம் செய்து வரும் போது வெள்ளையர்கள் விரட்ட அதனால் அவர்கள் ஓடி வந்து கணக்குப்பிள்ளை வலசையிலுள்ள புன்னைவனத்து அம்மனிடம் அவள் எச்சிலை உண்டு வாழ்வதாக வாக்களித்து அங்கேயே தெய்வமாயினர் என்றும் இவ்வரலாறு விளக்கம் பெறுகிறது. ஐந்து சகோதரர்கள் கணக்குப்பிள்ளைவலசை வட்டாரத்தில் வாழ்ந்ததும், மண்டபங்கள் கட்டியதும், வெள்ளையரால் தாக்கப்பட்டு ஓடி ஒளிந்து, புன்னைவனத்தம்மனைச் சரணடைந்ததும், பின் அங்கேயே தெய்வமாக நிலை பெற்றதும் மாக்கோவில் வரலாறாகும். இன்றும் அம்மனுக்குப் படைத்தவற்றின் மிச்சமும், அம்மனுக்குச் சூட்டிய மாலையும் தான் அந்த ஐவருக்கும் தரப்படுகிறது.

***பூசை முறைகள் :*** புன்னைவனத்தம்மன் கோவிலில் வைகாசி மாதம் இரண்டாம் அல்லது மூன்றாம் செவ்வாயன்று கொடை நடைபெறும். கொடை நாளை ஊர்மக்கள் ஒன்று கூடி ஊர்த்தலைவர் தலைமையில் தீர்மானிப்பர். வயிராவி என்பார் கோயிலில் பூசைப் பொறுப்பேற்றவராதலின் கொடையை முன்னின்று நடத்துவார். வாரிசு வேலையாகத் தொடர்ந்து வரும் இதனை ஏற்றிருக்கும் வயிராவி கொடை நாளுக்கு முந்தை வாரச் செவ்வாய் முதல் விரதமிருப்பார். அன்றே கொடைக்குரிய கால்நாட்டப் பெறும். கொடைக்கு முந்திய திங்களன்று

காலையில் பச்சரிசி அமுதும், இரவு பச்சரிசி மாவால் முழுகாப்பு சாத்தப்பட்டு, சர்க்கரைப் பொங்கலும் படைக்கப்படும். திங்களன்று இரவு பன்னிரண்டு மணியளவில் மஞ்சள், மாவு, இளநீர், பன்னீர், தேன், பஞ்சாமிருதம், விபூதி, பால் போன்றவற்றால் அபிடேகம் நிகழ்த்திப் பின் மாக்காப்பு சாத்தப்பெறும். இரவுப் பூசையில் சுண்டல் படைக்கப்படும். அதிகாலை மூன்று மணியளவில் பச்சரிசித் தோசை படைக்கப்படும். கொடைநாளான செவ்வாயன்று, மாக்காப்பு அகற்றப்பட்டு அமுது படைக்கப்பட்டுக் காலை, மதிய வேளைகளில் பூஜை நிகழும், மாலை 6 மணியளவில் திருக்குற்றாலத்திலிருந்து தண்ணீர் கொண்டுவரப்பட்டு அபிடேகம் நிகழும். அலங்காரம் நடக்கும். இதனைத் தொடர்ந்து மக்கள் தங்கள் வேண்டுதல்களை நிறைவேற்றுவர். உருவாரம் செய்தல், பால்குடம் எடுத்தல், பட்டெடுத்துச் சார்த்துதல், மாவிளக்கு எடுத்தல், பொங்கலிடுதல் போன்ற பல வேண்டுதல்களை மக்கள் நிறைவேற்றுவர். இதனைத் தொடர்ந்து இரவு விடிய விடியத் திருவீதி உலா நடைபெறும்.

*பிறதெய்வ வழிபாட்டு முறை :* புன்னைவனத்தம்மன் திருவீதி உலா புறப்பட்ட பின்னர், மாடன், மாடத்தி, வயிரவன் ஆகியோருக்குத் தனிப்படையல் படைக்கப்படும். முட்டை, கோழி, சேவல், துள்ளுமறியின் ஒரு சொட்டு இரத்தம், முருங்கைக்காயுடன் பிற காய்கறிகள் ஆகியவற்றைப் புழுங்கல் அரிசிச் சோற்றைப் பரப்பி அதன் மேலிட்டு, நான்குமூலையிலும் சுருட்டு நிறுத்திப் படைப்பர். இப்படையலின் போது வெட்டப்படும் துள்ளுமறி வயிராவிக்குச் சென்று சேரும். புன்னைவனத்தம்மன் சப்பரப்புறப்பாட்டிற்குப் பின்னர் புதன் காலையில் கிடா வெட்டு நிகழும்.

*முப்புடாதி அம்மன் :* கணக்குப்பிள்ளைவசையில் முப்பிடாதி அம்மன் கோவிலும் உள்ளது. புன்னைவனத்து அம்மனின் அக்காள் என்று முப்பிடாதி அம்மனை மக்கள் கருதுகின்றனர். மாரிக்குப் பூசை நடத்தித் தொடங்கப்படும் கொடை விழாவில் புன்னைவனத்தம்மன் பூசை நடத்தும், முப்பிடாதி அம்மனைக்காணப் புட்டு எடுத்துச் செல்லும் பழக்கமும் உள்ளது.

*முடிவுகள் :* 1. நான்கு கைகளில் ஆயுதங்களும், ஒரு கையில் திருநீற்றுக் கப்பரையும் தாங்கி அமர்ந்த கோலத்தில் உள்ள புன்னைவனத்தம்மன் கோவில் வரலாறு நாட்டுப்புற மரபு சார்ந்தும், வழிபாடு பெருந்தெய்வழிபாட்டு மரபின் சாயல் பெற்றும் விளங்குகின்றன. 2. கோவிலில் உள்ள பிற தெய்வங்கள் நாட்டுப்புற வழிபாட்டு மரபினை உணர்த்துகின்றன. 3. மாக்கோவில் இறந்து பின் தெய்வமாக நினைக்கப்படும் இனமுதாதையர் வழிபடாகும்.

# பக்கநாடு ஸ்ரீபெரியாண்டிச்சி அம்மன் வழிபாட்டு மரபுகள்

**செ.சத்தியநாதன்**, எம்.ஏ., எம்.ஃபில்.,
*அறிஞர் அண்ணா அரசுகலைக்கல்லூரி, நாமக்கல்-637 001.*

ஜலகண்டபுரத்திலிருந்து ஏழு கி.மீ. தொலைவிலுள்ள ஒரு கிராமம் பக்கநாடு. பல கிராமங்கள் சேர்ந்த பகுதியை நாடு, கோட்டம் என அழைப்பது பண்டைய வழக்கம். இங்கு எட்டுப்பட்டி கிராமங்களை உள்ளடக்கியதால் இது பக்கநாடு என அழைக்கப்பட்டு வருகின்றது. பக்கநாட்டுப் பங்காளிகள் தொன்றுதொட்டு வணங்கிவரும் பெண் கடவுள் பெரியாண்டிச்சி அம்மன் ஆகும். அங்காள பரமேஸ்வரி என்றும் கூறுவர். இப்பெண் கடவுள் அதிபயங்கரமான கோபத்தைத் தன்னகத்தே கொண்டவள். விகாரமான பயம்கொள்ளத்தக்க தோற்றம் உடையவள். இவளின் பிறப்பிடம் விழுப்புரம் மாவட்டத்திலுள்ள மேல்மலையனூர் ஆகும். சிவனால் உருப்பெற்றவள் என்றும் உமை - சக்தி பிரணவம் இவ்வழியில் தோன்றிய சக்திசொரூபிணியான பிரம்மாவின் அவதாரம் தரித்தவள் என்றும் சொல்லப்படுகிறது. இப்பெண் கடவுள் மிகுந்த கோபம் கொண்டவளாக இருப்பதால் இக்கடவுளுக்கு முன் கோபத்தைத் தணிக்கின்ற சக்திசிலை வைக்கப்பட்டுள்ளது.

## வழிபடுமுறை

பங்காளிகள் அனைவரும் ஆற்றுக்குச் சென்று கங்காஜலம் கொண்டு வரவேண்டும். பங்காளிகளில் ஒருவர் தலைவராக நியமிக்கப்படுவார். அவர் தர்மகர்த்தா என அழைக்கப்படுவார். இவர் மட்டுமே கங்கையில் இறங்கி நீர் எடுத்து வரவேண்டும். இவர் மகாசிவராத்திரி அதாவது மாசி மாதம் முதல் தேதியிலிருந்து சிவராத்திரி வரும்வரை விரதம் இருத்தல் வேண்டும். காலில் செருப்பு அணியக்கூடாது. மற்றவர் வீட்டில் தண்ணீர் போன்ற எதுவும் குடிக்கவோ உண்ணவோ கூடாது. எந்தத் தீய செயல்களையும் செய்தல் கூடாது.

***தீர்த்தம் எடுத்தல் :*** பச்சைக் களிமண்ணால் செய்யப்பட்ட ஈரப்பானையில் கங்காஜலம் எடுக்க வேண்டும். இதற்குக் ***கரகம்*** என்று பெயர். விரதம் இருந்த தர்மகர்த்தா மட்டும் தனியே ஆற்றில் இறங்கி தீர்த்தம் எடுக்க வேண்டும்.

## பூசை

கரகத்தில் எடுத்து வந்த தீர்த்தத்தை ஆற்றங்கரையின் ஓர் இடத்தில் வைக்க வேண்டும். பின்பு கரகத்தில் நீர் எடுத்து வந்த தர்மகர்த்தாவிற்கு மஞ்சக்காப்பு, மாலை, சந்தனம் பூசாரியால் இடப்படும். கரகத்திற்கு முன் ஒரு தாங்கடையில் (மூங்கிலால் பின்னப்பட்ட ஒரு தட்டு) நைய்வேத்தியப் பொருள்களான பால், பழம், பஞ்சாமிர்தம், தேன், கற்கண்டு, பன்னீர், எள் போன்றன வைத்து படசல் செய்யவேண்டும். அத்தாங்கடையில் நடராசருக்குரிய செவ்விளநீர் (இளநீர்) செவிலிப்பத்திரக்காய்(இளநீர் விநாயகருக்கு உரியது) வைத்து பூசாரி பக்தியுடன் கங்காதேவி கரபூஜை செய்து தீர்த்தம் எடுப்போரின் சிரசில் தீர்த்தம் இருக்கின்ற பச்சைமண் கரகத்தை எடுத்து வைக்க வேண்டும். பூசை நடக்கும் பொழுது அங்காள பரமேஸ்வரிக்கு உகந்த *தாரை, தப்பட்டை, பம்பை, உடுக்கை* போன்ற மேளதாளங்கள் ஒலிக்க தாங்கடையில் பச்சை வெட்டுக்கிளி ஒன்று வந்து அமர வேண்டும். பச்சை வெட்டுக்கிளி தாங்கடையில் வந்து அமர்ந்த பிறகே பச்சை மண் கரகத்தைப் பூசாரி எடுத்து தர்மகர்த்தாவின் சிரசில் வைப்பார். இந்த வெட்டுக்கிளி பெரியாண்டிச்சி பதியத்திற்கு வரும் வரை பறந்து செல்லாது. பெரியாண்டிச்சி குடிகொண்டிருக்கும் இடம் பதியாகும்.

## பதியைப் புதுப்பித்தல்

கங்கையிலிருந்து தீர்த்தம் கொண்டு வந்த பிறகு பெரியாண்டிச்சி சிலையை புதுப்பிப்பார்கள். அல்லது புதிய சிலை செய்வார்கள். இச்சிலை செய்ய,

1. 12 இடத்திலிருந்து புத்துமண் எடுத்துவர வேண்டும் (கரையான் புற்று)
2. 12 - பிணக்குழிமண்
3. 12 - எரிசாம்பல் (இடுகாட்டுச்சாம்பல்)
4. 12 - கிணற்றுத்தண்ணீர்
5. 4 - திசையிலும் முச்சந்தி மண்
6. எல்லைவிட்டு எல்லை தாண்டியமண். குறிப்பாக வடதிசையிலிருந்து எடுத்துவரல் வேண்டும்.

மேற்கண்டவற்றையெல்லாம் சேகரித்து ஓரிடத்தில் வைக்க வேண்டும்.

***புதுப்பானை வாங்கிவருதல் :*** பல வகையான மண்களை சேகரித்த பிறகு குயவரிடமிருந்து ஒரு புதுப்பானை வாங்கிவர வேண்டும். புதுப்பானை வாங்கிக் கொண்டு வரும்பொழுது மேளதாளத்தோடு வரவேண்டும். வாங்கி வந்த புதுப்பானையை ஒரு புதிய அடுப்புக் கூட்டி

அதன் மேல் வைக்க வேண்டும். அந்தப் புதுப்பானையில் கங்கா ஜலத்தை ஊற்ற வேண்டும். அடுப்பில் விறகு இட்டு ஊரில் உள்ள சுமங்கலிப் பெண்கள் அனைவரும் சேர்ந்து அடுப்பில் தீபம் இடவேண்டும். கங்கா ஜலத்துடன் பச்சரிசி சேர்த்துப் பொங்கலிட வேண்டும். இந்தப் பொங்கலை மூன்று பாகமாக பிரித்துத் தனித்தனியே வைத்தல் வேண்டும். இதோடு *பன்றி, ஆடு, கோழி* ஆகிய மூன்று ஜீவராசிகளுக்கும் மாலை, சந்தனம் இட்டு மரியாதை செலுத்தி அனைத்து மக்களும் ஒன்று கூடி ஓங்காரம் இடுவார்கள். பயபக்தியுடன் பாடி 108 அவதாரங்களையும் வரவழைத்த ***பெரியாண்டிச்சி*** என ஒரே உருவமாக மாற்றி படசல் முன் பூசை செய்ய வேண்டும். பின்பு பெரியாண்டிச்சி சிலையைப் புதுப்பிக்க சேகரித்த மண், ஜலம், பன்றி, ஆடு, கோழி ஆகிய பலியிடப் பொருளும் பம்பை, மேளதாளத்துடனும், ஓங்கார ராகத்துடனும் பதி இருக்கின்ற மாயானத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டும். அப்பொழுது பம்பைப்பாட்டு பாடிக்கொண்டே செல்வார்கள்.

*பூவாங்கரகம் எடுத்து ஆடிவருவோம்*
*பச்சை விழுந்தவுடன் ஓடிவருவோம்*
*பசுமண்ணால் செய்த கரகம் எடுத்து வருவோம்*
*படையலிட்டு மாயானத்திற்கு கொண்டு செல்லுவோம்*

என்று பாடிக்கொண்டே செல்வார்கள்.

## சிலை புதுப்பித்தல்

சிலை செய்யச் சேர்த்து வைத்த மண், நீர், வடதிசை மண், எல்லைவிட்டு எல்லை தாண்டிய மண் போன்றனவற்றையெல்லாம் ஒன்றாகப் பிசைந்து உடைந்து போன மாயானப் பதியில் குடிகொண்டிருக்கும் பெரியாண்டிச்சி சிலையைப் புதுப்பிக்க வேண்டும். 12 ராசிகளிலும் வரும் துன்பத்தைக் கட்டுப்படுத்தவே 12 வகை மண், 12 கிணற்றுச் ஜலம் போன்றன எடுத்து வரப்படுகிறது.

***மாமிசப் பூசை :*** பெரியாண்டிச்சி சிலையைப் புதுப்பித்த பிறகு சிலைக்கு முன்பாக ***ஆடு, பன்றி, கோழி, முட்டை, கருவாடு, சுருட்டு, சாராயம், கள்*** போன்றனவும் மூன்று பங்காகப் பிரிக்கப்பட்ட பொங்கலும் வைக்கப்படும். பின்பு பச்சமண் தீர்த்தம் கொண்டு ***ஆடு; பன்றி, கோழி*** இவற்றின் மீது தெளிக்க வேண்டும். பிறகு ***பன்றி, ஆடு, கோழி*** இம்மூன்றையும் மாயானத்திலேயே பலியிடல் வேண்டும். இதிலிருந்து வரும் உதிரத்தை ஒரு பானையில் பிடித்து ஒன்றாக (மூன்றையும்) கலந்து பெரியாண்டிச்சி சிலையின் சிரசுமுதல் பாதம்வரை ஊற்ற வேண்டும்.

*இரத்தக்காவு சாதம் :* சிலை மீது ஊற்றிய உதிரத்தில் மீதம் உள்ளதை மூன்றாகப் பிரிக்கப்பட்ட பொங்கலில் ஒரு பங்கை எடுத்து அந்த உதிரத்தில் (குருதி) இட்டுப் பிசைந்து வைத்துக் கொள்ள வேண்டும். இதற்கு இரத்தக் காவு சாதம் என்று பெயர்..

*கறி சாதம் :* அடுத்ததாக வெட்டிய ஆடு, கோழி, பன்றி இறைச்சிகளை உப்பிடாமல் வேகவைக்க வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் உப்பு பார்க்கவோ, ருசி பார்க்கவோ கூடாது. வேகவைத்த பிறகு மூன்றாகப் பிரிக்கப்பட்ட பொங்கலில் இன்னொரு பகுதியை இதனுடன் வைத்து படையலாகப் படைக்க வேண்டும்.

## முப்பூசை

படையல் படைத்த பிறகு கங்கையிலிருந்து கொண்டு வந்த பச்சை வெட்டுக்கிளி தாங்கடையில் அப்படியே இருக்கும். இதோடு பன்றி, ஆடு, கோழி ஆகியனவற்றுக்கு முப்பூசை செய்யப்படும். அப்போதும் அந்த வெட்டுக்கிளி அப்படியே இருக்கும்.

இவ்வாறு முப்பூசை செய்து கொண்டு இருக்கும் பொழுது இந்தப்படசலில் இன்னொரு வெட்டுக்கிளி வந்த பின்னர்தான் மணிஓசை எழும். இந்தபூசை சிவராத்திரி அன்று மாயான பூஜை கொல்லையில் நடைபெறும். இன்னொரு வெட்டுக்கிளி வர தாமதமானால் அனைவரும் ஒன்று கூடி,

*எட்டுத் திசையில் கரங்கொண்ட*
*ஏவல் சூனியக் காரியே*
*மாயானம் காத்தருளும் மாயாசூர மாதினியே!*
*பச்சைப் பிணத்தை பிடுங்கித் திங்கும்*
*பேச்சி சடச்சி பெரியாண்டிச்சித் தாயே!*
*தில்லையாடி வள்ளியம்மா!*
*திரும்பி முகம் வாருமம்மா!*
*இராத்திரி வேளையிலே*
*பம்பை மேளத்திலே*
*பாடிவந்தோம் பாடலம்மா! /எங்க முகம் பாருமம்மா*
*எங்க குல பாவம் தீருமம்மா /பங்காளிகள் பச்சையோடு*
*பாதம் பார்த்துக் காத்து நிற்க /பரலோக தேவதையே*
*பரந்து நியும் வாடியம்மா /மாசானக் கொல்லையிலே*
*மண்டியிட்டுக் காத்திருக்கும் /தில்லைவன எல்லைவிட்டு*
*திரும்பி நீயும் வாருமம்மா /காவக்காரன் கொல்லையிலே*
*கால் கடுத்து நின்றிருக்கோம் / கருணையாய் மனமிறங்கி*

*காத்திடம்மா நாயகியே! / அங்காளித்தாயே!!*
*அங்காளம்மா!!*

என்று பாடல்கள் ஒலிக்க மேளங்கள் முழங்க பம்பைகள் அதிர ***பறந்துவாடி அம்மா உன் படையலை எடுத்துக்க*** பாடி முடிப்பதற்குள் ***மணியோசை கேட்டு மயங்கிவந்து விழுந்து விடும் எங்கள் பச்சை நாயகி*** என்கின்றனர்.

மூன்றாகப் பிரிக்கப்பட்ட மூன்றாவது பிரிவு பொங்கலை, மாயானத்திலேயே கறியும் சேர்த்து உண்ண வேண்டும். அப்பொழுது புதுப்பிணத்துச் சாம்பல் எடுத்து அதில் கற்பூரம் தீபம் ஏற்றி உடல் முழுவதும் பூசிக்கொண்டு படையலை வாழை இலை இட்டு அனைவரும் ஒன்றாக அமர்ந்து மீதம் வைக்காமல் மயானத்திலேயே சாப்பிட்டுவிட்டு ஒரே ஒரு முறை பெரியாண்டிச்சியை வணங்கிவிட்டு திருப்பிப் பார்க்காமல் வீட்டிற்கு வர வேண்டும். பெரியாண்டிச்சியின் பூசாரி அங்கு இருந்து (மாயானத்தில்) படையல்களைப் பிசைந்து நான்கு திசைகளுக்கும் காவை எடுத்துக்கொள்ள வீசி எறிய வேண்டும். மதுபானத்தை (சாராயம், கள்) சிலைமீது தெளித்து விடவேண்டும். இத்தனை பூசைகளுக்கும் பூசாரி துணியால் வாய்க்கட்டு கட்டியிருக்க வேண்டும். ஏனென்றால் பூசாரியின் மூச்சுக்காற்று சாமி மீது படக்கூடாது.

கோபம் கொண்டு எழுந்த அங்காள பரமேஸ்வரியை சிவன் விலங்கிட்டு மயானத்தில் வைத்திருக்கிறான். அப்படிப்பட்ட பெரியாண்டிச்சி ஊருக்குள் சென்று எல்லைவிட்டு எல்லை சென்று சூரசம்காரம் செய்யாமல் பாதுகாக்கவும் குழந்தை பெண்ணின் சிசு கலையாமல் இருக்கவும் படையலிட்டுக் காவு இடப்படுகிறது.

அங்காள பரமேஸ்வரியை - பெரியாண்டிச்சியை குலதெய்வமாகக் கொண்ட அனைவரும் மாயானத்தை புனிதக் கோவிலாக மதிக்கின்றனர்.

பேயுண்டு! பிசாசுண்டு எனப் பயந்து கொண்டு இடுகாட்டுப் பக்கமே செல்லத் தயங்குவோர் எண்ணிலடங்கா. இவர்களோ இடுகாட்டையே (மயானம்) புனிதக்கோவிலாக்கி இரவில் ஒன்று கூடி பெரியாண்டிச்சியைத் தொழுது வழிபடுவது வியப்பாக இருக்கிறது. வருடா வருடம் இப்படி இடுகாட்டிற்குச் சென்று வருவதால் இடுகாட்டுப் பயமே இல்லாமல் போய்விடும் என்றால் மிகையாகாது. இக்கடவுள் குடிகொண்டிருக்கும் ஒவ்வொரு பதிகளும் (மயானம்) கோவிலாகவே கருதப்படுகிறது.

## தெய்வ குத்தம்

தெய்வ குத்தமாக இக்குலவர்கள் நம்புவன பல. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை. 1. பூசை வழிமுறையில் தவறு செய்திருந்தாலோ, விரதத்தில் குறையிருந்தாலோ கோபங்கொண்ட சொரூபினி குடிவைக்கமாட்டாள். 2. உதிரப் படசலினால் (இரத்த க்ாவு சோறு ) கர்ப்பிணிப் பெண்களின் வயிற்றிலுள்ள சிசு அழியாமல் பாதுகாக்கப்படும் என நம்புகின்றனர். 3. குடும்பத்தில் யாரேனும் இறந்துவிட்டால் அப்பொழுது கறி சோறு தர முடியாது என்பதற்காக இந்த விழாவிலேயே கறிசோறு இடுகின்றனர். 4. தொடர்ந்து வழிபட்டால் எல்லா நன்மையும் கிட்டும் என்கின்றனர். பிள்ளைப்பேறு, தொழில் அமைதல், நோய் நொடியின்மை, திருமணமாகாதவருக்கு மணமாதல், திருமணதோசம் தீர்தல் போன்றனவும் நம்பப்படுகின்றது. 5. பரிகாரம் செய்தால் எந்தப் பிரச்சினையானாலும் நீங்கும் என்கின்றனர். 6. பேய்பிசாசு நடமாடும் இடம் என்று சொல்லப்படுகின்ற மயானம் கோவிலாகவே கருதப்படுகிறது. . தெய்வம் குடிகொண்டுள்ள புனிதக் கோவிலாகவே நம்பப்படுகிறது. இதற்கு உதாரணமாக மாற்றுருபம் கொண்ட சிவனே மயானத்தில் பிணம் எரித்ததைச் சொல்லலாம்.

*சகுனம் :* கருப்புத்துணி ஆகாது; செந்தூரப்பட்டு ஆடைகள் அல்லது சிவப்பு ஆடைகளையே பெண்கள் பயன்படுத்த வேண்டும். ஆண்கள் காவி உடையை அணிய வேண்டும். ருத்தராட்சமாலை அணியலாம்.

*சுபசகுனம் :* வீட்டிலோ அல்லது செல்லும் வழியிலோ பச்சை வெட்டுக்கிளியைக் கண்டால் நல்லது கிட்டும்; தெய்வமே வீட்டிற்கு வந்து போவதாகக் கருதப்படுகிறது.

## முடிவுரை

பச்சை மண் கரகத்தில் தீர்த்தம் கொண்டு வருதலே - இந்தக் கடவுள் இருப்பதற்கான சான்றாக எண்ணப்படுகிறது. இவர்கள் அலகு குத்துவதில்லை; அக்கினி எடுப்பதில்லை; மாவிளக்கு எடுப்பதில்லை; வீட்டுக்கொரு பொங்கல் வைப்பதில்லை; தனித்தனியாகப் பொங்கல் வைக்காமல் ஒரே பானையில் ஊரே ஒன்றுகூடிப் பொங்கலிட்டுக் கடவுளை வணங்கி ஆடிப்பாடி மகிழ்ந்திருப்பதால் ஒற்றுமை இவர்களிடையே நிலவுகிறது.

# மரப்பரை அங்காள பரமேஸ்வரி அம்மன், பெரியாண்டிச்சி அம்மன் வழிபாடு

**பி. சத்யா**, எம்.ஏ.,எம்.ஃபில்.,
*அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி, நாமக்கல்.*

## முன்னுரை

மக்கள் எந்தச் செயல் செய்வதாக இருந்தாலும் முதலில் தெய்வத்தை வழிபட்டுப் பின் அச் செயலைத் தொடங்குவார்கள். பழங்காலத்தில் இயற்கை வழிபாடும், பின்னர் உருவ வழிபாடும் தோன்றியது. மரப்பரை அங்காளபரமேஸ்வரி, பெரியாண்டிச்சி அம்மனைக் குலதெய்வமாக வணங்கும் அகரம் வெள்ளாஞ் செட்டியார், நாடார் மகாஜன சமூகம், வணிக செட்டியார், முதலியார் கொங்கு வேளாளக் கவுண்டர், வண்ணார் ஆகியோரின் வழிபாட்டு முறைகளைக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், வையப்பமலைக்கு மேற்குப் பக்கமாக 2½ கி.மீ. தொலைவில் அமைந்துள்ள கிராமம் ***மரப்பரை*** ஆகும். ஊருக்கு நடுவில் கிழக்குப் பார்த்தவாறு கோயில் அமைந்துள்ளது. இத்தெய்வத்தைக் குல தெய்வமாக வழிபட்டு நேர்த்திக் கடன்களையும் செய்கிறார்கள்.

## கோவில் அமைப்பும் திருப்பணியும்

அருள்மிகு அங்காளபரமேஸ்வரி அம்மன் கோயில் சுமார் ஐம்பது தலைமுறைகளாக இருந்து வந்துள்ளது. சிறு கோயிலாக இருந்ததைச் சீர்படுத்தவும், கோயில்; கோபுரத் திருபணிக்காவும் 29.08.2988 கால் கோள் விழா நடைபெற்றது. அகரம் வெள்ளாஞ்செட்டியார் மற்றும் அனைத்துப் பிரிவினரும் உடனிருந்து திருப்பணிகளைச் செய்து 28.08.1991-ல் முடிக்கப்பட்டது. அப்போது அருள்மிகு அங்காள பரமேஸ்வரி மூலஸ்தான் கோபுரமும், மற்றும் இருளப்ப சுவாமி கோபுரமும் பாவாடைராயர் சுவாமி கோபுரமும், பேச்சியாயி சுவாமி கோபுரமும், அகோர வீரபத்திர சுவாமி கோபுரமும் கலச தீர்த்தி அபிஷேகமும் செய்து முடிக்கப்பட்டது.

***கோயில் அமைப்பு :*** அங்காள பரமேஸ்வரி அம்மன் கிழக்கு பார்த்து அமைந்துள்ளது. இரண்டு இராஜ கோபுரங்களும் பக்க வாட்டில் நான்கு

சிறிய கோபுரங்களும் அமைந்துள்ளன. கோயில் வெளிப்புறத்தில் வடக்குப் பக்கமாக சிறிய வினாயகர் வேப்பமரத்தடியில் உள்ளார். தென்புறத்தில் அரசமரமும், வேப்பமரமும் கூடிய இடத்தில் பெரிய வினாயகர் உள்ளார். வினாயகருக்கு அருகில் ஐந்து நாக பாம்பு சிலைகள் உள்ளன கோயிலின் நுழைவு வாய்ப் பகுதியில் பல கடவுளர் உருவங்கள் பலவண்ணப் படங்களில் வரையப்பட்டள்ளன. அதன்பிறகு பித்தளையால் ஆகிய கொடிக் கம்பம் சமார் 13 அடி உயரத்திற்கு உள்ளது. அதில் அம்மனின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. கொடிக்கம்பத்தைத் தொட்டு வணங்கினால் அவர்களுடைய சந்ததிகள் நன்கு செழிப்புற்று விருத்தியடைவார்கள் என நம்பப்படுகிறது. இக் கொடிக் கம்பத்தின் அருகில் ஒரு சிறிய நந்தியும் உள்ளது. பக்கத்திற்கு ஒன்றாக உத்தர் சிலைகள் கருவறைக்கு போகக்கூடிய முன் நுழைவாயிலுக்கு இருபுறமும் அமைக்கப்பட்டிருக்கின்றன. தென்பகுதியில் உள்ள உத்தர் சிலைக்கு அருகில் திருத்தேர் அமைந்துள்ளது. அம்மன் வீதி உலா வருவதற்குத் தேர் பயன்படுகிறது. கருவறைக்கு முன் உள்ள அறையில் தென்புறத்தில் அகோர வீரபத்திரன் சுவாமி, பாவாடைராயன் சுவாமி சிலைகள் உள்ளன. வடக்குப் புறத்தில் இருளப்பன், சுவாமி பேச்சியாயி அம்மன் சிலைகள் கோபுரத்துடன் அமைந்துள்ளன.

*பெரியாண்டிச்சி அம்மன் சிலை :* கோவிலின் மதில் சுவருக்கு வெளியே பெரியாண்டிச்சி அம்மன் தாமரைப் பூவில் படுத்திருக்கும் நிலையில் உள்ளது. தெற்கே தலையும், வடக்கே பாதமும் கொண்டு தலையில் ஐந்து தலை நாகப்புற்றுடன் காட்சி தருகிறது. அம்மனின் திருநாக்கு வெளியே தெரியும்படி உள்ளது. திருக்கையில் வேல் தாங்கியும், மேனி முழுவதும் திருமஞ்சள் கொண்டு அலங்கரிப்பிலும் அம்மன் கோலம் உள்ளது. இதற்கு எதிரே ஒரு மணி மண்டபம் கட்டப்பட்டு உள்ளது. இது பக்தர்களின் தங்கும் வசதிக்காக அமைக்கப்பட்டுள்ளது. காலை, மதியம், மாலை என்று மூன்று நேரமும் பண்டாரம் குலத்தைச் சேர்ந்தவர்கள் முறைவைத்து (ஆண்டுக்கு ஒரு குடும்பத்தினர்) தினந்தோறும் பூசை செய்து வருகின்றனர். இக்கோயிலுக்கு *பம்பை* சிறப்பு வாத்தியமாக இசைக்கப்பட்டு வருகிறது.

*அங்காள பரமேஸ்வரி அம்மன் வரலாறு :* சென்னைக்கு அருகில் உள்ள மலையனூரில் அங்காளபரமேஸ்வரி அம்மன் பிறந்து சித்தளூரில் வளர்ந்தது என்றும் வேட்டைக்கு வந்து தங்கிய இடமே *மரப்பரை* என்றும் கூறப்படுகிறது. இதன் மறு அவதாரமாக பெரியாண்டிச்சி அம்மனும் குடி கொண்டது என்றும் கூறப்படுகிறது. அங்காள அம்மன் வேட்டைக்குப் புறப்படும் போது கருப்பண்ண சுவாமி, கன்னிமார் சுவாமி, இருளப்பன், பாவாடைராயன், அகோர வீரபத்திரன் சுவாமி ஆகியோர்

துணையோடு மிகுந்த கோபத்துடன் செல்லும் என்றும் இக்கோலம் ஊரையே அழித்துவிடும் என்று அம்மனின் கை, கால்கள் இரும்பு சங்கிலியால் கட்டப்பட்டுள்ளது என்று கிராம மக்கள் நம்புகின்றனர்.

## திருவிழாவும் - வழிபாடும்

ஆண்டு தோறும் மாசி மாதம் சிவராத்திரியில் மொத்தம் ஐந்து நாட்கள் திருவிழா நடைபெறும். திருவிழாவின் முதல் நாளன்று ***சக்தி*** அழைப்பார்கள். பிறகு பூசை முடித்துக் காப்புக் கட்டி கொடிக்கம்பத்தில் கொடியேற்றுவார்கள். இது பம்பைகள் முழங்க கோவில் தர்மகர்த்தா கிராம மக்கள் ஆகியோர் முன்னிலையில் நடைபெறும். அங்காளம்மனுக்குப் பச்சரிசி மாவும், அவரைக் கொட்டையும் பூசைக்கு வைத்து திருவிழாத் தொடங்குவார்கள். இந்த ஐந்து நாட்களுக்கு மட்டும் அம்மனுக்குப் பொங்கல் வைக்கமாட்டார்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

***முதல் நாள் வழிபாடு :*** திருவிழாவின் முதல் நாளன்று அம்மனுக்கு அன்னப்பறவை வாகனத்தில் அலங்காரம் செய்வார்கள்.

***இரண்டாம் நாள் வழிபாடு :*** திருவிழாவின் இரண்டாம் நாள் பெரியாண்டிச்சி அம்மனக்கு ஐந்து முகம் செய்து பூசை செய்து ஐந்து பூசாரிகளை அலங்காரம் செய்வார்கள். அருள்வாக்குடன் அந்த ஐந்து பூசாரிகளும் பம்பை முழங்க மிகுந்த ஆக்ரோசத்துடன் அருகிலுள்ள மயானத்திற்குச் சென்று ***காவசோறு*** என்னும் விழாவைக் கொண்டாடுவார்கள். அப்போது உயிருள்ள ஒரு பன்றியைக் கொன்று அதன் இரத்தத்தை முறத்தில் பிடித்து அதனுடன் அங்கு பொங்கல் வைக்கும் சோற்றினையும் கலந்து மக்களுக்குப் பிரசாதமாகத் தருவார்கள். குழந்தை பாக்கியம் இல்லாத பெண்கள் பிரசாதமாக அதை வாங்கி உண்டால் குழந்தை பாக்கியம் கிடைக்கும் என்பது நம்பிக்கை.

***மூன்றாம் நாள் வழிபாடு :*** மூன்றாவது நாளில் அம்மனுக்கு சிங்கமுக அலங்காரம் செய்வார்கள். பகலில் உச்சிகால பூசை செய்து ***சக்தி கரகம்*** எடுப்பார்கள். ஐந்து பூசாரிகள் தங்கள் தலைகளில் சக்தி கரகம் வைத்துக் கோயிலை உலா வருவார்கள். அப்போது கும்பத்தில் ***அலகு*** தலைகீழாக நிறுத்துதல், அலகு குத்துதல் போன்றவை பம்பைகள் முழங்க நடைபெறும். அப்போது கிராம மக்களில் சிலர் மேல் அம்மன் அருள் வந்து ஆடுவார்கள். அன்றும் அம்மனுக்குப் பச்சரிசி மாவும், அவரைக் கொட்டையும் பூசைக்கு வைப்பார்கள்.

***நான்காம் நாள் வழிபாடு :*** நான்காம் நாள் மாலை நேரத்தில் ஐந்து பூசாரிகள் தங்கள் உடம்பில் மஞ்சள், சந்தனம், சிவப்பு போன்றவற்றைப் பூசிக் கொண்டு, மாலைகள் அணிந்து கொண்டும் கையில் கத்தியுடன்

கோயிலில் இருந்து புறப்படுவார்கள். அப்போது உயிருடன் கறுப்பு நிற ஆட்டுக் கிடாயையும் உடன் அழைத்துப் போவார்கள். அவர்கள் மயானத்திற்கு அருள்பாவித்து ஆக்ரோசத்துடன் செல்வார்கள். அங்கு போய் மயானத்திலுள்ள மாசானத்தம்மனுக்குப் பூசை செய்து உயிருடன் உள்ள ஆட்டுக் கிடாயைக் கோயில் பூசாரி ஆக்ரோசமாகக் கடித்து இரத்தத்தைக் குடிப்பார். பின்னர் ஆட்டுக்குட்டியின் குடலை உருவி மாலையாகத் தனது கழுத்தில் போட்டுக்கொண்டும், ஈரலை வாயில் கவ்விக் கொண்டும் வருவார். அப்போது கிராம மக்கள் அவர்களிடம் ஆசி பெறுவார்கள். பேய், பிசாசு, பில்லிசூனியம் போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அங்கு அத்தீங்கு நீக்கப்படும். இவ்விழாவின் நான்காம் நாள் விழா சிறப்புடையதாகும். முக்கியமாக இந்நாளில் (நான்காம் நாள் விழா) மக்கள் கருப்பு உடையை அணிய மாட்டார்கள் என்றும் அது சுவாமிக்கு ஆகாது என்றும் மக்கள் நம்புகின்றனர். இது தலைமுறை தலைமுறையாக நடந்து கொண்டு வருகிறது. இதன் மூலம் நோய்கள் வராமல் அம்மன் மக்களைக் காப்பாற்றி எல்லாவித துன்பத்தையும் தானே தாங்கிக் கொள்கிறாள் என்று நம்பப்படுகிறது.

***ஐந்தாம் நாள் திருவிழா (பரிவேட்டை) :*** அங்காளபரமேஸ்வரி அம்மன் வழக்கமாக வில், அம்பு எடுத்துக் கொண்டு தேரில் பரிவேட்டைக்குச் சென்று வரும். அன்று இந்த வருடமும் சென்ற வருடமும் அம்மன் எந்தெந்த ஊருக்கு எந்தெந்த நாளில் வேட்டைக்குச் சென்று வரும் - செல்லும் என்ற விவரங்களைப் பற்றி ஊர் பெரியவர்களும், முதியோர்களும் பேசி மகிழ்வார்கள். இறுதியில் மஞ்சள் நீராடி ஒருவருக்கொருவர் வண்ணப்பொடிகள் பூசிக் கொண்டு திருத்தேரில் அம்மனை வைத்து ஊர்வலம் வருவார்கள்.

## அங்காளபரமேஸ்வரி அம்மன் வழிபாடு

பெரியாண்டிச்சி அம்மன், அங்காளபரமேஸ்வரி அம்மனுக்கு முதலில் நல்லெண்ணெய் அபிஷேகம் செய்து அம்மனை குளிர்ச்சி படுத்துவார்கள். அதன்பிறகு இளநீர், பால், திருமஞ்சள், பழவகைகள் அபிஷேகம் செய்வார்கள். அமாவாசை தினத்தன்று வெள்ளிக் கவசம் அணிவித்து தீபாராதனையுடன் பம்பை அடித்துப் பூசை செய்வார்கள். வெள்ளி, செவ்வாய் போன்ற சிறப்பான நாட்களில் அம்மனை மஞ்சளால் அலங்கரித்து பூமாலைகளால் அலங்கரிக்கின்றனர். தேங்காய், பழம்தட்டு வைத்தும் பூமாலை, பாவாடை வைத்து வழிபடுகிறார்கள். பெரியாண்டிச்சி அம்மன் ஆக்ரோச கோலத்துடன் காட்சி அளிப்பதால் வழிபடும் காலங்களும் உச்சி வேளைகளிலும் பெரியாண்டிச்சி அம்மனைக் கருவுற்ற பெண்கள் வணங்கக் கூடாது என்றும், அம்மன் வேட்டைக்குச்

சென்று திரும்பும் போது கருவுற்ற பெண்கள் எதிர்பட்டால் அவர்களின் உடல் நலத்திற்குத் தீமை உண்டாகும் என்று நம்பப்படுகிறது.

***திருவீதி உலா - வாகன அலங்காரங்கள் :*** அங்காள பரமேஸ்வரி அம்மனைக் குலத் தெய்வமாகக் கொண்டுள்ள அகரம் வெள்ளாஞ்செட்டியார் சமூகத்தினர், வணிகச் செட்டியார், நாடார்கள் போன்ற பல்வேறு சமூகத்தினர் இவ்விழாவின் போது குடும்பங்களும், உற்றார் உறவினர்களுடன் கலந்து கொள்கிறார்கள். அவ்விழாவின் போது திருவீதி உலா வரும் வாகன அலங்காரங்கள் சிறப்பாக அமைக்கப்படுகின்றன. 1. யானை வாகனம், 2.அன்னப்பறவை வாகனம், 3. கருட வாகனம், 4. சிம்ம வாகனம், 5.புலி வாகனம், 6. காமதேனு வாகனம், 7. குதிரை வாகனம் போன்ற வாகனங்களில் அம்மன் வீதி உலா வருகின்றது. அப்போது மக்கள் தங்கள் வீட்டிற்கு முன் தேங்காய், பழம், படையல் செய்கிறார்கள். அம்மனைக் குல தெய்வமாகக் கொண்டுள்ள குடும்பங்களின் வீடுகளுக்கு அம்மனின் திருவுருவச் சிலை பூசாரியால் ஆண்டுதோறும் கொண்டு செல்லப்படுகிறது. அப்போது மக்கள் தங்கள் வீட்டிற்கு அம்மனே வருவதால் தங்கள் துன்பங்கள் நீங்கும் என்று நம்புகிறார்கள்.

## நேர்த்திக் கடன் பணிகள்

தங்களுக்கு ஏற்படும் துன்பங்களை நீக்க அம்மனிடம் வேண்டுதல் வைக்கும் மக்கள் அந்த வேண்டுதல் நடந்து விட்டால் அம்மனுக்கு நேர்த்திக் கடன் செய்கிறார்கள். பெரியாண்டிச்சி அம்மனுக்கு எதிரில் உள்ள மணிமண்டபத்தில் வந்து தங்கி பக்தர்கள் தங்கள் நேர்த்திக் கடன் கழிப்பார்கள். கோவிலைச் சுற்றிலும் திருவிழாக் காலங்களில் சர்க்கரைப் பொங்கல், வெண்பொங்கல் போன்றவற்றைப் படைப்பர். மேலும் அங்காளம்மனைக் குலதெய்வமாக வணங்கும் மக்கள் தங்களின் நேர்த்திக் கடனை முப்பூசைகள் (ஆடு, கோழி, பன்றி) பலியிட்டுத் தங்கள் உறவினரை அழைத்து விருந்து படைக்கிறார்கள். அம்மனுக்குப் பாவாடை சாத்துதல், பெரியாண்டிச்சிக்குப் புடவை சாத்துதல், கோவிலில் மணி கட்டுதல், அன்னதானம் கொடுத்தல் போன்றவை சிறப்பான நேர்த்திக் கடன்கள் ஆகும். இக்கோயில் தெய்வத்தினைக் (அங்காளபரமேஸ்வரி) குலதெய்வமாக கொண்டாடும் மக்கள் தங்கள் குழந்தைகளுக்கு மொட்டை அடித்துக் காது குத்தி, சர்க்கரைப் பொங்கல், வெண்பொங்கல் வைத்து வழிபடுகிறார்கள். இவ்வாறு நேர்த்திக் கடன் வருடத்தின் பெரும்பாலான நாட்களில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

# நாட்டுப்புற வழிபாடும் - மக்கட்பெயரும்

**முனைவர் இரா. சந்திரசேகரன்**, எம்.ஏ., எம்.ஃபில்.,பிஎச்.டி.,
*கே.எஸ்.ஆர். கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருச்செங்கோடு.*

ஒரு பொருளை, ஒரு மனிதனை, ஓரிடத்தைக் குறிக்க எழுந்த குறியீடுகளே பெயர்கள் என்பர். ஒரு மனிதனை இன்னொரு மனிதனிடமிருந்தும், ஓர் உயிரினத்தைப் பிற உயிரினங்களிலிருந்தும், ஒரு பொருளைப் பிற பொருள்களிலிருந்தும், ஓர் இடத்தை மற்ற இடங்களிலிருந்தும் வேறுபடுத்திக்காட்ட எழுந்த குறியீடுகளே பெயர்கள் ஆகும். இடப்பெயர் ஆய்விற்குப் பல்துறை மற்றும் பன்மொழி அறிவு எந்த அளவிற்கு முக்கியமானதாக அமைகின்றதோ அதேபோன்று மக்கட்பெயராய்விற்கும் பல்துறை ஆய்வு தேவைப்படுகிறது.

புராணக் கதைகள், தத்துவங்கள், மக்களின் நம்பிக்கைகள், மதத்தைப் பற்றிய எண்ணங்கள் முதலியவற்றில் தெளிந்த அறிவு இருந்தால் மட்டுமே மக்கட்பெயர்களைப் பற்றிய ஆய்வைச் சிறப்பாகச் செய்யமுடியும் என்பர். பெயர்களை ஆய்வு செய்யும் அறிஞர்கள் இடப்பெயராய்வு மக்கட்பெயராய்வு என்ற இருவகையில் ஆய்வு நிகழ்த்துகின்றனர். மக்கட் பெயராய்வு தமிழுக்குப் புதியது அன்று. காலத்தால் முற்பட்ட தொல்காப்பியத்தில் பெயர்கள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. நிலப்பெயர், குடிப்பெயர், குழுப்பெயர், வினைப்பெயர், உடைப்பெயர், பண்புகொள்பெயர் என்று பொதுவான பெயர்கள் பற்றிய செய்தி காணப்படுகிறதே தவிர எந்த ஆட்பெயரும் குறிப்பிடப்படவில்லை. நன்னூலார் ஆண்பாற் உயர்திணைப் பெயர்களில் வெற்பன், பொருப்பன், மறவன், எயினன், இடையன், ஆயன், ஊரன், மகிழ்நன், சேர்ப்பன், துறைவன் எனவும் வருவன குறிஞ்சி முதலான ஐந்திணைகளாகவும் வரும் பெயர்கள் எனவும், சோழியன், கொங்கன் என்பன தேயத்தால் வரும் பெயர்கள் எனவும் கூறுகிறார்.

பெயரிடும் முறைகள் மக்களின் வாழ்வியலோடு நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளன. தமிழர்களின் பெயரிடு முறைகள் இறை வழிபாட்டோடு பின்னிப்பிணைந்துள்ளன. மக்கள் தாம் விரும்பும் சொற்களை இயற்பெயராக்கிக்கொள்ள உரிமையுண்டு. எனினும் பழங்காலந் தொட்டு இன்று வரை பெயர்களில் இறை உணர்வே முதலிடம் வகிக்கின்றது. இதற்குப் பெயரிடுமுறை தொடர்பான நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் ஆகியவை அடிப்படைக்

காரணங்களாகும். பெயரிடு முறைகளில் ஏற்பட்ட சிறுவளர்ச்சியால் பெயர்கள் மக்களின் கடவுட்கொள்கை, சமயச்சிந்தனை ஆகியவற்றை வெளிப்படுத்தும் வடிகால்களாக உருமாறின. பெருந்தெய்வ வழிபாடு மக்களிடையே ஆதிக்கம் பெறுவதற்கு முன்பு சிறுதெய்வங்கள் தொடர்பான பெயர்கள் செல்வாக்குப் பெற்றுத்திகழ்ந்தன. இவ்வடிப்படையில் நாட்டுப்புற மக்கட்பெயர்களில் சிறுதெய்வ வழிபாட்டின் பங்கினை இக்கட்டுரை ஆய்வு செய்கிறது. சிறுதெய்வ வழிபாடு என்பது கிராமப்புற மக்களின் வழிபாட்டு முறையில் முக்கிய இடத்தை வகிக்கிறது. தங்களின் இனத்திற்காகப் போராடி வீரமரணம் அடைந்தவர்களைப் பிற்காலத்தில் தெய்வமாகவே எண்ணி வழிபட்டனர். கிராமப்புறக் கோயில்களும் வழிபாட்டுமுறைகளும் ஒரு சமுதாயத்தின் சமய வாழ்க்கையை விளக்கி நிற்பனவாகும். இவ்வடிப்படையில் அமையப்பெற்ற தெய்வப் பெயர்கள் மக்கட் பெயர்களாக விளங்கி மக்களின் சமய உணர்வைக் காட்டும் அடையாளச் சின்னங்களாகத் திகழ்வதைக் காணமுடிகிறது.

நாமக்கல் மாவட்டத்தின் சில கிராமங்களில் ஊர்த் தெய்வமாகவும் காவல் தெய்வமாகவும் விளங்குகின்ற சிறுதெய்வங்களின் பெயர்களைத் தங்களின் குழந்தைகளுக்கு இடுவதை மரபாகக் கடைப்பிடித்து வருகின்றனர். குறிப்பிட்ட பெயர்கள் மூலம் அப்பிரிவினரை இன்னசாதியினர் என்றும், இவர்களுக்கு இதுதான் குலதெய்வம் என்றும் நம்மால் ஓரளவிற்கு இனம் காண முடிகிறது. பெரும்பாலும் குடும்பத்தின் தலைக்குழந்தைக்கு முதலில் குலதெய்வப் பெயரையிட்டு எல்லோரும் அழைக்கின்றனர்.

முன்னொரு காலத்தில் காத்தமுத்து என்பவன் தன் இனத்தவர்களுக்கு ஊறு விளைவித்தவர்களை எதிர்த்து வெற்றி பெற்று அடைக்கலம் கொடுத்துக் காத்தான். இவன் இறந்தவுடன் இவ்வினமக்களால் தெய்வமாக வழிபடப்படுகிறான். தன் இன மக்களுக்கு அடைக்கலம் கொடுத்து காத்ததினால் அடைக்கலம் காத்தான் என்று அழைக்கப்படுகிறான். இத்தெய்வத்தை வணங்குபவர்கள் தத்தம் குடும்பங்களில் பிறக்கும் மூத்த ஆண்மகவிற்கு காத்தமுத்து என்றே பெயர் இடுகின்றனர். ஒரு சில குடும்பங்களில் தந்தை, மகன், பெயரன் என அனைவரின் பெயரும் காத்தமுத்து என்றிருப்பதைக் காணலாம். இதே போன்று ஆண் தெய்வங்களின் பெயரைப் பெண்களுக்கு இடவேண்டிய நிலையில் அப்பெயர்கள் பெண்பாற் பெயர்களின் இலக்கணத்தோடு இகர ஈறு பெற்றும் ***அள்*** விகுதி பெற்றும் அமைகின்றன. சான்று : காத்தமுத்து.

கிராமப்புற மக்கள் தங்கள் வாழ்விற்கும் குழந்தைகளின் எதிர்கால முன்னேற்றத்திற்கும் காரணமாக விளங்கும் இத்தெய்வங்களைச் சிறப்பிக்கும் நோக்கில் இப்பெயரிடுமுறை அமைந்துள்ளதைக் காணமுடிகிறது. தாங்கள் வழிபடும் தெய்வத்தின் பெயரைத் தங்கள் குழந்தைக்கு இடுவதன் மூலம் நீண்ட ஆயுள் கிடைக்கும் என நம்பினர். எதிர்காலப் பயனைக் கருதியும், அச்சம் காரணமாகவும் வருகின்ற இடையூறுகளை நீக்கவும் இப்பெயர்கள் விளங்கின. சிறுதெய்வங்களின் பெயரோடு விளங்கும் குழந்தையிடம் தீயசக்திகள் அணுகாது என்ற நம்பிக்கையில் சிறுதெய்வங்களின் பெயரை இட்டனர். இத்தகைய நம்பிக்கை பெரும்பாலும் இக்கிராமங்களில் காணப்படுகின்றன. தற்கால நாகரிக வளர்ச்சியாலும், கல்வியறிவாலும் பெயரிடுமுறைகள் கிராமப்புறங்களில் மாற்றம் பெற்று வருவதைக் காணமுடிகிறது. பழமையான பெயர்களை விடுத்து எளிமையும் கவர்ச்சியும் மிகுந்த சொற்களைக் கொண்டு புதிய நோக்கில் வைக்கப்படுகின்றன. சிறு தெய்வ வழிபாட்டில் மிகுந்த பற்றுக் கொண்டவர்கள் இம்முறையில் பெயர்கள் இட்டாலும் பழைய மரபினைக் கைவிட முடியாத நிலையில் உள்ளமை தெரிகிறது. புதிய முறையில் இடப்படும் பெயர்கள் சிறுதெய்வங்களின் முதல் எழுத்து வருமாறு அமைத்துக் கொள்கிறார்கள். இவ்வாறு சிறுதெய்வ வழிபாட்டின் செல்வாக்கினைக் கிராமங்களில் காணப்படும் மக்கட்பெயர்கள் மூலம் அறிய முடிகிறது. தாங்கள் வழிபடும் இறைவனோடு தங்கள் சந்ததிகளை இணைத்துச் செல்லும் பாங்கினையும் காணமுடிகிறது.

## முடிவுரை

தெய்வப் பெயர்களை ஆய்வதன் மூலம் கடவுளைப் பற்றிய எண்ணங்கள், அவை தோன்றிய நிலை, வளரத் தொடங்கிய நிலைகளை அறிய முடிகிறது. இக்கிராம மக்களின் பெயர்களைக் கொண்டு ஒரு சமுதாயத்தில் நிலவும் பண்பாடு, பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், ஆளுமை முதலானவற்றை அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது. கிராமப்புற மக்களால் எதிர்காலப் பயனைக் கருதியும் அச்சம் கராணமாக வரும் இடையூறுகளைக் களையவும் இப்பெயர்கள் இடப்படுகிறது என்பதை அறியமுடிகிறது.

## துணைநூல்கள்


1. *மா. நயினார்* : பேரும்பெருமையும்
2. *ஆளவந்தார். ஆர்.* : கல்வெட்டில் ஊர்ப்பெயர்கள்.
3. *சாமி.பி.எல்.* : தமிழ் இலக்கியத்தில் தாய்த்தெய்வ வழிபாடு.

# கூத்தாண்டை : வழிபாட்டு மரபு

முனைவர் இரா. சந்திரசேகரன்,
எம்.ஏ.,எம்.ஏ.,எம்.ஏ.,எம்.ஏ.,பிஎச்.டி.,பிஎச்.டி.,
*பாரதியார் பல்கலைக்கழகம், கோவை.*

மகாபாரதக் கதையுடன் தொடர்புடைய கதைமாந்தர்களை மையப்படுத்தித் தமிழ்நாட்டின் பல இடங்களில் வழிபாட்டு மரபுகள் காணக்கிடைக்கின்றன. உண்மையில், அவ்வவ்வட்டார நாட்டுப்புற மக்கள் தத்தம் இயல்பான வழிபாட்டு மரபுகளாகக் குலத்தெய்வம், காவல்தெய்வம், ஊர்த்தெய்வம் என்று - போற்றி வந்த மரபுகளுக்குள் நிறுவன சமய மரபுகள் உள்நுழைந்து, இழைந்து, தமதாக்கிக்கொண்ட இயங்கியல் தான் இது. வலிமையாகவும் பரவலாகவும் மக்களிடையே நிலவும் மரபுகளை, நிறுவன சமயங்கள் தமக்குள் ஈர்த்துக்கொள்வதன் மூலம் தம்மை உறுதியாக நிலைநாட்டிக் கொள்ளமுயல்கிறது. கோவைக்கு அருகில் உள்ள சிங்கநல்லூரில் நடைபெறும் அரவான் வழிபாடு இந்தவகையில் மிகக் குறிப்பிடத்தக்கதாகும். கூத்தாண்டை என்று இப்பகுதி மக்களால் அழைக்கப்படும் வழிபாடு இது. ஆண்டுதோறும் நவம்பர் மாதத்தில் நடைபெறும் கூத்தாண்டை விழாவிற்குச் சுற்று வட்டாரத்தில் உள்ள ஊர்களிலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் பங்கேற்கின்றனர். கூத்தாண்டையைக் களப்பலி இடுதல் விழாவின் முக்கிய நிகழ்ச்சி. ஏறத்தாழ பதினாறு நாட்கள் நடைபெறும் இந்தவிழாவில் சிங்கநல்லூர், நீலிக்கோனாம்பாளையம் ஆகிய இரண்டு ஊர்களைத் தழுவி நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. கூத்தாண்டை விழாவை, அதன் தனித்தன்மைகளுடன் எடுத்துக் காட்டுவது இக்கட்டுரையின் நோக்கம்.

## கூத்தாண்டை : வரலாறு : வழக்காற்று நம்பிக்கை

கூத்தாண்டை விழா தொடர்பாக விழா பொறுப்பாளர்கள் வெளியிட்டுள்ள ஒரு சிறு துண்டறிக்கை, இவ்விழாவின் வரலாறு பற்றி மிகச் சுருக்கமாக அறிமுகம் செய்கிறது. ***அதர்மத்தை அழித்து, தர்மத்தை நிலைநிறுத்த வேத வியாசரால் எழுதப்பட்ட மகாபாரதத்தில், பஞ்சபாண்டவர்களின் நடுவரான அர்ஜுனனுக்கும் உலூபி என்ற நாக கன்னிகைக்கும் பிறந்தமகன் அரவான். மகாபாரதப்போரில்,***

*துரியோதனன் அரவானைக் கலிப்பலியாக்க விரும்பி, அவனுடைய சம்மதத்தையும் பெற்றுவிட்டான். இதனையறிந்த கிருஷ்ணபகவான் அந்தணர் வேடம்பூண்டு அரவானை அணுகி அவனது தந்தையர்களான பாண்டவர்களுக்கு வெற்றிகிட்டும் வகையில் போரில் களப்பலியாக வேண்டினார். இதனை அரவான் ஏற்று, தான் துரியோதனனுக்கு முன்னமே வாக்களித்து விட்ட படியால் போர் தொடங்கும் நாளுக்கு முதல்நாளே தன்னைப் பலியாக்கிக்கொள்ளக் கூறினான். பிறகு கிருஷ்ணபகவான் மணமாகாத கன்னி மகனை பலியிடுவது கூடாது என்ற போர் நெறிக்கிணங்க பூலுவகுலத்தைச் சேர்ந்த பொங்கியம்மாள் என்ற பெண்ணை எடையளவு பொன் கொடுத்து அரவானுக்குத் திருமணம் முடித்துவைக்கிறான். அரவான், துரியோதனனுக்குக் களப்பலியாக வாக்குக் கொடுத்த அமாவாசை நாளினைத் திருமணத்திற்கு ஒருநாள் பின்னதாக வருமாறு கிருஷ்ணர் செய்கிறார். திருமணம் முடிந்ததும் களப்பலியான பிறகு எட்டு நாட்களுக்கு நடைபெறும் மகாபாரதப்போரைக் காணும் மகிழ்ச்சியினையும், தன்னை வழிபடுவோர்க்கு வேண்டும் வரம் அளிக்கும் சக்தியையும் அரவானுக்கு வழங்கினார். இத்தகைய அரவானுக்கு ஆண்டு தோறும் நடைபெறும் விழாவில் கலந்து கொண்டு அரவானை வணங்குபவர்களுக்கு எல்லா வெற்றிகளும் கிட்டும்.* இந்த நம்பிக்கையிலேயே சிங்கநல்லூர் மற்றும் சுற்றியுள்ள ஊர்மக்கள் திரளாகக் கலந்துகொண்டு ஆண்டுதோறும் விழா எடுக்கிறார்கள்.

வட ஆர்க்காடு மாவட்டத்தில் அலிகளுடன் தொடர்புபடுத்தப்பட்டுக் கொண்டாடப்படும் கூத்தாண்டவர் வழிபாட்டிலிருந்து இது வேறானது. அலிகள் தொடர்பு இங்கே சிறிதளவு கூட இல்லை என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.

## கூத்தாண்டை : தொடர்புடைய ஊர்கள்

கூத்தாண்டை விழாவுடன் தொடர்புடையதாகக் கீழ்காணும் எட்டு சிற்றூர்கள் கருதப்படுகின்றன. இந்த எட்டு ஊர்களிலும் இருந்தும் மக்கள் திருவிழா சமயத்தில் மிக அதிகமாகக் கலந்துகொள்கிறார்கள்.

*1. நீலிக்கோனாம்பாளையம்* : இந்த ஊரில் உள்ள அத்திமரத்தில் தான் அரவானின் உயிர் இருப்பதாக நம்புகிறார்கள். (எனவேதான் உயிர் கொடுக்கும் நிகழ்ச்சிச் சடங்கு இங்கே நடைபெறுகிறது)

*2. பட்டனம்* : அரவான் எனப்படும் கூத்தாண்டை விழா முற்காலத்தில் இங்குதான் நடைபெற்று வந்ததாக வழக்காறு.

*3.* ***கள்ளிமடை*** : கூத்தாண்டையின் தாய்மாமனாகக் கருதப்படும் கிருஷ்ணருடைய ஊர் இது. கள்ளிமடைப் பெரியோர்கள்தாம் தாய்மாமன் சீர் செய்வார்கள்.

*4.* ***உப்பிலிபாளையம்*** (குளத்தேரி) : உப்பிலிபாளையம் பகுதியில் உள்ள குளத்தேரி தான் கூத்தாண்டை மங்கல நீராடிக் குளித்துவிட்டு வரும் கங்கை.

*5. சிங்கநல்லூர்* : கூத்தாண்டை விழா நடைபெறும் இடம். பூலவ இனப்பெண்ணாகிய பொங்கியின் ஊர்.

*6. ஒண்டிப்புதூர்*

*7. வெள்ளலூர்*

*8.* ***நஞ்சுண்டாபுரம்*** - ஆகிய இந்த மூன்று ஊர்களும் சிங்கநல்லூரைச் சுற்றியுள்ள ஊர்கள். கூத்தாண்டைக்கும், பொங்கிக்கும் உறவினர்கள் இந்த ஊர்களில் வசித்தார்கள்.

## கூத்தாண்டை : வழக்காற்றுக்கதை

கூத்தாண்டை வழிபாடு சிங்காநல்லூரில் வந்து அமைந்ததற்கு வழக்காற்றுக் கதை ஒன்று கூறப்படுகிறது. முற்காலத்தில் கூத்தாண்டைக் கோயில், பட்டனம் என்ற ஊரில் (சிங்கநல்லூருக்குத் தென்கிழக்கே இரு கி.லோ.மீட்டர் தொலைவில்) இருந்தது. ஒரு சமயம் திருவிழாவைக் காண நீலிக்கோனாம்பாளையம், சிங்கநல்லூர், உப்பிலிபாளையம் பெரியவர்கள் வெள்ளலூர் ஏரியைக்கடந்து சென்றனர். விழா முடிந்து திரும்பும்போது ஒரு மாலை ஏரிக்கு முன்னால் கிடந்தது. அதை எடுத்துப்பார்த்து விட்டு அப்படியே கீழே போட்டுவிட்டு மேலே வந்தனர். அப்போது ஏரிக்கால்வாயில் தண்ணீர் பொங்கிவந்து, அவர்களை மேலே செல்லவிடாமல் தடுத்தது. திடீரென்று தண்ணீர் வந்து வழியில் செல்லவிடாமல் தடுத்ததால் ஏதோ தெய்வக்குற்றம் என்று பலவாறு சிந்தித்து, கீழே விட்டெறிந்த மாலையைக்கையில் எடுத்துக்கொண்டு வர, இப்போது தண்ணீர் வற்றி வழி விட்டது. பிறகு அந்தமாலையை எடுத்துக்கொண்டு வந்த, நீலிக்கோனாம்பாளையம் பெரியவர்கள் தமது ஊரில் இருந்த அத்திமரத்தில் அதைச் சூட்டினர். அத்திமரத்தில் கூத்தாண்டையின் உயிர் இறங்கி நிற்பதாகக் கருதினர். நம்பிக்கை மரபு உருவாயிற்று. இந்த மாலையைக் கண்டெடுத்தபோது கூட இருந்த சிங்கநல்லூர் பெரியவர்கள் (அவர்கள் தாம் முதலில் மாலையைத் தொட்டு எடுத்தவர்கள்) இந்தத் தெய்வச் செய்கையில் தமக்கும் பங்கு இருப்பதாக நம்பித் தம் ஊரில் கோயில் கட்டமுனைந்தனர். கள்ளிச்செடிகள் நிறைந்த இடத்தின் நடுவில், ஒரு சிறு கல்லைவைத்து வழிபடத் தொடங்கினர்.. மாலையைக் கீழே விட்டெறிந்த உப்பிலிபாளையம் பெரியோர்கள் தம்

ஊரில் அதைக் கோரமுடியாத நிலையில், உப்பிலிபாளையம் எல்லையில் உள்ள குளத்தேரிக்குக் கூத்தாண்டை நீராடுவதற்கு வருமாறு நிகழ்ச்சி அமைக்கப்பட்டது. என்பது வழக்காற்றுப் பேச்சு. விழா அமைப்பு நிகழ்ச்சிகளில் உப்பிலிபாளையம் தவிர பிற ஏழு ஊர்ப் பெரியோர்களே பங்கேற்கின்றனர்.

## கூத்தாண்டை விழா : நிகழ்ச்சிகள்

கூத்தாண்டை விழா ஐப்பசி மாதத்தில் (அக்டோபர் (இறுதி) நவம்பர் மாதங்களில்) 15 நாட்கள் நடைபெறுகிறது. சுற்றிலும் உள்ள ஊர்மக்கள் கலந்து கொள்கின்றனர். குறிப்பாக எட்டு ஊர்மக்கள் தவறாமல் கலந்து கொள்கின்றனர். திருவிழாவையொட்டி நடைபெறும் நிகழ்ச்சிகளைக் கீழ்க்காணும் வகையில் அறிமுகம் செய்யலாம்.

*பூச்சாட்டுதல் :* விழாவுடன் தொடர்புடைய ஏழு ஊர்களின் பெரியவர்கள், அரவான் கோவிலுக்கு முன்புறம் கூடி விழா தொடங்குவது குறித்து முடிவு செய்கிறார்கள். பெரும்பாலும் செவ்வாய்க் கிழமை இரவு இது நடைபெறும். பூச்சாட்டு என்பது பூ - சாற்று என்பதன் திரிபு. அரவானுக்கு ஆவாரம்பூவினைச் சாற்றுகிறார்கள். பின் அத்திமரக் கிளைகளை, மூன்று பிரிவாக அமைத்து ஒடித்து, அரவான் அருகே நட்டு அதற்கு மாலை அணிவிக்கிறார்கள். கூத்தாண்டை விழா தொடங்கியதற்கான முதல் அடையாளம் இது.

*உயிர்ப் பலியிடுதல் :* அன்று இரவு நடுநிசியையொட்டிய வேளையில் பன்றி உயிர்ப்பலியாகக் கொல்லப்படுகிறது. ஒரு பன்றியை அரவான்கோவிலுக்குக் கொண்டு வந்து பூசைசெய்தபிறகு, ஊர்வலமாக அழைத்துச் சென்று விநாயகர் கோவிலில் பூசைசெய்யப்படும். பிறகு தெருக்களின் வழியாக விரட்டிக்கொண்டு செல்லப்பட்டு ஊருக்கே வெளியே உள்ள நாககன்னிகை சோயிலருகே பலியிடப்படுகிறது. ஊருக்குள் இருக்கும் தீயசக்திகள் பன்றியின் வழியாக ஊரைவிட்டு வெளியேறி பிறகு பலியிடுவதன் மூலமாக அழிக்கப்படுகின்றது என்பது மக்கள் நம்பிக்கை. பன்றியைப் பலியிடும் நிகழ்ச்சி இரவு இரண்டு, மூன்று மணி வரை கூட நடைபெறும். தெருக்களின் வழியாகப் பன்றி, மேளதாள ஒலிகளுடன் விரட்டிச்செல்லப்படும். பன்றிக்கு எதிரில் யாரும் வரக் கூடாது. வந்தால் தீய விளைவு நிகழும் என்பது நம்பிக்கை. கதவுகளை மூடிக்கொண்டு வீடுகளுக்குள் இருப்பார். தேவேந்திரகுல வேளாளமக்கள் இந்நிகழ்ச்சியில் முக்கிய பங்கேற்பார்கள்.

*மறுபூசை :* பன்றியை விரட்டிப் பலிகொடுத்த பிறகு எல்லோரும் வீடுகளுக்குச் சென்று குளித்துவிட்டு மறுபடியும் அரவான் கோவிலில்

வந்து கூடி மறுபூசை செய்வார்கள். இரவு இரண்டு மணிக்குமேல் நடைபெறும். இந்தமறுபூசையின் தொடர்ச்சி அடுத்தநாள் காலையில் தொடரும்.

***கம்பம் எடுத்தல் :*** ஒரு வாரம் கழித்து அடுத்த செவ்வாய்க் கிழமை கம்பம் எடுத்தல் அல்லது கம்பம் நாட்டுதல் நிகழ்ச்சி நடைபெறும் கூத்தாண்டைவிழாவில் இது மிகமுக்கியமான நிகழ்ச்சியாகும். அரசமரக்கிளையொன்றை வெட்டி, அதனை நீராட்டி, அலங்காரம் செய்து, கற்பூர தீபாராதனை செய்து பூசைசெய்வர். கம்பம் எடுப்பதற்கு நீலிக்கோனாம்பாளையம் மக்கள் உரிமையுடையவர்கள். உடையார் இனத்தைச் சேர்ந்தவர்கள் மண்ணினாலாகிய கலசம் ஒன்று செய்து தருவார்கள். இதற்குப் பூவோட்டுக் கலசம் என்று பெயர். கம்பம் நாட்டி பூவோட்டுக் கலசத்தையும் அருகே வைக்கிறார்கள். கம்பம் போட்ட பிறகு திருவிழா நாட்களில் ஊரில் ஏதேனும் அமங்கல நிகழ்வுகள் நடைபெற்றால் தீட்டு ஏற்பட்டதாகக் கருதி, பூவோட்டுக் கம்பத்தைமாற்றி வைத்து, பூவோட்டுக்கலசத்தை அதே இடத்தில் உடைத்து விடுகிறார்கள்.

இக்கம்பம் ***அக்கினிக்கம்பம்*** என்று அழைக்கப்படும். இவ்வட்டாரத்தில் உள்ள மக்கள் தம் உடம்பில் உள்ள மருகு, முகப்பரு ஆகியவற்றை நீக்கவும் வயிற்று வலி குணமாகவும், கூத்தாண்டையை வேண்டிக்கொண்டு உப்பு, மிளகு ஆகியவற்றை அடியில் போடுவர். குணமாகும் என்று நம்புகிறார்கள்.

***கூத்தாண்டை உருசமைத்தல் :*** ஒருவாரம் கழித்து அடுத்த செவ்வாய்க்கிழமை கூத்தாண்டைக்கு உருவம் அமைக்கப்படுகிறது. நீலிக்கோனாம்பாளையத்தில் உள்ள மூலக்கோவிலில் அத்திமரத்தில் கூத்தாண்டையின் உயிர் இருக்கிறது என்பது நம்பிக்கை. உரு சமைக்கும் நிகழ்ச்சி பெரும்பாலும் காலை 11.00 மணியளவில் நடைபெறும். இரண்டு பெரிய ஆறு அடி உயர மூங்கில்மரங்கள் குறுக்காக வைக்கப்பட்டு, கை, கால், உடல்பகுதிகள் வடிவமாக அமையும் வகையில் அத்திமர நார் இழைகளால் பின்னப்படுகின்றன. இதயம் அமையும் பகுதியில் அத்திமரத்தழைகள் வைத்துப் பின்னப்படுகிறது.

இத்தகைய உரு சமைக்கும் பணியில் ஈடுபடுபவர்களிடையே கூட ஒரு சடங்குமுறை உண்டு. கவுண்டர் இனப்பெரியவர்தான் தொட்டு எடுத்து, வணங்கி விட்டுத் தரவேண்டும். மற்ற இனத்தார் அதற்குப் பின்னரே உருசமைக்கவேண்டும். இந்தப் பணியில் ஈடுபடுபவர்கள் உணவு உண்ணாமல், நீர் மட்டுமே அருந்திக்கொண்டு விரதம் இருப்பார்.

***கூத்தாண்டை திருமஞ்சனம் :*** உருசமைக்கும் நிகழ்ச்சி முடிவதற்குப்பெரும்பாலும் பின்மாலைப் பொழுது ஆகிவிடும். அன்று இரவு எட்டுமணி அளவில் திருமஞ்சன நீராடல்நடைபெறும். கூத்தாண்டைக்கு நீராட்டல் எல்லாம் செய்து முடித்தபிறகு ஆயிரக்கணக்கான வாழைப் பழங்களால் அபிசேக பூசை செய்யப்படுகிறது கூத்தாண்டை உருவத்தைக் கவுண்டர் தோட்டத்திற்கு எடுத்துச்சென்று நீராட்டுவர் ; நீராடல் முடிந்தபிறகு அலங்காரம் செய்யப்படும். உப்பிலிநாயக்கர் சமூகத்தினர் இதைச்செய்வார்கள். அத்திரமரத் தழைகள், மற்றும் நார் இழைகளால் ஆக்கப்பட்ட உருவம் முழுதும் மறையுமாறு பல்வேறுவகை வண்ணப்பூக்களாலும், நகைகளாலும், அணிகலன்களாலும், பட்டு ஆடைகளாலும் அலங்காரம் செய்யப்படும்.

***கூத்தாண்டை உயிரெழுப்புதல் :*** அபிசேகபூசைகள், அலங்காரம், அலங்கார பூசை முடியும் போது ஏறத்தாழ நடுநிசியாகிவிடும் அதன்பிறகு கூத்தாண்டையை, அவர் உயிர் உறைவதாகக் கருதப்படும் அத்திமரத்தின் அருகே கொண்டு சென்று அதன் உச்சியில் கட்டிவிடுகின்றனர். அந்த இடத்திற்குப் பூசைசெய்வோர் யாரும் செல்வதில்லை. அத்திமரத்தோடு கட்டி, உருவத்திற்குப் பூசை செய்கிறார்கள். அப்போது அத்திமரத்தில் உறையும் உயிர், கூத்தாண்டை உருவத்தில் வந்து எழுவதாக நம்புகின்றனர். பூசை முடிந்ததும், அவ்வுருவத்தைக் கீழே இறக்கி வைக்கிறார்கள். இப்போது உயிருள்ள கூத்தாண்டை அங்கே எழுந்து நிற்கிறார் என்பது வழக்காறு.

*மாவிளக்கு :* மறுநாள் புதன்கிழமை காலை ஐந்து முதல் ஏழு மணி அளவில் விநாயகர் கோவிலில் மாவிளக்குப் பூசை நடைபெறும். ஒவ்வொரு வீட்டிலும் மாவிளக்கு செய்யப்பட்டு கொண்டுவரப்படும். முளைப்பாரி மற்றும் படையல்களையும் கொண்டுவருவர். எல்லா இனமக்களும் சமமாக இதில் கலந்துகொள்வர். ஆனால் கவுண்டர் இனப்பெண்மணிகள்தான் முதலில் மாவிளக்கெடுப்பர் என்பது வழக்காறு.

*பெண்கேட்டலும், மாப்பிள்ளைக்கு அழைப்பும் :* மாவிளக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே, கூத்தாண்டைக்குத் திருமணப்பெண் தேடும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. பூலுவ இனத்தைச் சார்ந்த பெரியோர்கள் பெண் கொடுக்க இசைவுதருகிறார்கள். அந்த இசைவை ஏற்றுக்கொண்டதன் அடையாளமாகப் பெண்ணுக்குப் பொன் தருகிறார் கூத்தாண்டை. அதையொட்டி பூலுவர்கள் திருமணம்செய்துகொள்ளச் சிங்கநல்லூர் வருமாறு அழைப்பு விடுகிறார்கள். காலை 9.00 மணி அளவில் இது நடைபெறும்.

***மாப்பிள்ளை வரவேற்பும் சீரும் :*** பூலவ இனப்பெண் வீட்டார் விடுத்த அழைப்பை ஏற்றுக்கொண்டு, கூத்தாண்டை சிங்கநல்லூருக்குப் பயணம் ஆகிறார். பூலவ இனமக்கள் கூத்தாண்டையை எடுத்துக் கொண்டு சிங்கநல்லூர் கூத்தாண்டைக் கோயிலுக்குக் கொண்டு செல்கின்றனர். அங்கே வரவேற்று மாலை சார்த்திப் பூசைசெய்கின்றனர். தொடர்ந்து மாப்பிள்ளை அலங்காரம் செய்யப்படுகிறது. பட்டாடைகள் - பட்டு வேட்டி, பட்டுத்துண்டு - அணிவிக்கப்பட்டு, உருமால் (முண்டாசு) கட்டப்பட்டு, பூமாலைகள் அணிவிக்கப்படுகின்றன. தங்கமுலாம் பூசப்பட்ட முகம் அணிவிக்கப்படுகிறது. இதற்கு உருமால் கட்டு சீர் என்று பெயரிட்டு அழைக்கப்படுகிறது. அதைத் தொடர்ந்து சீர்வரிசை செய்யும் வகையில் தட்டுக்களில் மிட்டாய்கள், பழங்கள், தின்பண்டகள், வெற்றிலைபாக்கு போன்ற தாம்பூலப்பொருட்கள் ஆகியவை வரிசைவரிசையாகக் கொண்டு வந்து வைக்கப்படுகின்றன. மாவிளக்குச் சீரும் நடைபெறுகிறது. மாவிளக்குகள் ஏந்திவந்து கோயிலுக்கு முன்வைக்கிறார்கள். நவதானியங்களால் ஆன முளைப் பாரிகளையும் எடுத்துவந்து கூத்தாண்டைக்குப் படைக்கிறார்கள். முளைப்பாரி எடுத்தல் என்பது வளமைச் சடங்காகும். காலை 9.00 மணி அளவில் சிங்கநல்லூர் வந்து சேரும் கூத்தாண்டைக்கு வரவேற்பு, மறு அலங்காரம், மாவிளக்கு போன்றவை செய்து முடிப்பதற்கு ஏறத்தாழ இரவு 9.00 மணி ஆகிவிடும்.

***திருக்கல்யாணம் :*** மாவிளக்கு முடிந்தவுடன் இரவு 9.00 மணி அளவில் திருக்கல்யாண நிகழ்ச்சி நடைபெறுகிறது. மணவறை அமைத்து மணமகனும் மணமகளும் அமர்ந்திருக்கச் சுற்றிலும் பூலுவ இனமக்கள் அதிகம் சூழ்ந்திருக்க, மாப்பிள்ளைவீட்டார், பெண் வீட்டார் என்ற அமைப்பில் அமர்ந்து பலவகையான சீர்ப் பொருட்கள் - தேங்காய் பழம், சந்தனம், பன்னீர் முதலிய மங்கலப்பொருட்களும் பிற உணவு, உபயோகப் பொருட்களும் வைக்கப்பட்டு, மங்கலப்பாட்டுக்கள்பாடி, தாலி அணிவிக்கப்படும் சடங்கு நடைபெறுகிறது. தொடர்ந்து திருக்கல்யாண நிகழ்ச்சிகளாகப் பூப்பந்து விளையாடுதலும், இணைமோதிரம் போடுதல் அருந்ததி பார்த்தல் போன்றவை நடைபெறுகின்றன. இவையெல்லாம் முற்காலத்தில் இல்லை. நவீன திருமண அமைப்புகளின் பாதிப்பாக இப்போது இவை நடத்தப்படுகின்றன. யாகம் வளர்த்து, வேத முழக்கங்கள் செய்வதும் இக்காலத்தில் நடைபெறுகின்றன. நாட்டுப்புற மரபுகளுக்குள் நிறுவன சமயச் சடங்குகள் உள்நுழைவதன் அடையாளம் இது. இத்தகைய திருக்கல்யாண நிகழ்ச்சி நடைபெறுவதற்கு இரவு 9.00 மணி ஆகிவிடும்.

***பள்ளியறைச் சடங்கு :*** இரவு 9.00 மணி அளவில் கூத்தாண்டை பள்ளியறைக்குச் செல்லும் நிகழ்ச்சி தொடங்கும். இதன் தொடக்கமாக

நீராட்டுதல் நடைபெறும். மாப்பிள்ளை அலங்காரம் நீக்கப்பட்டு, சுண்டைக்காய் ஊற வைத்த தண்ணீரைக் கூத்தாண்டையின் மீது ஊற்றி நீராட்டுகிறார்கள். சுண்டைக்காய்த் தூள் வைத்து நீராட்டுகிறார்கள். பன்னீர், இளநீர் போன்றவற்றால் நீராட்டுகிறார்கள். ஒவ்வொரு முறையும் சுண்டைக்காய் நீருற்றப்படுகிறது. நீராட்டல் முடிந்தவுடன் திருஷ்டி கழிப்பு நடைபெறும். இது சற்று வியப்பாக உள்ளது. வெண்சோறு, சிவப்பு சோறு, மஞ்சள் சோறு, பச்சைச்சேறு, கருப்பு சோறு என்று வண்ண வண்ணங்களில் சோறு சமைத்து, கூத்தாண்டைக்குப்படைத்துத் திருஷ்டி கழிக்கின்றனர். மீண்டும் கூத்தாண்டைக்கு அலங்காரம் செய்து, மாப்பிள்ளைக் கோலத்தில், பள்ளியறைக்கு எடுத்துச்செல்கிறார்கள். மணப்பெண்ணான பொங்கியம்மாள் அங்கே காத்திருக்கிறாள். கூத்தாண்டையைப் பள்ளியறைக்குள் அனுப்பிவிட்டுப் பள்ளியறைக் கதவுகள் அடைக்கப்படுகின்றன. வந்துள்ளோர் அனைவருக்கும் திருமண விருந்து நடைபெறுகிறது. இது சிறப்பான விருந்தாகும். இதை உண்பது தான், கூத்தாண்டை விழாவிற்கு வந்ததற்கான அடையாளமாகக் கருதப்படுகிறது. பள்ளியறைக்குள் அனுப்புவது இரவு 9.00 மணியளவில் நடைபெறும். விருந்து முடியும் போது இரவு 11.00 அல்லது 12.00 ஆகிவிடும்.

***அனுமன் வரவும், பொங்கி மறுப்பும்*** : பள்ளியறை நிகழ்ச்சிக்கு மறுநாள் வியாழக்கிழமை காலை 9.00 மணி அளவில் அனுமன் தேடி வரும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. போர்க் களத்தில் களப்பலியாவதற்கு இசைவு தந்துள்ள கூத்தாண்டையை அழைத்து வருமாறு கிருஷ்ணர் அனுமனை அனுப்ப, அனுமன் நீலிக்கோனாம்பாளையம், பொங்கிவீடு, மற்ற பிற இடங்களில் தேடுவதாக இந்தநிகழ்ச்சி, களப்பலிக்கு நேரமாவதால் சினம் கொண்ட அனுமன் கடைசியில் - பள்ளியறையில் கூத்தாண்டை இருப்பதை அறிந்தவுடனே மூன்றுமுறை காலால் உதைத்துப் பள்ளியறைக் கதவை உடைத்து உள்ளேயிருந்த கூத்தாண்டையை அழைத்துக் கொண்டு கிருஷ்ணர் கோவிலுக்குச் செல்கிறான். அப்போது பொங்கி, கூத்தாண்டையைக்களப்பலிக்குச் செல்லவிடாமல் தடுப்பாள். அதன் அடையாளமாக ஊர் எல்லைவரை வருவாள். பொங்கிசிலை எடுத்துவரப்படும். இதுநாள்முழுதும் நடைபெறும்.

***களப்பலிக்கு ஆயத்தம் : நீராடலும், அலங்காரமும்*** : கிருஷ்ணனிடம் செல்லுமுன் கங்கை நீராடல் என்பதாக உப்பலிபாளையம் குளத்தேரியில் நீராடல் நடைபெறும். ஏறத்தாழ இரவு எட்டுமணிக்கு இது செய்யப்படும் பிறகு மீண்டும் மறு அலங்காரம் செய்யப்படுகிறது. கூத்தாண்டைப்பாட்டு பாடிக்கொண்டே எடுத்துச் செல்வர். மறு அலங்காரம் செய்வதும் கூத்தாண்டைப்பாட்டு பாடுவதும் உப்பலிநாயக்கர் ஆவர்.

***கண் திறப்பும், பலிஊர்வலமும்*** : கூத்தாண்டைக்கு மறு அலங்காரம் முடிந்தபிறகு உடையார் இனத்தைச் சேர்ந்தவர்க்கு அழைப்புவிடப்பட்டு, அவர் மண்ணால் ஆன முகத்தை எடுத்துவருவார். சிங்கநல்லூர் அரவான் கோவிலுக்குள், கூத்தாண்டைக்கு மண்முகம் வைத்து, பிறகு தங்கமுகம் வைப்பர். பிறகு கூத்தாண்டைக் கோயிலுக்குள் எல்லாக் கதவுகளையும் மூடிவிட்டு, இருட்டில் ஆமணக்கு எண்ணெய் மட்டும் விட்டு விளக்கேற்றிக் கூத்தாண்டையின் கண்ணைத் திறந்து வைப்பர். ***கண் திறப்பு*** என்று இதற்குப்பெயர். அப்போது யாரும் பார்க்கக்கூடாது. கோயிலுக்குள் யாரும் செல்லக்கூடாது. கண்திறத்தவுடன் கூத்தாண்டை, வெளியே வந்து பூக்கம்பத்தை மூன்றுமுறை சுற்றிவிட்டுப் பலிஊர்வலம் புறப்படுகிறார். கவுண்டர் இனமக்கள் ஊர்வலத்தை எடுத்துச் செல்கின்றனர். இந்த ஊர்வலம் சாதிவேற்றுமை பாராமல் எல்லா இனமக்கள் வீதிகளிலும் செல்கிறது. கவுண்டர்வீதி, உடையார் வீதி, போயர் வீதி,கோனார் வீதி, உப்பிலிநாயக்கர்வீதி எனப்பல வீதிகளின் வழியாக ஊர்வலம் வந்து கட்டுச் சோற்று மேடைக்கு வந்து சேர்கிறது.

***கட்டுச் சோற்று மேடை :*** கூத்தாண்டையைக் கட்டுச் சோற்று மேடைக்குக் கொண்டு சேர்ப்பது மிக முக்கியமான நிகழ்ச்சி, வாணவேடிக்கைகளும், பறை போன்ற முழக்கு கருவிகளும் முழங்க, கட்டுச்சோற்று மேடைக்கு கூத்தாண்டை வருகிறார். பொங்கி, தன் கையால் கணவனுக்காக உணவை எடுத்துக் கொண்டு பின்னாலேயே வந்து கட்டுச்சோற்று மேடையில் சேர்க்கிறாள். கணவனுக்குத்தன் கையால், கடைசி உணவு ஊட்டுகிறாள். இந்த மேடையில் பெரும்பாலும் யாருக்காவது ***அருள்*** வந்துவிடுகிறது. ஆவேசமான கூச்சலோடும் ஆரவாரத்தோடும் அருள் வாக்கு சொல்லப்படுகிறது. குழந்தைப்பேறு இல்லாதவர்கள் குழந்தைப் பேற்றுக்காகவும், குழந்தைகளின் நோய்கள் தீரவும் குழந்தைகளை எடுத்து வந்து இங்கே வணங்குகிறார்கள். கட்டுச்சோறு கொடுத்து உணவளிக்கும் நிகழ்ச்சி முடிந்ததும், தான் சமங்கலியாக மரணமடைய வேண்டும் என்று விரும்பிய பொங்கி, பூவோட்டுக் கம்பத்தில் தீயில் விழுகிறாள் எனவும், பிறகு மாலையாக மாறிக் கூத்தாண்டையின் கழுத்தில் சேர்கிறாள் எனவும் நம்புகின்றனர்.

***கட்டுமரம் : களப்பலி :*** கூத்தாண்டையை மீண்டும் கோயிலுக்கு எடுத்து வந்து அங்கு திருமுகம் அழிக்கப்படுகிறது. அழிக்கப்பட்ட முகத்தைச் சிதைத்துப் பிரசாதமாக ஒரு சிறு பகுதியை ஊர்க்கவுண்டர் எடுத்துக்கொள்வார். பிறகு மற்றவர்கள் பிரசாதம் எடுப்பார்கள். ஆனால் இந்தப் பிரசாதத்தை யாரும் வீட்டிற்குள் கொண்டு செல்லக் கூடாது. கூத்தாண்டைக்கு அணிவித்த மாலைகள், பூசைப்பொருட்களைத் தேவேந்திர குலவேளாளர்கள் எடுத்துச் சென்று கிணற்றில் போடுவர்.

தொடர்ந்து கூத்தாண்டையை வெட்டும் நிகழ்ச்சி நடைபெறும் கூடியிருக்கும் மக்கள் அனைவரும் துயரத்தினால ஓ வென்று அழுது புலம்புவர். கூத்தாண்டையை வெட்டியதும் எல்லோரும் வீடு திரும்பிக் குளித்து நீராடிவிட்டு மீண்டும் கட்டுமர மேடைக்கு வருகிறார்கள். வெறும் கற்பூரம் மட்டும் ஏற்றி மறுபூசை செய்கிறார்கள். மணிஒலிப்பது போன்ற ஒலிகள் ஏதுமில்லாமல் மௌனமாக இது நடைபெறும். கூத்தாண்டை விழா என்பது இத்துடன் முடிவடைகிறது.

ஒரு வாரம் கழித்து மறுபூசை நடைபெறும். கூத்தாண்டைக்கு ஆவாரம்பூ மாலை அணிவித்து, அலங்காரம் செய்து, மங்கலபொருட்கள் வைத்துப் பூசை செய்கின்றனர்.

## கூத்தாண்டை தொடர்பான நம்பிக்கை மரபுகள்

1. கூத்தாண்டை விழாவின்போது வீடுகளுக்கு வெள்ளை யடித்து கறுப்பு சிவப்பு பொட்டு வைக்கவேண்டும். இல்லையென்றால் தீய சக்தி புகுந்துவிடும்.

2. பன்றியின் வழியாகத் தீய சக்தியை வெளியேற்றி அதைக் கொல்வதன் மூலம், ஊரின் தீய சக்திகள் அழிக்கப்படுகின்றன.

3. உடம்பிலுள்ள மருகு, மச்சம், தேமல் போன்றவை, பூக்கம்பத்தில் உப்பு மிளகு கலந்து தூவினால் நீங்கிவிடும்.

4. கூத்தாண்டை விழாவை புதுமணத் தம்பதியர் பார்க்கக் கூடாது, கலந்து கொள்ளக் கூடாது.

5. தாலியை முதலில் பொங்கிக்கு அணிவித்தபிறகு பெண்கள் அணிந்து கொண்டால், தாலி நலம் பெருகும் புடவை, மற்றும் பெண்களால் புழங்கப்படும் பொருட்களை பொங்கிக்குக் கொடுத்தபிறகு பயன்படுத்தவேண்டும்.

6. கூத்தாண்டைக்கு அத்திமர நார் எடுத்துக் கொடுக்கும் போது, மனதுள் வேண்டிக் கொண்டது எல்லாம் நிறைவேறும்.

7. கூத்தாண்டை விழாவின் போது - குறிப்பாகக் குளத்தேரியில் கங்கை நீராடலின் போது - கட்டாயம் மழைவரும். மழை வரவில்லையென்றால் அது தெய்வக்குற்றம்.

8. கூத்தாண்டை பூவோடு (அக்கினிச்சட்டி) எடுத்தால் நல்லது நடக்கும். நினைதத்து நிறைவேறும்.

9. வயிற்றுவலி, உடல்வலி போன்ற உடல் நோய்கள் நீங்க அத்தி நார் எடுத்துத் தருவதாக நேர்த்திக்கடன் செய்யலாம்.

10. மாவிளக்கு, முளைப்பாரி, புத்தாடைப் படையல் போன்றவையெல்லாம் நலம் தரும் நேர்த்திக்கடன்கள்.

11. விநாயகருக்குத் தேங்காய் சூரை விடுதல் போல, கூத்தாண்டைக்குப் பழங்களும், நவ தானியங்களும் சூரை விடப்படுகின்றன. சூரைவிடுவதைப் பலரும் மதித்து நசுக்கும் போது, தமக்குரிய தீமைகளும் நசுக்கப்படுகிறது.

## பல இனத்தாரும் பங்கேற்றல்

கூத்தாண்டத் திருவிழாவின் மிக முக்கியமான தனிச்சிறப்பே எல்லா இனமக்களும் - உயர்வு தாழ்வு பாராமல் பங்கேற்பது தான். ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் ஒவ்வொருவர் பொறுப்பேற்றுக் கூடி இணைந்து செயல்படுகின்றனர்.

| | |
|---|---|
| கூத்தாண்டை கோயில் பூசை | : *பூலுவர்* |
| பூச்சாட்டு | : *அனைத்து இனப்பெருமக்கள்* |
| பன்றி - பலி | : *தேவேந்திர வேளாளர்* |
| கலசம் செய்வோர் | : *உடையார்* |
| உருசமைத்தல் - நாரெடுத்தல் | : *கொங்கு வேளாளர்* |
| கூத்தாண்டை அலங்காரம் | : *உப்பிலிநாயக்கர்* |
| மாப்பிள்ளை அழைப்பு | : *பூலுவ இனமக்கள்* |
| மாவிளக்கு, முளைப்பாரி | : *அனைத்து இனப்பெண்கள்* |
| திருக்கல்யாண நீராட்டு | : *பூலுவர்* |
| மறு அலங்காரம் | : *உப்பிலிநாயக்கர்* |
| ஊர்வலம் | : *கொங்கு வேளாளர்* |
| கிணற்றில் இறங்குதல் | : *தேவேந்திரவேளாளர்.* |

இவ்வாறு சங்கிலிப்பிணைப்பைப்போல ஒவ்வொரு நிகழ்ச்சியும், ஒவ்வொரு இனத்தாருடைய பொறுப்பில் அமைக்கப்பட்டு இணைக்கப்படுகிறது. எங்காவது ஓரிடத்தில் - ஓர் இனத்தாரிடம் சிக்கல் ஏற்பட்டாலும் திருவிழா நின்றுவிடும். ஆனால் இதுவரை நின்றதில்லை. எல்லா இனமக்களையும் தழுவி, ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து, இயங்குகிற சமூகக் கூட்டமைப்பை, இந்த வழிபாட்டுச் சடங்குகளில் காணலாம்.

## கூத்தாண்டை : பொங்கி

கூத்தாண்டை விழா பற்றிய கதை, மகாபாரத அரவானோடு தொடர்புபடுத்தி உருவாக்கப்பட்டுள்ளது. இந்த வழிபாடு தாய்த்தெய்வ வழிபாட்டின் எச்சம் எனக் கொள்வதே பொருந்தும். இந்த

வழிபாட்டுக்குள் உள்ளே பொதிந்திருக்கும் வரலாற்றுக் கூறு என்ன என்பதை, மிகச் சுருக்கமாக இப்படி அறிமுகப்படுத்த வாய்ப்பு உள்ளது.

1. பொங்கி என்பவள் பூலுவகுலப்பெண். இவளுக்குத் திருமணமான மறுநாள் இவளுடைய கணவன் கூத்தாண்டை களப்பலி ஆகிறான். பொங்கி தீயில் விழுந்து இறந்துபோகிறாள். பிறகு அவள் இனமக்களால் குலத்தெய்வமாகப் போற்றப்படுகிறாள்.

-இதுதான் மூலச்செய்தி, கூத்தாண்டைக் கதைக்குள் உள்ள பொங்கி வழிபாட்டுமரபுகள் இதை உறுதிசெய்கின்றன.

களப்பலி என்பது கூட ***நவகண்டம்*** என்று கொங்குநாட்டுப் பகுதியில் முற்காலத்தில் அதிகம் வழக்கிலிருந்த தன்னைத் தானே கழுத்தை அறுத்துப்பலியிட்டுக் கொண்ட நிகழ்வாக இருக்கலாம். தன் தலைவனுக்காக - நேர்த்திக்கடனாக - கூத்தாண்டை தன்னையே நவகண்டமாக அளித்திருக்கக்கூடும்.

2. அடுத்த படிநிலையில் இந்த நாட்டுப்புற வழிபாட்டுமரபில் மகாபாரதக் கதை மரபு வந்து உள்ளே நுழைகிறது. கூத்தாண்டை என்பவன், மகாபாரத அரவானாக இணைவிக்கப்படுகிறான், நாட்டுப்புற வழிபாட்டு மரபுகளை நிறுவனசமய மரபுகள் தமதாக்கிக்கொள்ளும் செயல்வளர்ச்சி இது. நிறுவனசமய மரபுகள் - புராண இதிகாசக் கதை மரபுகள் வழியாக - நாட்டுப்புற மரபுகளோடு இணைந்து மக்களைத் தம் வயப்படுத்தும் முயற்சி. மகாபாரத அரவான், உள்ளூரின் பூலுவப் பெண்ணான பொங்கியை மணம் செய்து கொள்வதாகக் கதையாடல் நிகழ்கிறது.

3. மறைமுகமாக இன்னொரு மற்றமும் நிகழ்கிறது. பொதுவாக நாட்டுப்புற வழிபாட்டு மரபுகளில் - குறிப்பாக இனக்குழு - குலத்தெய்வ வழிபாடுகளில் தாய் வழிபாடே அதிகம் காணப்படும். தீப்பாய்ந்து மரணமடைந்த சுமங்கலிப் பெண்ணை அவர்தம் வழியினத்தவர் குலத்தெய்வமாக வழிபடுவது மரபு. கணவன் நவகண்டம் (களப்பலி) ஆனவுடன், மனைவி பொங்கி தீப்பாய்ந்து இறந்த பிறகு பூலுவ இனத்தின் ஒரு குலத்தினர் பொங்கியை குலத்தெய்வமாக வழிபட்டு வந்தமரபு இப்போது, ஆணதெய்வ மரபாக மாற்றப்படுகிறது. பொங்கிக்கு இருந்த முக்கியத்துவம் குறைந்து, கூத்தாண்டை, முன்னிலைப்படுத்தப்பட்டு பிறகு அரவானாக பௌராணிகப்படுத்தப்பட்டு, நிறுவனசமயங்களின் ஆணாதிக்க மரபுகளில் கரைக்கப்படுகிறது.

## குறிப்பு

1. ஆவணப்படுத்தலுக்கான அறிமுகக் கட்டுரை இது. கட்டுரை ஆசிரியரால் தரவுகள் நேரடியாக நிகழ்களங்களில் சேகரிக்கப்பட்டது. எல்லாநிகழ்வுகளிலும் பங்கேற்றுத்தவல்கள் தொகுக்கப்பட்டன.

2. ***கோவை இலக்கியவட்டம்*** என்னும் அமைப்பின் சார்பில் கொங்குநாட்டின் வழிபாட்டுமரபுகளை ஆவணப்படுத்தும் திட்டத்தின் கீழ். 1995, 1998, 2002 ஆகிய ஆண்டுகளில் நேரடி கள ஆய்வு, ஆவணப்படுத்தலுக்காக ஒலி, ஒளி பதிவுகள் செய்யப்பட்டுள்ளன.

3. உலகப்புகழ் பெற்ற அமெரிக்க மானுடவியல் பேராசிரியர் ***முனைவர் ஹைடல் பெடல்*** தம் மாணவ - மாணவியருடன் 1995 நவம்பர் மாதம் நடைபெற்ற கூத்தாண்டை விழாவிற்கு வந்து முழுமையாகப்பதிவு செய்தார். அதே வேளையில் குறிப்பாக (10, 11 - நவம்பர் 1995) கட்டுரை ஆசிரியர் மேற்பார்வையில் இ.சேனாவரையன், விஜயசாமுண்டீசுவரி, சஜ்ஜன்ராப் உள்ளிட்ட ஆய்வாளர்கள் பதிவுசெய்தனர். அமெரிக்கக் குழுவினருடனான பங்கேற்பு ஆய்வியல் அறிதல் பரப்பை விரிவு செய்தது. ஏறத்தாழ முன்னூறு புகைப்படங்கள் ஆவணப்படுத்தலுக்காக எடுக்கப்பட்டுள்ளன.

# ஒடுப்பறை - நாகரம்மன் விழாவும் வழிபாடும்

**முனைவர் சந்திராகிருட்டிணன்,** எம்.ஏ.,எம்.ஃபில்.,பிஎச்.டி.,
*வி.எல்.பி.ஜானகியம்மாள் கல்லூரி, கோவை-42.*

கன்னியாகுமரி மாவட்டம் இரணியலை அடுத்துக் காணப்பெறும் சின்னஞ்சிறிய சிற்றூர் ஒடுப்பறை ஆகும். இங்கு நாகரம்மன் -வினாயகர் - தங்கம்மை - தாயம்மை தெய்வங்களாக ஆலமரத்தடியில் அமர்ந்து பக்தர்களுக்கு அருள் பாலித்து வருகின்றனர். இக்கோயில் ஏழுர் செட்டி மக்களின் குலதெய்வக் கோவிலாகத் திகழ்கின்றது ஞாயிற்றுக்கிழமை மற்றும் ஆயில்ய நட்சத்திரத்தில் நாகரம்மன் கோவிலில் வழிபாடு நடைபெறும். எனினும் சித்திரை மாதம் ஆயில்ய நட்சத்திரமும் - பௌர்ணமி திதியும் இறுதி ஞாயிற்றுக்கிழமையும் கூடிய நாளில் நடக்கும் விழா மிகமிகப் போற்றுதலுக்கும் வணக்கத்திற்கும் உரிய வழிபாடாகத் திகழ்கின்றது.

இவ்விழாவில் நடக்கும் *கொளுக்கட்டை வழிபாடு* மிகவும் சிறப்பிற்குரியதாகும். காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்து வந்தவர்கள் ஏழுர் செட்டி மக்கள் ஆவார். முத்து ஒன்றினை அரசனிடம் செட்டியார் கொடுத்து அதனை செயினில் கோர்த்து போடக் கூறியிருக்கிறார். செட்டியார் அம்முத்தில் துளைபோட இயலாததால் அரசன் பிறரின் தூண்டுதலின் பேரில் செட்டியாரை அழைத்து முத்தில் துளைபோட்டுத் தரக் கூறியிருக்கிறார். செட்டியார் மிகவும் கவலைப்பட்டு இருந்தபோது அவரது மகள்கள் தங்கம்மை, தாயம்மை இருவரும் தந்தையிடம் கவலைப் படாதீர்கள் என்று கூறி கருப்பட்டிப் பாகில் நூலைக் கோர்த்து அதை முத்தில் துளைபோடவேண்டிய பகுதிக்கு அருகில் வைத்து அதனை எறும்புப் பற்றின் அருகில் வைத்துவிட்டனர். எறும்பு நூலை எடுத்துக்கொண்டு முத்தின் உள்ளே துளைபோட்டது. அடுத்தநாள் செட்டியார் அரசனிடம் துளை போடப்பட்ட முத்தினைக் கொண்டு போய்க் கொடுத்துத் தனது மகள்களின் அறிவுத்திறத்தைக் குறிப்பிட்டார். அரசன் இத்துணை சிறப்புமிக்க மகளைத் தானே அரசியாக்கிக் கொள்ள விழைந்தான், செட்டியாரின் மனம் வேதனைக்குள்ளாகியது. பெரிய குழிதோண்டி இரவோடு இரவாக இரு மகள்களையும் குழியில் போட்டு மூடிவிட்டு ஊரைவிட்டுச் செட்டி இனமே காவிரிப்பூம்பட்டினத்தை

விட்டுவிட்டுப் பல இடங்களுக்கும் சென்று பரவினர். அவ்வாறு வந்தவர்களில் சில பிரிவினர் இரணியல், பறக்கை, மிடாலம், கணபதிபுரம், குளச்சல், பதம்நாபபுரம், திருவிதாங்கோடு முதலான ஊர்களில் தங்கியதால் ஏழுர் செட்டி என்று அழைக்கப்பட்டனர்.

ஏழுர் செட்டி மக்கள் எங்கிருந்தாலும் ஒடுப்பறை நாகரம்மனின் கொளுக்கட்டைத் திருவிழாவிற்கு வந்து விடுகின்றனர். ஊர்விட்டு ஊர் வந்த மக்கள் தங்கள் கையிலே இருந்த அரிசி மாவைத் தேங்காய் மற்றும் சர்க்கரை, கதலி வாழைப்பழம் போன்றவைகளுடன் கலந்து உருண்டை பிடித்து வாழை இலையில் கலந்து கட்டுவதற்கு கத்தாழையின் வேரை நாராகப் பிரித்துக் கொழுக்கட்டையைக் கட்டி மண்ணில் குழிதோண்டி அடுப்பாக்கி வேக வைத்து இறைவனுக்குப் படைத்தார்களாம். இந்த முறைப்படி இன்றும் செய்யப் பெற்று வருகின்றது. இந்த வழிபாட்டை அம்மன் ஏற்றுக்கொண்டதன் அடிப்படையில் செட்டி சமுதாயத்தைச் சார்ந்த பெரியவர் ஒருவருக்குக் கனவாக வந்து இதேபோல் கொழுக்கட்டை வழிபாட்டைத் தொடரக் கூறியதாகக் குறிப்பிடுவர். இவ்வாறு அவர்கள் வழிபட்ட நாள் சித்திரை மாதம் இறுதி ஞாயிற்றுக்கிழமை ஆகும். ஆயில்யம் நட்சத்திரம், பௌர்ணமி திதி இருந்தால் அன்று கொழுக்கட்டை வழிபாடு செய்யப்பெறும். எனவே பல ஆண்டுகளுக்கு ஒருமுறையே இவ்விழா நடைபெறும். ***கொழுக்கட்டை மருக்கட்டை தின்னுபாரு கோட்டாற்றுச் செட்டியைக் கட்டிப் பாரு*** என்பது நாட்டுப்புறப் பாடலாகும். எனவே கொழுக்கட்டை குறித்து மக்கள் மத்தியில் இருந்த செல்வாக்கினையும், கோட்டாற்றுச் செட்டிக்கும் கொழுக்கட்டைக்கும் உள்ள தொடர்பினையும் அறியலாம். ஒடுப்பறை நாகரம்மன் கோவிலில் உள்ள ஆலமரத்தின் இலைகளை ஆடு மாடுகள் உண்பதில்லை என்று குறிப்பிடுவர்.

தங்கம்மை, தாயம்மைக்கு ஒடுப்பறை நாகரம்மன் கோவிலில் தனிச்சன்னதி காணப்பெறுகின்றது. செட்டி மக்கள் அரசருடன் மிகவும் நெருக்கம் வாய்ந்தவர்களாக இருந்ததையும் பெண்கள் மிகவும் அறிவுக்கூர்மை வாய்ந்தவர்களாக இருந்தமையையும் ஒடுப்பறை கதையால் அறியமுடிகின்றது. அரசருக்குக் கூட பெண்ணைத் திருமணம் செய்து கொடுக்காத குலமானம் பெரிது என்று நினைத்து வாழ்ந்த குலம் செட்டி குலம் என்பது இக்கதையால் அறியலாகின்றது. காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்து ஏதோ ஒரு காரணத்திற்காகச் செட்டிமக்கள் புலம் பெயாந்தமையையும், தங்களது வழிபாட்டுச் சின்னங்களாகிய விநாயகர், மற்றும் நாகரம்மனை வைத்து வழிபட்டதுடன் தங்கள் குலத்தைக் காக்கும் தெய்வமாக தங்கம்மை, தாயம்மையை நினைத்து வழிபட்டு வருகின்றமையையும் காணலாம்.

# திருச்சுழி-மாணிக்கக்கூத்த ஐயனார் வழிபாட்டுச் சடங்குகள்

**செ.சரவணன்**, எம்.ஏ.,பி.எட்.,எம்.ஃபில்.,
*தியாகராசர் மழலையர் தொடக்கப்பள்ளி, மதுரை-625 009.*

பாண்டிய மன்னர்களின் புண்ணியத்தலங்கள் பதினான்கினுள் பத்தாவது தலமாக விளங்குவது திருச்சுழி. மதுரையிலிருந்து 50 கி.மீ. தொலைவில் விருதுநகர் மாவட்டத்தில் இவ்வூர் அமைந்துள்ளது. இவ்வூரின் வடக்குப் பகுதியில் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு அருகில் மாணிக்கக் கூத்த ஐயனார் கோயில் அமைந்துள்ளது. (இக்கோயில் வெள்ளையாபிள்ளை கோயில் எனவும் அழைக்கப்படுகிறது) இக்கோவிலில் நடைபெறும் வழிபாட்டுச் சடங்குகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## வெள்ளையாபிள்ளை கோவில் - பெயர்க்காரணம்

மாணிக்கக்கூத்த ஐயனார், திருச்சுழி கிராமத்தில் ஆற்றங்கரையில் எழுந்தருளியிருக்கும் காவல் தெய்வமாகும். காவல் தெய்வங்கள் பொதுவாக ஊருக்கு வெளியில் இருந்து மக்களைக் காப்பதாக நம்பிக்கை இன்றும் நிலவி வருகின்றது. காவல் தெய்வமான ஐயனாரைப் பொறுத்தவரை ஐயனார் மக்களுக்கு மட்டுமன்று ; கிராமப்புறப் பெண் தெய்வங்களுககும் சேர்த்தே காவல் தெய்வமாகிறார். இக்கோவிலை வெள்ளையாபிள்ளை என்பவர் செப்பனிட்டுக் கட்டி மேற்பார்வை செய்து வந்தார். நாளடைவில் இக்கோவில் அவரது பெயராலேயே வெள்ளையாபிள்ளை கோவில் என வழங்கப்படலாயிற்று. இக்கோவில் மாணிக்கக்கூத்த ஐயனார் கோவில் என்று சொன்னால் பெரும்பாலான மக்களுக்குத் தெரியவில்லை. இறைவனுக்குத் தொண்டு செய்தவரின் பெயராலேயே இக்கோயில் வழங்கப்படுகிறது. இறவைனின் அடியார்களுக்குச் செய்யும் தொண்டு இறைவனுக்குச் சென்று சேர்வது போல, இறைவனுக்குச் செய்த தொண்டு இறைவனின் அடியவர்க்குப் பெயரைப் பெற்றுத் தந்தது.

## கோவில் அமைப்பு

புண்ணிய நதியான குண்டாற்றின் கரையில் இக்கோவில் அமைந்துள்ளது. இக்கோவில் கோபுரங்களுடனும், கோவிலின்

முன்புறம் கழுவடி கருப்பசாமி கோயிலும் அமைந்துள்ளது. இது கோட்டைச் சுற்றுச் சுவருடன் நிற்கிறது. அதற்கு முன் பலிபீடம் உள்ளது. கோவிலின் உள்ளே ஐயனாரின் வாகனமான யானையின் உருவச்சிலை கல்லால் செதுக்கப்பட்டு அமைக்கப்பட்டுள்ளது. அதனையடுத்துக் கருவறை ; கருவறையின் வாயிற்புறம் வலதுபுறம் ஐயனாருக்கு வலதுபுறமாக விநாயகர் சிற்பம் இடதுபுறமாக வள்ளி தெய்வானையுடன் முருகன் எழுந்தருளியிருக்கும் சிற்பங்களும் உள்ளன.

கருவறைக்குள் மாணிக்கக் கூத்த ஐயனார் பொற்கலை. பூர்ணகலை அம்மையின் திருவுருவங்கள் ஒன்றரை அடி அளவில் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. கருவறையில் வெளியில் மாணிக்கக்கூத்த ஐயனாருக்கு இடதுபுறம் ஸ்ரீஇலாடசன்னாசி, ஸ்ரீஅக்கினி வீரபத்திரசாமி, ஸ்ரீஇராக்காச்சி அம்மன் முதலிய தெய்வங்களும் வலதுபுறம் ஸ்ரீஇருளாயி அம்மன், ஸ்ரீஇருளப்பசுவாமி, ஸ்ரீபெரிய கருப்பணசாமி, ஸ்ரீசின்னக்கருப்பணசாமி மற்றும் சப்தகன்னியர்கள் அருகே விநாயகர் திருவுருவச் சிலையும் அமைக்கப் பட்டுள்ளன.

## வழிபாடு

மாணிக்கக் கூத்த ஐயனார் கோவில் திருவிழாவானது ஆண்டுதோறும் ஆனிமாதம் அமாவாசைக்கு முன் வரும் வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய மூன்று தினங்கள் மிகச்சிறப்பாக நடைபெறும். வைகாசி மாதமே இக்கோவிலுக்குரிய பங்காளிகளும் சம்பந்தக்காரர்களும் ஒன்று சேர்ந்து இக்கோவில் திருவிழாவினை நடத்துவது குறித்து நல்லநாள் நேரம் பார்த்துச் சாமி கும்பிட முடிவு செய்வர். ஆனிமாதம் திருவிழா வெகுவிமரிசையாக மேளதாளங்களுடன் சிறப்பாகக் கொண்டாடப்படும். இக்கோவில் திருவிழாவின் ஆரம்ப காலங்களில் மயிலாட்டம், ஒயிலாட்டம் போன்ற மகிழ்ச்சியைத் தரக்கூடிய கலைகளும், சிலம்பாட்டம், புலியாட்டம், மானாட்டம் போன்ற வீரவிளையாட்டுக்களும் நடைபெற்றன. நாளடைவில் இவை மறைந்து இவற்றின் இடங்களைத் திரைப்படங்கள் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளன. இக்கோவில் மாதம் ஒருமுறை பௌர்ணமி பூசை நடைபெறும். மார்கழி மாதம் முப்பதுநாட்களும் காலையில் பூசனைகள் நடைபெறும். சிவராத்திரியன்று ஒரே ஒருநாள் பூசை தற்போது நடைபெறுகின்றது. வெள்ளி, செவ்வாய்க்கிழமைகளில் வாரந்தோறும் பூசை நடைபெறுகிறது. இக்கோவில் கட்டிய ஆரம்ப காலத்தில் வைகாசி மாதம் சாமி கும்பிட்டுப் பூசை நடத்தியுள்ளனர். பின்னர் மாசிமாத இறுதியில் மாம்பழபூசை செய்து இறைவனை வழிபட்டனர் என்று தகவலாளி இராநாதபிள்ளை

மற்றும் ந.சிவஞானப்பிள்ளை ஆகியோர் தெரிவிக்கின்றனர். மூன்று நாட்கள் திருவிழா முடிந்தபின் வரி கட்டியவர்களுக்குக் காலாஞ்சி வழங்கப்படும். பங்காளிகளும் சம்பந்தக்காரர்களும் இணைந்து சாமிகும்பிடுவது இக்கோவிலின் தனிச்சிறப்பாகும்.

| | |
|---|---|
| அக்னி வீரபத்திரசுவாமி | - கண்ணமங்கலம் |
| இலாட சந்நியாசி சுவாமி | - கல்லூரணி |
| பெரிய கருப்பண்ணசுவாமி | - வேளாநேரி |
| சின்னக்கருப்பண்ணசுவாமி | - சூரனூர் |
| இராக்கச்சியம்மன் | - வைரவனேந்தல் |
| இருளாயம்மன் | - வேளாநேரி |

மேற்படி சுவாமிகளுக்கு மேற்படி ஊரைச்சேர்ந்தவர்கள் தான் மருளாடிகளாக இன்றும் இருந்து வருகிறார்கள்.

## முதல்நாள் திருவிழா

வக்கீல்பிள்ளை என்ற குடும்பத்தினரின் இல்லத்திலே பூசைப்பெட்டி இருக்கும். கிழக்குத்தெருவில் இவ்வீட்டிலிருந்து பூசைப்பெட்டியை மேளதாளத்துடன் எடுத்து வந்து சுத்தம் செய்வர். மாலை நேரத்தில் இத்திருவிழாவானது ஆரம்பமாகும். பூசைப்பெட்டியினை மாட்டுவண்டியில் ஏற்றி மருளாடிகள் சூழ்ந்து வருவர். ஆற்றிலே புனித நீராடியபின் மருளாடிகள் சந்தனக்கட்டைகளை எரித்து அக்னிக்கரகம் வளர்ப்பர். பின்னர் அக்கினிக்கரகத்தில் அக்னிவார்த்த சாம்பல் மற்றும் திருநீறு தெர்ப்பை புல் இவற்றை வைத்து அக்கினிக்கரகத்தைப் பூச்சுற்றி அழகுபடுத்துவர். மேளதாளங்களின் இசையில் ஆண்டவன் அருளால் மருளாடிகளுக்கு அருளை இறக்கி, அருள் வந்தவுடன் மருளாடிகளின் கரங்களின் கரகச் செம்பினைக் கொடுப்பர். பக்தியுடன் அதனைக் கோவிலுக்குக் கொண்டு சென்று இறைவனுக்குச் செலுத்துவர்.

*பச்சைப்பழம் பரப்புதல் :* தட்டைப்பயிறு, பாசிப்பயிறு, சுண்டல் முதலிய பயிறு வகைகளை அவித்து சர்க்கரைப் பொங்கல் நைவேத்தியம் செய்து படைப்பர். பூசை முடிந்தபின் அவற்றை பக்தர்களுக்குப் பிரசாதமாக வழங்குவர்.

## இரண்டாம் நாள் திருவிழா

திருச்சுழியின் முக்கிய வீதிகளில் இரண்டாம் நாள் கரகங்களைச் சுமந்து கொண்டு மருளாடிகள் வருவர். இரண்டு கைகளிலும் கரகத்தினை அருளோடு மருளாடிகள் மாற்றி மாற்றி தூக்கிப் போட்டுக் கைகளில்

பிடித்துக் கொண்டு வருவர். கரகம் எடுத்து வரும்போது பின்பகுதியில் பெண்கள் வருவர். கரகம் வரும்போது கரகம் கொண்டு வருவது தடைப்படுமாயின் அருள் இறங்கிய மருளாடிப் பெண்கள் (இராக்கச்சி அம்மன்,இருளாயி அம்மன்) அண்ணா அண்ணா என்றுஉரக்கக்கூவி அழைப்பார்கள். அப்போது எலுமிச்சம்பழத்தை அறுத்தும் திருநீற்றை அள்ளி நான்கு திசைகளில் இறைவனை வேண்டி வீசவும் கரகம் நகரும் இதுகுறித்து மக்களிடையே நிகழ்ந்த கதையொன்று வழக்கில் உள்ளது.

பல ஆண்டுகளுக்கு முன்னர் கிதுவா என்றழைக்கப்படும் பட்டுநூல் தயாரிப்பாளர்கள் (தற்போது திருச்சுழியின் முக்கியக் கடைவீதிப் பகுதியில் குடியிருக்கின்றனர். இவர்கள் செட்டியார் அல்லது சௌராட்டிர இனத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் எனக் கருதப் படுகின்றது.) கரகத்தினைச் சுமந்து இருகைகளிலும் மாற்றி மாற்றி உயர எழும்ப மருளாடிகள் கொண்டுவந்தனர். அப்போது பட்டுநூல் காரர்கள் மந்திரவாதிகளின் துணைகொண்டு மைவைத்துக் கரகங்களை அந்தரத்திலே நிற்கச் செய்துவிட்டனர். கரகங்கள் அந்தரத்தில் நிற்க அனைவரும் திகைத்தனர். மைவைத்த மந்திரவாதி கோவிலுக்கு அருகிலுள்ள பனைமரத்தில் இருந்தான். கரகங்கள் அந்தரத்தில் நிற்க பெண் தெய்வங்கள் அண்ணா அண்ணா என்று அழைத்தனர். அப்போது இருளப்பசாமி முன்வரவும், அக்னி வீரபத்திரருக்குக் கரகம் எடுப்பவர் அடுத்தும் வந்தனர். அப்போது கோவில் தலைமைப்பூசாரியின் அருள் வாக்கின்படி எலுமிச்சம் பழங்களை அறுத்து மேலே எறிந்து, விபூதியினை வீசக் கரகங்கள் கீழே வந்தன. எனவே இன்றளவும் கரகங்களைக் கையில் பிடித்துக் கொண்டே செல்கின்றனர். பனைமரத்திலிருந்து மந்திரவாதி தீயசெயல் செய்ய முற்பட்டதால் மேலிருந்து கீழே விழுந்து மாண்டுபோனான் என்று கதை கூறுகின்றனர்.

கரகமானது வருவதற்கு முன் கீழரதவீதியிலுள்ள தெருக்காத்த முனியப்பசுவாமிக்குப் பொங்கலிடுவர் கரகம் வந்தவுடன் தீப ஆராதனை செய்தபின் நகர்வலம் கீழரதவீதி, தெற்குரதவீதி, மேற்குரதவீதி, மாரியம்மன் கோவில், திரௌபதி அம்மன் கோவில் வந்தபின் வடக்குரதவீதி மற்றும் முக்கிய வீதிவழியாக கரகங்கள் கொண்டு வரப்பட்டு, கோயிலை வந்தடைகின்றன.

## மூன்றாம் நாள் திருவிழா

ஞாயிற்றுக்கிழமை திருச்சுழியின் தெருவில் உள்ளோர் காரக்கட்டு வெள்ளாளர் அனைவரும் மேளதாளங்களுடன் சென்று பொங்கல் வைத்துச்சாமி கும்பிடுவர். உள்ளூர் மக்களே முதலில்

பொங்கல் வைத்துப் படைப்பர். பின்னரே வெளியூர்க்காரர்கள் பொங்கல் வைத்துப் படைப்பர். திங்கட்கிழமை பகலில் பூசைப்பெட்டியினை வக்கீல்பிள்ளையின் வீட்டில் தனியறையில் வைத்துப் பூட்டிப் பாதுகாப்பர்.

## வழிபாட்டு முறைகள்

பங்காளிகள் மட்டும் இக்கோவிலை வழிபடாமல் சம்பந்தக் காரர்களும் வழிபடக்கூடிய திருக்கோயிலாக விளங்குகின்றது. எனவே உறவினர்களுக்குள் ஒற்றுமை ஏற்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் இம்முறையினைக் கொண்டு வந்திருக்கலாம் எனலாம். சம்பந்தக்காரர்கள் ஒன்றிணைந்து சாமி கும்பிடுவது குறித்துக் கதையொன்று நிலவி வருகின்றது. இக்கோவிலுக்குரிய பிடி மண் காரைக்கால் பகுதியில் திருமலைராயன் பட்டினம் அருகில் (தற்போது வெளிப்பாளையம் என்றழைக்கப்படும்) ஊரிலிருந்து கொண்டு வரப்பட்டது.

வெளிப்பாளையத்தில் காரைக்கட்டு வெள்ளாளர் இனத்தைச் சேர்ந்த பெண்ணொருத்தி தலைகுளித்து நீராடி சிக்கெடுத்துக் கொண்டிருந்தாள். அப்பகுதியில் உலா வந்த குசவசெட்டியார் இனத்தைச் சேர்ந்த அரசனொருவர் அப்பெண்ணின் அழகில் மயங்கி அப்பெண்ணை மணக்க விரும்பினார். மந்திரியைத் தூதாக அனுப்பப் பெண் வீட்டைச் சேர்ந்தோர் தகுந்த பதிலைச் சொல்லி அனுப்புகிறோம் என்று கூறி மந்திரியைத் திருப்பி அனுப்பினர்.

கௌரவப் பிரச்சனையின் காரணமாக அரசனுக்குப் பெண் கொடுக்க விரும்பாத பெண்வீட்டாரும் அவருடைய உறவினர்களும் சம்பந்தக்காரர்களும் ஊரைவிட்டுப் புறப்பட்டுவந்தனர். அப்போது அரசன் விரும்பிக் கேட்ட அப்பெண்ணை உமிக்கம்பு பகுதி நிறைந்த ஒரு குழுமைக்குள் (குதிர்) இறக்கிவிட்டு விட்டு ஒரு குழுவாக மக்கள் ஊரைவிட்டுப் புறப்பட்டு வரும்போது பிடிமண் எடுத்து வந்தனர். அரசனுடைய ஆட்கள் இவர்களைத் தேடி குதிரையில் விரட்டி வந்தனர். அப்போது மொத்தமாகக் கிளம்பி வந்த மக்கள் பிரிந்து அரளிக்கோட்டை, கல்லூரணி, கிழவனேரி, வேளானேரி போன்ற பல்வேறு ஊர்களுக்குப் பிரிந்து சென்றனர். அவ்வாறு பிரிந்து சென்றவர்களில் ஒரு பகுதியினர் திருச்சுழியை நோக்கி வந்தனர். வந்தபோது பள்ளிமடம் காளையர் கோவில் பகுதியிலிருந்து திருச்சுழிக்கு ஆற்றைக் கடந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள இறைவனை வேண்டி வந்தனர். மன்னனின் வீரர்கள் ஆற்றங்கரையை அடைய, ஆற்றில் சென்ற முழங்கால் அளவு நீரானது ஆண்டவன் அருளால் மிகப்பெரிய வெள்ளமாக ஓடுவது போல மாயத்தோற்றம் அளித்தது. மன்னனின் வீரர்கள் ஆற்றைக் கடக்காமல்

ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர். வந்தவர்கள் ஆற்றங்கரையிலேயே பிடிமண்ணை வைத்துக் கோவிலை அமைத்தனர். அதன் பின்னர் அவர்கள் திருச்சுழியின் கிழக்குத் தெருப் பகுதிக்கு வர, அப்பகுதியில் உள்ள பெண்ணுக்கு அருள்வந்து தான் திருச்சுழியில் உள்ள மாரியம்மன் எனவும் திருமலைராயன்பட்டிணத்தில் வெளிப்பட்டினத்தில் குழுமைக்குள் பெண்ணை வைத்துப் பலி கொடுத்து வந்துள்ளீர்களே என்று கேட்டதாகவும் கதைநிலவி வருகின்றது.

இக்கோவில் கட்டிய புதிதில் இங்குள்ள இறைவனுக்கு கருங்கடா, செங்கடா, பலநிறத்துக்கடா இவற்றின் இரத்தங்களைக் கொண்டும் அதனோடு பன்றி இரத்தம் கலந்து சுடுகாட்டில் எறிபூசை, கப்ரபூசை செய்வர். 5 பிண்டங்களை, நான்கு திசைகளிலும் 4 பிண்டங்களையும் ஒருபிண்டத்தை வானை நோக்கியும் எறிவர். அப்பிண்டங்கள் கீழே வருவதில்லையாம். இக்கோவிலுக்குப் பலிகொடுக்கச் சூலாட்டினைப் பயன்படுத்துவர். ஆட்டின் வயிற்றைக் கிழித்து உள்ளிருக்கும் குட்டியை எடுத்து மீண்டும் தாய்ஆட்டின் வயிற்றில் மஞ்சள் துணியினைச் சுற்றி, ஆற்றின் அருகே உள்ள மயானத்திற்குச் சென்று கப்ரபூசை, எறிபூசை கொடுத்து பூசாரிகள் மற்றவர்கள் திரும்பி வரும்வரை ஆடு உயிரோடு இருக்கும். 5 பிண்டங்கள் இருந்த சட்டியினை ஆற்றில் புதைத்துவிடுவர். ஆற்றுக்கும் மயானத்திற்கும் செல்லும்முன் கழுவடி கருப்பண்ணசாமியின் மேல் உள்ள சூலாயுதம் போன்ற பகுதியில் சேவலைக் குத்திவிட்டுச் செல்வர். அவர்கள் திரும்பி வரும்வரை ஆடும், சேவலும் சாகாது. எறிபூசையும் கப்ரபூசையும் முடிந்து வந்த பின்னரே இந்தச் சாவலும் ஆடும் சாகும் என்பது நம்பிக்கை. இவ்வாறு இறைவனுக்கு விரதம் இருக்கும் மருளாடிகள் கள், சாராயம் போன்ற போதைப் பொருட்களை எப்போதும் அருந்தமாட்டார்கள்.

மாணிக்கக்கூத்த ஐயனார் சிவனின் அம்சம் என்று கருதப்படுகின்றது. ஐயனாருக்கு காரி, புறத்துவன், கடல்வண்ணன், சாத்தன், பூரனை கேள்வன், யோகி, புட்கலைமணாளன்,மாசாத்தன், கெண்டாயுதன், வெள்ளையானையூர்தி ஆரியன், அறத்தைக் காப்போன், அரிகாரகுமரன் போன்ற பெயர்கள் வழங்கப்படுவதாக முதலாவது தெய்வப் பெயர்த்தொகுதி என்ற நூலின் பெயர்ப்பிரிவு பக்கம் 13 குறிப்பிடுகின்றது. இச்செய்திகளுக்கு திருவாசகம் திருப்பொற் சுண்ணத்தில் மாணிக்கவாசகர் பாடிய ***மைஅமர் கண்டனை*** என்று தொடங்கும் பாடலும் அரண்சேர்க்கின்றது.

# படுகரின் வேளாண்மை வழிபாடுகள்

**முனைவர் ஜோ. சரவணன்**, எம்.ஏ.,எம்.ஃபில்.,பிஎச்.டி.,
*பார்க்ஸ் கல்லூரி, திருப்பூர் - 5.*

நீலகிரி மாவட்டத்தில் அதிக அளவில் வாழும் படுகரின வழிபாடுகள் பற்றி அறிமுகம் செய்வது இக்கட்டுரையின் நோக்கம். இம்மக்கள் வேளாண்மை சார்ந்த வழிபாடுகளாக ஏர் உப்பது (ஏர் உழுதல், விதை விதைத்தல்), தெவ்வ (அறுவடை), ஆல்ஹட்ட அப்பா (பாறைக்கல் பாலட்டு விழா (நீர்வழிபாடு), சக்கலாத்தி (புது அறுவடை) முன்னோர் வழிபாடு) உப்புஅட்டுதல் (கால்நடை வழிபாடு) என்று வழிபடுகின்றனர். இவ்வழிபாடுகள் பற்றிய அறிமுகமாக இக்கட்டுரை அமைகின்றது.

***ஏர்உத்தாரா (ஏர்உழுதல், விதை விதைத்தல்) :*** வேளாண் வழிபாட்டில் முதல் வழிபாடு ஏர் உழுதல் ஆகும். இவ்வழிபாடு எல்லா சமுதாய மக்களிடம் காணப்படுவதைப் போல் இம்மக்களிடையே காணப்படுகிறது. இவ்வழிபாடு பங்குனிமாதத்தில் அமாவாசை முடிந்து இப்பெறெ (இளம்பிறை), தெபெபெறெ (முழுபிறை) நாளில் ஊரில் உள்ள ***தொட்டனை*** (பெரியவீடு)யில் நடைபெறுகிறது. வீட்டில் உள்ள மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு ஏரை வைத்துத் தீபங்கள் ஏற்றி, கையால் தொட்டு வணங்குகின்றனர். அதற்குப் பின்னர் விளைபொருட்களை எடுத்துக் கொண்டு அவரவர் நிலத்துக்குச் சூரியன் எழுவதற்கு முன் செல்கின்றனர். காரணம் அதிகாலையில் பெண்கள் வெளியில் வருகின்றனர். அவர்கள் தீட்டாக இருப்பதால் தீமைகள் நிகழ்ந்துவிடும் என்று அதற்கு முன் செல்கின்றனர். அந்நிலத்திற்கு சென்றவுடன் ஏர் உழுது தாங்கள் எடுத்துக் கொண்ட சாமை, இராகி போன்ற விதைகளை விதைக்கின்றனர். தமிழகத்தில் ஒவ்வொரு சடங்கிற்கும் தொழில்அடிப்படையில் ஒவ்வொரு இனத்தவரை அழைப்பதுபோல இம்மக்கள் பழங்குடிமக்களான குரும்பர்களை அழைக்கின்றனர். இவர்கள் ஒவ்வொரு விளைச்சல் நிலத்திற்கும் சென்று ஊ. அரசுதல் (சாம்பாலால் மந்திரத்தல்) ஒவ்வொரு நிலத்திற்கும் மந்திரிக்கின்றனர். இதனால் நல்ல விளைச்சல் வரும் என நம்புகின்றனர். ஏர் உப்பது என்பது வேளாண் வழிபாட்டில் முதல் வழிபாடாகும்.

***ஆலட்டஅப்பா (பாறைக்கல் பாலூட்டு விழா நீர் வழிபாடு) :*** ஆடி மாதத்தில் கங்கா தேவியை நினைத்துப் பால் ஊற்றி வழிபாடு செய்கின்றனர். அதிகாலையில் தொட்டமனை (பெரியவீடு) யிலிருந்து ஊர்மக்கள் எல்லாரும் சென்று, கோயில்களுக்குத் தேவையான நவதானியங்களான சாமை, கடலை, மற்றும் பாலை எடுத்துக் கொண்டு தானியங்களைத் தலைப்பாகையில் கட்டுகின்றனர். காரணம் பழைய காலத்தில் தானியங்களை எடுத்துச் செல்ல உடைமைகள் (பொருள்கள்) இல்லததால் தலைப் பாகையில் வைத்து, பாலை வெள்ளிச் செம்பில் எடுத்துக் கொண்டு கோயிலுக்குச் செல்கின்றனர். அங்கு ஆற்றில் கங்கா தேவியை நினைத்துப் பாலை ஊற்றுகின்றனர். அப்பொழுது,

> ***கங்கம்மா எசெரெகி*** (கங்கம்மா பெயர் சொல்லி)
> ***கவுரம்மா எசெரெகி*** (கவுரம்மா பெயர் சொல்லி)
> ***அள்ளக அரெக்குக மாடிதெயோ*** (ஆற்றுக்கு வழிபாடு செய்தோம்)
> ***பட்டி பந்தலையு முதலுஅடதெ*** (வட்டி வந்தாலும், அசல்இருக்கிறது)
> ***ஆயுத்த கெடுச்சுலே*** (பழையதை கெடுக்கவில்லை)
> ***ஓசுத்து உடுச்சுலே*** (புதியதை உருவாக்கவில்லை)
> ***கங்கமா எசெரெகி ஆலு அட்டினையோ*** (கங்கம்மா பெயர் சொல்லி பாலை ஊற்றுகிறோம்)

என்று வழிபட்டு, சாமை அரிசி, கப்பல் (நெய்), பால் ஊற்றிப் பொங்கல் வைத்து நன்றாக மழைபெய்து வயிறுகள் செழிக்க வேண்டும் என்று வழிபடுகின்றனர்.

***தெவ்வ ஹரிகட்டுதல் (அறுவடை) :*** தெவ்வ வழிபாடு ஜீன், ஜீலை திங்களில் அமாவாசை முடிந்து இளம்பிறையில் நடைபெறுகின்றது. இவ்வழிபாடு ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன் ஆகிய நான்கு நாட்கள் நடைபெறும். தமிழில் அறுவடை என்பது போல் படுகில் ***தெவ்வ ஹரிகட்டுதல்*** என்கின்றனர். இவ்வழிபாட்டிற்கு குரும்பர் முக்கியமானவராகக் கருதப்படுகின்றனர். ஞாயிற்றுக்கிழமையில் குரும்பன் வந்தவுடன் அன்று இரவுமுழுவரும் சவுத இருத்தல் (விரதம் இருத்தல்) ஊரிலுள்ள அனைத்த ஆண்களும் இருப்பார்கள். விரதம் இருக்கும்பொழுது மலைப்பிரதேசம் ஆயினும் அவர்கள் தோல் அணிந்த ஆடை, அணிகலன் அணியமால் வெறும் வெள்ளை வேஷ்டியைப் போர்த்திக் கொண்டு இரவு முழுவதம் தெவ்வமனையில் இருப்பார்கள். திங்கட்கிழமையில் ஊர்ப்பூசாரியும், ஆண்மக்களும், மகாலிங்கேஸ்வரர் கோயிலுக்குச் செல்கின்றனர். அங்கு பூசாரி அவ்வூரில் உள்ள மண்ணை வெட்டி அதை நீரில் கரைத்து கோயில்

சுற்றிச் தெளிப்பார். இதனை ***மண் அரசுதல்*** என்பர். அதற்குப் பின்னர் அவ்வூர் மக்கள் தம்வீட்டிற்கு வெள்ளை அடிக்கின்றனர். மறுநாள் மகாலிங்கேஸ்வருக்கு வழிபாடு செய்கின்றனர். தீபம் ஏற்றும் பொழுது வெறும் தீக்குச்சியால் ஏற்றுவதில்லை. சாணை வறட்டியை எரித்து, விளக்கில் துப்பம் (நெய்) ஊற்றி விளக்கு ஏற்றுகின்றனர். இறைவனுக்கு துப்பத்தால் அபிஷேகம் செய்து, தும்பைப் பூவை வைத்து, வெள்ளிப் பொருட்களால் கோகம் (வெள்ளிக் கொழகம்) இது சிவபெருமானின லிங்கக் குறியீடாகப் பயன்படுத்துகின்றனர். வெள்ளி அல்லாத பொருட்களைக் கோயிலுக்கு இம்மக்கள் பயன்படுத்துவதில்லை. அதன்பின்னர் அம்மக்களின் கோரிக்கைகளைக் காணிக்கயைாக ஒட்டிஅணா, ஜோடிஅணா (ஒத்தைகாசு, ஜோடிகாசு)வைக் கோயிலுக்குக் கட்டி வழிபடுகின்றனர்.

செவ்வாய்க் கிழமை காலையில் ஹரி கட்டுதல் நடைபெறுகிறது. குரும்பன் கோதுமையால் விளைந்த கதிர்களைப் பின்னித் தலைப்பாகையாகவும், இடுப்பு ஆடையாகவும் அணிவித்துப் பக்ககல்லு தெவ்வகல்லு என்பார்கள். தேரில் நான்கு கால்கள் போல, நான்கு கல்தூண்களும், மேல் விமானம் இல்லாமல் காட்சிதருகிறது. அந்த இடத்திற்குக் குரும்பனை அழைத்து வருகின்றார்கள். அவ்விடத்தில் எந்தப் பெண்களும் இருப்பதில்லை. அப்பொழுது குரும்பன் தலையிலிருந்தும், இடுப்பிலிருந்தும், ஊர்ப்பூசாரி அதைக் கழற்றித் தூண்களைச் சுற்றி மாலையாக அணிவிக்கிறார். அதற்குப் பின் குரும்பன் அத்தூண்களிலிருந்து பின்னோக்கி ஒவ்வொரு அடியாக ஒன்பது அடிவைப்பார். அங்கு நின்று குரும்பன் இருகைகள் தலையில் வைத்து அவர் மொழியில் தேவா.......... என்று சப்தம் இடுகிறார். இச்சப்தம் தேவலோகத்திற்குச் செல்கின்றது என்றும் நீலகிரியில் சுற்றியும் இச்சப்தம் ஏற்படுகின்றது என்றும் நம்புகிறார்கள். ஒன்பதுமுறை தேவரை அழைத்துவிட்டு அந்த இடத்தில் தலையால் கீழ் வணங்குகிறார். அதற்குப்பின் அவ்வூர் மக்கள் எல்லோரும் தம் காலில் விழுந்தது வழிபடுகின்றனர். அப்பொழுது ஊர்ப்பூசாரி

***ஒள்ளித்து ஆகிலி*** (நல்லது நடக்கட்டும்)
***ஒந்தொரெ சாவிர ஆகிலி*** (1500 ஆண்டுகள் வாழட்டும்)
***அரசகொடிலி கொககொடிலி*** (நல்ல சுகம் கொடுத்து)
***நானெச்சவது மாடிவது*** (நான் நினைத்ததும் செய்ததும்)
***நெறெவேறிலி*** (என்றும் நிறைவேற வேண்டும்)
***ஒந்தக ஒம்பத்து ஆகிலி*** (ஒன்றுக்கு ஒன்பது ஆகட்டும்)

என்று சடங்கு சொற்களைக் கூறுவர். அதற்குப் பின்னர் எல்லாரும் எழுந்து நிற்கின்றனர்.

***சக்கலாத்தி (திருஷ்டி கழித்தல் முன்னோர் வழிபாடு) :*** பயிர் நன்கு வளர்ந்த பின்னர் திருஷ்டி கழிப்பதற்காக எருதை அழைத்து வந்த விளைந்த பயிரின் முதல் உணவாக எருதிற்கு வழங்கிய பின்னர் விளைபொருள்களை இம்மக்கள் உண்கிறார்கள். இவ்வழிபாட்டை ***சக்கலாத்தி*** விழாவாக வழிபடுகின்றனர். பொதுவாக வெள்ளி, சனி ஆகிய இரண்டு நாட்கள் வழிபடுகின்றனர். வெள்ளிக் கிழமை அன்று ஊமாறி, கெச்சிகை, முள்ளு, துப்பமுள்ளி என்ற விஷசெடிகளைக் கொண்டு ஒவ்வொரு வீட்டிலும் கூரையில் வைப்பார்கள். இதைக் காப்புக் கட்டுதல் என்பர். காப்புக் கட்டுவதால் இவ்விஷசெடிகளின் மூலம் ஊரில் உள்ள தீங்கு எல்லாவற்றையும் அழித்துவிடுவதாக நம்புகின்றனர். சனிக்கிழமை அன்று ஊரில் உள்ள தொட்டமனைக்கு (பெரியவீடு) முன்னர் சாணத்தால் வட்டமாக வரைத்து, அவ்வட்டத்தில் அடுப்புச் சாம்பலை எடுத்து மீன், சூரியன், சந்திரன் ஆகிய படங்களை வரைகின்றனர். அதன்மேல் வெண்கலத்தட்டை வைத்து கோதுமை தோசை, சாமை உணவு, புதிய காய்கறிகளால் சமைத்து வைத்து படையலாக வைக்கின்றார். அதற்குப் பின்னர் அவ்வூரில் உள்ள காளை எருதை ஊர்மக்கள் அழைத்துவந்து உணவுகளை எருதுக்கு ஊட்டுகின்றனர். ஊட்டிய பின்னர் கோதுமை தோசைகளை வீட்டின் கூரையின் மீது வைக்கின்றனர். அதை முன்னோர்கள் வந்து விருந்தில் பங்கு கொள்வதாக நம்புகின்றனர். வழிபாடு முடிந்தபின்னர் ஒவ்வொரு வீட்டினரும் பானைசட்டி உடைத்து அதன்மேல் புள்ளிகளை வைத்து அவ்விளை நிலங்களுக்கு வைத்துவிட்டு வருகின்றனர். இதனை வைப்பதனால் இன்னும் நல்ல விளைச்சல் விளையும் என்று நம்புகின்றனர்.

***உப்பு அட்டுதல் (உப்புநீர் ஊற்றுதல்) :*** படுகரின மக்களிடையே அதிகஅளவில் கால்நடை வளர்ப்பதால், கால்நடைகளுக்கு எந்தவித நோயும் வராமல் தமக்கு காட்டில் சென்று துப்ப முள்ளி, உப்பை, தவுட்டை கொம்பு ஆகிய மூன்றையும் எடுத்துவந்து, வீட்டில் வைத்து உப்பை உரலால் இடித்து, தண்ணீரில் கரைத்து மாட்டின் மீது தெளித்து, குடிக்கவைத்து வழிபாடு செய்கின்றனர். இதனை உப்பு கட்டுதல் என்பர். இதனால் கால்நடைக்கு எந்த நோயும் வராது என்று நம்புகின்றனர்.

## நேர்காணல்

1. ***ஜே. லிங்கையன்*** : நேர்காணல், வயது. 60, பூசாரி, மேலூர் ஹட்டி,
2. ***கே.என். சிவலிங்ம்*** : நேர்காணல், வயது 50, தலைவர், மேலூர் ஹட்டி.

# ஒட்டடி பெரியசாமி வழிபாட்டு மரபுகள்

**கோ.சாமிதுரை**, எம்.ஏ.,எம்.ஃபில்.,
*அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி, நாமக்கல்.*

## முன்னுரை

தமிழ்த் தெய்வ வழிபாட்டில் சிறு தெய்வ வழிபாடு அந்தந்த வட்டார மக்களின் பண்பாட்டைப் பிரதிபலித்து வருகின்றன. கொல்லிமலை அடிவாரத்தில் உள்ள மக்களின் தெய்வமான *ஒட்டடி பெரியசாமி* வரலாறு பற்றியும், திருவிழா பற்றியும் அறிமுகம் செய்வது இக்கட்டுரையின் நோக்கம். நாமக்கல்லில் இருந்து ஏழு கி.மீ. தொலைவில் முத்துக்காபட்டி கிராமம் உள்ளது. முத்துக்காபட்டியில் இருந்து ஐந்து கி.மீ. தொலைவில் கொல்லிமலை அடிவாரத்தில் எம் புதுக்கோம்பையில் ஒட்டடி பெரியசாமி கோவில் அமைந்துள்ளது.

## கோவில் வரலாறு

பெரியசாமியின் பெயரில் மூன்று வழிபாட்டு தெய்வங்கள் உள்ளன. மூத்தவரான மாசி பெரியசாமி கொல்லிமலையில் குடிகொண்டு உள்ளார். அடுத்தவராகிய புளியஞ்சோலை பெரியசாமி கொல்லிமலை அடிவாரத்தில் உள்ள புளியஞ்சோலை வரிசெட்டி பாளையத்தில் அமைந்து உள்ளார். இவர்களின் தம்பி ஒட்டடி பெரியசாமி முத்துக்காபட்டி கொல்லிமலை அடிவாரத்தில் அமைந்துள்ளார். அடர்ந்த சோலையாக இருந்த இடத்தில் பூதம் ஒன்று இருந்ததாகவும் அந்த பூதம் அருகில் உள்ள கிராமங்களுக்குச் சென்று மக்களை எல்லாம் கொன்று தின்றதாகவும், அந்தப் பூதத்தை விரட்ட மாசி பெரியசாமியும், புளியஞ்சோலை பெரிய சாமியும் சேர்ந்து தம்பியான ஒட்டடி பெரியசாமியை இங்கு அனுப்பினார்கள். ஒட்டடி பெரியசாமி அந்த பூதத்தை விரட்டி அந்தச் சோலையில் குடிகொண்டார். அருகில் உள்ள கிராமங்களுக்கெல்லாம் சென்று மக்களைப் பாதுகாத்து வந்தார்.

அந்த கிராமங்களுக்குச் சிறு தெய்வங்களான நாச்சியம்மன், மொண்டி கருப்புசாமி, அரங்கசிவன், கன்னிமார் சாமிகள், பிடாரி

அம்மன், வெள்ளித்தடி கருப்பனார், துணைக் கருப்பு, எல்லைக் கருப்பு முதலிய தெய்வங்களைக் குடி அமைத்தார். இத்தெய்வங்கள் அமைந்துள்ள இடங்கள் அடர்ந்த சோலையாகவே உள்ளன. ஒட்டடி பெரியசாமி இத்தெய்வங்களுக்கு முதன்மையானவர். இவ்வரலாறு பரம்பரையாகப் பேசப்பட்டு வருகிறது.

## கோவில் அமைப்பு

ஒட்டடி பெரியசாமி கோவில் கொல்லிமலை அடிவாரத்தில் இரண்டு ஏக்கர் பரப்பளவில் மரங்கள் நிறைந்த சோலையாக உள்ளது. சோலையில் பலவகை மரங்கள் உள்ளன. செடி கொடிகளும் காணப்படுகின்றன. சோலையின் நடுவில் பெரியசாமி நின்ற கோலத்தில் காட்சி தருகிறார். தலையில் தலைப்பாகையும் கையில் கொடுவாள் ஏந்தியும் உள்ளார். இந்தச்சோலையின் நடுவில் எந்த விதமான கட்டிடமும் இல்லை. பெரியசாமியின் சிலைகள் இரண்டு காணப்படுகின்றன. ஒன்று சிறியதாகவும் மற்றொன்று பெரியதாகவும் உள்ளது. சிறியதாக உள்ள சிலை பழங்காலத்தில் தானாகத் தோன்றியது என்று கருதப்படுகிறது. பெரியதாக உள்ள சிலை வேண்டுதல்காரர்களின் வேண்டுதல் நிறைவேறியதால் அதே சிலை போன்று கொண்டு வந்து வைத்துள்ளனர்.

ஒட்டடி பெரியசாமி சிலைகளைச் சுற்றிலும் வேண்டுதல்காரர்கள் கொண்டு வந்த வேல்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. சிலைகளுக்கு எதிர்ப்புறமும் வேல்கள் அதிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. சிலைகளுக்கு எதிர்ப்புறத்தில் இரண்டு குதிரை வாகனங்கள் உள்ளன. இவைகளின் மீது ஏறி பெரியசாமி வேட்டைக்குச் செல்வார். கோவிலின் நுழைவு வாயிலில் நாகப்புற்று ஒன்று தானாக வளர்ந்து வருகிறது. அகன்ற சோலையில் பல விதமான மரங்கள் உள்ளன. அவற்றின் மீது மணிகள் தொங்கவிடப்பட்டுள்ளன. இவைகளை வேண்டுதல்காரர்கள் வேண்டுதல் நிறைவேற்றியதால் கோவிலுக்கு நேர்த்திக்கடனாகக் கொண்டு வந்து வைத்துள்ளனர்.

## வழிபாட்டு முறைகள்

ஒட்டடி பெரியசாமிக்கு வேண்டுதல்காரர்கள் தங்கள் வேண்டுதல் நிறைவேறிய உடன் தங்கள் வேண்டுதல் பொருட்டு பொங்கல் வைத்து ஆடு, கோழி, பன்றி இவற்றில் ஒன்று அல்லது மூன்றையுமே பலியிடுவது வழக்கம். பலியிட்டவுடன் ஆட்டின் ஈரல் பன்றியின் ஈரல், கோழியின் ஈரல் தனியாக எடுத்து நெருப்பில் இட்டுச் சுட்டு சாமிக்குப் படைப்பார்கள். தனியாகப் பச்சரிசிப் பொங்கல் வைத்து ஒரு தலைவாழை இலையில் சாதம் படைத்து ஈரலை வைத்து சாமிக்குப்

படைப்பார்கள். பிறகு பெரியசாமிக்குக் கற்பூரம் ஏற்றி மூன்று முறை சுற்றி வருவார்கள். கோவில் பூசாரியார் மணியடித்து சாம்பிராணி காட்டி வேண்டுதல்காரர்களுக்குத் திருநீறு கொடுப்பார். கோவிலுக்குச் சென்ற அனைவரும் அங்கேயே சமைத்துச் சாப்பிட வேண்டும். மீதி உள்ள உணவை வீட்டுக்குக் கொண்டு செல்லக் கூடாது.

## பூப்போட்டுப் பார்த்தல்

ஒட்டடி பெரியசாமி கோவிலுக்கு வரும் பக்தர்கள் தங்கள் எண்ணம் நிறைவேறுமா என்பதை அறியப் பூப்போட்டுப் பார்க்கின்றனர். இரண்டு நிறப் பூக்களை வைத்து தாளில் மடிக்கின்றனர். இவற்றில் மூன்று வெள்ளை நிறமும் மூன்று சிவப்பு நிறமும் உள்ளன. இவற்றைக் கோவில் பூசாரி கையில் எடுத்துக் குலுக்கிப் போடுகிறார்.

1. முதல் பூ சிவப்பு வந்து இரண்டாவது பூ வெள்ளை வந்தால் வேண்டுதல் நிறைவேறும் என்று சொல்லப்படுகிறது.
2. முதல் பூ வெள்ளை வந்து இரண்டாவது பூவும் வெள்ளை வந்தால் பொறுமையாக இருக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது.
3. முதல் பூ சிவப்பு வந்து இரண்டாவது பூவும் சிவப்பு வந்தால் வேண்டுதல் நிறைவேறாது என்று சொல்லப்படுகிறது.
4. முதல் பூ வெள்ளை வந்து இரண்டாவது பூ சிவப்பு வந்தால் வேண்டுதலில் எவ்வித இடையூறும் இருக்காது என்று சொல்லப்படுகிறது.

## குழந்தை வரம் வேண்டுதல்

ஒட்டடி பெரியசாமி கோவிலுக்கு வரும் பக்தர்கள் பல விதமான வேண்டுதல்கள் வைத்தாலும் அவற்றில் முதன்மையானது குழந்தைவரம் வேண்டுதல் ஆகும். சோலையில் உள்ள பாலை மரத்தில் குழந்தை வரம் வேண்டுபவர்கள் தங்கள் சேலையின் முந்தானையைக் கிழித்து அந்தத் துணியில் குழந்தை வரம் வேண்டி ஒரு எலுமிச்சம்பழம், திருநீறு, பூ இவற்றை வைத்து முடிந்து பாலைமரத்தில் கட்டுகின்றனர். இது முதலில் செய்யப்படும் முறையாகும். இந்த வேண்டுதல் நிறைவேறாதவர்கள் மற்றவர்கள் கோவிலுக்கு முப்பூசை கொடுக்கும் போது வரவேண்டும். ஆடு, கோழி, பன்றி இம்மூன்றின் உதிரத்தை எடுத்து ஒட்டடி பெரியசாமிக்குப் படைத்த பொங்கலில் கலந்து பூசாரி கையில் வைத்துக் கொள்வார். அப்போது சாமி கும்பிட வந்த பக்தர் ஒருவர் மீது பெரியசாமி தெய்வ அருள் வருகிறது. குழந்தை வரம் வேண்டுபவர்கள் தங்கள் மடியை ஏந்தியவாறு இருக்க வேண்டும். தெய்வ அருள் வந்தவர், உதிரச் சோற்றை குழந்தை வரம் வேண்டுபவர் வாயில் ஊட்டி விடுவார். வரம்

வேண்டுபவர் அந்த உதிரச் சோற்றை உண்ண வேண்டும். அப்படி அச்சோற்றை உண்டால் குழந்தை இல்லாதவர்க்கும் குழந்தை உண்டாகும் என்பது நம்பிக்கையாக உள்ளது.

## திருவிழா

ஒட்டடி பெரியசாமிக்கு மூன்று வருடத்திற்கு ஒரு முறை திருவிழா நடைபெறும். மூன்றாம் ஆண்டின் வைகாசி மாதம் திருவிழா நடைபெறும். நடைபெறும் நாள் இந்த நாள் என்று சொல்ல முடியாது. இதைத் தீர்மானிக்கப் பின்வரும் நடைமுறை பின்பற்றப்படுகிறது. வைகாசி மாதம் பிறந்தவுடன் கோவிலின் பட்டத்துப் பூசாரிக்குப் பூசை செய்வார்கள். அப்போது ஒட்டடி பெரியசாமி தெய்வம் பட்டத்துப் பூசாரியின் மீது நின்று வாக்குக் கூறுவார். மற்ற இரு பூசாரிகளுக்கு வாக்கு வராது. பட்டத்துப் பூசாரி கூறும் வாக்கின் அடிப்படையில் திருவிழாவுக்கான ஏற்பாடுகளை ஊரில் உள்ள அனைவரும் திருவிழா நடத்த ஏற்பாடு செய்வார்கள். தண்டோரா மூலம் ஒட்டடி பெரியசாமிக்கு வரும் திங்கள் முதல் காப்புக்கட்டுகிறார்கள். அதனால் ஒட்டடி பெரியசாமி கோவிலுக்கு இனியாரும் போகக் கூடாது என்று அறிவிப்பார்கள்.

***காப்புக்கட்டு :*** காப்புக்கட்டுதலுக்கான மரம் வேப்ப மரம் ஆகும். அந்த மரம் மூன்று கிளைகளைக் கொண்டதாக இருக்க வேண்டும். மூன்று கிளைகளிலும் மூன்று விதமான இலைகளைக் கட்டுவார்கள். ஒரு கிளையில் மா. இலையும் மற்ற ஒரு கிளையில் வேப்ப இலையும் இன்னொரு கிளையில் மூங்கில் இலையையும் கட்டி வைப்பார்கள். இந்த காப்புக்கட்டு பதினைந்து நாட்களுக்கு அப்படியே இருக்கும். பதினைந்து நாள் கழித்து வந்து பார்க்கும்போது இலைகள் வாடாமல் துளிர்விட்டு பச்சையாகவே இருக்கும். முதல் நாளாகிய திங்கட்கிழமை இரவு பன்னிரெண்டு மணிக்கு ஒட்டடி பெரியசாமிக்கு காப்புக் கட்டுவார்கள். அப்போது பெண்கள் யாரும் போகக்கூடாது.

## பலியிடுதல்

மறுநாள் முதல், தினந்தோறும் ஒரு தெய்வம் வீதம் பூசை நடக்கும். நாச்சி அம்மனுக்கு ஆடு வெட்டிப் பூசை செய்வார்கள். அடுத்த நாள் மொண்டி கருப்பு சாமிக்குக் கோழிபலி கொடுத்துப்பூசை செய்வார்கள். அடுத்தநாள் கன்னிமார் சாமிகளுக்கு ஆடு பலிகொடுப்பார்கள். அடுத்த நாள் பிடாரி அம்மனுக்கு ஆடு பலி கொடுப்பார்கள். அடுத்த நாள் வெள்ளித்தடி கருப்பனார் கோவிலுக்கு ஆடு பலி கொடுப்பார்கள். அடுத்த நாள் திங்கள் கருப்புக்குப் பன்றி

பலி கொடுப்பார்கள். அடுத்த நாள் துணைக்கருப்புக்குக் கோழி பலி கொடுப்பார்கள். அடுத்த நாள் அரங்க சிவனுக்கு பால்பூசை செய்வார்கள். இறுதி நாள் எல்லைக் கருப்புக்குக் கோழி பலி கொடுப்பார்கள். இவ்வனைத்துக் கோவில்களுக்கும் ஆண்களே செல்வார்கள். பலி கொடுக்கும் ஆடு, மற்றும் கோழிகளை எம்புதுக்கோம்பை கிராம மக்களே கொண்டுவந்த சமைத்து உண்பார்கள். எம்புதுக்கோம்பை கிராம மக்களே மேற்கண்ட சிறு தெய்வங்களுக்கு வழிபாடு செய்கின்றனர்.

திருவிழா இறுதி நாளாகிய 15-ஆம் நாள் ஒட்டடி பெரியசாமிக்குப் பூசை செய்வார்கள். அன்று இரவு பன்னிரெண்டு மணிக்கு அருகில் உள்ள கிராமங்களிலிருந்து அனைத்து ஆண்களும் ஒன்று கூடி தீர்பந்தங்களுடனும், மேள தாளத்துடனும், அதிர் வேட்டுக்கள் முழங்கவும், பம்பை, உடுக்கை முழங்கவும் கொம்பு ஊதிக் கொண்டு முப்பூசை செய்வதற்குப் போவார்கள். ஒட்டடி பெரியசாமிக்குப் பொங்கல் வைத்து ஆடு, கோழி, பன்றி இம்மூன்றையும் பலி கொடுப்பார்கள். பலி கொடுக்கப்பட்ட இம்மூன்று உதிரத்தையும் எடுத்து வைத்துக் கொள்வார் பூசாரி. பலிகொடுத்ததை அங்கேயே சமைத்து உண்பார்கள். இந்தப் பூசையிலும் பெண்கள் கலந்து கொள்ளக்கூடாது. பலிகொடுக்கப்பட்ட மூன்று உதிரத்தையும் சேர்த்து சாமிக்காகப் படைக்கப்பட்ட பொங்கலோடு சேர்த்து புது மண் சட்டியில் போட்டு ஒட்டடி பெரியசாமியே பிடித்துக் கொள் என்று மேல் நோக்கிப் போடுவார்கள். மேலே சென்ற உதிரச் சோறு கீழே வருவது இல்லை. இந்த நிகழ்ச்சியை யாரும் பார்க்கக்கூடாது என்று அனைவரையும் முன்னால் அனுப்பிவிட்டு, மூன்று பூசாரிகளும் சேர்ந்து உதிரச் சோற்றைப் போடுவார்கள். இந்த 15 நாள் திருவிழா முடிந்த பிறகுதான் பெண்களும் மற்ற ஊர்க்காரர்களும் ஒட்டடி பெரியசாமி கோவிலுக்கு வருவார்கள்.

## முடிவுரை

எம்புதுக்கோம்பை கிராமத்துக் காரர்கள் முன்னின்று இக்கோவிலுக்குத் திருவிழா நடத்துகின்றனர். மற்ற நாள்களில் வேண்டுதல்காரர்கள் பூசைகொடுத்து வழிபடுகின்றனர். இக்கோவிலுக்கு மூன்று பூசாரிகள் உள்ளனர். வாரம் ஒருவர் முறையே பூசை செய்கின்றனர்.

# நாட்டுப்புற வழிபாட்டு மரபுகளில் - கிடாவெட்டு

**முனைவர் இரா. சிவசங்கரி**, எம்.ஏ., எம்.ஃபில்.,
*அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி, நாமக்கல் - 637 001*

ஒரு சில பழக்கவழக்கங்கள் மக்களால் பின்பற்றப்பட்டு அது தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வரும் பொழுது சமூகமயமாதலுக்கு உட்பட்டு பின் மரபாகிறது. இச்சமூக மயமாக்கப்பட்ட நாட்டுப்புற வழிபாட்டு மரபுகளில் முக்கியமான ஒன்று கிடாவெட்டு. சங்க காலத்திற்கு முன்பு இருந்தே வழக்கத்தில் இருந்த இக்கிடாவெட்டானது, மரபு என்ற பெயரில் இன்றும் நாட்டுப்புறங்களில் பின்பற்றப்பட்டு வருகிறது. மாற்றம் ஒன்றுதான் மாறாதது என்று கூறுவது போல கிடாவெட்டு என்பது காலப்போக்கில் மாற்றத்திற்கு உள்ளாகி மாற்றம் அடைந்திருக்கின்றது. இக்கிடா வெட்டினைப் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

## கிடாவெட்டின் தோற்றம்

*மனித உடலின் இன்றியமையாத ஆற்றல் குருதி என்று கருதி அந்த இரத்தத்தைத் தெய்வம் என்று நம்பியதற்குப் பலியாக்கும் சடங்குகளைச் செய்தார்கள் மனிதர்கள் என்ற ராஜம்கிருஷ்ணனின் கூற்று இங்கு நினைவு கூறத்தக்கது* (1)- *உயிர்ப்பலி, நரமாமிசம் கொடுக்கும் வழக்கம் இருந்ததை ரிக் வேதம் குறிப்பிடுகிறது*(2) இப்பலியிடும் வழக்கம் இந்தியாவில் மட்டுமல்லாமல் நாகரிகத்தில் சிறந்த நாடுகள் என்று போற்றப்படும் கிரேக்கம், ரோமாபுரியிலும் காணப்பட்டிருக்கிறது. *ரோமபுரியில் மன்னர்கள் காலத்தில் மன்னரால் நடத்தப்பட்ட பலிச்சடங்குகளை நடத்தி பலிசாமியார் ஒருவர் அமர்த்தப்பட்டதாக ரோமானிய வரலாறு கூறுகின்றது*.(3) *கிரேக்கர்கள் சமய வாழ்க்கையில் பல மூடநம்பிக்கைகளைக் கொண்டிருந்ததாக கிரேக்க வரலாறு கூறுகின்றது*.(4) *மனிதன் நரமாமிசம் உண்ணும் பழக்கம் நடைமுறையில் இருந்த காலகட்டத்தில் இந்த நரபலியிடுதல் இருந்ததாக ஆர். திருநாகலிங்கம் கூறுகிறார்.* (5 : 171) இதிலிருந்து கிடா வெட்டிற்கு முன்பு சமூக மயமாக்கப்பட்ட நரபலியிடுதல் இருந்திருக்கின்றது என்பது புலனாகின்றது. ஆனால், நரபலியிடுதல் என்ற வழிபாடு சமூக மதிப்பினை இழந்து விலங்குகளைப் பலியிடும்

வழிபாடாக எப்பொழுது மாறியது என்பதை அறுதியிட்டுக் கூறமுடியவில்லை. ஆனால், மனிதன் எவ்வெப் பொருட்களை எல்லாம் தன்னுடைய உணவுப் பழக்கவழக்கங்களுக்குப் பயன்படுத்திக் கொண்டானோ அவைகளையெல்லாம் தான் வழிபடும் இறைவனுக்கும் படைத்திருக்கின்றான். அம்மரபு இன்றும் தொடர்கிறது. மனிதர்கள் தங்கள் இனத்தையே கொன்று சாப்பிடும் மிருகங்களின் பழக்க வழக்கம் உடையவர்களாக இருந்தபோதிலும் அதனையும் இறைவனுக்குப் படைத்த பின்பு உண்டிருக்கின்றார்கள். பின் நாகரிகம் வளர வளர நரமாமிசம் உண்ணும் பழக்கம் அவனிடம் நாகரிகமற்ற செயல் என்ற எண்ணத்தினை உருவாக்க அதனை விட்டுவிட்டுக் கிடா வெட்டும் பழக்கத்தினைத் துவக்கி இருக்கலாம். *ஒரு கதை ஒன்றில் காளிதேவிக்கு நரபலியிட்ட செய்தி காணப்படுகிறது. 99 பேரை நரபலியிட்டு ஒருவன் 100 நபரை பலிகொடுக்க முடியாமல் தானே பலியாக அமைவதைக் கதையில் பார்க்க முடிகின்றது* (6 : 360) *அரிச்சந்திரன் தனக்குப் பிள்ளை இல்லை என்ற குறையைத் தீர்க்க வருணனை வேண்டித் தவம் இயற்றியதாகவும், முதல் பிள்ளையைத் தெய்வத்திற்கு பலி கொடுப்பதாக வாக்குக் கொடுத்ததாகவும் அரிச்சந்திர புராணம் கூறுகின்றது*.(7) *காளிக்கு நரபலியிட அரசிடம் அனுமதி கேட்டபோது அரசு மறுத்ததை - தஞ்சை மராட்டிய மன்னர் அரசியல் வாழ்க்கையில் காணமுடிகின்றது*.(8) நோய் நீங்குவதற்காக நரபலியிடும் வழக்கம் பழங்குடி மக்களிடம் இன்றும் நடைமுறையில் இருந்து வருகின்றது.

## சங்ககாலத்தில் கிடாவெட்டு

சங்ககாலத்தில் கிடாவெட்டு என்பது *1. வழிபாட்டிற்காக, 2. நோய் நீங்குவதற்காக, 3. பேய் விரட்டுவதற்காக* என்ற மூன்று காரணங்களுக்காக நடைபெற்றிருக்கின்றது.

*வழிபாட்டிற்காக :* கொற்றவைக்குப் பலிகொடுத்து வாழ்த்துதலை கொற்றவைநிலை என்று தொல்காப்பியம் கூறுகின்றது. (தொல் - பொருள்- 26) இதே போன்று பலிகொடுத்து கொற்றவையை வழிபடும் வழக்கம் பதிற்றுப்பத்திலும் (79) குறுந்தொகையிலும் (278) காணப்படுகின்றது. இறைவனை வணங்குவதற்காகக் கோயில்களில் நரபலியிட்டதை அகநானூறு கூறுகின்றது. (218 ; 8, 287 ; 6) குறமகளிர் முருகனுக்கு வெறியாட்டு எடுத்து வழிபட்ட நிகழ்ச்சி திருமுருகாற்றுப்படையில் *வேலன் என்ற பெயர் கொண்ட ஒருவன் முருகனுக்குப் பூஜை செய்வான். முருகப்பெருமானைப் பாடல் முதலியவற்றால் புகழ்ந்து பாடி ஆட்டுமறியைப் பலிகொடுத்துத் தினை அரிசியுடன் குருதியை கலந்து பலிசிதறுவான்*(9) என்று நன்கு

விரிவாக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து சங்க காலத்தில் வழிபாட்டிற்காக முருகனுக்கும் காளிதேவிக்கும் கிடா அல்லது ஆட்டுமறி வெட்டும் பழக்கம் இருந்திருக்கின்றது என்பது புலனாகிறது.

*நோயின் பொருட்டு :* நோயின் பொருட்டு சங்ககாலத்தில் வெறியாட்டு செய்தல் நடத்தப்பட்டிருக்கிறது. தங்களுடைய புதல்விக்குத் துன்பம் வந்த பொழுது அது தெய்வத்தின் பொருட்டு வந்ததென்று கருதி வெறியாட்டு அயர்தல் நடத்தப்பட்டிருக்கிறது. வெறிக்களம் எனப்படும் இடத்தினை வீட்டு முற்றத்திலேயே உருவாக்கி இச்சடங்கினைச் செய்திருக்கின்றார்கள் சங்ககால மக்கள். வெறியாட்டு அயர்தலில் ஆட்டு மறியை அதில் இருந்து பெருகும் குருதியுடன் செந்தினையைக் கலந்து பலியாகத் தூவியிருக்கிறார்கள். இவ்வழிபாடு இரவின் சாமப் பொழுதில் நடந்ததாகத் தெரிய வருகின்றது. (குறு. 58 : 3. அகம் 98 : 18 - 19, 138 : 10, நற். 332, குறு. 382 : 10)

*பேய் விரட்டலுக்காக :* சங்ககாலத்தில் பேய் முதலியவற்றால் தீண்டப்பட்டவர்களுக்கு ஆட்டினைப் பலிகொடுத்து தினையரிசி முதலியவற்றைப் படையலாக வைத்து வழிபடும் வழக்கம் இருந்திருக்கின்றது. (குறு. 233 : 1 - 4) பேய்கள் ஊர்களிலும், மன்றங்களிலும், மாலைப் பொழுதுகளிலும் இடப்படும் பலிகளை உண்டதாக நற்றினையும் அகநானூறும் கூறுகின்றன. (நற். 73 : 1 - 4) (அக. 9 - 11) பேய்களுக்கு இவ்வாறு ஆட்டினைப் பலி கொடுத்துவிட்டால் பேய்பிடித்தவர்களை விட்டுப் பேய் நீங்கி விடும் என்ற நம்பிக்கை சங்ககால மக்களிடையே இருந்திருக்கின்றது.

சங்க இலக்கியத்தில் ஆட்டு மறிகளை வெட்டுவது வழக்கத்தில் இருந்திருக்கின்றது. சிறு தெய்வங்களான காளிக்கும், முருகனுக்கும் இப்பலியிடும் வழக்கம் இருந்திருக்கின்றது. ( முருகன் குறவர்களுக்குரிய கடவுள். மேலும் விளக்கத்திற்கு எழுத்தாளர் பெருமாள் முருகனின் கட்டுரையைப் பார்க்க, கவிதாசரண் - குறவர்களின் கடவுள், ஜூலை - ஆகஸ்ட் 2003 ) வழிபாட்டிற்காகவும், நோய் நீங்குவதற்காகவும் பேய் ஓட்டுவதற்காகவும் இப்பலியிடுதல் ஏற்பட்டிருக்கிறது. இவற்றுள் முதல்வகையான வழிபாட்டிற்காக இறைவனுடைய தளத்தில் ஆட்டினைப் பலியிடுதல் மேல்நிலையாக்கத்தினால் தமிழர்களிடம் வந்திருக்கலாம். வேள்விகளின் போது உயிரினங்களைப் பலியிடும் ஆரியர்கள் போன்று தமிழர்கள் ஆடுபலி இடம் பழக்கத்தினைக் கோயில் தலங்களில் கொண்டுவந்திருக்கலாம். மற்ற இரண்டு மூடநம்பிக்கையின் ஆழத்தை உணர்த்துவதாகவே உள்ளன.

தலைவனைப் பிரிந்த தலைவி அவனுடைய ஏக்கத்தினால் நம்பிக்கையிழந்து பசலை நோயுற்று பேயறைந்தவள் போல் இருக்க, மகளின் உண்மை நிலையை உணராத தாய் மகளுக்கு நோய் வந்து விட்டது எனத் தவறாகக் கருதியும், பேய்பிடித்துவிட்டது எனத் தவறாக எண்ணியும் வெறியாட்டுச் செய்கின்றாள். இதனை ஒரு தோழி பின் வருமாறு கூறுகின்றாள். *மகளின் வேறுபாடு நீங்க வெறியெடுக்க எண்ணி தாயை வெறியாட்டில் வெளிப்படும் கடவுளாகிய முருகன் கனவில் வந்து இந்நோய் என்னால் வந்ததன்று; இஃது ஒரு தலை மகனால் நேர்ந்தது என்று தெரியச் செய்யக்கூடாதா* என்று பேசுகின்றாள் (நற் : 173) எனவே, சங்க இலக்கியத்தில் சுட்டப்படும் வெறியாட்டு, போலச் செய்தல் காரணமாகவும், மூடநம்பிக்கையின் காரணமாகவும் வந்திருக்கலாம் எனக் கருதத் தோன்றுகிறது.

## மரபும் சமூகமும்

சங்ககாலத்தில் மேற்கூறிய காரணங்களுக்காக வெட்டப்பட்ட ஆட்டுமறி இன்று கிடா வெட்டுதலாக உருவெடுத்துள்ளது. வழிவழியாக மரபாகப் பின்பற்றப்பட்டு வருவனவற்றில் அறிவார்ந்த சிந்தனைகளும், மூடச்சிந்தனைகளும் விரவிக் கிடக்கின்றன. மரபில் காணப்பட்ட மூட நம்பிக்கைகளான உடன்கட்டை ஏறுதல் பெண்ணடிமைத்தனம், தீண்டாமை ஆகியவற்றிற்கெல்லாம் விடிவு கண்டிருக்கும் நாகரீக சமூகம் கோயில்களில் உயிர்களைப் பலியிடுவதை மட்டும் கடைபிடிப்பது ஏன்? மூடநம்பிக்கைச் சார்ந்த செயல்பாடுகளுக்கு அரசியல் மதமூலாம் பூசி அதைத் தக்கவைத்துக் கொள்ள நினைப்பதேன்? நாட்டுப்புற வழிபாட்டு மரபுகளில் வழிபாட்டின் போது சாமியாடுதல் என்பது மதிப்பிற்குரிய செயல்பாடாக இருந்து வந்தது. அறிவியல் வளர்ச்சியின் காரணமாக கிராமப்புறங்களில் சாமியாடுதல் அன்றைய நாளைவிட இன்றைய நாளில் மிகக்குறைவாகவே இருந்து வருகின்றது. இந்நிலையில் சில சிறு தெய்வ வழிபாட்டுத் தளங்களிலும் மேல் நிலையாக்கம், அறிவு வளர்ச்சியின் காரணமாக சைவ வழிபாடு பின்பற்றப்பட்டு வருகிறது. (பார்க்க - குமரி மாவட்ட நாட்டுப்புற இயல் - எஸ்.எம். மகாலட்சுமி) இதில் இருந்து கோயில்களில் கிடா வெட்டுதல் என்பது கடவுளின் பெயரில் செய்யப்படும் மூடநம்பிக்கையான செயல் என்றே கருதமுடிகிறது.

*மக்கள் காலம் காலமாகப் பின்பற்றி வரும் வழிமுறைகளில், நம்பிக்கைகளில் தலையிடக்கூடாது என்ற வாதம் சொத்தையான வாதம் அதை ஏற்றுக் கொண்டல் சுகந்திக்கு ஏற்பட்ட அவலநிலைதான் எல்லா பெண்களுக்கும் ஏற்படும் (விளக்கத்திற்கு பார்க்க இந்தியா டுடே - அக். 2003, பக். 51) மறுபடியும் உடன்கட்டை ஏறச் சொல்வார்கள்,*

*தலையை மொட்டை அடித்து மூலையில் உட்கார வைப்பார்கள், சாதியின் பெயராலும், கடவுளின் பெயராலும் நடத்தப்படும் முட்டாள்தனங்கள், அராஜகங்கள், மூடநம்பிக்கைகள் அது நெய்யும் பாலும் ஊற்றும் யாகமானாலும் சரி, ரத்தம் தெறிக்கும் கிடாவெட்டானாலும் சரி எல்லாவற்றையும் மரபின் பெயரால் ஏற்றுக்கொள்ள முடியுமா* (5 : 171) என்று ஞாநி கூறுவது போன்று புனிதத்தலங்களில் உயிர்கள் பலியிடுவதைத் தொடர்ந்து மேற்கொண்டால் மரபு பழக்க வழக்கங்களான பெண்ணடிமை, சாதி, சதி, விபச்சாரம் ஆகியவற்றிற்கும் வழிவிட வேண்டிவரும்.

## முடிவுரை

காலம் காலமாகப் பின்பற்றி வரப்படும் ஒரு செயல் சமூகமயமாக்கப் பட்டு சமூகத்தில் ஆழமாக வேர் ஊன்றி இருந்தாலும், அச்செயல் மூடநம்பிக்கையுடன் தொடர்புடையதாக இருந்தால் அதை ஒழிப்பதற்கு அரசியல் மத, சாதி முலாம்பூசி வாழ்வளிக்கக் கூடாது. மாறாக அதை ஒழித்து சமூக நலனுக்கு வழிவகுக்கும் முயற்சிகளில் ஈடுபடவேண்டும்.

## துணைநூல்கள்


1. *ராஜம்கிருஷ்ணன் :* இந்திய சமுதாய வரலாற்றில் பெண்மை
2. ரிக் வேதம்
3. ரோமானிய வரலாறு
4. *கி.ர. அநுமந்தன்* : கிரேக்க வரலாறு
5. *ஆர். திருநாகலிங்கம்* : புதுச்சேரி வட்டார நாட்டுப்புறக் கதைகள் காட்டும் சமுதாயம்.
6. *வேங்கட ராமையா* : தஞ்சை மராட்டிய மன்னர்கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும்.
7. *கவிதாசரண்* : ஜீலை – ஆகஸ்ட் 2003
8. இந்தியா டுடே , அக்டோபர் – 2003


*குறிப்பு : நெய்யும், பாலும் ஊற்றும் யாகமானாலும் சரி* என்ற ஞானியின் கூற்றில் கட்டுரையாளர்க்கு உடன்பாடில்லை. மூலிகைகளும் ஐம்பொன்களும் நோயைக் குணப்படுத்தும் வல்லமை மிக்கன. இப்பொருட்களினால் ஆன சிலைகளுக்கு நெய்யும் பாலும் ஊற்றி அபிஷேகம் செய்து அப்பொருட்களை உண்ணும் போது நோய்கள் குணமடைகின்றன. இது அறிவியல் உண்மை (மூளை மற்றும் நரம்பு சம்பந்தப்பட்ட நோய்களுக்கு உலோகங்கள் கலந்த மாத்திரைகள் வழங்கப்படுகின்றன).

# தாழமுனியப்பன் வழிபாடு

**கு.சிவப்பிரகாசம்,** எம்.ஏ.,எம்.ஃபில்.,பிஎச்.டி.,
*பாரதியார் பல்கலைக்கழகம், கோவை-641 046.*

காவல் தெய்வமான தாழ முனியப்பன் வழிபாட்டினை அறிமுகம் செய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும். தருமபுரி மாவட்டம் அரூர் வட்டம் வாதாப்பட்டி கிராமமக்களால் கொண்டாடப்படும் தாழ முனியப்பன் என்னும் காவல் தெய்வ வழிபாடு ஏறத்தாழ 250 ஆண்டுகளுக்கு முன்பிருந்து நடைபெற்று வருகிறது. தாழ மரங்கள் நிறைந்த காட்டுப்பகுதியில் அமைந்து இருந்ததால் தாழ முனியப்பன் என்ற பெயர் இருக்கிறது எனப் பெயர்க் காரணம் குறிப்பிடுகின்றனர். தாழ முனியப்பன் காவல் தெய்வத்திற்கு உருவ வழிபாடு கிடையாது. வெறும் கல் சிலைகளைக் கொண்டே வழிபாடு செய்கின்றனர். காட்டுப்பகுதியில் அடர்ந்த மரங்களுக்கிடையில் அமைந்திருக்கும் இக்கோயில் 5 மீட்டர் சதுர அமைப்புடன் 3 அடி உயரத்துடன் கூடிய மேடை அமைப்பும் மேடையின் மீது 22 கல் சிலைகளும் அரைவட்ட அமைப்பில் வைக்கப்பட்டுள்ளன. 22 சிலைகளும் முனியப்பன் சாமியாகவே கருதப்படுகின்றது. கோயிலின் அருகில் ஒரு மழைநீர் ஓடை உள்ளது. இன்றும் அந்த ஓடையை தாழம்பள்ளம் என்றே அழைக்கின்றனர்

*வழிபாட்டு முறை :* தாழமுனியப்பன் காவல் தெய்வத்திற்கு வழிபாடு தனிமுறையில் கடைப்பிடிக்கப்படுகின்றது. காட்டில் கிடைக்கும் ஊனாங்கொடி என்ற கொடியின் இலையையே படையல் படைக்கப் பயன்படுத்துகின்றனர். வெற்றிலை அமைப்பு கொண்ட அவ்விலையின் பின்புறமாக வைத்தே படையல் இடுகின்றனர். பூசை செய்யும் போது வழிபாட்டுக் காலங்களில் பீடி, புகையிலை, சாராயம் போன்ற பொருட்கள் படைபொருளாக படைக்கப்படுகின்றது. பொங்கல் தினங்களில் மக்கள் அனைவரும் கோயில் சென்று பொங்கலிட்டு முறையான படையலுடன் வழிபடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். தினமும் வழிபடுவது இல்லை. வழிபாடு காலங்களில் மட்டும் அரிசியால் பொங்கலிட்டுப் படைக்கின்றனர். விழாக் காலங்களில் கேழ்வரகு மாவினால் களி செய்து விருந்தாகப் கொடுக்கின்றனர்.

***நம்பிக்கைகள் : தாழமுனியப்பன்*** சன்னதிக்கு மாலை 6 மணிக்குமேல் யாரும் செல்லக்கூடாது. மீறிச் சென்றால் கடவுளால் தண்டிக்கப்படுவதாக

மக்கள் நம்புகின்றனர். வழிபாடும் காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணி வரையிலே செய்து முடித்துக் கொள்கின்றனர். மனிதர்களை மட்டும் காப்பது அல்லாமல் விவசாயப் பயிர்களையும் காட்டு மிருகங்களிடமிருந்து காத்து வருவதாக மக்கள் நம்பிவருகின்றனர். படையலுடன் வழிபாடு செய்யத் தவறினால் தெய்வக் குற்றத்திற்கு ஆளாக நேரிடும் என்று கருதுகின்றனர். திருமணம் செய்வதால் தம்பதிகளுக்குக் கேடு வருமென்று இக்கோயிலில் திருமணம் செய்வதில்லை. நேர்த்திக்கடனாக ஆடு கோழி வெட்டப்படுகிறது. மழைப் பொழிவிற்கும், வேளாண்மை சிறப்பாக இருப்பதற்கும் இத் தெய்வமே காரணம் என்று நம்புகின்றனர்.

***திருவிழாக்கள் :*** வாதாப்பட்டி கிராமத்தில் ***தாழ முனியப்பனுக்கு*** மூன்று வருடத்திற்கு ஒரு முறையே விழா கொண்டாடப்படுகின்றது. இவ்விழாவிற்கு முப்பூசை என்று பெயர். கோழி, ஆடு, பன்றி என்ற மூன்று உயிர்களைப் பலியிடுவதாலே இதற்கு ***முப்பூசை*** என்று பெயரிட்டுள்ளனர். மக்கள் காட்டை ஒட்டியே இருப்பதால் கோழி, ஆடு, பன்றி போன்றவைகளால் விவசாயத்திற்குப் பெரும் அழிவு ஏற்படுகின்றது. இந்த அழிவிலிருந்து தாழ முனியப்பன் தெய்வமே காத்து நிற்கின்றது என்று நம்புவதால் சேதம் ஏற்படுத்தும் கோழி, ஆடு, பன்றி போன்ற உயிரினங்களையே பலியாகக் கொடுக்கின்றனர்.

விழா அறிவிக்கப்பட்டவுடன் ஒவ்வொரு வீட்டிற்கும் குறிப்பிட்ட பணம் ஊர்க் குழுவால் வசூல் செய்யப்படுகின்றது. விவசாயப் பொருளான கேழ்வரகு வீடுவீடாக வசூல் செய்கின்றனர். விழா நாளன்று மக்கள் மாவிளக்கேற்றிப் பொது இடத்தில் கூடுகின்றனர். பொது இடத்தில் முப்பூசைக்குரிய கோழி, ஆடு, பன்றி கொண்டு வந்து நிறுத்தப்படுகின்றது. பின்பு சாமி ஆடுபவருக்கு அருள் வந்தவுடன் பூசாரி பூசை செய்வார். பூசை முடிந்தவுடன் பன்றிக்குச் சாராயம் கொடுக்கப்படுகின்றது. சாராயம் குடித்த பன்றி பொது இடத்திலிருந்து கோயிலுக்குத் தானாகச் சென்றடைகின்றது. பன்றி சென்ற பின்னரே மாவிளக்கேந்தி மக்கள் கோயிலுக்குச் செல்கின்றனர். கோயிலில் முறைப்படி பீடி, சாராயம், புகையிலையுடன் கூடிய பூசை செய்து மூன்று உயிர்களையும் பலியிடுகின்றனர். கேழ்வரகு மாவினால் களி செய்து விழாவிற்கு வந்திருக்கும் அனைவருக்கும் கறிக்குழம்புடன் களி விருந்தாகக் கொடுக்கப்படுகின்றது. பகிர்ந்து உண்டபின்பு விருந்து முடிந்தவுடன் வீடு வந்தடைகின்றனர். அன்றிரவு கூத்து நடைபெறுகின்றது.

# வீரங்கி அய்யனார் வழிபாடு

**அ.சின்னதுரை**, எம்.ஏ., எம்.ஃபில்.,
*மகேந்திரா கலை அறிவியல் கல்லூரி, திருச்செங்கோடு-637 501.*

வீரங்கி அய்யனார் வழிபாட்டு முறை, திருவிழா, சிறப்புவழிபாடு, மக்களின் நம்பிக்கை ஆகியவற்றை அறிமுகம் செய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும். விழுப்புரம் மாவட்டத்தில் சின்னசேலம் அருகில் 14 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது வீரபயங்கரம் என்ற சிற்றூர். வீரங்கி எனவும் சுருக்கமாக இவ்வூரை அழைப்பர். இவ்வூரில் முன்பு வீரபத்தரசாமி இருந்ததாகவும், வீரபத்தரசாமியை ஊரைவிட்டு அய்யனார் சாமி விரட்டிவிட்டார். வீரபத்தரசாமி வெளியே போகின்ற பொழுது என் நினைவாக இந்த ஊருக்கு என்பெயரையும் உங்கள் பெயரையும் இணைத்து வீரபயங்கரம் எனப்பெயர் இடுங்கள் என்று கூறியதால், அதற்கு இணங்கி அய்யனார் சாமி பெயர் வைத்ததாகவும் இவ்வூரில் வாழுகின்ற பெரியோர்களின் நம்பிக்கை. வீராதி வீரர்களுக்குப் பயத்தைத் தருகின்ற கை அய்யனாரின் (வீரம்+பயம்+கரம்) கை, ஆகவே, இந்தப் பெயர் பெற்றது எனப் பக்கத்து ஊராகிய கூகையூரில் 98 வயதில் வாழ்ந்து வருகின்ற தொல்காப்பியச் செம்மல் திரு அடிகளாசிரியர் கூறுகிறார்.

ஏறத்தாழ 200 ஆண்டுகளுக்கு முன் இக்கோயில் தோன்றியதாகக் கூறப்படுகின்றது. ஊரின் முகப்பிலே அமைந்துள்ளது அய்யனார் கோயில். கோயிலைச் சுற்றிலும் 25 ஏக்கர் பரப்பளவில் செடி, கொடி மரங்கள் நிறைந்த காடுகள் சூழ்ந்துள்ளன. கோயிலின் உள்ளே தனித்தனியே மூன்று கருவறைகள் உள்ளன. 1.அய்யனார், 2. நல்லதங்காள், 3. முனியப்பன் என்கின்ற சின்னையன். இக்கோயில் தோன்றிய நாள்முதல் வன்னியர் இனமக்களே தர்மகர்த்தாவாகவும், நிர்வாகியாகவும், பூசாரிகளாகவும் இருந்து வருகின்றனர்.

***வழிபாடு :*** வாரத்தின் ஏழுநாட்களும் சாமிகளுக்கு அபிடேகம் செய்து வெண்பொங்கலோ சர்க்கரைப் பொங்கலோ வைத்துப் பூசை நடைபெறுகிறது. ஞாயிறு, செவ்வாய், வெள்ளி ஆகிய நாட்களில் ஐநூறுக்கும் மேற்பட்டோர் வழிபடுவர். இந்த மூன்று நாட்களில் பத்துக்கும் மேற்பட்ட ஆடுகளும் கோழிகளும் பன்றிகளும் பலியிடப்

படுகின்றன. அய்யனாருக்கும் நல்லதங்காளுக்கும் சைவப் பொருளும். முனியப்பன் சாமிக்கு மட்டும் கள், சாராயம், மாமிசம் உள்ளிட்ட பொருட்களும் வைத்துப் பூசை செய்யப்படுகின்றது.

***திருவிழா :*** ஒவ்வொரு வருடமும் ஆயுத பூசை தினத்தன்று சாமியை அலங்காரம் செய்து கொலுவில் எடுத்து வைப்பது வழக்கம். குறிப்பிட்ட நாளோ வருடமோ திருவிழா நாள் என்பதெல்லாம் இங்குக் கிடையாது. ஊரில் மழை பொய்த்துவிட்டது என்ற காரணத்திற்காகத்தான் திருவிழா நடைபெறும். வீரபயங்கரம், கூகையூர் ஆகிய இரண்டு ஊர்ப் பொதுமக்களும் ஒன்று கூடிக் கூட்டம் போட்டு திருவிழாக் கொண்டாட முடிவு எடுப்பார்கள். இரண்டு ஊர் மக்களும் மறுநாள் வீடு, வாசலைச் சுத்தம் செய்து ஊரணிப் பொங்கல் வைக்க கோயிலுக்குச் செல்வார்கள். ஒவ்வொருத்தரும் கூடையில் அரிசி, கற்பூரம், பத்தி, விறகு, வாழைப்பழம் எடுத்துக்கொண்டு வந்து பொங்கல் செய்வார்கள்.

அதற்குள், அய்யனார், முனியப்பன், நல்லதங்காள் ஆகிய மூன்று சாமிகளையும் அலங்காரம் செய்து இருபக்கமும் வளை கட்டி ஒரு சாமிக்கு 20 பேர் வீதமாக மூன்று சாமிகளையும் தூக்கிக் கொண்டு, 5கி.மீ. தொலைவில் உள்ள கோவிந்தம்பாளையம் ஆற்றுக்குச் செல்வார்கள். ஆற்றில் சாமியை வைத்து பந்தல் போட்டுச் சாமியைச் சக்தி அழைப்பார்கள். சக்தி அழைக்கின்ற பொழுது சாமியைப் புகழ்ந்து பூசாரிகள் பல பாடல்களைப் பாடுவார்கள். வன்னியர் ஜாதியில் ஒருவரைக் குளிப்பாட்டி சாமியின் முன் அமரச் செய்வார்கள். சாமி வந்து முறிப்பார். உடனே அவர் தலையில் கரகத்தை வைத்து அவரை இரண்டு பேர் தாங்கிப் பிடித்துக் கொண்டு முன்னே வரப் பின்னே சாமியைத் தூக்கிக் கொண்டு, விரைவாகவும் சிலர் ஓடியும் கோயிலை நோக்கி வருவார்கள். இதற்குள் பொங்கல், வெண் பொங்கலோ, சர்க்கரைப் பொங்கலோ செய்து மற்ற மாவு, தேங்காய், வாழைப்பழம், வெற்றிலை பாக்கு, ஊதுவத்தி ஆகியவற்றை இரண்டு ஊர்ப் பெண்களும் தயாராக வைத்துக் கொண்டு சக்தி அழைத்துக் கொண்டு வருகின்ற சாமியின் வருகைக்காக காத்துக்கொண்டு இருப்பார்கள். சாமி வந்தவுடன் பொங்கல் பானையும் மாவுதட்டையும் சாமியின் முன் வைத்துப் பூசை செய்வர். பின், தட்டிலிருந்து ஒரு சிறுபகுதி மாவு, தேங்காய் எடுத்து அவற்றைச் சிறுசிறு துண்டுகளாக ஆக்கி சத்தி அழைக்கப்போன பக்தர்களுக்குப் பிரசாதமாகத் தருவார்கள். பிறகு சூரியன் மறைந்த பின்னர் அவரவர்கள் தங்களுக்குரிய பொங்கல் பானையை எடுத்துக் கொண்டு மேளம், வாத்தியம் முன் முழங்க அவரவர் வீட்டுக்குச் சென்றுவிடுவார்கள்.

இரவுச் சாப்பாட்டுக்குப் பின் ஒன்பது மணிக்குமேல் வீட்டில் வடக்கயிறு, கட்டை எடுத்துக்கொண்டு மீண்டும் கோயிலுக்குச் சென்று, சாமியை வெளியில் எடுத்து வைத்து, வளையல் கட்டித் தோள்களில் தூக்கிக் கொண்டு, மின்சாரம் இதுவரை அந்தக்கோயிலில் கிடையாது என்பதால், துணியால் ஆன பந்தத்தைக் கட்டிக் கொண்டு வண்ணார், நாவிதர் முன்னே தூக்கிக் கொண்டு செல்ல பின்னே சாமி வரக்கோயிலின் எல்லையில் சாமிக்கு ஆடு ஒன்றைப் பலியிடுவார்கள். பின் முதல் ஊரான வீரபயங்கரத்தில் சாமி வீதி ஊர்வலம் வரும். சாமி ஊர்வலம் வருகின்ற போது சாமி ஒன்றன் பின் ஒன்றாக வரிசையாக வர, ஒவ்வொரு வீட்டில் தேங்காய், வாழைப்பழம், மாவு, பச்சரிசி செய்து தட்டைப் பூசாரியிடம் தர, பூசாரி சாமியிடம் பூசை செய்தபின் அதில் உள்ள மாவு, வாழைப்பழம், அரிசி கொஞ்சம் எடுத்துக் கொள்வார். அதை சாமியைத் தூக்குகின்றவர்களுக்குத் தருவார்.

வீரபயங்கரத்தில் சாமி ஊர்வலம் முடிந்த பின்னர், நடுஜாமத்தில் கூகையூர் மக்கள் அதுவரை காத்திருந்து கூகையூருக்குச் சாமியைத் தூக்கிச் சென்றுவிடுவார்கள். சாமியைத் தூக்கிக் கொண்டு கூகையூருக்குச் செல்லுகின்ற வழியில் ஆதிதிராவிடர் மக்கள் யாரேனும் சாமியைப் பார்க்க வந்தால் அவர்களை விரட்டி விரட்டி அடிப்பார்கள். அவ்வூரில் உள்ள பர்க்கர் தக்கா எனும் இடத்தில் சாமியை இறக்கி வைத்துவிடுவார்கள். அதனை யாரும் பார்க்க முடியாமல் துணியால் முழுக்க மூடிவைத்து விடுவார்கள். அன்றைய இரவு விடிந்தவுடன் பகலில் சாமியைச் சீயக்காய், பால், இளநீர், எண்ணெய், தயிர் போன்றவற்றால் குளிப்பாட்டி அலங்காரம் செய்து பொங்கல் வைத்துப் படைப்பார்கள்.

இரவு கூகையூரில் ஐந்து மணி நேரத்திற்கு மேலாகச் சாமி ஊர்வலம் நடைபெறும். சாமி ஊர்வலம் முடிந்தபின், மீண்டும் சாமியை வீரபயங்கரத்தில் உள்ள பிள்ளையார் கோயிலுக்குக் கொண்டு வருவார்கள். மறுநாள் காலை துளுவ வெள்ளாளர் ஜாதியைச் சேர்ந்த ஒருவர் சாமிக்குத் தேவையான எல்லாப் பொருள்களையும் வாங்கி அன்று அவர் பூசை செய்வார். மாலை மூன்று மணிக்கு மேல் மஞ்சள் நீர் விழா நடைபெறும். மஞ்சள் நீர் முடிந்த பின், முனியப்பன் சாமியானது காடு முழுக்கச் சுற்றியடித்துத் தூக்கிக் கொண்டு போவார்கள். காட்டில் என்ன பயிர் செய்து இருந்தாலும் புகுந்து போவார்கள். அன்றைக்கு மட்டும் யாரும் எதையும் கேட்கமாட்டார்கள். ஒவ்வொரு காட்டில் இருந்தும் கிழங்கு, கம்பு, தேங்காய், கரும்பு போன்ற பொருளைப் பறித்துச் சாமியிடம் கட்டிவிடுவார்கள். காடு முழுக்கச் சாமியைச் சுற்றி வருகின்ற வரை மற்றச் சாமிகள் கோயிலுக்குப் போகாமல் இந்தச் சாமிக்காகப் பொது

இடத்தில் காத்துக் கொண்டு இருக்கும். பின் சாமி வந்தவுடன் மூன்று சாமிகளையும் கொண்டு போய் கோயிலில், மூன்று முறை சவாரி செய்து, சாமிகளைத் தோளிலிருந்து இறக்கி வைத்துக் கை தட்டிக்கொண்டு மகிழ்வார்கள். சாமியிடம் இருக்கும் கிழங்கு, கரும்பு, தேங்காய் போன்ற பொருளை ஆளுக்கொன்றாக எடுத்துக் கொண்டு போவார்கள். மீண்டும் சாமியைப் பழைய இடத்திலே எடுத்து வைத்துவிடுவார்கள். இத்துடன் திருவிழா இனிதாக முடிந்துவிடும்.

***நம்பிக்கைகள் :*** மூன்று வெள்ளிக்கிழமையோ, ஐந்து வெள்ளிக்கிழமையோ தொடர்ந்து வந்து சாமியை வணங்கி வந்தால் தொல்லைகள், துன்பங்கள், நோய்கள் நீங்கும். வீட்டில் பொருளோ, நகையோ களவுபோய் விட்டதென்றால் நாம் யாரின் மீது சந்தேகப்படுகிறமோ, அவர்களின் பெயரை ஒரு செப்புத் தகட்டில் எழுதி, முட்டை, தேங்காய், சேவல் ஆகியவற்றைக் கொண்டு வந்து ஒரு குழிதோண்டி அதில் வைத்து சேவலை அறுத்துத் தலையை உள்ளே குழியினுள் வைத்து வள்ளியத்தைத் தலைகீழாக ஊன்ற வேண்டும். இரண்டு வருடமோ ஆறு மாதமோ அவற்றிற்குள் சந்தேகப்பட்டவரின் வீட்டிலோ அவனுக்கோ ஏதேனும் ஒரு பாதிப்பு உண்டாக்கும். அதன் பிறகு மீண்டும் வந்து அவற்றைத் தோண்டி வெளியே எடுத்து வீசிவிட்டு வள்ளியத்தை நேராக ஊன்ற வேண்டும். குழந்தை இல்லாதவர்கள் கோயிலுக்கு வந்து, சிறு புதுத்துணி வாங்கி வந்து அதில் ஒரு கல்லை வைத்து நல்லதங்காள் கோயிலில் கட்டிவிட்டால் அவர்களுக்குக் குழந்தைப் பேறு உண்டாகும். வெளிநாடு செல்ல விரும்புகின்றவர்கள், திருமணம் செய்யப் போகின்றவர்கள், புதியதாகத் தொழில் தொடங்க இருப்பவர்கள், சாமியிடம் வேண்டி பூசாரியிடம் கேட்டால் அவர் ஒவ்வாதித்தழையைப் பறித்து அவற்றை எடுத்துச் சாமியை வேண்டித் தழையைப் போடுவார். இரண்டு இரண்டு தழையாகப் பிரித்து வைப்பார். தனியாக ஒரு தழை இருந்தால் எடுத்த காரியம் வெற்றியாகும் என்றும், இரண்டு தழையாக இருந்தால் எடுத்த காரியம் வெற்றி பெறச் சிறிது நாளாகும் என்றும் பொருளாகும். மனக் கோளாறால் பாதிக்கப்பட்டவர்கள் இக்கோயிலுக்கு வந்து தங்கியிருந்து காலை, மதியம், மாலை இறைவனை வழிபட்டு வந்தால் மனக்கோளாறு எல்லாம் விரைவில் தீர்ந்துவிடும். திருச்செங்கோடு, நாமக்கல், சேலம் மற்ற இதர பகுதிகளிலிருந்து லாரி, பஸ், கார் உரிமையாளர்கள் புதுவண்டியை வாங்கிய உடன் அய்யனார் கோயிலுக்கு வந்து பூசைபோட்டுச் செல்கின்றனர். அதனால் விபத்துக்கள் ஏற்படாமல் இருக்கும் என்பது நம்பிக்கை.

# தோட்டப்பாடி கன்னிமார் தேவதைகளின் வழிபாட்டு மரபு

**ஆ. சின்னதுரை**, எம்.ஏ., எம்.ஃபில்.,
*அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி, நாமக்கல்.*

விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டாட்சிக்கு உட்பட்ட தோட்டப்பாடி, பூண்டி நைனார் பாளையம் அகிய மூன்று கிராமத்து மக்களும் ஒன்று சேர்ந்து கன்னிமார் தேவதைகளை வழிபடுகின்றனர். மூன்று கிராமத்திலிருந்து ஒரு கிராமம் கலந்துகொள்ளவில்லை என்றாலும் திருவிழா நடைபெறாது. கன்னிமார் தேவதைகளின் வழிபாட்டு இடம் ***தோட்டப்பாடி கிராமம்*** ஆகும். கிராமத்தின் கிழக்குப் பகுதியில் தமிழக அரசின் வனத்துறைக்குச் சொந்தமான காட்டுப் பகுதியில்தான் கன்னிமார் தேவதைகளை வழிபடும் இடம் உள்ளது. வனத்துறைக்குச் சொந்தமான பகுதி என்பதால் கோயிலைச் சுற்றி மதில் சுவரோ, திரிசூலம், அம்பு போன்ற தெய்வ வழிபாட்டிற்கான எந்த அடையாளமும் இருக்காது. பெரிய கள்ளிமரம் ஒன்று இருக்கும். அதற்கு வரிசையாக ஏழு கற்கள், அதுதான் கன்னிமார் தேவதைகளின் வடிவம். அதன் அருகில் பெரிய கல் ஒன்று இருக்கும். அதை இன்னொரு கல்லால் அடித்தால் மணியைப் போன்று ஒலிக்கும். அதைக் ***கிணீர் கல்*** என்று அழைக்கின்றனர். இன்றும் அந்தக் கல் உண்டு, விறகு பொறுக்கச் செல்லும் பெண்கள் அந்தப் பகுதிக்குச் செல்ல மாட்டார்கள். சென்றால் ***துஸ்டக்கார தேவதை*** ஏதாவது செய்துவிடும் என்ற அச்சம் இன்றும் அவர்களிடம் உள்ளது.

வனப்பகுதியில் எங்கு இருந்து பார்த்தாலும் அந்தக் கள்ளி மரத்தைப் பார்க்க முடியும். எனவே விறகுப் பொறுக்கச் செல்லும் பெண்கள் கள்ளிமரத்தை மட்டுமே பார்த்துக் கன்னத்தில் போட்டுக்கொள்வார்கள் ; வேண்டிக்கொள்வார்கள். இதுவரை எந்தப் பெண்களும் கன்னிமார் தேவதைகள் இருக்கும் இடத்தைப் பார்த்ததில்லை. இந்தத் தேவதையை வழிபடும் முறை அவ்வளவு எளிதானதல்ல. அதேபோல் யாராலும் விரதத்தை ஒழுங்காகக் கடைப்பிடிக்க முடியாது ; அவ்வளவு கட்டுப்பாடுகள். எனவே

இத்தேவதைகளின் திருவிழா குறிஞ்சிமலர் பூப்பது போலத்தான். என் தந்தையைக் கேட்டபோது அவர் சிறுவனாக இருந்தபோது இத்தேவதைகளை வணங்கினார்களாம். அதன்பிறகு 24 வருடம் கழித்து ஒருமுறை இத்தேவதைகளை வழிபட்டனர். அப்போது நான் பத்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தேன். அதனால் அத்தேவதைகளின் வழிபாட்டு மரபைக் காணும் வாய்ப்புக் கிடைத்தது. அதன்பிறகு இன்றுவரை 11 வருடங்கள் ஆயிற்று. இன்னும் இந்த தேவதைகளுக்கு வழிபாடு நடக்கவில்லை.

## தேவதைகளின் வரலாறு

ஒரு ஊரில் ஏழு சகோதரிகள் இருந்தார்களாம். ஏழுபேருமே ஒருவர் மீது ஒருவர் அதிக அன்பு வைத்திருந்தார்களாம். எனவே ஒருவரைப் பிரிந்து ஒருவர் இருக்க முடியாது என்பதால் ஏழுபேருமே திருமணம் செய்துகொள்ளவில்லையாம். கற்பில் சிறந்த அந்த ஏழு சகோதரிகளும் ஊருக்காகவும், ஊர்மக்களுக்காகவும் நன்மைகள் பல செய்தார்களாம். (அதனால்தான் இந்தத் தேவதைகள் வனத்தில் அமைந்தது என்றும் கூறுவார்கள்) கற்பில் சிறந்த இந்த ஏழு கன்னிகள்தான் இன்று கிராம மக்கள் வணங்கும் தேவதைகள் என்று விளக்கினார்கள். அதிலும் இந்த ஏழாவது கன்னி ரொம்பவும் துஸ்டக்காரியாம், கோபக்காரியாம். பிடாரி என்பவள் ஏழு கன்னிமார்களில் கடைசியில் இருப்பவள் ஆவாள். இன்னொரு பிரிவினர் ; வானத்துத் தேவதைகள் இவர்கள். இந்த ஏழு கன்னிப்பெண்களும் இறைவனுக்குப் பூப்பறிப்பதற்காகப் பூலோகம் வந்தார்கள். நேரம் தெரியாமல் அதிகமாகப் பூவைப் பறித்துக் கொண்டேயிருந்ததால் விடிந்துவிட்டது. எனவே அவர்களால் திரும்பி தேவலோகத்திற்குச் செல்ல முடியவில்லை. எனவே இந்த வனத்தில் தங்கிவிட்டதாகக் கூறினார்கள். மேலும் இந்தத் தேவதைகள் அருகில் உள்ள ஊர்ப் பெரியவர்களின் கனவில் தோன்றித் தங்களின் நிலைமையைக்கூறி, தங்களை வணங்கிப் பூசித்து வந்தால் உங்கள் கிராமத்தையும், கிராமத்து மக்களையும் செழிப்பாக வைத்திருப்பேன் எனக் கூறியதாம். அதோடு தங்களை எப்படி வழிபட வேண்டும் என்றும், நோன்பு எப்படி இருக்க வேண்டும் என்றும், தாங்கள் வீற்றிருக்கும் இடத்தையும் கனவில் சொல்லியதாம். மறுநாளே ஊர்ப் பெரியவர்கள் ஒன்றுகூடித் தங்கள் கனவினைப் பகிர்ந்து கொண்டனர். எல்லோருடைய கனவிலும் இதே செய்திகள் இருக்கவும் அனைவரும் வியப்புற்று, கிழக்கு நோக்கி வனப்பகுதிக்குச் சென்றார்களாம். அங்கு ஒரு நல்லபாம்பு அவர்களை வழிநடத்திச் சென்று, அந்தத் தேவதைகள் வீற்றிருக்கும்

இடத்தில் சென்று மறைந்து போனதாம். இது நடந்து நூறு ஆண்டுகள் இருக்கலாம் என்றனர். இப்படி இரண்டு பிரிவாகக் கன்னிமார் தேவதைகளின் வரலாற்றைக் கூறினார்கள். மேலும் மாரியம்மன், திரௌபதியம்மன் திருவிழாக்களில் காத்தவராயன் கதைப்பாடல் இடம்பெறும். இந்தக் காத்தவராயன் கதைப்பாடல்களில் ஏழு கன்னிமார்களின் செய்தியைப் பற்றிச் சில இடங்களில் வருகிறது. எனவே இவர்கள் வானத்து தேவதைகள் என்றே பெரும்பாலோர் நம்புகின்றனர்.

## வழிபடும் மரபு

தோட்டப்பாடி, பூண்டி, நைனார்பாளையம் ஆகிய மூன்று கிராமத்து மக்களின் ஒப்புதலைப் பெறவேண்டும். தோட்டப்பாடி கிராமத்திலிருந்து வெளிபெயர்ந்து குடியமர்ந்தவர்கள்தான் பூண்டி, நைனார்பாளையம் கிராமத்து மக்கள். இவர்கள் குடிபெயர்ந்து போன பிறகு கன்னிமார் தேவதைகளை வழிபடாமல் விட்டுவிட்டதால் கடும் துன்பத்திற்கும், கொடுமையான நோய்க்கும் ஆளாகினார்களாம். அதன்பிறகு தங்களை மன்னிக்குமாறு கன்னிமார் தேவதைகளிடம் முறையிட்ட பின்புதான் இவர்களின் துன்பம் நீங்கியதாம். எனவேதான் மூன்று கிராமத்து மக்களும் ஒன்று சேர்ந்து வழிபடுகின்றனர். மூன்று கிராமத்து மக்களின் ஒப்புதலைப் பெற்ற பிறகு பூப்போட்டுக் கேட்பார்கள். பூப்போடுதல் என்றால் வேப்பந்தழையைக் கொத்தாக உருவி சாமியைக் கும்பிட்டுக் கொஞ்சம் இலைகளைத் தனியாக அள்ளி வைத்து இரண்டிரண்டு இலைகளாகப் பிரிப்பர். மீதி ஒரு இலை தனியாக வந்தால் அருள் கிடைத்துவிட்டது, அல்லது வாக்குக் கிடைத்து விட்டது என்று திருவிழாவிற்கான ஏற்பாட்டினைச் செய்வார்கள். அதுபோல் மூன்றுமுறை அருள்வாக்குக் கொடுத்தபிறகே திருவிழா நடக்கும்.

காப்புக் கட்டிய பிறகு யாரும் ஊரை விட்டுவெளியில் தங்கக்கூடாது. விரதம் இருப்பவர்கள் அக்னிகரகம் எடுப்பவர்கள் ஏழுநாளும் விரதம் இருக்க வேண்டும். திருவிழா முடியும்வரை பாயில் படுக்கக் கூடாது. தரையில்தான் படுக்க வேண்டும். கரகம் எடுப்பவர்கள் ஏழு நாட்களும் சோப்பு, பவுடர், எண்ணெய், மற்றும் வாசனைப் பொருட்கள் எதையும் பயன்படுத்தக்கூடாது. முதலில் சின்னையா, மூப்பனார், மாரியம்மன், சீராத்தாள் ஆகிய தெய்வங்களுக்கு ஒவ்வொரு நாளாகப் பொங்கல் வைத்து விழா நடைபெறும். ஒவ்வொரு இரவும் கேளிக்கை விளையாட்டுகள் நடைபெறும். ஐந்தாவது நாள்தான் கன்னிமார் தேவதைகளுக்குப் பொங்கல் வைப்பார்கள். மூன்று கிராமத்து மக்களும் ஒன்றுகூடிப் பொங்கல் வைப்பார்கள். ஒவ்வொரு குடும்பமும் புதுப்பானையில் ஏழுபானையில் பொங்கல் வைக்க வேண்டும்.

ஒவ்வொரு பானையிலிருந்தும் ஒரு கரண்டி சாதம் எடுத்துக் கன்னிமார் தேவதைகளுக்கு வைத்துப் 'படையல் செய்வார்கள். அன்று இரவுகன்னிமார் தேவதைகள் அந்தப் படையலை ஏற்றுக்கொண்டதாக இருந்தால் கனவில் வரும். ஊர்ப் பெரியவர்களின் கனவில் தோன்றிப் பொங்கல் வைத்தது தனக்கு நிறைவைக் கொடுத்ததாகவும், தங்களுக்குப் பட்டு எங்கு எடுக்கவேண்டும் என்றும் கூறுமாம். தேவதைகள் சொன்ன ஊர்களில் சென்றுதான் பட்டாடை எடுப்பார்கள். பெரும்பாலும் தஞ்சாவூர், கும்பகோணம், திருச்சி, புதுக்கோட்டை பக்கம்தான் பட்டு எடுக்கப் போவார்கள். ஆறு தேவதைகளுக்கும் ஒரே கடையில் பட்டுத்துணி எடுத்துவிடுவார்கள். ஏழாவது தேவதைக்கு மட்டும் இரண்டு மூன்று கடை ஏறி இறங்கி அதன்பிறகு ஏதாவது ஒரு கடையில் பட்டு எடுப்பார்களாம். ஒரே கடையில் எடுத்தால் ஏழாவது தேவதை தன்னிறைவு அடையாதாம். எனவே ஏழாவது கன்னிக்கு மட்டும் விலை கொஞ்சம் கூடுதலாகவே போட்டுப் பட்டாடை எடுத்து வருவார்கள்.

அன்று இரவு அம்மன் உலா வரும். உலா முடிந்ததும் முக்கியமான பெரியவர்கள் மற்றும் விரதம் இருப்பவர்கள் ஆகியோர் 7 பெரிய புதிய பர்னைகள், 7 உருண்டை அரைத்த மஞ்சள், 7 பட்டாடைகள், 7 டஜன் கருப்பு வளையல்கள், 7 கருகமணி, 7 கட்டி சந்தனம், 7 வள்ளம் சர்க்கரை, 7 வள்ளம் அரிசிப்பொறி, 7 வள்ளம் அவல், வாசனை திரவியம் 7 பாட்டில்கள், 7 டஜன் வாழைப்பழம், 7 தேங்காய், 7 நல்லெண்ணெய் நிரம்பிய பாட்டில்கள் என இரவோடு இரவாகக் கொண்டு செல்வார்கள். கன்னிமார் தேவதைகள் இருக்கும் இடத்திலிருந்து 50 அடி தூரத்தில் மேற்குத்திசையில் ஒரு நீரோடை உள்ளது. அந்த ஆற்றில் இந்தப் பொருள்களைக் கொண்டு வைப்பார்கள். மணல் குவியலை மேடாக்கி, அங்கேயே ஊற்றுப்பறித்து ஏழு பானைகளிலும் நீரால் கொண்டு நிரப்புவார்கள். ஒவ்வொரு பானைக்கு அருகிலும், ஒரு உருண்டை மஞ்சள், சந்தனம் வைக்கப்பட்டிருக்கும். அதன்பிறகு வரிசையாக கொண்டு வந்துள்ள பொருட்களை ஜோடித்து ஒவ்வொரு செட்டாக, ஏழு கன்னிகளுக்கும் தனித்தனியே வைப்பார்கள். பிறகு 7 வள்ளம் சர்க்கரை, 7 வள்ளம் அரிசிப்பொறி, 7 வள்ளம் அவல் என வரிசையாக வைத்து, 7 டஜன் வாழைப்பழம், 7 தேங்காய்களை உடைத்து வைத்து, கற்பூரம்,ஊதுபத்தி ஆகியவற்றை ஏற்றி வணங்கிவிட்டு திரும்பிப் பார்க்காமல் வீட்டுக்கு இரவிலேயே வந்துவிடுவார்கள்.

விடிந்ததும் ஊர்மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு ஆற்றுக்குச் செல்வார்கள். அங்கே போய்ப் பார்த்தால் ஏழு கன்னிகளும் அதை ஏற்றுக்கொண்ட அடையாளங்கள் இருக்கும். பானையில் நிறைய

வைத்த தண்ணீர் 7 பானைகளிலும் முக்கால்வாசி நீர் குறைந்திருக்கும். அரைத்த உருண்டை மஞ்சளிலும் சிறிது குறைந்திருக்கும். காற்றினால் கரையாதவாறு அடுக்கி வைக்கப்பட்ட பட்டாடைகள் கலைந்து கிடக்கும். எண்ணெய் பாட்டில்களில் எண்ணெயின் அளவு குறைந்திருக்கும். காகிதத்தில் வைக்கப்பட்ட வளையல்கள் பிரிந்து கலைந்து கிடக்கும். எல்லாப் பொருள்களும் அலங்கோலமாய் கலைந்து கிடக்கும். மணல்தரையில் மொழுகி வைக்கப்பட்ட இடத்தில் குழந்தைகளின் பாதச்சுவடிகள் போன்று நிறைய சுவடிகள் மணலில் இருக்கும். ஏழு கன்னிமார்களும், மஞ்சள்பூசி, எண்ணெய் தேய்த்துக் குளித்ததாகவும், ஆடைஅணிலகன்களை அணிந்து மகிழ்ந்ததாகவும், தின்பண்டங்களை உண்டு மகிழ்ந்ததாகவும், அந்தக்களிப்பில் 7 கன்னிமார்களும் ஆடிப்பாடியதால் குழந்தைகள் பாதச்சுவடுகள் போன்ற சுவடு ஏற்பட்டிருப்பதாகவும் அம்மக்கள் நம்புகின்றனர். தேவதைகள் உண்ட எச்சில் பண்டங்களை ஒவ்வொரு வீட்டுக்கும் பகிர்ந்து கொடுக்கின்றனர். அதைப் பக்தியோடு மக்கள் பெற்று உண்கின்றனர். அன்றுதான் தேரும் ஊரைச்சுற்றி இழுத்து வருவார்கள். தேர் வரும்போது கன்னிமார்களுக்கு நோன்பு இருந்தவர்கள் கரகம் எடுத்து ஆடிவருவார்கள்.

தேர் இழுத்து முடிந்தவுடன் கன்னிமார்களுக்கு நோன்பு இருந்தவர்கள் பொங்கல் வைத்துக் கன்னிமார்களை வணங்குவார்கள். பொங்கல் வைத்த சோற்றை 7 மொந்தைகள் நிறைய நிரப்பி ஒன்றின் மீது ஒன்றாக அடுக்கிக் கோயிலுக்குள் வைத்துவிட்டு வீட்டுக்கு வந்து விடுவார்கள். அத்தோடு திருவிழா நிறைவு பெற்றுவிடும்.

மூன்று நாட்கள் கழித்து மொந்தையில் வைத்த பொங்கல் சோற்றை எடுத்துப் பார்ப்பார்கள். ஒழுங்காக விரதம் இருந்தவர்கள், பக்திநெறி தவறாது வந்தவர்களின் சோறு கெட்டுப்போகாமல் அப்படியே இருக்கும். நோன்பு இருப்பதில் தவறு நடந்திருப்பின் அவர்களின் சாதம் கெட்டுப்போய்விடும்.

அவ்வளவு வாசனைப் பொருட்கள், இனிப்புப் பதார்த்தங்களைக் கொண்டு காட்டுப்பகுதியில் உள்ள ஆற்றில் வைத்துவிட்டு வருகிறார்கள். காட்டுப்பகுதியில் எத்தனை ஈ, எறும்பு, பூரான், பாம்பு, பல்லி, பூச்சிகள், வண்டுகள் இருக்கின்றன. அவற்றில் ஒன்றுகூட அந்த இடத்தில் மொய்க்காமல் இருக்கிறது. இதைத் தெய்வசக்தி என்று நம்பி இம்மக்கள் 7 கன்னிமார்களை வழிபடுகின்றனர்.

# குலாலர் குல - கன்னிமார் கருப்பண்ணசாமி வழிபாட்டு மரபுகள்

**அரு. சுந்தரபாண்டியன்**, எம்.ஏ., எம்.ஃபில்.,
*அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி, நாமக்கல்.*

## முன்னுரை

காலங்காலமாக நாகரிகங்கள் மாறி வந்தாலும், மக்களின் பண்பாட்டுக் கூறுகள் சமூக வாழ்க்கையில் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்து காணப்படுகின்றன. இவை மக்களின் மதிப்பீட்டையும், வாழ்க்கைத் தரத்தையும் அறிய உதவும் காலக் கண்ணாடியாக இருக்கின்றன. அவ்வகையில் நாட்டுப்புற மக்களிடையே காணப்படுகின்ற வழிபாட்டு முறைகளைப் பற்றி அறிந்து கொள்வதன் மூலமாக நாட்டுப்புற மக்களின் சமூக வாழ்க்கையையும், சமூகத்தின் மீது அவர்கள் கொண்டுள்ள நம்பகத் தன்மையினையும் அறியலாம். அதனடிப்படையில் குலாலர் குல இன மக்களின் வழிபாட்டுத் தெய்வமான கன்னிமார் கருப்பண்ண சாமியின் வரலாற்றைப் பற்றியும், வழிபாட்டு நம்பிக்கைகளைப் பற்றியும் ஆய்ந்து அறிவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## கோயிலின் அமைவிடம்

ஈரோடு மாவட்டம், காங்கயம் வட்டம் பாப்பினி கிராமத்திலிருந்து வடகிழக்கில் சுமார் ஒரு கிலோ மீட்டர் தொலைவில் காடமனை என்ற இடத்தில் கன்னிமார் கருப்பண்ணசாமி கோயில் அமைந்துள்ளது. குலாலர் இனமக்களின் குல தெய்வமாகிய இத்தெய்வத்தை ஆறு தலைமுறைகளுக்கு முன்பிருந்தே வழிபட்டு வருகின்றனர். காடமனையிலுள்ள கோயிலுக்கு விசாலமான இடமும், மக்கள் சென்றுவர சரியான பாதை வசதியும் இல்லாத காரணத்தினால் தெய்வத்தின் தீவிர பக்தரான அருணாச்சல உடையாரின் கனவில் தோன்றி புதிய கோயில் எழுப்ப அருள் வாக்குக் கூறியதாம். அதற்கேற்பத் தற்போதுள்ள புதிய கோயில் காங்கயம், முத்தூர் சாலையில் பாப்பினி பிரிவிற்கு மிக அருகில் அமைக்கப்பட்டுள்ளது.

## கன்னிமார் கருப்பண்ண சாமியின் வரலாறு

கன்னிமார் சாமிகள் பிறவித் தளையிலிருந்து விடுபட்டு இறைவனோடு இணைவதற்காகத் துறவறம் இருந்து ஈசுவரனை நோக்கிக் கடும் தவம் மேற்கொண்டனர். அத்தவத்திற்காக ஆள் அரவமற்ற கானகத்தைத் தேடித் தவம் செய்தனர். அந்தத் தவத்திற்குக் காவலாகக் கருப்பண்ணசாமி தெய்வம் இருந்தது. கன்னிமார்களின் தவத்திற்காகக் கருப்பண்ணசாமி காவல் இருந்ததால் கன்னிமார் தெய்வம் இருக்கும் இடங்களிலெல்லாம் கருப்பண்ணசாமியும் இருக்கும் என்பது ஐதீகமாகக் கருதப்படுகிறது. கன்னிமார் சாமியைப் பொறுமை குணமாகவும், கருப்பண்ண சாமியை யோக குணமாகவும் வழிபடுகின்றனர். கருப்பண்ணசாமி வீரம் பொருந்திய காவல் தெய்வமாக இருக்கின்றது. அவரை வணங்குவதால் தீமைகள் அணுகாமல் பக்தர்கள் காப்பாற்றப்படுவர் எனக் கருதுகின்றனர்.

## நம்பிக்கையும் - வழிபாட்டு முறைகளும்

குலாலர் இன மக்களின் முன்னோர்கள் முனிவர்களிடம் சென்று ஞான உபதேசம் கேட்டனர். முனிவர்கள் அவர்களை நோக்கி ***கன்னிமார் கருப்பண்ண சாமியை வழிபட்டு வந்தால் எல்லா வளங்களையும், நலன்களையும் பெற்று வாழ்வில் பயன் பெறுவீர்கள்*** என்று கூறினார்கள். அன்றிலிருந்து பரம்பரை பரம்பரையாகக் கன்னிமார் கருப்பண்ண சாமியைக் குலாலர் இனமக்கள் வழிபட்டு வருகின்றனர். இதனால் எத்தீங்கும் இன்றி குலாலர் குடி மக்களுக்கும், மற்ற இன மக்களுக்கும் அருளும். பொருளும், குறைவில்லா வாழ்வும் இத்தெய்வம் அளித்து வருகின்றது.

கன்னிமார் கருப்பண்ண சாமிக்கு வெள்ளிக்கிழமை தோறும் வழிபாடு நடத்தி வருகின்றனர். ஏழு கிழமைகளில் வெள்ளிக்கிழமை சுக்கிரனுக்கு உரிய முக்கிய நாளாகக் கருதப்படுகிறது. சுக்கிர பலன் குறைந்தவர்கள் சுக்கிர ஓரையில் சீரங்கம் சென்று அரங்கநாதரை வழிபடுகின்றனர். அங்கு செல்ல இயலாதவர்கள் கன்னிமார் கருப்பண்ண சாமியை வழிபடுவதாலும் அத்தகைய பலன்கள் கிடைக்கின்றன என்பது நம்பப்படுகிறது.

## திருவிழாக்களும் படையல் பொருட்களும்

கன்னிமார் கருப்பண்ண சாமிக்கு மூன்றாண்டுகளுக்கொரு முறை வைகாசி அல்லது மாசி மாதத்தில் விழா எடுக்கின்றனர். விழா எடுப்பதற்கு முன்பாக பூப்போட்டோ, சோதிடம் அல்லது சகுனம்

பார்த்தோ, அருள் வாக்குக் கேட்டோ விழா தொடங்குகின்றனர். மேற்கண்ட நடைமுறைகளைக் கையாளும் போது உடனடியாகத் திருவிழா எடுக்க வேண்டும் என்று வாக்கு வந்தால் மூன்று ஆண்டுகள் என்று கணக்குப் பார்க்காமல், மாதம் பார்க்காமல் உடனே விழா தொடங்கப்பட்டு வருகின்றது.

குலாலர் குடி மக்கள் கொங்கு நாட்டை 24 நாடுகளாகவும், 8 ஊர்களாகவும் மொத்தம் 32 வகையாகப் பிரித்து வருகின்றனர். விழாவின் போது இவ்வூர்களிலும், நாடுகளிலும் வாழ்கின்ற குலாலர் குலப்பங்காளிகள் ஒன்றாகச் சேர்ந்து ஒரே குடும்பமாகப் பொங்கல் வைக்கின்றனர். இதனைப் பெரும்பொங்கல் என்று அழைக்கின்றனர்.

இப்பெரும் பொங்கலைச் சாமிக்குப் படையலாகப் படைக்கின்றனர். பொங்கலைப் படையல் போடுவதற்கு முன்பாக காவேரி ஆற்றிலிருந்து எடுத்துவரப்படுகின்ற தீர்த்தத்தினால் சாமியைச் சுத்தப்படுத்துகின்றனர். பின்னர் சந்தனம் பூசி, குங்குமம் இட்டு, பட்டாடை உடுத்தி அலங்கரிக்கின்றனர். அதன்பிறகு கெடா வெட்டி வந்திருக்கின்ற விருந்தினர்களுக்கு உணவளிக்கின்றனர். மீதமாகும் உணவினை மற்றவர்களுக்குத் தானமாக வழங்கி வழிபட்டு வருகின்றனர்.

## முடிவுரை

நாட்டுப்புற வழிபாட்டு மரபுகளில் குலாலர்கள் கன்னிமார் கருப்பண்ண சாமியின் மீது கொண்டிருக்கின்ற நம்பிக்கைகளை அறிய முடிகிறது. இவர்களது வழிபாட்டுத் தெய்வம் தீவினைகளைக் களைந்து நன்மை தருவதால் குலாலர்கள் தெய்வத்தின்மீது கொண்டிருக்கின்ற வழிபாட்டு நம்பிக்கையினைக் காணலாம்.

# ஆவி வழிபாட்டின் எச்சம்

**மா. சுப்புரத்தினம் ஜெகதீசன்,** எம்.ஏ., எம்.ஃபில்.,பிஎச்.டி.,
*ஆர்.வி.எஸ். கலை அறிவியல் கல்லூரி, சூலூர், கோவை.*

பண்டைய இனக்குழு மக்கள் இறந்தவர்களின் ஆவிகள் உலவுவதாக நம்பினர். மேலும், இறந்தவர்களின் ஆன்மாவிற்கு ஆற்றல் அதிகம் என்றும், அது ஆக்கசக்தியாகவும், அழிவு சக்தியாகவும் வெளிப்படலாம் என்றும் நம்பினர். அவ்வான்மா அவர்கள் சந்ததியரோடு தொடர்பு கொள்ளும். அவற்றைச் சடங்குகள், வழிபாடுகள், சாந்திகள் மூலம் சந்ததியினர் மகிழ்வித்தால், அவர்களுக்கு முன்னோர்களின் ஆவி ஆற்றலளிக்கும் என நம்பினர். இதற்காகச் சடங்குகள் நடத்திப் படையல் போட்டு வழிபாடு செய்தனர். இதற்கு ஆன்றோர் வணக்கம் (Ancester Worship) என்று பெயர். இப்பழக்கம் ஆப்பிரிக்கா, நைஜீரியா, கென்யா, தென்கடல் தீவுகள், மேற்கிந்திய தீவுகள் போன்றநாடுகளில் இருந்துள்ளது. அதியமானது ஆன்மாவை மகிழ்ச்சிப்படுத்த அவனுடைய மக்கள் சடங்குகள் செய்துள்ளனர் என்று புறம் 243 குறிப்பிடுகின்றது. மேலும், ***பிடாரிக்கு நவகண்டம் குடுத்த குன்றகத்தலை யறுத்துப் பிடலிகை மேல் வைத்தானுக்கு திருவான்மூர் ஊரார் வைத்த பரிசாவது எமூர்ப் பறை கொட்டக் கல்மேடு செய்தார், ஆவிக்குக் குடுப்பாராவார்*** என்று செங்கம் நடுகல் செய்தி குறிப்பிடுகின்றது. ஆகவே, நமது நாட்டில் பண்டைய காலம் தொட்டே ஆவி வழிபாடு சிறப்புப் பெற்றிருந்தது என்பது தெரிகின்றது.

மேலும், இறந்தவனது ஆன்மாவைச் சில சடங்குகள் மூலம் ஓர் குறிப்பிட்ட இடத்திற்கு வரவழைக்கலாம். அங்குள்ள ஓர் பொருளில் நுழைந்து கொள்ளச் செய்யலாம் என்ற நம்பிக்கை உலகமெங்கும் பண்டைய மக்களின் பண்பாட்டில் காணப்பட்டுள்ளது. இதன் வெளிப்பாடே இன்றும் நாம் தெய்வ விக்கிரங்கள் பிரதிட்டை செய்து பல மந்திரங்கள் ஓதி செய்யும் ***ஆவாகனம்*** என்று குறிப்பிடும் பழக்கம் என்று கருதலாம்.

ஆவிகளை ஆவேசமாகக் கூக்குரலாலும், உரத்த வாத்திய ஒலியாலும், புகை மூட்டத்தாலும், உயிர்ப்பலி போன்றவைகளாலும் ஒரு குறிப்பிட்ட ஆவியை ஒரு குறிப்பிட்ட மனிதனின் மீது தோன்றும்படி

செய்யலாம்' என இனக்குழு மக்கள் நம்பினர். சங்க நூல்களில் இடம் பெறும் சூர மகளிர் வெறிப்பாட்டு குறித்த செய்திகள் இந்நம்பிக்கையின் வெளிப்பாடே ஆகும். மேலும், இலக்கண நூல்கள் குறிப்பிடும் பெரும் படையும், கல்முறை பழிச்சலும், உணவு படைத்து, பாடல்கள் பாடி, துணங்கை கூத்தாடி இறந்தவர்கள் ஆவிகளை ஒரு பொருளில் உறைய அழைக்கும் சடங்கே எனலாம்.

இப்பழக்க வழக்கங்களின் எச்சங்கள் இன்றும் நம் நாட்டார் பண்பாட்டில் உள்ளன. அவற்றில் ஒன்று தமிழகத்தின் தென்மாவட்டங்களில் இன்றும் இறந்தவர்களைப் ***பாடையெழுப்பி வழிபடுதல்*** என்ற பழக்கத்தைக் கடைப்பிடித்து வருகின்றனர். குறிப்பாக, இந்தப் பழக்கம் நாட்டுப்புற மக்களால் பெரும்பாலும் கடைப்பிடிக்கப்படுகிறது. இதில் பாடை எழுப்புதல் என்பது படை என்பதில் இருந்து திரிந்திருக்கலாம். இப்பழக்கம் திடீரென்று இறக்கும் (அதாவது வயது முதிர்ந்து இறக்காமல் ஆபத்திலேயோ அல்லது ஏதாவது ஒருவிதத்தில் தற்கொலை செய்து கொள்வதால் ஏற்படும் இறப்பு) ஆண், பெண் பாலருக்கும் கடைப்பிடிக்கப்படுகின்றது.

இதன்படி இறந்தவர்களின் ஆவி இங்கும் அங்கும் ஓரிடத்திலாவது நில்லாது அலைந்து கொண்டு இருக்கும் என்று நம்பப்படுகிறது. இறந்தவரின் ஆவியை அந்தக் குடும்பத்தில் யார் மீது இறந்தவர் பாசமாக இருப்பாரோ அவர்மீது உடுக்கை அடிப்பவரை வைத்து அருள் வரச்செய்து, எந்த நாளில் எழுப்புவது என்று நாள் குறிப்பிடுவார்கள். அதன்படி எழுப்புவதற்கு நாள் குறிப்பிடப்படும். அந்த நாள் இரவு சுற்றத்தார் அனைவரையும் வரவழைத்து, அந்த இரவு சுற்றத்தார் அனைவரையும் வரவழைத்து, அந்த இரவு 10 மணி அளவில் இறந்தவர் இறந்த இடத்திற்கு எல்லோரும் செல்வார்கள்.

அந்த இடத்தில் ஒரு மண் கலயத்தில் நீர், நிறைய நிரப்பி வைப்பார்கள். அந்தக் கலையத்தில் வாய்ப்பகுதியில் சிறிய நூலால் கட்டி நான்கு திசையிலும் ஒரு குறிப்பிட்ட தூரத்தில் ஆய்வு அடித்து கட்டிவிடுவார்கள். பின்னர் அந்த கலையத்திற்கு அருகில் ஒரு பெட்ரோமாக்ஸ் விளக்கை வைப்பார்கள். அதன்பின் அந்தக் கலையத்தைச் சுற்றி உடுக்கை அடிப்பவர், ஆவி வரும் நபர் மற்றும் இறந்தவருடைய சுற்றத்தார்கள் அனைவரும் அமர்ந்திருப்பார்கள். இரவு பெரும்பாலும் சுமார் 3 அல்லது 4 மணியளவில் அந்தக் கலையத்தில் உள்ள நீருக்குள் ஏதாவது சிறிய பூச்சி விழுந்துவிடும். உடனே உள்ளே விழுந்த பூச்சி சென்றுவிடாமல் அந்தக் கலையத்தை, ஒரு வெள்ளைத் துணியை வைத்து வாய்ப்பகுதியை மூடிக் கட்டிவிடுவார்கள். அதன்படி

அந்தக் கலையத்திற்குள் இறந்தவரின் ஆவி அந்த பூச்சியின் வடிவில் வந்து புகுந்துவிட்டதாக நம்புகிறார்கள்.

பிறகு அந்தக் கலையத்தின் மேல் தென்னையின் பூ கொத்தால் வைத்துக் கட்டி, மேலும் அதற்குப் பலவகை மலர்களால் அலங்காரம் செய்து (பெரும்பாலும் கரகத்தின் அமைப்பை போன்றது) வைக்கிறார்கள். பின்னர், அந்த ஆவி புகும் நபரின் மீது உடுக்கை அடிப்பவர் ஆவியை வரச் செய்கிறார். சிறிது நேரம் எல்லோரும் எழுந்து வணங்கி அந்த நபருக்கு சுற்றத்தார்கள் மாலை, புது ஆடைகள் எல்லாம் அணிவிக்கிறார்கள். பின்னர் ஒரு சேவலை அந்தக் கலையத்திற்குப் பலி கொடுக்கிறார்கள். அதன்பின் நான்கு பக்கத்திலும் எலுமிச்சை பழத்தை அறுத்து எறிகிறார்கள். அந்த ஆவி வருபவர் அந்தக் கலையத்தைத் தன் தலையில் தூக்கி வைக்கும் வரை அல்லது அந்த கலையத்தை உடுக்கைக்காரர் எடுத்து அந்த ஆவி பிடித்த மனிதர் தலையில் வைக்கும் வரை எல்லோரும் குடிசை போட்டு மேளதாளம், வாணம் எல்லாம் போடுகிறார்கள். அதன் பின்னர் அந்தக் கலையத்தை அந்த இறந்தவர்களின் தோட்டத்தில் ஏதாவது ஒரு மரத்தின் முன் (பெரும்பாலும் பூவரசு அல்லது வேப்பம் மரம்) அந்த ஆவி பிடித்தவர் அந்தக் கலையத்தை இறக்கி வைப்பர். மரம் முன்னரே இல்லை என்றால் அந்த கலையம் இறக்கும் இடத்தில் ஒரு பூவரசு அல்லது வேம்பு மரக்கொம்பை நடுவார்கள். அந்தக் கலையத்திலுள்ள மலர்களை அந்த மரத்தில் போடுவார்கள்.

அந்தக் கலையம் இறக்கிய பின் அங்கு ஒரு சேவலைப் பலி இடுவார்கள். அத்தோடு அந்தக் கலையம் தூக்கியதிலிருந்து அந்தக் கலையம் கொண்டு வந்து இறக்கி வைக்கும் இடம் வரையில் எலுமிச்சம் பழத்தை அறுத்து நான்கு திசையிலும் எறிந்து கொண்டே வருவார்கள். கலையம் தூக்கி வரும்போது மேளதாளம், வானம், குழகை எல்லாம் போட்டு ஆரவாரத்தோடு வருவார்கள். பிறகு, அந்தக் கலையத்தை அந்த மரத்தின் கிழக்குத் திசையில் ஒரு பழத்தைக் கல்லை வைத்து அதன் மீது அந்தக் கலையத்தைத் தூக்கி வைப்பார்கள். பெரும்பாலும் புதிய மரக்கிளையை வைத்து மரத்தை உண்டு பண்ணுகிறார்கள். அந்தக் கலையத்தில் நீர் வற்ற வற்ற நீர் ஊற்றி வருகிறார்கள். செவ்வாய், வெள்ளி, மற்றும் ஏதாவது மங்களகரமான நாட்களில் அந்த மரத்தடியில் படைப்பு வைத்துப் படைக்கிறார்கள்.

படைப்புப் பொருளாக அந்த இறந்தவர் என்ன என்ன விருப்பப்பட்டு சாப்பிடுவாரோ அவை எல்லாம் வைக்கப்படுகிறது. பெரும்பாலும் மது, பீடி, சிகரெட் மற்றும் தின்பண்டங்கள். தம்

வம்சாவளியில் வரும் குழந்தைகளின் ஒரு முடி காணிக்கை அதற்குச் செலுத்தப்படுகிறது. இறந்தவர் நாளில் அந்த இடத்தில் சமையல் செய்து அன்னதானம் வழங்குகிறார்கள். அந்த மரத்தடியில் யாரும் தீட்டு உள்ளவர்கள் செல்வதில்லை. அதை ஒரு இறைவனாகவே வழிபடுகிறார்கள். அந்த மரத்தை வெட்டுவதும் இல்லை. அந்த மரம் செழித்து வளர்ந்தால் இறைவன் நல்ல பயபக்தியோடு இருப்பதாக எண்ணுகிறார்கள். மரம் செழித்து வளரவில்லை என்றால் ஏதோ குறை ஏற்பட்டுள்ளது என்று எண்ணுகிறார்கள். அதன்படி மீண்டும் உடுக்கை குறி கேட்டுக் குறையை நிவர்த்தி செய்கிறார்கள். அந்த மரத்தில் உள்ள ஆவி வேறு எங்கும் அலைவதில்லை. அந்த மரத்திலேயே இருப்பதாக நினைக்கிறார்கள். அது தம் தோட்டத்தையும் காவல் செய்வதாக எண்ணுகிறார்கள். அந்தத் தோட்டத்தில் திருடுவதற்கும் பயப்படுகிறார்கள். பெரும்பாலும் அந்த மரம் இறந்தவரின் உடலாகவே நினைத்துச் செயல்பட்டு வருகிறார்கள். இதை நடுகல் வழிபாட்டின் எச்சம் என்று கூடக் கருதலாம்.

# திரௌபதி அம்மன் வழிபாடும் வேண்டுதல்களும்

**முனைவர் வெ. செல்வசுப்பிரமணியன்**, எம்.ஏ.,எம்.ஃபில்.,பி.எட்.,பிஎச்.டி.,
*எஸ்.என்.ஆர். சன்ஸ் கல்லூரி, கோவை - 6.*

திரௌபதியம்மன் வழிபாடு புதுச்சேரி உள்ளிட்ட தமிழகத்தில் பரவலாகக் காணப்படுகிறது. தமிழ் இலக்கியங்களில் திரௌபதியம்மன் வழிபாடு இடம்பெறவில்லை. திரௌபதி திராவிடரின் பூர்வீகத் தெய்வமன்று. ஆரியரின் சிந்தனையில் உருவாக்கப்பட்டுத் திராவிடரின் தெய்வத்தோடு சேர்க்கப்பட்ட தெய்வமாகத் திரௌபதியம்மன் இருக்க வேண்டும் என்பதற்குக் கோயில் அமைப்பு முறைகளும், வழிபாட்டுச் சடங்கு முறைகளும் சான்றாக அமைகின்றன. புதுச்சேரி வட்டாரத் திரௌபதியம்மன் கோயில் நடைபெறும் வேண்டுதல்களையும் அவை தொடர்பான நம்பிக்கைகளையும் ஆராயலாம்.

## கொடிகட்டுதலும் பொங்கலிடுதலும்

அறங்காவலர் குழுவும் உற்சவதாரர்களும் மற்றும் ஊர்ப் பெரியோர்களுகம் திரௌபதியம்மன் கோயிலில் ஒன்று கூடி வேனிற்காலத்தில் அமாவாசைக்குப் பிறகு நல்ல நாளில் நல்ல நேரத்தில் விழாவைத் தொடங்கத் தீர்மானிக்கின்றனர். அதன்படி ***கொடிகட்டுதல்*** நிகழ்ச்சி நடைபெறுகிறது. திரௌபதியம்மன் கோயில்களில் வளர்பிறை நாளில் கொடியேற்றித் திருவிழாவைத் தொடங்குகின்றனர். வெள்ளிக் கிழமை நாளில் தீ மிதித்தலை மேற்கொள்கின்றனர். விழாத் தொடங்குவதற்கு முன்னதாக ஊரின் புறத்தே காவல் காத்திருக்கும் ஆண் தெய்வமான அய்யனார் கோயிலுக்கு ஊரார், அணி அணியாகச் சென்று பொங்கலிட்டு வழிபடுவர். இதனை ***ஊரணிப் பொங்கல்*** என்று அழைப்பர். இவ்வாறு பொங்கலிடுவதன் மூலம் அத்தெய்வம் பசி, பிணி நீங்கச் செய்து ஊர் மக்களைக் காக்கும் என்று நம்புகின்றனர். மேலும், மழை பெய்யவில்லையானால், அம்மை நோய் வருமானால், வேளாண்மை தடைப்படுமானால், பொங்கலிடும் நிகழ்ச்சி நடைபெறும்.

## பொங்கல் வளமை வழிபாடு

திரௌபதியம்மன் கோயிலில் இடம் பெறும் பொங்கலில் புதுப்பாத்திரத்தில் ஊற்றிய நீர் கொதித்துப் பொங்கி ஒரு முறையாவது விளிம்பைத் தொட்டு வழிந்த பிறகே பச்சரிசியை இடுவர். வேளாண்மைச் சமுதாயத்தில் செய்யப்படும் பெரும்பாலான சடங்குகள் வளம் வேண்டுதலாக அமைந்துள்ளன. இயற்கை தமக்கு உதவவேண்டுமாயின் தாமும் இயற்கையைப் போல நடக்க வேண்டுமென்றும், இதனால் தாம் செய்வதைப் பார்த்து இயற்கையும் அதே போலச் செய்யும் என்று நம்பினர். இது நம்பிக்கையின் காரணமாகச் செய்யப்படும் வளமைச் சடங்குகள் எனப்படும். இதன் வளர்ச்சியே வளவழிபாடாகும். இவ்வள வழிபாட்டின் அடிப்படையில் திரௌபதியம்மனுக்குக் பொங்கலிடும் நிகழ்ச்சி நடைபெறுவது ஒப்பிடத்தக்கது. இந்த வருடம் எதிர்பார்த்த அளவு நெல் விளைந்ததால் பொங்கலிட்டுப் பலருக்குச் சோறு போடுகின்றேன் என வேண்டுகின்றனர். இது வள வழிபாட்டுத் திரௌபதியம்மனின் அருட்சக்தியும், மக்களின் வேண்டுதல்களும் மேலோங்கியிருந்ததை அறியலாம்.

***மாவிளக்கு ஏற்றல் :*** ஊறவைத்த பச்சரிசியை இடித்துத் தூளாக்கி எடுத்து அதில் வெல்லம் அல்லது சர்க்கரை சேர்த்து சிறிதளவு தண்ணீர் விட்டுப் பிசைந்து பந்துபோல் உருட்டி, நடுவில் பள்ளம் அமைத்து அதில்நெய் அல்லது நல்லெண்ணெய் ஊற்றி திரியைக் கொண்டு விளக்கேற்றுவர். இதனை மாவிளக்கு என்றழைப்பர். மாவிளக்கு ஏற்றுதல் என்பது பொங்கல் இடும்போது அனைத்து திரௌபதியம்மன் கோயில்களின் வழிபாட்டிலும் நடைபெறுகின்றது. திரௌபதியம்மனை வழிபட்ட பிறகு எரிகின்ற மாவிளக்கோடு பொங்கல் கூடையில் வைத்து வீட்டிற்குக் கொண்டு சென்று கற்பூரத் தீபம் கொடுத்த பிறகே மாவிளக்கைக் குளிர வைக்கின்றனர். இதன் மூலம் அருட்சக்தியானது தமக்குக் கிடைக்க வேண்டும் மா விளக்கு எரிவது போல வாழ்க்கையும் ஒளிமயமாக இருக்கும் என்ற நம்பிக்கை வெளிப்படுகின்றது.

***பகாசுரன் விருந்து :*** திரௌபதியம்மன் வழிபாட்டுச் சடங்கில் பகாசூரனுக்குச் சோறிடும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. இதில் பகாசூரனை வதை செய்து கொல்வதான சடங்கு முறை முடிவடைந்த பின்னர் பகாசூரனுக்காகக் கொண்டு வந்த சோற்றை இளஞ்சிறார்கள் முதற்கொண்டு ஆடவரும், பெண்டிரும் வாங்கி உண்கின்றனர். இவ்வாறு உண்டால் நோய் நீங்கப் பெறும் திருமணமான பெண்களுக்கு விரைவில் மகப்பேறு கிட்டும் என்பது ஆழமான நம்பிக்கை.

*அரக்குமாளிகைச் சடங்கு :* திரௌபதியம்மன் கோயில் விழாவின் சடங்காக அரக்கு மாளிகை விழா நடைபெறுகிறது. இந்நிகழ்ச்சியின் இறுதியில் எரியூட்டப்பட்ட அரக்கு மாளிகையின் சாம்பலை மக்கள் தொட்டு வணங்கி எடுத்துச் சென்று, வீட்டிலும், நிலத்திலும் இடுகின்றனர். இதனால் குடும்ப வாழ்வு வளம்பெருகும் என்றும், நல்ல விளைச்சல் ஏற்படும் என்றும் நம்புகின்றனர்.

*தீ மிதித்தல் :* திரௌபதியம்மன் கோயிலில் தீ மிதித்தலில் பலதரப்பட்ட சமூக இனத்தவர் பங்கு பெறுகின்றனர். ஆண்களில் பெரும்பாலோர் கொடி ஏற்றியது முதற்கொண்டு காப்புக் கட்டிக் கொண்டு விரதமிருக்கின்றனர். அனைவரும் வெள்ளிக் கிழமையன்று மஞ்சள் ஆடை அணிந்து கொண்டு தீ மிதிக்கின்றனர். திரௌபதியம்மனிடம் அருட்சக்தி பெறவும், தீயவை தவிர்க்கவும், துன்பங்கள் நீங்கி நல்வாழ்வு பெறவும், நினைத்த காரியங்கள் வெற்றியடைய வேண்டும் என்றும் வேண்டுதலை மையமிட்டு தீ மிதிக்கின்றனர்.

*சாட்டையடி பெறுதல் :* தீ மதிப்போர் *மறலை மக்கள்* என்று அனைவராலும் அழைக்கப் பெறுவர். தீ மிதித்துப் பாலாற்றைக் கடந்து செல்லும் அனைவருக்கும் சாட்டை அடி வலது கரத்தில் கொடுக்கப்படுகிறது. தீ மிதித்த பின்பு ஏற்படும் ஓர் மருள் நிலையிலிருந்து உலக இயல்பு நிலைக்கு மறலை மக்கள் மீண்டுவர இவ்வடி தரப்படுகிறது என்பர். திரௌபதியம்மன் கோயில்களிலும் தீ மிதித்த பின்னர் இந்நிகழ்ச்சி நடைபெறுகிறது.

*அங்கப் பிரதட்சனம் :* பக்தர்கள் தங்களது வேண்டுதல்கள் நிறைவேறியவுடன் திரௌபதியம்மன் கோயில் கிணற்று நீரிலோ அல்லது குளத்தின் நீரிலோ நீராடி மஞ்சள் ஆடை அணிந்து ஈரமேனியுடன் கையில் வேப்பிலையுடன் திரௌதியம்மனை நினைத்துக் கொண்டு தலையைக் கோயில் பக்கமாக வைத்துக் கொண்டு காலை நீட்டிப் படுத்தவாறு வலப்புறமாக அங்கப் பிரதட்சனம் வருவர். இவ்வாறு வலம் வந்த பின்னர் மூலவர் சன்னதிற்குச் சென்று வேண்டுதலை நிறைவு செய்வர். கோயிலிலுள்ள பூசாரி திரௌபதியம்மனுக்குரிய வீர காந்தப் பொருளை எடுத்து வந்து நெற்றியில் தடவ மயக்கம் தெளிந்து தம் இல்லம் திரும்புவர். இதனை உடல் வருத்தும் நேர்த்திக்கடன் என்பர். உடலில் ஏற்பட்டிருக்கும் நோய் குணமடைந்த பின்பு இவ்வேண்டுதலின் படி அங்கப் பிரதட்சனம் செய்து நேர்த்திக் கடனை நிறைவேற்றுவர்.

*தெய்வமுற்று ஆடுவோரின் பலன் கேட்டல் :* விழாக் காலங்களில் கூழ்வார்த்தல் நிகழ்ச்சியன்று பம்பையும், உடுக்கையும், கொட்டு மேளமும் முழங்கப்படுகின்றன. அத்தருணத்தில் அருள் வந்து அம்மையார்

ஒருவர் குதித்தும், துள்ளியும் ஆடுவார். ஊர் மக்கள் அத்தெய்வமே தம்முடன் ஆவேசமாக வந்து ஆடுவதாகக் கருதி அதற்குரிய மரியாதையைச் செய்வர். அப்போது கோயிற்பூசாரி ஊர் மக்களைப் பார்த்து வருவாயா தாயே ! செய்யும் வழிபாட்டு முறைகள் திருப்திதானே என்று வினவுவார். திருப்தி என்றால் கையிலே கற்பூரம் ஏற்றிக் கொடுப்பர். அதை வாங்கி வாயில் போட்டு விழுங்கி மயக்கம் கொள்வர். குறிப்பிட்ட நேரம் கடந்ததும் சுயநினைவு பெறுவர். குறை உண்டு என்று கூறினாலும் அடுத்த முறை சிறப்பாகச் செய்கிறோம் தாயே என்று கூறி வழிபாட்டுச் சடங்கை நிறைவு செய்வர்.

## மக்களின் வேண்டுதல்கள்

திருக்கோயிலை வலம் வருவோர்க்கு அல்லவை நீங்கி நல்லவை பயக்கும் என்று மக்கள் நம்பினர். மேலும் வலம் வருவோரைக் கண்டாலும் நற்பேறு கிட்டும் என்று மொழிவர். திருமணத்தின் போது புனிதத்தீயை வலம் வருதல் நிகழ்ச்சியும், வலக்கையில் காப்புக் கட்டிக் கொள்ளும் நிகழ்ச்சியும் சிறப்பிடம் பெறுகின்றன. மேலும் வலது காலை எடுத்து வைக்கச் சொல்லும் பழக்கமும், வலது கையால் பொருளைக் கொடுத்தலும், வாங்குதலும் பெருவழக்காக உள்ளன. இவையாவும் நம்பிக்கையின் காரணமாக மக்களிடையே வாழையடி வாழையாகத் தொடர்ந்து வருதலைக் காண முடிகிறது. இதன்படி வலம்வருதலின் சிறப்பை உணர முடிகிறது.

***குழந்தைப்பேறு வேண்டல் :*** கன்னிப் பெண்கள் விரதமிருந்து நல்ல கணவன் அமைய வேண்டும் என்று வேண்டிக் கொள்வதைப் போன்று திருமணமான பெண்களும் நல்ல ஆண் குழந்தை பெறவேண்டுமென்று நேர்ந்து கொள்கின்றனர். வேண்டுதல் நிறைவேறிய பின்னர் தாயும் சேயும் மற்ற உறவினர்களுடன் வந்து பொங்கலிட்டு வேண்டுதலை நிறைவேற்றுவர்.

***கோயிற்பிரசாதம் உயர்வு பெறுதல் :*** அன்னதானத்தைத் திருக்கோயிலில் இறைவன் அல்லது இறைவியின் முன் அளிக்கும் போது சிதறாமல் மக்கள் வாங்கி உண்கின்றனர். இந்நிலை பெரும்பாலான திரௌபதியம்மன் கோயில்களில் சிறப்பாக நடைபெறுகிறது.

***தானியப் பிச்சை எடுத்தல் :*** கிராமத்தில் வசிக்கும் பெண் கண்பார்வைக் குறையால் திரௌபதியம்மன் சக்தியை வேண்டி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு கண் அறுவைச் சிகிச்சை செய்து குணமானாள். பின்னர் வீடு வீடாகச் சென்று தானியச் பிச்சையேற்றுப் பொங்கலிட்டு வேண்டுதலை நிவர்த்தி செய்தாள். இது நம்பிக்கை மரபு.

*முளைப்பாரி எடுத்தல் :* விவசாயிகள் தம் மனையாளிடம் தானியங்களைப் பெற்றுத் திரௌபதியம்மன் கோயிலில் வைத்து வழிபட்ட பின்னரே நிலத்தில் விதைக்க ஆரம்பிக்கின்றனர். அறுவடைக்குப் பின்னர் விழாக் காலங்களில் கொடி மரத்தின் அடியில் அல்லது கோயில் கிணற்று அருகில் நவதானியங்களை இட்டு நீரைப் பாய்ச்சி முளைக்க வைக்கின்றனர். இத் தானியங்களின் வளர்ச்சியைப் போன்றே வேளாண்மைப் பயிர்களும் செழித்து வளரும் என்பது நம்பிக்கை.

*பூக்கட்டிப் போட்டுப் பார்த்தல் :* பொது வழிபாட்டின் போது பொங்கல் வைத்துத் திரௌபதியம்மனின் நல்லருள் கிடைக்க மூன்று வண்ணமுடைய சிவப்பு, மஞ்சள், வெள்ளைப் பூக்களைத் தனித்தனிக் காகிதத்தில் வைத்து வழிபட்ட பின்பு, கோயிற் பூசாரி ஒரு சிறுவனைவிட்டு ஏதேனும் ஒன்றை எடுக்கச் சொல்லுகிறார். குழந்தையும் தெய்வமும் ஒன்றே என்ற நிலையை எண்ண முடிகிறது. பலன் கேட்பவரை ஏதாவது ஒரு வண்ணத்தை நினைத்துக் கொள்ளச் சொல்லுகிறார் பூசாரி. நினைத்த பூவினை அக்குழந்தை எடுத்தால் நினைத்த காரியம் வெற்றியடையும் என நம்புகின்றனர்.

*உண்டியலில் காணிக்கை செலுத்துதல் :* கிராமங்களில் உள்ள கால்நடைகள் நோயால் தாக்கப்பட்டால் அக்கால்நடையின் சொந்தக்காரர் திரௌபதியம்மனிடம் பூரண குணமடைய வேண்டுவர். குண மடைந்தபின்னர் அக்கால்நடைகளைப் போன்று வெள்ளித் தகட்டினால் செய்து உண்டியலில் இடுவர். மக்கள் தங்களுடைய உடல் உறுப்புகளில் ஏதாவது தீங்கு ஏற்படின் திரௌபதியம்மன் கோயிலை வலம் வந்து நேர்ந்து கொள்வர். பூரண குணமடைந்த பின்னர் அந்த உறுப்புப் போலவே வெள்ளியினால் செய்து பொங்கலிட்டுத் திரௌபதியம்மனுக்குக் காணிக்கையாக்குகின்றனர்.

## முடிவுரை

மக்களின் நல்வாழ்வு அமைவதற்கு திரௌபதியம்மனின் இசைவு தேவை. அவ்வாறு தந்ததால் பல்லாண்டு பிரச்சனையின்றி வளமுடன் வாழலாம் என்ற நம்பிக்கை உணர்வு மேலோங்கி இருப்பதை இவ்வழிபாடுகளின் வழி அறியமுடிகின்றது.

# கொல்லிமலைமக்களும் மரபுகளும்

**முனைவர் ச. சோமசுந்தரம்**, எம்.ஏ.,எம்.ஃபில்.,பிஎச்.டி.,
*பிசப் ஹீபர் கல்லூரி, திருச்சி.*

கடையெழு வள்ளல்களில் ஒருவரான வல்வில் ஓரி ஆண்ட மலை கொல்லிமலை. ***கொல்லிக் குடவரை, உயர் வரைக் கொல்லி,*** பயங்கெழு பலவின் கொல்லிக் குடவரை என்று குறுந்தொகை, நற்றினை ஆகிய சங்க இலக்கியங்களால் பராட்டப்படுவது கொல்லிமலை. ***கொல்லி யாண்ட குடவர் கோவே*** என்று சிலப்பதிகாரம் சேரர்கள் கொல்லிமலையை ஆண்டதாகக் கூறுகிறது. சங்க இலக்கியங்கள் தொட்டு இக்கால இலக்கியங்கள் வரையும் கொல்லிமலை குறித்த பல்வேறு தகவல்கள் ஏட்டிலக்கியங்களின் புலப்பாட்டில் காணக்கிடக்கின்றன. கிழக்குத் தொடர்ச்சி மலைகளில் ஒரு பகுதியாக விளங்கும் கொல்லிமலை குறிப்பிடத்தக்கத் தனித்தன்மைகளோடும், சிறப்புக்களோடும் இயங்குகிறது. சேலம் திருச்சி மாவட்டப் பகுதிகளை உள்ளடக்கிய 283 சதுர கிலோ மீட்டர் பரப்பளவைக் கொண்டதாகக் கொல்லிமலை விளக்குகிறது.

## நாட்டுப்பிரிவுகள்

கொல்லிமலை பதினான்கு நாடுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. நாமக்கல் வட்டத்தில் ஏழு நாடுகளும் இராசிபுரம் வட்டத்தில் ஏழு நாடுகளுமாகப் பரப்பளவு விரிந்துள்ளது. ***நாமக்கல் வட்டத்தில்*** : 1. தேவனூர் நாடு, 2. சேலூர் நாடு, 3. தின்னனூர் நாடு, 4. வளப்பூர் நாடு, 5. வாழவந்தி நாடு, 6. அரியூர் நாடு, 7. குண்டூர் நாடு ஆகியவையும் ***இராசிபுரம்*** வட்டத்தில் 1. குண்டுணை நாடு, 2. ஆலத்விடர் நாடு, 3. திருப்புலி நாடு, 4. எய்புலி நாடு, 5. சித்தூர் நாடு 6. பைல் நாடு 7. பெரக்கரை நாடு, ஆகியவையும் அமைந்து இந்தப் பதினான்கு நாடுகளில் 248 கிராமங்களும், ஏறத்தாழ 30,000 மக்கள் தொகையும் அடங்கியுள்ளது.

## மலைமக்களின் பூர்வீகம்

கொல்லிமலை மக்களின் பூர்வீகம் குறித்துப் பல்வேறு செவிவழிச் செய்திகள் நிலவுகின்றன. சேரர்கள் ஆண்டதாகவும், வல்லில் ஓரி ஆண்டதாகவும் போற்றப்படும் கொல்லி மலையில் வாழ்வோர்

தம்மை *மலையாளிகள்* என்றும் *மலையாளக் கவுண்டர்கள்* என்றும் அடையாளப்படுத்திக் கொள்கின்றனர். கொல்லிமலையில் குடியேறிய மக்களாகவே இவர்கள் பற்றிய செய்திகள் அமைந்துள்ளன.

1. பெரியண்ணன், நடுவண்ணன், சின்னண்ணன் என்ற வேடர்குலச் சகோதரர்கள் மூவர், முறையே கைக்கோளர் வேடர், பிள்ளை சாதிப் பெண்களை மணந்து, கல்ராயன்மலை, பச்சைமலை, கொல்லி மலையில் வாழத்தலைப்பட்டனர். 2. காஞ்சிபுரத்திலிருந்து வந்த வேளாளர்கள் வேட்டுவப் பெண்கள் மணந்து கொல்லிமலையில் வசிக்கத் தொடங்கினர். 3. கொல்லிமலையில் வசித்த வேடர்கள் காஞ்சி வேளாளர் பெண்களை மணந்து கொல்லிமலையில் வாழத்தொடங்கினர். 4. கொல்லிமலையில் சுற்றிவந்த புலியை அடக்குவதற்காக வந்த மூன்று சகோதர்கள் புலியை அடக்கமுடியாமல், புலியால் விரட்டப்பட்டுத் தப்பித்து ஓடிப் பெரியமலை, (கல்ராயன்மலை) பச்சைமலை, கொல்லிமலையில் வாழ்வைத் தொடங்கினர். 5. காஞ்சியிலிருந்து வந்த வேளாளர்கள் மூவர் முறையே கைக்கோளர், செக்காரர், தேவேந்திர குலப்பெண்களை மணந்து வாழத் தொடங்கினர். மேற்சொன்ன கருத்துக்களிலிருந்த காஞ்சிபுரத்தில் இருந்து வந்த வேளாளர்கள் மற்றும் வேடர் இனத்தார் சேர்ந்த கலப்பே கொல்லிமலை மக்களாகக் கருதவாய்ப்புள்ளது.

## நிர்வாக முறை

பதினான்கு நாடுகளாகப் பிரிக்கப்பட்டுள்ள கொல்லிமலையில் காலங்காலமாகத் தனிப்பட்ட நிர்வாக அமைப்பு நிலவிவருகிறது. அரசின் ஊராட்சி மன்றங்களின் நிர்வாகம் ஏற்படுத்தப்பட்டிருந்தாலும், மலைமக்களின் நிர்வாக அமைப்புத் தொடர்ந்து வருகிறது. பட்டக்காரர், தர்மகர்த்தா, ஊர்க்கவுண்டன், கரைகாரன், பூசாரி, ஐயம் பூசாரி, கட்டுக்கார பூசாரி, தண்டல் ஆகியோரைக் கொண்ட ஐந்தடுக்கு நிர்வாக முறை மக்களை நிர்வகித்து வருகிறது. இந்த நிர்வாக அமைப்பினரே ஊர் மக்களின் அன்றாட வாழ்வியல் முறையினையும், குடும்பச் சடங்குகளையும், கோயில் மற்றும் ஊர்க் காரியங்களையும் நிர்ணயித்து நிகழ்த்துபவர்களாவர். இந்த அமைப்புக்குக் கட்டுப்பட்டே மலைமக்கள் வாழ்கின்றனர்.

1. பட்டக்காரர்
2. தர்மகர்த்தா
3. ஊர்க்கவுண்டன் - பூசாரி
4. ஊர்க் கவுண்டன் - கவுண்டன்

5. பூசாரி - கட்டுக்காரபூசாரி, ஐயம்பூசாரி,
6. கவுண்டன் - தண்டல்

ஒவ்வொரு நாட்டிற்கும் ஒரு பட்டக்காரர் இருப்பார். பட்டக்காரருக்கு அடுத்த நிலையில் தர்மகர்த்தா விளங்குகிறார். ஒவ்வொரு நாட்டையும் மூன்று பகுதிகளாகப் பிரித்து மூன்று ஊர்க்கவுண்டர்கள் நியமிக்கப்படுகின்றனர். ஊர்க்கவுண்டருக்கு அடுத்த நிலையில் ஒவ்வொரு ஊருக்கும் கவுண்டன் அல்லது கரைகாரர்கள் விளங்குகின்றனர். ஊர்க்கவுண்டருக்கு நிகர் நிலையில் ஊர்ப்பூசாரி கருதப்படுகிறார். ஊர்ப்பூசாரிக்கு அடுத்த நிலையில் காட்டுக் காரப்பூசாரி, ஐயம் பூசாரி விளங்குகின்றனர். கடைசி நிலையில் விளங்குபவர் ஊர்த்தண்டல் எனப்படுகின்றார்.

## பதவியும் பணிகளும்

பெரும்பான்மையும் வாரிசு முறையிலேயே பதவிகள் வழங்கப்படுகின்றன. நான்கைந்து சகோதரர்கள் இருந்தால் மூவேந்தர் பெறுப்பேற்க இயலாத நிலையில் அடுத்தவர்கள் பொறுப்பேற்கின்றனர். பொறுப்பெடுக்கும் நாளில் உறுதி மொழி எடுத்து, மக்கள் வாழ்த்துரைக்க, பன்றிவிருந்து போடுவது மரபாக உள்ளது.

## பட்டக்காரர்

ஒவ்வொரு நாட்டிற்கும் ஒரு பட்டக்காரர் உண்டு. அனைத்து பட்டக்காரர்களுக்கும் தலைமையானவராக வளப்பூர் பட்டக்காரர் கருதப்படுகிறார். வளப்பூர் பட்டக்காரருக்குப் பட்டம் சூட்டுவதற்கு பெரியமலை எனப்படும் கல்ராயன் மலையின் பட்டக்காரர் அழைக்கப்படுகிறார். பட்டம் கட்டும் அன்று ஊர்மக்களுக்கு பருப்புச்சோறு, ரசம் விருந்தாகப் படைக்கப்படும். பட்டக்காரருக்கு அரசருக்கு உள்ள மரியாதைகள் வழங்கப்படும். வம்பு, வழக்கு பஞ்சாயத்துக்களை முன்னின்று நடத்தித் தீர்ப்பு வழங்குவது பட்டக்காரரின் பணியாகும். ஊரில் நடைபெறும் அனைத்துக் காரியங்களையும் முறைப்படுத்தும் பொறுப்பு பட்டக்காரருக்குண்டு. ஊர்க்காரர்கள் பட்டக்காரருக்கு உரிய மரியாதையைச் செய்ய வேண்டும். திருவிழாக்களில் பட்டக்காரருக்கு முதல்மரியாதை வழங்கப்படும்.

## தர்மகர்த்தா

நாட்டிற்கொரு தர்மகர்த்தா பதவி உண்டு. கோயில் காரியங்களை, கோயில் தொடர்பான பஞ்சாயத்துக்களை முன்னின்று

நடத்துவது, மாலை மரியாதை தேங்காய் பழம் பெறுவது, திருவிழாக்களை முன்னின்று நடத்துவது இவரது பணி. பட்டக்காரருக்கு அடுத்த தர்மகர்த்தாவுக்குச் சிறப்பு செய்யப்படும்.

## ஊர்க்கவுண்டன்

ஒவ்வொரு நாட்டுப்பகுதியையும் மூன்று பிரிவுகளால் பிரித்து ஊர்க்கவுண்டர்கள் மூவர் தேர்வு செய்யப்படுகின்றனர் பெரும்பான்மையும் வாரிசு முறையிலேயே தேர்வு நடைபெறுகிறது ஊர்க்காரியங்களைக் கவனிக்க வேண்டியது இவர்தம் கடமையாகும் எல்லா ஊர்களிலும் ஊர்ப்புறம் என்றொரு பகுதி உண்டு. ஏதாவது வம்பு வழக்கு ஏற்படுமானால் அங்கு பேசப்படும். *நியாயம் பேசுதல்* என்று குறிப்பிடுகின்றனர். திருமணம், இறப்பு நிகழ்வுகளின்போது ஊர்க்கவுண்டர் முன்னின்று நடத்துதல் வேண்டும். இக்காரியங்களை நிகழ்த்தி வைக்கக் குறிப்பிட்ட தொகையை ஊதியமாகப் பெற்றுக்கொள்வர் திருமணத்தின்போது ஊர்க்கவுண்டருக்கு *பால்படி* எனப்படும் பதினாறேகால் ரூபாய், தேங்காய், பழம் கொடுக்கப்படும். திருமணம் ஆனவர்கள் மணவிலக்குப் பெற நினைத்தால் நியாயம் பேசப்படும். யார் விலக நினைக்கிறாரோ அவர் விலக்கப்படுபவருக்கு *முட்டுவளிச்செலவு* என நிர்ணயிக்கப்படும் தொகையினை வழங்கவேண்டும். விலகி மறுமணம் செய்து கொண்டால் ஊர்க்கவுண்டருக்கு இருபத்தைந்து ரூபாய் கொடுக்க வேண்டும். வேறு எந்த வழக்காக இருந்தாலும் ஊர்க்கவுண்டருக்கு உரியதொகை வழங்கப்படவேண்டும்.

## கவுண்டன் அல்லது கரைகாரன்

ஊர்க்கவுண்டருக்கு அடுத்தநிலையில் கவுண்டன் அல்லது கரைகாரர்கள் விளங்குகின்றனர். ஊர்க்கவுண்டர் சொல்லும் வேலையைக் கரைகாரர் செய்யவேண்டும். திருமணகாரியங்களை நிகழ்த்திவைப்பது கரைகாரரின் கடமையாகும். இறப்புநிகழ்ச்சிகளுக்குச் சென்று இழவு கேட்பது கரைகாரர்களின் கடமை. திருமணத்தில் தாலிதொட்டுக் கொடுப்பதோடு முதல்மொய் கரைகாரர் கொடுக்க வேண்டும். கரைகாரர்களுக்கு மாலை மரியாதை செய்து வேட்டி, பணம் கொடுத்து மக்கள் மரியாதை செய்வர். பொங்கலுக்கு முன்னால் இறப்பு நிகழ்ந்த வீடுகளுக்குச் சென்று இழவு கேட்டுவிட்டுப் பொங்கல் வைக்கச் சொல்லி வரும் வழக்கமும் நிலவுகிறது.

## பூசாரி

ஊர்க்கவுண்டர்களுக்கு நிகராகப் பூசாரிகள் கருப்படுகின்றனர். பூசாரி தெய்வ அருள் பெற்றவர் என்று மக்கள் அச்சம் கலந்த மரியாதையோடு பழகுகின்றனர். பூசாரிதான் மக்களுக்கு வைத்தியராகவும் விளங்குகிறார். இறைவனுக்குப் பூசை செய்தல், அலங்காரம் செய்தல், கோயில் காரியங்களைச் செய்தல், மந்திரம் செய்தல், பேய்பிசாசுகளை விரட்டுதல் என்று பல்வேறு காரியங்கள் பூசாரியால் நிகழ்த்தப்படுகின்றன. பூசாரிகள் இரண்டு விதமாகக் கருதப்படுகின்றனர். ஐயம் பூசாரி என்பவர் வளமைச் சடங்குகளை நிகழ்த்துபவராகவும், கட்டுக்காரப் பூசாரி என்பவர் பில்லி, சூனியம், மந்திர மாய வேலைகள் செய்பவராகவும் விளங்குகின்றனர்.

ஐயம் பூசாரி, ***குருவீடு*** எனப்படுகிறார். நல்ல காரியங்களைத் தொடங்கிவைத்தல் இவரது வேலையாகும். ***நல்லேரு பூட்டுதல், விதை முகூர்த்தம் செய்தல்*** ஆகியசடங்குகளை இவர் செய்கிறார். இவரது நிலத்தில் விதை தெளித்த பின்னரே மற்றவர்கள் விதை தெளிப்பர். நல்லகாரியங்கள் நிகழ்த்தும்போது அனைவருக்கும் விருந்து வைப்பதுண்டு.

கட்டுக்காரபூசாரி என்பவர் பில்லி, சூனியம், வசியம் செய்தல், மைபோடுதல், செய்வினை வைத்தல், கைகால் விளங்காமல் போகச் செய்தல் போன்ற காரியங்களைச் செய்துவைப்பவராவார்.

## தண்டல்

வளமைச்சடங்குகளைச் செய்யும் ஐயம் பூசாரியின் வேலையாளாகவும், கவுண்டர் கரைகாரர் கூறும் பணிகளைச் செய்பவராகவும் தண்டல் எனப்படும் கங்காணி விளங்குகிறார். ஊர்மக்களுக்கு நிர்வாகத்தின் அனைத்துச் செய்திகளையும் தண்டோராபோட்டுத் தெரிவித்தல், தண்டல் வசூல்செய்தல், திருமணத்துக்கு முதல் இலையறுத்துக் கொடுத்தல், இறந்த செய்தியைக் கூறிவருதல் போன்ற காரியங்களைத் தண்டல் செய்வார். இவருக்கு ஊர்மக்கள் சார்பாக நெல்லும் வேட்டி துணிமணிகளும் கொடுக்கப்படும்.

மேற்சுட்டப்பட்ட நிர்வாக அமைப்பின் கட்டுப்பாட்டில் இருந்து விலகி நடப்போர் குற்றம் செய்தோராகக் கருதப்படுவர். அப்படி நிகழும்போது குற்றம் செய்தோரிடம் தண்டம் வசூலிக்கப்படும். தெய்வத்தின் முன்னிலையில் மன்னிப்பு கோர வேண்டும். ஊர்மக்களுக்குப் பன்றிவிருந்து வைக்க வேண்டும்.

# பருவாச்சிப்பட்டத்தாரின் கன்னிமார்சாமி வழிபாடு

**முனைவர் சு. ஞானப்பூங்கோதை**, எம்.ஏ.,எம்.ஃபில்.,பிஎச்.டி.,
*த.சா.அ.தமிழ்க்கல்லூரி. பேரூர், கோவை-641 010.*

ஆதிகால மனிதர்கள் இயற்கைப்பொருள்களையும் அவற்றின் ஆற்றல்களையும் தெய்வமாகக் கருதி வழிபட்டனர். மனித மனதில் தோன்றிய அச்சவுணர்வு வழிபாட்டுநெறிக்கு வித்திட்டது எனலாம். அவ்வழிபாடு பல வகையின. அவற்றுள் ஒன்று தாய்த்தெய்வ வழிபாடாகும். இவ்வழிபாடு மிகவும் தொன்மையானது. சிந்துவெளி நாகரிகம் முதல் உலகெங்கும் தாய்த்தெய்வ வழிபாடு சிறந்து விளங்கி வருகிறது. தாய்த்தெய்வ வழிபாடு பிற்காலத்தில் குலதெய்வ வழிபாடாக வளர்ச்சியுற்றது. பெரும்பாலும் குலதெய்வம் பெண்தெய்வமாக இருக்கும். இவ்வழிபாடு வளமைச் சடங்குகளில் ஒன்றாக எண்ணப்பட்டது. வேளாண்மைத் தொழிலுடன் தொடர்படையதாக விளங்கியது.

ஒருகுடும்பம் பல குடும்பங்களாகப் பிரிந்து பின்னர் அக்குடும்பங்கள் எல்லாம் ஒரே உறவுமுறையாகும்பொழுது குலம் ஆகிறது. பல பங்காளிகள் உறவுமுறையினைக் குலம் என்பர். குலம் என்பது மரபுவழியாக ஒரே காரணத்திற்காகவும் ஒரே சூழ்நிலைக்காகவும் வழிபடப்படுவது என்கிறார் அறிஞர் ஒருவர். ஒரு குலத்தினரது அல்லது கூட்டத்தினரது தெய்வமே குலதெய்வமாகும். ஒவ்வொரு கூட்டத்திற்கும் ஒரு தெய்வம் குலதெய்வமாக உள்ளது. குலதெய்வ வழிபாடு என்பது ஒவ்வொரு இனத்தாருக்கும் முதன்மையானது. மேலும் ஒவ்வொரு இனமக்களும் ஒன்று சேர ஒரு வாய்ப்பாகவும் அமைகிறது. பெரும்பாலான குலதெய்வங்களின் தோற்றக் கதைகள் இந்நிலவுகில் உயிருடன் வாழ்ந்து இறந்துபட்டவர்களின் வரலாறாகவே காணக்கிடக்கின்றன. அவ்வகையில் சத்தியமங்கலம் வட்டம் புன்செய்ப்புளியம்பட்டி, கோட்டைபாளையம் கன்னியர் எழுவர் (சப்த கன்னியர் - கன்னிமார்) கன்னிமார்சாமி வரலாறும் விளங்குகின்றது. கொங்கு வேளாளர், செட்டியார், அந்தணர் முதலான இனங்கள் பலருக்குக் கன்னிமார் குலதெய்வம் ஆகும். அவ்வகையில் கோவம்சத்தார் எனப்படும் பண்டாரத்தார், கார் காத்த வேளாளர் இனத்தில் ஆறைநாடு பருவாச்சிப் பட்டத்தார்க்கும் குலதெய்வமாகத் திகழ்கிறது.

இவ்இனமக்கள் இறைவனுக்கு முப்போதும் திருமேனி தீண்டி வழிபாடு செய்யும் தொண்டினர். நாயக்கர் காலத்தில் பழனித் திருக்கோவிலில் பூசை செய்து வந்த பார்ப்பனர் அல்லாத இவர்களிடத்ததுத் தான் திருநீறு வாங்குவதா? என்று எண்ணி திருப்பாண்டிக் கொடுமுடியிலிருந்து ஐயர்களைக் கொண்டு வந்து இராமப்பய்யன் பூசைக்கு ஏற்பாடு செய்ததை ஒரு செப்பேடு கூறுகிறது. எனவே நாயக்கர் காலத்தில் பார்ப்பனராகிய ஐயர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டதால் பண்டாரத்தாராகிய இவ்இனமக்கள் திருக்கோயிலிருந்து வெளியேற்றப்பட்டனர். அதன் பின்னரே நாட்டுப்புறத் தெய்வங்களுக்கு வழிபாடு செய்யும் நிலையினராயினர். இவ்இனமக்களில் ஒரு வட்டத்தினர் ஆறைநாடு பருவாச்சிப் பட்டத்தார். இக்குலமக்களின் குலதெய்வமான கன்னிமார் சுவாமி வரலாற்றினையும் வழிபாட்டு முறையினையும் எடுத்துக்காட்டுவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## கன்னியர் தெய்வம்

இயற்கையோடு இயைந்து வாழ்ந்தால் இயற்கை நமக்கு உறுதுணை செய்யும். இனப்பெருக்கத்திற்கும் செழிப்பிற்கும் நெருங்கிய தொடர்புடையவள் பெண். மழைவளத்திற்கும் நிலவளத்திற்கும் மக்கள் செழுமை வாழ்க்கைக்கும் பெண் மையப்பொருளாகிறாள். எனவே அவளையொட்டி வளமை வழிபாடுகள் நிகழ்ந்தன.

தொல்காப்பியம் முதலாக, பல இலக்கியங்களில் பெண் தெய்வமாகக் குறிப்பிடப்படுகிறாள். சிலப்பதிகார வேட்டுவவரியில் வேட்டுவர் மன்று பாழ்பட்டு வளம் குறைந்து போனதால் கன்னித்தெய்வ வழிபாடு மேற்கொள்ளும்படி தேவராட்டி கூறும் செய்தியினை அறியலாம்:

*தொல்குடிக் குமரி*
*தமர் தொழ வந்த குமரிக்கோலத் தமரிளங்குமரி*

என்று போற்றிக் கன்னித்தெய்வமாக ஒருசிறுமியை அலங்கரித்து வழிபாடு செய்யப்படுகின்றது.

கன்னிமை ஒரு தவம். அதனை இழப்பது, சேமித்த ஆற்றலை வீணடிப்பது ஆகும். அதன் அளப்பரிய வல்லமையை முறைப்படுத்தினால் மாபெரும் சக்தி உண்டாகும். கன்னிமை என்பது கற்புடைமை மட்டுமன்று கற்புடைமை தூய்மையின் அடையாளம். ஆனால் கன்னிமை அதனினும் உயர்ந்த முழுநிறை வளத்தின் சின்னம். கன்னியாக விளங்கும் ஒரு பெண் தனக்கே உரியதாய் இயற்கை

தந்திருக்கும் படைப்பாற்றலைத் தன் மனவலிமையினால் திரட்டினாள் என்னும்படியாகப் பூரணமாய்த் தேக்கித் தனக்குள் சேமித்து வைத்திருக்கிறாள் என்று அறிஞர் மோசில் கூறும் கருத்தினை வளமைச்சடங்கிற்குக் கவிஞர் சிற்பி சான்றாக எடுத்தாள்கின்றார்.

கன்னிமார், கருப்பராயன் வழிபாடு கொங்குநாட்டிற்கு உரிய ஒன்று. ஆடிப் பதினெட்டின்போதும் பொங்கல்விழாவில் மாட்டுப் பொங்கலின்போதும் ஏழு வெங்கலக் கல்லைச் சேர்த்து வைத்துக் கன்னிமார் என்று வழிபடுவது இன்றும் வழக்கில் உள்ளது. வெங்கக்கல் தூய்மையானது, உள்ளே நெருப்புத்தன்மை உடையது. இதனைக் கன்னிமாருக்கு அமைத்து வழிபடுவது அறிவியல் நோக்கில் ஏற்றமுடையது. வாழ்வு தரும் ஆற்றலாகச் சக்தி, கன்னிமார், மாயா, பாத்திமா என்று பலநிலைகளில் பெண் தெய்வத் தன்மை பெற்றவளாக விளங்குகிறாள்.

## கன்னிமார் சுவாமி வரலாறு

கன்னியர் எழுவர் வரலாறு அண்ணன்மார் சுவாமி கதையில் கூறப்பட்டுள்ளது. நிலவுலகில் ஐந்துதலை நாகம் பிள்ளைவரம் வேண்டித் தவம் செய்தது. அம்மை பெரியகாண்டி என்ற பெயரோடு மகவாக அவதாரம் செய்தார். அம்மைக்குத் துணையாகக் கன்னியர் எழுவரை இறைவன் அனுப்பினார். சிவகணங்களில் ஒருவரான கருப்பண்ணசுவாமியை ஆண்துணையாக அனுப்பினார். இந்தக் கருப்பண்ணசுவாமி இன்று கருப்பராயன் என்ற பெயரில் வழிபாடு செய்யப் பெற்று வருகிறது. கன்னிமார் கோயிலுக்கு அருகில் கட்டாயம் காவல்தெய்வம் கருப்பராயன் சுவாமி இருக்கும்.

## நாட்டார் வழக்காற்றியல் கதை

கொங்கு மண்டலத்தைப் பாண்டிய மன்னர்களின் ஆட்சிக்குப்பின் மைசூர் சீரங்கப்பட்டடின மன்னர் ஆட்சி செய்து வந்தார். டணாய்க்கன்கோட்டை பாளையக்காரரின் நேரடி ஆளுகையில் வந்தது. தற்காலம் கஞ்சப்பள்ளி எனும் சிற்றூரில் கார்காத்த வேளாளர் மரபில் செம்பாராண்டையார் என்பவரைக் கஞ்சப்பள்ளி முதல் கராப்பாடி இறுதியாக உள்ள பல்வேறு அரசு பொறுப்புக் கோவில்களுக்குப் பொறுப்பாளராக நியமித்து அவற்றின் பரிபாலனங்களுக்காக குளங்கள் மானியமாக வழங்கப் பட்டன. பொருட்கள் நிலங்கள் வரவினங்கள் முதலியன அண்டையாரால் நிர்வகிக்கப்பட்டு கோவில்களின் பண்டாரகராகச் செயல்பட்டு வந்தார். கால்நடை வாகனங்களின் துணையோடு எல்லாக் கோவில்களின் பராமரிப்புப் பூசை

போன்றவற்றைக் கண்காணித்து வந்தார். செம்பராண்டையாருக்கு ஆண் வாரிசு இல்லை. ஏழு பெண் மக்கள் மட்டும் இருந்தனர். எழுவரில் ஐந்து பெண்கள் தொடர்ந்து காலமாகினர். இருபெண்களை வைத்துக் கொண்டு மேற்படி வேலை செய்வது கடினமாக இருந்தது. எனவே கோயில்களில் மாலைநேரம் தங்கி ஓய்வு எடுத்துத் தமது பயணத்தைத் தொடர்வார். அப்பொழுது தற்காலம் ஆலத்தூர் என வழங்கிவரும் அழகு பொன்னி வளநாட்டில் ஆறைநாட்டு பருவாச்சிபட்ட பாரையூர் காளியம்மன் ஆதீன ஆண்டையாரது மகன்கள் பெரியாண்டையார், சின்னாண்டையார் இருவருக்கும் தமது பெண்மக்களைத் திருமணம் செய்வித்தார். மருமகன்களிடம் பொறுப்பினைக் கொடுத்துத் தாம் ஓய்விலிருந்தார். மனைவி இறைவனடி அடைந்துவிட்டதால் மகள்கள் ஆலத்தூர் அருகில் உள்ள ஆலாம்பாளையம் என்னும் சிற்றூரில் தமது மனைவி நினைவாக ஒருகோயிலும் ஆலத்தூர் அருகில் உள்ள பட்டிலிங்கம்பாளையம் என்னும் பகுதியில் தமது பெண்மக்கள் நினைவாக ஒரு கன்னிமார் கோயிலும் கட்டினர். ஆயுட்காலம் வரை பேணி வந்தார். தெற்குப்பகுதிக்கு உரிமையுடைய பெரியாண்டையாருக்கு ஆண்வாரிசுகள் மட்டும் இருந்தனர். மாமனாரால் ஏற்படுத்தப்பட்ட கன்னிமார் சுவாமியை வழிபட்டு வந்தார். வடக்குப் பகுதிக்கு உரிமையுடைய சின்னாண்டையாருக்கு எழு பெண்மக்கள் மட்டும் திருமணமாகாத நிலையில் 5 பெண்கள் காலமாகிவிட்டனர். இதனால் சின்னஆண்டையார் 5 பெண்கள் நினைவாகவும் மனைவியின் தமக்கைகளின் நினைவாகவும் ஒரு கோயில் உருவாக்கினார். தனநாய்க்கன் கோட்டை பாளையக்காரரால் ஏற்படுத்திய வெள்ளைபாடி கோட்டை தூர்ந்து மண்மேடாகிவிட்டது. பொன்னார்நதி என்னும் நதியோரத்தில் தற்போதுள்ள கோட்டைபாளையம் கன்னிமார் கோவிலை உருவாக்கிக் குலதெய்வமாக வழிபட்டு வந்தார். பட்டிலிங்கம் பாளையத்தில் ஏற்படுத்தப்பட்ட கன்னிமார் கோயிலும், மற்றும் வழிபாட்டுரிமையும் அவ்வூர் பெரும்பான்மை இனத்தார் கைக்கு மாறிவிட்டது. எனவே பெரியாண்டையார் மக்கள் சிறிய தந்தை சின்ன ஆண்டையாரால் ஏற்படுத்தப்பட்ட கன்னிமார் சுவாமியை வழிபடத் தொடங்கினர். அவ்வழிபாட்டு முறை இன்றும் தொடர்ந்து வருகின்றது.

ஆலத்தூரிலிருந்து ஒருபிரிவினர் மாரியம்மனை மரப்பெட்டியில் வைத்து ஊர்ஊராகச் சென்று வழிபட்டு வருகையில் கோட்டைபாளையம் வந்து தங்குகின்றார். இவர்களுடன் வந்த ஒரு சிறுமி யானைக்கத்தாழை நிறைந்துள்ள பகுதியில் சென்றாள். அச்சிறுமியைத் தேடியபொழுது குழந்தையாகிய நான் கன்னிமார்சுவாமி ஆகிவிட்டேன்.

வருடந்தோறும் என்னை வழிபட வேண்டும் என்று கேட்டுக்கொண்டதால் கன்னிமார் சுவாமியை வழிபட்டு வருகின்றனர் என்று தகவலாளி ஒருவர் கூறியுள்ளார். மேற்காட்டிய சான்றுகளின் வழி மறைந்த பெண்களின் நினைவாகக் குலதெய்வமாக வழிபட்டு வந்துள்ள நிலை அறியலாகின்றது.

## வழிபாட்டுமுறை

இக்குலமக்கள் ஆடிமாதம் புதன்கிழமை நாளில் ஒன்றிணைந்து கன்னிமார்சாமிக்கு வழிபாடு செய்வார்கள். அவ்விழாவில் குயவர் இனத்தாரால் கன்னிமார் எழுவர் உருவம் மண்ணால் செய்யப்பட்டு வர்ணங்கள் பூசி அவ்வினத்தின் மூதாட்டி ஒருவர் உருவாரப் பொம்மையினைக் குலதெய்வம் இருக்கும் இடத்திற்கு எடுத்து வருவார்கள். பெரும்பாலும் கிணற்றுக்கருகிலும் விநாயகர் கோவிலிலும் இந்நிகழ்வு நடைபெறும். அவ்விடத்தில் தலைவாழை இலைபோட்டு பச்சரிசி பரப்பி அதன் மீது கன்னியர் உருவாரம் வைக்கப்படும். ***கண் திறத்தல்*** நிகழ்ச்சி நடைபெறும். நல்லெண்ணையினைத் தொட்டுக் கரியால் கருமையிட்டுக் கண் திறப்பார்கள். இந்நிகழ்ச்சி சாமிக்கு உயிரூட்டுதல் ஆகும். மந்திரம் ஓதி சக்தி கொடுத்துக் கண் திறத்தல் என்பது திருக்குடநீராட்டு விழாவிலும் நடைபெறும். கன்னிமார் சுவாமிக்கு மாலைபோட்டுப் பச்சரிசியுடன் வெற்றிலை பாக்கு, பழ வகைகள், பொறி, கடலை, இனிப்பு, காரத் தின்பண்டங்கள், காணிக்கை ஆகியன அவ்விலை மீது வைத்து வழிபாடு செய்வர். அப்போது இலையில் படைத்த அனைத்துப் பொருட்களையும் குயவர் இனமூதாட்டிக்கு உரிமையுடையன ஆதலால் அவற்றை அம்மூதாட்டி எடுத்துக் கொள்வார்.

இந்நிகழ்ச்சியினை அடுத்து பருவாச்சிபட்டத்தாரில் இக்குலமக்களில் ஒருவர் தலையில் பலகையும் அதன்மீது பூமாலை போட்ட கன்னிமார் சாமியை வைத்துச் சுமந்தபடி குலதெய்வம் இருக்கும் இடத்திற்கு எடுத்து வருவார். அப்பொழுது ஒரு சிறுகல்லினைக் குளிப்பாட்டி திருநீறு சந்தனம் குங்குமம் வைத்து மாலையிட்டுப் பேழைமூடியில் வைத்து எடுத்துச் செல்வர். இதனைக் கருப்பராயனாக எண்ணி வழிபடுவர். இவ்வாறு வரும்போது மேளதாளத்துடன் இசைக்கருவிகளும் முழங்கும். வாணவேடிக்கை நடைபெறும். வரும் வழியெங்கும் பெண்கள் நீர் ஊற்றிக் கன்னியரை வரவேற்பர். அகவல்கூறி பம்பை அடித்துச் சாமியை அழைத்து வருவர். சாமி உருவம் வைத்திருப்பவர் அருள்வர ஆடிக்கொண்டு வருவார். குலதெய்வம் உள்ள இடத்திற்கு வந்ததும் மேடை அல்லது கோயிலை மூன்றுமுறை

சுற்றி வந்ததும் கன்னியர் உருவத்தை மேடையில் வைப்பர். அங்கு பூசை ஏற்பாடுகள் நடைபெறும். கன்னிமாருக்குப் பால், தயிர், நெய், இளநீர், திருமஞ்சனம், பன்னீர் போன்ற பொருட்களால் அபிடேகம் செய்வர். இறுதியாகப் பஞ்சாமிர்தத்தால் அபிடேகம் செய்வர். பின்னர் நீராட்டிச் சிவப்புநிற ஆடை உடுத்திச் சந்தனம் குங்குமம் வைத்து மலர்மாலைகளால் அலங்கரிப்பர். வெற்றலைபாக்குடன் சிறுமுச்சி, கூடை, பழவகைகள், எலுமிச்சம்பழம், தாழம்பூ, அரளிப்பூவுடன் பிற பூக்களும் வைத்துப் படைப்பர். பச்சைமாவில் விளக்கிட்டு ஒரு சிறுமியின் தலையில் வைத்து மேடையைச் சுற்றி வரச்செய்வர். கோயிலில் வைத்த பொங்கலுடன் சுண்டல் ஆகியவற்றையும் சேர்த்துப் படைப்பர். ஏழுபெண் சிறுமிகளுக்கு மாலைபோட்டுக் கன்னிமார் சுவாமியாகப் பாவித்து வணங்குவர். அலங்காரப் பூசையும், ஆராதனையும் நடைபெறும். அனைவரும் வழிபட்ட பின் பிரசாதம் வழங்கப்படும். இக்குலமக்கள் அனைவரும் தங்களால் இயன்ற பொருளுதவி செய்து ஒவ்வொரு வருடமும் கன்னிமார் சுவாமிக்கு வழிபாடு செய்து, பயனடைந்து வருவர், காலங்காலமாக இந்நிகழ்வு நடைபெற்று வருகின்றது. காதணிவிழா, முடியிறக்குதல், புதுமணத்தம்பதியர் வந்து வழிபாடு செய்தல், அமாவாசை வழிபாடு செய்தல் என்ற நிலையில் இடையில் வந்து வழிபாடு செய்யும் மக்களும் உளர்.

## தொகுப்புரை

இவ்வழிபாடு இனமக்களை ஒருங்கிணைக்கின்றது. இறந்த கன்னியருக்கு வழிபாடு செய்வது முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. கன்னியருக்கு செய்யும் வழிபாடு ஆற்றல் உடையதாக எண்ணப்படுகின்றது.. இவ்வழிபாட்டில் தாழம்பூ கட்டாயமாக வைக்கப்படுவது குறியீட்டுப் பொருளாக கருதுவதற்கும் இடமளிக்கின்றது.

### துணைநூல்கள்


1. அண்ணன்மார்சுவாமி கதை
2. கன்னியர் எழுவர் திருக்குடநீராட்டு விழா மலர்
3. *ந.இரா.சென்னியப்பனார்* : தெய்வ அன்னையரும் தெய்வக் கன்னியரும்
4. *பு.ரா.கணேசன் பூசகர்* : புளியம்பட்டி, தகவலாளர்.
5. *திரு.இராமசாமி* : கணுவக்கரை, தகவலாளர்.

# சார்வாய்ப் புதூர் கிராமச் சிறு தெய்வங்கள்

**வை. தர்மலிங்கம்,** எம்.ஏ., எம்.ஃபில்.,
*மஹேந்திரா கலை அறிவியற் கல்லூரி, காளிப்பட்டி, நாமக்கல்.*

தெய்வ வழிபாடு தோன்றுவதற்குப் பல்வகையான காரணங்களை அறிஞர் பெருமக்கள் எடுத்து இயம்புகின்றனர். இயற்கை ஆற்றலைக் கண்டு அஞ்சித் தெய்வ வழிபாட்டின் மூலம் மனிதன் அதன் சீற்றத்திற்கு ஆளாகாமல் இருக்கலாம் என்று நம்பினான். அதன் அடிப்படையில் தான் இயற்கை வழிபாடுகளும் விழாக்களும் தோன்றின. பலிகள் தருவதன் மூலம் இயற்கையைத் தன் வசப்படுத்தலாம் எனவும் நம்பினான். இது குறித்து உளவியல் பேரறிஞர் சிக்மண்ட பிராய்டு (Sigmund Frawd) கூறும்போது இயற்கைக்கும், மரணத்திற்குப் பின்வரும் நிலைக்கும் அஞ்சினான். இவற்றின் மீது கொண்ட அச்சமே வழிபாட்டிற்கு அடிப்படைக் காரணம் என்கிறார். மனிதன் தன் அன்றாட வாழ்வில் ஏற்படும் இன்னல்களை எண்ணி வருந்தினான். மறுபிறப்பை உணர்ந்தான். மறுபிறப்பிற்கு வேதக்கடவுள் என சமூகத்தில் போற்றப்படும். சிவன், திருமால் முதலிய தெய்வங்கள் அருள்புரியும் என்றும் அன்றாட இன்னல்களுக்குத் தன்னைப் போல் மண்ணில் உழன்று வீரமரணம் (அ) அதே மண்ணில் வாழ்ந்து தியாகத்தின் மறுவுருவாய் மாறிய பெரியோர்களின் நடுகற்களை (சிறு தெய்வங்களை) வணங்கினான். இச்சிறு தெய்வங்களில் பல குலத்தெய்வங்களாக விளங்கின. இவ்வகையில் தோன்றியதுதான் மாரியம்மன், அய்யனார், கருப்பு அய்யனார், முனிஸ்வரன், முனியப்பன்........... போன்றவை. பொதுவாக இவ்வகைக் கோயில்களில் முறையான கோயில் அமைப்பு கிடையாது. பூஜைகள்; திருவிழா என்பன திட்டமிடப்படாதவை. கோயில் குருக்கள் என்போர் பிராமணர் அல்லாத அக்குலத்தைச் சார்ந்த பெரியோர் அல்லது வழிவழியாகக் கோயில் படைக்கும் ஆண்டி ; அச்சம் தரக்கூடிய மற்றும் மக்கள் தொழிலுக்குரிய இடங்களில் அமைந்திருக்கும்; குறிப்பாக நீர்நிலைகள் ஓரமாக இருக்கும். இவ்அமைப்பில் அமைந்த சார்வாய்ப் புதூர் கிராமத்தில் உள்ள பொன்னியம்மன், கருப்பு அய்யனார், அய்யனார், மாரியம்மன் முதலான தெய்வங்களை வழிபடும் மரபுகள் குறித்து இக்கட்டுரை ஆய்கிறது.

## ஊரும் - பேரும் (சார்வாய்ப் புதூர்)

சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டத்தில் இருந்து நேர்கிழக்கே ஏழு மைல் தொலைவில் சார்வாய் கிராமம் அமைந்துள்ளது. ஆத்தூர்ப் பகுதியை அக்கால தொண்டை மன்னன் ஆண்ட பொழுது ஆத்தூரில் இருந்து தலைவாசல் பகுதிக்கு யானையில் செல்லும் வழக்கம் இருந்தது. (இன்றும் பூமியில் சுரங்கப்பாதை இருப்பதாக மக்கள் நம்புகின்றனர்). ஒருநாள் செல்லும் போது யானையின் கழுத்தில் இருந்து மணி அறுந்துவிழ, சிறிது தூரம் சென்ற பின் கவனித்தனர். இதனால் மன்னன் சேவகனை அனுப்பி மணியை எடுத்துவரச் செய்தான். மணி விழுந்த இடம் இன்று ***மணிவிழுந்தான்*** எனவும் சேவகன் மணியை எடுத்துக் கொண்டு மன்னைச் சேர்ந்த இடம் ***சேர்வாய்*** எனவும் அழைக்கப்பட்டது. இது பின்னாளில் திரிந்து சார்வாய் எனப் பெயர் பெற்றது. இந்த ஊரில் இருந்து புதியதாகத் தோன்றியது சார்வாய்ப் புதூர். பிரிந்து புதியதாகத் தோன்றியதால் சார்வாய்ப் புதூர் என இக்கிராமம் பெயர்பெற்றது. இதன் தென்புறத்தில் உள்ளது சதாசிவபுரம் கிராமம். சார்வாய்ப்புதூரின் மேற்கே ஏரி அமைந்துள்ளது. இவ்ஏரிக்கரையில்தான் பொன்னி அம்மன், கருப்பு அய்யனார், அய்யனார் முதலிய தெய்வங்கள் உள்ளன. இம்மூன்று ஊர்களுக்கும் ஒரே ஏரி, இதே கோயில்கள். இக்கோயில் தெய்வங்களை குடி அழைத்து அவரவர் ஊர்களில் திருவிழா நடத்தினர். ஏரியில் வரும் இலாபம் மூன்று ஊருக்கும் பொது. ஒரு காலத்தில் ஏற்பட்ட சாதி, சொத்து, சிலை பிரச்சினை காரணமாக அந்த அந்த ஊர் மக்கள் தங்கள் ஊர்க்கென தனியான, வெண்கலச் சிலைகளை உருவாக்கிக் கொண்டனர்.

## பொன்னியம்மன் வழிபாடு

இயற்கைச் சீற்றங்களில் இருந்து தன்னைக் காத்துக் கொள்ளத் தெய்வங்களை வணங்கினான் என முன்பு கூறியதுபோல் ஒருசமயம் ஏரி உடைந்து இரண்டு ஊர்கள் பாழ்பட்டன. இதனாலேயே ஏரிக்கரையில் பொன்னி அம்மன் தெய்வம் உருப்பெற்றது. கருப்பு அய்யனார் பொன்னி அம்மனுக்கும், ஏரிக்கும், மக்களுக்கும் காவல். பொன்னி அம்மன், கருப்பு அய்யனார் இரண்டிற்கும் பலிகள் உண்டு. இதன் துணைத் தெய்வமான கருப்பு அய்யனார்க்கு மட்டும் முப்பூசை உண்டு. நாட்டுப்புறத் தெய்வங்களில் பெண்தெய்வங்கள் அதிகம் என்றும் அவை வேளாண்மையோடு நெருங்கிய தொடர்புடையவை என்ற அறிஞர்களின் கருத்துப்படியே ஏரிக்கோடிக்கு அருகில் அமைந்துள்ளது. பொன்னி அம்மன் கோயிலுக்கென தனி மானிய நிலங்கள் உண்டு.

ஊரில் ஒரு விழா என்றாலே அங்கே மாரியம்மன், பிள்ளையார் முன்னிலைப்படுத்தப்படுவர். விழா எடுக்கும் முன் ***காப்புக்கட்டுதல் ஊரணிப் பொங்கல்*** என முறையான செயல்கள் நடக்கும். இதன் முதலில் ஊரணிப் பொங்கல் நடைபெறும், அல்லது மழை இல்லாத காலங்களில் நடைபெறும். அப்போது ஊர்மக்கள் அனைவரும் பொங்கலிட்டு வந்து படைத்துத் தமது பாத்திரத்தில் உள்ள உணவைத் தமக்கு விரும்பிய அளவு அல்லது கோயிலில் உள்ளவர்கள் அள்ளும் அளவு உணவை எடுத்துவைப்பர். இவை ஒன்றாக்கிக் கரும்புப்பால் காய்ச்சும் தொட்டியில் கரைத்து வணங்கி ஊர்மக்களுக்கு வழங்குவர். இதனால் மழைபொழியும் மக்கள் பஞ்சம் தீரும் என எண்ணுகின்றனர். இவை பெரும்பாலும் ஆனி மாதத்தில்தான் நடைபெறும். இதே நிலைதான் புறத்தெய்வங்களுக்கும். பின் பெரியோர்களால் முடிவு செய்யப்பட்டு தேர்த்திருவிழா நடத்த முயற்சி மேற்கொள்ளப்படும். தேர்த்திருவிழாவானது ஏழுநாள் சாமி ஊர்வலமும் ஏழாவது நாள் தேரும் நடைபெறும். இது மாரியம்மன் தேர்த்திருவிழா. இது முடிந்த அன்று இரவு பொன்னி அம்மனுக்கு காப்புக்கட்டுதல் நடைபெறும். இதற்கு காப்பு கட்டும் முறை சற்று வேறுபாடு உடையது.

## காப்புக்கட்டுதல்

பொன்னி அம்மன் தெய்வத்திற்கென சாமி குதிரை இருக்கும். இதனை நன்கு குளிப்பாட்டி, தீனியிட்டு வருவர். (ஊரில் உள்ள எல்லா தெய்வத்திற்கும் கரையென்று ஒன்று உண்டு. மக்கள் இறைப்பணி செய்ய குறிப்பிட்ட மக்கள் தெய்வச் செயல்களைச் செய்ய வேண்டும்). பொன்னி அம்மன் கரை, அய்யனார் கரை, கருப்பு அய்யனார் கரை, மாரியம்மன் கரை என்பன உள்ளன. இதன்மூலம் வரிவசூல் சாமிதூக்குதல் முதலியன நடைபெறும். கரைத்தலைவர்கள், ஊர் கோயில் அறங்காவலர் மற்றும் மக்களும் பழம்தட்டு மூன்று கிளையுடைய அரசுமரக்கிளை மாவிலை, தேங்காய், பணம் முதலியன கொண்டு சென்று கோயிலின் முன் குறிகேட்பர். பின் ஏரியின் மையப்பகுதிக்குச் சென்று அங்கு காப்புக்கட்ட உள்ள இடத்தில் தெய்வத்தினைப் பரவுவர். மக்கள் பொன்னி அம்மன் வடக்கு கல்வராயன் மலையில் குடி கொண்டு உள்ளதாக நம்புகின்றனர். இதனைக் குடியழைத்தல் என்றும் கூறுவர். பலவாறு பரவியபோது சில நேரங்களில் சாமி மருள்வந்து படைப்பில் உள்ள குறைநிறைகளைச் சொல்லும். பின் குதிரையில் வந்து ஆடும்போது குதிரை தன்னை உதறும். உடனே குதிரையை விரட்டிச் சென்று கோயிலில் நிறுத்தி அம்மரக்கிளையைப் பலிபீடத்தின் முன் நிறுத்துவர். இதுவே காப்புகட்டுதல் என்பர். இதன்பின் ஏழுநாள் ஊர்வலம் நடக்கும்.

ஏழுநாளும் அந்த அந்த ஊரைச்சார்ந்தவர்கள் தங்களுக்கு வேண்டிய தெய்வத்தினை ஜோடனை செய்து மயில், வெள்ளைக்குதிரை, யானை, ஆண் குதிரை ஆகியவற்றின் மீது முறையே மாரியம்மன், பொன்னி அம்மன், அய்யனார், கருப்பு அய்யனார் ஊர்வலம் வரும். பிள்ளையார்க்கென தனிகரை இல்லை. ஏனெனில் இது இம்மண்ணின் தெய்வம் இல்லை, புறத்தெய்வம். நாட்டுப்புறங்களில் மண்ணின் மைந்தருக்கு மட்டுமே வழிபாடு உண்டு. பிள்ளையார் வாதாபியில் இருந்து வந்த தெய்வமாகும். எனவே அதற்குக் கரை இல்லை. அதனைச் சிறுவர்கள் ஊர்வலமாக எடுத்துச் செல்வர்.

## தேர்த்திருவிழா

ஏழாம்நாள் காலைப் பொழுது கோயில் ஊர் முழுதும் கோலாகலப்படும். தங்கள் நேர்த்திக் கடன்களைச் செலுத்துவர். (உருளைத்தண்டம், அலகு குத்துதல்) பின் பதினொரு மணியளவில் எல்லாத்தெய்வங்களும் ஏழுமுறை ஊரினை வலம் வர வேண்டும். இதனை அந்த அந்தக் கரைக்காரர்கள் வேகவேகமாகச் செய்வர். அப்போது நேர்த்திக்கடன் வேண்டுதல்கள் செய்வோர் சாமிதூக்கும் தங்கள் கரை அல்லது அனைத்துக் கரை அன்பர்களுக்கும் நீர், மோர், மென்பானங்கள் வழங்கிக் களைப்பினைப் போக்குவர்.

பின் ஊருக்குக் கேடு நிகழாது இருக்க கிடாவெட்டித் தேர் இழுக்கத் தொடங்கும் முன் ஊர் தர்மகர்த்தாவின் வீட்டுப் பழத்தட்டுகளை வைத்துச் சிறப்பு செய்து அவருக்குப் பரிவட்டம் கட்டித் தேர் இழுக்கத் தொடங்குவர். பளபளப்பான ஆடை ஆபரணங்களோடு உலாவரும் பொன்னி அம்மன் முன்னர் ஒரு ஆண் தன்னைப் பெண்ணாக அலங்கரித்துச் சிவப்புப்புடவை கட்டிச் செல்வார். கையில் கோலேந்திச் செல்வார். இது மரபுவழிபட்ட முறையாகும். அது ஆணைப் பெண்ணாக வர்ணனை செய்தல் ஆகும். இதனால் பொன்னி அம்மன் கண்களால் ஊருக்குக் கேடு ஏற்படாது என எண்ணுகின்றனர். தேர் உலாவரும் போது ஏதேனும் தெருவின் இடையில் நின்று சந்துகிடா என்னும் கிடாவெட்டிக் காவு கொடுத்து தேர் இழுப்பர். பல நாட்களில் ஊர் சுற்றிவருவது இல்லை. மறுநாள் முதலாம் நாள் நின்ற இடத்தில் பலிகொடுத்து இழுப்பர். இதுநாள் வரையில் கட்டுரையாளருக்குக் கிடைத்த தகவலின்படி எல்லாத் தேர்திருநாளன்றும் மழைபெய்து பெருவெள்ளம் புரண்டு உள்ளது.

மறுநாள் *மஞ்சள் நீராடல்; குடிவிடுதல்* என்பர்; எல்லாத் தெய்வங்களையும் தூக்கிக் கொண்டு ஊர்வலம் வருவர். ஊர்மக்கள் தங்கள் வீட்டில் பெரிய பாத்திரத்தில் மஞ்சள் கரைத்து நீர் வைத்திருப்பர்.

இதனைக் கொண்டு வழிபட்டு, பின்னர் இதனைச் சிறுவர்கள் மூங்கில் குழாய்கள் மூலம் பீய்ச்சியடித்துக் கொண்டு விளையாடுவர். முறைப்பெண்கள் மாமன் மகன் மேல் ஊற்ற கறையோடு படியும். நிறைவாக கோயிலுக்கு எடுத்துச் சென்று வணங்கி அன்று கட்டிய காப்பினை ஏரி அல்லது தூய கிணற்றில் போட்டுக் குளித்துவருவர். இதனைக் குடிவிடுதல் என்பர்.

## நம்பிக்கை

மக்கள் இத்தெய்வங்களுக்கு முன்னால் பரவிநின்று இலை, கல், காய் கொண்டு குறிபார்த்துச் செல்வர். இவை அல்லாது பல்லி சகுனம் கேட்டும் செல்வர். பல்லியானது கோயிலின் ஒருபுறத்தில் சகுனம் சொல்ல வேண்டும் என எண்ணி அதே இடத்தில் குறிப்பிட்ட நேரத்தில் சொன்னால் தெய்வம் அருள்வாக்கு பெற்றதாகக் கருதுவர். இல்லையேல் அடுத்த அடுத்த நாட்களில் காலை மூன்று மணி முதற்கொண்டு ஆறு மணிவரை குறிகேட்பர். தேர்திருவிழா முன்னிட்டு தேர்நடக்கும் போது மாதவிலக்கான பெண்கள் ஊர் எல்லையைத் தாண்டி இருக்க வேண்டும் எனவும் இல்லையேல் பெண்களுக்குக் கடவுளால் உடல் உபாதைகள் ஏற்படும் எனவும் நம்பப்படுகிறது. கனவுகளில் வயதான கணவனை இழந்த பெண் வந்தால் மாரியம்மன் என்றும், கன்னியாக வந்தால் பொன்னி அம்மன் என்றும், நாய், குதிரையுடன் போலீஸ் வந்தால் கருப்பு அய்யனார் என்றும் யானையில் வந்தால் அய்யனார் என்றும் நம்புகின்றனர். இவ்வாறாக வழிபாடுகள் வழிவழியாக இக்கிராமத்தில் நடத்தப்பட்டு வருகிறது.

## துணைநூல்கள்


1. ***சக்திவேல்.சு.***:நாட்டுப்புறப்பாடல்கள் ஆய்வு, மணிவாசகர் பதிப்பகம்.
2. ***வானமாமலை.நா.***, : தமிழர் நாட்டுப்புறப் பாடல்கள்.
3. ***கைலாசபதி.க.***: பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும்
4. முல்லைப்பாட்டு
5. மதுரைக்காஞ்சி

# காஞ்சிக்கூவல் நாட்டுச் சீதேவியம்மன் வழிபாடு

**செ. தேவராஜ்**, எம்.ஏ., எம்ஃபில்.பிஎச்.டி.,
*கோபி கலைக்கல்லூரி. கோபி.*

சேர, சோழ, பாண்டிய நாடுகளைப் போலத் தனிப்பெரும் நாடாகப் புகழ்பெற்றது கொங்குநாடு. இக்கொங்குநாடு மழகொங்கு, வடகொங்கு, தென் கொங்கு, மேல் கொங்கு என நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுத் தொன்றுதொட்டு இனக்குழுக் குடியாட்சியில் இருந்து வந்தது. கொங்கில் அமைந்துள்ள ஊரான காஞ்சிக் கோயிலைச் சுற்றிலும் கோயில்கள் ஆரம் போன்று அமைந்துள்ளன. அவ்வாறு அமைந்தள்ள கோயில்களில் சீதேவி அம்மன் கோயிலும் ஒன்றாகும். கொங்கு வேளாளர்களைச் சேர்ந்த செம்பொன், கண்ணன், முளசி கண்ணன் போன்ற கூட்டத்தினருக்குக் குலதெய்வமாகத் திகழும் சீதேவியம்மன் வழிபாட்டை அறிமுகம் செய்வது இக்கட்டுரையின் நோக்கம். கொங்குவேளாளருடன் பிற இனத்தவர்களும் சீதேவியம்மனைக் குலதெய்வமாகக் கொண்டு வழிபடுகின்றனர். கொங்குவேளாளர்கள், நாடாருக்குக் காணிகொடுத்த செய்தியை இக்கோயிலில் உள்ள கல்வெட்டுக் கூறுகிறது. புலியைக் கொன்று மக்களைக் காப்பாற்றிய சின்னமூப்பன் மகன் சடையமூப்பனுக்கு செம்ப கூட்டத்தாரும் கண்ண கூட்டத்தாரும் காணி கொடுத்துள்ளனர் (1 : 61) கொங்கு நாட்டில் நாடார் குலத்துப் புலிகுத்தி வீரன் நடுகற்கள் பல கோயில்களில் காணப்படுகின்றன. அவ்வாறு சீதேவியம்மன் ஆலயத்தில் ***புலிகுத்தி வீரன் நடுகல்*** உள்ளது. இவர்களுக்குச் சீதேவியம்மன் திருவிழாவின் போது உரிமை வழங்கப்படுகிறது.

காஞ்சிக்கோயில் வட்டார மக்களால அம்மன் கோயில் என்று அழைக்கப்படும் சீதேவியம்மன் கோயில் வடக்கு நோக்கி அமைந்துள்ளது. கருவறைக் கோபுரத்தின் கீழ் எட்டுக்கைகளுடன் சீதேவியம்மன் வடக்குப் பார்த்து அமர்ந்துள்ளார். அம்மனுக்கு எதிர்த்தாற் போல் நந்திதேவரும் பலிபீடமும் உள்ளன. கோயிலைச் சுற்றிலும் குப்பண்ணசாமி, வீரமாத்தி, சின்னம்மன், பெரிய கண்டி அம்மன், கரிச்சி, அப்பிச்சி சாமி, வேடன் சின்னாரி, புலிக்குத்தி வீரன், கருப்பண்ணசாமி, கன்னிமார், மாகாளியம்மன், காமாட்சியம்மன் போன்ற

பிரகாரத் தெய்வங்கள் காணப்படுகின்றன. கோயிலுக்கு வெளியே குண்டத்துப் பிள்ளையார் வீற்றுள்ளார். இக்கோயிலில் தலவிருட்சமாக இலந்தை மரம் உள்ளது.

*வழிபாட்டு முறைகள் :* சீதேவியம்மனுக்கு நாள்தோறும் ஒரு காலப் பூசையும் மார்கழித் திங்களில் இருகாலப் பூசையும் நடைபெறுகின்றன. வெள்ளி மற்றும் அமாவாசை நாட்களில் சிறப்பான வழிபாடுகள் செய்யப்படுகின்றன. ஆண்டில் தமிழ்ப்புத்தாண்டு, தீபாவளி, கார்த்திகை தீபம் போன்ற தினங்களில் திருமஞ்சனப் பூசை செய்து அம்மனை வழிபாடு செய்கின்றனர். சீதேவியம்மனுக்கு ஆதிசைவர்களும் பண்டாரங்களும் முறைவைத்துப் பூசைசெய்கின்றனர்.

*திருவிழா நடைமுறைகள் :* ஆண்டு தோறும் ஆனித்திங்களில் சீதேவியம்மன் கோயில் தேர்த்திருவிழா நடைபெறும். இவ்விழாவே சீதேவியம்மனுக்குப் பெருமை சேர்ப்பதாக அமைகிறது. திருவிழா நடைபெற உறுதிசெய்யப்பட்ட தேதிக்கு 15 நாட்களுக்கு முன்பாக இரவில் பூச்சாற்றுதல் நடைபெறும். இது நடைபெற்று முடிந்த பின் 8-ஆம் நாள் கிராமசாந்தி செய்யப்படுகிறது. இது கிராமசாந்திக்கு அடுத்த நாள் கொடியேற்றுவிழா நடைபெறும். அன்று கோயிலில் பலர் காப்பு அணிந்து கொள்வர். சில நாட்கள் கழிந்த பின் கோயிலில் அக்கினிக் குண்டம் இறங்குதல் மற்றும் தெய்வப் படிமங்களை தேர்களில் ஏற்றி இரதவீதிகள் வழியாகச் செல்லும் நிகழ்வும் நடைபெறுகின்றன.

*தீ மிதி வழிபாடு :* மனித வாழ்க்கைக்குத் தேவையான ஒன்றாகத் தீ திகழ்கிறது. மனித வாழ்க்கையில் பல வழிகளிலும் தீ பயன்படுபொருளாக இருந்து வருகிறது. ***ஆதிகுடிகள் இயற்கையில் காணும் தீ, இடி, பெருமழை, பூகம்பம் போன்ற அச்சந்தரும் நிகழ்ச்சிகளுக்கும் நோய்களுக்கும் காரணம் உலகின்கண் உலவும் ஆவிகளே என்று நம்பியிருந்தனர். அந்த ஆவிகளின் சினத்தைத் தணிக்க அவற்றைத் தேவதைகளாக எண்ணி வழிபட்டனர்.*** காஞ்சிக்கோயிலில் கிராமதேவதையாக விளங்கி வரும் சீதேவியம்மன் ஆலயத்தில் தீ மிதிக்கும் வழக்கம் இருந்து வருகிறது.

மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை அவர்கள் தமது நாடகத்தில் உலக வாழ்க்கையை ஓர் அக்கினிக் குண்டமாக உருவகம் செய்வார். காரணம் வினைப்பயனால் பிறக்கின்ற உயிர்கள் வினைக்கழிவு ஏற்பட்ட பின்னரே வீடுபேறு அடைகின்றன. அப்படிப்பட்ட உலக வாழ்க்கைத் துன்பத்தில் இருந்து விடுதலை பெறவேண்டுமானால் மனமும் உடலும் தூய்மை பெறவேண்டும். அவ்வாறு தூய்மை பெறுவதற்கு விரதமும் பக்தியும் ஒழுக்கமும் முக்கியமானவைகள் ஆகும். எனவே நம்முடைய

திருக்கோயில்களில் அக்கினிக் குண்டம் இறங்கும் வழக்கம் இதனை உணர்த்தும் வண்ணம் அமைந்துள்ளது.

தீமிதி வழிபாடு என்பது நீளமாகவோ (அ) வட்டமாகவோ குழிவெட்டி அதில் பெரிய மரக்கட்டைகளை எரியவிட்டு, எரிந்த தணலின் மீது நடப்பதாகும். தீமிதி வழிபாடு உலகம் முழுவதும் காணப்படுகிறது. தீமிதி வழிபாடானது மனிதனுக்கும் கால்நடைக்கும் ஏற்பட்டுள்ள நோய் நீங்கவும், நோய் ஏற்படாமல் தடுக்கவும், பில்லி சூனியம் போன்ற தீய சக்திகளை ஒடுக்கவும் செய்யப்படுவதாக உலகம் முழுதும் நம்பப்படுகிறது. கால்நடை வளர்ப்பவர்கட்கும் தீமிதி விழாவிற்கும் நெருங்கிய தொடர்புண்டு.

தீமிதித்தலை பூக்குழியில் இறங்குதல், பூமிதித்தல், குண்டம் இறங்குதல் என்றெல்லாம் கூறுவர். தீமிதிப்பவர்கள் பலவகையான கட்டுப்பாடுகளுடன் விரதம் இருந்து அம்மனைத் தரிசித்துவிட்டு இறங்குகின்றனர். அதிகாலையில் குண்டம் இறங்கும் வழக்கம் இக்கோயிலில் தொன்றுதொட்டுப் பின்பற்றப்பட்டு வருகிறது. இப்பகுதியில் உள்ள மக்கள் மாவிளக்கு எடுத்து வந்து பொங்கலிட்டு அம்மனைச் சிறப்புச்செய்து வழிபடுகின்றனர். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் மக்கள் குண்டம் இறங்கும் நிகழ்ச்சியைக் கண்ட ஒரு வெள்ளைக்காரர் இதை மூடநம்பிக்கை எனக் கருதி இதைக் கேலிசெய்து தீமிதிக்கும் நிகழ்ச்சியைப் பூதக்கண்ணாடியின் வாயிலாகப் பார்த்த போது சீதேவியம்மன் நடுக்குண்டத்தில் தன் இரு கரங்களாலும் ஏந்திக் கொண்டு நின்ற காட்சியைக் கண்டதாகவும் அப்போதே வெள்ளைக்காரருக்குக் கண்பார்வை போய்விட்டதாகவும் பின் அவர் மனம் வருந்தி சீதேவியம்மனை வேண்டிப் பார்வை பெற்றதாகவும் அம்மனின் தெய்வ அருள் குறித்த ஒரு செய்தி இங்குள்ள மக்களால் வழிவழியாகச் சொல்லப்பட்டு வருகிறது.

## திருவிழாவும் சமூக உறவும்

கோயில் விழாக்களும் வழிபாடுகளும் கிராமப்புற மக்களை ஒன்று சேர்க்கும் நிகழ்வுகளாக அமைகின்றன. ***விழா என்னும் திறந்த வாசல் வழியே தான் நம்நாட்டு மக்களை அறிந்து கொள்ள முடியும்*** என்பார் தாகூர். மனித சமுதாயம் பல்வேறு காரணங்களால் பல்வேறு பிரிவுகளாகப் பிரிந்து வாழ்ந்த போதிலும் திருவிழாக்களை ஒன்றிணைந்து கொண்டாடுகின்றனர். இதனால் பல இனத்தவர்களும் கோயிலோடு சடங்குமுறையாலும் பங்குபெறும் முறையாலும் தொடர்பு கொள்கின்றனர்.

திருவிழாவின் போது பிராமணர், பண்டாரம், ஆதிதிராவிடர் போன்ற பல சாதியினரும் காப்பணிகின்றனர். கிராமசாந்தி நிகழ்வின்போது குலாலர்களும் பிராமணர்களும் சடங்கு முறையால் தொடர்பு கொள்கின்றனர். பிராமணர், பண்டாரம், ஆசாரியர் போன்றோர் ஒன்றிணைந்து கோயில் திருவிழாவிற்குக் கொடியேற்றுகின்றனர். அம்மனை அழைத்துவர வேட்டுவர்கள் குதிரை கொண்டு செல்கின்றனர். அம்மன் புகழ்பாடும் விருதாவளியை ஆதிதிராவிடர்கள் பாடுகின்றனர். அக்கினிக் குண்டத்தை தேவேந்திரர் அமைக்க வேட்டுவர்கள் குண்டத்தை வலம் வந்து மூவிடங்களில் தீமூட்டுகின்றனர். வண்ணார் தீப்பந்தம் பிடித்திருப்பார். இவ்வாறு பல சாதியரும் பங்கேற்கின்றனர்.

திருவிழாவின் போது கோயிலில் மக்கள் இடுகின்ற பொங்கலில் இருந்து ஓர் அகப்பை எடுத்து அதை ஒன்றாகச் சேர்த்துக் கலந்து படைத்த பின்னர் அத்துணை சாதி மக்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படுகிறது. இதிலிருந்து 1. கடவுளுக்கு முன் அனைவரும் சமம், 2. சாதி, பொருளியல் ஏற்றத்தாழ்வு இன்மை, 3. பொது அறம் போற்றல் ஆகிய உண்மைகள் விளங்கும் (1 : 106) மிகப் பழங்காலத்தில் தமிழர்கள் பொது அறம் போற்றி வந்த போது வேட்டையாடியதையும், போரில் வென்றதையும் அனைவருக்கும் பாதீடு செய்தனர்; பொது உண்டாட்டு வைத்தனர். இதை ***தந்துநிறை பாதீடு உண்டாட்டு, கொடை என*** (3 : 5) என்னும் தொல்காப்பிய வரியால் அறியலாம். இதன் எச்சமாக இன்றும் சீதேவியம்மன் கோயிலில் அனைத்துச் சாதியரும் இடுகின்ற பொங்கலில் இருந்து எடுக்கப்பட்ட அவி உணவைப் படைத்து அனைத்து இனசாதி மக்களுக்கும் வேறுபாடு கருதாமல் பங்கிட்டுத் தந்து சமூகநீதியைப் போற்றுகின்றனர்.

திருவிழாக் காலங்களில் காஞ்சிக்கோயில் வட்டாரத்தில் உள்ள மக்கள் தங்களின் எருமைக் கன்றுகளைத் தானமாக சீதேவியம்மனுக்கு அளிக்கின்றனர். தேர்த்திருவிழா என்பது சமுதாயம் ஒன்றிணைந்து வலிமையுடன் இருப்பதைக் காட்டும் விழாவாகும். சீதேவியம்மன் தேர்த்திருவிழாவின் போது அனைத்துச் சாதி மக்களும் பங்கேற்கின்றனர். உயர்ந்தோரும் தாழ்ந்தோரும் வேறுபாடின்றித் தேரினை வடம் பிடித்து இழுக்கும் காட்சி, சமூக ஒருமைப்பாட்டிற்கு ஓர் அளவுகோலாக அமைகிறது.

## துணைநூல்கள்


1. *சே. தேவராசு :* காஞ்சிக்கோயில் வட்டாரக் கோயில்கள்.
2. கலைக்களஞ்சியம்.
3. தொல்காப்பியம் : பொருளதிகாரம்.

# தொட்டிய நாயக்கர் சமூக நடுகல் வழிபாடு

**மு. நடராசன்**, எம்.எ., எம்.ஃபில்.,பிஎச்.டி.,
*கே.எஸ்.ஆர். கலை அறிவியல் கல்லூரி, திருச்செங்கோடு.*

சங்ககாலம் முதல் இன்றுவரையிலும் போற்றப்பட்டு வரும் வழிபாடு நடுகல் வழிபாடு ஆகும். வெட்சித் திணையின் பகுதிகளில் காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல், பெரும்படை, வாழ்த்து என்னும் நடுகல் வணக்கத்தின் ஆறு படிநிலைகளைத் தொல்காப்பியர் கூறியுள்ளார். இதனால் தொல்காப்பியர் காலமாகிய கி.மு மூன்றாம் நூற்றாண்டிற்கும் முன்பே இந்நடுகல் வழிபாட்டு முறை இருந்து வந்துள்ளதை அறியலாம். இன்றும் இந்நடுகல் வழிபாடு நிலவுகிறது. நாமக்கல் மாவட்ட தொட்டிய நாயக்கர் இன மக்களிடையே காணப்படும் நடுகல் வழிபாட்டை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சங்க காலத்தில் போரில், இறந்துவிட்ட வீரர்களுக்குக் கல்நட்டு அவர்களைக் கடவுளாக வழிபட்ட மரபினையே இலக்கியங்கள் பலபடப் பேசுகின்றன. பகைவரிடமிருந்து மாடுகளைக் காக்கும் முயற்சியில் ஈடுபட்டு உயிர்நீத்த கரந்தை வீரர்களுக்கே பெரும்பான்மையான கற்கள் நடப்பட்டன என்று அறிய முடிகிறது. இந்த நடுகற்களில் வீரனுடைய பெயரும் அவனுடைய பெருமையும் எழுதப்பட்டன என்பதை, ***நல்லமர்க் கடந்த நாணுடை மறவர் பெயரும் பீடும் எழுதி அதர்தொறும் பீலி கட்டிய பிறங்குநிலை நடுகல் (அகம். 67)*** என்னும் சான்றால் அறியலாம். இந்த நடுகற்கட்கு மாலைகளும் மயிற்பீலிகளும் சூட்டப்பட்டு வேங்கைப் பூவும், பனந்தோடும், கரந்தைப் பூவும் சூட்டுவது மரபு என்பதைப் புறநானூறு காட்டுகிறது. (புறம் - 260, 261, 264, 265).

## தொட்டியர் இன நடுகல் வழிபாடு

தொட்டிய நாயக்கர் இன மக்கள் தெலுங்குமொழி பேசுகின்றனர் நாமக்கல் மாவட்டத்தில் இவ்வின மக்கள் ஏறத்தாழ நூறு ஊர்களில் வசிக்கின்றனர். இவர்களது இறப்புச் சடங்குகளில் இறுதியானதும் முக்கியமானதும் நடுகல் வழிபாடு ஆகும்.

இவ்வினத்தில் ஆண்-பெண் இருபாலருக்கும் நடுகல் வழிபாடு உண்டு. குழந்தைகளுக்குக் கிடையாது. அதாவது குழந்தைகளுக்குப் பால் பற்கள் விழாமல் இருந்தால் நடுகல் இல்லை. பல்விழுந்த பருவத்து குழந்தைகளுக்கு நடுகல் வழிபாடு உண்டு. அதேபோல பிறசாதியினரோடு பாலியல் ரீதியான உறவுகொண்டு, ஊர் பஞ்சாயத்தால் ஒதுக்கி வைக்கப்பட்டு இறந்து போனவர்களுக்கு நடுகல் வழிபாடு கிடையாது. தற்கொலை செய்து கொண்டவர்களுக்கும் நடுகல் வழிபாடு இல்லை. சங்க காலத்தில் வீரமே முதன்மையானதாகக் கருதப்பட்டது. தற்கொலை கோழைத்தனமான செயலாகக் கருதப்படுவதால் அக்கோழைக்கு நடுகல் வழிபாடு கிடையாது எனக் கருத இடமளிக்கிறது.

## நடுகல் வழிபாட்டின் முக்கியத்துவம்

நடுகல் வழிபாடு என்பது தொட்டிய நாயக்கர் இனத்தில் ஒவ்வொரு மனிதனும் உயர்வாகக் கருதும் விசயமாகும். இவ்வின மக்கள் குலதெய்வக் கோயில்களுக்கு அடுத்தபடியாக நடுகற்களாக விளங்கும் தங்களது பெற்றோர்களை, முன்னோர்களை வழிபடுவதையே விரும்புவர். தான் இறந்த பிறகு தனக்கும் நடுகல் அமைக்கப்பட்டு தன் உறவுகளால் வழிபடப்படுவதையே விரும்புவர். எங்கே தனக்கான நடுகல் வழிபாட்டுச் சிறப்பு கிடைக்காமல் போய்விடுமோ எனப் பயந்தே பிற சாதியினருடனான பாலியல் உறவைத் தவிர்த்து கட்டுப்பாட்டுடன் வாழ்ந்து வருகின்றனர்.

## நடுகல் - அமைப்பு

ஒருவர் இறந்துபோன மூன்றாம் நாளிலோ, ஐந்தாம் நாளிலோ, ஏழாம் நாளிலோ நடுகல் வழிபாட்டிற்கான ஏற்பாடுகள் செய்யப்படும். உள்ளூர்வாசிகளுக்கும் உறவினர்களுக்கும் இழவு வீட்டார் இச்செய்தியைத் தெரிவிப்பார்கள். கொள்ளி வைத்தவரின் சகோதரியோ சகோதரி உறவுடையவர்களோ கொள்ளி வைத்தவருக்கும் அவரது குடும்ப உறுப்பினர்களுக்கும் புது உடைகள் எடுத்துக்கொடுப்பார்கள். சடங்கு நாளன்று இழவு வீட்டார் தங்களது வீட்டைக் கழுவி, மெழுகித் தூய்மைப்படுத்துவார்கள். சடங்கிற்கு வரும் உறவினர்களுக்கு உணவு சமைத்தும் பரிமாறி, உண்ட பிறகு புதுத் துணிகளை உடுத்திக் கொள்வர். பிறகு மேளதாளத்துடன் உறவினர்கள் புடைசூழ சுடுகாட்டிற்குச் சென்று, சடலம் எரியூட்டப்பட்ட இடத்தில் எஞ்சிய எலும்புத் துண்டுகளைச் சேகரித்து எடுத்துக்கொண்டு வருவர்.

முன்னதாக நடுகல்லைத் தயார்நிலையில் வைத்திருப்பர். முற்காலங்களில் நீள் சதுரமான, மேடு பள்ளங்களற்ற கல்லைத் தேடி

வைத்திருப்பார்கள். அவற்றில் பெயர், பிற தகவல்கள் குறிப்பிடப்பட்டிருக்கமாட்டா. நடுகற்கள் நிறைந்துள்ள வழிபாட்டுத் தளத்தில் அவரவர் கற்களை வைத்தே இன்னாருடையது என்று அடையாளம் தெரிந்து கொள்ளவேண்டும். தற்போது கல்வெட்டு எழுத்துக்களால் ஊர், பெயர், தோற்றம், மறைவு போன்ற விபரங்கள் பொறிக்கப்பட்டு நடுகல் நடப்படுகிறது. இந்நடுகற்கள் எல்லா இடங்களிலும் அடர்ந்த மரங்களின் நிழலின் கீழே நடப்படுகின்றன. இறந்தவரின் குலப்பிரிவைப் பொறுத்து அவருக்கான கல்நடும் இடம் அமையும். தொட்டிய நாயக்கர் இனத்தில் பதினோரு முதன்மையான குலங்கள் உள்ளன. ஒவ்வொரு குலத்திற்குள்ளும் உட்பிரிவுகளும் உண்டு. ஆதலால் பல இடங்களில் நடுகற் கோயில்கள் அமைந்துள்ளன.

## நடுகல் சடங்கு

பெரும்பாலும் இறந்தவருக்கான நடுகல், அவரது குலத்தெய்வம் அமைந்திருக்கும் ஊரிலேயே நடப்படுகிறது. சிறுபான்மை அவர் எரியூட்டப்பட்ட சுடுகாட்டிலேயே அமைவதும் உண்டு. அவ்வாறு உள்ளூரிலேயே அமைவதென்றால் சடங்குகள் உடனே தொடங்கும். வெளியூரென்றால் வாகனங்களில் சென்று சடங்கைச் செய்வர். நடுகற்கள் உள்ள இடத்தில் ஏற்கனவே உள்ள தங்களது பங்காளி உறவுடையவர் நடுகற்களுக்கு அருகிலேயே குழி தோண்டுவர். உதாரணமாக கணவர் ஏற்கனவே இறந்திருந்தால் அவருடைய நடுகல்லை ஒட்டியே மனைவிக்கும் கல் நடப்படும். மரணத்திற்குப் பின்னரும் இருவரும் சேர்ந்திருக்கவேண்டும் என்ற நோக்கம் இது. தோண்டப்பட்ட குழியில் சுடுகாட்டிலிருந்து எடுக்கப்பட்ட எலும்புத் துண்டுகள், காசுகளைப் போடுவர். நடுகல்லை ஆட்டுப்பாலில் தேய்த்துக் குளிப்பாட்டுவர். பிறகு கல்லை அக்குழியில் நடுவர். கல்லுக்கு சிவப்பு, சந்தனம் வைக்கப்பட்டு மாலை சாத்துவர். பழம், தேங்காய் வைத்துப் படைத்து, அனைவரும் நடுகல்லை வணங்குவர். பெண்கள் ஒப்பாரி வைத்துக் கொண்டு நடுகல்லை கட்டியணைத்து அழுவர். பின்னர் வீடு திரும்புவர். இவ்வாறு நடுகல்லானது அமைக்கப்படும்.

## நடுகல் விழா

நடுகல்லாக நாட்டப்பட்டோர் நாட்டுப்புற மக்களால் தெய்வமாகவே வழிபடப்படுகிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் தைப்பொங்கல் பண்டிகையின் போது இந்நடுகல் வழிபாடு நடைபெறுகிறது. மாட்டுப் பொங்கலுக்கு மறுநாளிலிருந்து நான்கைந்து நாட்களுக்கு வெவ்வேறு ஊர்களில் நடைபெறும். நடுகல் வழிபாட்டை மாலை என்று குறிப்பிடுவர். ***மாலாகோயில்*** என்பது நாட்டுப்புற வழக்கு.

நடுகல் விழாவன்று மாலை 3.00 மணியளவில் அவ்வூரில் யார் யாருடைய நடுகற்கள் இருக்கின்றனவோ அவர்களனைவரும் கூடுவர். புத்தாடைகள், மாலை, பழம், பத்தி, சூடம், சிவப்பு, சந்தனம், பால் ஆகிய பொருட்களுடன் வருவர். நடுகல்லை முதலில் தண்ணீரால் கழுவி, ஆட்டுப்பால் தேய்த்து குளிப்பாட்டுவர். நடுகல்லுக்கு சிவப்பு, சந்தனம் வைத்து மாலை சார்த்தப்படும். மாலா கோயில் பூசாரி முதலில் சாமி கும்பிட்டதும் எல்லோரும் புத்தாடைகளை நடுகற்களுக்கு போர்த்துவார்கள். நடுகல் ஆணுக்குரியதாக இருந்தால் வேட்டியும், பெண்ணுக்குரியதாக இருந்தால் புடவையும் போர்த்தப்படும். பழம் வைத்து, பத்தி கொளுத்தி, சூடம் ஏற்றி நடுகல்லை வணங்குவார்கள். பிறகு அவரவர் நடுகல்லைக் கட்டியணைத்து ஒப்பாரி வைத்து அழுவர். பூசாரி எல்லா நடுகற்களின் மீதும் மஞ்சள் கலந்த நீர் தெளித்த பிறகு, புதுத் துணிகளை எடுத்துக்கொள்வார்கள்.

மாலை 5.00 மணியளவில், மஞ்சு விரட்டு நடத்தப்படும். சுற்றுவட்டார கிராமங்களில் இருந்து ஊருக்கு ஒரு காளை வீதமாகக் கொண்டு வருவர். பத்து காளைகளுக்குக் குறையாமல் ஒரு மாலா கோயிலில் கூடுவதுண்டு. அவற்றை வரிசையாக நிறுத்தி, ஒரு குறிப்பிட்ட தூரம் வரை இளைஞர்கள் விரட்டுவார்கள். எந்த ஊர்க்காளை முந்துகிறதோ அது வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டுப் பட்டம் கட்டப்படும். இவ்விழாவினைக் காண ஏராளமான பிற சாதியினரும் கூடுவார்கள். மஞ்சு விரட்டு நடுகல் விழாவன்று நடத்தப்படுவது, பகைவர்களிடமிருந்து மாடுகளைக் காக்கும் முயற்சியில் இறந்துபட்ட வீரர்களுக்கே நடுகல் நடப்பட்டது எனும் சங்ககாலக் கூற்றுடன் தொடர்புடையதாகக் கருத இடமாகிறது.

# பெரிய கருங்கு வழிபாட்டு மரபுகள்

**மு. நாகபாண்டி**, எம்.ஏ., எம்.ஃபில்.,பிஎச்.டி.,
*பாரதியார் பல்கலைக்கழகம், கோயமுத்தூர் - 46*

இராமநாதபுரம் மாவட்டத்தில் கொத்தங்குளம் என்னும் சிற்றூரில் வயல்புறமாக ஊரை ஒட்டியநிலையில் பெரிய கருங்கு கோயில் அமைந்துள்ளது. அதன் முன்பு நல்ல விசாலாமான திடல் உள்ளது. இந்த ஊரில் தேவேந்திரகுல வேளாளர் மக்கள் மட்டுமே வாழ்ந்து வருகின்றனர். பெரிய கருங்கு முதன்மைத் தெய்வமாகவும், அதற்கு அடுத்த நிலையில் சோனைச்சாமி, முனியப்பசாமி, இருளப்ப சாமி துணைத் தெய்வங்களாகவும், ராக்கச்சி, காளி, ஆண்டிச்சாமி ஆகியவற்றைக் குலத்தெய்வங்களாகவும் வைத்து வழிபடுகின்றனர்.

***கோயிலின் அமைப்புகள் :*** ஆண்டிக் கோயில் நான்கு பக்கமும் திறந்த நிலையில் மேலே மட்டும் ஓடு கவிழ்த்தப்பட்டு இருக்கும். கீழே மூன்று செங்கல் கல்லில் சந்தனம் தடவி இருக்கும். ராக்கச்சி தெய்வத்தை ஒருவர் வீட்டின் பின்புறமாக ஓட்டுக் கட்டடம் இறக்கி வழிபடுவர். இதில் சாமிப்படங்கள் மட்டுமே இருக்கின்றது. முனியப்பசாமியை நீண்ட காலமாக வளர்ந்திருந்த ஆலமரத்தின் அடியில் சூலாயுதம் நட்டு வணங்கி வருகின்றனர். அம்மரத்தில் நேர்த்திக் கடன் செய்த மணிகளும் தொங்கவிடப்பட்டிருக்கும். பெரிய கருங்குசாமி கோயிலில் கிழக்குப்பக்கமாக வாசல் இருக்கிறது. மேற்குப் புறமாக நின்று மக்கள் வணங்குவார்கள். இடது புறமாக ஒரு கழுவும் இருக்கிறது. கோயிலின் இடதுபுறம் சற்று இடைவெளி விட்டு சோனைச்சாமி கழு உள்ளது. வலது புறமாக காளி, இருளப்பசாமி, ஆண்டிச்சாமி, ராக்கச்சி போன்ற சாமிகளுக்கு பள்ளயம் வைப்பதற்கு ஏதுவாகத் தளம் அமைக்கப்பட்டுள்ளது.

***பூசைப் பெட்டி எடுத்தல் :*** பூசைப் பெட்டி எடுக்கும் விழா இரவு 7.30 மணியளவில் நல்ல நேரம் குறித்து மேளதாளத்துடன் ஆரம்பம் ஆகும். முதலில் ஆண்டிக்கோயில் சாமி அழைத்து ஒருவர் ஆடுவார். அவர் ஆடி அருள் சொன்னவுடன் தான் பூசைப்பெட்டி கிளப்ப ஊருக்குள் போவார்கள். ஊருக்கு வடக்கே ஊரை ஒட்டிய நிலையிலேயே உள்ள திடலிலே சாமி அழைத்து பூசைப்பெட்டி எடுப்பார்கள். பெரிய கருங்குசாமி மற்றும் முனியப்பசாமி ஆகிய தெய்வங்களுக்குரிய

பூசைப்பெட்டி (சொங்கன்) என்பவர் வீட்டில் இருந்து எடுப்பார்கள். சோனைச்சாமியின் பூசைப்பெட்டி(சி. முனியாண்டி) என்பவர் வீட்டில் இருந்தும், ராக்கச்சி சாமியுடைய பூசைப்பெட்டி எடுக்கும் முன் அந்தந்த வீட்டில் சாமிஆடி, சாமி எடுக்கச் சொன்ன பிற்பாடுதான் எடுப்பார்கள். மீண்டும் பூசைப்பெட்டியை ஆண்டிக்கோயிலில் வைத்து சாமியாடி விட்டு அருள் சொல்லி மக்களுக்கு வாக்குக் கொடுத்துவிட்டு கிளம்புவார்கள்.

*தெய்வ வழிபாடு :* எடுத்து வரப்பட்ட அனைத்துப் பொருட்களையும் முனியப்பசாமி கோயிலின் முன்புறமாக இறக்கி வைப்பர். பூசாரி பூசை செய்துவிட்டுச் சாமிக்கு அருள் அழைப்பர். முதலில் பெரிய கருங்கு சாமியும் அதனைத் தொடர்ந்து சோனைச் சாமியும், இருளப்பசாமியும், முனியப்பசாமியும் ஆட ஆரம்பித்துவிடும். சாமி ஆடும்போது சாமிகள் அனைத்தும் நாரால் திரிக்கப்பட்ட சாட்டைகளைக் கொண்டும் சோனைச்சாமி மட்டும் சவுக்காலும் அடித்துக் கொள்ளும்.

முனியப்பசாமியின் முன்புறம் உள்ளதிடல் இது நிகழும் பள்ளிக்கூடம். அருள் சொன்னவுடன் பெரியகருங்கு கோயிலுக்குச் சாமிகள் புறப்படும். பெரியகருங்கு சாமிக்கு வந்தவுடன் பொருட்கள் அனைத்தும் இறக்கி வைப்பர். அப்போதே பலகாரம் சமைக்க ஆரம்பித்து விடுவார்கள்.

*பள்ளயம் போடுதல் :* பூசாரி வாயைக் கட்டிக் கொண்டு தேங்காய் உடைத்துப் பள்ளயம் போடுவார். அனைத்துத் தெய்வங்களுக்கும் பள்ளயம் போடப்படும். பள்ளயத்தில் தேங்காய், வாழைப்பழம், எலுமிச்சம்பழம், கடலைப்பொறி, வெற்றிலை பாக்கு இருக்கும்.

*காவு கொடுத்தல் :* சாமி அழைத்தவுடன் முதலில் பெரிய கருங்குசாமி காவு கொடுத்து ஓடும். ஓடும் போது விழுந்துவிடாமல் மற்றவர் தீப்பந்தத்துடன் ஓடுவார்கள். சிறுவர்கள், பெண்கள் ஓடககூடாது. இது 1/4 கிலோ மீட்டர் தூரம் வரை ஓடும். ஓடி வந்தவுடன்தான் அடுத்த சாமி ஓடவேண்டும். அவ்வாறு பெரியகருங்கு, முனியப்பசாமி, ஆண்டிச்சாமி இந்த மூன்றுசாமி மட்டும்தான் காவுகொடுத்து ஓடும். காவு கொடுத்த நிகழ்ச்சி முடிந்தவுடன் சூலாயுதம் போல் இருக்கும் அந்தச் கழுமரத்தில் ஏறி நின்று அருள் வாக்குச்சொல்லும்.

*பள்ளயம் ஏற்றுக் கொள்ளல் :* பூசாரி பங்கிட்டு வைத்தவுடன் அந்தந்தச் சாமிகள் பள்ளயத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். எல்லா சாமியும் ஏற்றுக்கொள்ளும் என்று சொல்ல முடியாது. ஏதேனும் பொருள் வைக்காமல் இருந்தாலோ (அல்லது) பொருள் காணாமல் போனாலோ

ஏற்றுக்கொள்ளாது. அதற்குப் பரிகாரம் செய்த பிற்பாடே ஏற்றுக்கொள்ளும். பலியிடும்போது ஆண்டிச்சாமி, சோனைச்சாமி, கருப்பணசாமி, முனியசாமி இவை மட்டுமே இரத்தம் குடிக்கும். பின்னர் சாமிகள் அனைத்தும் ஓய்வெடுக்கும். மீண்டும் இரவு 1.30 மணியளவில் சாமி அழைப்பர்.

***கச்சை கட்டுதல் :*** சாமிகள் அனைத்தும் அதனது கச்சைகளை (ஆடைகளை) அடையாளம் காட்டி எடுத்தவுடன் கச்சைகளை மாட்டிவிடுவர். அதனை அணிந்து கொண்டே கடைசிவரை சாமியாட வேண்டும். மாலை வாங்கி வருவோர் சாமியாடுவோர் கழுத்தில் போட்டு விட்டுக் காலில் விழுந்து வணங்குவர். சாமியாடி, அருள் சொல்லும். பேய் பிடித்திருந்தால் பேய் விரட்டும். பேய் விரட்டும் போது வளையல்களைக் கழற்றி விடுவர். இரண்டு கைகளையும் சேர்த்த நிலையில் கும்பிட்ட வண்ணம் தலைக்கு மேல் தூக்கி நிறக வேண்டும். சாமிகள் சாட்டையால் அடிக்கும். அடி தாங்காமல் பேய் ஓடும். அவ்வாறு ஓடக்கூடியவர்களை அழைத்து வந்து திருநீறு கொடுப்பர். ஒவ்வொருவராக அருள் பெறவேண்டும். இது விடியும் வரை நடைபெறும். காலையில் வீடு வீடாகச் சென்று மஞ்சள் தண்ணீரை சாமியாடிகள் காலில் ஊற்றியவுடன் சாமியாடி திருநீறு கொடுப்பர்.

***மலையேறுதல் :*** எல்லா வீடுகளையும் சுற்றியவுடன் ஊருக்கு மையத்தில் சாமிகள் ஆடி வாக்குச் சொல்லி பானக்கம் குடித்து (அதாவது புளியால் பழம் சேர்த்து கரைக்கப்பட்ட பானம்) சாமி ஆடுபவர்களே நிறுத்திக் கொள்வார்கள். இதற்கு மலையேறுதல் என்று பெயர்.

## மக்களின் நம்பிக்கைகள்

சாமிகள் காவு கொடுத்து ஓடுகின்ற போது சிறுவர்கள், பெண்கள் ஓடக்கூடாது. காவக் கொடுத்து ஓடும் போது சாமியை மட்டும் விடவும் கூடாது. அவ்வாறு செய்தால் ஊரில் யாரையாவது பலி வாங்கிவிடும் என்ற நம்பிக்கை அம்மக்களிடம் உள்ளது. காவு கொடுத்து திரும்பி வரும் போது யாரும் குறுக்கே போகக் கூடாது. பள்ளயம் பிரிக்கும் முன் எதையும் எடுத்து சாப்பிடக்கூடாது. பேய் விரட்டும் போது சிறுவர்கள் யாரும் பேய் பிடித்தவர்களை அழைத்து வரக் கூடாது. இயற்கைத் தீட்டு (மகப்பேறு, பருவம் எய்தல்) உள்ள குடும்பப் பெண்கள் கோயில்கள் இருக்கும் பக்கம் வரமாட்டார்கள். தானியங்கள் விளைந்தால் கோயில்களுக்குப் படைத்துவிட்டு பின்னர்தான் வீட்டிற்கு அறுவடைசெய்வார்கள்.

# அகமுடையார் குலத்தெய்வ வழிபாடு

**முனைவர் வெ. அ. நாகரத்தினம்,** எம்.ஏ.,எம்.ஃபில்.,பிஎச்.டி.,
*சேரன் கல்லூரி, காங்கயம்*

கோவை மாவட்ட அகமுடையார் குலத்தெய்வங்களில் இடம்பெறும் ஆடிமாத அம்மன் வழிபாடு இக்கட்டுரையில் ஆராயப்படுகின்றது. அகமுடையார் இனமக்களால் 1. வீரமாச்சி, 2.காத்தாய் கமலாய் முத்துப்பேச்சி, 3. சோலையம்மன், 4. தங்கம்மன். 5. சுந்தராயி அம்மன், 6. செல்லாண்டியம்மன், 7. தொட்டிச்சியம்மன், 8. எழுவக்காரியம்மன், 9. சிலம்பாத்தாள், 10. பகவதியம்மன், 11. உடைய நாச்சியம்மன், 12. காவேரியம்மன் ஆகிய குலதெய்வங்கள் வழிபடப்படுகின்றன.

## வழிபாட்டில் அம்மன் தெய்வங்கள்

பெண் தெய்வங்களாக முக்கியமாகக் கன்னிப் பெண்களைக் கருதும் நிலை உள்ளது. பொதுவாக அம்மன் வழிபாடு என்றாலே மழை வேண்டி செய்யும் சடங்ககாவும், வளமைநோக்கில் அமைந்த ஒன்றாகவும் இருந்து வருகிறது. அச்சத்தினால் தோன்றிய வழிபாட்டில் இடம் பெறும் அம்மன்கள் தோற்றம் பெற்ற கதைகள் செவிவழிச் செய்திகளாக வாய்மொழி மரபாக வழக்கில் உள்ளன. அவை ஒரு காலத்தில் ஏற்பட்ட சாதிக் கலவரங்கள், புலம் பெயர்தல் இன்னும் பலவற்றை அடிப்படையாகக் கொண்டு எழுந்துள்ளன. இன்னும் சொல்லப் போனால் அவை வரலாற்று நிகழ்வுகளாக ஏட்டில் பதியாதவைகளாக உள்ளன. ஆனால் வாய்மொழி மரபாகப் பின்பற்றப்பட்டு வருகின்றன. எனவே வழிபாட்டு மரபுகள் வரலாறாக இருப்பதை அறியலாம். ***வாய்மொழி வரலாறு என்பது அரசியல் வரலாறு, சமுதாய வரலாறு பொருளாதார வரலாறு போன்ற வரலாற்றில் ஒரு பிரிவன்று. இது ஒரு வரலாற்று முறையில் (Metrodology) ஆகும்.*** (Lummis 1989) என்று சொல்வது பொருந்தும். (நாட்டார் வழக்காற்றின் சில அடிப்படைகள், ப. 148) இவ்வாய்மொழி மரபினை சுகோ என்பவர், ***ஆவணங்களாகப் பதியப்படாத வரலாற்று நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டவர்களின் வாய்மொழிச் சான்றுகளைப் பயன்படுத்துவது வாய்மொழி வரலாறு ஆகும்*** என்கிறார். (நாட்டார் வழக்காற்றின் சில அடிப்படைகள், ப. 148).

***ஜான் வான் சினா*** வாய்மொழிச் சான்றுகளை ;

1. ***கண்ணால் கண்டவர் கூற்று*** (Eye Witness Account)
2. ***வாய்மொழி மரபு*** (Oral Tradition)
3. ***வதந்தி*** (Rumour) என்று மூன்று வகைப்படுத்துவார்.

மேற்கண்ட கருத்துக்களின்படி குலத்தெய்வ வழிபாட்டு மரபுகள் அமைந்துள்ளன. குலதெய்வ அம்மன்கள் தோற்றம் பெற்றதை ஆராயும் போது அவை இறந்து போனவர்களின் நினைவுகளாக உள்ளன. அவை ஆவிவழிபாடு, நடுகல் வழிபாடு (மாசதிக்கல் வழிபாடு) ஆகியவற்றின் வளர்ச்சி நிலையாக இருப்பதைக் காணலாம். வழிபாட்டில் இடம்பெறும் தெய்வங்கள் பெரும்பாலும்,

1. தீயில் மாய்ந்த பெண்கள்,
2. கொலை செய்யப்பட்ட பெண்கள்,
3. ஊருக்காகத் தியாகம் செய்த பெண்கள்,
4. இறந்துபோன கன்னிப் பெண்கள்

போன்ற நிலையில் அமைந்துள்ளன. அவற்றுள் குறிப்பிடத்தக்கவையாக வீரமாச்சி, காத்தாய் கமலாய் முத்துப் பேச்சி, சுந்தராயி அம்மன், தொட்டிச்சி அம்மன், தங்கம்மன் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். பெயர் தெரியாத அம்மன்கள் பல உள்ளன.

## வீரமாச்சி

வீரமாச்சி அம்மன் இம்மக்களிடம் செல்வாக்குப் பெற்றுள்ளது. கணவன் இறந்ததும் தானும் தீயில் குதித்து விட்டதாக அவ்வம்மனைப் பற்றிக் கூறுவர். தீயில் எரிந்தும் காதோலை - கருகுமணி - கட்டியிருந்த சேலை ஆகியவை எரியாமல் இருந்ததால் வீரமாச்சி மக்களுக்குத் தெய்வம் ஆகிவிட்டது. காத்தாய் கமலாய் முத்துப் பேச்சி ஆகிய மூன்று தெய்வங்களும் வெட்டுண்ட தெய்வங்களாக இடம் பெறுகின்றன. அதனைச் சுந்தராயி அம்மன் என்றும் கூறுவர். அகமுடையாரிடம், மறவர் பெண் கேட்டதாகவும், துலுக்கன் (முகமதியன்) பெண் கேட்டதாகவும், கொல்லன் பெண் கேட்டதாகவும் கதை உண்டு. பிற இனத்தவர்கள் பெண் கேட்டதை விரும்பாத அகமுடைய மக்களில் ஒருவன் தன் பெண்ணை வெட்டினான் என்றும், அப்போது வெட்டப்பட்ட துண்டுகள் காத்தாய், கமலாய் முத்துப் பேச்சி ஆகிய மூன்று துண்டுகளாக வீழ்ந்தன என்றும் கூறுவர். அவை குலத்தெய்வங்களாக வழிபடப்பட்டு வருகின்றன. இதே கதைதான் சுந்தராயி அம்மனுக்கும். இக்கதையில் என்ன சிக்கல் இருக்கிறது என்றால் பிற சாதிக்காரனுக்குத் தன் பெண்ணை மணம் கொடுக்க

விரும்பாமை ஆகும். சாதீயப் பிரச்சனைகள் தலைதூக்கிய போது இத்தகைய சூழ்நிலை ஏற்பட்டிருக்கக் கூடும் என்பதை அறியலாம்.

## சோலையம்மன்

*சோலையம்மன்* கதை சற்று மாறுபட்டு காணப்படுகிறது. புகுந்த வீட்டின் வறுமை காரணமாக, கர்ப்பமுற்ற பெண் ஒருத்தி தந்தையின் கொடிக்காலிற்குச் சென்று வெற்றிலை பறிக்கிறாள். அப்போது தோட்டத்திற்கு யாரோ திருடன் நுழைந்துவிட்டான் என்று எண்ணி, யாரென்று பார்க்காமல் அவள் தந்தை வெட்டிவிடுகிறான். இறந்தபின்பு அவள் தெய்வமாகிறாள்.

## தங்கம்மன்

*தங்கம்மன்* தோற்றம் பெற்றதைக் காணும்போது, ஊரில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. வெள்ளத்தின் போக்கைக் கட்டுப்படுத்த வேண்டுமென்றால் கன்னிப்பெண் ஒருத்தியைப் பலியாகத் தரவேண்டும் என்ற நிலை ஏற்படுகிறது. அப்போது அகமுடையார் இனப் பெண் ஒருத்தி அதற்கு ஒப்புக் கொண்டு பலி ஆகிறாள். பின்னர் தெய்வமாக இடம் பெறுகிறாள். நொய்யல் ஆற்றங்கரையில் கொடுமணலில் இடம் பெற்றிருக்கும் இவ்வம்மன், கொங்கு வேளாளருக்கும் குலத்தெய்வமாக உள்ளது. கொங்கு வேளாளர் அதிகமாக வாழும் பகுதியில் குறைந்த எண்ணிக்கையுள்ள அகமுடையார் வாழ நேர்ந்ததால், தங்கள் இனப்பெண் ஒருத்தியைப் பலியாக அல்லது தியாகம் செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டிருந்தது என்பதை இவ்வம்மன் வரலாறு உணர்த்துகிறது.

## தொட்டிச்சியம்மன்

*தொட்டிச்சியம்மன்* குலதெய்வமாகிய வரலாற்றை அறியும் போது தொட்டிச்சி சாதியைச் சேர்ந்த, மன்னர் குலத்தில் பிறந்த அப்பெண்ணை அதே குலத்தில் தோன்றிய மன்னன் வழியினன் ஒருவனுக்கு மணம் முடித்து வைக்கப்படுகிறது. அப்பெண் கருவுறுகிறாள். பிறந்த வீட்டிற்குப் போக வேண்டும் என்ற ஆசை எழுகிறது. அதை கணவனிடம் சொல்ல அவனும் சரி என்று குதிரை வண்டியில் அழைத்துச் செல்கிறான். காட்டுவழியில் செல்லும் போது அவளுக்குத் தாகம் எடுக்கிறது. அப்போது அப்பெண் கணவனிடம் ஆற்றுநீர், கிணற்று நீர், ஊற்றுநீர் வேண்டாம் இளநீர்தான் வேண்டும் என்று கேட்கிறாள். என்ன செய்வது என்று கவலையுற்றிருக்கும் நிலையில் மாடு மேய்த்துக் கொண்டிருந்த சிறுவர்கள் இளநீர் கொண்டு

வந்து கொடுக்கின்றனர். அதனை வாங்கிக் குடித்ததும் இறந்து விடுகிறாள். உற்றார் உறவினர்களுக்கெல்லாம் செய்தி கொடுத்து, பின் எல்லோரும் சூழ்ந்திருக்கும் போது அப்பெண்ணின் உடலுக்கு தீ வைத்துவிட்டு, எரிகின்ற நெருப்பில் தானும் விழுந்து மாய்கிறான். இக்கதையில் மனைவி இறந்ததும் கணவனும் இறந்துவிடுகின்ற செய்தி இடம்பெறுகிறது. மேலும் இறந்த அப்பெண் அருள்வந்து, தெய்வமேற்று, தனக்கு இளநீர் கொடுத்த (அகமுடையார்) சிறுவர்களுக்கு குலதெய்வமாவேன் என்று சொல்லியதால், அகமுடையார் மக்களுக்குத் தொட்டிச்சியம்மன் குலதெய்வமாக விளங்கியது. வீட்டில் பெண் குழந்தை இறந்துவிட்டால் அதன் நினைவாக ஆடி மாதத்தில் வணங்கும் நிலையினைக் காணலாம்.

இவ்வாறு மேற்சொன்ன கதைகள் தெய்வம் தோற்றம் பெற்ற சூழ்நிலையை விளக்குகின்றன. இத்தெய்வங்கள் (அம்மன்கள்) யாவும் இறந்துபோனவர்கள் என்பதால் அதற்கென்று தனித்த உருவம் என்ற ஒன்று இல்லை. அதனால் ஆடி மாதம் செவ்வாய்க் கிழமை இரவில் அதற்கு உருவம் செய்து, கரகம் எடுத்து வந்து வில்லடித்தும் உடுக்கையடித்தும் சக்தி வரச் செய்கின்றனர்.

குலத்தெய்வ வழிபாட்டில் பொங்கல் வைப்பது முக்கியமான ஒன்றாகும். அவரவர்கள் தெய்வத்திற்கு அவரவர்கள் மட்டும் பொங்கலிட்டு, வழிபட்டுப் பின் அக்கூட்டத்தினரே உண்ண வேண்டும் என்பது மரபு. பிற கூட்டத்தினர் வந்து உண்ணுவதை ஏற்றுக் கொள்ளும் மரபு இருந்ததில்லை. ஒருவேளை சாப்பிட்டுவிட்டால் இறந்துவிடுவர் என்ற அச்சமும் அதில் கலந்திருந்தது. இன்று அந்நிலை மாறிவிட்டது. அம்மன்களுக்குச் செவ்வாய்க்கிழமை சடங்குகள் தொடங்கி புதன்கிழமை வரையிலும் நடத்தப்படுகிறது. அடுத்தநாள் வியாழக்கிழமை ஆடு, கோழி வெட்டிச் சாப்பிடுவர். அந்த நாளினைக் ***கழுவாடி*** என்றே சொல்வர். இவ்வாறு ஆடிமாதம் மேற்சொன்ன அம்மன்கள் வழிபாட்டில் இடம் பெறுகின்றன. மதுரை, இராமநாதபுரம் ஆகிய பகுதியிலிருந்து வந்த இம்மக்கள் நொய்யலாற்றங்கரையில் தங்கி, தங்கள் வாழிடங்களை அமைத்துக் கொண்டு தங்களுடைய மரபுகளை வழுவாமல் காத்தனர் என்பதற்கு இவ்வழிபாடுகள் சான்றாகத் திகழ்கின்றன. எனவே வழிபாட்டு மரபுகள் என்பவை அவை குறிப்பிட்ட காலத்தில் சமூகத்தில் நிலவியிருந்த பண்பாடு அல்லது சமூக வரலாற்றின் பதிவுகளைக் கொண்டுள்ளது எனலாம்.

# அம்பாயிரம்மன் வழிபாட்டு மரபுகள்

**கோ. நாராயணன்,** எம்.ஏ., பிஎச்.டி.,
*அரசு கலைக்கல்லூரி, சேலம்.*

சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டம் தலைவாசல் ஒன்றியத்தைச் சேர்ந்த பெரியேரி, ஆறகழூர், நத்தக்கரை ஆகிய மூன்று ஊர்களுக்கு மத்தியில் வசிஷ்டநதிக் கரையோரத்தில் பல ஆலமரங்களுக்கிடையே காட்சி தந்து கொண்டிருக்கும் அம்பாயிரம்மனின் வழிபாட்டு மரபை அறிமுகம் செய்வது இக்கட்டுரையின் நோக்கம். அம்பாயிரம்மனுடைய தோற்றம் பற்றிப் பல்வேறு வகையான கருத்துக்கள் நிலவுகின்றன. ஏறக்குறைய முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு வசிஷ்ட நதியில் வெள்ளம் பெருக்கெடுத்து வெள்ளத்தில் அம்பாயிரம்மன் சிலை அடித்து கொண்டு வந்து தற்போது கோவில் இருக்கும் இடத்தில் புதைந்து கிடந்ததாகவும், அவ்விடத்தில் நிலத்துச் சொந்தக்காரர் கிணறு தோண்டும் போது சிலை கிடைத்ததாகவும் கூறப்படுகிறது. பின்னர் அந்தச் சிலையை அந்த இடத்திலேயே வைத்து வழிபடத் தொடங்கினர். நாளடைவில் சுற்று வட்டாரத்தில் இருந்த மக்கள் அனைவரும் வந்து வழிபட ஆரம்பித்தனர். மக்கள் அனைவருக்கும் மட்டுமல்லாமல், அருகில் உள்ள ஊர்களில் இருந்து வந்தும் வழிபடலாயினர். அதனால் அம்பாயிரம்மன் சிறிது பிரபலமாகவே குறைந்த அளவில் நிதி சேர்த்துக் கூரை வேயப்பட்டது. பின்னர், சிறிது சிறிதாக நிதி வளர வளர, அதற்குக் கோபுரம் எழுப்பப்பட்டது. பின்னாளில், மிகப் பிரபலமாக அம்பாயிரம்மன் பிரசித்தி பெற்று அதிக அளவில் நிதி சேர்த்து இன்று இராஜகோபுரம் கட்டப்பெற்று மிகச் சிறந்த கோவிலாக காட்சியளிக்கிறது.

***அம்பாயிரம்மனும் ஊர்களும் :*** சுற்று வட்டாரத்தில் இருந்து வந்து வழிபடுபவர்கள் மட்டுமல்லாமல், வெளியூரில் இருந்து வந்து வழிபடுகிறவர்கள்தான் அதிகமாக காணப்படுகின்றனர். அம்பாயிரம்மன் மூன்று ஊர்களுக்கு மத்தியில் அமைந்துள்ளதால், எந்த ஊருக்குக் கோவில் சொந்தமானது என்று அடிக்கடி பிரச்சினை எழுந்துள்ளது. அதனால், மூன்று ஊர்ப் பெரியவர்களும் பொதுமக்களும் கலந்து பேசி மூன்று ஊர்களுக்கும் பொதுவானது. மூன்று ஊர்களிலும் திருவிழா கொண்டாடினால் அம்பாயிரம்மன் திருவுருவச் சிலையை எடுத்துச்

சென்று ஊர்வலத்திற்குப் பிறகு சிலையைச் சன்னதியில் வைத்துவிட வேண்டும் என்ற ஒப்பந்தம் செய்யப்பட்டது. அந்த ஒப்பந்தம் இன்று வரை கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

*அம்பாயிரம்மனுடைய அமைப்பும் கோவிலும் :* தற்போது அம்பாயிரம்மனுடைய சிலை வடக்கு நோக்கி ஆற்றைப் பார்த்துக் கொண்டிருப்பதாக வைக்கப்பட்டு கோபுரம் எழுப்பப்பட்டுள்ளது. அம்பாயிரம்மனுக்கு ஊஞ்சல் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அம்பாயிரம்மனுக்குத் திருவிழா முடிந்ததும் ஊஞ்சலில் அவரை வைத்து ஆட்டிவிட்டுத்தான் சிலையைச் சன்னதியில் வைக்கும் பழக்கம் அந்நாளிலேயிருந்து கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. கோவில் முழுவதும் ஏறக்குறைய சிறியதும் பெரியதுமாகக் குதிரைவாகனம் காணப்படுகின்றன. அம்பாயிரம்மனுடைய வாகனம் குதிரையாம். அதனால் தன் விருப்பமும், தொழிலும் விருத்தியடைந்தால் உனக்குக் குதிரை வாகனம் செய்து வைக்கிறேன் என்று வேண்டிக்கொள்பவர் பலர். அது நிறைவேறிய உடன் குதிரை வாகனம் செய்து வைத்துள்ளனர். இதை வைத்துப்பார்க்கும் போது அவருடைய வலிமையும், பக்தியும் அறிய முடியும் என்று நம்புகின்றனர்.

கோவிலில் ஆயிரக்கணக்கான வேல்கம்பிகள் காணப்படுகின்றன. ஆலமரத்தில் துணியில் கட்டிய மூட்டைகள் ஆயிரக்கணக்கில் தொங்கி கொண்டிருக்கின்றன. மற்றபடி கோவிலில் சுரங்கப்பாதை ஒன்று இருப்பதாக அந்தக்காலப் பெரியோர்கள் சொல்கிறார்கள். ஆனால் தேடிப்பார்த்த போது சுரங்கம் இருந்த சுவடு மறைந்து கிடந்தது. ஒருமுறை அம்பாயிரம்மன் கோபக்கனல் தெறிக்க காணப்பட்டாராம். காரணம் என்னவென்று சாமியடிகளை வைத்துக் கேட்டபொழுது இரண்டு வருடமாகத் திருவிழா கொண்டாடததனால் இந்தமுறை திருவிழா கண்டிப்பாக கொண்டாடணும் : திருவிழா முடிந்ததும் எனக்கு ஏழு நிறைமாத கர்ப்பிணிகளைப் பலிகொடுக்க வேண்டும் என்று கோபத்துடன் கேட்டாராம். இதனால் ஊர்மக்கள் அனைவரும் பயந்து காணப்பட்டனராம். என்ன செய்வது என்று யோசித்து மூன்று ஊர்ப் பொதுமக்களும், பெரியோர்களும் பக்தியில் ஊறிய சாமியடிகளும் ஒரு முடிவுக்கு வந்தனர். அதன்படி அம்பாயிரம்மனுடைய சிலையைச் சுரங்கப்பாதையில் போட்டு மூடிவிட்டனராம். தற்போது இருக்கும் சிலை, அதனைப் போல் செதுக்கிய மற்றொன்றாம்.

*அம்பாயிரம்மன் திருவிழா :* அம்பாயிரம்மனுடைய திருவிழாவை மூன்று ஊர்களும் சேர்ந்து தேர்த் திருவிழாவாக நடத்தி வழிபடுகின்றனர்.

அந்தத் திருவிழாவில், மூன்று ஊர்களின், படையல் தட்டுகளும் வந்தால்தான் தேர் இழுக்கப்படுகிறது. இல்லையென்றால், இந்த ஊர்களிடையே பிரச்சனை எழுந்து விடுகிறது. இது அடிக்கடி நடக்கக்கூடிய ஒன்றாம், தேர்ச்சங்கலியைப் பிடிப்பதற்கு முன்பு ஒரு ஆட்டுக்கிடா வெட்டப்படுகிறது. திருவிழா வெகு விமர்சையாக கொண்டாடப்படுகிறது.

ஒருமுறை பெரும்பஞ்சம் ஏற்பட்டு மக்கள் ஊரைவிட்டு போய்க் கொண்டிருந்தனர். என்ன செய்வதென்று ஊரார் கலந்து பேசி பெரும் பஞ்சத்திலும் திருவிழா கொண்டாட முடிவு செய்தனர். திருவிழா முடிந்து அம்பாயிரம்மனுடைய வாகனம் ஆற்றில் இறங்கிய போது பெருமழை பெய்து மக்கள் மகிழ்ச்சியில் திளைத்தனர். இதுபோன்ற நிகழ்வுகள் அவ்வப்போது நிகழும். அம்பாயிரம்மன் கோவிலில் தினமும், ஏராளமானோர் வந்து வழிபடுகின்றனர். வெளியூரில் இருந்து லாரிகளிலும், வாகனங்களிலும் வந்து செல்கின்றனர். சுற்றுலா வருபவர்களும் அம்பாயிரம்மனை தரிசித்து செல்கின்றனர். தினமும் ஒரு ஆட்டுக்கிடாவாவது வெட்டுவர். இங்கேயே சமைத்து அனைவரும் சாப்பிட்டுச் செல்வர். மக்களின் வசதிக்கேற்ப கிணறு ஒன்று வெட்டப்பட்டு வருவோர், போவோருடைய தாகம் தீர்த்துக் கொண்டிருக்கிறது.

*திருவிழா முடிவுகள் :* அம்பாயிரம்மனின் திருவிழா முடிந்து கடைசி நாளில் எருமைகிடா வெட்டும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. இது பழைய கால ஐதீகம் என்று பெரியவர் ஒருவர் சொல்கிறார். எருமைகிடா வெட்டுதல் நிகழ்ச்சிக்குப் பல்லாயிரக்கணக்கான மக்கள் வருவர். கோவில் வாசற்படியில் எருமைகிடா நிறுத்தி வைக்கப்படும். எருமைக்குப் பல்வேறு அபிஷேகம் நடத்தப்படும். பின்னர், மாட்டை தெற்கு வடக்காக நிறுத்தி வைக்கப்பட்டு, எருமைக்கிடாவை வெட்டுவர். இதிலும் ஒரு சம்பிரதாயம் கடைப்பிடிக்கின்றனர். மூன்று ஊரிலும் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆளுக்கு ஒரு வெட்டாக எருமைக்கிடாவை வெட்டுவர். வெட்டிய மாட்டைப் படியில் இருந்து உருட்டி விட்டுக் கீழே ஆற்றில் குழிதோண்டப்பட்டு அதில் புதைக்கப்படும். அத்தோடு அம்பாயிரம்மனுடைய திருவிழா முடியும்.

நாட்டுப்புற மக்களின் நம்பிக்கையில் பெயரெடுத்த அம்பாயிரம்மன் பல்வேறு வகையான சிறப்புக்களைப் பெற்று தனக்கென ஒரு சக்தியை மக்களிடையே பெற்று வைத்துள்ளார் என்று வழிபடும் மக்களும் நம்புகின்றனர் : தெரிவிக்கின்றனர்.

# கீரம்பூர் எடுக்கை அம்மன் வழிபாடு

**முனைவர் எஸ். நிர்மலா**, எம்.எ.,எம்.ஃபில்.,எம்.எட்.,பிஎச்.டி.,
*நாமக்கல் கவிஞர் அரசு மகளிர் கலைக் கல்லூரி, நாமக்கல்.*

## முன்னுரை

இந்திய பண்பாட்டில் மிகப் பழங்கலம் தொட்டே நாட்டுப்புற மக்களால் நாட்டுப்புறத் தெய்வ வழிபாடு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. நாட்டுப்புற மக்கள் மிகுந்த நம்பிக்கையுடனும், பயவுணர்வுடனும் நன்றி உணர்வோடும் வழிபட்டு வருகின்றனர். கிராம மக்களின் உண்மை வாழ்வை பிரதிபலிப்பனவாக நாட்டுப்புறத் தெய்வங்கள் அமைந்துள்ளன. வளமை தருவதாகவும், பிறவி அளிக்கும் தனித்தன்மை கொண்டவையாகவும் உள்ளவை பெண் தெய்வங்கள். அவற்றிற்கான வழிபாடுகள் மனித உணர்வில் தோன்றிய வகையில் நடைபெறும். வாய்மொழிக்கதைகளும் அவற்றிற்கு இருப்பதுண்டு. பூமியில் வாழ்வனவாக அவை கருதப்படுவன. குழந்தைகளைக் காக்கும் சக்திவாய்ந்தவையாகவும் அவை நம்பப்படுகின்றன. இத்தகைய பொதுப்பண்புகள் அனைத்தும் கொண்ட நாட்டுப்புறத் தெய்வமாக எட்டுக்கை அம்மனை வழிபட விரும்பிய மக்கள் அதற்கு ஏற்றதான ஒரு கதையினை ஏற்றி நம்பிக்கையோடு வழிபட்டு வருவதை இக்கட்டுரை உணர்த்துகின்றது.

## வழக்காற்றுக் கதை

நாமக்கல்லில் இருந்து பரமத்தி செல்லும் வழியில் சகீரம்பூர் என்ற கிராமத்தில் எட்டுக்கை அம்மன் கோவில் உள்ளது. அவ்எட்டுக்கை அம்மனுக்குக் குழந்தைகள் இல்லை. குழந்தைகள் மேல் அளவு கடந்த ஆசை கொண்ட அவள் தனது சகோதரியான செல்வி அம்மன் என்ற (தெய்வம்) தனது சகோதரியின் இல்லத்திற்குச் சென்று அவளது குழந்தைகளையாவது கண்டு வரலாம் என்று எண்ணுகின்றாள். குழந்தைகளைப்பார்க்க வெறுங்கையோடு செல்லக் கூடாது என்று அக்குழந்தைகளுக்குப் பிடித்த தின்பண்டங்கள் துணிமணிகளை வாங்கிக் கொண்டு சகோதரியின் இல்லம் செல்கிறாள். அதனை அறிந்த செல்வி அம்மன் மலடியான தன் தங்கை தனது குழந்தைகளைப்

பார்த்தால் குழந்தைகளுக்கு ஏதாவது தீங்கு வந்துவிடும் என்று அஞ்சுகின்றாள். அதனால் தன் குழந்தைகளை விரைவாக அழைத்து வந்து பெரிய சாடு (கூடை) போட்டு மூடி வைத்து விடுகின்றாள். எட்டுக்கை அம்மன் செல்லி அம்மன் வீட்டிற்குள் வந்து அந்தச் சாட்டின் மேலேயே அமர்ந்து கொண்டு, எங்கே குழந்தைகள்? என்று கேட்டாள். அதற்குச் செல்வி ***அவர்கள் அடுத்த தெருவில் விளையாடச் சென்று விட்டார்கள்*** என்கிறாள். தன் சகோதரி பொய் கூறுகின்றாள் என்பதை அவள் முகக்குறிப்பை வைத்தே உணர்ந்த எட்டுக்கை அம்மன் ***ஏன் இவ்வாறு பொய் கூறுகின்றாய்?*** என்று செல்வியிடம் கேட்கிறாள். ***அவளும் இல்லை, இல்லை நான் பொய் சொல்லவில்லை, அவர்கள் விளையாடத்தான் சென்றுவிட்டார்கள்*** என்று கூறுகிறாள். அதைக் கேட்டு கோபம் அடைந்த எட்டுக்கை அம்மன், உடனே எழுந்து தனது இல்லத்திற்கு வந்துவிடுகிறாள். எப்படியோ ஒருவழியாக அந்த மலடி சென்று விட்டாள் என்று மகிழ்ந்த செல்வி, தனது குழந்தைகளை மூடி வைத்திருந்த சாடை நீக்கினாள். மூடி வைக்கப்பட்டு இருந்த அந்தக் குழந்தைகள் இறந்து கிடந்தன. அதைக் கண்ட செல்வி தன் தவறு உணர்த்து வேதனையில் துடித்தாள். மறுகணமே எட்டுக்கை அம்மனிடம் சென்று தன்னை மன்னிக்குமாறும், குழந்தைகளைக் காக்குமாறும் வேண்டினாள். இயற்கையிலேயே நற்குணமும், அன்பும் நிறைந்த எட்டுக்கை அம்மன் கோபத்தை விட்டுவிட்டு, தன் சகோதரியை மன்னித்து, குழந்தைகளை உயிர்ப்பிக்கின்றாள். ***நான் எப்போதும் கோபமே கொள்ள மாட்டேன். உன்னிடம் கோபம் கொண்டவள் போல நடித்தேன். அப்போதுதான் நீ திருந்துவாய் என்று அவ்வாறு நடந்து கொண்டேன். அதனால் நீயும் என்னை மன்னித்துவிடு*** என்றாள்.

நீ எப்போது என்னை *மலடி* என்ற நினைத்தாயோ அப்போதே நான் தீர்மானித்து விட்டேன். இவ்வுலகில் உள்ள அனைவரும் என் பிள்ளைகள். என்னைப் பார்க்க வரும் அவர்களுக்கு வடக்குப்பார்த்து வீற்றிருந்து நான் அருள் செய்வேன் என்றாள். ***எனக்கு வெள்ளாட்டு, சேவல், பன்றி போன்ற உயிர்களைப் பலி கொடுத்து பூசை செய்ய வேண்டாம். எனக்கு மிகவும் பிடித்தது வெண் பொங்கலும் (பச்சரிசி) பச்சைப் புளியில் கரைத்து வைத்த இரசமும், இவற்றை வைத்து படைத்தால் நான் மிகவும் மகிழ்ச்சிஅடைந்து அவர்கள் வேண்டியதை அருளுவேன்*** என்றாள்.

## வழிபாடு

அன்று முதல் இன்று வரை அவ்வம்மனைத்தேடி வந்து அவளுக்குப் பிடித்தவற்றைப் படைப்பவர்களுக்கு வேண்டியதைத்

தருகின்றாள் என்று அப்பகுதிமக்கள் நம்புகின்றனர். எலுமிச்சை மாலை அவள் விரும்பி அணிவதால் அதைப்போடுபவர்கள் தங்கள் குறை நீங்குவதாக எண்ணுகின்றனர். மாலை அணிவிக்க வசதியில்லாவர்கள் ஒரு பழத்தையாவது முன்னே வைத்தால் போதும் அம்மன் மகிழ்ந்து வரம் தருவாள் என்கின்றனர். அவள் சிறப்பை உணர்ந்த அவ்வூர்மக்கள் அவ்வம்மனுக்குக் கோவில் அமைத்து சீரும் சிறப்புமாக திருக்குடமுழுக்கு நடத்தினர். அந்நிகழ்ச்சிகளுக்கு 2250 மூட்டை அரிசி நன்கொடையாக வழங்கப்பட்டது அவ்வம்மனின் சிறப்பை வெளிக்காட்டுவதாக உள்ளது. இக்கோவிலைச் சுற்றி மா, தென்னை, கொய்யா, புலி வேம்பு என பலவகையான மரங்களும், மலர்ச்செடிகளும் நிறைந்துள்ளன. இக்கோவிலில் தினமும் பகல் 12 மணிக்கு ஊரே கேட்கும் அளவிற்கு மணி ஓசையுடன் அடிக்கப்பட்டு சிறப்பாகப் பூசை நடைபெறுகிறது.

## பண்பாட்டுப் பிரதிபலிப்பு

எட்டுக்கை அம்மன், செல்வி அம்மன்களைப் பற்றிக் கூறப்படும் இக்கதை நிகழ்ச்சிகள் அப்பகுதி மக்களின் பண்பாட்டை, பழக்க வழக்கங்களைப் பிரதிபலிப்பனவாக உள்ளன. உறவினர் இல்லம் செல்வோர், குறிப்பாகக் குழந்தைகள் இருக்கும் இல்லத்திற்குச் செல்வோர் வெறுங்கையுடன் செல்லமாட்டார்கள். அவர்களுக்கு விருப்பமானவற்றை வாங்கிச் செல்வர். அடுத்து பிள்ளை பெறாத பெண்ணை உலகம் மலடு, மலடி என்று கூறிச் சமுதாய ஒதுக்கல் செய்வதும், அவள் கண்களில் குழந்தைகள் பட்டால் நோய்பட்டுப் போகும் என்பதும் இன்றும் வழக்கமாக உள்ளது. அபிதான சிந்தாமணி ஆசிரியரும் பெண் மலட்டை, ஆதி மலடு, காக்கை மலடு, வாழை மலடு, கருப்பமலடு என நால்வகைப்படுத்துகின்றார். ***மலடி மலடின்னு மானிடர்கள் ஏசாதே மலட்டுக் குறைநீக்க வந்த மாணிக்கமே*** என்ற தாலாட்டுப்பாடல், மலடானவர்களின் வேதனையைப் பகர்கின்றது. பிள்ளைப் பெறாத பெண்கள் விரதம் இருந்தும், தவமிருந்தும், மடிப்பிச்சை ஏந்தியும் பிள்ளைவரம் கேட்டனர்.

***சீரங்கமாடி திருப்பாற் கடலாடி***
***மாமங்கமாடி வடக்கே தவமிருந்து - என்கண்ணே***
***அள்ளி மிளகு தின்னு***
***அறுபது நாள் நோம்பிருந்து***

என்ற பாடல் நோன்பு நோற்றதையும், ***சித்தாறு பத்தி சிறுகடலும் பத்தி பத்தாத மங்கைக்கு வரம் வாங்கிப்பிறந்தவனே*** என்று வரம் பெற்று

பிறந்ததையும், *கட்ட கண்ண வந்தவளோ - என் பட்டுக் குறைத் தீர்த்தவளோ கேளாத என் செவியும் என்தாளா திறந்தவளோ* என்று குறைதீர்க்க வந்ததையும்,

*காணிக்கைக் கொண்டு என் கண்ணான சாமி*
*கடைத்தெரு போகையிலே*
*மாணிக்கமுனு - என்கண்ணே*
*மடிப்பிச்சைத் தந்தாளோ*

என்று மடிப்பிச்சைஏந்தி பிள்ளைப் பெற்றதையும் இப்பாடல்கள் உணர்த்துகின்றன. பெற்ற பிள்ளையைக் கண்ணேறு வாராமல் காத்தனர். அத்தகு சீர் இழந்தவளை உலகம் ஒதுக்கியது.

## முடிவுரை

ஒவ்வொரு நாட்டுப்புறக் கதையும் தோன்ற அடிப்படைக் காரணங்கள் உண்டு. மக்களிடம் தோன்றும் அச்சவுணர்வும், இயற்கை நிகழ்ச்சிகளுக்குக் காரணம் காணும் முயற்சியும், வாழ்வியலின் குறிப்பிடத்தக்க சில நிகழ்ச்சிகளால் மக்கள் மனதில் நேர்ந்த பாதிப்பும், உயர்வு தாழ்வு மனப்பான்மையும், அறமுரைத்தலுமே கதை தோன்றக் காரணங்களாக அமைகின்றன என்று ஆய்வியல் அறிஞர்கள் கூறுவர். அவ்வகையில் *பொய் சொன்னால் பாதிப்பு உண்டு,* தவற உணர்ந்தவன் மன்னிக்கப்படுவான். *நம்பி வந்தோர்க்கு நன்மை கிட்டும்* என்ற நீதிகளை இக்கதையின் வழி இப்பகுதி மக்கள் உணர்த்துவதை உணர முடிகிறது. அம்மனின் சக்தியாக அவற்றை ஏற்றிக் கூறும்போது மக்கள் மனதில் உண்டாகும் பயத்துடன் கலந்த பத்தியானது அவர்களை அவற்றைக் கடைபிடிக்கத்தூண்டுகிறது.

## துணைநூல்கள்


1. நாட்டுப்புறவியல் ஆய்வுகள், களம் 2, டிசம்பர் - 1996.
2. நாட்டுப்புறவியல் ஆய்வாளர் மன்றம், தஞ்சை, டிசம்பர் 1999.
3. *சக்திவேல், சு.:* (பதி) நாட்டுப்புறவியல் ஓர் அறிமுகம், தமிழ்ப்பல்கலைகக்கழம், தஞ்சை 1996.
4. *சத்தியமூர்த்தி.அ.ம. :* தமிழ் நாட்டுப்புறக் கதைகள் ஓர் ஆய்வு, மகேந்திரன் பதிப்பகம், டிசம்பர் 1997. அம்மாசத்திரம், தஞ்சை.
5. தன்னனானே : சிறப்பிதழ், 12, 13, காவ்யா, ஜனவரி - மே 1999,
6. *நாசீர் அலி.மீ. :* நாட்டுப்புப்பண்பாட்டியல், இக்ரஹ் பப்ளிகேஷன்ஸ், டிசம்பர் 1987, கே.கே. நகர் திருச்சி.

# கருப்பண சாமி வழிபாட்டு மரபுகள்

**பா. நேருஜி**,எம்.ஏ.,எம்.ஃபில்.,
*கிராமியப் பல்கலைக்கழகம், காந்திகிராமம்.*

நாட்டுப்புற மக்கள் ஆண் காவல் தெய்வங்களான அய்யனார், கருப்பணசாமி, முனியப்பன், மதுரைவீரன் போன்ற தெய்வங்களை வழிபடுகின்றனர். பெண் தெய்வங்களான காளியம்மன், பகவதியம்மன், மாரியம்மன், முத்துமாரியம்மன், முத்தாசலம்மன் போன்ற அம்மன் தெய்வங்களை வழிபடுகின்றனர். ஆண் காவல் தெய்வங்கள் ஊரின் எல்லைப்புறங்களிலும் பெண் தெய்வங்கள் ஊருக்குள்ளேயும் இருந்து மக்களைக் காப்பவைகளாக உள்ளன என்று கூறப்படுகின்றது. இத்தெய்வங்களுக்கு விழாக்கள் எடுத்தும் காணிக்கைகள் செலுத்தியும் வழிபடுவதனால் அவை மகிழ்ச்சியடைந்து மக்களைக்காக்கும் என்று நம்பப்படுகின்றது. இத்தகைய தெய்வங்கள் அனைத்தும் சிறு தெய்வங்கள் எனப்படுகின்றன. இக்கட்டுரை மேட்டுக் கருப்பண சுவாமி வழிபாட்டு முறைகள், நேர்த்திக்கடன் செலுத்தும் முறைகள் மற்றும் வழிபடும் மக்களிடையே காணப்படும் நம்பிக்கைகள் போன்றவைகளைக் களஆய்வின் மூலம் பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் எடுத்துக் கூற முற்படுகின்றது.

சாணார்ப்பட்டி கிராமத்தின் வடக்குத் திசையில் சுமார் ஒரு கிலோ மீட்டர் தொலைவில் மேடானபகுதியில் கன்னிமார் கோயிலுக்கு அடுத்ததாக கருப்பணசாமி கோயில் காணப்படுகின்றது. இக்கோயில் வளாகத்திற்குள் கருப்பணசாமி கோயிலுக்கு வலது புறத்தில் மதுரைவீரன் கோயில் உள்ளது. கோயில் கிணறு ஒன்றும் காணப்படுகின்றது. தற்போது சாணார்பட்டி ஊராட்சி ஒன்றிய பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 1997-98 ஆம் வருடத்தி சமுதாயக் கூடமும் பந்தி வைக்கும் (இடமான) சிமெண்ட் தளமும் பிளாஸ்டிக் குடிநீர்த் தொட்டியும் அமைக்கப்பட்டுள்ளன. கோயில் பல்வேறு மரங்களுடன் இயற்கையான சூழலில் காணப்படுகின்றது.

## கோயில் வரலாறு

கருப்பண சுவாமியைக் கேரளத்திலிருந்து சமார் 500 வருடங்களுக்கு முன்பு சாணார் என்ற மரம் ஏறும் நாடார்களால்

கொண்டுவரப்பட்டு வீரசின்னம் பட்டி என்ற கிராமத்திற்குச் செல்லும் பாதை அருகில் வைத்து வழிபட்டதாகக் கூறுகின்றனர். அவ்வழியாகச் செல்லுபவர்கள் அவ்விடத்தில் செருப்பு அணிந்து செல்லக் கூடாது, துண்டைத் தோளில் போட்டுக் கொண்டும், கையை வீசி நடந்தும் செல்லக் கூடாது என்றும் மேலும் பெண்கள் அவ்வழியில் செல்ல அஞ்சியதாகவும் கூறப்படுகின்றது. இதனால் அவ்வூர் மக்கள் பூசாரியிடமும், ஊர்ப் பெரியோர்களிடமும் முறையிட்டுள்ளனர். பின்னர் சாமியாடி தற்போதைய இடத்தினை அந்நாளில் தேர்வு செய்ததாகக் கூறப்படுகின்றது. அந்நாளில் சுட்டகளிமண்ணால் செய்யப்பட்ட சிலையே தெய்வமாக இருந்ததாகவும் தற்போது உக்ரானத்திற்குள் (கருவறை) இருக்கும் சிலை 1957 ஆம் ஆண்டு சிமெண்டால் செய்யப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. எனிலும் சிலை செய்து வழிபடும் மரபு மாறாது காணப்படுவதை அறிமுடிகின்றது (தகவல் வேணுகோபால்).

## கோயில் திருவிழா

கோயில் திருவிழா மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை ஆடிமாதக் கடைசி நாளன்று கொண்டாடப்படுகின்றது. ஊர்ப்பெரியோர்கள் சாமி கும்பிட ஆனி மாதத்தில் கலந்து பேசி முடிவு எடுகின்றனர். இந்துக்கள் அனைவரிடமும் பணம் வசூலிக்கப்படுகின்றது. குடும்பத் தலைவருக்கு விதிக்கப்படும் வரி ***ஏருவரி*** எனப்படுகின்றது. அதே குடும்பத்தில் திருமணமான ஆண் வாரிசுகளுக்கு ஏருவரியில் பாதி வசூலிக்கப்படுகின்றது. மேலும் மற்றவர்களிடமிருந்து நன்கொடையாகவும் பணம் பெறப்படுகின்றது. ஆடி மாதம் முதல் வாரத்தில் களிமண் சிலை செய்யும் பணி ஆரம்பிக்கப்படுகிறது. இந்த ஆண்டு களிமண் சாமி சிலைசெய்வதற்கு திண்டுக்கல் மாவட்டம் முளையூர் ன்ற கிராமத்திலிருந்து ஐந்து பேர் அழைத்து வரப்பட்டனர். சிலை செய்பவர்கள் சிறிது களிமண்ணைத் தங்களோடு கொண்டு வந்து அதனை ஊர்ப்பெரியோர்கள் பூசை செய்து வழிபட்டுத் தொட்டுக் கொடுத்த பின்னர் அதனை மூலமாகக் கொள்கின்றனர். பின்னர் தேவையான களிமண்ணை அருகிலுள்ள குளத்திலிருந்து எடுத்துப் பயன்படுத்துகின்றனர். ஊரின் பொதுக்கோயிலான காளியம்மாள் கோயிலில் தென்னைக் கீற்றுத் தட்டிகளால் அமைக்கப்பட்ட மறைவிடத்தில் சிலை செய்யும் பணி நடைபெறுகின்றது. ஐந்து நபர்களும் அங்கேயே தங்கி இரவு பகலாகப் பணியில் ஈடுபடுகின்றனர். இவர்களுக்குக் கூலியாக ரூபாய் மூவாயிரத்து ஐநூறு ஊர்ப்பணம் கொடுக்கப்பட்டது. (தகவல் : வேணுகோபால்)

***சிலை செய்தல் :*** மேட்டுக்கருப்பணசாமி, ஆற்றுக்கருப்பணசாமி, கன்னிமார்சாமி, இரு குதிரைகளின் சிலைகள் ஊர்ப்பொதுவில் செய்யப்படுகின்றன. குதிரைகள், மாடு, நாய், பெண்ணின் சிலைகள் போன்றவை நேர்த்திக்கடனுக்காகத் தனிப்பட்டவர்களால் செய்யச் சொல்லப்பட்டு அதற்கான செலவை அவர்களே கொடுத்து விடுகின்றனர். சிலையின் கால் பகுதி, வயிற்றுப்பகுதி, மார்புப்பகுதி, தலைப்பகுதி போன்றவற்றைத் தனிதனியாகச் செய்து அவற்றை ஒன்றாகச் சேர்க்கின்றனர். பதினைந்து அல்லது இருபது நாட்களுக்குப்பின்னர் பச்சை மண் சிலைகள் அனைத்தும் வெளிப்புறம் வைக்கப்பட்டு வைக்கோலால் மூடி தீ வைத்துச் சுடப்படுகின்றன. பின்னர் மீண்டும் சிலைகள் உள்ளே வைத்துச் சுண்ணாம்பால் வெள்ளையடிக்கப் படுகின்றன. அதன் மேல் பல வர்ண இரசாயனச் சாயங்கள் பூசப்படுகின்றன. கருப்புசாமியின் கண் பகுதியில் விழிமட்டும் வரையப்படாது வெள்ளைத் துணியால் கட்டிவிடுகின்றனர். பின்னர் அனைத்துச்சிலைகளும் வெள்ளைத் துணியால் மூடப்பட்டு முக்கிய சாலையின் ஒதுக்குப்புறத்தில் பந்தல் அமைக்கப்பட்ட பகுதியின் கீழ் புது மணல் பரப்பப்பட்ட இடத்தில் வைக்கப்படுகின்றன. பூசைகள் செய்தபடியே சிலைகளின் துணிகள் அகற்றப்படுகின்றன. கருப்பணசாமியின் கண் பகுதியின் கருவிழிமட்டும் சிலை வடித்தவரால் கறுப்பு நிறத்தில் வரையப்படுகின்றது. இதனை கண் திறப்பு செய்தல் என்றும் இதன்மூலம் தெய்வம் உயிரூட்டம் பெறுவதாகக் கூறுகின்றனர். பழைய சிலையின் தெய்வ சக்திகள் அனைத்தும் இத்தெய்வத்திற்கு வந்து விடுவதாகவும் சென்ற முறை செய்த சிலை சக்தியை இழந்து விடுவதாகவும் கூறப்படுகின்றது. ஊர் மக்கள் அனைவரும் பூசை செய்து வழிபடுகின்றனர். பூசைப் பொருட்களாக மலர் மாலை, தேங்காய், வாழைப்பழம், வெற்றிலை, பாக்கு, பத்தி, சூடம் சாம்பிராணி போன்றவற்றைத் தாம்பாளத்தட்டில் கொண்டு சென்று வழிபடுகின்றனர். சாமி சிலைகளை வாகனத்தில் வைக்கும் முன்பு ஆடு (கிடா) வெட்டப்படுகின்றது. இதற்குத் ***திட்டி கிடா*** எள்கின்றனர். செல்லும் வழியில் வாழைப்பழம், சாக்லேட் மிட்டாய், மாங்காய், நிலக்கடலை போன்றவற்றைச் சூறையிடுகின்றனர்.

***பிறநாட்களில் பூசைகள் :*** ஒவ்வொரு வாரமும் செவ்வாய், வெள்ளி ஆகிய தினங்களில் பூசை செய்யப்படுகின்றது. தீபாவளி, பொங்கல் கார்த்திகை, மகாசிவராத்திரி, மார்கழிமாத விழா போன்ற நாட்களிலும் சிறப்பு வழிபாட்டுப் பூசை நடைபெறுகின்றது.

*நேர்த்திக்கடன்கள் :* மக்கள் தங்களைத் துன்பங்களிலிருந்து காத்துக் கொள்ளும் பொருட்டு நேர்த்திக்கடன் செலுத்துகின்றனர். நேர்த்திக்கடன் செலுத்தும் பொருட்களாக குதிரை சிலைகள், வெண்கல மணிகள், அரிவாள்கள், முடியைக் காணிக்கையாகச் செலுத்துதல், மாலைவாங்கிப் போடுதல், பொங்கல் வைத்துப்படைத்தல் பூசைக்குப் பயன்படுத்த பணம் கொடுத்தல் போன்றவை காணப்படுகின்றன.

*வழிபாட்டு நம்பிக்கைகள் :* தெய்வ வழிபாடுகள் மக்களின் நம்பிக்கைளின் அடிப்படையிலேயே நிகழ்த்தப்படுகின்றன. கருப்பணசாமி கோவிலில் பூப்போட்டுப் பார்த்தல், பல்லியிடம் சகுனம் கேட்டல், சோழி போட்டுப்பார்த்தல், துண்டால் (துணி) மந்திரித்தல், சத்தியம் செய்தல், அருள் வாக்குக் கேட்டல் போன்றவற்றில் மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளனர்.

*பூப்போட்டுப்பார்த்தல் :* கருப்பணசாமி கோயிலில் மக்கள் தாம் எண்ணிய செயலை நிகழ்த்தலாமா? வேண்டாமா? என்பதனை அறிய இசைவு கேட்பதாக இச்செயல்பாடு அமைகின்றது. இரு காகிதங்களை எடுத்து அவற்றுள் ஒன்றில் சிவப்பு நிறமலரையும் மற்றொன்றில் வெள்ளை நிறமலரையும் போட்டு மடித்து யாராவது ஒருவரை எடுக்கச் செய்கின்றனர். சிவப்பு மலர் வந்தால் இசைவு இல்லை என்றும் வெள்ளி நிறமலர் வந்தால் இசைவு கிடைத்துவிட்டதாகவும் நம்புகின்றனர். இதே போன்று சீட்டுப் போட்டுப்பார்த்தல் அல்லது திருவுளச்சீட்டுப் போட்டு பார்த்தலும் உள்ளது. ஆனால் இவற்றின் உள்ளே இசைவு, இல்லை என்ற வாசகம் ஒவ்வொன்றிலும் எழுதப்பட்டு சுருட்டிப்போட்டுத் தேர்ந்தெடுக்கப்படுகின்றது. தற்பொழுது மலர்களுக்குப் பதிலாகக் காகிதங்களில் திருநீறு (வெண்மை) குங்குமம் (சிவப்பு) போன்றவை மடித்துப் போடப்பட்டுத் தெரிவு செய்யப்படுகின்றது. (தகவல் : பாலசுப்பரமணி).

*பல்லி சகுனம் கேட்டல் :* சகுனம் பார்த்தல் முறை மக்களிடம் காணப்படுகின்றன. கோயிலில் பல்லி ஒலி எழுப்புதலை நல்ல சகுனம் என்கின்றனர். கோயில் மணிக்கு அருகிலிருந்தும், சாமியின் மேற்பகுதியிலும், அல்லது ஏதாவது ஒரு திசையிலிருந்தும் ஒலி எழுப்பினால் சாமி உத்திரவு கொடுத்து விட்டதாக மகிழ்கின்றனர். சாமியை வழிபட்டு பின்னர் பல்லி சகுனம் சொல்ல வேண்டும் என்று சிறிது நேரம் கோவிலில் அமர்ந்திருக்கின்றனர். பல்லி சகுனம் கிடைத்து விட்டால் எண்ணிய காரியம் நிறைவேறும் என்று நம்புகின்றனர். (தகவல் : கருப்பையா)

***சோழி போட்டுப் பார்த்தல் :*** சோழி போட்டுப் பார்த்தல் அல்லது முத்துப்போட்டுப் பார்த்தல் என்று கூறுகின்றனர். கோவில் பூசாரி பன்னிரண்டு சோழிகளைக் குலுக்கிப் போட்டு அவற்றுள் மல்லாந்து விழும் எண்ணிகையைப் பொருத்து பலன்களைக் கூறுகின்றார். பனிரெண்டு எண்ணிக்கை என்பது பனிரெண்டு ராசிகளுக்கு இணையாகப் பயன்படுத்துவதாகக் கூறுகின்றார். மூன்று முறை குலுக்கிப்போட்டுப் பலன் கூறப்படுகின்றது. பலன்களை வாய்மொழியாகக் கூறுகின்றனர். இதனை மக்கள் பெரிதும் நம்புகின்றனர். (தகவல் : வேணுகோபால்)

***துண்டால் மந்திரித்தல் :*** மந்திரங்களை ஓதியபடியே துண்டு என்னும் துணியால் மந்திரிக்கப்படுகிறது. இதனால் தீய சக்திகள் விலகிவிடுவதாக நம்பப்படுகின்றது. பூனை, நாய், இருட்டு பாம்பு, தீய கனவு, தூக்கமின்மை, பார்வைக் கொப்பளம், பாம்புக்கடி, தேள்கடி, பூரான் படி, நாய்கடி மற்றும் வண்டுக்கடி, போன்றவைகளுக்கு பூசாரி துண்டால் மந்திரிக்கின்றார். பிறகு திரு நீறு பூசிவிடப்படுகின்றது. மனிதர்களுக்கு மட்டுமின்றி விலங்குகளுக்கும் மந்திரித்து அவைகுடிக்கும் நீரில் திருநீறைத் தூவி விடுகின்றனர். இதனால் நன்மைகள் விளையும் என்று நம்பப்படுகின்றது. (தகவல் : முனியசாமி).

***சத்தியம் செய்தல் :*** கருப்புக் கோவிலில் பொய்ச் சத்தியம் செய்தால் ஏதாவது தீங்கு விளையும் என்று நம்புகின்றனர். எனவே பேசித் தீர்க்க முடியாத வழக்குகள் கோவிலில் சத்தியம் செய்தலின் மூலம தீர்க்கப்படுகின்றது. சூடம் ஏற்றி வழிபட்ட பின்னர் சூடத்தை அணைத்துச் சத்தியம் செய்தலும், தரையில் அடித்து சத்தியம் செய்தல் முறையும் காணப்படுகின்றது. கருப்பணசாமி கேட்டுக் கொடுக்கும் துடியான தெய்வம் என்று நம்பப்படுகின்றது.

***வாக்குக் கேட்டல் :*** கருப்பணசாமி கோயிலுக்கு வழிபடுவோர் தங்களது இன்னல்களைப் பூசாரியிடம் கூறி அதற்கான பலன்களைக் கேட்கின்றனர் திருடுபோன பொருட்கள் மீண்டும் கிடைக்குமா? திருடியவர் யார்? குழந்தைப் பேறு உண்டா? ஆண் குழந்தை பிறக்குமா, கிணறு தோண்டலாமா? கிணற்றில் நீர் ஊறுமா? திருமணம் விரைவில் நடைபெறுமா? அரசங்க வேலை கிடைக்குமா? தொழில் தொடங்கலாமா? போன்ற கேள்விகளுக்கு பூசாரி சாமியைக் கும்பிட்டு பதில் கூறுவதை அருள்வாக்குக் கொடுத்தல் என்கின்றார். திருட்டுப்போன பொருள் மீண்டும் கிடைக்குமா? என்ற கேள்விக்குப் பதிலாக கிடைப்பது சிரமம் ஆனால் அதனைவிடப் பெரிய பொருள் ஏதாவது ஒரு வழியில் கிடைக்கும் என்று கூறினார். சில நாட்களுக்குப் பிறகு லாட்டரி (பரிசு)

சீட்டில் பரிசு விழுந்ததாகப் பொருளைப் பறி கொடுத்தனர். மீண்டும் வந்து கூறியதாகக் கூறப்படுகின்றது. இதன் மூலம் பூசாரியின் வாக்கு பலித்து விட்டதாக நம்பப்படுகின்றது. (தகவல் : வேணுகோபல்).

## தொகுப்புரை

களிமண் சாமி சிலைகள் கோயில் அமைவிடத்தில் வெளிப்புறத்தில் வைத்து வழிபட்ட நிலையில் அவை வெய்யிலிலும், மழையிலும் சிதைந்தது. ஆகவே மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை சிலை செய்து வழிபடும் மரபு காணப்பட்டது. தற்பொழுது உக்ராணத்திற்குள் பாதுகாப்புடன் சாமி சிலை அமைக்கப்பட்ட பின்னரும் சிலை செய்து வழிபடும் மரபு பின்பற்றப்படுகின்றது. சாமி சிலைகளை மாட்டு வண்டிகளில் வைத்துக் கோயிலுக்குக் கொண்டு சென்ற நிலைமாறி டிராக்டர் வண்டிகளில் கொண்டு செல்லும் நிலையைக் காணமுடிகின்றது. சிலைகளுக்கு இயற்கைச் சாயம் பூசிய நிலைமாறி இரசாயன வர்ணக்கலவைகள் பயன்படுத்துவதைக் காணமுடிகின்றது. பொங்கல் வைத்த இடத்திலிருந்து எடுக்கப்பட்ட அடுப்புச் சாம்பல் (தீருநீறு) பிரசாதமாகக் கொடுத்த நிலைமாறி பொட்டலங்களில் வரும் வாசனைத்திருநீறு தற்பொழுது பயன்படுத்தப்படுகின்றது. இதே போன்ற தூள் சாம்பிராணிக்குப் பதிலாக கம்பியூட்டர் சாம்பிராணி பயன்படுத்துவதைக் காணமுடிகின்றது.

அறிவியல் வளர்ச்சியினால் ஏற்பட்டுள்ள பொருட்களின் மாற்றங்களை ஏற்று இம்மக்கள் செயல்படும் நிலையிலும் மேட்டுக் கருப்பணசாமி வழிபாட்டு முறையும், சாமி மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கைகளும் மாற்றங்களும் இன்றி தூய்மையுடன் இன்று வரை கடைப்பிடிக்கப்படுவதைக் காணமுடிகின்றது.

# முனியப்ப சாமி வழிபாட்டுக் கூறுகள்

சு. பழனிக்குமார்,எம்.ஏ.,எம்.ஃபில்.,
*கே.எஸ். ஆர். கலை அறிவியல் கல்லூரி, திருச்செங்கோடு*

## முன்னுரை

தமிழ்மக்களின் பண்பாடு தொன்றுதொட்டு இறை வழிபாட்டுடன் தொடர்பு கொண்டு விளங்குகின்றது. இறைவழிபாடு என்பது மனிதனை நெறிப்படுத்தல், வழிப்படுத்தல் என்ற நிலையில் அமைகின்றது. தமிழக நாட்டுப்புற வழிபாட்டு மரபுகளில் ***முனியப்பன்*** என்ற சிறுதெய்வ வழிபாட்டுக் கூறுகளை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கம்.

## முனியப்ப சாமியின் வரலாறு

சிவபெருமானின் பல்விதத் தோற்ற வடிவப் பெயர்களில் முனீஸ்வரன் என்ற பெயரும் காணப்படுகின்றது. இத்தெய்வம் சிவகணங்களுள் ஒன்றாகக் கருதப்படுகின்றது. சிவபெருமான் வேட்டைக்குத் தன் பரிவாரங்களுடன் செல்லும் பொழுது முனியப்பசாமியும் சடாமுடி தரித்துத் தன் பரிவாரங்களுடன் வேட்டைக்குச் செல்வார் என்பது மக்களின் நம்பிக்கையாகும். ஊரின் காவல் தெய்வமாகவும் கருதப்படுகிறது.

## வழிபாடு

மதுரையிலிருந்து 25 கல் தொலைவில் அமைந்துள்ள திருப்பாச்சேத்திக்கு அருகிலுள்ள பட்டனேந்தல் கிராமத்தில் அமைந்துள்ள முனியப்பசாமியின் கோவில் பற்றியும் வழிபாடு பற்றியும் விளக்கமாகக் காண்போம். இக்கோயில் சுமார் ஐந்நூறு ஆண்டுகள் பழமை வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது.

## கோவில் அமைப்பு

மிகப்பெரிய கோயில் அமைப்போ கோபுரங்களோ, விமானங்களோ இல்லாமல் இருபத்தியொரு பீடங்களையும் சுற்றுச் சுவரையும் பெற்று நடுவில் பெரிய ஆலமரத்தையும்

கொண்டமைகின்றது. கோவிலின் வடக்குப்பகுதி வாயில் பகுதியாகவும் கோவில் எதிரில் குளமும் அமைந்துள்ளன. குளக்கரையில் காவல் தெய்வமாக முனியப்பசாமியும் தென்புறம் பிள்ளையார் கோயிலும் அமைந்துள்ளன. முனியப்பன் கோயிலில் இருபுறம் கற்றூணும் அவற்றை மேற்புறத்தில் இணைக்க ஒரு இரும்புக்கம்பியும் நடுவில் தூண் வடிவத்தில் முனியப்ப சாமியும் வீற்றிருந்து அருள் பாலிக்கின்றார். மேற்புறக்கம்பியில் மக்கள் காணிக்கையாகச் செலுத்தும் மணிகள் சரம்சரமாக அணி செய்கின்றன. இக்கோயிலின் விழா மாசிமாதம் சிவராத்திரியன்று சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

## மகாசிவராத்திரி

தமிழ் மாதங்களில் சிவராத்திரி அனைத்து மாதத்திலும் காணப்படுகின்றது. மாசி மாதத்தில் வரும் சிவராத்திரி சிவனுக்கு உகந்ததாகக் கருதப்படுகின்றது. மாசி மாதத்தில் கிருஷ்ணபட்சமும் சதர்த்தசி திதியும் இரவு பதினான்கு நாழிகைக்கு மேல் உள்ள காலம் சிவராத்திரிக்கு உகந்த காலமாகக் கருதப்படுகின்றது.

இக்காலத்தை மஹாசிவராத்திரி புண்யகாலம் என்று குறிப்பிடுவர். பிரம்மா, விஷ்ணு பொருட்டு சிவமூர்த்தி இலிங்கோற்பவமாய் எழுந்தருளியபோது தேவர்கள் பூஜித்த காலம் என்றும், சிவமூர்த்தியை வேண்டி வரம்பெற்ற நாள் என்றும் சக்திதேவி விளையாட்டாகச் சிவனின் திருநேத்திரங்களை மூடிட உலகங்கள் இருண்டன. அக்காலத்துச் சிவமூர்த்தியை தேவர்கள் வணங்கின காலம் என்றும் பாற்கடலில் தோன்றிய விஷம் பீடிக்காமல் தேவர்கள் இரவு முழுவதும் பூஜித்த காலம் என்றும் கருதப்படும். அன்றைய ராத்திரி அமாவாசை பிரவேசிப்பது பரியாய சிவராத்திரி ஆகும். இவ்விழாவை விழாநிசி (இன்ப ராத்திரி) பிரம சொரூபம், மகாதபசு, பிரகாசம், யஸபீ, சகலபுவனம், சத்தியம் எனவும் கூறுவர். திரயோதசி திதியானது அம்பிகையின் வடிவமாகும். சதுர்த்தசி திதி சிவஸ்வரூபமாகும். அந்தத் திரயோதசி, சதுர்த்தசி இரண்டினுடைய சேர்க்கயையானது சிவயோகத்தைக் குறிக்கிறதென *சுப்பிரபேதாகமம்* கூறுகிறது.

சிவராத்திரி முதற்சாமம் முதல் நான்கு சாமங்களிலும் ஆத்மார்த்த பூஜைகள், தானங்கள் செய்வது சிறப்பாகும். இதனை அனுஷ்டிப்போர் பிரம்மா, விஷ்ணு, விநாயகர், கந்த மூர்த்தியாவர். இம்மைப் பலனாக சற்சனதானாதி, சௌபாக்கிய சம்பத்தும், மறுமைப் பலனாக சுவர்க்காதி போகமும் பெறுவர். இத்தகைய சிவராத்திரியன்று முனியப்பசுவாமியின் வழிபாடுகளும் பூசைகளும் சிறப்புற நடைபெறுகின்றன.

## சிவராத்திரி விழா

முனியப்பசுவாமியின் விழா மூன்றுநாள் விழாவாகச் சிறப்புற நடைபெறுகின்றது. முதல்நாள் மாலை கோயில் பூசாரி ஊர்ப் பொதுக்குளத்துக்கு சுவாமியாடிகள் சூழ முனியப்பசுவாமி உள்ளிட்ட இருபத்தியொரு தெய்வங்களுக்கான ஆடை, ஆபரணங்களுடன் பூஜைப் பெட்டியை எடுத்துச் சென்று அவைகளைச் சுத்தம் செய்து மீண்டும் பெட்டிக்குள் வைத்து கோயிலுக்குக் கொண்டு வருவர். மாலை இரவும் சந்திக்கும் வேளையில் காவல் கொடுத்தல் நடைபெறும்.

***காவல் கொடுத்தல் :*** கோயில் பூசாரி காவல் கொடுத்தல் என்னும் நிகழ்வை மேற்கொள்வர். சிவப்பு. இளஞ்சவப்பு நிறமுடைய சேவற்கோழி இறைவனை வேண்டித் தன் இருகைகளால் மேலே தூக்கிக் காண்பிப்பார். முனியப்பசுவாமியின் அருளால் அச்சேவற்கோழி காவு கொடுக்கப்படும். இதுதான் விழாவின் தொடக்கமாகும். அதன்பின்னர் கோயிலில் பூஜைகள் நடத்தப்பெறும்.

***பொங்கல் வைத்தல் :*** ஊர்ப்பொதுமக்கள் மற்றும் உறவுப்பங்காளிகள் வரி செலுத்தியோர் அனைவருக்காகவும் பொங்கல் வைக்கப்படும். இப்பொங்கல் வைத்து முடித்தவுடன் இருபத்தியொரு தெய்வங்களை ஆடுபவர்கள் பொங்கல் வைத்துப் படையல் இட்ட பின்னர் தங்களுக்குரிய ஆடை, அணிகலன்களை அணிந்து ஆடத்துவங்குவர்.

***சாமியாட்டம் :*** இரவு பதினொரு மணிக்கு மேல் மேளம் முழக்கப்படும். தலைமை சாமியாடி இறைவனை வருந்தி வேண்டி ஆடத்துவங்குவார். அதன்பின்னர் ஒவ்வொருவராக ஆடத்துவங்குவர். ஆண் தெய்வமாடிகளாக அய்யன், கருப்பணசாமி, பட்டப்பசாமி, பைரவ சாமி, முனியப்பசாமி, அழகர்சாமி, மலையப்பசாமி எனத் தம் ஆடை, ஆபரணம், சாட்டை, சவுக்கு, எரிபந்தம், கத்தி, அரிவாள், தண்டு ஆகியவற்றுடன் ஆடத் துவங்குவர். இவர்களுடன் பெண் தெய்வமாடிகள் பேச்சி, இராக்காயி, இருளாயி, முத்தாயி, சவுண்டி, கந்தாயி போன்ற துணைத் தெய்வங்கள் மூன்றாம் சாமத்துடன் ஆட்டத்தை முடித்துக் கொள்வர்.

***இரண்டாம் நாள் விழா :*** மகாசிவராத்திரிக்கு அடுத்த நாள் இரண்டாம் நாள் விழாவாகக் கொண்டாடப்படுகின்றது. இந்நாளில் கோவிலில் விழாக்கள் இல்லாது ஊரில் மக்கள் ஒன்றாகக் கூடி நாடகம் நடத்துதல், முளைக் கொட்டுதல், கும்மியடித்தல் குதிரையெடுப்பு, காளைவிடுதல் எனக் கொண்டாடுவர். பெரும்பாலும் நாடகம், மயிலாட்டம், குறவன், குறத்தியாட்டம் போன்றவை நடத்தப்படுகின்றன.

## பாரி வேட்டை அல்லது பரிவேட்டை

சிவராத்திரி கழித்த இரண்டாம் நாள் பரிவேட்டை என்ற நிகழ்வு நடத்தப்பெற்று மூன்றாம் நாள் விழாவாகக் கொண்டாடப்படுகின்றது. இந்நாளே சிறப்பு வாய்ந்த நாளாகக் கருதப்படுகின்றது. இந்நாள் அமாவாசை திதியாக கருதப்படுகின்றது. பெரும்பாலும் அமாவாசை திதியாக அமையும். இந்நாளில் கோயில் பங்காளிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளவேண்டும். கோயில் பங்காளிகள், பெண் உரிமை பெற்றோர்கள், பெண் கொடுத்தவர்கள் அனைவரும் வருவர். இந்நாளில் மாலையிலிருந்து பொங்கல் வைப்பு நிகழ்ச்சி நடைபெறும். தேங்காய், பழம், படையலுடன் தெய்வப்பீடங்களுக்கு பூசாரி, தலைமை சாமியாடி ஆகியோர் வாயில் துணிகட்டிப் படைப்பர். இரண்டாம் சாமம் தொடக்கத்திலிருந்து ஆண், பெண் சாமியாடிகள் ஆடத் தொடங்குவர். நான்காம் சாமம் முடிந்து அதிகாலை 5.00 மணிக்குப் பெண் சாமியாடிகள் தங்கள் தெய்வப் பீடங்களில் இருக்கும் அணிமணிகளை வேண்டி தலைமைச் சாமியாடியிடம் சுற்றி சுற்றி ஆடிவருவர். தலைமைச் சாமியாடி சில தெய்வங்களுக்குச் சேலை, அணிகலன்கள் கொடுப்பர். சில பெண் சாமியாடிகளுக்குக் கொடுக்காமல் இருப்பதுமுண்டு. அதிகாலை வேளையில் கோயில் கிடா வெட்டு நடைபெறும். சாமிகிடா வெட்டு தலைமை பூசாரி நீர்தெளிக்க மலைச்சாமியாடி ஆட்டுக்கிடா மீது மஞ்சள் நீர்தெளிக்க கிடா தலையசைக்க கிடா வெட்டுத் தொடங்கும். தலைமைக் கிடா வெட்டப்பட்டவுடன் தொடர்ந்து ஊர்ப்பங்காளிகள் கிடா வெட்டும் நடக்கும். பின்னர் குழந்தைகளுக்கு மொட்டை அடித்தல், காது குத்துதல் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறும். அத்துடன் விழா முடிவுறும்.

## முடிவுரை

தமிழகக் கிராமப்புறச் சிறுதெய்வ வழிபாட்டுடன் முனியப்பசுவாமி வழிபாடு தொன்றுதொட்டு நிகழ்ந்து வருகின்றது. பன்னெடுங்காலமாக மக்களின் பாரம்பரியக் கூறுகளுடன் இன்றளவும் இவ்விழா சிறப்பாக நடந்தேறி வருகின்றது. மக்களின் முன்னேற்றத்தில் அறிவியலும் ஆன்மிகமும் ஒன்றையொன்று தொடர்புறத் தழுவி அமைந்த நிலையில் நாட்டுப்புறத் தெய்வ வழிபாடு இன்றளவும் நீடித்து நிலைபெற்று வருகின்றது. மக்களினப் பிரிவில் கலந்து இயங்குகின்றன. தமிழ்மரபிற்கேற்ப வழிபாட்டுக் கூறுகளும் அமைந்துள்ளன.

# கொல்லிமலைப் பழங்குடி மக்களின் நம்பிக்கைகள்

**முனைவர் ச. பாலமுருகன்,**எம்.ஏ.,எம்.ஃபில்.,பிஎச்.டி.,
*ஸ்ரீகந்தன் கலை அறிவியல் கல்லூரி, ஈரோடு - 8.*

மனித வாழ்வு நம்பிக்கையின் அடிப்படையிலேயே இயங்குகிறது. நம்பிக்கைகள் அச்சவுணர்வின் காரணமாக தோன்றியது, என்றாலும் இயற்கைக்கு அப்பாற்பட்டு நிகழும் சில நிகழ்ச்சிகளுக்குக் காரணம் அறியாமல் இருந்த மனித மனமானது சிலவற்றைப் படைத்துக் காரணம் கற்பித்துக் கொள்கிறது. அவைகளே நம்பிக்கைளாக உருவாகி, காலங்காலமாக ஒரு தலைமுறையினரிடமிருந்து மற்றொரு தலைமுறைக்குப் பரவி வருகின்றன. கொல்லிமலைப் பழங்குடி மக்களிடம் காணப்படும் நம்பிக்கைகளை இக்கட்டுரை ஆராய்ந்துள்ளது.

***ஏர்முகூர்த்தம் :*** கொல்லிமலையிலுள்ள ஒவ்வொரு கிராமத்திலும் ஐயம் பூசாரி என்பவர் இருக்கிறார். இவரது நிலத்தில் முகூர்த்த ஏர் உழவு செய்த பின்னரே ஊர் மக்கள் தங்கள் நிலங்களில் உழவு செய்ய வேண்டும். தேங்காய், பழம் வைத்து தீபாராதனைக் காட்டி, மண்ணை வணங்கிய பின்னரே முதல் ஏர் உழுகின்றனர். இம்முதல் ஏர் உழும் நிகழ்ச்சி நடக்கும் போது ஏர் முகூர்த்தமாக அடுப்புப் புகைதல், பயிறு வேக வைத்தல், துணிகளைத் துவைத்தல், குளித்தல், காட்டை அழித்து நெருப்பிடல், வெளியூருக்குப் பயணம் செல்லுதல், வேலைக்குச் செல்லுதல் போன்ற செயல்களைக் கண்டிப்பாக ஊர் மக்கள் செய்யக் கூடாது. அப்படிச் செய்தால் தெய்வக்குற்றம் ஏற்பட்டு அன்றைய வருடம் நல்ல விளைச்சல் இருக்காது என்று நம்புகின்றனர். மேற்கூறிய செயல்களைச் செய்பவர்கள் தெய்வத்திடம் முறையிட்டு, பஞ்சாயத்தாரிடம் மன்னிப்புக் கேட்டு, பன்றி விருந்து படைக்க வேண்டும். இச்சடங்கினைச் செய்ததன் மூலம் தெய்வகுற்றம் நீங்கி நல்ல விளைச்சல் பெருகும் என்று நம்புகின்றனர்.

***விளக்கேற்றுதல் - பூட்டு வெட்டுதல் :*** கருவுற்ற பெண்ணிற்குப் பேறு காலத்தில் சிக்கல் ஏற்பட்டால், அப்பெண் வேறொரு ஆடவரோடு தொடர்பு வைத்திருப்பாள் என நம்புகின்றனர். அந்த ஆடவர் அப்பெண் இருக்கும் இடத்திற்கு வந்து, விளக்கேற்றி வைத்து திருநீறை எடுத்து கருவுற்ற பெண்ணிற்குக் கொடுத்துத் தன் தவறை ஒப்புக் கொள்ள

வேண்டும். இவ்வாறு செய்வதால் பிரசவம் எளிதாகும் என சேலூர் நாட்டுப் பகுதிகளில் வாழும் மக்கள் நம்புகின்றனர். வளப்பூர் நாட்டுப் பகுதிகளில் பூட்டு வெட்டுதல் என்ற சடங்கினைச் செய்கின்றனர். அதாவது தவறு செய்வதற்கு யார் முதலில் காரணமாக இருக்கின்றார்களோ அவர்கள் மரக்கிளையை வெட்டுவார்கள். இதையே ***பூட்டு வெட்டுதல்*** என்று கூறுகின்றனர். தவறு செய்தவர் ஆணாக இருந்தால் துளையுள்ள மரப்பகுதியை வெட்டித் தவறை ஒப்புக் கொள்ள வேண்டும். பெண் தவறு செய்தவதற்கு முதல் காரணமாக இருந்தால் துளை இல்லாத மரப்பகுதியை வெட்டித் தவறை ஒப்புக் கொள்ள வேண்டும். இதனால் பிரசவம் எளிதாகும் என்று நம்புகின்றனர்.

***சாணி வெட்டுதல் :*** இப்பழங்குடி மக்கள் வேளாண்மையை முக்கியத் தொழிலாகக் கொண்டவர்கள். வேளாண்மைக்கு மழை இன்றியமையாதது. மழை வரும் கால அறிகுறிகளை இம்மக்கள் தெரிந்து வைத்துள்ளனர். ***தட்டான் தாழப் பறத்தல், மேகம் கருத்து ஒன்றாய் கூடுதல் குளிர்ந்த காற்று வீசுதல், தவளை கத்துதல்*** ஆகியவை மழைவரும் அறிகுறிகள். பெருதலை வண்டு கத்தினால் பெருமழை பெய்யும் என்று நம்புகின்றனர். மழையில்லாத காலங்களில் மழை வேண்டி இறைவனை வழிபடும் வழக்கமும் இம்மக்களிடம் காணப்படுகிறது. மழை வேண்டி இம்மக்கள் ***சாணி வெட்டுதல்*** என்ற சடங்கினைச் செய்கின்றனர். இந்தச் சடங்கின் போது ஆண்களும், பெண்களும் மண்யானையை எடுத்துக் கொண்டு பிள்ளையாரைப் போற்றிப் பாடல்களைப் பாடுவர். பின் ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று கம்புருண்டை, அரிசிச் சோறு. வெங்காயம். கேழ்வரகுக்களி ஆகியவற்றை வாங்கி ஒருவர் அவற்றை ஒன்றாகக் கலந்து பிள்ளையார் கோயில் முன் அனைவரும் உப்பில்லாமல் உண்ணுவார்கள். எல்லோரும் உணவு சாப்பிட்ட பின் மாட்டுச் சாணத்தைக் கடையில் சேகரித்துப் பிள்ளையார் உருவம் தெரியாமல் பூசிவிடுவார்கள் பின்னர் பிள்ளையாரைப் பீடத்திலிருந்து கோபத்துடன் உருட்டி விடுவார்கள். அப்போது பெண்கள் பிள்ளையாரைச் சுற்றியபடி கும்மியடிப்பார்கள். அப்பாடல் வருமாறு :

*மழையின்றி வாடறோமே பிள்ளையாரே*
*மனமிரங்கலாதோ பிள்ளையாரே ....*
*சாணி போட்டுப் பூசிட்டோம் பிள்ளையாரே*
***தண்ணி விட்டுக் கழுவிக் கோணும் பிள்ளையாரே***

இவ்வாறு பாடல்கள் பாடி கும்மியடித்து குடித்ததும் கேலியுறவுள்ள ஆண்களும், பெண்களும், தங்களுடைய முகத்தில் ஒருவர் மாற்றி

ஒருவர் கரியைப் பூசிக்கொள்வர். பின் மாட்டுச் சாணத்தைத் தண்ணீரில் கரைத்து ஊற்றிக் கொண்டும், கேளிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டும், அதாவது பெண்கள் அகப்பையை எடுத்து கொண்டு ஆண்களைத் துரத்துவர், சில பகுதிகளில் இச்சடங்கை மேற்கூறியபடி செய்வதுடன் பிள்ளையார் கோயின்முன் அடுப்புக் கூட்டி, ஒரு மண்பானையில் மணலைப் போட்டு தண்ணீர் ஊற்றிக் கொதிக்க வைப்பார்கள். தண்ணீர் பொங்கிவரும் வேளையில் கரவை ஒலியெழுப்புவர். பின் மண் சோற்றைச் சாப்பிடுவது போல பாவனை செய்வர். இச்சடங்கின் நோக்கமாக தகவலாளி ***மழையில்லாமல் வறட்சியாகக் காணப்படும் காலத்தில் பிள்ளையார் கோயிலுக்கு முன்பு மண்சோறு சமைத்துச் சாப்பிடும் எங்களின் துயரநிலையைக் கண்டு கடவுள் மழையை பொழிவிப்பார்*** என்று இச்சடங்கினைச் செய்யும் பொழுதோ, சடங்கு முடிந்த மறு நாளிலோ மழை பெய்யும் என்று கூறுகின்றனர்.

***தீட்டு :*** கொல்லிமலைப் பழங்குடி மக்களில் பெண்கள் பூப்படைத்தால் தீட்டுக் கழித்த பின்னரே வீட்டிற்குள் வர அனுமதிப்பர். கன்னித்தீட்டு எனப்படும் இத்தீட்டு கொங்காயி அம்மன், மாசி பெரியண்ணசாமி, காளியம்மன், நாச்சாயி அம்மன், பிடாரியம்மன் போன்ற தெய்வங்களுக்கு ஆகாது என்று நம்புகின்றனர். இத்தீட்டு உள்ளவர்கள் வீட்டிற்குள் வந்தால் வீட்டிலுள்ளவர்களுக்கு ஏதாவது தீங்கு நேரிடும் என்று நம்புகின்றனர். அதனால் குழந்தைபெற்ற பெண்களும் மாதவிலக்கான பெண்களும் தீட்டு காலம் முடியும் வரை தனி வீட்டிலேயே தங்குகின்றனர். பெண்கள் மாதவிலக்காகி வீட்டிலேயே தங்குவது தெரியவந்தால் ஊர்ச்சபையில் 25 ரூபாய் அபராதம் செலுத்தி விட வேண்டும். இக்காலங்களில் பெண்கள் மாட்டுத் தொழுவம் சென்றால் பால் வற்றி விடுவதுடன் நோய் ஏற்பட்டு விடும் என்றும், செடிகொடிகளைத் தொட்டால் பட்டுப்போய் விடும் என்றும் நம்புகின்றனர். மேலும் கோயிலுக்குச் செல்லக் கூடாது திருவிழா நாளில் சாமி ஊருக்குள் வரும்போது தீட்டு உள்ள வீட்டார் அனைவரும் வேறு ஊர்களுக்குச் சென்று விட வேண்டும். மேலும், திருவிழாவின் போது இறப்பு நேர்ந்து விட்டாலும் அவ்வீட்டிலுள்ளவர்கள் யாரும் வெளியே வரக் கூடாது. மாதவிலக்கான பெண்கள் கிணற்றிலோ, ஆற்றிலோ தண்ணீர் எடுக்கக் கூடாது. மாதவிலக்குக் காலத்தில் தண்ணீர் எடுக்கச் சென்றால் கிணற்றுநீர் வற்றி விடும் என்று நம்புகின்றனர்.

***பிறப்பு பற்றிய நம்பிக்கைகள் :*** திருமணமான பெண்கள் விரைவில் தாய்மை அடைந்து விடவேண்டும் என விரும்புவர். அதற்காகப் பெண்கள் அரசமரத்தைச் சுற்றி வருதல் உண்டு. ஆனால் கொல்லிமலைப் பழங்குடியின மக்கள் தங்களுக்குக் குழந்தைப்பேறு

கிடைக்க வேண்டுமென எண்ணி அறப்பளீசுவரர் கோயில் அருகிலுள்ள பாலாற்றில் மீனைப் பிடித்து அம்மீனுக்கு மூக்குத்தி குத்தி விடுவர். இவ்வாறு செய்வதால் தங்கள் வாழ்வு வளமாக அமைவதோடு விரைவில் குழந்தைப் பேறு கிட்டும் என்று நம்புகின்றனர்.

***தெய்வம் தொடர்பான நம்பிக்கை :*** தெய்வத்தின் முன்பு பொய் சத்தியம் செய்தால் அத்தெய்வம் அவனைத் தண்டிக்கும் என்று கருகின்றனர். இம்மலையிலுள்ள தெய்வங்களில் ***கொல்லிப்பாவை*** யை அதிக சக்தி வாய்ந்ததாகக் கருதுகின்றனர். இத்தெய்வம் இம்மலையில் வாழும் மக்களுக்கும், இம்மலைக்கு வரும் மக்களுக்கும் எந்தத் தீங்கும் நேராமல் பாதுகாப்புத் தருகிறது என்றும், தீய எண்ணங்களுடன் இம்மலைக்கு வருபவர்களை இத்தெய்வம் வருத்திக் கொல்லும் என்றும் நம்புகின்றனர். நாட்டுப்புற மக்களிடையே அனைத்து உறுதிமொழிகளும் வாய் மொழியாகவே இருக்கின்றன. அவற்றை நிறைவேற்றுவதும் நிறைவேற்றாததும் வாக்குறுதி அளித்தவரின் மனச்சாட்சியைப் பொறுத்ததாகும். இந்நிலையில் உறுதிமொழியை மீறினால் தெய்வ தண்டனை கிடைக்கும் என்ற அடிப்படையில் சத்தியம் செய்யும் வழக்கம் தோன்றியிருக்க வேண்டும். இப்பகுதியில் மணம் செய்து கொண்ட ஒரு பெண்ணும் மனமாகாத ஆணும் தவறான உறவு கொண்டால் பஞ்சாயத்தாரிடம் அபராதத் தொகை செலுத்த வேண்டும். பஞ்சாயத்தார் முன்பு பெண் குற்றத்தை ஒப்புக் கொண்டு, ஆண் மறுத்து விடுகின்றபொழுது உண்மையை அறியத் தெய்வத்தின் முன்பு மணி தொட்டு சத்தியம் செய்ய வேண்டும். அவ்வாறு சத்தியம் செய்யாது மீறும் ஆண், குளித்து விட்டு ஈர ஆடையோடு கோயிலைச் சுற்றி வர வேண்டும். அப்போது அவர் அணிந்துள்ள வேட்டியில் நெருப்பை அள்ளிக் கொட்டுகின்றனர். நெருப்பை, வேட்டியில் அணைத்தபடி வட்டமாய் அமர்ந்திருக்கும் ஊர்ச்சபையை மூன்று முறை சுற்றிவரவேண்டும். அப்போது வேட்டியில் எந்த ஓட்டையும் விழாமலிருந்தால் குற்றமற்றவர் என்றும், ஓட்டை விழுந்தால் குற்றவாளி என்றும் கருதி தண்டனை வழங்குகின்றனர். சில பகுதிகளில் குடத்தைக் கையால் அணைத்துச் சத்தியம் செய்வதுண்டு. குற்றவாளிக்கு ஒரு பெருந்தொகையை அபராதமாக விதிப்பதோடு, பஞ்சாயத்தில் கூடியிருக்கும் கிராம மக்கள் அனைவருக்கும் பன்றி எடுத்து, கேழ்வரகு விருந்து கொடுக்க வேண்டும். இவ்வாறு செய்தால் அவர் செய்த குற்றத்தைத் தெய்வம் மன்னித்து விடும் என்று நம்புகின்றனர்.

***மூலிகை பற்றிய நம்பிக்கைகள் :*** கொல்லிமலையில் ஏராளமான மூலிகைகள் கிடைக்கின்றன. ஒவ்வொரு மூலிகைச் செடியிலும்

முனிவர்கள் வாழ்ந்து வருகின்றனர் என்று இம்மக்கள் நம்புகிறார்கள். இம்மூலிகையைப் பறிப்பதால் முனிவர்களின் சாபத்திற்கு ஆளாக நேரிடும் எனக் கருதி இச்சாபம் நீங்க, மூலிகையைப் பறிப்பவர்கள் மூலிகையைப் பறிக்கும் போது அதைச் சுற்றிலும் தண்ணீர் ஊற்றி அதில் திருநீற்றைப் போடுகின்றனர். பின் ஒரு மஞ்சள் துணியில் 25 பைசா நாணயம் வைத்து அச்செடியில் கட்டுகின்றனர். இதைக் ***காப்புகட்டுதல்*** என்பர். பின் மூலிகைக்குப் பூசைப் பொருட்களை வைத்து தீப தூபம் காட்டுவர். பின் ஒரு மூங்கில் குச்சியைக் கொண்டு மூலிகையின் ஆணிவேர் அறுபடாமல் பறிப்பார்கள். மூலிகையைப் பறிக்கும் போது மந்திரம் கூறுவர்.

***ஓம் டம்டம் நம்நம் உச்சாடய உச்சாடய***
***ஆக்சேய ஆக்குசாய பைவரூப***
***விக்கிரமார்த்தாண்ட ஜீய கனகரூபானம்***
***நம்டம்டம் இம்பட் சுவாஹா குரு ஜெபம்***

என்ற மந்திரத்தை மூலிகையைக் கையில் பிடித்துக் கொண்டு 108 முறை கூறுவர். மூலிகை பறித்தபிறகு இறந்து விட, அதற்கு உயிரூட்ட, ***உயிரேற்ற மந்திரத்தைக்*** கூறுகின்றனர்.

***ஓம் மூலி மகாமூலி சர்வமூலி***
***உன் உடலில் உன் உயிர் நிற்க சுவாஹ***
***ஓம் பரமேஸ்வர சாபம் நசி நசி ..........***
***தன்னோ ஜீராகு ஹஜோதாயத்.***

இம்மந்திரங்களை 108 முறை கூறினால் மூலிகை உயிர் பெற்றுவிடும் என்று நம்புகின்றனர். இம்மந்திரங்களைக் கூறும்பொழுது ஏதாவது ஒரு சொல்லைக் கூறத் தவறினால் அம்மந்திரம் பலிக்காது என்றும், அதனால் அம்மூலிகையை எடுப்பவர்க்கு ஆபத்து வரும் என்றும் நம்புகின்றனர்.

கொல்லிமலைப் பழங்குடிகளிடம் காணப்படும் நம்பிக்கைகள் இன்றும் தனித்தன்மை வாய்ந்ததாக விளங்குகிறது. மேலும் இம்மக்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்துள்ளது. மேற்கூறப்பட்ட நம்பிக்கைகள் மட்டுமின்றி, நிலப்பகுதியில் வாழும் மக்களிடையே காணப்படும் நம்பிக்கைகளும் இம்மக்களிடம் இருப்பதைக் களஆய்வில் காணமுடிந்தது.

# குமரி மாவட்ட இஸ்லாமியர்களின் தர்கா வழிபாடு

**ஜெ.பிறீடா மேபல் ராணி**, எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி.,
*பல்கலைக்கழக நூலகம், திருவனந்தபுரம்.*

## முன்னுரை

இந்திய வழிபாட்டு முறைகளுள் நிறுவனமயமாக்கப்பட்ட வழிபாட்டுமுறை, நாட்டார் மக்களின் நம்பிக்கை சார்ந்த வழிபாட்டுமுறை என இருவேறுபட்ட வழிபாட்டு முறைகள் வழக்கத்தில் உள்ளன. இந்நிலைப்பாடு இந்து, கிறித்தவம், இஸ்லாம் என எல்லா மதத்திற்கும் ஏற்புடையதாகும். இஸ்லாமிய வழிபாட்டு முறைகளிலும் இந்நிலைப்பாடு காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். நிறுவனமயமாக்கப்பட்ட பள்ளிவாசல் சார்ந்த வழிபாட்டுமுறை, நிறுவனப்படுத்தலுக்கு உட்படாத மக்கள் நம்பிக்கை சார்ந்த தர்கா வழிபாட்டுமுறை என இருநிலைப்படும். இந்த தர்கா வழிபாட்டு முறை இஸ்லாமியப் பாமர மக்களின் வாழ்க்கை முறையோடு பின்னிப்பிணைந்த ஒன்றாகும். இந்த தர்கா வழிபாட்டு முறை குமரி மாவட்ட இஸ்லாமியர்களின் வாழ்வில் இடம்பெற்றுள்ள தன்மையைப் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## குமரி மாவட்டம்-இஸ்லாமியர்களும் தர்காக்களும்

தமிழகத்தின் தென்பகுதியான குமரிமாவட்டம் பல்வேறு சிறப்புக்களைக் கொண்ட மாவட்டமாகும். இம்மாவட்டத்தில் கடையாலுமூடு, குலசேகரம், களியக்காவிளை, நம்பாளி, தேங்காப்பட்டணம், குளச்சல், ஆளூர், இரவிபுதூர்கடை, அழகியமண்டபம், திருவிதாங்கோடு, தக்கலை, இடலாக்குடி, கோட்டார், இளங்கடை, கோட்டையடி, சின்னமுட்டம் (கன்னியாகுமரி) ஆகிய இடங்களில் இஸ்லாமியர்கள் குழுமியும் தனித்தும் வாழ்கிறார்கள். குமரிமாவட்டத்தில் சுமார் முப்பத்தைந்துக்கு மேற்பட்ட பள்ளிவாசல்களும் ஐம்பத்தைந்துக்கு மேற்பட்ட தர்காக்களும் காணப்படுகின்றன. குமரிமாவட்டத்தில் கடையாலுமூடு, ஆளூர், அழகியமண்டபம், திருவிதாங்கோடு, தக்கலை, கணியார்குளம், குளச்சல், இளங்கடை, திட்டுவிளை, கன்னியாகுமரி போன்ற இடங்களில் தர்காக்கள் காணப்படுகின்றன. குறிப்பாகப் பள்ளிவாசல்களை விடத் தர்காக்கள்தான் அதிகமாகக் காணப்படுகின்றன. பள்ளிவாசல்

தொழுகையில் பெண்கள் கலந்து கொள்ள முடியாது. ஆனால் தர்கா வழிபாட்டில் பெண்கள் கலந்து கொள்ளலாம். இவ்வழிபாட்டில் சாதி சமயம் வேறுபாடின்றிப் பிற இன மக்களும் கலந்து கொள்கிறார்கள். தர்கா வழிபாட்டு முறையில் தங்களுடைய வேண்டுதல்கள் திருத்தூதர்கள் (மஹான்) மூலமாகக் கடவுளிடம் போய்ச்சேர்ந்து விடுகிறது என மக்கள் நம்புகிறார்கள். பல தர்காக்களுக்குப் பெயர் தெரியவில்லை. சில தர்காக்கள் அரேபியப் போரில் இங்கு வந்து விழுந்த போர்வீரர்களின் நினைவாக எழுப்பப் பட்டுள்ளன. இந்தத் தர்காக்கள் ஒவ்வொன்றைப் பற்றியும் மாறுபட்ட பல கதைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்தர்கா முறை மக்களின் கனவில் தோன்றியதற்கிணங்கவும் அங்கு வாழ்ந்த பெரிய மஹான்களின் நினைவாகவும் எழுப்பப்பட்டுத் தொழுகை நடத்தப்பட்டு வருவதாகவும் மக்கள் கூறுகிறார்கள்.

குறிப்பாக தக்கலை ***ஷெய்கு பீர் முஹம்மது சாகிபு ஒலியுல்லா*** தர்காவைப் பார்க்கும்போது ஒரு பக்கம் இரண்டு தர்காவும் மற்றொரு பக்கம் மூன்று தர்காவும் காணப்படுகின்றன. அதில் உள்ள மற்ற நான்கு தர்காவும் ஷெய்குபீர் முஹம்மதின் சீடர்கள் என அவ்விடத்து லெப்பை கூறினார். இது இயசேுநாதர் தன்னுடைய சீடர்களுடன் சுற்றித் திரிந்ததை நினைவுபடுத்துவதாக அமைந்துள்ளது. வடசேரி மஹான் ***துல்ஹாஷா*** தர்காவைப் பார்க்கும்போது மார்க்க போதனை செய்ய வந்த துல்ஹாவின் நினைவாக எழுப்பப்பட்டது. துல்ஹாஷா இறந்துபடாமல் கண்மறைவாக இருப்பதாக இம்மக்கள் நம்பி வருகிறார்கள் என்பது குறிப்பித்தக்கது.

பார்வதிபுரத்தை அடுத்த கணியாகுளம் என்ற இடத்தில் உள்ள ***ஷேக் ஜாண் முஹம்மது பகீர் ஷாகிப்*** பற்றிக் குறிப்பிடுகையில் ஒரு விவசாயி வயலை உழுதுவிட்டு இளைப்பாறிக் கொண்டு இருந்த போது அவருடைய கனவில் ஒருவர் தோன்றி, அரேபியாவிற்கும், இந்தியாவிற்கும் இடையே ***முகழ்யுத்தம்*** ஏற்பட்ட போது நான் இந்த இடத்தில் வந்து விழுந்தேன் என்று கூறிவிட்டு மறைந்துவிட்டார். இளைப்பாறிக் கொண்டிருந்த மனிதர் கனவில் கூறியதை வீட்டிற்குச் சென்று மற்ற மக்களுக்கும் கூறினார். உடனே எல்லோரும் வந்து பார்த்த போது இஸ்லாமியர்களின் அடையாளமான பிறை வடிவம் ஒருகோலில் இருந்தது. உடனே அதிலே ஒரு தர்காவை எழுப்பினார்கள். இதுதான் ***ஷேக் ஜாண் முஹம்மது பகீர் ஷாகிப் ஒலியுல்லாவின்*** தோற்றம்.

இவ்வாறாகக் குமரிமாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு தர்காக்காவும் ஒரு பெரும் வரலாற்றுப் பின்னணியைக் கொண்டு விளங்குவது குறிப்பிடத்தக்கதாகும்.

## தர்கா தொடர்பான வரலாற்றுக் கதைகள்

குமரிமாவட்டத்தில் உள்ள பெரும்பான்மை தர்காக்களுக்கு அதன் தோற்றம், அமைப்பு, வழிபாட்டு முறை தொடர்பான பல்வேறு கதைகள் அம்மக்களிடையே நிலவி வருகின்றன. ஒவ்வொரு தர்காவும் சுமார் முந்நூறு முதல் அறுநூறு ஆண்டுகள் பழமையானதாகும். தர்காக்களில் மஹான்கள் நிறைய அற்புதம் செய்வதாக மக்கள் கூறுகின்றார்கள். ஒரு சில தர்காக்களுக்கு நாட்டுப்புறக் கதைகளும் மக்கள் கூறுவதுண்டு.

## கோஜ் முஹம்மது சாகிப் ஒலியுல்லா

இவருடைய பெயரிலான தர்கா ஆளுரில் உள்ளது. இவர் ஓர் குஷ்டரோகி. மெக்காவில் வாழ்ந்த இவர் சுமார் முந்நூறு வருடத்திற்கு முன்பு ஆளுரில் நடைபெற்ற பண்டிகையைப் பார்க்க இங்கு வந்துள்ளார். அப்போது பர்மாவிலிருந்தும் நாற்பது பேர் பண்டிகை பார்க்க வந்துள்ளார்கள். குஷ்டரோகம் உள்ளவர்களைப் பள்ளிவாசலில் ஏற அனுமதிக்க மாட்டார்கள். அதனால் அவரைத் தனிவீட்டில் அமர்த்தினார்கள். இவருக்குச் சாப்பாடு பர்மாவிலிருந்து வந்த நாற்பது பேரும் பத்துபேர் வீதம் இரண்டு மாதம் உணவு கொடுத்தார்கள்.

ஒருநாள் அவர் திடீரென்று, ***நாளைக்குக் காலை உணவு ஒன்றும் எனக்கு வேண்டாம். நான் கடவுளிடம் போய்ச் சேர்ந்திடுவேன். என் மரணச் செலவுக்கு என் அரையில் போட்டிருக்கும் அரைஞாணத்தை விற்றுச் செலவு செய்யுங்கள். என் உடம்பை யாரும் கையில் தொடாமல் அந்த நிலத்தில் கொண்டு வைக்கவும்*** என்று கூறிவிட்டு இரவு தூங்கச் சென்றார். மறுநாள் காலையில் மக்கள் சென்று பார்த்தபோது அவர் இறந்துகிடப்பதைக் கண்டனர். உடன் அவர் கூறியபடி அவருடைய உடம்பைக் கையால் தொடாதவாறு நான்கு புறமும் கம்பால் கட்டி அதில் தூக்கி வைத்து நிலத்தில் கொண்டு வைத்தார்கள். இஸ்லாமியர்களில் ஒருவர் இறந்தால் அவரை இரண்டு நேரம் குளிப்பாட்டுவது வழக்கம். ஆனால் இவரை நிலத்தில் கொண்டு வைத்ததும் மழை பெய்து அவர் உடம்பைக் குளிப்பாட்டியது. மழை நின்றதும் அவருடைய உடம்பில் உள்ள குஷ்டரோகம் மாறி அழகான உருவம் தெரிந்தது. பின் அவருடைய அரையில் போட்டிருந்த அரைஞாணத்தை விற்று இஸ்லாம் முறைப்படி அவரை அடக்கம் பண்ணியதாக இக்கதை கூறுகின்றது.

## ஞானமாமேதை ஷெய்குபீர் முஹம்மது சாகிபு

இவருடைய தர்கா தக்கலையில் உள்ள அஞ்சுவண்ணத்தில் இருக்கிறது. இவருடைய சொந்த ஊர் தென்காசி. இவர் நீண்ட காலமாக ஆனமலையில் தவம் செய்து கொண்டிருந்தார். அப்போது கொல்லத்தை ஆண்ட மகாராஜா முத்துதம்புரான் அவர்களோடு பீர்முஹம்மதுவுக்குப் பழக்கம் ஏற்பட்டது. அந்த வேளை ஒருநாள் மகாராஜா முத்துதம்புரனின் மகன் நோய்வாய்ப்பட்டு இறந்துபட்டார். அப்போது அந்தச் சடலத்தை சந்தனக்கட்டையில் வைத்து எரிக்கப்போகும் சமயத்தில் பீர்முஹம்மது நிறுத்துங்கள்; எரிக்காதீர்கள்; என்று உரத்த சத்தம் போட்டு நிறுத்தினார். பின் கடவுளிடம் வேண்டுதல் செய்ததாகவும் சிறிது நேரம் கழித்து மகாராஜாவின் மகன் உயிர்பெற்றதாகவும் இவரைப் பற்றய மேலும் பல அற்புதங்கள் மக்களால் இன்றும் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## சேனாம்மாள் ஸைனப் நாயகி (ரலி) தர்கா

***ஆளுருக்கு மேற்கே அங்கிருக்கும் கொடுப்பைக்குழி கிண்ணியிலே சந்தணமும் கிளிமூக்கு வெத்திலையும் அள்ளி அள்ளித்தான் கொடுப்பா அழகானச் சேனாம்மாள்*** என்பது வாய்மொழி (தகவலாளி : ஆளுர் சைனது பீபி) இந்தப் பெண் தர்கா ஆளுருக்கு மேற்கே காணப்படுகிறது. இந்த தர்கா இருக்கும் இடம் முன்னால் நாடான்மார்களுடைய தோப்பாகக் காணப்பட்டது. ஒருநாள் இஸ்லாமிய மதத்தைச் சார்ந்த ஒரு தாயும் ஏழுவயது மகளும் வந்தார்கள். அப்போது மகள் தாகத்திற்குத் தண்ணீர் கேட்டுள்ளாள். அத்தாய் சென்று தண்ணீர் கொண்டு வந்து பார்க்கும்போது அம்மகள் இறந்து கிடந்துள்ளாள். பின் அவளை அந்த இடத்திலே அடக்கம் பண்ணியதாகவும் பல வருடம் கழித்து அந்த இடத்தை உழுதபோது கொழுபட்டு இரத்தம் வந்துள்ளது. அந்த இரவில் ஒரு பெண் கனவில் தோன்றி அதில் ஒரு கோயில் கட்டக் கூறியதாகவும், இதனை அறிந்த நாடார்கள் அந்நிலத்தை முழுவதும் முஸ்லீம்களுக்குக் கொடுத்துள்ளார்கள். அதில்தான் இப்போது தர்கா அமைந்துள்ளது.

## வழிபாட்டு முறை

*நாடோறும் செய்யும் நற்செயல்களையும் தீய செயல்களுக்காக வருந்திப் பரம்பொருளிடம் முறையிடுவது வழிபாடாகும்.* ***நல்லெண்ணம், நற்சொல், நற்செயல் இவற்றையுண் டாக்கும் மனத்தன்மையை அளிக்கும்படி அப்பரம்பொருளை வேண்டுவதே வழிபாடு*** (1:102). குறிப்பாக மனிதன் வாழ்க்கைச் சூழலில் தம்மை தீயவை

அணுகக்கூடாது; நல்லவை அணுகவேண்டுமென்று தெய்வத்திடம் வேண்ட அது வழிபாடாக முகிழ்ந்துள்ளது எனலாம். தர்கா வழிபாட்டில் ஒவ்வொருவரும் தத்தம் குடும்பங்கள் நோய்நொடியின்றிச் சிறப்பாக வாழ வேண்டுமென்று நினைத்து தினந்தோறும் வழிபடுகின்றார்கள். மக்கள் தங்கள் அடையாளமான பிறைவடிவம் எந்த நாள் தோன்றுகிறதோ அந்த நாளில் சிறப்பு வழிபாடும் நடத்துகின்றார்கள். சில தர்காக்களில் பதினான்கு நாட்களும், சில தர்காக்களில் பத்து நாட்களும் இச்சிறப்பு விழாக்கள் நடத்தப்படுகின்றன. குறிப்பாக தர்கா வழிபாட்டில் இஸ்லாம் மக்கள் மட்டுமன்றி இந்து, கிறித்தவ மக்களாலும் ஜாதி, சமயம் வித்தியாசமின்றி வழிபடப்படுகிறது. வழிபாடு நடத்த வருபவர்கள் பிச்சிப்பூ, பேரிச்சம்பழம், எண்ணெய், இனிப்புப் பலகாரம், சாம்பிராணி திரி முதலியவற்றைக் கொண்டு வருவது வழக்கம். இவையே பூஜைக்கு வைக்கப்படுகின்றன. இப்பிரசாதத்தை எல்லோருக்கும் கொடுத்துப் பகிர்ந்து சாப்பிடுவது வழக்கம்.

## நம்பிக்கை

*இயற்கையின் இயக்க விதிகளைப் புரிந்து கொள்ள இயலாத மனிதன் அச்சத்தின் காரணமாக சிக்கல்களுக்குத் தீர்வு காணக் கற்பித்துக் கொள்ளும் காரணங்களே நம்பிக்கைகள் ஆகின்றன. இவை மனிதன் தோன்றிய காலம் முதலே வழிவழியாக பின்பற்றப் பட்டு வருகின்றன* (2:134). நம்பிக்கை என்பது மனித வாழ்வின் உயிர்மூச்சு ஆகும். குழந்தைகள் பயத்தின் காரணமாகத் தூங்காமல் அழுதால் தர்காவில் ஓதிக்கொடுக்கும் தாயத்தை அரையில் கட்டினால் அழுகை நீங்கிவிடும் என நம்புகின்றனர். குளச்சல் தர்காவில் பத்து ரூபாய் கொடுத்தால் ஒரு குப்பி தண்ணியில் அரச இலையும், பிச்சிப்பூவும், அரச மரப்பட்டையும் போட்டுத் தருவார்கள். ஒருவாரம் சென்ற பிறகு அது சிவப்பாக மாறும். அந்தத் தண்ணியை பலவீனமாக இருக்கிறவர்களுக்குக் குடிக்கக் கொடுத்தால் சுகம் கிடைக்கும் எனவும் தலைவலி வந்தால் தலையில் தேய்த்துக் குளித்தால் நல்ல சுகம் கிடைக்கும் எனவும் நம்புகின்றனர். இவ்வாறு இவ்வழிபாடு சேர்ந்த பல்வேறு நம்பிக்கைகள் இம்மக்களிடம் வழங்கப்பட்டு வருகின்றது.

## துணைநூல்கள்


1. *அ.அம்பிளிகலா* : அருள்மிகு பத்தரகாளி அம்மன்கோயில் திருவிழா, கொல்லங்கோடு, எம்ஃபில் ஆய்வேடு.
2. *யோ.தர்மராஜ்* : காணிக்காரர் பழங்குடி இனத்தவரின் வழக்காற்றியல், முனைவர்பட்ட ஆய்வேடு.

# மேலப்பழுவூர் கிராம வடபத்ர காளியம்மன் கோயில் வழிபாட்டு மரபுகள்

**சி. பிரபாகரன்,** எம்.ஏ.,எம்.ஃபில்.,
*ஜமால் முகமது கல்லூரி, திருச்சி*

அரியலூர் வட்டம், பெரம்பலூர் மாவட்டத்தில் அமைந்திருக்கும் மேலப்பழுவூர் ஊரின் இரண்டு கல் தொலைவில் பாப்பான் குளம் அமைந்துள்ளது. அதன் அருகில் அமைந்துள்ள வடபத்ரகாளியம்மன் வழிபாட்டு மரபுகள் பற்றி அறிமுகம் செய்வது இக்கட்டுரையின் நோக்கம்.

***கோயில் வரலாறு :*** இராசராசனால் உருவாக்கப்பட்டு சிலை அமைத்து உயிர் கொடுக்கப்பட்டது. அவனுடைய காலத்தில் ஒருநாள் வளையல் விற்கும் செட்டியார் மழையில் நனைந்து கொண்டு ***காளி கதவை திறடி*** என்று அதிகாரமாகக் கூப்பிட காளி கோபத்துடன் வந்து அவனைக்குத்திக் குடலை மாலையாகப் போட்டுக் கொண்டு சிலையாக நின்று விட்டது. நாக்கு வெளியே நீட்டிக் கொண்டு எட்டுக்கையும், இரண்டு காலும் கையில் சூலாயுதத்தோடும் அச்சம் தரும் வகையில் நிற்கிறது. வடபத்ர காளியம்மன் வடக்கு நோக்கி நிற்பதால் ***வடபத்ர காளியம்மன்*** என்பர். அவள் தங்கை தெற்கு நோக்கி அமைந்திருப்பதால் இதனைச் ***செல்வியம்மன்*** என்பர்.

***காளிக்கு நடக்கும் திருவிளழாக்காலம் :*** சித்திரை மாதம் கடைசியில் பூப்போட்டு பார்ப்பார்கள். பூதன்காத்தான் ஏரி ஓரத்தில் அமைந்துள்ள குடியரசு கோயிலில் மக்கள் திரளாகக் கூடியிருப்பர். இரவு 11 மணிக்கு இரண்டு குதிரைகள் நிறுத்தப்படும். அதனை இருவர் பிடித்திருப்பர். சூலாயுதத்தின் முன் ஒரு பூ வண்டலும், ஒரு எலுமிச்சை பழமும் வைத்திருப்பர். பூசாரி உடுக்கை எடுத்து அடித்து ஊரில் உள்ள அத்தனை தெய்வங்களையும் கூப்பிட்டு அந்த இருவருக்கும் சாமி வரவைப்பார். ஊரின் பட்டயத்தார், நாட்டாண்மை என்பவர்கள் கூடிப் பூவுக்குக் ***காளி*** என்றும், எலுமிச்சை பழத்திற்குச் ***செல்வி*** என்றும் பெயரிட்டு வைப்பர். கூட்டம் எல்லை கடந்து நிற்கும். அந்த இருவருக்கும் சாமி வராது. ஒருவாரம் கூட ஆகும். இருவருக்கும் சாமி வந்து அவர்கள் நினைத்தது போலவே பூவையும், எலுமிச்சையும் எடுத்து விடுவார்கள். எல்லோரும் ஒட்டுமொத்தமாகக் குரல் கொடுக்க முடிசிலிர்த்து காளிமாதிரியே ஓடும்

குதிரையின் மேல் அவ்விருவரும் தொற்றிக் கொண்டு ஓட, இளைஞர் பட்டாளமும் பின்னால் ஓடுவர். புகழ்பெற்ற பரம்பரையாக மளிகை வியாபாரம் செய்துவரும் ராசேந்திரன் மளிகைகடையின் சந்தில் செல்லியும், ஊர்பிழைக்க வந்து தன் திறமையால் சைக்கிள் கடைவைத்து நல்லதொரு நிலையில் இருக்கும் மதன்சிங் கடையின் சந்தில் காளியும் பிரிந்து போவார்கள். குதிரை நிலை நின்று 15-வது நாள் தேரோடும். அன்று இரவு இரண்டு மணிக்கு எல்லை சட்டி உடைக்க ஆட்டை வெட்டி அந்த இரத்தத்தோடு சந்துக்குச் சந்து மந்திரம் சொல்லி சட்டி உடைப்பார்கள். இதனை ஊர் சாத்தான் என்பவரே உடைப்பர். அவர் சிகப்பு ஆடை அணிந்து இருப்பார். திருவிழா முடிந்து மறுநாள் மஞ்சள் தண்ணீர் ஊற்றி விளையாடுவர்.

***கன்னிகளுக்குக் காண முடியாத நிலை :*** வட பத்ரகாளியம்மனுக்கு தேரோடும் நாளன்று அந்த ஊரில் உள்ள குறுகிய காலங்களில் வயதிற்கு வந்த பெண்கள், மற்றும் தீட்டு என்று சொல்லும் அத்தனை பெண்களும் ஊரின் எல்லையில் சென்று அமர்த்திவிடுவர். செல்லியம்மன் திருவிழாவிற்கு எந்தவிதக் கட்டுப்பாடும் கிடையாது. எல்லாரும் கலந்து கொண்டு மகிழ்வர்.

***காளிக்கு விசேச பூசை :*** செவ்வாய்க் கிழமையும், வெள்ளிக்கிழமையும் அருகில் அமைந்துள்ள அனைத்து கிராமங்கள் அல்லாமல் திண்டுக்கல், சேலம், மதுரை, திருச்சி, செயங்கொண்டம் போன்ற தூரத்தில் அமைந்துள்ள ஊர்களில் இருந்து காணிக்கை செலுத்திவிட்டுக் காளியின் அருள் பெற்றுச்செல்வர். முன்பு மாதம் மூன்று ஆட்டுக்கிடா, பத்து சேவல் என்று பலிகொடுத்துக் காளியின் ஆவேசத்தைத் தீர்ப்பர். தற்சமயம் தினந்தோறும் இரண்டு கால வேளையிலும் நைவேத்தியம், இரண்டு பொங்கலும் படைத்து காளியை வழிபடுகின்றனர்.

***காளிக்கும் சாதிக்கும் தொடர்பு :*** சங்கூதிப் பண்டாரம் என்ற இனத்தைச் சார்ந்தவரே தலைமுறை வாரியாக வந்து அவர்களே அக்கோயில் பூசாரிகளாக வருவார். ஏனென்றால் அக்காளிக்குத் தேவைப்பட்டதை அவர்களால்தான் கொடுக்க முடியுமாம். அதோடு மட்டுமல்லாமல் உண்மையிலேயே அந்தக் காளியிடம் திருடச் சென்ற திருடனும் பயந்து வந்துவிடுவான். அப்படி ஆவேசமாகக் காட்சி கொடுக்கிறது.

***காளிக்கு இரை : அரசன் அன்று கொல்லும், தெய்வம் நின்று கொல்லும்*** என்பது உண்மைதான். காளியின் உண்டியலைத் திருடியவர்களை எந்தச் சோதனை முயற்சியும் நடத்தாமல் விதியின் வழியில் சென்று அவர்களைக் கொன்றுவிட்டதாக கூறுவார்கள் ஊரில் உள்ளவர்கள். திருவிழா அன்று காளிக்கு நேர்த்திக் கடனைச் செய்யாவிட்டால்

உறவினரில் யாராவது ஒருவருக்குச் சாமிவந்து சொல்லி தனக்குச் சேரவேண்டியதை பெற்றுக் கொள்வாளாம்.

***வரங்கள் :*** பிள்ளைப்பேறு இல்லாதவர் கிடாவெட்டி பொங்கல் வைப்பதாக வேண்டிக்கொண்டால் பிள்ளைப் பேறு கிடைக்கும். மேலும் திருவிழா முடிந்த மறுநாளே நல்ல மழை பெய்து விடும் சக்தி வாய்ந்த வடபத்ரகாளி. தீய சக்தியுள்ளவன் கொடுமைகளைச் செய்து வந்தால் அவன் பெயரை எழுதிக் காளியின் சூலாயுதத்தில் கட்டிவிட்டால் அவன் உயிரை எடுத்துவிடும். அப்படிப்பட்ட சக்தியுள்ள காளி அவ்வூரில் அமைந்துள்ளது. தீயோர்களை அழிக்க இப்படியும் ஓர் அவதாரம் என்று நம்புகின்றனர்.

*கோயில் அமைந்துள்ள பாங்கு :* கோயிலைச் சுற்றி பெரியஏரி உள்ளது. அங்குதான் திரௌபதி அம்மனுக்குத் திருவிழா நடத்தித் தீ மிதிப்பர். பக்தர்கள் அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்படும். கோயிலைச் சுற்றி மணிகள் கட்டப்பட்டு இருப்பதால் காற்றின் அசைவில் மணி ஒலித்துக் கொண்டே இருக்கும்.

***கோயிலின் சிறப்பம்சங்கள் :*** திருவிழாவின் போது கரகாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், சிலம்பாட்டம் ஆடுவதை ஊர்கூடிக் கண்டு மகிழ்வர். சாராயத்தைப் படைத்து காளிக்குச் சிறப்புப் பூசை நடைபெறும். காளிசாமி பெண்கள் மேல் ஏவி வரும் போது அவர்களும் காளிபோல் ஆடுவார்கள். அவர்களைக் கண்டால் பயம் கொள்ளக்கூடும். திருவிழாவின் போது பெரிய இடத்துச் செல்வந்தர்கள் ***கொடை விழா*** என்று நடத்துவர். நாள் கணக்கில் விசேச பூசையிட்டு அன்னதானம் நடத்துவர். இதனால் பல ஏழைகளின் வயிறு நிறைந்து மனம் உவந்து வாழ்த்துவர்.

தெய்வசக்தியை இத்திருவிழாவின் போது அறியலாம் என்று மக்கள் நம்புகின்றனர். எல்லைசட்டியின் உள்ளே ஊற்றப்பட்டிருக்கும் ஆட்டு இரத்தம் காலையில் ஊற்றிய இரத்தம் மாலை 4 மணிக்கு தேரோடும் வரை உறையாமலே இருக்கும் என்று நம்புகின்றனர். வீர வழிபாடு, இயற்கை வழிபாடு, அன்னை வழிபாடு ஆகிய வழிபாடுகளின் ஒட்டு மொத்தமான உள்ளடக்கத்தை இந்த ஊர் வழிபாட்டு முறைகள் மூலம் அறியலாம். மேலும் மக்களிடையே ஓர் ஒற்றுண்மையையும் உள்ளார்ந்த அன்பையும், நல்லது செய்ய வேண்டும் என்ற நட்புணர்ச்சியும், அல்லது செய்யின் அவலமே மிஞ்சும் என்ற அச்ச உணர்வும் வடபத்ரகாளியம்மன் வழிபாட்டு மரபுகள் மூலம் அறியலாம்.

# முத்தாலம்மன் வழிபாட்டு மரபு

கு. பெரியசாமி, எம்.ஏ.,எம்.ஃபில்.,பிஎச்.டி.,
*திண்டுக்கல்*

நாட்டுப்புறப் பெண் தெய்வங்களான காளியம்மன், மாரியம்மன், பதவதியம்மன் முத்தாலம்மன், பேச்சியம்மன், முத்துமாரியம்மன், தீப்பஞ்சியம்மன், பெரிய காண்டியம்மன் போன்ற தெய்வங்கள் ஊர்ப் பொதுத்தெய்வங்களாகப் பாவிக்கப்படுகின்றன. இத்தெய்வங்களுள் முத்தாலம்மன் வழிபாட்டு முறை சற்று மாறுதல் அடைந்த நிலையில் காணப்படுகிறது. இக்கட்டுரை திண்டுக்கல் மாவட்டம், ஆவிளிபட்டி கிராமத்தில் நடைபெறும் முத்தாலம்மன் வழிபாட்டு மரபுகளை ஆய்கிறது.

***முத்தாலம்மன் வழிபாட்டுக்கதை :*** முத்தம்மாள் என்ற பெண் சேட வீட்டுப்பிள்ளையாகப்பிறந்து வளர்ந்ததாகவும் ஒரு நாள் விளையாடிக் கொண்டிருந்தபொழுது தன் அம்மா திட்டியதால் அங்கு வேலைக்கு வந்து கொண்டிருந்த வீரபாகுச்சாம்புகன் என்ற பறையன் பின்னாலேயே சென்று விட்டாள். அவன் முத்தம்மாவைத் தனியாகப் பச்சைப்பந்தல் இட்டு ஊரின் ஒதுக்குப் புறமாக குடியமர்த்திவிட்டான். முத்தம்மாவிற்கு கறி உணவு ஆசை வரவே அதனை நிறைவேற்ற அவன் கடையில் ஆட்டைத் திருடிப் பாறையில் சுட்டுக்கொண்டிருந்தான் அவ்வேளையில் அவ்வழியில் வந்த வேட்டையாடும் அம்பலக்காரர்களிடம் பொய் கூறித் திருட்டில் சிக்கவைத்தாள். வீரபாகுச்சாம்புகனின் மனைவி, அவனது நடத்தையில் சந்தேகம் கொண்டு தன் நான்கு குழந்தைகளின் கழுத்தையும் தனது நகத்தினால் கீறிக் கொன்றாள், அவன் முத்தம்மாளிடம் முறையிட்ட போது நான்கு குழந்தைகளையும் யாகம் நடத்தி உயிர்பெறச் செய்தாள். பிறகு முத்தம்மாள் தெய்வமாகிவிட்டாள். அவளே முத்தாலம்மன் என்ற பெயரில் வழிபடப்படுகிறாள். (தகவல் : திரு.ரெட்டிணகிரி)

***தோரணம் கட்டுதல் :*** சாமி சாட்டுதல் நாளில் தோரணம் கட்டுகின்றனர். வீதிகளைச் சுத்தம் செய்து வைக்கோலைப் பிரியாகத் திரித்து அவற்றின் நடுவே மாவிலை, வேப்பிலை போன்றவற்றைச் சொருகி வீதியின் இரு பக்கங்களிலும் பச்சை மூங்கில் நட்டுக் கட்டுகின்றனர். இப்பணியைத் தோட்டிகள் செய்கின்றனர்.

***சாமி சாட்டுதல் :*** ஊர் மந்தையில் பறையடித்து தோட்டி (பறையர்) சாமி சாட்டுவதற்கு வரணும் என்று அறிவிக்கிறார். பின்னர் பதினைந்து நாள் சாட்டாக அமைகிறது. சாட்டில் கலந்துகொண்டவர்கள் கண்டிப்பாக விழாவில் கலந்து கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் தீமை நடக்கும், இத்தகையநாட்களில் வெளியூர்களில் உண்ணவோ, தண்ணீர் குடிக்கவோ கூடாது. (தகவலாளர் மாரியம்மாள்)

***கரகம் சோடித்தல் :*** அம்மன் வழிபாட்டு மரபுகளில் கரகம் சோடித்தல் முக்கிய இடம் பெறுகின்றது. விழா தொடக்க நாள் இரவு ஒன்பது மணிக்கு மேல் ஊர்ப் பொது மக்கள் முக்கியஸ்தர்கள், பூசாரிகள், சாமியாடிகள், கரகம் தயாரிக்கும் குயவர்கள் (வேளாளர்) ஆகியோர் கரகம் சோடிக்கும் இடமான முத்தாலம்மன் மண்டு என்ற இடத்தில் கூடுகின்றனர். அம்மன் தெய்வத்திற்கு உரிய ஆடை, அணிகலன்கள் வைக்கப்பட்டுள்ள பெட்டியை ஊர் நாட்டாண்மை சுமந்து வருகிறார்.

***பொதுவாக அம்மன் தெய்வங்களுக்கு :*** புதிய மண் கலயம் அல்லது பித்தளைச் செம்பில் மஞ்சள் கலந்து நீரை நிரப்பி அதனுள் தென்னம் பாளை (பூ) மாவிலை, வேம்பு இலை ஆகியவற்றைக் கொண்டு கூம்பு வடிவாக்கி மலர்கள் அல்லது பட்டு நூல் கொண்டு சுற்றிக்கட்டிக் கரகம் சோடிக்கிறார்கள். ஆனால் முத்தாலம்மன் கரகம் சுடப்படாத பச்சை மன் கொண்டு அம்மன் உருவம் வடிக்கப்படுகின்றது. பின்னர் அதனை ஒரு பலகையில் வைத்து ஆடைகள், நகைகள், மலர்கள், பூட்டி கரகம் அலங்கரிக்கப்படுகின்றது. கரகத்திற்கு உயிர் ஊட்டும் ***கண் திறப்பு*** என்ற நிகழ்வு வேளாளரால் செய்யப்படுகின்றது. கருப்பு மையால் கண்களுக்கு மை இடுவதன் மூலம் இறைமைப்பண்பு அடைவதாகக் கூறுகின்றனர். இறுதியாகப் பூசை செய்து அதனைச் சுமந்து வந்து கோயிலுக்குள் வைக்கின்றனர். அப்பொழுது ஓர் ஆடு பலி கொடுக்கப்படுகின்றது. அதற்குப் ***புகு குட்டி*** எனப்படுகின்றது. அது வேளாளருக்குக் கொடுக்கப்படுகின்றது.

***பொங்கல் வைத்தல், மாவிளக்கு எடுத்தல் :*** அம்மன் வழிபாடுகளில் பொங்கல் வைப்பதும், மாவிளக்கு எடுத்தலும் மரபாகக் காணப்படுகின்றது. பொங்கல் வைக்கும் போது சாமி அமர்ந்து இருக்கும் திசையில் பொங்கினால் அதிக நன்மை என்கின்றனர். இதில் பெண்கள் அதிகம் பங்கு பெறுகின்றனர். அனைவரும் பொங்கல் வைத்த பின்னர் பூசை செய்யப்படுகின்றது அப்பொழுது ஆடு, கோழி போன்றவை பலியிடப்படுகின்றன. மாவிளக்கு என்பது பச்சை அரிசியை இடித்து அதனுடன் வெல்லம், சுக்கு, பொட்டுக்கடலை, ஏலக்காய் போன்றவற்றைத் தூள் செய்து கலந்து விளக்குப்போடும் அமைப்பில்

மாவு பிடிக்கப்படுகின்றது. தெய்வத்திற்குப் படைக்கும் மாவை எச்சில் படாமல் பார்த்துக் கொள்கின்றனர். உறவினர்களுக்குக் கொடுக்கும் மாவில் எள் பயன்படுத்துகின்றனர். அம்மனுக்குப் படைக்கும் மாவில் எள் உகந்ததல்ல என்கின்றனர். (தகவல் ராமாயி அம்மாள்).

*முளைப்பாரி எடுத்தல் :* அம்மன் வழிபாடு தொடங்கப்படுவதற்கு எட்டு நாட்களுக்கு முன்பே முளைப்பாரி வளர்க்கும் முறை காணப்படுகின்றது. பெண்கள் மட்டும இடம் பெறுகின்றனர். முளைப்பாரியில் தானியங்கள் வளர்ந்துள்ள தன்மையைப் போன்றே தனது வாழ்வும் செழிப்புடன் திகழும் என நம்புகின்றனர். (தகவல் செல்வி) அனைத்து வயதுடைய பெண்களும் கோயில் முன்பு முளைப்பாரிகளை வைத்துச் சுற்றி நின்று கும்மியடித்துப் பாடல்கள் பாடுகின்றனர். மாதவிலக்கான பெண்கள், குழந்தை பிறந்து ஒருமாத காலம் ஆகாத பெண்கள் இவற்றில் கலந்து கொள்ளக் கூடாது. விழா இறுதி நாளன்று முளைப்பாரிகளை நீர் நிலையில் விடுகின்றனர். நீரில் கரைக்கும் முன்பு சிறிது முளைப்பயிர்களையும், மண்ணையும் எடுத்துச் சென்று தங்களது வேளாண்மை நிலங்களில் இடுகின்றனர். இதனால் நல்ல விளைச்சல் கிடைக்கும் என நம்புகின்றனர்.

*தீச்சட்டி எடுத்தல் :* தீச்சட்டி எடுத்தல் எனும் நிகழ்வு நேர்த்திக் கடனாகச் செய்யப்படுகின்றது. இதனை பூச்சட்டி என்றும் அழைக்கின்றனர். இதில் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், ஆகிய அனைவரும் இடம் பெறுகின்றனர். மஞ்சள் உடையணிந்த, மஞ்சள் நீரை தலைமுதல் ஊற்றிக் கொண்டு கையில் வேப்பிலை தாங்கித் தீச்சட்டியை ஏற்றி (ஆடிச்) செல்கின்றனர். கோயிலில் வைத்து வழிபடுகின்றனர். விழா இறுதி நாள் அன்று அதனை நீர்நிலையில் அவிழ்த்து விடுகின்றனர்.

*படுகளம் போடுதல் :* முத்தாலம்மன் வழிபாட்டில் படுகளம், கழுமரம் ஆகிய இரண்டும் சிறப்பான இடம் பெறுகின்றன. படுகளம் என்பது மிகவும் ஆபத்தானது என்ற கருத்துள்ளது. இப்பகுதியில் வேளாளர் (குயவர்) வெள்ளாளர், நாயக்கர், செட்டியார், வண்ணார், பள்ளர், பறையர், சக்கலியர், அம்பலக்காரர், ஆசாரி என்று பல இனம் சார்ந்த மக்கள் வாழ்கின்னர். ஆனால் படுகளம் நிகழ்வில் பங்கு கொள்ளும் அனைவரும் பறையர் இனம் சார்ந்தவர்கள் ஆவர். மற்ற இனம் சார்ந்தவர்கள் பார்வையாளர்களாகவே இடம் பெறுகின்றனர். படுகளத்தில் பறையர் இனம் சார்ந்த பதினைந்து வயதிற்குட்பட்ட நான்கு ஆண் பிள்கைளை முத்தாலம்மன் கோயில் முன்பு அமைக்கப்பட்ட கால் பந்தல் தேரடியில் நான்கு திசைகளுக்கு ஒரு பிள்ளை என வானத்தை நோக்கி மல்லாந்து பார்த்தவாக்கில் படுக்க வைக்கின்றனர். படுத்திருக்கும்

பிள்ளைகள் மீது வெள்ளை வேட்டியைப்போட்டு மூடிவிட்டு இறந்தவர்களின் முன்பு அடித்து ஆடும் ***சவ அடியும்*** (தப்பாட்டம்) மாரடிப்பும், ஒப்பாரியும் வைத்து அழுது கொண்டே மடிப்பிச்சை கேட்கின்றனர். இதனையே படுகளம் என்கின்றனர். படுகளத்தில் உள்ள பிள்ளைகளுக்கு ***புழுக்கச்சி*** வேடமிட்டவர் பால் கொடுப்பது போன்று பாவனை செய்கிறார். படுகளப்பிள்ளைகளை எழுப்புவதற்கு ***படுகளக்குட்டி*** (ஆடு) பலியிடப்படுகின்றது. ஆட்டின் இரத்தத்தைப் பிள்ளைகளின் நெற்றியில் இட்டவுடன் அவர்களை நான்கு பேர் கையில் தூக்கிக் கொண்டு கோயில் வீட்டிற்கு ஓடிக் செல்கின்றனர். அங்கு பூசை நடத்திப் பின்னர் உண்பதற்கு உணவு பரிமாறப்படுகிறது இதனை ***விரதம் விடுதல்*** என்று கூறுகின்றனர்.

***படுகளத்தில் காணிக்கை :*** படுகளத்தில் படுத்திருக்கும் பிள்ளைகளின் பெற்றோர் (ஆண்கள் மட்டும்) பார்வையாளர்களின் ஊடே சட்டை அணியாமல் சென்று மேல் துண்டை விரித்து ஏந்தி அதில் காணிக்கையாகக் காசுகளைப் பெறுகின்றனர். அந்தக் காணிக்கையை வழிபாட்டின் எட்டாம் நாள் நடத்தும் கருமாதி நிகழ்விற்குத் தாங்கள் பயன்படுத்துவதாகக் கூறுகின்றனர். படுகளத்தின்போது வேடமிட்டவர்களும் ஆசிர்வாதம், அருள்வாக்கை கொடுத்து கொண்டு காணிக்கை பெறுகின்றனர். அம்மன் வேடம், புழுக்கச்சி (சாம்புகனின் மனைவி) வேடம் போட்டவர்கள் பறையர் இனமக்கள் என்பது குறிப்பிடத்தக்கது. படுகளப்பிள்ளைகள் சிறு வயதுடைய ஆண் பிள்ளைகளாக இருக்க வேண்டும். காரணம் அவர்களை விரைவாகத் தூக்கிக் கொண்டு ஓட வசதியாக இருக்கும். மேலும் வருபாகுசாம்புகளில் ஆண் பிள்ளைகள் நான்கு பேரும் சிறு பிள்ளைகளாக இருக்கும் போதுதான் அவன் மனைவி கொன்று விட்டாள். இதில் படுகளப்பிளைகைளை நேர்த்திக்கடனாகவே இனத்தவர்கள் ஈடுபடுத்துகின்றனர். (தகவல் பொன்னம்மாள்)

***கழு (வழுக்கு) மரம் ஏறுதல் :*** கழு மரம் உயரமான வழுக்கும் மரம் என்று கூறுகின்றனர். கழுமரத் தேர்வின் போது சாமியிடம் குறிகேட்டு திசையறிந்து சென்று வெட்டி வருகின்றார். கழு மரமாக உயரமான ***பீநாத்தி*** (தீக்குச்சிகள் செய்யப்பயன்படும்) மரம் பயன்படுத்தி வந்ததாகவும், அவற்றின் எண்ணிக்கை குறைந்து விட்டதால் உயரமான ***குரோளியர்*** போன்ற கடினமான மரம் பயன்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறுகின்றனர். கழுமரம் வெட்டி வரப்பட்ட பின்னர் அதன் பட்டை நீக்கி இழைக்கப்பட்டு ஆசாரிகளால் தயார்படுத்தப்படுகின்றது. மரம் வழுக்குத்

தன்மை அடைய சோற்றுக் கற்றாழை, கேழ் வரகு, விளவிச்சாறு, விளக்கெண்ணெய் போன்றவை மரத்தின் மீது பூசப்படுகின்றது. கழு மரம் ஏறுபவர்கள் மீதும், மரத்தின் மீதும் மஞ்சத்தண்ணீர் ஊற்றப்படுகின்றது. மரம் சுமார் 60 அடி முதல் 70 அடி உயரம் வரை காணப்படுகின்றது. மரத்தின் உச்சியல் பரிசுப்பொருளாகப் பணமுடிப்பு, தேங்காய், பழம், திருநீறு போன்ற பூசைப்பொருள்களையும் மஞ்சள் துணியில் கட்டி வைத்துள்ளனர். கழு மரம் ஏறும் நிகழ்வில் அம்பலக்காரர்கள் மட்டுமே ஈடுபடுகின்றனர். பிற இனத்தவர் கண் பார்வையாளர்களாக உள்ளனர்.

***கரகம் புறப்பாடு :*** விழாவின் முதல் நாள் சோடிக்கப்பட்ட கரகம் விழாவின் இறுதி நாள் மதியம் புறப்பாட்டு நிகழ்வுக்கு உட்படுத்தப்படுகின்றது. அப்பொழுது ஓர் ஆடு பலியிடப்படுகின்றது. இதனை ***போக்கு கட்டி*** அல்லது பயணக்குட்டி என்கின்றனர். இக்குட்டியின் இறைச்சி பறையருக்கு உரியது. கரகம் கொண்டு செல்லும் வழியில் மஞ்சள் நீராட்டு (விளையாட்டு) நிகழ்வு நடைபெறுகிறது. முத்தாலம்மான் கரகம் நீர் நிலையில் கரைக்கப்படுவதில்லை, மாறாக கள்ளிச் செடி (புதர்)க்கு அடியில் அல்லது பூவரசம் மரத்தின் அடியில் வைக்கப்படுகின்றது. அம்மனது ஆடை, அணிகலன்கள் அகற்றப்பட்டு சிலையின், சுண்டு விரலையும் உடைத்து விட்டு பறையர் தவிர மற்ற இனத்தவர்கள் சென்று விடுகின்றனர். பறையர்கள் தாங்கள் எடுத்து வந்த புதுத்துணியை அம்மனுக்குப் போட்டு அங்கேயே அமர்ந்து அழுது புலம்பும் நிகழ்வு நிகழ்த்தப்படுகின்றது. இதன் மூலம் சாமி இறந்ததாகவும், இறந்தவர்களை காயம் (ஒச்சம்) செய்து விட்டு அவர்கள் சென்று விட்டதாகவும் கூறுகின்றனர். (தகவல் : சக்தி)

முத்தாலம்மன் பற்றிய ***நாட்டுப்புறக்கதைப்பாடல்கள்*** மற்றும் ***நாடகம்*** போன்றவை இன்றும் வழக்கத்தில் உள்ளன. முத்தாலம்மன் தெய்வம் பறையர் இனமக்களிடம் இருந்ததாகவும் தாங்களால் வழிபட முடியாத நிலையில் வெள்ளாளர்களிடம் ஒப்படைத்தாகவும் கூறுகின்றனர். அம்பலக்காரர்கள் கழு மரம் ஏறுதல், பறையர்கள் படுகளம் போடுதல், அம்மன் வேடம், புழுக்கச்சி வேடம் புனைந்து ஆடுவதையும் காண முடிகின்றது. இந்நிகழ்வுகள் யாவும், ***போலச் செய்தலை*** நினைவு கூறுகின்றன. முத்தாலம்மன் வழிபாட்டு மரபில் கரகம் சோடித்தல், கரகத்தை கள்ளிச் செடியின் அடியில் வைத்தல் போன்றவை அம்மன் இறந்து விட்டதாகவும் எட்டாம் நாள் பறையர்கள் இணைந்து காரியம் செய்து உணவு வழங்கும் நிகழ்ச்சியும் காணமுடிகின்றது.

# தேவேந்திர குல வேளாளரின் சந்திரசூரியன் குலதெய்வ வழிபாடு

**க.இல. மகேந்திரன்,** எம்.ஏ., எம்.ஃபில்.,
*அரசு கலைக்கல்லூரி, உதகமண்டலம்.*

மனித வாழ்க்கையில் இறைவழிபாடு என்பது மிகவும் இன்றியமையாததொன்றாகக் காணப்படுகின்றது. நகர்ப்புறங்களிலும், கிராமப்புறங்களிலும் மக்கள் தங்களுக்கு விருப்பமுடைய தெய்வங்களை வணங்கி வருகின்றனர். இதில் பெருந்தெய்வ வழிபாடு, சிறுதெய்வ வழிபாடு என்ற இருமுறைகளிலும் வழிபடுகின்றனர். குலதெய்வ வழிபாடு என்பது சிறுதெய்வ வழிபாட்டின் ஒரு முக்கியப் பிரிவாகக் கொள்ளலாம்.

திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை வட்டம் என்ற இடத்திலிருந்து சுமார் இருபத்தைந்து கிலோமீட்டர் தொலைவில் கட்டகாமன்பட்டி என்ற கிராமம் உள்ளது. இக்கிராமத்தில் வசிக்கின்ற தேவேந்திரகுல வேளாளர்கள் நூறு பங்காளிக்குடும்பங்கள் என்ற முறையில் ஒரு பிரிவினர் ***சந்திரசூரியன்*** என்ற ஆண்தெய்வத்தையும், ***வெள்ளாளச்சி*** என்ற பெண்தெய்வத்தையும் குலதெய்வங்களாக வழிபட்டு வருகின்றனர். இக்குலதெய்வ வழிபாட்டு முறையை வெளிப்படுத்திக் காட்டுவது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

***வரலாறும் கோயில் அமைப்பும் :*** சந்திரசூரியன் ஆண் தெய்வமாகவும், வெள்ளாளச்சி பெண் தெய்வமாகவும் வழிபாட்டுக் குலதெய்வங்களாக வணங்கப்படுகின்றன. இயற்கைத் தெய்வங்களை வணங்கி வந்த இம்மக்கள் காலப்போக்கில் தங்கள் குலதெய்வத்திற்கு வடிவம் ஒன்று அமைத்து அதற்கு சந்திரசூரியன் என்று பெயரிட்டு வழிபட்டு வருவதாகக் கூறப்படுகின்றது. பெண் தெய்வமாகிய வெள்ளாளச்சி, இவ்வூரில் உள்ள ஒருவர் சந்தைக்கு மாடு வாங்கச் சென்று தன் வீடு திரும்பி வரும்போது ஒரு பெண் உருவம் அவருடன் வந்ததாகவும், பின் அந்தப் பெண் உருவம் மறைந்துவிட்டதாகவும் கூறப்படுகின்றது. பின்னர் அக்கிராமத்தில் அப்பெண் உருவத்தினையே தங்களுடைய குலதெய்வப் பெண்ணாக வணங்கி வெள்ளாளச்சி என்று பெயரிட்டதாகவும் கூறப்படுகின்றது. சந்திரசூரியன் குலதெய்வக் கோயில் கட்டகாமன்பட்டி ஊரின் நடுவே அமைந்துள்ளது. இக்கோயில்

சிறிய கோபுரத்துடன் காணப்படுகின்றது. கோயிலின் கருவறையில் சந்திரசூரியன் தெய்வம் செதுக்கப்பட்ட சிலைவடிவத்திலும் வெள்ளாளச்சி என்ற பெண்தெய்வம் வெங்கலத்தால் செய்யப்பட்ட சிலைவடிவிலும் காணப்படுகின்றன. குலதெய்வக் கோயிலும் தெய்வங்களும் கிழக்குமுகம் நோக்கிய நிலையில் அமைந்துள்ளன.

*விழா நடைமுறை :* இவ்வூரில் உள்ள சந்திரகுலத்தைச் சார்ந்த நூறு பங்காளிக் குடும்பங்கள் ஒன்றுகூடித் திருவிழா நடத்துவதற்கான நாளினைக் குறித்து முடிவு செய்வார்கள். இவ்வாறு செய்யப்பட்ட முடிவை திருவிழாக்கட்டு என்பார்கள். இவ்வகுப்பினரை சந்திரன்கூட்டப் பங்காளிகள் என்றும் அழைப்பதுண்டு. இவர்கள் அனைவரின் முன்னிலையில் விழாநாட்களும், நிதிநிலை ஆதாரங்களும் நிகழ்ச்சி நிரலும் உறுதிசெய்யப்படும். இவ்விழா வருடாவருடம் ஆடிமாதத்தில் மூன்றுநாட்கள் கொண்டாடப்படுகின்றது. திருவிழாக் கொண்டாடப்படும் செய்தி முடிவான பிறகு அக்குலவகையறாக்கள் ஒரு மாத காலத்திற்கு மாமிச உணவு வகைகளைச் சாப்பிடமாட்டார்கள். மற்றவர் வீடுகளிலும் சென்று உண்ணக்கூடிய மற்றும் அருந்தக்கூடிய பொருள்களையும் சாப்பிடமாட்டார்கள். பங்காளிகளின் வீடாக இருந்தாலும், தவிர்த்து விடுகின்றனர்.

*காப்புக் கட்டுதல்:* காப்புக்கட்டுதல், திருவிழாவின் தொடக்க நிகழ்ச்சியாகும். இக்குலதெய்வத்திற்குக் காப்புக் கட்டுபவர் சந்திரன் கூட்டப் பங்காளிகளில் ஒருவரே ஆவர். இவரின் குடும்பம் பூசாரிக் குடும்பம் என்று அழைக்கப்படும். இக்குடும்பத்தைச் சர்ந்த, தலைமகனே பூசைசெய்யும் பொறுப்பினை ஏற்றுக்கொள்வார். இவரே இத்தெய்வங்களுக்குப் பூசாரியாகவும் திருவிழா முடியும்வரை பூசை வேலைகளை மேற்கொள்பவராகவும் இருக்கிறார். திருவிழா முடியும் வரை விரதம் மேற்கொண்டு தன்வீட்டுக்குச் செல்லாமல் கோவிலிலேயே தங்கியிருந்து இரவு பகலாக வழிபாட்டு முறைகளைக் கவனித்துக் கொள்கிறார். இவருக்கு உறுதுணையாக நூறு பங்காளிகள் குடும்பங்களும் துணைநிற்கின்றனர். இவர் இப்பொறுப்பினை ஏற்றுக் கொள்ளாத சமயத்தில் அவருடைய சகோதரர்கள் இப்பொறுப்பினை ஏற்றுக்கொள்வார்கள்.

*முதல்நாள் திருவிழா :* முதல்நாள் அன்று பூசாரியாக உள்ளவர் குலதெய்வங்கள் இருக்கும் கோயிலைச் சுத்தம் செய்து அத்தெய்வங்களுக்குப் பூசை செய்து சிறப்பு வழிபாடுக்கான நிகழ்ச்சியினைத் துவக்கி வைக்கிறார். அன்றையதினம் தெய்வங்களுக்குப் பூசை செய்து பொங்கல் வைக்கப்படுகின்றது. பிறகு

அங்குள்ள அனைத்துப் பக்தர்களுக்கும் அன்னதானம் வழங்கப் படுகிறது. அவ்வூரில் உள்ள மக்கள் பிற ஊர்களில் உள்ள தங்கள் உறவினர்களையும் வரவழைத்து அவர்களுக்கும் விருந்து படைப்பர். இரவு நேரத்தில் அக்குலமக்கள் ஒன்றுகூடி நாடகம், கலைநிகழ்ச்சிகள் போன்றவற்றைச் சிறப்பாக நடத்துகின்றனர்.

***இரண்டாம் நாள் திருவிழா :*** இரண்டாம் நாள் திருவிழாவில் கோயில் பூசாரி சாமிப்பொருட்களை எல்லாம் எடுத்துக்கொண்டு அக்குலம் சார்ந்த பெரியவர்களோடு அருகில் உள்ள ஆற்றங்கரைக்குச் சென்று சாமிப்பொருட்களைச் சுத்தம் செய்து அப்பொருட்களைப் பெட்டியில் போட்டுத் தன் தலைமீது வைத்துக் கொண்டு வருவார். அச்சமயம் அவருக்கு அருள்வந்து வாத்திய இசைக்கருவிகள் முழங்கக் கோயிலை நோக்கி ஆடிவருவார். அவருடன் வரும் பக்தர்களும் அருள்வந்து ஆடிவருவார்கள். இவ்வாறு இவர்கள் ஆடிவரும்போது உடன்வருகின்ற பிற உறவினர்கள் வெள்ளைத்துணியைத் தலைக்குமேல் விரித்து நாற்புறங்களிலும் நால்வர் பிடித்துக்கொள்ள அதனுள்ளே அருள் வந்தவர்கள் ஆடிவருவார்கள். இவ்வாறு ஆடிவரும் சமயத்தில் ஆற்றங்கரையை அடுத்துச் சிறிது இடைவிட்டு அகலமான பள்ளம் அமைத்து தீக்குண்டம் அமைத்திருப்பார்கள். முதலில் வருகின்ற பூசாரி அந்நெருப்புக்குண்டத்திற்குள் அருளுடன் இறங்கிவருவார். அவரைத் தொடர்ந்து அருள்வந்து ஆடுபவர்களும் தீமிதித்துக் கொண்டு கோயிலை நோக்கி ஆடிவருவார்கள். இவர்கள் ஊர்வலமாக வரும்போது உறுமிமேளங்களுடன் கரகாட்டம் வாணவேடிக்கை என பல நிகழ்ச்சிகளும் இடம்பெறுகின்றன.

***மூன்றாம் நாள் திருவிழா :*** மூன்றாவது நாள் திருவிழாவில் முளைப்பாரி வளர்த்து அதனைக் கொண்டு வந்து கோயிலில் வைத்து வழிபடுவார்கள். இம்முளைப்பாரி என்பது பயிறுவகைகளால் வளர்க்கப்பட்டவைகளாகும். இதனையே மக்கள் முளைப்பாரி என்று வழங்குகின்றனர். வழிபாடு முடிந்தவுடன் அருகாமையில் உள்ள ஆற்றில் அம்முளைப்பாரியை விட்டுவிடுவது வழக்கம். அன்றைய நாளில் கும்மியடித்தல், காவடி எடுத்தல் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. திருவிழாவின் மூன்றாவது நாள் இறுதிநாளாகக் கொண்டாடப் படுவதால் மஞ்சள் நீராட்டு விழாவும் கொண்டாடப்படுகின்றது. இவ்விழா சிறுதெய்வ வழிபாடாக இருந்தபோதிலும் பலியிடுதல், கறிசமைத்தல் போன்ற சிறுதெய்வ வழிபாட்டுச் சடங்கு ஏதும் இடம்பெறுவதில்லை. விழாத் தொடங்கிய எட்டாவது நாள் மறுபூசை செய்யப்படுகின்றது. இதிலும் எந்தவிதமான உயிர்ப்பலியும் கொடுக்கப்படுவதில்லை.

*சாமி காணிக்கை :* திருவிழா சமயத்தில் கோயிலில் பொங்கல் வைத்து அன்னதானம் செய்வதற்காக அம்மக்கள் தங்கள் வெள்ளாமையில் மூன்றுமரக்கால் நெல்லைத் தங்களுடைய வீடுகளில் சேமித்து வைத்திருப்பர். இப்பொழுது மூன்றுமரக்கால் என்பது பன்னிரண்டு படி நெல் ஆகும். நிலம் உள்ளவர்கள் மட்டுமே தங்கள் வெள்ளாமையில் சாமிக்கெனச் சேர்த்து வைப்பது குறிப்பிடத்தக்கது. திருவிழா அல்லாத சமயங்களில் வெள்ளிக்கிழமை மற்றும் செவ்வாய்க்கிழமைகளில் சாதாரண நிலையில் பொங்கல் வைத்து வழிபடுவதும் உண்டு. மற்றும் சாமி காணிக்கையாக அவரவர் விருப்பம்போல் நேர்த்திக் கடன்களைச் செலுத்துகின்றனர்.

*வரி வாங்கும்முறை :* குலதெய்வத் திருவிழா நடைபெறும் சமயத்தில் அக்குலத்தைச் சார்ந்த மக்களிடம் திருவிழா நடத்துவதற்கான வரிவசூல் செய்வது வழக்கம். அவ்வாறு வரிவசூல் செய்யும்போது ஆண்வாரிசு இல்லாத வீடுகளில் வரிவசூல் செய்யமாட்டார்கள். அதுமட்டுமல்லாமல் நூறு பங்காளிகள் வகையறாக்களில் எவரேனும் திருவிழாச்சாட்டுக்குப் பிறகு இறந்துவிட்டால் திருவிழாவானது தீட்டு என்ற காரணத்தினால் அவ்வாண்டுக்கு நிறுத்தி வைக்கப்படுகின்றது. அதன் காரணமாகத் தங்கள் வீடுகளில் கோயிலுக்கென்று சேமித்து வைத்திருந்த நெல்லை விற்றுப் பணத்தைச் சாமிக்கு வரியாகக் கொடுத்துவிடுகின்றனர்.

*சாமி நம்பிக்கை :* இக்குலதெய்வத்தை வணங்கும் இம்மக்கள் தங்களுடைய கோரிக்கை எண்ணங்கள் நிறைவேறிவிட்டால் தங்களின் வசதிக்கேற்ப விருப்பம் போல் நேர்த்திக் கடன்களைச் செலுத்துகின்றனர். இக்குலதெய்வம் அமைந்திருக்கும் கோயிலின் முன்பு ஒழுக்கம் தவறிய பெண்கள் செல்லுதல் கூடாது. அவ்வாறு மீறிச்சென்றால் அவர்கள் இறந்துவிடுவார்கள் என்றும் கூறப்படுகின்றது. மேலும் அக்குலதெய்வத்திற்குரிய பொருட்களைத் திருடிச் சென்றுவிட்டாலும் கடும் துன்பத்திற்கு உள்ளாவார்கள் என்று நம்பப்படுகின்றது. இம்மக்கள் தங்களுக்கு ஏதாவது இடையூறோ அல்லது துன்பமோ வரும்போது அதனை நீக்கி வைக்கும்படி இவ்விறைவனை வேண்டிக் கொள்கின்றனர். அவ்வேண்டுதலின் காரணமாகப் பல நன்மைகள் நடக்கின்றன என்று அவ்வட்டார மக்களிடம் நம்பிக்கை நிலவுகின்றது.

*பிற சிறுதெய்வங்கள் :* இவ்வூரில் வேட்டுவச்சி ஊர்காலன்சாமி இடமலையான்சாமி என்ற சிறுதெய்வங்களும் காணப்படுகின்றன. வேட்டுவச்சி ஊர்காலன்சாமி என்ற இருதெய்வங்களும் காவல் தெய்வங்களாக விளங்குகின்றன. வேட்டுவச்சிசாமி அந்த ஊரின் ஆற்றங்கரையில் அமைந்துள்ளது. ஊர்காலன்சாமி ஊரின்புறத்தே

அமைந்துள்ளது. வேட்டுவச்சிசாமிக்குக் கோழி, ஆடு போன்ற உயிர்களைப் பலியிட்டு வழிபாடு செய்வதும் விருந்து படைப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இடமலையான்சாமி இவ்வூரை ஒட்டி ஒரு கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. இச்சாமிக்குப் பூசை செய்யும் காலத்தில் ஐம்பதுக்கும் மேற்பட்ட கிராமங்களிலிருந்து இக்குலமல்லாத பிற பிரிவுமக்களும் வழிபாடு செய்யக் கலந்து கொள்கிறார்கள். வழிபாடு செய்யும் சமயத்தில் சுமார் ஆயிரம் கிடாய்கள் வெட்டிப் பூசை நடத்துகின்றனர். ஊர்காலன்சாமிக்குப் பொங்கல் வைத்து வழிபட்டால் தேவேந்திரகுல வேளாளர் அல்லாத பிற சாதியினர் வந்து இக்குலமக்களோடு சண்டையிடமாட்டார்கள் என்றும் அதற்கு ஊர்காலன் சாமிதான் தடுப்புக் காவலாய் இருக்கின்றார் என்ற நம்பிக்கையும் நிலவுகின்றது.

நிலக்கோட்டை வட்டாரத்தில் கட்டகாமன்பட்டி தேவேந்திரகுல வேளாளர்களில் ஒருபிரிவு நூறு பங்காளிகளின் குடும்பங்கள் தங்களின் குலதெய்வமாக சந்திரசூரியன் மற்றும் வெள்ளாளச்சி என்ற தெய்வங்களை வணங்கி வருவதை இவ்வாய்வின் மூலம் அறியலாகின்றது. ஆய்வுக்களமாக எடுத்துக்கொள்ளப்பட்ட இவ்வூரில் குலதெய்வ வழிபாட்டில் குலதெய்வங்களின் வரலாறு, கோயில் அமைப்பு, கோயில் திருவிழா, வழிபாட்டு முறை ஆகியன பற்றி ஆராயப்பட்டுள்ளன. சந்திரசூரியன் வெள்ளாச்சியை தேவேந்திரகுல வேளாளர்கள் ஒருபிரிவினர் மட்டும் குலதெய்வமாகக் கொண்டிருப்பதை அக்குலதெய்வ வழிபாடுகளின் மூலம் அறியமுடிகிறது.

## முடிவுகள்

சந்திரசூரியன் குலதெய்வத்தின் பெண் தெய்வமாக வெள்ளாளச்சி என்ற பெண் தெய்வம் வணங்கப்பட்டு வருகிறது. இக்குலதெய்வங்கள் சிறுதெய்வங்களாக இருந்தபோதும் ஆடு, கோழி போன்ற உயிரினங்கள் உயிர்ப்பலியிடப்படுவதில்லை என்பது பிறதெய்வ வழிபாட்டு முறையிலிருந்து மாறுபட்டுக் காணப்படுவதை அறியமுடிகின்றது. இக்குலதெய்வத் திருவிழா சமயத்தில் வரிவசூல் செய்யும்போது ஆண்வாரிசு இல்லாத குடும்பங்களில் வரிவசூலிக்கும் முறை இல்லை என்பது தெரியவருகின்றது. சந்திரசூரியன் அல்லாத இவ்வூரில் உள்ள பிறதெய்வங்களுக்கு உயிர்ப்பலியிடுவது வழக்கத்தில் உள்ளது என்றும் தெரிகிறது. சாமியின் காணிக்கை மற்றும் பிற சொத்துக்களை அபகரித்து வாழ்பவர்கள் இறந்துபோவார்கள் என்றும், அச்செயல் மிகப்பெரிய சாமி குற்றத்தை ஏற்படுத்துவன என்றும் அம்மக்கள் அஞ்சுகின்றனர் என்பதும் தெரியவருகின்றது.

# நீலகிரித் தோதவர் இன மரபும் வழிபாடும்

**வெ.மனோகரன்,** எம்.ஏ.,எம்.ஃபில்.,டி.டி.இ.,
*மாவட்டக்கல்வி மற்றும் ஆசிரியர் பயிற்சி நிறுவனம், மாயனூர்.*

## முன்னுரை

இந்தியாவின் மக்கள் தொகையில் ஐந்து கோடியே நாற்பது இலட்சம் பழங்குடியினர் வாழ்ந்து வருகின்றனர் என்பது 1991 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்புத் தகவல். உலகில் உள்ள ஒவ்வொரு நாட்டின் மக்கள் தொகையிலும் ஐந்து முதல் பத்து சதவிகிதம் வரை பழங்குடியினர் வாழ்ந்து வருகின்றனர் என ஆய்வுத்தகவல் கூறுகிறது. பிக்மி - ஆப்பிரிக்கர், சபட்டி - ஜைந் கிசி - வடமேற்கு ஆப்பிரிக்கா, இகா-தென் அமெரிக்கா, டிங்கா-சூடான், ருட்ஸி - ருவாண்டா - புருண்டி, அசாந்தி - வடமேற்கு ஆப்பிரிக்கா, பாண்ட்டு - ஆப்பிரிக்கா, கிக்யூ-கென்யா, டான்-லைபிரியா, மாஸ்கோ- தெற்கு சூடான் துருக்பா - பூட்டான் எனப் பல இனத்தவர்கள் உலகத்தில் வாழ்ந்து வருகிறார்கள் கோவா, கோண்டு, எருக்கலவாரு, கதபர், போண்டோ, காசி, தோதவர் - என இந்தியாவில் பல வகையான பழங்குடிகள் வாழ்ந்து வருகின்றனர். சிறுகுழுக்கள், குழுக்கள், கால்வழி (Clan Pharatry) பெருங்கால்வழி (Pharatry) சிற்றூர் முதலிய, வட்டாரக் குழுக்களை உள்ளடக்கியதும் பொதுவான மொழி அல்லது கிளை மொழியையும், பொதுவான பண்பாட்டையும் கொண்டதுமான சமூக அமைப்பின் ஒரு முறையே பழங்குடி என அழைக்கப்படுகின்றது.

## நீலகிரி தோதவர்

உலகத்தின் மிகச் சிறப்பு வாய்ந்த பழங்குடியினர் இவர்கள். மிகவும் பழமையானவர்கள் இவர்களைக் காலத்தால் அளந்துவிட முடியாது. இனவகையிலும் இவரைக் கணித்து அறிய முடியாது. இவர்கள் தோற்றம் வளர்ச்சி மற்றும் வரலாற்று நெறியைக் கொண்டும் பழமையைக் கணிக்க முடியாது. இவர்கள் பழமையாய் வாழ்ந்துவரும் மரபினர், தம் வாழ்வுப் பாங்கினை இன்றளவும் மாற்றிக்கொள்ளாமலேயே உள்ளனர். இவர்களை நீலகிரி மலையின்றி வேறு எங்கும் காணமுடியாது.

***மந்து-வீடு-நம்பிக்கை :*** தோதவர் வாழும் இடங்களை மந்து என்று அழைப்பர். உதக மந்து என்ற ஊர்பெயர் இவர்களுடையது. சிறுசிறு

மந்துகளில் இவர்கள் சிறுகுடும்பங்களாக இணைந்து வாழ்கின்றனர். ஒவ்வொரு மந்திலும் பத்து அல்லது பன்னிரெண்டு வீடுகளே இருக்கும். பெரிய மந்துகளைத் தெய்வாம்சம் பொருந்தியது என நம்பினர். மந்திலிருந்து பிரிந்தவர்கள் இன்று சுமார் பதினான்கு பிரிவினர் உள்ளனர். இவர்கள் இருநூறு மந்துகளில் வாழ்ந்து வருகின்றனர். பிரிந்து வாழ்ந்தாலும் தங்களுக்குள் நடைபெறும் பலவிதத் திருவிழாக்களில் தவறாமல் ஒன்றுகூடி மகிழ்ந்து வாழ்கிறார்கள்.

*செய்தி அறிவித்தல் :* பல்வேறு இடங்களில் பிரிந்து வாழ்ந்து வரும் பழங்குடி தோதவர்களுக்கு நல்லசெய்தி, கெட்டசெய்தி ஒலி வழியாகவே. அதாவது குரல் ஒலி எழுப்ப அது அடுத்த மந்தில் எதிரொலிக்கும். அங்கு உள்ளவர்கள் அடுத்த மந்துக்குக் குரல் ஒலி எழுப்ப, இப்படியே செய்தி' அனுப்புவர். அந்த ஒலியின் அமைப்பை வைத்து செய்தியின் தன்மை அதாவது நல்லது கெட்டது என அறிந்து கொள்வர்.

***உணவு வகைகள் :*** இந்தியாவிலும் சரி உலகத்தில் எந்த நாட்டிலும் சரி. பழங்குடி இனத்தவர்களில் சைவ உணவுப்பழக்கம் கொண்டவர். நீலகிரி தோதவர் இன மக்கள்தான். மறந்தும் கூட மாமிச உணவைச் சாப்பிட மாட்டார்கள். இன்றும் அந்தப் பழக்கம் தொடர்ந்து வருகிறது.

***சிறிய வாயில் கொண்ட வீடுகள் :*** தோதவர்களின் வீடுகளில் குளிர் தாக்காத முறையிலும், வேறு வனவிலங்குகள் வீட்டுக்குள் புகாதபடியும், சிறிய வீடுகளாக அமைப்பதும் அந்த வீட்டுக்கு சிறிய வாயில் கொண்ட வீடுகளை அமைத்துக் கொள்வார்கள். அதுமட்டுமல்லாமல் வீடுகள் மலைக்கும், காட்டுக்கும் செல்லத்தக்க வகையில் அமைக்கப்பட்டிருக்கும்.

*தொழில்கள்-பொழுதுபோக்குகள் :* ஆண்கள் தோட்ட வேலையிலும் பெண்கள் பகல் நேரத்தில் வீட்டிற்கு எதிரில் உள்ள மரநிழலில் அமர்ந்தபடி கைவேலைகளில் ஈடுபடுவர். சிறுவர்கள் எருமை மேய்ப்பதிலும் ஈடுபடுவர். பொழுதுபோக்கு நிகழ்ச்சியாக விழாக் காலங்களில் அனைவரும் கண்டுகளித்து ஆடிப்பாடி மகிழ்கின்றனர். பெண்கள் பாட்டுக்கு ஏற்ப ஆண்கள் நடனமாடுவது சிறப்பு நிகழச்சியாகும். இவர்கள் இறைவனைப் போற்றிப்பாடும் பாடல்கள் கருத்தாழம் மிக்கவையாகும். ஆண்கள் ஒரு மலையிலிருந்து மற்றொரு மலைக்கும் ஒரு மந்திலிருந்து மற்றொரு மந்திற்கும் ஓட்டப்பந்தயம் வைத்து ஓடி வெற்றி பெறுவார்கள் ஓடுபவர்கள் மீது பந்தயம் கட்டும் வழக்கமும் இவர்களிடம் காணப்பட்டது. இதுபோன்ற விழாக் காலங்களில் பெண்கள் பாட்டுப்பாடி நடனமாடியும் பொழுதுபோக்கினார்கள்.

***சிறந்த பண்பாளர்கள் :*** தோதவர் இனத்தில் ஆடவர் மட்டுமின்றிப் பெண்டிரும் விருந்தினரை ஏற்று இன்முகங்கொண்டு உபசரிக்கும் உயர்ந்த பண்பு கொண்டவர்கள். இவர்களின் வாழ்விலும் தாழ்விலும் ஒற்றுமையே பலம் என்பதை உணர்ந்தவர்கள். அதுமட்டுமல்லாமல் இன்பம் - துன்பத்திலும் இணைந்தே. இரண்டையும் தங்களுக்குள் பகிர்ந்து கொள்ளும் இயல்பினர். இம்மரபினைச் சேர்ந்த அனைவரும் ஒன்றுகூடும் வரையில் நல்லவை, கெட்டவைகளை நிறுத்தி வைப்பர். திருமண நாளை முன்கூட்டியே எல்லா மந்துகளுக்கும் தெரிவித்து விடுகின்றனர். நெருங்கிய உறவினர்கள் பலரும் முதல் நாள் மாலையே வந்து கூடுகின்றனர். சோதிடர்களை அழைத்து நாள் நட்சத்திரம் பார்த்துத் திருமணம் செய்யும் வழக்கம் இவர்களிடத்தில் இல்லை.

மணவிழா மேற்கொள்ளப்படும் இடத்தைச் சுத்தம் செய்து வழிபாடு தொடங்குவார்கள். இரண்டு குச்சிகளை நட்டு வைத்து அவற்றிற்குக் கருப்புத்துணியை ஆடையாக்குவர். மணமகனை ***பீரி*** என்றும் மணமகளை ***பீனி*** என்றும் அழைப்பது இவர்களது வழக்கம். நட்டகுச்சிகளைத் தெய்வமாகப் போற்றி மணமகள் கையால் சமைக்கப்பட்ட உணவுப்பொருட்களை அவற்றிக்குப் படைத்து, நூல் திரியைக் கொளுத்தி, மணமகள் கையில் நான்கு இடங்களில் சுடுவர். அப்போது அருகிலிருந்து எல்லா உறவினர்களும் வாழ்த்துவர். நீர் கொண்டு வந்து இருகுச்சிகளின் மீதும் எருமை மீதும் தெளிக்கப்படுகிறது. எருமையே இந்த இனமக்களின் தெய்வமாகும்.

***புதுவிதமான வழக்கம் :*** வாதுமைப் பருப்பு நிறத்தில் இருக்கும் இவர்கள் இந்தியாவிலேயே உயரமான பழங்குடியினர் ஆவர். இன்றுவரை ஆடு மாடுகள் மேய்த்து மிகவும் எளிமையான வாழ்வு வாழ்ந்து வருபவர்கள். நீண்ட அங்கியை மேலே அணிந்து கொள்கின்றனர். விளையாட்டுகளின் போது தாடி மீசையை நன்கு மழித்துக் கொள்வதும் இவர்களிடத்தில் உண்டு. இவர்களின் அழகிய நேர்த்தியான வேலைப்பாடமைந்த தையல் கலையைப் ***புகர்*** என்று பெயரிட்டு அழைக்கின்றனர்.

***சமூக மேம்பாடு - கல்வி வசதி :*** இவர்களுக்கு ஊர்தோறும் பள்ளிக்கூடம் இல்லை. பொதுவாகச் சில மந்துகளுக்கு இடையே ஐந்தாம் வகுப்பு வரையிலான பள்ளிகள் நடத்துகின்றனர். இவர்களின் கல்வி வளர்ச்சி பெரும்பாலும் ஐந்து வகுப்புடன் முடிந்து விடுகிறது. இன்று தமிழக அரசு ஒரு சதவீதம் இட ஒதுக்கீடு செய்து அவர்கள் கற்ற கல்வித்தகுதிக்கு ஏற்ப அரசுப் பணியை வழங்குவதால் அவர்களின் குழந்தைகளை உயர்நிலை மேல்நிலை கல்வி மற்றும் உயர் கல்வி வரையில் படிக்க வைக்க முயற்சி செய்வது ஓரளவுக்குத் தெரிகிறது.

இன்றும் தமிழக வேலைவாய்ப்பகங்களில் எப்பொழுதும் காலியாக இருக்கும் இட ஒதுக்கீடு, பழங்குடியின மக்களின் ஒதுக்கீடு ஆகும். ஆனால் பெரும்பாலான மக்கள் கல்வி, நாகரீகம், சுகாதாரம் போன்ற நிலைகளில் முன்னேற்றம் அடைந்து வருவது காணமுடிகிறது.

***சூரியன் - வழிபாடு :*** பழங்குடி இன மக்களில் தோதவர்கள் இறைபக்தி மிக்கவர்கள் தெய்வ வழிபாடின்றி எந்த ஒரு செயலையும் மேற்கொள்ள மாட்டார்கள். வழிபடும் கோயில் சிறியதாயினும் தூய்மையானது. பூசாரியைத் தவிர வேறு யாருக்கும் உள்ளே செல்ல அனுமதி இல்லை.

இவர்களது பெயர்கள் அவர்தம் தெய்வத்தை ஒட்டிய சிறப்புப் பெயராகவே இருக்கும். இவர்கள் உதயசூரியனை இறைவனாகப் போற்றி வணங்குகின்றனர். இறைவனை அருவ நிலையிலேயே வழிபடுவர். கோயிலில் உள்ள குருக்கள் தனிச் சாதியினராக வாழாமல் இவர்களோடு இணைந்து வாழ்பவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## முடிவுரை

பெண்கள் கோயில்களில் சென்று வழிபடக் கூடாது என்பது மரபு. கோயில்களில் நெய்விளக்கு ஏற்றுவர். அதற்குத் தேவைப்படும் நெருப்பினைச் சக்கி முக்கிக் கல்லைக் கொண்டே உருவாக்குவர். தெய்வத்திற்கு எருமைப் பாலினைப் படைத்து வழிபடுவர். இவர்களின் திருமண நாளில் ஆடவரும், பெண்டிரும் அணியும் உடை தனித்தன்மை வாய்ந்தவை. தோதவ மகளிர் கைவேலைப்பாடு நிறைந்த ஆடை அணிந்து வருவதைப் பெண்கள் விரும்புவர். பெரியவர்களின் காலில் சிறியவர்கள் வணங்கி வாழ்த்தினைப் பெறுவர். இவர்கள் எங்கு சென்று இருந்தாலும் உச்சி வேளைக்குள் வந்து ஒன்று கூடி விடுவர் என்ற செய்தி சிறப்புப் பெற்றது. நாக மரம் மண நிகழ்வுக்கு ஏற்ற இடமாக வைத்துக் கொள்வர். மரத்தின் கொடியை மணமகள் கையில் கொடுத்த பின்னர் தாலி அணிவிக்கும் வழக்கம் தோதவர் இன மக்களிடத்தில் இருந்ததை அறிய முடிகிறது.

# அண்ணன்மார் வழிபாட்டில் பன்றி

**முனைவர் பெ. முருகன்**, எம்.ஏ.,எம்.ஃபில்.,பிஎச்.டி.,
*அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி, நாமக்கல்.*

அண்ணன்மார் எனப்படும் பொன்னர் - சங்கர் கோயில்கள் கொங்குப் பகுதியில் மிகுதியாக உள்ளன. இக்கோயில்களில் அமாவாசை தோறும் சிறப்பு வழிபாடுகளும் மகாசிவராத்திரி போன்ற நாட்களில் திருவிழாக்களும் நடைபெறுவதுண்டு. இச்சமயங்களில் பன்றிகள் பலியிடப்படுவது வழக்கம். தற்போது சில கோயில்களில் பன்றிப் பலி பாவனைச் சடங்காக நிகழ்த்தப்படுகின்றது. சிலவற்றில் பன்றி உயிர்ப்பலி இடப்படும் நேரடி நிகழ்வும் உண்டு. திருச்செங்கோடு அருகேயுள்ள மோளியப் பள்ளி என்னும் ஊரில் புகழ் பெற்ற நள்ளிரவுப் பூசையின் போது பன்றிப் பலி பாவனையாக நடத்தப்படுகின்றது. மனிதர் ஒருவரையே பன்றிபோல் நிறக வைத்து, பூசாரி கையில் வேலேந்திப் பன்றியைக் குத்துவதாகப் பாவித்து அம்மனிதரைப் பலமுறை குத்தி நடிப்பார். இதனைப் ***பன்றி குத்துதல்*** என அழைப்பர். கொங்குப் பகுதியில் உள்ள மேலும் பல அண்ணன்மார் கோயில்களில், தேடிப் பிடித்துக் காட்டுப் பன்றியைக் கொண்டு வந்து நேரடியாகக் குத்திப் பலியிடுவர்.

கொங்குப் பகுதியில் உள்ள பிற கோயில்களில் கோழி, ஆடுகளே பலியிடப்பட, அண்ணன்மார் கோயில்களில் மட்டும் பன்றி குத்துதல் நடைபெற முக்கிய காரணமுண்டு. ஒரு சில இடங்களில் நிலக் காவல் தெய்வமான காட்டுக் கருப்பனார்சாமிக்குக் கோழி, ஆடு ஆகியவற்றோடு சேர்த்துப் பன்றி பலியிடப்படுதலும் உண்டு. இதற்கு ***முப்பூசை*** எனப் பெயர். கோழி, ஆடு, பன்றி ஆகிய மூன்று உயிர்கள் பலியிடப்படுதலால் முப்பூசை எனப் பெயர் பெற்றது போலும். நிலக் காவல் தெய்வமான கருப்பனாருக்குப் பன்றி பலியிட, பன்றியினால் பயிர்களுக்கு ஏற்படும் அழிவைப் போக்க வேண்டும் என்னும் வேண்டுதலே காரணமாகும். பன்றியினால் பயிர் அழிவு என்னும் காரணத்தையே அண்ணன்மார் சாமிக்கும் பொருத்திப் பார்க்க முடியும்.

அண்ணன்மார் கதையில் பன்றிக்கு மிக முக்கிய இடமுண்டு. பொன்னர் சங்கருக்கும் தலையூர்க்காளிக்கும் இடையே நடைபெறும் சண்டைக்குக் காரணமாகப் பன்றி அமைகிறது. பொன்னர் சங்கர் ஆகியோர் வேளாளர்கள். தலையூர்க்காளி வேட்டுவர். வேட்டுவர்

கொங்குப் பகுதியில் வேட்டையாடும் தொழில் செய்து வந்து சாதியினர் என்றும் வேளாளர் வேறு பகுதியிலிருந்து வந்து காடழித்து வேளாண்மை நிலங்களை உருவாக்கிய சாதியினர் எனவும் கூறுவர். வேட்டுவர் தொழிலின் அடிப்படை காடு. ஆனால் வேளாண்மையின் அடிப்படை பண்படுத்தப்பட்ட நிலம். இதன் காரணமாக இரண்டு சாதிகளுக்குள்ளும் இடையே நடைபெற்ற சண்டையே அண்ணன்மார் கதை.

***மேனாட்டு வேட்டுவர்கள் வாழ்ந்த பகுதி வளம் குறைந்த பகுதி. அவர்களில் பலர் கொள்ளையடிப்பத்திலும் வேட்டையாடு வதிலும் தங்கள் நேரத்தைச் செலவிடுவர்*** (ப. 39) என அரு.மருததுரை எழுதுகின்றார். அண்ணன்மார் கதையில் எங்கும் வேட்டுவர்கள் பயிர்த் தொழிலில் ஈடுபட்டிருந்ததற்கான குறிப்புகள் இல்லை. அவர்கள் காடுகளோடும் காட்டு மிருகங்களோடும் தொடர்புடையவர்களாகவே இருக்கின்றனர். அவர்கள் சேவல் சண்டையில் வல்லவர்கள் எனவும் சேவல் கட்டு நடத்துவது அவர்களின் பொழுதுபோக்கு எனவும் இக்கதை குறிப்பிடுகின்றது. பொன்னர் சங்கரை வெல்லச் சேவல்கட்டுக்கு வேட்டுவர்கள் அழைத்ததாகவும் இக்கதை கூறுகின்றது. சேவல் வளர்ப்பு முதலியனவும் வேட்டுவர்கட்கே உரியவை.

ஆனால் பொன்னர் சங்கர் இருவரைப் பற்றிய குறிப்புகள் அனைத்தும் பயிர்த்தொழிலுடனேயே தொடர்புபட்டுள்ளன. அவர்கள், ***கொல்லை வேங்கை, பன்றி முதலிய மிருகங்களைக் கொன்று விவசாய மக்களுக்குத் தொண்டாற்றி வந்தனர்*** (ப 69) என அ.பழனிசாமி குறிப்பிடுகின்றார். மேலும் விவசாயிகளுக்குத் தொல்லை கொடுத்த மிருகங்களை அழிப்பதற்காகச் சோழ மன்னன், பொன்னர் சங்கரை அதிகாரியாக நியமித்தான் எனவும் கதை கூறுகின்றனது. ஆகவே அண்ணன்மார், பயிர்த்தொழிலோடு தொடர்புடையவர் என்பது உறுதி. மேலும் அவர்கள் வேட்டைக்குச் செல்வதாக வரும் நிகழ்வுகள் அனைத்தும் பயிருக்கு இடையூறு செய்யும் மிருகங்களை அழிக்கும் பொருட்டாகவே இருக்கின்றன.

வேட்டுவர் தலைவனாகிய தலையூர்க்காளி தனக்குச் சொந்தமாக வேங்கைப் புலியை வளர்த்து வந்தான் எனவும் பன்றிக் கூட்டங்களை வைத்திருந்தான் எனவும் இக்கதை குறிப்பிடுகின்றது. தலையூர்க் காளியின் வேங்கை கானகத்திலிருந்து கொண்டு மக்களுக்குப் பெருந்துன்பம் கொடுத்ததாகவும் அந்த வேங்கையைச் சங்கர் வெட்டிக்கொன்றதாகவும் கதை செல்கின்றது. வேங்கையை வளர்ப்பு மிருகமாக வைத்திருத்தல், அதையும் காட்டிலேயே திரிய விட்டிருத்தல் ஆகியவை இயல்புக்கு மீறியவை. வேங்கை. மனிதனைப் பொறத்தவரை

கொடூரம் நிரம்பியது. காட்டில் சுதந்திரமாகத் திரிந்து கொண்டிருக்கும் மிருகம். சங்கர் வேங்கையைக் கொல்லுதல் என்பது காட்டை அழித்தல் என்பதுதான். வேங்கை, தலையூர்க்காளியின் வளர்ப்பு எனச் சொல்வது காட்டுக்கு உரிமை உடையவன் அவன் என்பதைக் குறிப்பதாகும். அவ்வுரிமையைக் கைப்பற்றிய நிழ்ச்சிதான் வேங்கையைக் கொல்லுதல் என்பது.

பயிர்த்தொழில் செய்யும் மக்களுக்குக் காடு கொடூரமானதாகவே தென்படும். காட்டை அழிப்பதும் அதனை வேளாண்மைக்கு ஏற்றதாகப் பயன்படுத்துவதும் சாதாரணக் காரியமல்ல. அவற்றிக்குக் கடும் உழைப்பும் பல நாட்களும் ஆட்கள் நிறைந்த குழுவும் தேவை. ஆகவே நிலமாக்க முயலும் வேளாளர்கள் காட்டைக் கொடூரம் மிக்க வேங்கையாகக் கருதியதில் வியப்பில்லை. காட்டிலேயே வாழும் வேட்டுவர்களுக்கு மிருகங்கள், அவற்றின் நடைமுறைகள் அனைத்தும் தெரியும். அவற்றுடனே வாழப் பழகியவர்கள் அவர்கள். வேளாளர்கள் காட்டை அழித்தபோது அதற்கு உரிமை உடைய வேட்டுவர்கள் எதிர்ப்புத்தெரிவித்திருப்பர். அந்த எதிர்ப்பையே வேங்கைப் புலி அவர்கள் வளர்ப்பு எனக்கூறும் கதை தெரிவிக்கின்றது.

ஆக, வேங்கையைக் காட்டின் குறியீடாகவும் அதனைக் கொல்லுதல் வேளாளர்கள் காட்டை அழித்துத் தங்களுக்குரிய நிலங்களை உருவாக்க அடித்தளம் ஏற்படுத்திக் கொண்டதையும் குறிப்பதாகக் கொள்ளலாம். காட்டின் உரிமை என்பதுதான் வேங்கை வேட்டுவர்களின் வளர்ப்பு மிருகம் என அர்த்தம் தருவதாகக் கருதலாம்.

அதன்பின் வேட்டுவர்கள் வளர்த்த பன்றிக் கூட்டம் பற்றிய செய்திகள் கதையில் வருகின்றன. பன்றிக் கூட்டங்களைப் பற்றிக் குறிப்பிடுவதோடு தலையூர்க்காளி வளர்த்த ஒரே ஒரு பன்றியைப் பற்றிய விவரணைகள் கதையில் விரிவாக வருகின்றன. பிச்சன் இப்பன்றியைப் பற்றி வரும் பகுதி : ***தன்னந்தனியனது தனிக்காட்டு கொம்பனது வெந்த முகமுமது வேப்பிலைக் கொம்பனது நாலுகால் வெள்ளை நடுத்தலை சட்டியது பூவாலு வெள்ளை புகழ்பெரிய பன்றியது எழுபதடிக் கொம்பன் எதிர்த்தாரை மார்பிளக்கும் வேப்பிலைக் கொம்பன் வெகுபலமுள்ள பன்றி*** (ப. 177) இத்தனை பலமுள்ள பன்றியைக் கொல்லப் பொன்னரும் சங்கரும் விசேஷமாக வேல் வடித்தெடுத்துக் கொண்டு காட்டை நோக்கிப் புறப்படுகின்றனர். ஒரே ஒரு பன்றியைக் கொல்ல அவர்கள் திரட்டும் படை மிகப் பெரிது.

***வேடர் ஒருகோடி வில்லியர் ஒருகோடி குறவர் ஒருகோடி கூட்டப்படைதான் கோடி மறவர் ஒருகோடி மன்னவர்கள் தான்கோடி***

*மான்வலைகள் ஒருகோடி மயில்வலைகள் தானெடுத்து நாய்கள் ஒருகோடி நலமாகத் தான்கூட்டி* (ப. 180) இத்தகைய பரிவாரங்களோடு பொன்னரும் சங்கரும் பன்றியைக் கொல்லச் செல்கிறார்கள். மக்கள் வழக்கில் உள்ள அண்ணன்மார் கதையிலும் பன்றியைப் பற்றிய செய்திகள் அச்சத்தை ஊட்டும் வகையில் கூறப்படுவதுண்டு. உடுக்கடி கதைப் பாடலாக இக்கதை நிகழ்த்தப் பெறும்போது பன்றி மட்டுமே சில நாள்களை எடுத்துக்கொள்ளும். அந்த அளவுக்கு இக்கதையில் பன்றிக்கு முக்கியத்துவம் உள்ளது.

பன்றி வேட்டை என்னும் நிகழ்ச்சி, வேளாளர்கள் தம் வேளாண்மை நிலத்தை விரிவாக்கிக் கொண்டமையைக் குறிப்பதாகும். பன்றிகள் பயிர்தொழிலுக்கு எதிரானவை. அவற்றின் இயல்பு அவ்விதம். நிலத்தைத் தோண்டி கிழங்குகள் முதலியவற்றை எடுத்துத் தின்னும் இயல்புடையவை அவை. இப்பன்றியின் இயல்பைக் குறித்து இயற்கையியல் அறிஞர் மா. கிருஷ்ணன் கூறுபவை: *வயது வந்த ஆண்காட்டுப் பன்றியை நேரில் எதிர்க்க புலியும் நிதானிக்கும். இப்பேர்ப்பட்ட பன்றி 3 அடி தோள் உயரமும் 300 ராத்தல் எடையும் இருக்கும். அதன் தாடையினின்றும் இருபக்கமும் சுருண்டு வெளிவரும் தந்தங்கள் கத்திபோல் வெட்டும் கூர்மையும் எஃகு போன்ற முரியாத வலிமையும் உள்ளன... பெரிய ஆண் பன்றியின் தசைவலிமை பயங்கரமானது. அதன் தைரியத்திற்கு அளவில்லை* (ப.94 - 95) மேலும் இக்காட்டுப் பன்றிகளால் வேளாண்மைக்கு நேரும் அழிவு பற்றியும் அவர் குறிப்பிடுவதாவது ;

*விவசாயிகளுக்குப் பன்றிகள் கஷ்டத்தை உண்டாக்கும் பகைவர்களாகும். மலையடிவாரத்திலுள்ள வேர்க்கடலைப் பயிருக்கு இராப் போதில் காட்டுப் பன்றிகள் விளைவித்த சேதத்தை நேரில் கண்டவரே நம்புவார்கள். பன்றிகள் மேய்ந்த வயல் பார்வைக்கு, இரவெல்லாம் பித்துப் பிடித்தவன் கலப்பை கொண்டு உழுத நிலம்போல் தோன்றும்* (ப. 95)

வேளாண்மைக்குப் பகையாகிய இப்பன்றிகளை அண்ணன் மார் சாமி கதை விவரிக்கும் விதம் மிகையில்லை. பன்றி, தலையூர்க்காளிக்குச் சொந்தமானது எனவும் அது விளைவித்த நாசம் மிகுதி எனவும் கதை கூறுகின்றது. பயிர்த்தொழிலுக்கு எதிரான மிருகத்தைத் தன் பகைவனுடையது எனக் கூறுதல் இங்கு முக்கியம். மிகப் பெரும்படை சென்று அப்பன்றியைக் கொல்வதும் அதன் இறைச்சியை எல்லோரும் பங்கிட்டுக் கொள்வதும் கதையின் அடுத்த நிகழ்வுகள். வேளாண்மைக்குப் பகையாகிய காட்டை அழித்து

நிலங்களின் பரப்பை விஸ்தரித்துக் குழு தனக்குள் பாகம் செய்து கொண்டமையை இந்நிகழ்வுகள் குறிக்கின்றன. கொழுத்த பன்றி, பலமுள்ள பன்றி, விசவாயத்திற்கு இடையூறு விளைக்கும் பன்றி என்னும் பண்புகள் காட்டுக்கு முற்றிலும் பொருந்துவதாகும். அத்தகைய பன்றியைக் கொல்லக் கூட்டுழைப்புத் தேவைப்படுகின்றது. காட்டை அழிக்கவும் அப்படித்தான். பன்றிக் கறியைப் பங்கிட்டுக் கொள்ளுதல் அழிக்கப்பட்ட காட்டை நிலங்களாக்கி எல்லை பிரித்துப் பலருக்கு உரிமையாக்கிக் கொள்ளுதல் என்பதாகும்.

ஆகவே வேங்கை வேட்டையைப் போலவே பன்றி வேட்டையும் காடு x நிலம் என்னும் முரண் தொடர்பானதுதான். வேங்கையைக் கொல்லல் உரிமையைப் பறித்தல் என்றால் பன்றியைக் கொல்லல் நிலப்பரப்பை விஸ்தரித்தல் எனப் பொருள்படும். இன்னும் கூட கொங்கு வேளாளர்கள் விவசாய நிலத்தைப் பிறபகுதியினர் போல வயல், கழனி, மானாவாரி என்றெல்லாம் குறிப்பிடாமல் ***காடு*** என்றே குறிப்பிடுகின்றனர். மேட்டுக்காடு, தோட்டக்காடு என்னும் பிரிவுகளும் உண்டு. அழிபட்டாலும் காடு தன் பெயரிலேயே இன்னும் வழங்கி வருகின்றது.

தற்போது அண்ணன்மார் சாமி கோயில்களில் பன்றிகுத்திப் பலியிடும் நிகழ்ச்சி நடைபெறக் காரணம் உண்டு. இப்பகுதியில் நிலை கொண்டிருந்த வேடுவர்களுக்கு எதிராகப் போராடி, காட்டை அழித்து வேளாண்மையை வளர்த்துத் தம்மை நிலைப்படுத்திக்கொண்ட வெற்றியின் சின்னமாகப் பன்றி குத்துதல் நிகழ்த்தப்படுகின்றது. அதனைச் செய்ய முன்னின்ற தலைவர்கள் இருந்ததால் பொன்னர் சங்கர் வழிபாட்டில் இப்பலியிடல் நடைபெறுகிறது.

## துணைநூல்கள்


1. ***மா. கிருஷ்ணன்*** : மழைக்காலமும் குயிலோசையும், காலச்சுவடு பதிப்பகம், நாகர் கோவில், டிசம்பர் 2002.
2. ***சத்திக்கனல் (ப.ஆ.)*** : அண்ணன்மார் சுவாமிகதை, இரண்டாம் பதிப்பு.
3. ***அ. பழனிசாமி*** : பொன்னர் சங்கர் வரலாறு, பாரதி வெளியீட்டகம், நாமக்கல், ஆகஸ்ட் 1989.
4. ***அரு.மருததுரை*** : வளநாடு பொன்னர் சங்கர் வரலாறு, அருணா வெளியீடு, முசிறி, மார்ச், 1994.

# பழனி முருகன் கோயில் வழிபாட்டு முறைகளும் உணவுகளும்

**மு. முருகேஸ்வரி,** எம்.ஏ., எம்.ஃபில்.,பிஎச்.டி.,
*மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.*

திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள பழனியில் முருகன் கோவில் அமைந்துள்ளது. ஆறுபடை வீடுகளில் மூன்றாவது இடமாக பழனித்திருத்தலத்தைத் திருமுருகாற்றுப்படை குறிப்பிடுகிறது. இத்தகைய சிறப்பு வாய்ந்த பழனி திருத்தலத்தில் சித்தர்கள் பலர் வாழ்ந்துள்ளனர். அவர்களுள் போகர் என்னும் புகழ்வாய்ந்த சித்தர் பழனியாண்டவர் திருவுருவத்தை நிறுவி வழிபட்டதாகச் சொல்லப்படுகிறது. பழனியாண்டவர் திருமேனி நவபாசாணத்தால் ஆனது என்றும் இத்திருமேனியில் அபிசேகம் செய்யும் பால், பஞ்சாமிதர்தம் போன்ற அபிசேகப் பொருட்கள் மருத்துவகுணம் பெறுவதாகவும், பல்வேறு நோய்களை நீக்குகின்றன என்றும் மக்கள் நம்புகின்றனர். இச்சிறப்புப் பழனித்திருத்தலத்திற்கு உரிய தனிச்சிறப்பாகும். இத்தகைய சிறப்பு வாய்ந்த முருகனுக்கு நீராட்டும் பொழுது பயன்படுத்தப்படும் உணவுகள் குறித்தும், படைக்கப்படும் உணவுகள் குறித்தும், நாள் வழிபாட்டு உணவுகளும் நம்பிக்கைகளும், மாதவழிபாட்டு உணவுகளும் நம்பிக்கைகளும், ஆண்டு வழிபாட்டு உணவுகளும் நம்பிக்கைகளும் குறித்து விளக்குவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## நாள் வழிபாட்டு உணவுகளும் நம்பிக்கைகளும்

மனத்தால் இறைவன் வழிபடும் முறை அகவழிபாடு என்றும், புறத்தே வழிபடும் முறை புறவழிபாடு என்றும் அழைக்கப்படுகின்றன. நாள்தோறும் கோவிலில் வழிபாடு ஆறுமுறைச் செய்யப்படுகிறது. இது ஆறுகால பூஜை என அழைக்கப்படுகிறது.

***முருகன் நீராடல் : உணவுகளும் நம்பிக்கைகளும் :*** தீர்த்தம் (தண்ணீர்) நல்லெண்ணெய், பச்சையரிசிமாப்பொடி, பஞ்சாமிர்தம், மஞ்சள் பொடி, பசுநெய், பசும்பால், பசுந்தயிர், கரும்புச்சாறு, இளநீர், பழங்களின் கூழ் (மா, வாழை, ஆப்பிள், கும்பநீர், வில்வ இலை இட்டநீர், மான்கொம்புநீர்,

அருகம்புல் நீர் (தர்ப்பை) போன்ற உணவுப்பொருள்கள் பயன்படுத்தப்படுகின்றன. (1:39) *தீர்த்தம் (தண்ணீர்) - குளிர்ச்சி தரும் எண்ணெய் - சுகம் தரும் ; பச்சையரிசி மாப்பொடி - கடன் போக்கும் ; மஞ்சள் பொடி - வசிகரம், பஞ்சகவ்வியம் - தூய்மை, பஞ்சாமிர்தம், வெற்றிதரும், நெய் மோட்சம் உண்டாகும் பால் - ஆயுள் பெருகும், தயிர் - மக்கள் பேறு எண்டாகும் ; தேன் -சுகம்தரும் சோறு - அதிகாரம் அளிக்கும் ; கரும்புச்சாறு - பிணிநீக்கும் ; இளநீர் - போகம் தரும் சர்க்கரை சத்ருநாசம் ; இளநீர் பயம் போக்கும் ; மாதுளை - கோபம் போக்கும் ; எலுமிச்சை பயம்போக்கும்* (1:39) இவற்றைத் தினம்தோறும் இறைவனுக்குப் பயன்படுத்திப் பிசாதமாக உணவை மக்கள் உண்டால், பிணியின்றி வாழலாம் என நா.கல்யான சுந்தரம் கூறுகிறார்.

***உணவுகளும், நம்பிக்கைகளும் (நிவேதம்):*** உணவு படைத்தல் நிவேதனம் என அழைக்கப்படுகிறது. முருகனுக்குரிய சிறப்பு உணவுகள் *சம்பாநெல், அரிசிச்சோறு, பால்பாயாசம் (ஞாயிறு) வெண்பொங்கல் (திங்கள்) எள்சோறு (செவ்வாய்) சர்க்கரைப்பொங்கல் (புதன்) தயிர்ச்சோறு (வியாழன்) சுத்தாந்தம் (வெள்ளி) உளுந்தம் சோறு (சனி) போன்ற உணவுகள் சிறப்பு உணவுகளாகப் படைக்கப்படுகின்றன.* (1:40) மேலும் முருகனுக்கு பஞ்சாமிர்தம் சிறப்பு உணவாகக் காணப்படுகிறது. முருகனுக்கு காலை 5 மணிக்கு தினந்தோறும் (பசும்பால், கிசு முசுப்பழம்) இரண்டும் கலந்து படைக்கப்படுகிறது. ஏழுமணிக்கு சுக்கும், கருப்பட்டியும் கலந்து படைக்கப்படுகிறது. இவ்வாறு இறைவனுக்குப் படைத்து வழிபட்டவுடன் மக்களுக்குப் பிரசாதமாக வழங்கப்படுகிறது. பச்சைப்பசும்பால் சிசுமுசுப்பழமும் கலந்து காலையில் இறைவனுக்குப் படைத்து உண்ணும்பொழுது காலையில் நீராடி இறைவனை வணங்கி பசும்பால் குடிப்பதால் உடல் சூடுநீங்கி குளிர்ச்சியடையும் என்றும், சுக்கும் கருப்பட்டியும் இறைவனுக்குப் படைத்து உண்ணுவதால் தெய்வபக்தியும், உடல்வலிமையும் உண்டாகும் என்றும் ***சுக்குக்கு மிஞ்சிய மருந்தில்லை சுப்பிரமணயனுக்கு மிஞ்சிய கடவுள் இல்லை*** என்ற பழமொழிமூலம், சுக்கின் தன்மையையும், முருகனின் இறைத்தன்மையையும் அறியமுடிகிறது. சுக்கு கருப்பட்டியும் உண்ணுவதால் உடல் வலிமையடையும் என்று மக்கள் நம்புகின்றனர். இறைவனுக்கு ஒவ்வொரு நாளும் ஆறுகாலப்பூஜை நடைபெறுகிறது. ஒவ்வொரு காலப்பூஜையிலும் ஒவ்வொரு உணவு படைக்கப்படுகிறது.

*விசுவருபதரிசனம் : (காலை 6 மணி) : பழனியாண்டவர்க்கு விசுவருபதரிசனப்பூஜை என்பது காலை ஆறுமணிக்கு நடைபெறுகிறது. இப்பூஜையின் போது பழனியாண்டவர்*

*நவபாஷாணத் திருமேனியில் சாத்தப்பட்ட கோவணத்தீர்த்தமும், சுக்கும், கருப்பட்டியும் இரண்டும் கலந்து மக்களுக்குப் பிரசாதமாக வழங்கப்படுகிறது. இப்பிரசாதங்கள் மக்களின் உளப்பிணியையும், உடற்பிணியையும் நீக்கும் மாட்சியுடையதாகக் கருதப்படுகின்றன. இப்பிரசாதங்களை மக்கள் காலையிலும் நீராடி வெறும் வ்யிற்றில் உண்டால் நோய் நீங்கும்* (ஆ) என்றும் சுப்பிரமணியர் கூறுகிறார்.

*விளாப்பூஜை (காலை 7.15 மணிக்கு) :* முருகனுக்கு ஏழுமணி அளவில் விளாப்பூஜை நடைபெறுகிறது. இக்காலை நேரத்தில் நைவேத்தியம் நடைபெறுகிறது. வெண்சோறு (சுத்தாந்தம்) புளியிடப்படாத பாவக்காய்கூட்டு, சர்க்கரைப்பொங்கல், தேங்காய், வாழைப்பழங்கள், கடலைபொறி, நெய்முறுக்கு இலட்டு, பழவகைகள் வைத்துப் படைக்கப்படுகின்றன (இ) தீபாராதனை முடிந்தவுடன் பிசாதங்கள் மக்களுக்கு வழங்கப்படுகின்றன.

*சிறுகால சுத்திப்பூஜை : (காலை 8 மணி)* சிறுகால சந்திப்பூஜை காலை எட்டுமணிக்கு நடைபெறுகிறது. சிறுகாலசந்திப் பூஜையின்பொழுது வெண்பொங்கல், நெய்யினால் செய்யப்பட்ட கோதுமை ரொட்டி போன்ற உணவுகளும், தேங்காய்கள், வாழைப்பழங்கள் கடலைபொறி, நெய்முறுக்கு, அவல் பழவகைகள் வைத்து படைக்கப்பட்டு தீபாராதனை காட்டி மக்களுக்குப் பிரசாதம் வழங்கப் படுகிறது (இ)

*காலசந்திப்பூஜை : (காலை 9 மணி)* சிறுகால சந்திப்பூஜை போலவே வழிபாடு நிகழுகிறது. சிறுகாலச் சந்திக்குப் படைக்கப்படும் உணவுகளுடன் மிளகுச்சோறு வைத்து படைக்கப்படுகிறது. ***மிளகுச்சோறு*** என்பது வெண்சோறு, மிளகு, சீரகப்பொடி, நொய், உப்பு கலந்த கலவையாகும் (இ) காலசந்திப்பூஜை முடிந்தவுடன் மக்களுக்கு பிரசாதங்கள் வழங்கப்படுகின்றன.

*உச்சிக்காலப்பூஜை : (பகல் 12 மணி)* உச்சிக்காலப்பூஜை, பகல் 12 மணிக்கு நடைபெறுகிறது. வெண்சோறு (சுந்தாந்தம்) பால்பாயாசம், பளியோதரைசாதம், தயிர்சாதம் தேங்காய்கள் வாழைப்பழங்கள், நெய்முறுக்கு, கச்சாயம் (அதிரசம்) இலட்டு கடலைபொறி, அவல் போன்ற உணவுப்பொருள்கள் வைத்து பதினாறு வகையான தீபாராதனையையும் சிறப்புப் போற்றுதலும் செய்யப்பட்டு மக்களுக்குப் பிரசாதங்கள் வழங்கப்படுகின்றன. (இ)

*சாயரட்சைபூஜை : (மாலை 5.30 மணி)* இப்பூஜையின் சர்க்கரைப்பொங்கல், புளியோதரை, சுண்டல், தேங்காய்கள், வாழைப்பழங்கள், கடலைபொறி, அவல், நெய்முறுக்கு, கச்சாயம்

(அதிரசம்) கிடைக்கக்கூடிய பழவகைகள் ஐந்துவகை வைத்து படைக்கப்படுகிறது.

*இராக்காலப்பூஜை : (இரவு 8.00 மணி) :* இராக்காலப்பூஜை இரவு எட்டுமணிக்கு நடைபெறுகிறது. தீபாராரதனை முடிந்தபின் மக்களுக்குத் தேனுடன் கலந்து தினைமாவு மக்களுக்குப் பிரசாதமாக வழங்கப்படுகிறது (இ) இராக்காலத்தில் பால், தூயசந்தனம், பன்னீர் போன்றவை ஆண்டவர் திருமேனியில் சாத்தப்படும். இதுவே விசுருபதரிசனத்தின்போது அன்பர்களுக்குப் பிரசாதமாக வழங்கப்படுகிறது.

## மாத வழிபாட்டு உணவுகளும் நம்பிக்கைகளும்

சித்திரை நட்சித்திரத்தோடு சந்திரன் கூடும் நாளில் சித்ரா பௌர்ணமி கொண்டாடப்படுகிறது. சித்திரைமாதம் வெயிற்காலமாதலால் தீர்த்தநீராட்டு, பழமுழுக்குநீராட்டு, பஞ்சாமிர்த்த முழுக்கு நீராட்டு செய்யப்பட்டுகிறது. இவ்வாறு இறைவனுக்கு நீராட்டுச் செய்வதால் இறைவன் குளிர்ந்து மக்களுக்கு நன்மை செய்வான் என மக்கள் நம்புகின்றனர். தீர்த்தநீர், பழக்கூழ் பஞ்சாமிர்தம், போன்றவற்றை பிரசாதமாக மக்கள் உண்ணுவதால் நோய் நீங்கும் என்றும் மக்கள் நம்புகின்றனர். அறிவியல் முறைப்படி ஆராய்ந்தால் பஞ்சாமிர்தத்தில் உள்ள பேரீச்சம்பழமும் வெல்லமும், உடலை வலிமையடைச்செய்யும். பால் உடலை குளிர்ச்சியடையச் செய்யும், தேன் உடலை கட்டுப்பாட்டிற்குள் வைக்கும் தன்மையுடையது.

*விசாகப்பெருவிழா (வைகாசிமாதம்):* வைகாசி விசாகப் பெருவிழா அனைதது முருகன் கோயில்களிலும், பக்தர்களால் குமரனின் பிறந்தநாள் பெருவிழாவாகக் கொண்டாப்படுகிறது. குமரனுக்குக் கோடையிலும் பால்குடவிழா பாங்குடன் நடைபெறுகிறது. கோடையில் வெம்மையிலிருந்து குளிரவைக்கக் குடம்குடமாகப் பாலபிசேகம் செய்யப்படுகிறது. இவ்வாறு பால்குடத்தை மக்கள் தலையில் வைத்து சுமந்து செல்வதால் உடல் குளிர்ச்சியடையும் தன்மை உண்டாகும் என்றும், இறைவனுக்கு படைக்கப்பட்ட பாலை குடிப்பதால் உடலில் உள்ள நோய்கள் நீங்கும் என்று மக்கள் கருதுகின்றனர். (2:12)

*புட்டுதிருவிழா (ஆவணி மாதம்) :* ஆவணி மாதம் மூலநட்சத்திரத்தில் சிவபெருமானுக்குப் புரட்டுத் திருவிழா எடுக்கப்பெறுகிறது. மரையில் பிட்டுக்கு மண் சுமந்து இறைவன் பிரம்படிப்பட நிகழ்ச்சியே இக்கோயிலில் *புட்டுத்திருநாள்* (2:43) விழாவாகக் கொண்டாப்படுகிறது.

***சஷ்டிவிழா (ஐப்பசி மாதம்) :*** மாதத்தில் இருமுறை சஷ்டி வந்தாலும், ஐப்பதிசதாம் வரும் சந்தசஷ்டியே மிக விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. முருகன் அசுரர்களை வதம் செய்து அழித்து சூரசம்ஹாரம் செய்த நாளாகும் (2:46) இந்நோன்பினைப் பற்றுவோர் உணவுவகையில், கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும்.

> ***நிறைதரு கட்டி கூட்டி நெய்யினாற் சமைக்கப்பட்ட***
> ***குறைதவிர் மோகத்தைக் குமரநாயகற்***
> ***பிறவுளவிதியுஞ் செய்துபிரான் றிருப்புகழ்வினாவி***
> ***யுறுபுனல் சிறிது மாந்தியுபவதித்திருந்தார் மாதோ*** (3:6-23-22)

முருகனுக்குக் கொழுக்கட்டையைப் படைத்துச் சிறிதளவு நீர் மட்டும் பருகி இருத்தல் வேண்டும் என்பது இப்பாடலால் பெறப்படுகிறது. ***சஷ்டி இருந்தால் அகப்பையில் வரும்*** (4:25) என்ற பழமொழி மூலம் சஷ்டி நோன்பு இருந்தால் கருப்பைப் புண் ஆறி, குழந்தைப் பேறு உண்டாகும் என்றும், நோன்பின்பொழுது துளசியும், நீரும், மிளகும் நீரும், பழம் அல்லது பழச்சாறு பால், பச்சரிசிசாதம் போன்ற உணவுகளை உண்டால் உடல்நோய் நீங்கி குழந்தைப்பேறு உண்டாகும் என்றும் மக்கள் நம்புகின்றனர்.

***தீபத்திருவிழா : (கார்த்திகை மாதம்) :*** கார்த்திகை மாதத்து கார்த்திகை முருகனுக்கு உரிய நாளாகும். அந்நாளில் இடித்த மாவினால் செய்யப்பட்ட கொழுக்கட்டையும் பொறிகடலையும் வைத்து இறைவனுக்குப் படைக்கப்பட்டு மக்களுக்குப் பிரசாதமாக வழங்கப்படுகிறது. அன்று புதுமண்பானையில் உணவு சமைத்து உண்ணுவதால் மக்களுக்கு மகிழ்ச்சி உண்டாகி இறைவன் அருள் கிடைக்கும் என்று கருதுகின்றனர்.

***திருவாதிரை : (மார்கழி மாதம்) :*** மார்கழி மாதத்தில் திருவாதிரை நாள் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. அன்று திருவாதிரைகளியும், தயிர்சாதமும் இறைவனுக்குப் படைக்கப்படுகிறது. ***திருவாதிரைக்கு ஒருவாய்க்களி*** (ஈ) என்பது பழமொழியாகும் திருவாதிரை நோன்பினை மக்கள் சுமங்கலி நோன்பு என்றும் அழைக்கின்றனர். இவ்வாறு திருவாதிரை நாளன்று விரதம் இருந்து திருவாதினரைக்களி உண்டால் கணவனின் ஆயுள் கூடும் என்று மக்கள் நம்புகின்றனர். திருவாதிரை நாளன்று விருந்தினர்களும் உறவினர்களும் திருவாதிரைக்களியும், கச்சாயமும், விருந்துணவும் பரிமாறி இனிப்புப் பொருள்களும், மஞ்சள் கயிற்றினையும் கொடுப்பதால், உறவுமுறை நீடிக்கும் என்பர்.

## ஆண்டு வழிபாட்டு : உணவுகளும் நம்பிக்கைகளும்

பழனித் திருத்தலத்தில் தைப்பூசத்திருவிழா, பங்குனி உத்திரத் திருவிழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படும் விழாக்கள் ஆகும். இவற்றோடு தொடர்புடைய நேர்த்திக் கடன் வழிபாடும், காவடியாட்ட வழிபாடும் பல உணவுமுறை நம்பிக்கைகளைக் கொண்டுள்ளது. பொங்கல் வைத்தல், பால்குடம் எடுத்தல், பால் முழுக்கு, இளநீர் முழுக்கு, பஞ்சாமிர்தமுழுக்கு, பால் முழுக்கு இளநீர் முழுக்கு, பஞ்சாமிர்தமுழுக்கு, சிதறுதேங்காய் நவதானிய காணிக்கை, அன்னதானம், நீர்மோர் தானம் பொறிகடலை தானம், சேவல் புறா ஆடு விடுதல் போன்றவை நேர்த்திக்கடனாகும். காவடிகளிலும் பால்காவடி இளநீர்க்காவடி, சர்க்கரைக் காவடி, பால்காவடி இளநீர்க்காவடி, சர்க்கரைக் காவடி, தீர்த்தக் காவடி, சேவற்காவடி, பழக்காவடிகள் உள்ளன. இவை பல நன்மைகளைத் தரும் என்று நம்புகின்றனர்.

### துணைநூல்கள்


1. *ந. கல்யாண சுந்தரம்* : முருக வழிபாட்டுமுறைகள்
2. *சோ. கலைவாணி நாதகிரி* : பாலமுருகன் கோவில் வரலாறும் வாழிபாடும்.
3. கந்தபுராணம்
4. *நா.கிருஷ்ணகுமாரி* : திருப்பரங்குன்றம் கோயிலுக்குச் செய்து கொள்ளும்நேர்த்தக்கடன்கள், ப. 25
5. *நா. கதிரை* : வேற்பிள்ளை, தமிழ்ச் சொல்லகராதி
6. *நச்சினார்கினியர்* : தொல்காப்பியம், பொருளதிகாரம்


### கள ஆய்வு : பேடட்டிகள்

அ. கருப்பாயி, 25.03.2003, பழனி
ஆ. வெ. சுப்பிரமணியர், 25.03.2003, பழனி
இ. மெ. கிருஷ்ணமணி, 25.03.2003, பழனி
ஈ. லெ. திலகவதி, 25.03.2003, பழனி
உ. உற்றுநோக்கில், 25.03.2003, பழனி

# குடிதொம்பரா இனமக்களின் குலதெய்வங்களும் வழிபாட்டு முறைகளும்

**முனைவர் முல்லை வீ.சண்முகம்**, எம்.ஏ.,எம்.ஃபில்.,பிஎச்.டி.,
*அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி, நாமக்கல்-637 001.*

தமிழ்நாட்டில் வாழும் குடிதொம்பரா இனமக்களின் குலதெய்வங்களும் வழிபாட்டு முறைகளும் பற்றிய செய்திகளைத் தொகுத்துக்கூறுவது இக்கட்டுரையின் நோக்கமாகும். ஈரோடு மாவட்டம், கோபிச்செட்டிபாளையத்திற்கு 8 கிலோ மீட்டர் தூரத்தில் அலவுக்குழி கிராமம் உள்ளது. இங்குள்ள எம்.ஜீ.ஆர். நகரில் தமிழ்நாடு அரசு குடிதொம்பரா இனமக்களுக்காக சுமார் 25 குடியிருப்புகளைக் கட்டிக் கொடுத்துள்ளது. அங்கு சுமார் 100 குடும்பங்கள் வாழ்கின்றனர். குடிசைகளில் குடியிருப்பவர்களும் சரி ; அரசு இலவசமாகக் கட்டிக்கொடுத்த வீடுகளில் வசிப்பவர்களும் சரி ; நிரந்தரமாக அங்குத் தங்குவது கிடையாது. தொழிலுக்காகக் குடும்பம் குடும்பமாகப் பல்வேறு ஊர்களுக்குச் சென்று விடுகிறார்கள். தைமாதம் பொங்கல் பண்டிகையின்போதுதான் வெளியூர் சென்ற குடும்பங்கள் ஒவ்வொரு குழுவாக வந்து சேருகிறார்கள். தொழில் புரிய முடியாத வயதான பெரியவர்கள் மட்டுமே எப்போதும் இங்கே தங்கி இருக்கிறார்கள்.

## பதநையா மொழி

குடிதொம்பரா இனமக்களுள் பல பிரிவினர் உண்டு. பதநையா எனும் பிரிவினர் பேசும் மொழியின் பெயர் *பதநையாமொழி* ஆகும். இம்மொழிக்கு வரிவடிம் இல்லை. பேச்சு வழக்கில் மட்டுமே உள்ளது. கரடுமுரடான ஒலி அழுத்தங்களோடு இம்மக்கள் அவர்களுக்குள் உரையாடுகையில் நரிக்குறவர் மொழியைப் போலிருக்கிறது. பல குடும்பங்கள் தங்களுக்குள் ஒன்று சேர்ந்து ஏதாவது ஓர் ஊரை நோக்கிப் போவார்கள். பகல்முழுவதும் தொழில் செய்து விட்டு, அன்றைக்குப் கிடைத்த வருவாயுடன் மாலையில் வீடு திரும்புவார்கள். ஊரின் தோதான இடத்தில் சிறிய அளில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் தனித்தனியாகத் தற்காலிகத் தங்குமிடங்களை (Tent) அமைத்துக் கொள்வார்கள்.

## குலதெய்வங்கள்

*சட்டவாய், கெவனாக்முடி, ஹத்தேமா, மாத்தா, கோடாசார் மகாதேவன்* ஆகிய ஐந்தும் குடிதொம்பரா இனமக்களின் குலதெய்வங்கள் ஆகும். ஒவ்வொரு தெய்வத்திற்கும் தனித்தனிக் கோயில்கள் உண்டு. திருவிழாவின் போது ஐந்து தெய்வங்களுக்கும் சேர்த்தே வழிபாடுகள் செய்யப்படுகின்றன. கருங்கல்லாலோ, செங்கல்லாலோ, மண்ணாலோ, மரத்தாலோ ஆனதல்ல ; இவர்களின் கோயில் ஐம்பு(சம்பு) என்ற குச்சிகளால் கட்டப்பட்ட மிகச்சிறிய குடிசையைத்தான் இவர்கள் கோயில் என்று கூறுகிறார்கள். அக்குடிசைக்குள் வெள்ளியாலோ, ஐம்பொன்னாலோ செய்யப்பட்ட கடவுட்சிலைகள் இருக்கும். இக்கோயிலுக்குப் (ஜம்புக்குடிசை) பூட்டோ அல்லது கதவோ இல்லை. திருவிழாக்காலத்தில் மட்டும் இக்கடவுளர் உருவங்கள் வெளியில் எடுத்து வைக்கப்படும்.

## திருவிழாவுக்கு நாள்குறித்தல்

வெளியில் புறப்பட்டுப்போன குடிதொம்பரா மக்கள் அனைவரும் தைமாதப் பொங்கல் பண்டிகை நடப்பதற்குப் பதினைந்து நாட்களுக்கு முன்னர் ஊர் திரும்புவார்கள். ஊர்த்தலைவராக இருப்பவரும் மற்றும் ஊர்ப்பெரிய தனக்காரர்களும் சேர்ந்து ஊர்க்கூட்டம் கூட்டுவார்கள். அக்கூட்டத்தில் திருவிழாவுக்கான நாட்கள் உறுதிசெய்யப்படும். ஒவ்வொரு குடும்பத்தினரும் திருவிழாவுக்குச் செலுத்த வேண்டிய வரித்தொகை ; பங்குத்தொகை பற்றியும் இக்கூட்டத்தில் நிர்ணயம் செய்வார்கள். திருவிழாவிற்கு முன், அவரவர்க்கு விதிக்கப்பட்ட பங்குத்தொகையைச் செலுத்தி விடுவார்கள். அக்குடும்பங்களுக்கிடையில் ஏதேனும் சண்டை சச்சரவுகள் இருந்தால் அது பற்றியும் ஊர்க்கூட்டத்தில் விசாரித்து நியாயம் வழங்கப்படுகின்றது.

## வழிபாட்டு முறைகள்

சட்டவாய், கெவனாக்முடி, ஹத்தேமா, மாத்தா, கோடா சார் மகாதேவன் ஆகிய ஐந்து தெய்வங்களுக்கும் ஒரே சமயத்தில் திருவிழா நிகழும். திருவிழா இரண்டு நாடகள் நடைபெறும். ஜம்புக்குச்சிகளால் அமைக்கப்பட்ட கோயிலுக்குள் (சிறு குடிசைக்குள்,சிறு கூடாரத்திற்குள்) வைக்கபட்டுள்ள கடவுளர் சிலைகள் கோயில் பூசாரிகளால் வெளியில் எடுத்து வைக்கப்படும். திருவிழாவில் பூசாரிகள் கோயிலுக்கு இரண்டுபேர் வீதம் 10 பேர் வரை இருப்பார்கள். தெய்வத்தின் மீதான மருள் யார் யாருக்கு மிகுதியாய் வருகிறதோ அவர்களில் இருந்து 10 பேர்

கோயில் பூசாரிகளாய் அமைகிறார்கள். திருவிழாக் காலங்களில் இவர்கள் கோயிலுக்கு வந்தால் போதுமானது. ஆண்டு முழுவதும் கோயிலிலேயே இருக்க வேண்டும் என்பது இல்லை. கோயிலுக்கு வெளிப்புறம் கொண்டு வந்து வைக்கப்படும் கடவுளர் சிலைகளைப் புனிதநீரால் பூசாரிகள் சுத்தம் செய்து மலர்களால் அலங்கரிப்பார்கள். சிறிய வடிவிலுள்ள இக்கடவுளர் சிலைகள் பஞ்சலோகம் அல்லது வெள்ளியால் செய்யப்பட்டதாகும். காலை, மாலை, இரவு என்று மூன்றுவேளையும் பூசைகள் நிகழ்கின்றன. பழம், தேங்காய், பொரிகடலை, பத்தி, கற்பூரம் ஆகிய பொருள்கள் பூசைக்குரிய பொருட்களாகும். குடும்பம், குடும்பமாகக் கோயிலுக்கு வந்து வழிபாடு செய்து கடவுள் தரிசனம் செய்கிறார்கள். திருவிழாவின் இரண்டாவது நாளில் கோயிலுக்கு முன்பகுதியில் பெண்கள் பொங்கல் வைக்கிறார்கள். வெள்ளாடு கோயிலுக்குக் கொண்டுவரப்பட்டு கடவுளுக்குப் பயபக்தியோடு பலி கொடுக்கப்படுகிறது. விரதம் இருப்பதும், வேல்நடுவதும் இல்லை. பொங்கல் வைக்கும் போது பயன்படுத்தப்பட்ட அடுப்பு நெருப்பில் சாமி மருள். வந்தவர்கள் பூ இறங்குவார்கள். ஒவ்வொரு குடும்பமும், பொங்கல் படைத்துக் கடவுளை வேண்டிக் கொள்வார்கள். இவர்கள் மாவிளக்கு எடுப்பதில்லை. தாங்கள் தொழில் தேடிச் செல்கின்ற காலங்களில் பக்கத்துணையாக இருந்து காப்பாற்றுமாறும், தொழிலில் அதிக வருவாய் கிடைக்கவும் கடவுளிடம் வேண்டிக் கொள்வார்கள். மருள் வரப்பெற்ற கோயில் பூசாரிகள் நல்வாக்கும், நல்வரமும் ஊர்க்குடிகளுக்கு வழங்குவார்கள்.

## பாண வேடிக்கையும் மேடை நடனமும்

திருவிழா நடைபெறுகிற இரண்டு நாட்களும் மக்களுடைய மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. ஆண்டு முழுவதும் தனித்தனிக் குழுக்களாய் பிரிந்து சென்றவர்கள் எல்லாம், இப்போது ஒன்றாய்ச் சந்திப்பதால் ஊர் முழுவதும் மகிழ்ச்சியாய் இருப்பார்கள். ஆண்களும், பெண்களும் ஏற்றத்தாழ்வின்றி மது அருந்துவார்கள். இரண்டு நாட்களும் ஒலிபெருக்கி வைப்பார்கள். கோயில் பந்தலில் பல வண்ணங்களில் மின்விளக்கு அலங்காரம் செய்வார்கள். பாணம் விடுதல் (அம்பு எய்தல்) நிகழ்ச்சியில் வாணவேடிக்கை நடைபெறும். இரவு நேரத்தில் கோயிலுக்கு முன்பகுதியில் ஒலி, ஒளி வசதியோடு மேடை அமைத்து நடனத்துக்கு ஏற்பாடு செய்வார்கள். ஆண்களும் பெண்களும் திரைப்படப் பாடல்களுக்கு ஏற்ப நடனம் ஆடுவார்கள். ஆடுவோரின் நடனத்தைப் பாராட்டி மேடைக்குக் கீழே உட்கார்ந்திருக்கும் அவர்களின் உறவினர்கள் அவ்வப்போது அன்பளிப்புகள் தந்து உற்சாகப்படுத்துவார்கள்.

நடனம் ஆடுவோர் அப்பணத்தை நன்றியோடும் மகிழ்ச்சியோடும் பெற்றுக் கொள்வார்கள் பகல் நேரங்களிலும் மது மயக்கத்தில் நடனம் ஆடுவார்கள். இதனைத் ***தமாசு ஆட்டம்*** என்பார்கள். இதற்கும் அன்பளிப்புகள் வழங்குவர். திருவிழா முடிந்து ஒரு மாதம் அல்லது இரண்டு மாதம் கழிந்ததும் மறுபடியும் தொழிலுக்குப் போய்விடுவார்கள்.

## கழைக்கூத்து வித்தை

தனித்தனிக் குழுக்களாகப் பிரிந்து வேறுவேறு ஊர்களை நாடிப் போய்த் தொழில் செய்வார்கள். கழைக்கூத்தும், வித்தையும் இவர்களின் பரம்பரைத் தொழிலாக உள்ளது. கழை என்கிற மூங்கில் மீது கட்டப்பட்டக் கயிற்றில் நடப்பதும், மூங்கில் நுனியில் ஒரு சிறுவனையோ அல்லது சிறுமியையோ படுக்க வைத்து - மூங்கிலை அப்படியே தூக்கித் தங்கள் தலைமீது நிறுத்தி வித்தை காட்டுவதும், நடனம் ஆடுவதும், உறுதியான சிறு கம்பி வளையங்களில் ஒருவர், இருவர், மூவர் என்று புகுந்து - வெளியில் வருவதும், அந்தரத்தில் கர்ணம்(பல்டி) அடிப்பதும் இவர்களின் தொழிலாகும். மக்கள் கூட்டம் இருக்கிற இடங்களில் சாலை ஓரங்களில், குடியிருப்புப் பகுதிகளில், வாரச்சந்தை கூடும் நாட்களில் சந்தை முகப்புகளில், பேருந்து மையங்களுக்கு அருகில் என்று மக்கள் போகுவரத்துள்ள பகுதிகளில் இவர்கள் தங்கள் உடல் வித்தைகளைச் செய்கிறார்கள். தோலால் ஆகிய சிறு மேளத்தைக் கோல்களால் இசைக்கிறார்கள். பெரும்பாலும் பெண்களே இம்மேளத்தை இசைக்கிறார்கள். ஆண் வித்தை செய்யும்போது பெண்ணும், பெண் வித்தை செய்யும்போது ஆணும் மேளம் அடிப்பார்கள். செய்யப்படுகிற வித்தைக்கு ஏற்ப மேளத்தில் இசை கொட்டுவார்கள். சுமார் அரைமணி நேர வித்தைக்குப் பிறகு, தட்டு ஏந்தியோ, துணி ஏந்தியோ வேடிக்கை பார்த் மக்களிடம் அன்பளிப்புப் பணம் கேட்பார்கள். குடியிருப்புப் பகுதியாக இருந்தால் வயிற்றுப்பசிக்கு உணவு வழங்கக் கேட்பார்கள். இந்த வித்தைகள் பரம்பரை பரம்பரையாக இவர்களால் நிகழ்த்தப் படுகின்றது. குழந்தைப் பருவத்திலிருந்தே தங்கள் பெற்றோருடன் ஊர்ஊராகச் சென்று விடுவதாலும், வித்தை காட்டும்போது உடன் இருப்பதாலும், காலப்போக்கில் அவர்களும் இவ்வித்தைத் தொழிலில் நிபுணத்துவம் பெற்று விடுகிறார்கள். *குலக்கல்வி இல்லாமல் பாகப் படும்* என்கிற பழமொழி இங்குக்காணத்தக்கது. ஊர் திரும்பிய பிறகே திருமணம் செய்தல், சடங்கு செய்தல் போன்றவைகள் செய்யப் படுகின்றன.

## வரலாற்றுப் பார்வை

அரைகுறையான கந்தல் துணிகளோடும், அழுக்குப் படிந்த உடலோடும், எண்ணெய் இல்லாமல் சிக்குப்பிடித்த தலைமுடியோடும் காணப்படும் இவர்களின் வயிற்றுப்பிழைப்புக்கான தொழிலாக இருப்பது இந்தக் கழைக்கூத்து வித்தையே ஆகும். சங்க காலத் தமிழ் இலக்கியங்களில் பல்வகையான கூத்துக்கள் பற்றிய செய்திகளும், கூத்தாடுவோர் பற்றிய செய்திகளும், கூத்துக்கருவிகள் பற்றிய செய்திகளும் ஆங்காங்கே இடம்பெற்றுள்ளன. ***கயிறாடு பறையிற் கலங்கிங கழையில் ஆடும் பறை அலைக்கும்கோல்*** என்று சங்க இலக்கியப் பாடல் வரிகளைச் சான்று கூறலாம். இவ்வரலாற்றுப் பார்வை இங்கு மனங்கொள்ளத்தக்கது.

## தொகுப்புரை

தமிழ்நாட்டில் வாழும் குடிதொம்பரா மக்கள் பதநையா மொழி பேசுகின்றனர். பல குழுக்களாகப் பிரிந்து வேறுவேறு ஊர்களுக்கு நாடோடிகளாய்ச் செல்கிறார்கள். ஆண்டுமுழுவதும் வெளியூர்களில் இருந்துவிட்டு தை மாதத்தில் அனைவரும் ஊர் திரும்புவார்கள். இருநாள் திருவிழாவை எல்லோரும் கூடி மகிழ்ச்சியோடு கொண்டாடுகிறார்கள். கழைக்கூத்தும், வித்தையும் இவர்ளின் பரம்பரைத் தொழிலாக உள்ளது. ஆண், பெண் வேறுபாடு இல்லாமல், கழைக்கூத்தும், வித்தையும் நிகழ்த்திக் காசு சேர்க்கிறார்கள். தனித்தனியாக ஜம்புக்குச்சிகளாலான ஐந்து குடிசைகளுக்குள் உள்ள ஐந்து குலதெய்வங்களுக்கும் ஒரே நேரத்தில் திருவிழா எடுக்கிறார்கள்.

## தகவலாளிகள் விபரம்

1. *இ.ஆனந்த்:* (த/பெ.லெட்சுமணன்) வயது 37, தொழில் கழைக்கூத்து-சர்க்கஸ்வித்தை, பதநையா பிரிவு.
2. *சு.பாபு:* (த/பெ.சுந்தரம்), வயது 48, தொழில்:கழைக்கூத்து-சர்க்கஸ்வித்தை, பதநையா பிரிவு.
3. *பூங்கொடி:* (க/பெ. ஆனந்த்த) வயது 22, தொழில்: கழைக்கூத்து-சர்க்கஸ்வித்தை, பதநையா பிரிவு.

# இஸ்லாமிய வழிபாடுகளும் மரபுகளும்

**மெஹமுதா**, எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி.,
*வி.எல்.பி.ஜானகியம்மாள் கலை அறிவியல் கல்லூரி, கோவை.*

***இஸ்லாம்*** என்பது ஒரு மார்க்கம். இம்மார்க்கத்தைப் பின்பற்றுபவர் முஸ்லீம் என்றழைக்கப் படுகின்றனர். முஹம்மது நபி ***(ஸல்)*** அவர்களால் 1422 ஆண்டுகளுக்கு முன்பு தோற்றுவிக்கப்பட்ட இஸ்லாத்தை -இன்று 150 கோடி மக்கள் பின்பற்றி வருகின்றனர். ***இஸ்லாம்*** என்றால் ***கட்டுப்பட்டு நடத்தல்*** என்பது பொருளாகும். இஸ்லாம் ஓரிறைக் கொள்கையையும், இறைவன் தேவைகள் அற்றவன், பலவீனம் இல்லாதவன் என்பதனையும் திருத்தூதர் முகம்மது நபி (ஸல்) அவர்களை மதித்தல் வேண்டும் என்ற கொள்கைகளையும் வலியுறுத்துகிறது.

***உளூ செய்தல் :*** உளூ செய்தல் என்பது தொழுகைக்கு முன்பு உறுப்புகளை சுத்தப்படுத்தக் கொள்ளுதல். முகம், காது, கைகள், தலையைத் தடவியும், இரண்டு கால், கரண்டைமுளி உட்பட கழுவுதல். உளூ செய்யாமல் தொழுகைக்குச்செல்லக் கூடாது. இறைவன் அத்தொழுகையை ஏற்றுக் கொள்ளமாட்டான் என்பது நம்பிக்கை.

***தொழுகை:*** ஐந்து கடமைகளில் ஒன்று தொழுகை. குழந்தைகள் ஏழு வயதை எட்டிவிட்டால் தொழுகையும், குர்ஆன் கற்பதும் கட்டாயமாக்கப் பட்டுள்ளது. தினமும் ஐந்துவேளையில் தொழுகை செய்ய வேண்டும். ***நிச்சயமாக தொழுகை தீயவைகளை விட்டும் தடுக்கின்றது*** (அல்குர்ஆன் 29:45) என்ற குர்ஆன் வாசகத்தின் மூலம் தீமைகளை விட்டும், மானக்கேடானவற்றை விட்டும் தடுப்பதற்கு ஆன பயிற்சியே தொழுகை என்பது உணர்த்தப்படுகிறது. ஐவேளை தொழுகை என்பது, 1)சுபுஹ - விடியற்காலை 2)லுஹர் - மதியம் 3)அஸர் - மாலைநேரம் 4)மஃரிபு - இரவின் தொடக்கம் 6.30 மணியளவு 5)இஷா - இரவு 8.00 மணியளவு என்ற நேரப்படி தொழ வேண்டும். ஆண்கள் பள்ளிவாசலுக்குச் சென்றும், பெண்கள் வீட்டிலும் தொழுவார்கள். இதில் ***முஜாஹிர்*** தலையில் தொப்பி அணியாமல் தொழுவர். மற்றவர் தொப்பி அணிவர். பெண்கள் உடல்முழுவதும் மூடும் வண்ணம் உடை அணிந்து தொழுவார்கள். ஐவேளை தொழுகை தவிரப் பிற தொழுகைகளும் கடைப்பிடிக்கப் படுகின்றன. அவை ஜும்மா தொழுகை, ஜமாத்

தொழுகை, கஸ்ரு தொழுகை, தராவீஹ தொழுகை, ஜனாஸா தொழுகை, தஸ்பீஹ தொழுகை, தஹஜ்ஜத் தொழுகை, இஷ்ராத் தொழுகை, ஓஹா தொழுகை, அவ்வாபீன் தொழுகை போன்றவையாகும்.

***ஜமாத்தொழுகை :*** அனைவரும் சேர்ந்து நின்று தொழுவது. இதனால் இருபத்தியேழு மடங்கு நன்மை ஏற்படும்.

***ஜும்ஆ தொழுகை :*** வெள்ளிக்கிழமைதோறும் குளித்து நல்ல உடையணிந்து வாசனை பூசி பள்ளி வாசலுக்குச் சென்று மதிய நேர தொழுகையான ஜும்ஆ தொழுகையில் கலந்து கொள்வார்கள். இதில் பெண்கள் பிரயாணிகள், உடல்நலமற்றவர்கள், கண்பார்வையற்றவர்கள், எதிரியின் பயமுடையவர்கள் ஆகியோருக்கு ஜும்ஆ கடமையில்லை.

***கஸ்ரு தொழுகை :*** குறைத்துத் தொழுகும் தொழுகை. ஒருவர் 61 மைல்களுக்குப் பிரயாணம் செய்து 15 நாட்களுக்குக் குறைவாகத் தங்க நேரிடும்போது தொழுகையின் அளவில் சலுகை உண்டு.

***தராவீஹ தொழுகை :*** நோன்பு நோற்கும் ரமலான் மாதத்தில் முப்பது நோன்பு நாட்களிலும் இஷா (இரவு) தொழுகைக்குப் பின் மேலும் அதிகமாய் அனைவரும் கூடிநின்று தொழுவார்கள்.

***ஜனாஸா தொழுகை :*** இறந்தவருக்காகப் பாவமன்னிப்புக் கேட்டுத் தொழுவார்கள். இறந்தவரின் உடலை (மய்யத்தை) எடுக்கும் வரையில் குர்ஆன் முழுவதையும் ஒருவர் மாற்றி ஒருவர் ஓதுவர். 3ம் நாளன்று இறந்தவருக்குப் பிடித்தமானவற்றை வைத்து ***யாசீன்*** ஓதுவர். யாசீன் என்பது இறந்தவருக்காகவும், நோயுற்றவர் குணமாகவும் ஓதப்படுவது.

***பெருநாள் தொழுகை :*** சூரியன் ஒரு ஈட்டியின் அளவு மேலே உயர்ந்ததிலிருந்து உச்சிக்கு வரும் நேரம் வரையில் தொழுகை நடத்துவர். தொழுகைக்குச் செல்லும்போது அல்லாஹ அக்பர் எனச் சொல்லிக் கொண்டு ஒருவழியே போய் தொழுதுவிட்டு மறுவழியே வரவேண்டும். ***அல்லாஹ அக்பர்*** என்பது இறைவனைப் போற்றிப் புகழும் சொல்லாகும்.

***தஸ்பீஹ தொழுகை :*** ஒருநாளில் ஒருதடவை, அல்லது வாரத்தில் ஒருமுறை, மாதத்தில் ஒருமுறை, ஓராண்டில் ஒரு முறையேனும் தொழ வேண்டும் எனத் தொழுவது எல்லா பாவங்களும் போக்கப் படுகின்றன.

***தஹஜ்ஜத் தொழுகை :*** இரவின் கடைசிப் பகுதியான மூன்று மணியளவில் தொழுவார்கள். இத்தொழுகையின் வாயிலாகத் தேவைகள் பூர்த்தியாகும் சிறப்புகள் ஏற்படும் என்பது நம்பிக்கை.

***இஷ்ராக் தொழுகை :*** சூரியன் உதயமாகி சுமார் பதினைந்து நிமிடங்களுக்குப் பின் தொழுவது. மனதில் வேதனை தீரவும், அன்றைய

இன்றியமையாத தேவை நிறைவேறவும் தொழுவது. இத்தொழுகையால் ஹஜ் புனிதப் பயணம் மேற்கொண்ட பலன் கிட்டும்.

***ஓஹா தொழுகை :*** காலை பத்துமணி அளவில் தொழுவது. இதனை நிரந்தரமாகத் தொழுது வருகிறவர்களுக்கு கியாமத்து (மறுமை) நாளில் *ஓர் அழைப்பாளர் வந்து ஓஹா என்ற சொர்க்க வாசலைக் காட்டிப் போகச்* சொல்லுவர் என்பது இதன்பயனாகக் கொள்ளப்படுகிறது.

***அவ்வாபீன் தொழுகை :*** மாலை நேரத்தில் இரவின் துவக்கத்தில் தொழப்படும் மஃரிபு தொழுகைக்கும் இரவு நேர (இஷா) தொழுகைக்கும் இடைப்பட்ட நேரத்தில் தொழுவது. இத்தொழுகையின் மூலம் ***பாவங்கள் கடல்நுரை அளவு இருந்தாலும் மன்னிக்கப்பட்டு விடும்*** என்று நபி அவர்கள் அருளியுள்ளார்கள்.

***துஆ - ஓதுதல் :*** தொழுகை முடிந்து இறைவனிடம் தேவைகளைக் கேட்டுப் பிரார்த்தனை செய்வது.

***தல்பியா, திக்ர் :*** இறைவனை எண்ணி தபஸ்மணி வைத்தும், விரல்கள் விட்டு எண்ணியும் தியானம் இருப்பார்கள்.

***மேற்குத் திசை வழிபாடு :*** மெக்காவில் உள்ள கஃபா ஆலயம் இறைவனை வழிபட உலகிலேயே முதன்முதலில் கட்டப்பட்ட பிரார்த்தனைக்கூடம் ஆகும். எனவே இஸ்லாமியர்கள் மேற்குத் திசை பார்த்தே தொழுவர்.

***ஃபாத்தியா ஓதுதல் :*** இஸ்லாமிய மாதமான ***ஷஃபான்*** 14-6 பிறையில் ***பராத் இரவு*** என்று குறிப்பிட்ட நாளில் இறந்தவர்களுக்காகப் பிரார்த்தனை செய்வார்கள். திருமண நாளுக்கு முந்தைய நாளன்று இறந்தவர்களுக்காகவும், *குழந்தை பிறந்த 40வது நாளில்,* பெயர் வைக்கும்போதும், இறந்தவரின் 3ம்நாள், 40ம் நாட்களில் ஓதப்படும்.

***மௌலூது :*** மிலாடி நபி அன்றும், வெளிநாட்டில் வேலை வாய்ப்புக் கிடைத்துப் போவோர் நலமுடன் திரும்பி வர, அவரவர் வசதிக்கேற்ப ஓதப்படும். பள்ளிவாசலிலும் வீடுகளிலும் ஓதப்படும்.

***தர்கா வழிபாடு : தர்கா வழிபாடு*** என்பது சமாதி வழிபாடு ஆகும். இஸ்லாம் சமயம் தழைக்கப் பாடுபட்டோர், மார்க்கத்துக்காக *உயிரிழந்தவர்கள்* ***அவுலியா*** என்றழைக்கப்படுகின்றனர். இவர்களை அடக்கம் செய்த சமாதியினை மரியாதை செய்யும் பொருட்டு விழாக்கள் நடத்தப் படுகின்றன. கருப்புக் கயிறு மந்திரித்துக் கட்டுவது, தண்ணீர் ஓதிக் கொடுப்பது, கரும்புச் சர்க்கரையும் பொட்டுக்கடலையும் கலந்த *சீரணி* (பிரசாதம்) கொடுப்பது ஆகியவை தர்காக்களில்

நடைபெறுகின்றன. பைத்தியம், செய்வினை, பில்லி, சூனியம், பேய், பிசாசுபிடித்தல் போன்ற மக்கள் நம்பிக்கை தீர்க்கும் வழிபாடுகளும் நடத்தப் படுகின்றன. சிறு குழந்தைகள் பயந்திருந்தால் மயிலிறகால் தடவி ஓதிப் பயம் தெளிப்பதும் நேர்த்திக்கடன் செய்வதும் முக்கிய வழிபாடாகும். நெய்விளக்கு ஏற்றுவது, ரம்ஜான் மாதத்தில் சந்தனக்குடம் எடுப்பதும் முகரம் பண்டிகையின்போது தீமிதிப்பதும் திருச்சி நத்தர் வலிதர்காவின் வழிபாடாகும். கந்தூரி விழா (நேர்த்திக்கடனில் பலியிடுதல்) கொண்டாடுதல் வெள்ளி உருண்டைகளை நேர்த்திக் கடனாய் செலுத்துவது, சமாதிக்குப் பச்சைநிறத் துணி வாங்கிப் போர்த்துவது, பூப்போடுதல், இனிப்புக் கொடுத்தல் போன்ற வழிபாடுகளும் நடத்தப்படுகின்றன. இந்தியா, பாகிஸ்தான், எகிப்து, ஈராக், ஈரான், துருக்கி என அரபுநாடுகளிலும் இச்சமாதி வழிபாடு நடத்தப்படுகின்றது.

***குர்பான் :*** பலிஇடுதல் என்பது இதன் விளக்கமாகும். ஆடு, மாடு, ஒட்டகம், போன்ற பிராணிகளை ***பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம், அல்லாஹு அக்பர்*** என்ற வாசகங்களைக் கூறி அறுத்துப் பலியிடுவர். இறையச்சம், தியாகம் எனும் பயிற்சியின் நோக்கமாய், திருக்குர்ஆன் வசனப்படி, ***நிச்சயமாக அவற்றின் இரத்தங்களோ மாமிசங்களோ இறைவனைச் சென்றடைவதில்லை, மாறாக உங்களிடம் உள்ள இறையச்சமே அவனைச் சென்றடையும்*** (அல்குர்ஆன் 22:37) என்ற உணர்வுகளுடன் நடத்தப்படும் வழிபாடாகும்.

***அக்கீகா :*** குழந்தை பிறந்த ஏழாவது நாள் குழந்தை நலமுடன் வாழ ஆடு பலியிடப்படுகின்றது. மனிதனுக்காகச் செய்யப்படும் வழிபாடு இது. ஆண் குழந்தைக்கு 2 ஆடுகளும் பெண் குழந்தைக்கு 1 ஆடும் பலியிடப் படுகின்றது. இது அவரவர் விருப்பத்திற்கு ஏற்பச் செய்யப் படுகிறது.

இதைத்தவிர இஸ்லாமியர்கள் ரம்ஜான், பக்ரீத், மெஹ்ராஜ் இரவு, மிலாடிநபி, முஹரம், பராத் இரவு ஆகியவற்றை இசுலாமிய முறைப்படி அனுஷ்டிக்கின்றனர். ஓரிறைக் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட இஸ்லாம் மார்க்கத்தில் வரையறை செய்யப்படாத ***தர்கா வழிபாடு, ஃபாத்தியா ஓதுதல், மௌலூதா ஓதுதல்*** போன்றவற்றை கைவிடாமல் அவரவர் நாட்டு வழக்கப்படி வழிபாடு செய்து வருகின்றனர். தொழுகையும் நோன்பும் ஹஜ் பயணமும் மட்டுமே இஸ்லாத்தின் கடமையாக்கப்பட்ட வழிபாடுகள் ஆகும்.

# சிறுதெய்வ வழிபாடும் கருவிகளும்

**தி. ரமா**, எம்.ஏ., எம்ஃபில்., டிப்.இன். டி.ஆர்ட்ஸ்.,பிஎச்.டி.,
*அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி.*

மக்கள் வழிபாட்டில் சிறுதெய்வங்களுக்குத் தனிமுதன்மை இருக்கிறது. பெருந்தெய்வ வழிபாடும் சிறுதெய்வ வழிபாடும் வேறுபட்டு இருப்பது போலத் தெய்வங்களின் தோற்றமும் வேறுபட்டிருக்கிறது. சிறுதெய்வங்கள் உயிர்ப்பலி பெறுகின்ற தெய்வங்கள்; அதனால் மக்கள் பயன்படுத்தக்கூடிய கருவிகளையே சிறுதெய்வங்கள் வைத்திருக்கின்றன. சிற்பிகள், நடைமுறையில் பயன்படுத்துகின்ற கருவிகளையே சிறுதெய்வங்கள் பெற்றிருந்தன என்று கருதுகின்றனர். குலாலர் சிற்பமானாலும் சுதைச் சிற்பமானாலும் இந்தக் கருவிகளே சிறுதெய்வங்களிடம் உண்டு.

சிறுதெய்வ வழிபாட்டை ஆராய்கின்ற போது உருவச்சிலை இடம்பெறுதற்கு முன் வழிபாட்டில் கருவிகளே இடம்பெற்றிருந்தன. இன்றும் காடுகளிலும், மலைகளிலும் வேலாயுதம், திரிசூலம், ஈட்டி போன்ற கருவிகளை நடப்பட்டு வழிபடப்பெறுகின்றன. சிலப்பதிகாரத்தில் வேற்கோட்டம், வச்சிராயுதக் கோட்டம் என்று கருவிகளால் கோயில்கள் சுட்டப்பெறுகின்றன. காலப்போக்கில் இக்கோயில்களில் உருவத்திருமேனிகள் இடம்பெற்றபோது சிறுதெய்வக் கோயில்களில் கருவிகளுடன் கூடிய தெய்வங்களும் இடம் பெறலாயின.

## அரிவாளும் தெய்வங்களும்

இரண்டு கைகளையுடைய ஆண் தெய்வங்கள் அனைத்திடத்தும் கட்டாயம் அரிவாள் இருக்கும். அரிவாள் இல்லாமல் சிறுதெய்வம் இல்லை. அந்த அரிவாளும் பகைவரை வெட்டுவதற்கு ஓங்கிய வண்ணம் தோளுக்கு மேலே உயர்ந்திருக்கும்; கூரிய முனைய எதிர்நோக்கி இருக்கும்; கைகளில் சுக்குமாத்தடி என்னும் கதாயுதம் இருக்கும். இவை சிலையில் வடிக்கப்பட்டிருக்கும். அத்துடன் இந்த இரண்டு கருவியையும் அந்தந்தச் சிறுதெய்வத்திற்கு முன்வைத்திருப்பார்கள். அரிவாள் இரும்பால் செய்யப்பெற்றிருக்கும் கதாயுதம் மரத்தில் செய்யப்பட்டிருக்கும். இந்த இரண்டு கருவிகள்தான் கருப்பர் என்ற பெயரால் வழங்கும் சிறுதெய்வங்களிடம் காணப்படுகின்றன. முனியையாவிடமும் இக்கதாயுதம் இருக்கும்.

பஞ்சபாண்டவரின் வீமன் கதாயுதத்தையே வைத்திருப்பான். அவனைப் போல இச்சிறுதெய்வங்களும் வலிமைமிக்கன என்று காட்ட இக்கருவி அமைகிறது. பெருந்தெய்வக் கோயில்களிலிருப்பது போலச் சிறுதெய்வங்களிடையே கமண்டலம், கெண்டிச் செம்பு, வீணை, அங்குசம் போன்றவை இரா; இதற்கு மாறாக ஆகமங்களில் சொல்லிய உருவ அமைதியையுடைய வீரபத்திரர், பத்ரகாளி, மகாமாரி போன்ற தெய்வங்களுக்கு மிகுதியாகக் கருவிகள் இருக்கும்; இத்தெய்வங்களுக்குக் கைகளும் மிகுதி; கருவிகளும் மிகுதி. அய்யனாருக்கு மட்டும் சில இடங்களில் செண்டாயுதம் உண்டு. மதுரைவீரன், வீரபத்திரர் ஆகிய தெய்வங்களுக்குக் குதிரைச்சவுக்கு அல்லது சம்மட்டி உண்டு. இந்தச் சவுக்கு மிகவும் அழகாகச் செதுக்கப்பட்டிருக்கும்.

## கருப்பரும் கருவிகளும்

சிறுதெய்வங்களில் எல்லாக் கோயில்களிலும் இடம்பெற்றிருக்கும் தெய்வம் கருப்பர். இவ்வுருடைய அமைப்பே ஒருதனித் தன்மையுடையது. இவர் மனிதம் தெய்வமாக ஆனதைக்காட்டும் தோற்றம் உடையவர். கையில் அரிவாள் என்னும் ஆயுதத்தை ஏந்தியிருப்பார்; இந்த அரிவாள் வெவ்வேறு வகையாக அமைந்திருக்கும். இஃது ஒன்றரையடி உயரம் உடையது. அரிவாளின் மூக்குவளைந்திருக்கும். அரிவாளைப் பிடித்துக் கொள்வதற்கு மரத்தாலான கைப்பிடியிருக்கும். இது எல்லாக் கோயில்களிலும் உள்ள கருவி; மக்கள் நேர்த்திக்கடனாக அரிவாளை ஆசாரியிடம் அடித்து வாங்கிக் கருப்பர் கோயில்களிலும் பிற கோயில்களிலும் வைப்பர். இதனால் சிறுதெய்வக் கோயில்களில் நிறைய அரிவாள் இருப்பதைக் காணமுடியும்.

சிவன் கோயிலிலோ திருமால் கோயிலிலோ அரிவாளை வைத்திருக்கும் எந்தத் தெய்வத்தையும் காண முடியாது. பெருந்தெய்வக் கோயில்களில் வேல், ஈட்டி போன்றவை தாம் காணப்படும். அரிவாள் என்ற சொல் அரியும்வாள் என்பதாம். இஃதொரு வினைத் தொகைத்தொடர்; இஃது இரும்பு கருவியைக் குறிக்கிறது. இப்பெயரை நோக்கும் போது வாள் என்பதே பழமையானது என்றும் அதைப்போல உருவாக்கப்பட்ட வேறுவடிவான கருவியை அரிவாள் என்று பெயரிட்டனர் என்றும் அறிய முடிகிறது. அரிவாள், அரிவாள் மணை என்பன வாளைப் பார்த்து உருவாக்கியவை. அரிவாள் வடிவத்தில் அலங்காரங்களோ வேறு ஓவியங்களோ வரையப்படவில்லை.

## இருவகை நிலை

அரிவாளைச் சிறுதெய்வங்கள் வைத்திருப்பதில் இருவகை நிலை உள்ளது. சிலதெய்வங்கள் அரிவாளைத் தோள்மட்டத்திற்கு உயர்த்தி வைத்துக்கொண்டிருக்கின்றன. இது பெரும்பான்மையான அமைப்பு; வேறுசில கருப்பர் வடிவங்களில், கருப்பர் தலைக்குமேலே அரிவாளை உயர்த்தி வெட்டுவது போல ஓங்கிய வண்ணம் இருக்கின்றனர். திருமால் திருக்கரங்களில் சக்கரத்தைப் பிரயோகிப்பதற்கு அணியமாக வைத்திருப்பதைப் பிரயோகச் சக்கரம் என்பர். அதுபோலக் கருப்பரும் அரிவாளைப் பிரயோகம் செய்வதற்குத் தயாராக அரிவாளை வைத்திருப்பர். அரிவாள் சிலையோடு அடிக்கப்பட்டும் தனியாகவும் கோயில்களில் காணப்படுகின்றன. மக்கள் பயன்படுத்தும் கருவியான அரிவாளை வைத்திருக்கும் தெய்வங்கள் அனைத்தும் மனிதர்களாக இருந்து தெய்வங்களாகக் கொண்டாடப்பட்டவை. மதுரைவீரன் என்ற பெருவீரன் உருவச்சிலையில் கூட அரிவாளே காணப்படுகிறது. அரிவாளின் வடிவம் வட்டாரத்திற்கு வட்டாரமும் தொழிலுக்கு ஏற்பவும் வெவ்வேறு வடிவுடனும் இருக்கும். ஆனால் கற்சிலையில் உள்ள அரிவாள் எல்லாம் ஒன்று போலவே உள்ளன. அரிவாளைக் கையில் ஏந்தியிருக்கும் தெய்வங்கள் அனைத்திற்கும் தலையில் மகுடமிருக்காது; கொண்டைதான் இருக்கும். இந்தக் கொண்டையுள்ள தெய்வங்கள் சீற்றமுடையவை என்று மக்கள் அஞ்சுகின்றனர்.

## வட்டார வேறுபாடு

சிறுதெய்வங்களின் கருவிகள் வட்டாரத்திற்கு வட்டாரம் வெவ்வேறாக இருக்கும். எல்லாத் தெய்வங்களும் ஒரே பெயருடையவனாக இருந்தாலும் வடிவத்தில் வித்தியாசம் காணப்படுகிறது. பாகனேரி வட்டாரச் சிறுதெய்வக் கோயில்களில் உருவமில்லாமலே கருவிகள் மட்டும் உள்ளன. இவ்வாறுள்ளவற்றில் ***வளைதடி*** என்று ஒருகருவி உண்டு. இஃது எறியாயுதவகை; இந்த ஆயுதம் எல்லாக்கோயில்களிலும் கிடையாது. பாகனேரி வட்டாரத்தில்தான் காணப்படுகிறது. இந்த ஆயுதத்தைப் பிரயோகப்படுத்துவதில் மருதுபாண்டியர்கள் வல்லவர்கள். இது யாரைக் குறி வைத்து *எய்கிறோமோ* அவர்களைத் தாக்கிவிட்டு எய்தவனிடத்திலேயே வந்து சேர்ந்துவிடும். இதுபோல ஆஸ்திரேலியப் பழங்குடி மக்கள் பூமராங் என்ற கருவியைப் பயன்படுத்துகின்றனர். அந்த ஆயுதத்தை உருவச்சிலைக்குப் பதிலாக வைத்து வழிபடுகின்றனர். இதுசிறுதெய்வ வழிபாட்டில் ஒரு குறிப்பிட்ட வட்டாரத்தில் உள்ள கருவியாகும்.

சிறுதெய்வங்களிடத்து இடுப்பில் குத்துவாள் என்னும் குத்துக்கத்தியிருக்கும்; இதனைப் பெங்களூர் சமுதாடு என்பர். பாடுவார் முத்தப்பர். அவர் பாடிய குதிரையடியில் பெங்களூர் சமுதாடு கருப்பர் இடுப்பில் வைத்திருப்பதாகப் பாடுகிறார். கற்சிலையாக வடிக்கப்பட்டிருக்கும் கருப்பர் திருவுருவங்களில் இந்த ஆயுதத்தைக் காணமுடிகிறது.

## அடிப்படைக் கருவிகளின்மை

வில், அம்பு, தண்டம் போன்றவற்றைக் கிராமத்தார்கள் பெரிதும் பயன்படுத்துகின்றனர். சாதாரண அடிபிடிச்சண்டையில் கூடக் கம்பு, அல்லது சிலம்பு தனியிடம் பெறுகிறது. இதனை அடுத்துத்தான் அரிவாள் சண்டைக்குப் பயன்படும். இவைச் சத்திரக் கருவிகள். பயன்படுத்துவோன் கையில் வைத்துக்கொண்டு எதிரியைத் தாக்குதற்கு இவற்றிலிருந்து வேறானவை அஸ்திரங்கள்; இவற்றை எய்துவிட்டு எய்தவன் வாளாயிருப்பான். தூரத்திலிருந்து தாக்கும் போதோ மறைந்திருந்து தாக்கும் போது இந்தக் கருவிகள் பயன்படும். கிராமத்தார்கள் மிகுதியாகப் பயன்படுத்தும் சிலம்பு, அம்பு, வில் போன்ற கருவிகள் சிறுதெய்வங்களிடம் காணப்படவில்லை. பழனியாண்டவர். கையில் . தடியைப் பிடித்துக் கொண்டிருக்கிறார். ஆனால் சிறுதெய்வங்களில் இக்கருவியைக் காணமுடியவில்லை.

சிறுதெய்வங்களில் காணப்படும் கருவி, கதை அல்லது சுக்கமாந்தடி என்பதாம். இதனை வீரபத்திரர், முனியையா போன்ற தெய்வங்களிடத்துக் காணலாம். இது தடியாகவும் பெரிதாகவுமிருப்பதால் கற்சிலைகளில் மிகுதியாக இதை வடிக்கவில்லை. தனியே மரத்தில் செய்துதான் இந்தக் கருவியைத் திருமேனியிடத்தோ தனியேயோ வைத்திருக்கின்றனர். கதை அடி கூம்பாக இருக்கும். இதற்கு மேல் உள்ள பகுதி பெருத்திருக்கும். அதன்பின் நுனிவரை சிறுத்திருக்கும். நுனிப்பகுதி உருண்டையாக இருக்கும். இந்தக் கருவியைத் துவாரபாலகர் வடிவத்தில் காணலாம். இந்தக் கதையை இவ்வாறு செய்யாமல் நுனிபெருத்து வரவரச் சிறுத்து அமைப்பதும் உண்டு. ஆனால் இந்த ஆயுதத்தை எந்தச் சிலையிலும் காணமுடியவில்லை. எனினும் சிலகருப்பர் வடிவங்களில் வலக்கையில் அரிவாளும் இடக்கையில் சுக்குமாந்தடியும் காணப்படுகின்றன.

பத்ரகாளி வடிவமாக உள்ள திரிசூலம் இரும்பால் செய்யப்பட்டுக் காளியிடம் வைக்கப்பட்டிருக்கிறது. பத்ரகாளிக்குச் சூலம் உரியது என்றாலும் அதனைச் சிலையில் அடிப்பதில்லை. எல்லாக் கோயில்களிலும் இரும்பினால் செய்து தனியே சாத்துகின்றனர்.

## கருவிகளின் தனித்தன்மை

வளைதடி அல்லது வலரி மரத்தால் செய்யப்பட்ட ஆயுதம். இதனை இரும்பால் செய்தும் போருக்குப் பயன்படுத்துவர். பிறைவடிவிலான கூர்மையான பகுதி ஏனைய பகுதிகளைவிடக் கனமாக இருக்கும். வெளி விளிம்பே கூராக்கப்பட்டிருக்கும். இதைப் பயன்படுத்துபவர்கள் லேசான முனையைக் கையில் பிடித்து வேகம் கொடுப்பதற்காகச் சிலமுறை தோளுக்கு மேல் சுழற்றுவர். பின்விரைவுடன் இலக்கை நோக்கி எறிவர்; அஃது இலக்கைத் தாக்கிக் கொன்றுவிட்டு, எறிந்தவர் கைக்கே திரும்பிவந்துவிடும். இந்த ஆயுதத்தின் பிறப்பிடம் சிவகங்கைச் சீமை என்று அறிஞர் மீ. மனோகரன் குறிப்பிடுவர். இந்த ஆயுதத்தைச் சிறுதெய்வங்களுக்குரிய ஆயுதமாகக் கோயில்களிலும் வீடுகளிலும் வைத்து வணங்குகின்றனர். இந்த ஆயுதத்தைப் பற்றி எட்கர் தர்ஸ்டனும் அறிஞர் மீ. மனோகரனும் தங்கள் நூல்களில் குறிப்பிட்டிருக்கின்றனர்.

அரிவாளைத் தனியே வைத்துக்கும்பிடுவது [illegible]யும் வைத்துக்கும்பிடுகின்றனர். ஆனால் இந்த வடிவங்களைத் தெய்வங்களின் திருமேனியில் அடித்திருப்பத்தைக் காணமுடிவதில்லை. காளியம்மன் உருவத்துடன் இரும்பு அல்லது செப்பால் [illegible] அம்மன் முன்னர் சாத்தி இருப்பர்; அத்தகைய பெரியதிரிசூலத்தை அம்மன் சிலையில் காணமுடிவதில்லை.

Dr. U.V. SAMINATHA IYER
Chennai-90

சிறுதெய்வக் கோயில் உள்ள ஆண்தெய்வங்களில் கைகளை மிகுதியாக உடைய தெய்வம் வீரபத்திரர் ஒருவரே. பிறதெய்வங்களுக்கு எல்லாம் இரண்டே கைகள். அவற்றில் அரிவாளோ கதையோதான் காணப்படுகின்றன. வேறு வடிவங்களில்லை. வீரபத்திரர் சிறுதெய்வமாக வணங்கப்பெற்றாலும் அவர் ஆகம வழிபாட்டிக்குரிய கடவுள் மரபைச் சார்ந்தவர். பெண்தெய்வங்களில் பத்ரகாளி வடிவத்திற்குப் பல கைகள்; ஒவ்வொரு கையிலும் வெவ்வேறு வகையான கருவிகள் காணப்படுகின்றன. ஈட்டி, கபாலம் ஆகியவற்றுடன் மணியுமிருப்பது குறிக்கத்தக்கது.

சிறுதெய்வங்கள் வைத்திருக்கும் கருவிகளை ஆராயும் போது அவை அனைத்தும் மக்கள் பயன்படுத்தும் கருவியை உடையன. மக்களே தெய்வங்களாக மறுமலர்ச்சி பெற்றமையால் ஆகமங்கள் வலியுறுத்தும் தெய்வக் கருவிகள் இத்தெய்வங்களுக்கு அமைக்கப்படவில்லை. மக்களே செயற்கரிய செய்து தெய்வங்களாக மாறியமையை இந்தக் கருவிகள் உணர்த்துகின்றன.

# காணிக்காரர்களின் வழிபாட்டு முறைகள்

**ரா.ச. ராஜஸ்ரீ,** எம்.ஏ.,எம்.ஃபில்.,
*பல்கலைக்கழகக் கல்லூரி, திருவனந்தபுரம்.*

## முன்னுரை

இந்தியாவில் வாழும் பழங்குடி இனத்தவர்களுள் காணிக்காரர் இனமும் ஒன்றாகும். இக்காணி மக்கள் கன்னியாகுமரி மாவட்டத்தின் மலைப்பகுதிகளில் அதிகமாக வாழ்ந்து வருகின்றனர். இயற்கையோடு ஒன்றிணைந்து வாழ்கின்ற இக்காணி மக்கள் மிகுந்த இறை நம்பிக்கை உடையவர்கள். தங்களுக்கு ஏற்படுகின்ற நோய்கள், இன்னல்கள் போன்றவை கடவுளின் சீற்றத்தால் உருவாகின்றன என நம்பி கடவுளுக்குப் படையல் செய்து வழிபடுவதனை முதல் கடமையாகக் கொண்டுள்ளனர். சாவுக்கு அஞ்சிய இவர்கள் இறந்தோரின் ஆன்மாவிற்கு வழிபாடுகள் நடத்தி வணங்குகின்றனர். குறிப்பாகத் தங்களை அச்சுறுத்துகின்ற அனைத்தையும் வணங்குகின்றார்கள். இவர்களின் வாழ்வியலோடு ஒன்றிய இயற்கை வழிபாடு, ஆவி வழிபாடு, ஞாயிறு (சூரியன்) வழிபாடு, கொடுதி வழிபாடு, முத்தி வழிபாடு, சிறுதெய்வ வழிபாடு, பெருந்தெய்வ வழிபாடு போன்ற வழிபாட்டு முறைகளைக் குறித்தான ஆய்வாக இக்கட்டுரை அமைகின்றது.

## வழிபாட்டின் நோக்கம்

மனிதனுடைய வாழ்க்கைச் சூழலில் தம்மை தீயவை அணுகக்கூடாது. நல்லவை அணுகவேண்டுமென்று தெய்வத்திடம் வேண்ட அதுவே வழிபாடாக முகிழ்ந்தது எனலாம். பண்டைக்கால மக்கள் சடங்காச்சாரங்களை, வாழ்க்கையில் நலன்களைப் பெற மிக அவசியமாகக் கருதினர். மழை பெய்யவும், பயிர் வளரவும், காய் கிழங்குகள் கிடைக்கவும் நோய் நொடிகள் வராமல் இருக்கவும், வேட்டையில் விலங்குகள் கிடைக்கவும், புயல் போன்ற இயற்கை விபத்துக்கள் நேராமல் இருக்கவும் நிகழ்த்தினர் என்கிறார் வானமாமலை (1: 91). காணிக்காரர்கள் இயற்கையின் கோரப் பிடிகளிலிருந்து தங்களைக் காப்பாற்றுவதற்காகவும், தெய்வத்தின் சினத்தைத் தணித்து நோய்

நொடிகளிலிருந்து விடுபடவும், வாழ்க்கையின் வளமைப் பெருக்கத்திற்காகவும் பல்வேறு விதமான வழிபாட்டு முறைகளைத் தங்கள் வாழ்வின் ஒவ்வொரு கூறுகளிலும் கடைப்பிடித்து வருகின்றனர். பாதுகாப்பற்ற நிலைமையில் காடுகளில் வசித்து வரும் காணிக்காரர்கள் தங்களைப் பல்வேறு விதமான காலச் சூழ்நிலைகளிலிருந்து காப்பாற்றுவதற்காகவே வழிபாட்டினை அனுதினமும் கையாண்டு வருகின்றனர். இவ்வழிபாட்டு முறைகளைப் பயபக்தியுடன் நிகழ்த்துவதை முதல் கடமையாகக் கொண்டுள்ளனர்.

## இயற்கை வழிபாடு (ஞாயிறு வழிபாடு)

காணிக்காரர்கள் எல்லாப் படைப்புக்கும் காரணமாகிய ஒரு சக்தி உண்டு என நம்புகின்றனர். இந்தச் சக்தி இயற்கையில் உறைந்துள்ளது என்பது இவர்களது நம்பிக்கை. எனவே கல், மரம் போன்ற இயற்கைப் பொருட்களை இவர்கள் வழிபட்டு வருகின்றனர். மனித உருவத்தோடு ஒத்த கற்களைக் கண்டால் அவற்றைத் தெய்வமாக எண்ணி வழிபடுவர். பால் வடிகின்ற மரங்களை இவர்கள் வெட்டுவதில்லை. காரணம் அம் மரங்களில் தெய்வங்கள் உறைந்திருப்பதாக நம்புகின்றனர். வேம்பு, வேங்கை, ஆல், அரசு போன்ற மரங்களைப் பயபக்தியுடன் வளர்த்து அம்மரங்களினடியில் வழிபாடு நடத்துகின்றனர்.

இயற்கை வழிபாட்டில் ஞாயிறு வழிபாடு முதன்மை இடம் பெறுகிறது. வேதங்களிலும் சூரிய வழிபாடு பற்றிக் கூறப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. காணிக்காரர்கள் ஞாயிற்றை ***பகவான்*** என்றும் ***தம்புரான்*** என்றும் அழைக்கின்றனர். காணிக்குடியில் நடைபெறும் அனைத்து வழிபாடுகளிலும் ஞாயிறு வழிபாடு முதன்மை வழிபாடாக இன்றும் காணப்படுகிறது. மணநாளன்று மணமகன், மணமகளது இல்லத்திற்குச் செல்லும் முன் ஞாயிற்றுப் பகவானுக்குப் படையல் வைத்து வழிபட்டபின் செல்கிறான். வேலைக்குச் செல்லும் போதும் நீண்ட தூரப் பயணம் மேற்கொள்ளும் போதும் காலையில் கிழக்குத் திசையைப் பார்த்து வழிபடச் செல்கின்றனர். குறிப்பாக வேட்டைத் தொழிலுக்குச்செல்லும் போது அதிகாலையில் திறந்த வெளியில் மண்பானை ஒன்றில் சமையல் செய்து பின்னர் வாழை இலையில் சமைத்தவற்றைப் படைத்து சூரியனை நோக்கி வணங்கி உணவு பரிமாறி அனைவரும் உண்டுவிட்டு வேட்டைக்குச் செல்வர். இந்த வேட்டைத் தொழில் குறையக் குறைய சூரியனை வழிபடும் வழக்கமும் குறையத் தொடங்கிவிட்டது. ஞாயிறு வழிபாட்டில் வெற்றிலை, பாக்கு, கமுகம் பூ, பொரி இவற்றுடன் பொங்காலையும் இடம் பெறுகின்றது.

## ஆவி வழிபாடு

இறந்தவர்களின் ஆவி வளமைப்பெருக்கத்திற்கு உதவி செய்வதாக எண்ணி ஆவி வழிபாட்டுச் சடங்குகள் நடத்தப்படுகின்றன. ***ஆதி குடிமக்கள் இயற்கையில் காணும் தீ, இடி, பெருமழை, பூகம்பம்*** போன்ற அச்சம் தரும் நிகழ்ச்சிகளுக்கும், நோய்களுக்கும் காரணம் உலகின் கண் உலவும் கணக்கற்ற ஆவிகளே என்று நம்பினர் ஆவிகளின் சினத்தைத் தணிக்க அவற்றைத் தேவதைகளாகக் கொண்டு வழிபட்டனர் (2: 451) காணிக்காரர்களிடையே ஆவி வழிபாடு மிக அழுத்தமாக உள்ளது. ஆவி வழிபாட்டினைக காணிக்காரர்கள் ***சாவு*** என்றழைக்கின்றனர். யானை, புலி, பாம்பு போன்றவற்றால் கொல்லப்பட்டவர்களின் ஆவிகளை முறையே ஆனைச்சாவு, புலிச்சாவு, பாம்புச் சாவு என்று அழைக்கின்றனர். முதுமையால் இறந்தவர்களின் ஆவி ***முதுச்சாவு*** என்று அழைக்கப்படுகின்றது. நோய்வாய்ப்பட்டோ, வயது முதிர்ந்தோ இறந்தவர்களின் ஆவியை நல்ல ஆவிகள் என்றும், தற்கொலை செய்து கொண்டவர்களின் ஆவியைத் தீய ஆவிகள் என்றும் கூறி வழிபாடு நடத்துகின்றனர். தீய ஆவிகளுக்குப் பயந்து இடம் பெயர்ந்து செல்லும் வழக்கமும் காணிக்காரர்களிடையே காணப்படுகிறது. இறந்த ஒருவரின் ஆவி தெய்வத்திடம் சென்று வரம் பெற்றுத் திரும்பி வந்து தங்கள் குடும்பத்தைக் காக்கும் என்று இவர்கள் நம்புகின்றனர். எனவே இறப்புக்குப் பின் பதினாறாவது நாள் அந்த ஆவியை வீட்டுக்கு அழைத்து வர, சாற்றுப் பாடல் பாடி வழிபாடு நடத்துகின்றனர்.

கொடிய நோய்கள், வனவிலங்குகள், பயிர்களை அழித்தல், வாழ்க்கை வட்டச் சடங்குகள் போன்ற சூழல்களிலும் ஆவிகளுக்கு வழிபாடு நடத்துதலை முதல் கடமையாகக் கொண்டுள்ளனர். ஆண்டிற்கு ஒருமுறை அல்லது இருமுறை அவர்கள் சாவுக்கு (ஆவிக்கு) வழிபாடு நடத்துகின்றனர்.

## அகத்தியர் வழிபாடு

தமிழகம் முழுவதும் அகத்தியர் கோயில்கள் உள்ளன. அகத்தியர் வரலாறு எனும் நூலில் 37 அகத்தியரின் பெயர்கள் கூறப்படுகின்றன (3:55-63). காணி இன மக்கள் அகத்தியரைத் தெய்வமாகவும் தங்கள் குருவாகவும் வழிபடுகின்றனர். அகத்தியர் குறித்த வாய்மொழிக் கதைகளும், பாடல்களும் வழங்கப்பட்டு வருகின்றன. சாற்றுப்பாடல்கள், மந்திரம், மருத்துவம் ஆகியவற்றைத் தங்களுக்குக் கற்றுத் தந்தவர் அகத்தியர் என்றும் கூறுகின்றனர். தங்களுடைய தொழில்கள் சிறப்பாக நடைபெற வேண்டுமென்பதற்காக தைமாதம் முதல் தேதியில் இருந்து 41 நாள் விரதம் இருந்து மாசி மாதம்

அகத்தியர் இருக்கும் பொதியமலைக்குச் சென்று வழிபடுகின்றனர். இவ்வழிபாட்டில் பச்சையரிசி, பழம் ஆகியவற்றை அகத்தியருக்குப் படைத்து, ஐயா தெய்வமே, நாங்கள் கொடிய விலங்குகள் நிறைந்த காட்டில் வழ்கிறோம். எங்களைக் காக்க வேண்டும் என வேண்டுகின்றனர். இவ்வழிபாடு அமைதியாக நடக்கிறது. அகத்தியரை வழிபடும் போது,

*அகத்தியராண்டவனுக்கு வழிபாடாம் - இங்கு*
*ஆக்கி வச்சதெல்லாம் அவருக்குதான்*
*பழமும் பூவும் அவருக்குத்தான்*
*பண்டமும் பொருளும் அவருக்குத்தான்*
*பச்சையரிசி பாயாசமும் நாம் படச்சோம்*
*பருவமழ பொய்க்க விரமிருந்தோம்*
***எங்கள காக்கணும் அகத்திய சாமி*** - என்று பாடல் பாடும் வழக்கமும் உள்ளது.

## கொடுதி வழிபாடு

நாட்டுப்புற மக்கள் இறைவனுக்கு நன்றி செலுத்துவதைச் சாமிக்குக் கொடுத்தல், படையல், பலி, பொங்காலை என்றெல்லாம் வழங்குகின்றனர். நெல்லை மாவட்டத்தில் சிறு தெய்வங்களுக்கு மூன்று நாட்கள் நடைபெறும் விழாவைத் ***திருவிழா*** என்றும், குமரி மாவட்டத்தில் கிராமத் தெய்வங்களுக்கு நடத்தும் விழாவைக் ***கொடை*** என்றும் குறிப்பிடுகின்றனர். குமரி மாவட்டத்தில் சில வட்டாரங்களில் நன்மை தரும் தெய்வங்களுக்குப் படையலிடுவதை ***பொங்காலை*** என்றும் தீமைதரும் தெய்வங்களுக்குப் படையலிடுவதைக் ***கொடுதி*** என்று வழங்கும் வழக்கம் உள்ளது. கொடுக்கப்படுவதால் கொடுதியாயிற்று என்கிறார் பாலகிருஷ்ணன் (4:114) கொடுதி வழிபாடு இவர்களின் வாழ்வில் இன்றியமையாத வழிபாடாக காணப்படுகின்றது. காணிக்குடியிலுள்ள அனைவரும் தெய்வத்திற்குக் கொடுக்கும் காணிக்கைப் பொருட்களை ***மூட்டுக்காணி*** மொத்தமாகச் சேகரித்து விழா எடுத்த ஆவிகளுக்குக் கொடுப்பதால் ***கொடுதி*** என்று வழங்கப்படுகிறது.

காணிக்காரர்களின் கொடுதிச் சடங்குகளில் உற்பத்தியை மையமாகக் கொண்டு நடத்தப்படும் ***விவசாயக் கொடுதி*** வழிபாடும் வேட்டையில் பொருள் கிடைப்பதின் பொருட்டு நடத்தப்படும் ***வேட்டைக் கொடுதி*** வழிபாடும் இடம் பெறுகின்றன. இவ்வழிபாட்டில் முன்னோர்கள் வணங்கினால் உற்பத்தியைப் பெருக்கலாம் என நம்புகின்றனர்.

கார்த்திகை மாதத்தில் நடத்தப்படும் கொடுதி வழிபாட்டுக்கு ***கார்த்திகைச் கொடுதி*** என்று பெயர். வனதேவதைகளைத் திருப்திப்படுத்தவும், நோய் அண்டாமலிருக்கவும் இவ்வழிபாட்டினை நடத்துகின்றனர். இவ்வழிபாட்டினை நடத்தும்போது ***கார்த்திகைச் சாற்றுப்பாடல்*** பாடுவது வழக்கம். இவ்வழிபாட்டு விழாவினை அவர்கள் நடத்தும் அனைத்துவிழாக்களை விடவும் சிறப்பாகவும் மகிழ்ச்சியாகவும் ஒவ்வொரு குடியிருப்பிலும் கொண்டாடுகின்றனர்.

## முத்தி வழிபாடு

காணிக்காரர்களிடம் இறந்த முன்னோரை வழிபடும் வழக்கம் உண்டு. வயது முதிர்ந்து இறந்த ஆணை ***முதியவன்*** என்றும், வயது முதிர்ந்து இறந்த பெண்ணை ***முத்தி*** என்றும் கூறி வழிபடுகின்றனர். முத்தி, முத்தன் ஆகியோரைத் தெய்வ நிலைக்கு உயர்த்தி வழிபடுகின்றனர். ஒரு குடும்பத்திலுள்ள தந்தை அல்லது வயது முதிர்ந்தவர் தமது குடும்பத்தை எல்லாவிதமான போராட்டங்களினின்றும் பாதுகாக்கிறார். அவர் செய்யும் பணி தெய்வத்தின் பணி போன்றது. மக்களுடைய தேவைகளைத் தெய்வத்திடம் எடுத்துச் செல்லும் தூதுவர்களாகவும் இவர்கள் செயல்படுகின்றனர். அதனால் ஒருவர் இறந்ததும் மூன்றாண்டுகள் கழிந்த பின் அவரது ஆவியைச் சாற்றுப் பாடல் பாடி தோற்றுவித்துக் கோயில் கட்டி குடியிருத்தி வழிபாடு நடத்துகின்றனர். அதன் பின் ஐந்து அல்லது பத்து வருடங்களுக்கு ஒருமுறை இவ்வழிபாட்டினை நிகழ்த்துகின்றனர். இவ்வழிபாட்டில் அவரது இனத்தவரும் குடும்பத்தினரும் கலந்து கொள்கின்றனர்.

## சிறுதெய்வ வழிபாடு

கிராமப் புறங்களில் வணங்கப்படும் சிறுதெய்வங்களான அய்யனார், மாரியம்மன், காளியம்மன் போன்ற தெய்வங்களையும் காணிக்காரர்கள் வழிபடுகின்றனர். ***தொடக்க காலத்தில் வாழ்வை நிலைப்படுத்திக் கொள்ள சில சக்திகள் இருப்பதை அறிந்து வழிபடலாயினர். பின்னர் தெய்வத் தன்மையுடைய சிறு தெய்வங்களை உருவாக்கினார்கள். இவ்வகைத் தெய்வங்களை நோய்களிலிருந்தும் பிற ஆபத்துக்களலிருந்தும் தங்களைக் காப்பாற்றுவதாக நம்பினர்*** (5:115). காணிமக்கள் தங்கள் தேவைகளுக்காகச் சிறுதெய்வங்களை வழிபடுவதும் வழக்கம். மலங்காளி, ஆயிரவல்லி, மாடன், மல்லன் தம்புரான் கொட்டாரத்துத் தம்புரான் கீ மலைத்தம்புரான் போன்ற தெய்வங்களும் வணங்கி வழிபாடு நடத்துகின்றனர். இத்தெய்வங்களுக்கெல்லாம் தலைவனாகத் ***தாலாட்டுத்***

*தம்புரான்* விளங்குகிறது. இத்தெய்வங்களை இவர்கள் குட்டித்தெய்வங்கள் என்றழைக்கின்றனர்.

## பெருந்தெய்வ வழிபாடு

நாகரிக மக்களோடு ஏற்பட்டுள்ள தொடர்பால் காணிக்கரார்களிடையே பெருந்தெய்வ வழிபாட்டு முறையும் நிலை கொண்டுள்ளது. ***நிறுவனச் சமயத்திற்குள் அடங்கும் சைவ, வைணவ சமயங்களில் இடம்பெறும் தெய்வங்களைப் பெருந்தெய்வம் என்கின்றனர்*** (6:201). நகர்புற மக்களிடையே புகழ்பெற்றுத்திகழும் சிவன், பார்வதி, முருகன், ஐயப்பன், விஷ்ணு போன்ற தெய்வங்களையும் வழிபடும் வழக்கம் உள்ளது. இத்தெய்வங்கள் பள்ளி கொண்டுள்ள திருத்தலங்களுக்குச் சென்று வருடந்தோறும் வழிபாடுகளும் நடத்துகின்றனர்.

## முடிவுரை

காணிக்காரர்கள் இயற்கையில் நிகழும் நிகழ்வுகளுக்கும் ஆவிகளுக்கும் அஞ்சிப் பல்வேறு விதமான வழிபாட்டுச் சடங்குகளை நிகழ்த்துவதாக இவர்களது வழிபாட்டு முறைகளில் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. ***காணிக்காரனுக்குக் கண்டதெல்லாம் தெய்வம் தான்*** என்ற மரபுத் தொடர் வழக்கில் உள்ளது. கல்லும் மண்ணும் புல்லும் இவர்களுக்குத் தெய்வங்களே. எத்தனைத் தெய்வங்கள் உண்டு என்பதை அவர்களால் கணக்கிட்டுக் கூறமுடியாது என்கின்றனர் இம்மக்கள். கண்ணுக்குக் காண்கின்றவற்றையெல்லாம் வணங்கும் இவர்களின் வழிபாட்டு முறைகள் சிறப்பிற்குரியதாகும்.

## துணைநூல்கள்


1. ***வானமாமலை நா.*** : தமிழர் பண்பாடும் தத்துவமும்.
2. கலைக்களஞ்சியம், தொகுதி - 5.
3. ***சிதம்பரனார். அ.*** : அகத்தியர் வரலாறு
4. ***பாலகிருஷ்ணன் இரா.*** : காணிக்காரர்
5. ***வேலாயுதன்*** : மேற்கு மலைத்தொடர் பளியர்களின் வாழ்வியல்
6. ***சிவசுப்பிரமணியன். ஆ.*** : தமிழக நாட்டார் சமய ஆய்வு.

# வனப்பிடாரி அம்மன் வழிபாட்டு மரபுகள்

**அ. லட்சுமிநரசு**, எம்.ஏ.,எம்.ஃபில்.,
*பாரதியார் பல்கலைக்கழகம், கோவை.*

## முன்னுரை

ஒவ்வொரு இனமும் தங்களுக்கென சில வழிபாட்டு முறைகளை உருவாக்கிக் கொள்கிறது. இத்தகைய வழிபாடு அம்மக்களின் வாழ்வியல் கூறுகளை வெளிப்படுத்துவதாக அமைகின்றது. அத்தகைய சிறுதெய்வ வழிபாட்டில் ஊர்த்தெய்வமாக விளங்கக் கூடிய வனப்பிடாரி அம்மன் வழிபாட்டு மரபுகளை அறிமுகம் செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். வனப்பிடாரி அம்மன் கோயிலானது சேலம் நகரின் மையப்பகுதியிலிருந்து சுமார் 20 கிலோ மீட்டர் தொலைவில் பனமரத்துப்பட்டி என்கிற கிராமத்தில் உள்ளது. அவ்வூரைச் சுற்றியுள்ள தீப்பபப்பட்டி, அக்கப்பட்டி, குள்ளப்பட்டி, குறால் நத்தம், கம்மாளப்பட்டி போன்ற ஊர்களின் நடுவில் அமைந்தள்ள வனப்பகுதியில் அம்மனின் கோவிலானது அமையப்பெற்றுள்ளது. தொடக்க காலத்தில் குலத்தெய்வமாக, குறிப்பிட்ட இனத்தவரால் வழிபட்டு வந்த அம்மனை நாளடைவில் ஊர்காக்கும் தெய்வமாக மக்கள் அனைவரும் வழிபடத் தொடங்கினர். இன்றும் அம்மனின் அருளால் ஊர் வளமாகவும் செழிமையாகவும் உள்ளது என்கிற நம்பிக்கை மக்களிடையே பரவலாக உள்ளது.

## வனப்பிடாரி அம்மன் : வழக்காற்றுக் கதை

ஏறத்தாழ 300 ஆண்டுகளுக்கு முன்னர் மாரியாத்தாள் என்கிற மூதாட்டி பனமரத்துப்பட்டிக்கு அருகில் உள்ள கிராமத்தில் வாழ்ந்து வந்ததாகவும், அவர் மீது வந்த தெய்வ அருளால்தான் அக்கோயில் உருவானதாகவும் அம்மக்களிடையே வழக்காற்றுச் செய்திகள் உள்ளன. அவர் வாழ்ந்த காலத்தில் மாரியம்மனுக்குக் கூழ் ஊற்றுவதற்காகச் சுற்றுப் பகுதியில் உள்ள அனைவரின் வீட்டிலும் தானியங்களை (அரிசி, சோளம், கம்பு, கேள்வரகு) பெறுவதுண்டு. அவ்வாறு பெறப்படும் தானியங்களைக் கூழாகக் காய்ச்சி மக்களுக்கு வழங்குவர். இதற்கு *மாரியாமுத்து* போடுதல் என்றும் கூறுவர். அம்மனுக்குப் படைக்கப்பட்ட கூழினைக் குடித்தால் வெம்மை நோய்களான அம்மை, காலரா போன்ற நோய்கள்

வராது என்கிற நம்பிக்கை பரவலாக உள்ளது. அதன் காரணமாக மாரியாத்தாள் மூதாட்டி மாரியாமுத்தெடுக்க ஒரு நாள் அருகில் உள்ள மலைப்பகுதிகளில் வாழும் மக்களிடம் சென்று தானியங்களைச் சேகரித்து அதைக் கூடையில் வைத்துத் தலையில் சுமந்து கொண்டு மலைப் பகுதியில் இருந்து கீழே இறங்கும் போது மரத்தின் வேர் தடுக்கிக் கீழே விழுந்தாள். ஆனால் கூடையில் இருக்கும் தானியங்கள் நிலத்தில் சிந்தாமல் கூடையை ஒரு கல் தாங்கிக் கொண்டது. அக்கல்லானது சாதாரணக் கல்போல் அல்லாமல் தெய்வீக அம்சம் பொருந்தியதாகத் தோற்றம் தர அதனையும் கூடையில் வைத்துக் கொண்டாள். பிறகு கூடையை எடுத்து தலையில் வைத்துக் கொண்டு நடக்க ஆரம்பித்தாள். கூடையின் கனம் அதிகரிக்க வலி தாங்கமுடியாமல் கூடையைக் கீழே வைக்க உதவிக்கு யாரை அழைப்பது என்று தேடினாள். அருகில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்களை அழைத்துக் கீழே இறக்கி வைத்துவிட்டு மரத்தின் அடியில் ஓய்வெடுத்தாள்.

சிறுவர்கள் கூடையில் இருந்த கல்லை எடுத்துக் குழியில் நட்டு வைத்துக் கோயிலாக வழிபட்டனர். மூதாட்டி கண்விழித்துப் பார்த்த போது சிறுவர்களின் செயலைப் பார்த்து அதிர்ச்சியடைந்தாள். பிறகு அச்சிலையை எடுக்க முயற்சி செய்தாள் ஆனால் முடியவில்லை. இரவு நேரமாகிவிட்டதால் சிறுவர்கள் வீட்டிற்குச் சென்றனர். மூதாட்டி பயத்துடன் நின்று கொண்டிருந்தாள். அந்தச் சிலையிலிருந்து பிரகாசமான ஒளி தோன்றியது. *பாட்டி பயப்படாதே நான் தான்* ***வனப்பிடாரியம்மன். உன்னையும் இந்த ஊர் மக்களையும் காப்பாற்றுவதற்காகவே நான் இங்கு குடிகொண்டேன். என்னைப் பற்றி நீதான் ஊர் மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்*** என்று கூறி மறைந்துவிட்டது. பிறகு மூதாட்டி அங்கேயே குடிசை அமைத்து அம்மனை வழிபட்டு வாழ்க்கை நடத்தினாள். பல ஆண்டு காலமாக மழையே இல்லாமல் விவசாய நிலமெல்லாம் வறண்டு போயிருந்த அந்த ஊரில் அம்மன் குடிகொண்டதால் மழை பொழிந்து மக்களின் பஞ்சமெல்லாம் தீர்ந்து, வளமாக வாழ்ந்தனர். அதற்கு மூல காரணம் வனப்பிடாரி அம்மன் தான் என்று அந்த ஊர் மக்கள் நம்பினர். இவ்வாறாக அக்கோயிலைப் பற்றியும் அம்மனைப் பற்றியும் பலதலைமுறைகளாக வழக்காற்றுக் கதைகள் இன்றும் அப்பகுதியில் பேசப்பட்டு வருகின்றன.

## கோயில் வழிபாட்டு முறைகளும் நம்பிக்கைகளும்

ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமைகளில் வனப்பிடாரி அம்மனுக்குப் பூசை செய்து வழிபடுகின்றனர். ஐப்பசி மாதம் கடைசி

சனிக்கிழமையில் அம்மனுக்கு விழா எடுத்து ஆடு, கோழி வெட்டி, பொங்கல் படைத்து அம்மனை வழிபடுகின்றனர். விழாவின் போது அந்த ஊர் மக்கள் அனைவரும் ஒன்று கூடிப் பூசையில் கலந்து கொண்டு அம்மனின் அருள் பெற்றுக் கொள்வார்கள்.

குடும்பத்தில் ஏதாவது பிரச்சனைகள் இருந்தால் சனிக்கிழமை அன்று அம்மனுக்குச் சிறப்பு பூசை செய்து அம்மனிடம் தன் பிரச்சனையைக் கூறி வேண்டிக் கொள்வார்கள். அவர்கள் வேண்டியவுடன் குடும்பத்தில் என்ன பிரச்சனையாக இருந்தாலும் ஒரு வாரத்தில் சரியாகிவிடும் என்பது அந்த ஊர் மக்களின் நம்பிக்கை. குடும்பத்தில் பிரச்சினை தீர்ந்தவுடன் குடும்பத்தோடு சென்று அம்மனுக்குச் சிறப்புப் பூசை செய்வது அம்மக்களின் வழக்கம்.

ஒரு நாள் ஒரு பெரியவர் மூதாட்டியிடம்; வந்து என் மகளை என் உறவுக்காரப் பையன் ஒருவன் திருமணம் செய்துகொள்கிறேன் என்று கூறிவிட்டு என் மகளை அவன் ஏமாற்றிவிட்டான். அவன் என் மகளைத் திருமணம் செய்து கொள்ள நீங்கள் தான் அருள் புரிய வேண்டும் என்று கூறினான். அதற்கு மூதாட்டி நீ உன் வீட்டுக்குப் போய் ஒரு சேவலையும் ஒரு கயிற்றையும் எடுத்துக் கொண்டு இங்கே வா என்றாள். அவனும் மூதாட்டி சொன்னவுடன் சேவலைப் பிடித்து வந்தான். சேவலின் கால்களைக் கயிற்றினால் கட்டி உயர்ந்த மரக்கிளையில் கட்டித் தொங்கவிடு என்றாள். அவனும் அப்படியே செய்தான். மூதாட்டி அவரைப் பார்த்து நீ உன் வீட்டுக்குப் போய் விட்டு ஒரு வாரம் கழித்து வா. அதற்குள் நல்லது நடக்கும் என்றாள். அதன்படியே அவன் ஒருவாரம் கழித்து தன் மகளையும் உறவுக்காரப்பையனையும் அழைத்து வந்து பாட்டியிடம் பாட்டி இவன் தான் என் உறவுக்காரப் பையன் என் மகளைத் திருமணம் செய்து கொள்ளச் சம்மதம் தெரிவித்துவிட்டான் என்றான். உடனே பாட்டி அவனிடம் மரத்தில் தொங்கும் சேவலை அவிழ்த்துவிடு என்றாள். அவனும் அதன்படி சேவலை அவிழ்த்துவிட்டான். மூதாட்டி மூவருக்கும் ஆசி வழங்கிவிட்டு திருமணத்திற்கு ஏற்பாடு செய்யுங்கள். இந்த வனப்பிடாரி அம்மன் அருள் உங்களுக்கு என்றும் உண்டு. மகிழ்ச்சியுடன் வீட்டுக்குச் செல்லுங்கள் என்றாள். அந்த மூவரும் அம்மனை வணங்கிவிட்டு வீட்டுக்குச் சென்றுவிட்டனர். மூதாட்டி தானாகச் சிரித்துக் கொண்டு ***சேவல் துடிக்கிறது நியாயம் பிறக்கிறது*** என்றாள் இதுதான் வனப்பிடாரி அம்மன் முதல் கட்டளை. இது போன்று 108 கட்டளைகள் உண்டு என்று உரத்த குரலில் கத்தினாள். 108 கட்டளைகள் இருப்பதாக நம்பிக்கை இப்பகுதியில் நிலவுகிறது.

# கொல்லங்கோடு முடிப்புரை அருள்மிகு பத்திரகாளி அம்மன் கதைப்பாடல் காட்டும் வழிபாட்டு மரபும் - நம்பிக்கையும்

**தா. விற்றில் மேரி**, எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி.,
*கேரளப் பல்கலைக்கழக கல்லூரி, திருவனந்தபுரம்.*

## முன்னுரை

நாள்தோறும் வாழ்வில் நடைபெறும் நல்ல செயல்களுக்காவும், தீய செயல்களுக்காவும் மனம் நொந்து எல்லாம் வல்ல பரம்பொருளை நோக்கி வேண்டுதல் செய்வது மனித இயல்பு. இத்தகைய இயல்புகள் நாளடைவில் வழிபாடுகள் தோன்றக் காரணமாகின்றன. ***நல்லெண்ணம், நற்சொல், நற்செயல் இவற்றை உண்டாக்கும் மனத்திண்மையை அளிக்கும்படி அப்பரம்பொருளை வேண்டுவதே வழிபாடு. வழிபாடு மனம், மொழி, மெய்களால் நிகழ்வது (1 : 20)*** ஆகும்.

கொல்லங்கோடு முடிப்புரை அருள்மிகு பத்திரகாளி அம்மன் கதைப்பாடல் குமரி மாவட்டத்திலுள்ள கொல்லங்கோடு 'என்னும் இடத்திலுள்ள மக்களிடையே வழங்கிவரும் கதைப்பாடலாகும். இக்கதைப்பாடலைத் தலைமுறை தலைமுறையாக ஒவ்வொரு பௌர்ணமி நாளன்றும் நம்பிக்கையோடு மக்கள் பாடி வருகின்றனர். ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட கதைப்பாடல் திரு. கே. சோமன் குழுவினரிடமிருந்து பதிவு செய்யப்பட்டது ஆகும். இக்கதைப்பாடலில் பத்திரகாளியின் பிறப்பு. தாருகனோடு போர் புரிந்த நிகழ்ச்சி போன்றவை இடம் பெற்றுள்ளன. மேலும் வாய்மொழியாகப் பெறப்பெற்றச் செய்திகளையும் அடிப்படையாகக் கொண்டு இக்கட்டுரை வடிவமைக்கப்பட்டுள்ளது. இக்கட்டுரையில் முடிப்புரை கோவில் அமைந்துள்ள இடங்கள், பத்திரகாளி அம்மனைப் பற்றிய கதைப்பாடலின் சுருக்கம், வழிபாடு - மாத வழிபாடு, கார்த்திகை வழிபாடு, பௌர்ணமி வழிபாடு, தூக்கத்திருவிழா, தூக்கம் பற்றிய நம்பிக்கை போன்றவை இடம் பெற்றுள்ளன.

## கொல்லங்கோடு முடிப்புரை கோவில்

கன்னியாகுமரி மாவட்டத்தின் தலைநகரான நாகர்கோவிலின் மேற்கே சுமார் 56 கி.மீ. தொலைவில் கொல்லங்கோடு கிராமம்

அமைந்துள்ளது. இந்த ஊரின் மேற்கே சுமார் 3 கி.மீ. தொலைவில் வட்டவிளை முடிப்புரை அமைந்துள்ளது. இந்த இடத்தில் தான் அருள்மிகு பத்திரகாளி அம்மன் கோவில் அமைந்திருக்கின்றது. வருடத்தில் ஒரு முறை மீனப்பரணி மகாஉத்சவம் பத்து நாட்கள் நடைபெறுகின்றது. இந்தப் பத்து நாட்களும் மூலஸ்தானத்தில் இருக்கும் அம்மனை கிழக்கே சுமார் 1 கி.மீ. தொலைவில் உள்ள வெங்கஞ்சி முடிப்புரைக்கு எடுத்துச் செல்கின்றனர். இந்நாட்களில் மூலஸ்தானத்தில் அம்மனுக்கு வழிபாடுகள் நடைபெறுவதில்லை.

வட்டவிளை முடிப்புரைக் கோவிலைச் சுற்றி உபகோவில்கள் அமைந்துள்ளன. (தட்சிணாமூர்த்திக் கோவில், பிரம்மராட்சஸ் கோவில், பிள்ளையார் கோவில், நாகர் அம்மன் கோவில்) வெங்கஞ்சி முடிப்புரை கோவிலில் முருங்கை மரத்தில் பந்தல் கட்டி வேதாளத்திற்கு வழிபாடு செய்கின்றனர்.

## கதைச் சுருக்கம்

சிவனும் உமையும் கைலாசத்தில் வீற்றிருக்கும் போது அசுரரும், வானவரும் அமிர்தம் கடைய வேண்டும் எனச் சிவனிடம் வேண்டுகின்றனர். சிவன் மந்திரப்பர்வதத்தை மத்தாகவும், வாசுகியைக் கயிறாகவும், தாழியைக் கடலாகவும் கொண்டு பாற்கடலைக் கடைகின்றனர். அமிர்தம் கடைய முதலில் மூரிமதயானை பிறக்கின்றது. அதன் தொலி உரித்து அரனார் உடுத்துகின்றார். இரண்டாவது வரிவேங்கை பிறக்கின்றது. வரிவேங்கையின் தொலி உரித்து ஆசனம் போடுகின்றார். மூன்றாவது காளை பிறக்கின்றது. காளை பிறந்ததும் அரனார் அதன்மீது அமர்கின்றார். நான்காவது மலை போன்ற புஜமும் (தோள்), நீண்ட பெரிய ஜடையும் உடைய வேதாளம் பிறக்கின்றது. வேதாளத்தை கால்களிலும் கைகளிலும் விலங்குபோட்டு பெரிய வனத்தில் கட்டி வைக்கின்றனர். வேதாளப் பூதத்திற்குப் பாதாளப்பூதம் குடைபிடிக்கின்றது. அரனார் மீண்டும் அமிர்தம் கடைகின்றார். அப்பொழுது ஐந்து தலை நாகம் பிறக்கின்றது. அதைப் பிடித்து திருஜடைமீது அணிகின்றார். இறுதியாகக் கடைந்த அமிர்தத்தில் நஞ்சு வந்து பிறக்கின்றது. உடனே அரனார் அகம் மகிழ்ந்து நஞ்சை அள்ளி அள்ளி உண்கிறார். இதைப் பார்த்திருந்த சிவகாமி தொண்டையில் பிடிக்கின்றாள். நஞ்சு கண்டத்தில் தங்கிவிடுகின்றது. சிவனார் பொன் நிறமுடைய செம்பில் தண்ணீர் வாங்கிக் கொப்பளித்த போது மலையனும் காறித்துப்பிய போது மலச்சியும் பிறக்கின்றனர். இந்நிகழ்வை,

*அறானாம் அமிர்தத்திலே*
*நஞ்சு வந்து பிறந்திடுமாம்*

*நஞ்சு வந்து பிறந்த போது*
*நாதனாரும் மனம் மகிழ்ந்தார்*
*அந்த நஞ்சை வாரி உண்ட*
*அரனாரும் அந்நேரம்*
*கண்டிருந்த சிவகாமி*
*கைலையிலே அரன்தொண்டை தனை பிடித்தார்*
*.... .... .... ....*
*பூண்ட பண்டிர் மலையன் பிறந்தான்*
*பின்பு காறிதுப்பியதில்*
*பண்டிரு மலச்சி தான் பிறந்தாள்*

என்ற பாடல் வரிகள் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது.

மலையனும், மலர்ச்சியும் சிவனை அடிதொழுது நிற்கும் போது, தாருகன் சிவனிடம் வரம் வேண்டி வருகின்றான். வரம் அனைத்தும் கொடுத்துவிட்டேன். இனி வரம்வேறு கொடுப்பதற்கு இல்லை என்கிறார் சிவனார். சிவனிடமிருந்து எப்படியாவது வரம் வாங்க வேண்டும் என்று எண்ணி பனிரெண்டு வருடம் தலைகீழாக ஊசிமேல் தவம் புரிகின்றான். தாருகன் தவம் செய்வதைப் பார்த்த சிவனும் உமையும் இரக்கம் கொள்கின்றனர். அசுரர்கள் சரம் பட்டு இறக்கும் போது ஒரு துளி இரத்தத்தில் இருந்து நூறு கோடி அசுரர்கள் பிறக்க வரம் தர வேண்டும் என வேண்டுகிறான். கேட்ட வரத்தைச் சிவனார் அவனுக்குக் கொடுக்கின்றார். பக்கத்தில் நின்ற உமையும் ஒருவரம் அளிக்க எண்ணுகின்றாள். ஆனால் அடிதொழுது வரம் வாங்க, தாருகன் தன்னுடைய கர்வத்தைக் காட்டி ஒரு பெண்ணிடமிருந்து வரம் வாங்கத் தேவை இல்லை என்று மறுத்து விடுகின்றான்.

தாருகன் சென்றதும் உமையவள் சிவனிடம் நடந்ததை மொழிகின்றாள். *ஈஸ்வரரே தாருகன் என்னை பெண் என்று ஏளனமாகப் பேசிவிட்டான். இடி விழுந்தது போல் நான் ஆகிவிட்டேன். பழுத்த கனிரசம் போல் இருந்தேன். ஈரேழு உலகத்திற்கும் நாயகி நான். நாராயணர்க்கு இளைய தங்கை. பரமன் உமக்கு நான் மனைவி. உமையாள் என்ற பெயருடன் எல்லா உயிர்களுக்கும் படியளந்து வரும் என்னை ஏளனமாய்ச் சொன்னதால் அவனை அழிக்காமல் விடமாட்டேன். அவனுடைய சிரத்தை (தலை) அறுத்தொழிப்பேன். இல்லாவிட்டால் இதோ கைலாசத்தை விட்டுப் போகின்றேன்* என்கிறாள். இதைக் கேட்ட சிவன் அறுபது நல்ல மாதுக்களைப் படைத்து தாருகனின் சிரம் அறுத்து வரும்படி பரல் கொடுத்து அனுப்புகின்றார். அறுபது மாதுக்களும் தோல்வியுற்று சிவனிடம் மீண்டும் வருகின்றனர். உடனே அறுபது மாதுக்களையும்

ஆறு நல்ல மாதுக்களாகப் படைத்து அனுப்புகின்றார். மீண்டும் தாருகனை நோக்கிச் சென்ற இவர்கள் தோல்வியுறுகின்றனர். ஆனால் தாருகனுடைய படைச் சரங்கள் பட்டு இறந்துவிடுகின்றனர். அவர்கள் இறந்த இரத்தத்திலிருந்து *பழுகாரர்* பிறக்கின்றார். அவர் தெரியாமல் வரத்தையும், மந்திரத்தையும் உனக்குத் (தாருகனுக்கு) தந்துவிட்டேன் என்று கோபமாக மொழிகின்றார். தொடர்ந்து பத்திரகாளியும் தாருகனும் கடுமையாகப் போர் புரிகின்ற அந்நேரம் பத்திரகாளியிடமிருந்து சென்ற ஒரு அசரீரி (சக்தி) தாருகனின் மனைவியிடம் போய் உனக்கு மாங்கல்யப் பாக்கியம் மீண்டும் வேண்டுமானால் தாருகன் உன்னிடம் தந்த மணி மந்திரம் என்னும் மந்திரத்தைத் திரும்ப என்னிடம் தந்துவிடு எனத் தாருகன் சொல்லியனுப்பியதாகச் சொல்லி அதை வாங்கி, பத்திரகாளியிடம் அச்சக்தி கொடுக்கின்றது. மந்திரத்தைப் பத்திரகாளி பெற்ற உடனே தாருகன் இறந்துவிடுகின்றான். பத்திரகாளிக்கு உதவியாக நின்றவர்கள் எல்லோரும் சிவனை வாழ்த்துகின்றனர் எனக் கதை முடிகின்றது.

## தேவியின் வடிவம்

மரத்தாலும், தங்கத்தாலும் செய்யப்பட்டள்ள அரைவட்ட வடிவுள்ள இரண்டு பலகையின் மீது தேவியின் உருவம் பதிக்கப்பட்டுள்ளது. இந்தப் பலகையின் ஓரங்களில் பாம்பின் தலைகள் பொறிக்கப்பட்டுள்ளன. நடுப்பகுதியில் பல்வேறு நாகம் பின்னிப் பிணைந்து கிடப்பது போன்று வடிவமைக்கப்பட்டள்ளது. அதற்கு அடுத்தபகுதியில் இரண்டிரண்டு நாகங்கள் ஒன்றை ஒன்று பிணைந்து கிடப்பது போன்று காணப்படுகின்றது. அவற்றின் நடுவில் இரண்டு பெரிய நாகங்களும் இரண்டு பக்கங்களிலும் ஒவ்வொரு பக்கத்திற்கு ஏழு ஜோடிகள் வீதம் மொத்தம் முப்பது நாகங்கள் உள்ளன. அதற்கு அடுத்த பகுதியில் சித்திர வேலைப்பாடுகளுடனான பகுதி காணப்படுகிறது. அதற்கு அடுத்து நாகங்களால் சூழப்பட்ட பகுதி காணப்படுகிறது. இந்த சர்ப்ப மகுடங்களுக்குக் கீழ்ப்பகுதியில் ஒரு குமிழ் அமைக்கப் பட்டுள்ளது. இந்தக் குமிழ் போன்ற பகுதியின் உள்ளே தேவி இருக்கின்றாள் என்று மக்கள் நம்புகின்றனர். குமிழ் போன்ற பகுதியில் உள்ளே இருக்கின்ற தேவி பாக்கின் வடிவத்தில் இருப்பதாக நம்புகின்றனர். இதனை சாளக்கிராமம் என்றும் கூறுகின்றனர். குமிழின் உள்ளே இருக்கும் பொருளை நாம் பார்க்க முடியாது. அதனை அடுத்து அரைவட்ட வடிவம் காணப்படுகிறது. அந்த அரைவட்ட வடித்தில் இரண்டு தேவிகளின் சிலைகள் உள்ளன. அவை இரண்டும் ஒரே அளவைக் கொண்டவையாகும். ஒவ்வொன்றிலும் முத்துக்குடைகள் காணப்படுகின்றன. ஒன்று சிவப்பு நிறத்திலும் இன்னொன்று பச்சை

நிறத்திலும் அமைந்துள்ளது. இவ்வேறுபாட்டிற்குக் காரணமும் கூறப்படுகின்றது. *ருத்ரா பத்ரா* இருவரும் சகோதரிகள் *ருத்ரா* கோப குணம் கொண்டவள். அவளது கோபத்தைக் குறியீடாகக் கொண்டு சிவப்பு நிறத்தில் முத்துக்குடையைப் பொருத்தியுள்ளதாகக் கூறுகின்றனர். *பத்ரா* அமைதியான குணம் படைத்தவள். எனவே அவளைக் குறியீடாகக் கொண்டு நீல நிறத்தில் முத்துக்குடை பொருத்தியுள்ளதாக நம்புகின்றனர். இது வாய்மொழியாக வழங்கி வரும் கதையாகும்.

## பத்திரகாளியம்மன் வழிபாடு

*ஊட்டும் பாட்டும் பத்திரகாளிக்கு பிரத்தேக ஒரு வழிபாடாகும்* (2)என்பார் திரு.கே. சோமன். பத்திரகாளி அம்மனுக்கு எல்லா நாட்களிலும் வழிபாடுகள் நடைபெறுகின்றன. நாள் வழிபாடு, மாத வழிபாடு, கார்த்திகை வழிபாடு, பௌர்ணமி வழிபாடு என வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. *முடிப்புரை அம்மன் வழிபாட்டு முறை கேரளப்பண்பாட்டுச் சார்புடையது. தென்தமிழ் நாட்டில் இயக்கி வழிபாடு எனப்படும் யட்சி வழிபாடு போல பெண் தெய்வ வழிபாடாகும்* (3) என்பார் செந்தீ நடராஜன். முற்காலத்தில் இக்கோவிலில் வாரத்திற்கு மூன்று பூசைகள் மட்டும் நடைபெற்று வந்தது. தற்காலத்தில் எல்லா நாட்களும் பூசை நடைபெறுகின்றது.

*மாத வழிபாடு :* ஒவ்வொரு மாதத்திலும் கடைசி வெள்ளிக்கிழமை அன்னதானம் வழங்கப்படும். காலை ஆறுமணி முதல் மாலை ஆறு மணிவரை தேவி பாகவதம் சொல்லப்படும். தியான மண்டபத்தில் நெல், கருக்கு, பழம், கமுகம்பூ, வெற்றிலை, பாக்கு இவற்றை வழிபாட்டுப் பொருள்களாக வைப்பர். இதற்கு ***நிறைநாழி*** என்று பெயர். இதன் முன் விளக்கு ஏற்றிப் பூசாரி பூசை செய்த பின் தேவிபாகவதம் ஆரம்பமாகும். தேவிபாகவதம் என்பது தேவியின் வரலாறு ஆகும். ***தேவி பாகவதம்*** இக்கோவிலில் மலையாளத்தில் பாடப்பட்டு வருகின்றது.

***கார்த்திகை வழிபாடு :*** கார்த்திகை மாதம் முப்பது நாட்கள் அம்மனுக்குச் சிறப்பு வழிபாடு நடைபெறும். இவ்வழிபாட்டு முறை இருமுறையில் நடைபெறுகின்றது. இரண்டு கோவில்கள் ஒரே பகுதியில் இருப்பதால் ஒரு தடவை ஒன்றில் நடைபெறும், மறுதடவை அடுத்து கோவிலில் நடைபெறும். இவ்வழிபாட்டின் போதும் பழம், பொரி, கருக்கு, கமுகம் பூ இவை அம்மனுக்குச் சிறப்பாகப் படைக்கப்படும்.

*பௌர்ணமி வழிபாடு :* பௌர்ணமி வழிபாடு ஒவ்வொரு பௌர்ணமியன்றும் நடைபெறும். பௌர்ணமி வழிபாட்டில் சித்திரப் பௌர்ணமி சிறப்பு வாய்ந்தது. *சித்திர பௌர்ணமியன்று சக்தி*

***உலகத்திற்கு வருகை புரிந்து அவளை வழிபட்டு வந்த சந்நியாசிகட்கும் முனிவர்கட்கும் வியக்கத்தக்க சக்திகளால் அருள் புரிகின்றாள்*** (4) என நம்புகின்றனர். பௌர்ணமி வழிபாட்டின் போது மாலை 7.30 முதல் 8 மணிவரை அம்மன் கதை வில்லுப்பாட்டாகப் பாடிப் புகழ்கின்றனர். வில்லுப்பாட்டுப் பாடும் முன் கணபதிக்கு நிறைநாழி வைத்து வழிபடுவதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர்.

***தூக்கத் திருவிழா :*** கொல்லங்கோடு அருள்மிகு பத்திரகாளி அம்மன் கோவிலில் ஆண்டுக்கொருமுறை தூக்கத்திருவிழா நடைபெற்று வருகின்றது. பங்குனிமாதத்தை மலையாளத்தில் மீனம் என்றும் கூறுவர். மீனம் மாதத்தில் வரும் பரணி நட்சத்திரத்தின் பத்து நாட்களுக்கு முன் திருவிழா ஆரம்பமாகும். இதில் தூக்கக்காரர்களும், நேர்ச்சைக் காரர்களும் முக்கிய பங்கு வகிப்பர். பத்து நாள் விழாக்களிலும் நான்காவது நாள் விழா தான் மிகச் சிறப்பு வாய்ந்தது. நான்காம் நாள் விழா அன்று தூக்கக்காரர்களும், நேர்ச்சைக்காரர்களும் தங்களது பெயரைப் பதிவு செய்வர்.

*பரணி நாளில் தூக்கம் நடைபெறக்காரணம் :* தாருகனைக் கொல்வதற்காக பத்திரகாளி சிவனுடைய திருநயனத்திலிருந்து பிறந்ததாகவும், பத்திரகாளிக்கு ஏராளமான பூதகணங்கள் இருந்ததாகவும் அதிலொன்று தான் வேதாளம் எனவும் கூறுகின்றனர். வேதாளம் முருங்கைமரத்தடியில் குடிகொண்டிருப்பதாக மக்கள் நம்புகின்றனர். வேதாளத்திற்கு நரபலி இடுவது வழக்கமாயிருந்து வந்தது. நரபலி என்பது உயிருள்ள மனிதனைச் சூலாயுதத்தில் குத்தி தொங்க விடுவதாகும். சூலாயுதத்தில் தொங்கவிடப்பட்ட மனிதனின் உடம்பிலிருந்து இரத்தம் வெளியேறியதும் அவன் இறந்துவிடுகிறான். பின் அவனது உடம்பை கழுகுகளும் பறவைகளும் தின்று விடுகின்றன. நாளடைவில் நரபலி இடும் வழக்கம் வழக்கொழிந்து, மிருகங்களை பலியிடும் வழக்கம் ஏற்பட்டது. இப்பலியானது நடத்தப்படாவிட்டால் பலவித துன்பங்களுக்கு ஆளாவர் என்று நம்பியதாலும், பரணி நாளில் பத்திரகாளி பிறந்ததாலும் பரணி நாளன்று தூக்கத் திருவிழா கொண்டாடி வருகின்றனர்.

***தூக்கக்காரர்கள் :*** தூக்கக்காரர்கள் உடல் ஆரோக்கியம் உடையவர்களாகவும், மனவலிமை பெற்றவர்களாகவும் சிறந்த பக்தி நிரம்பியவர்களாகவும் இருத்தல் வேண்டும். முற்காலத்தில் ஆசாரி வகுப்பைச் சார்ந்தவர்கள் மட்டும் தான் தூக்கக்காரர்களாக இருக்க வேண்டும் என்ற நியதி இருந்து வந்தது. மின்னல் பரமேஸ்வரப்பிள்ளை தலைவரான பிறபாடு எல்லா மதத்தினரும் தூக்க நேர்ச்சயைில் பங்கு

பெறலாம் என்ற நியதி கொண்டுவரப்பட்டது. அப்பொழுது ஏழு நாட்களும் கடுமையான விரதம் மேற்கொள்ள வேண்டும். தூக்கக்காரர்களுக்கு வயது வரம்பில்லை. நான்காம் விழாத் தொடங்கி திருவிழா முடியும் வரை அவர்கள் கோவிலில் தான் இருக்க வேண்டும். பகலில் தென்னை ஓலையில் உறங்கலாம். இரவில் உறங்காமல் இருப்பதற்காகப் பலவித கலை நிகழ்ச்சிகளை நடத்துகின்றனர். விரத நாட்களில் இவர்கள் போதைப் பொருட்கள் அருந்துதல் கூடாது. சிவப்பு நிறத்தில் ஒரு பட்டுத்துணியினை அரையில் உடுத்தி அதற்கு மேல் ஒரு பச்சை நிறத்துண்டினை கட்டுகின்றனர். இவர்கள் இரண்டு நேரம் குளித்துவிட்டு எளிமையான உணவை மட்டும் உட்கொள்கின்றனர்.

*நேர்ச்சைக்காரர்கள் :* குழந்தைப் பேறு வேண்டுபவர், குழந்தையின் நோய் நீங்க வேண்டுபவர், தேவியை வேண்டி குழந்தை பெற்றவர்கள் நேர்ச்சைக்காரர்களாவர். நேர்ச்சைக்காரர்களைத் தேர்ந்தெடுப்பவர் குழந்தையின் தாயாவர். நேர்ச்சைக்காரர்கள் ஏழு நாட்கள் விரதம் மேற்கொண்டு சைவ உணவை உட்கொள்வர். நேர்ச்சை நேர்ந்திருக்கும் குழந்தையின் தாய்க்குத் தீட்டு ஏற்பட்டால் உடனே குழந்தையைத் தாயிடமிருந்து மாற்றிக் கொள்ள வேண்டும்.

*தூக்க நம்பிக்கை :* குழந்தை இல்லாதவர்கள் குளித்துவிட்டு ஈரத்துணியுடன் தேவி முன்னால் வந்து தேவியை வேண்டினால் குழந்தை பிறக்கும் என நம்புகின்றனர். குழந்தைக்குத் தூக்க நேர்ச்சை நடத்துவதால் புதுஜென்மம் (புனர் ஜென்மம்) கிடைக்கும் என்றும் நம்புகின்றனர். மேலும் குழந்தை ஆரோக்கியமுடனும், அறிவு நிரம்பியதாகவும் வளரும் என்ற நம்பிக்கை இம்மக்களிடையே காணப்படுகின்றது.

## துணைநூல்கள்


1. *அ. அம்பிளிகலா* : அருள்மிகு பத்திரகாளி அம்மன் கோவில் தூக்கத் திருவிழா, எம்.ஃபில் ஆய்வேடு.
2. *ஆசிரியர் செந்தீ நடராசன்* : பண்பாட்டுத் தளங்கள் வழியே, காவிய பாரதி வெளியீட்டகம்.
3. *வாய்மொழி தகவலாளிகள் : திரு.கே. சோமன்* : கொல்லங்கோடு. *திரு. கிருஷ்ணன் குட்டி*, குழித்துறை.

# நாட்டுப்புற வழிபாட்டுச் சடங்குகள்

**முனைவர் சி.வாசுகி**, எம்.ஏ.,எம்.ஃபில்.,பி.எட்.,பிஎச்.டி.,
*அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக்கல்லூரி, பழனி.*

இயற்கையோடு இயைந்து வாழ்ந்த மனிதன் அதனைக் கண்டு அஞ்சினான். தன்னைக் காத்துக்கொள்ள அதையே துணையாக எண்ணினான்; தெய்வமாக வழிபடத் தொடங்கினான்; பல்வேறு சடங்கு முறைகளைப் பின்பற்றினான். இவையே நாளடைவில் நிலைபெற்ற வழிபாட்டுக் கோட்பாடுகளாக நாட்டுப்புற மக்களிடையே நிலைபெற்றன. இவ்வழிபாட்டு முறைகள் பழக்கப்பட்ட பின்னர் வாழ்க்கை நடைமுறைகளின் அனுபவத்தால் தெய்வங்களை வகைப்படுத்தும் முறையும் பல்கிப் பெருகியது. அவற்றுள் சிலவற்றை இவண் காண்போம்.

***தேவையை வேண்டித் தெய்வ வழிபாடு :*** ஐம்பூதங்கள் ஐந்தும் தெய்வங்களாக வழிபடப்படுகின்றன. இவற்றால் ஏற்பட்ட அச்ச உணர்வே இதற்குக் காரணமாகும். இதனைப் போக்கும் சக்திக்கு நன்றி தெரிவிக்கச் சடங்குகள் செய்தான். தன் தேவையை நிறைவேற்றுமாறும் கோரிக்கை வைத்தான். இச்சக்திகள் இதனை நிறைவேற்றும் என்ற முழுநம்பிக்கையுடன் வழிபட்டுவந்தான். ***ஆதிகாலத்தில் மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கை நடத்தினர். இயற்கையின் சீற்றத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இயற்கைச் சக்திகளைத் தெய்வங்களாகக் கருதி வழிபட்டனர். அவற்றிற்கு விழாவெடுத்து நன்றி செலுத்தினர்.*** (நாட்டுப்புறப்பாடல்கள் காட்டும் தமிழர் வாழ்வியல். டாக்டர் ஆறு. இராமநாதன். ப. 207)

## மழை வேண்டிச் சடங்கு

மழை பெய்யாத காலங்களில் மழை பெறுவதற்காக மக்கள் சில சடங்கு முறைகளை மேற்கொள்கின்றனர். அன்று தொட்டுப் பாண்டிய நாடு மழைவழங் கூர்ந்து வறுமையெய்தி வெப்பு நோயுங் குருவுந் தொடரக் கொற்கையிலிருந்த வெற்றிவேற்செழியன் நங்கைக்குப் பொற்கொல்லர் ஆயிரவரைக் கொன்று களவேள்வியால் விழாவொடு சாந்திசெய்ய நாடுமலிய மழைபெய்து நோயும் துன்பமும் நீங்கியது (சிலப்பதிகாரம், ஜெ. ஸ்ரீ சந்திரன், உரை ஆ.ப. 39) நீரின்றி விவசாயமின்றி வறுமை ஏற்பட்ட காலத்தில் மகளிர் ஒன்றுகூடி வீடுவீடாகச் சென்று அரிசி, பருப்பு, பணம் முதலியவற்றைப் பெற்று அவர்கள் வாழும்

பகுதியில் உள்ள அம்மன் கோயிலுக்குச் சென்று சோறு சமைத்து அம்மனுக்குப் படைத்து அனைவரும் பகிர்ந்து உண்கின்றனர். இவ்வாறு படைத்ததை அம்மன் ஏற்றுக்கொண்டு மனம் குளிர்ந்து மழையை வரவழைப்பாள் என்று அம்மக்கள் நம்புகின்றனர். பழனி சின்னக்கலையம்புத்தூர் விஜயகுமார் மில் எதிர்ப்பகுதியான என்.ஜி.ஆர். நகரில் வசிக்கும் மகளிர் இச்சடங்கு முறையை அப்பகுதியில் இடம்பெற்றிருக்கும் சொர்ணகாளியம்மனுக்குச் செய்து வழிபட்டனர்.

***சந்தனமாரியம்மன் :*** மதுரையில் நேதாஜிரோடு பகுதியில் தண்டு மாரியம்மன் கோயில் அமைந்துள்ளது. பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றும் இவ்அம்மனிலிருந்து பிரிந்ததுதான் அதே பகுதியில் சற்றுத் தொலைவில் தள்ளி அமைந்திருக்கும் சந்தனமாரியம்மன். தங்கள் தேவையை நிறைவேற்றியதற்கு நன்றிக்கடனாக சந்தனத்தைச் சார்த்தி அபிஷேகமும் பெரும்பான்மையாகச் செய்யப்படுவதால் இவ்அம்மன் உருவாகியது என்று கூறப்படுகிறது. சந்தனம் குளிர்ச்சியான இயற்கைப்பொருள். மக்களின் மனக்குமுறலான வெப்பத்தைப் போக்கியதால் அம்மனுக்குச் சந்தனம் அதிகம் படைக்கப்பட்டிருக்கலாம்.

***நம்பிக்கைக்கு உகந்த தெய்வ வழிபாடு :*** மக்கள் பால்தரும் பசுவைத் தெய்வமாக வணங்கி வருகின்றனர். அப்பசு கன்று ஈன்ற பின்னர் முதல் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குத் தரும் பால் சீம்பால் என்றழைக்கப்படுகின்றது. அப்பாலைக் காய்ச்சி உறைய வைத்துக் கடைந்து பெற்ற நெய்யை அவர்களுடைய இஷ்ட தெய்வம் அல்லது குலதெய்வத்திற்கு விளக்கேற்றப் பயன்படுத்துகின்றனர். அதன் பின்னரே பிறரின் பயன்பாட்டுக்கோ விற்பனைக்கோ பாலை வழங்குகின்றனர். இம்முறை மதுரை அருகில் உள்ள சந்திரப்பட்டியில் வாழும் சில பிரிவினரால் இன்றும் பின்பற்றப்படுகின்றது. இவ்வாறு செய்வதால் அவர்களின் குலதெய்வம் தொடர்ந்து பால் வளத்தைத் தரும். இங்கு பசுவும், அது தரும் முதல் பாலும் தெய்வத்திற்கு இணையாக நம்பப்படுகின்றது.

***குரங்குக் கோயில் :*** காரைக்குடிப் பகுதியில் உள்ள ஒரு கிராமத்தில் தேநீர்க் கடைக்காரர் ஓயாது தொல்லை கொடுத்து வந்த குரங்கை சிறு தடியால் தாக்கினார். அக்குரங்கு இறந்துவிட்டது. ஊரார் குரங்குக்குப் பாவமிழைத்தால் குலநாசம் என்று கூறினர். அதனை அஞ்சிய கடைக்காரர் அக்குரங்கைப் புதைத்து அதன்மேல் கோயில்கட்டி வழிபடத் தொடங்கினார். பாவத்தைப் போக்கும் சடங்காகச் செய்யப்பட்ட இம்முறை நாளடைவில் அனைவரும் வழிபடுவதற்குரிய பொதுக்கோட்பாடாக மாறியது.

***பிளேக் மாரியம்மன் கோயில் :*** பிளேக் நோய் பரவிய காலகட்டத்தில் அந்நோயைப் போக்கும்படி மாரியம்மனிடம் மக்கள் வேண்டிக் கொண்டனர். இந்நோய் குணமடைந்தது. இந்நோயை தீர்த்த மாரியம்மனுக்குக் கோயில் உருவாக்கினர். அதற்கு பிளேக் மாரியம்மன் எனப் பெயரிட்டனர்.

***வாழ்ந்து மடிந்த மனித தெய்வ வழிபாடு :*** ***துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும் இல்வாழ்வான் என்பான் துணை*** (குறள். 42) எனும் குறளுள் இடம்பெறும் இறந்தார்க்கும் இல்வாழ்வான் துணை எனும் சொற்கள் இறந்தவர்களைத் தெய்வமாக வழிபடும் பழக்கம் அக்காலத்தில் இருந்ததை உணர்த்துகிறது. ஒவ்வொரு குடும்பத்திலும் வாழ்ந்து வயது முதிர்ந்து இறந்த பெரியோரைத் தெய்வமாக மதித்து வழிபடும் முறை உள்ளது. பொங்கல் வாழ்வின் முதல் நாள் ***போகி*** அல்லது மனைப்பொங்கல் என்று கூறப்படுகிறது. சில குடும்பத்தில் இந்நாள் அவர்கள் இல்லத்தில் இறந்த பெரியோரின் நினைவு நாளாகக் கருதப்படுகின்றது. பெரியோரை இவர்களது இல்லத்தில் தோட்டத்திலேயே புதைத்துவிடுகின்றனர். இவ்விடத்திற்குச் சென்று பொங்கல் இடுவர். தேங்காய், பழம் முதலிய அர்ச்சனைப் பொருட்களுடன் கரும்பையும் வைத்துப் படைத்து வழிபடுவர். இறந்தாரை மனையின் தெய்வமாகக் கருதுகின்றனர். இவ்வாறு வழிபடுவதால் இறந்தாரின் ஆசி எப்பொழுதும் அக்குடும்பத்தார்க்குக் கிடைத்துக் கொண்டே இருக்கும் என்று நம்பப்படுகின்றது. இவர்களுடைய இறந்த நாள் வழிபாடும் திதி என்று தனியாகக் கடைப்பிடிக்கப்படுகின்றது.

## கருத்துக் கோவை

1. தீமை நடைபெறாது தவிர்த்தல், நன்மையே நடைபெறுதல் ஆகிய இரண்டின் தொடர்பாகவே நாட்டுப்புற வழிபாட்டுக் கோட்பாடுகள் தோன்றியுள்ளன. 2. தங்களின் விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்ள நிகழ்த்தப் பெறும் சடங்கு முறைகளே நாளடைவில் வழிபாடாகத் தொடர்ந்துள்ளன. 3. மழைவேண்டுதல், நோய் போக்குதல் போன்றவை தொடர்பான வழிபாடுகள் பொது நன்மை கருதி நிகழ்த்தப்படுகின்றன. 4. குரங்குக்குக் கோயில் கட்டுதல் போன்ற சடங்குமுறைகள் தனிப்பட்டவர்களால் நிகழ்த்தப்பட்ட பாவங்களைப் போக்கும் பரிகாரமாக அமைந்து நாளடைவில் அனைவராலும் வழிபடுவதற்குரிய ஒன்றாக மாறிவருகின்றது. 5. சில வழிபாட்டுச் சடங்கு முறைகள் குடும்ப நன்மை கருதி பின்பற்றப்பட்டு வருகின்றன.

# வெள்ளக் கோவில் வீரக்குமாரசாமி வழிபாடு

**எஸ். விமலா,** எம்.ஏ., எம்ஃபில்., பிஎச்.டி.,
*அரசு கலைக் கல்லூரி, கோவை*

வெள்ளக்கோவில் அருள்மிகு வீரக்குமாரசாமி திருக்கோயிலின் வழிபாட்டு முறைகளை ஆய்வது இக்கட்டுரையின் நோக்கம். கொங்கு மண்டலத்தில், ஈரோடு மாவட்டம் காங்கயம் வட்டத்தில் உள்ள வெள்ளக்கோயில் என்னும் இவ்வூர் கரூர்-கோவை முக்கிய சாலையில் 40-வது கிலோமீட்டரிலும், காங்கயம்-திருச்சி சாலையில் கிழக்கே 19-வது கிலோமீட்டரிலும் அமைந்துள்ளது. வெள்ளக்கோவில் நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ளது அருள்மிகு வீரக்குமாரசாமி திருக்கோயில்.

*வீரக்குமாரசாமி தோற்ற வரலாறு :* சிறு தெய்வங்களுக்கேயுரித்தான வகையில் வீரக்குமாரசாமி பற்றிய பரம்பரைக் கதை ஒன்று வழக்கிலுள்ளது. அக்கதை பின்வருமாறு: ஆந்தை குலத்தைச் சார்ந்த நல்லணகவுண்டர் மகன் முதலிக்கவுண்டர் தனக்குச் சொந்தமான மாடுகளை மேய்ப்பதற்காக சந்தான நாடார் என்பவரைப் பணியிலமர்த்தியிருந்தார். சந்தான நாடார் மேய்க்கும் பசுக்களுள் ஒன்றின் மடியில் மட்டும் பால் இல்லாததைக் கண்ட முதலிக்கவுண்டர், சந்தான நாடார் மீது சந்தேகம் கொண்டார். இதே நிலை மறுநாளும் தொடர்ந்தது. சந்தான நாடார் கவலைக்குள்ளானார். தன் மீதுள்ள களங்கத்தைப் போக்குவதற்காகக் குறிப்பிட்ட பசுமாட்டைத் தொடர்ந்து கவனிக்கலானார். அப்பசு, உச்சிப்பொழுதில் கருக்கட்டான் மரத்தடியில் இருந்த புற்றின் அருகே சென்று தானாகப் புற்றின் மீது பாலைப் பொழியத் தொடங்கியது. இவ்வற்புதத்தைத் தன் முதலாளியான முதலிக்கவுண்டரிடம் சென்றுரைத்தார் சந்தான நாடார். மறுநாள் முதலிக்கவுண்டரும் மறைந்திருந்து பசுவைக் கண்காணித்தார். முந்தைய நாள் போன்றே பசு புற்றருகில் சென்று பாலைச் சொரிந்தது. குழந்தை முகம் கொண்ட பாம்பு உருவம் புற்றிலிருந்து வந்து பாலைக் குடித்தது. பால் குடித்த குழந்தை முருகக்கடவுள் போலக் காட்சியளித்ததால் வீரக்குமாரா! என்று உரக்கக் கூவி உணர்ச்சிவயப்பட்டார் முதலிக்கவுண்டர். சுற்றுப்புற மக்கள் அனைவரும் இக்காட்சியைக் கண்டு மகிழ்ந்து வீரக்குமரனை எழுந்தருளச் செய்தனர். பதினெட்டுச்

சித்தர்களும் புற்றிலிருந்து ஆளுக்கு ஒரு கைப்பிடி மண்ணெடுத்து வீரக்குமரனின் திருவுருவம் செய்ததாகக் கூறப்படுகிறது.

***திருக்கோவில் தோற்ற அமைப்பு :*** கோவிலின் முதன்மை வாயில் வடக்கு முகமாக அமைந்துள்ளது. வெளிப்பிரகாரத்தில் சுற்றுமதில்கள் நான்குபுறமும் அமைந்துள்ளன. தற்போது சுற்று மண்டபமும் கட்டப்பட்டுள்ளது. வெளிப்பிரகாரத்தின் மேற்கில் திருச்சுற்று மாளிகை உள்ளது. இதில் திருமணம், காதணி விழா போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறும். வெளிப்பிரகாரத்தின் கீழ்த்திசையில் மேற்கு முகமாக மகாமுனி சன்னதி மற்றும் எசவடக் குதிரைகள் உள்ளன. தெற்குப் பிரகாரத்தில் நாகன் புற்றும், புற்றின் இருபுறங்களிலும் இரு பசுக்களின் சிலைகள் பின்புறக்கால்களை விரித்த நிலையில் உள்ளன. வடக்கு வெளிப்பிரகாரத்தில் தொரட்டி மரவிநாயகர் உள்ளார். மேலும் எசவடக்குதிரைகளும் உள்ளன. கோவிலின் முன்மண்டபத்தில் ஐம்பூதங்கள் அழகுற வீற்றிருக்கின்றன. வடக்கு முகமாக வீற்றிருக்கும் வீரக்குமாரசாமியின் நேர் எதிரில் ஒரு வெள்ளைக் குதிரை நிறுத்தப்பட்டுள்ளது. குதிரைக்கு முன்னால் ஒரு சக்திவேல் உள்ளது. அதன்கீழ் சூரக்குமரர் என அழைக்கப்படும் மூன்று காவல் தெய்வங்கள் உள்ளன. வீரக்குமாரனின் பாதகுறடும் வைக்கப்பட்டுள்ளது. மேலும் வீரக்குமார் சன்னதிக்கு வடமுகமாக முத்துக்குமார் சன்னதி, கிழக்கு முகமாக பால விநாயகர் சன்னதி, உற்சவ மூர்த்தி சன்னதி, செல்லப்ப கவுண்டர் சன்னதி, பழனிக்கவுண்டர் சன்னதி, கன்னிமார் சன்னதி, நரிப்பழனிக் கவுண்டர் சன்னதி, குமரப்ப கவுண்டர் சன்னதி, கருப்பண்ணசாமி சன்னதி, பேச்சியம்மன் சன்னதி ஆகியவை அமைந்துள்ளன. மேலும் கன்னிமார் சன்னதிக்கு முன்னர் பதினெட்டுச் சித்தர்களின் சிலைகள் அழகுற அமைக்கப்பட்டுள்ளன. இவர்களனைவரும் வீரக்குமாரசாமியின் பரிவார தெய்வங்கள் என்று அழைக்கப்படுகின்றனர். கோவிலின் வெளிப்புறம் தெப்பக்குளம் ஒன்று அமைந்துள்ளது.

***மூலவரின் திருவுருவ அமைப்பு :*** வடக்கு முகமாக வீற்றிருக்கும் வீரய்யன் பாதகுறடு கவசமணிந்து, இடுப்பில் தாங்கு கச்சையும், உடைவாளும், குத்துவாளும் ஏந்தி, தோளில் சாட்டையும், வலது இடக் கைகளில் சூலாயுதமும், தண்டும் முறையே தரித்து தலையில் சடாபரம் கொண்டு கன்னிக்குமரனாய்க் காட்சியளிக்கின்றார். கொங்கு வேளாளக் கவுண்டர்களில் ஆந்தைகுலம், தனஞ்செய் குலம், மாட குலம், தென்முக ஆந்தை குலம், வடமுக ஆந்தை குலம், ஓதாள குலம், இலுப்பைக் கிணர் தனஞ்செய குலம், கல்லி குலம், பலிஜவார் குலம், மற்றும் வண்ணக்கன் குலம் ஆகிய குலத்தவர்கள் வெள்ளக்கோவில் வீரக்குமாரசாமியைக் குல தெய்வமாகக் கொண்டவர்கள்.

*கோவில் பராமரிப்பு :* வீரக்குமாரசாமி திருக்கோவிலின் வைப்பு நிதியாக சுமார் ஏழு லட்சம் ரூபாய் வங்கியில் போடப்பட்டுள்ளது. நிலக்குத்தகை, கடை வாடகை, காலிமனை வாடகை, உண்டியல் வரவு, தேங்காய்ச் சீட்டு, வாகன பூசைச் சீட்டு, காதுகுத்துச் சீட்டு, பொட்லிச் சீட்டு, தண்டல், கல்யாண மண்டப வாடகை, உபபொருள்கள் ஏலவரவு போன்ற பல்வேறு வகைகளின் மூலம் கோவிலுக்கு வருவாய் கிட்டுகிறது. வீரக்குமாரசாமி திருக்கோவில் நிர்வாகம் 1984-க்குப் பிறகு தமிழ்நாடு திருக்கோவில் நிர்வாக வாரியத்தின் ஆளுகையின்கீழ் உள்ளது.

*வழிபாடுகள் :* இக்கோவிலில் நாள் வழிபாடு மூன்று வேளையும் குறித்த நேரத்தில் நடைபெறுகிறது. திங்கள், வெள்ளி ஆகிய இரு நாட்களிலும், அமாவாசை, கிருத்திகை, பொங்கல், புத்தாண்டு ஆகிய நாட்களிலும் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன. ***பண்டாரம்*** என்னும் வகுப்பைச் சார்ந்தவர்கள் பூசைகளை முறைப்படி செய்கின்றனர். பக்தர்கள் பாதகாணிக்கை மற்றும் பட்டிக் காணிக்கை எனப்படும் காணிக்கைகளைச் செலுத்துகின்றனர்.

## விழாக்கள்

விழா எடுக்கும் வழக்கம் பண்டைக்காலம் தொட்டு வழக்கில் உள்ளது. இதனை, ***இந்திர விழவிற் பூவினன்ன புன்றலைப் பேடை வரி நிழலகவும்*** என்னும் ஐங்குறுநூற்றுப் பாடல்வரிகள் உறுதி செய்கின்றன. மக்கள் ஒன்றுகூடி விழைந்து கொண்டாடுவது விழா. ***மனித சமுதாயம் பல்வேறு காரணங்களால், பல்வேறு பிரிவுகளாக வாழ்ந்திருந்த போதிலும் அச்சமுதாயம் ஒருங்கிணைந்து கொண்டாடுவது திருவிழாக்களும், பண்டிகைகளும் ஆகும்*** என்பார் அ. சக்திவேல். வீரக்குமாரசாமி கோவிலைப் பொறுத்தவரை தேர்த்திருவிழாவும், தை அமாவாசை நாள் விழாவும் குறிப்பிடத்தக்க விழாக்களாகும்.

ஒவ்வோர் ஆண்டும் மாசிமாதம் சிவராத்திரியன்று தேர்த்திருவிழா, மூன்று நாள் விழாவாக நடைபெறுகிறது. முதல்நாள் சுவாமியைத் தேரில் எழுந்தருளச் செய்து தேரை நிலை பெயர்த்து வைக்கிறார்கள். இரண்டாம்நாள் தேரோட்டமும், மூன்றாம் நாள் தேர்நிலை சேர்தலும் நடைபெறும். இம்மூன்று நாட்களிலும் பல ஊர்களில் இருந்து சாதி சமய வேறுபாடின்றி அனைத்து மக்களும் வீரய்யனை வணங்கி அருள்பெறுவர். விழாவின் போது சுமார் ஒரு வாரகால அளவிற்கு இரவுப் பொழுதில் கலைநிகழ்ச்சிகள் நடைபெறும். தை அமாவாசை நாளன்று வாணவேடிக்கையுடன் விழா நடைபெறும்.

## கோவில் குறித்த சிறப்புச் செய்திகள்

பெண்கள் இக்கோவிலின் உட்பிரகாரத்தினுள் செல்லக்கூடாது. ஆதிசக்தியின் அருள்பெற வீரக்குமாரசாமி தவம் செய்யும்போது ஒரு பெண்ணின் ஆவிபட்டுத் தவம் கலைந்ததாகவும், வீரக்குமரன் பார்வையாலேயே அப்பெண்ணை எரித்ததாகவும் அது முதல் வீரக்குமரனின் கண்களில் பெண்கள் படக்கூடாது என்ற ஐதீகம் நிலவுவதாகவும் கூறுவர். பக்தர்கள் தாங்கள் நினைத்த காரியம் கைகூடுவதற்காக *பொட்லி* எனப்படும் அதிர்வெடி போடுகின்றனர். இதற்கெனத் தனியாக ***அதிர்வெடி மண்டபம்*** உள்ளது. நம்பிக்கை என்பதே மனித வாழ்வின் ஆணிவேராகும். நம்பினோர் கெடுவதில்லை என்பது ஆன்றோர் வாக்கு. மக்கள் தங்களுக்கு யாராவது அநீதி இழைத்துவிட்டால் வீரய்யன் பார்த்துக் கொள்வான் என்று தங்கள் முறையீடுகளைப் பிராது எழுதி மூலவர் முன்னிலையில் கட்டும் பழக்கமும் உள்ளது. தங்கள் காவல் தெய்வமாக மக்கள் வீரக்குமாரசாமியை நம்புகின்றனர்.

## தொகுப்புரை

சிறு தெய்வ வழிபாடுகள் காலமாற்றத்தினாலும், பொருளாதார வளர்ச்சியினாலும் பெருந்தெய்வ வழிபாட்டு நிலையை அடைவது தவிர்க்க முடியாததொன்றாகும். அவ்வகையில் பூசை செய்யும் பூசாரிகள் குருக்களாக மாற்றப்படாததும், வடமொழி வேதம் கூறப் பெறாததும் தவிர ஒரு பெருந்தெய்வ நிலையில் வைத்து எண்ணத்தக்கதாக வீரக்குமாரசாமி உள்ளது. மேலும் சாதிவேற்றுமை கருதாது அனைத்துச் சமூகத்தினரும் ஒன்றுபட்டு ஒருங்கே வணங்குவது மனத்திற்கு மகிழ்வூட்டக் கூடியதாகவும், சாதிபேதமற்ற ஓர் எதிர்காலச் சமூகத்திற்கு வழிகோலுவதாகவும் உள்ளது.

## துணைநூல்கள்


1. ***கருப்பாயி.ஆ,*** : (1999) நாட்டுப்புறச் சிறுதெய்வ வழிபாடு, செந்தமிழ்ப் பாவை பதிப்பகம், ஆய்க்குடிவயல், புதுக்கோட்டை
2. ***குருசாமி சித்தர், ஞானசேகரன்:தே,*** : (தொகுப்பாசிரியர்கள்), தமிழர் பண்பாட்டு வரலாறு (தொகுப்பு - II) (1999),
3. ***சக்திவேல்.அ,*** : நாட்டுப்புறவியல் ஆய்வு,
4. ஐங்குறுநூறு

# நவாப்பழத்தம்மன் குலதெய்வ வழிபாட்டு மரபுகள்

**இரா. விஜயன்**, எம்.ஏ.,எம்.ஃபில்.,
*வி.என்.ஆர்.நகர்., வடவள்ளி*

## முன்னுரை

நாட்டுப்புறங்களில் நடைபெற்று வரும் வழிபாட்டு முறைகள் சில நமக்கு வியப்பாகவும் விந்தையாகவும் இருப்பினும் அங்கு பின்பற்றப்படும் பண்பாடும், பழக்க வழக்கங்களும் நாகரீகத்தையும் அன்றைய வரலாற்றையுமே முன் நிறுத்துகின்றன. கன்னட தேவாங்க செட்டியார் இனத்துள் ஒன்றான கப்பலேர் எனும் குலத்தினர் பின்பற்றி வரும் வழிபாட்டு முறையே எடுத்தியம்புவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

காலங்காலமாய் நெசவுத் தொழிலையே முதன்மையாகச் செய்து வரும் இவ்வினத்தினர் குலதெய்வ வழிபாடாக அம்மன் வழிபாட்டை மேற்கொண்டு வருகிறார்கள். சாதாரணமாக அம்மன் கோயில்களில் இருக்கும் அம்மன் சிலையோ, சூலமோ எதுவும் இல்லாமல் பழங்காலப் பெட்டி ஒன்று மட்டும் உள்ளது. அப்பெட்டியினுள் பெண்ணின் தலை உள்ளது. இதையே இம்மக்கள் குலதெய்வமாகக் கருதி வழிபட்டு வருகிறார்கள். சித்தையன்கோட்டை என்றழைக்கப்படும் இவ்வூர் இவ்வூர் திண்டுக்கல்லிற்கு தென்மேற்கு திசையில் 10 மைல் தொலைவில் அமைந்துள்ளது. இவவம்மனை சஞ்சீவி மலையரசி, நவாப்பழத்தம்மன், சாமுண்டீஸ்வரி என பல பெர்களில் இம்மக்கள் அழைககிறார்கள். வழிபாட்டிற்குக் காரணமாக ஒரு வாய்மொழிக் கதை வழக்கில் உள்ளது.

## வாய்மொழிக் கதை

இம்மாவட்டத்தில் ***சிறுமலை*** எனும் மலை ஒன்று உள்ளது. இம்மலை பலாவிற்கும், நவாப்பழத்திற்கும் பெயர் பெற்றது. இம்மலையை ஆண்ட மலையரசன் ஒருவனின் மகள் இறையருளால் கருவுற்றாள் என்றும், பிறகு அழகான பெண் மகவு ஒன்றினைப் பெற்று பழிக்கு அஞ்சி சூலக் குறியிட்ட பச்சை பட்டாடையில் அக்குழந்தையைச் சுற்றி நவாமரத்தடியில் விட்டுச் சென்றாள் என்றும் அககுழந்தை அம்மரத்தடியில் பழுத்துக் கிடந்த நவாப்பழத்தில் உருண்டு, உருண்டு உடல் நீல நிறமாக மாறியது எனவும் அக்குழந்தைக்கு ஓர் நாகம் துணை

நின்றது என்றும் அம்மலையில் ஆடு மேய்க்கும் இடையன் ஒருவன் தினமும் தனது ஆடுகளை இப்பகுதிக்கு மேய்ச்சலுக்கு கொண்டு வரும் போது ஒரு ஆடு மட்டும் பிரிந்து சென்று அக்குழந்தைக்குப் பால் ஊட்டி. பசியாற்றிப் பிறகு இறுதியில் வந்து தனது மந்தையுடன் சேர்ந்து கொள்ளும் என்றும், இதை கவனித்த அந்த இடையன் ஒரு நாள் ஆட்டின் பின் தொடர்ந்து சென்ற போது தான் அந்த அற்புதத்தை அவன் பார்த்ததாகவும் நாகத்துணையுடன், இறையருளோடு விளங்கிய அக்குழந்தையை மகப்பேறில்லாத தனக்கு மகளாக்க எண்ணி, நாகத்திடமே அனுமதி கேட்டான் என்றும் அதற்கு இணங்கி நாகமே அவனுக்கு வழிவிட்டுச் சென்றது என்றும், பிறகு அக்குழந்தையை அவன் தனது இல்லத்திற்கு எடுத்துச் சென்று அன்புடன் வளர்த்தான் எனவும் பிறகு சில ஆண்டிலேயே அவனுக்கு ஆண் மகவு ஒன்று பிறந்தது என்றும் இருவரும் உடன் பிறந்தோர் போல் மாசில்லா பாசம் கொண்டு ஊரே பொறாமை கொள்ளும்படி சீருடன் வளர்ந்தனர் என்றும், அவள் பருவவயதை எட்டிய போது இடையனும் அவன் மனைவியும் இறந்தனர் என்றும், பிறகு அவளே ஆடு மேய்க்கும் பணியை ஏற்று நடத்தி வந்தாள், ஒரு நாள் தனது தம்பியை ஊரார் அனாதை என்று கேலி செய்தது கண்டு சோர்வுற்று தனது தமையனிடம், தம்பி உன்னை போலவே ஒரு இனமும் குலத்தெய்வம் இல்லாமல் அனாதையாகப் புல்வெட்டி கண்மாய் எனும் பகுதியில் வாழ்ந்து வருகிறது. அவர்களுக்குக் குலத்தெய்வமாக அவதரிக்கவே நான் பிறந்தேன். ஆகவே இங்கு யாரும் அனாதை இல்லை, எனவே நீ எனது சிரத்தைத் துண்டித்து அவர்களிடம் ஒப்படைத்து விடு. இது என் மேல் ஆணை என அவனிடம் கேட்டுக் கொண்டாள் எனவும், அவனும் வேறு வழி தெரியாமல் துன்பம் மேலிட தனது தமக்கையின் தலையைத் துண்டித்து, கண்மாய் பகுதியில் நெசவுத் தொழிலில் ஈடுபட்டு வந்த அம்மக்களிடம் நடந்ததைக் கூறி ஒப்படைத்தான் என்றும், பிறகு அம்மக்கள் செய்வதறியாமல் உடல் சிலிர்த்து, அச்சிரத்திடமே, உன்னை எங்கம்மா வைத்து வணங்குவது என்று கேட்ட போது, இங்கிருந்து மூன்றுமைல் தொலைவில் சித்தர்கள் கோட்டை (இதுவே இன்று மருவி சித்தையன் கோட்டை என அழைக்கப்படுகிறது) ஒன்று உள்ளது. அங்கு ஆலயம் எழுப்பி வழிபாடு நடத்துங்கள் என்று கூறியதாகவும் அதன் பேரிலேயே இவர்கள் இவ்வூர்க்கு வந்து இவ்வம்மனைத் தமது குலத்தெய்வமாக வழிபட்டு வருகிறார்கள் என்று வாய்மொழிக் கதை ஒன்றை கூறுகிறார்கள்.

## வழிபாட்டு முறை

இரண்டு ஆண்டிற்கொருமுறை மகாசிவராத்திரி நாளன்று இவர்கள் பெட்டியிலிருந்து சிரததை வெளியே எடுத்து வைத்து

வழிபடுகிறார்கள். சக்தி, சிவம் எனும் இரு சக்திகளை வெளிப்படுத்தும் முககமாக இரு ஆண்டிற்கொருமுறை நடத்தப்படுகிறதாம்.

*குறியிடுதல் :* வழிபாட்டின் முதல் நிகழ்ச்சியாய் சலவைத் தொழிலாளிக்கு முதல் மரியாதை செய்யப்படுகிறது. அவன் அன்று இட்ட அந்த சூலக்குறிதான் தமது சமுதாயத்தையே அடையாளம் காட்டியது எனும் கருத்தை முன்வைத்து, சாதி வேறுபாட்டை கடந்து அவரை அழைத்து வந்து பட்டாடையில் சூலக்குறியிடச் செய்து அவருக்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்படுகிறது.

***சீக்கு அரைத்தல் :*** சிரசத்தை குளிப்பாட்ட, சீயக்காய்களை நன்கு உலர வைத்துத் தமது கைகளாலே கோயில் பூசாரிகள் அரைக்கிறார்கள்.

*குளிப்பாட்டல் :* தமது கண்களை கட்டிக் கொண்டு பூசாரிகள் சிரத்தை வெளியே எடுத்து அதற்குச் சீயக்காய் இட்டு இளநீரால் குளிப்பாட்டுகிறார்கள்.

***பச்சையாடை தருதல் :*** இக் குலத்தைச் சேர்ந்த ஆண்கள் தமது சகோதரிகளை எங்கு இருப்பினும் அழைத்து வந்து அவர்களுக்கு பச்சையாடை கொடுத்து அவர்களின் ஆசி பெறுகிறார்கள். பிறகு மாலையில் பூக்களால் அலங்கரிக்கப்பட்ட அம்மன் பொதுமக்கள் வழிபாட்டிற்காகச் சன்னதியில் வைக்கப்படுகிறது. இவ்வம்மன் அருள் பெற இம்மாவட்டத்தின் பல பகுதியிலிருந்தும் மக்கள் இங்கு வந்து அம்மன் அருள் பெற்றுச் செல்கிறார்கள். விழாவின் இறுதியாக நள்ளிரவு அலங்கரிக்கப்பட்ட அம்மனின் தலையில் சுற்றப்பட்ட பூக்களை விடுத்து இக்குலப் பெண்களுக்குக் கொடுத்துவிட்டு மீண்டும் சிரத்தை எடுத்துப் பெட்டியில் வைத்துவிடுகிறார்கள். இனி இரண்டாவது ஆண்டில் மட்டுமே இப்பெட்டி திறக்கப்படும்.

## முடிவுரை

சாதி, மத ஏற்றத்தாழ்வுகளை எடுத்தெறியவும், அன்பையும், பாசத்தையும் எடுத்தியம்புவதையுமே நாட்டுப்புற வழிபாட்டு முறைகள் என்றென்றும் நமக்கு எடுத்துக்காட்டி வருகின்றன. அதற்கு இம்மக்கள் பின்பற்றி வருகின்ற வழிபாட்டு முறையும், வாய்மொழிக் கதையும் ஒரு சான்று. நாட்டுப்புற மக்களின் பழக்க வழக்கங்களிலும், செயற்பாடுகளிலும் மறைந்து போன ஒரு வரலாற்றை எடுத்துக்காட்டவே முயல்கிறார்கள் என்பது மட்டும் காலம் நமக்கும் காட்டும் பாடம்.

# வேளாண்மைத் தொழிலாளர்களின் வழிபாட்டு மரபுகள்

**க. வெங்கடேசன்,** எம்.ஏ., எம்.ஃபில்.,
*மகேந்திரா கலை அறிவியல் கல்லூரி, காளப்பட்டி*

சங்க காலத்தில் அதியமான் ஆண்டு வந்த பகுதியே தருமபுரி மாவட்டமாகும். இம்மாவட்டத்தில் பெரும்பாலான மக்கள் வேளாண்மைத் தொழில் செய்து வாழ்கின்றனர். வேளாண்மைத் தொழிலைத் துவங்கும் போது கடவுளை முன்னிருத்தி அதில் ஏற்படும் இன்னல்களிலிருந்து காக்குமாறு வழிபடுகின்றனர். அவ்வழிபாட்டு மரபுகளான வருணபகவான் வழிபாடு, விநாயகர் வழிபாடு, பெருமாள் வழிபாடு முனிஸ்வரன் வழிபாடு ஆகும். இதில் சிறுதெய்வ வழிபாடுகளே தொழிலின் போது காணப்படுகிறது. ***தெய்வங்களை நினைத்து தொழில் தொடங்கினால் எவ்வகைத் தொழிலும் திறம்பட முடியும்; முன்னேற்றம் பெறலாம் என்னும் அடிப்படையில் பிறந்தே வழிபாடாகும்*** (2 : 121) வருணன் வழிபாடு குறித்து, ***வருணன் மேய தீம்புனல் உலகம் (3 : 632)*** எனத் தொல்காப்பியர் கூறுகிறார். தொடக்கத்திலே வருண பகவான் வழிபாடு இருந்தது. மழையை வரவழைக்கும் சக்தி வருண பகவானுக்கு உண்டு என்னும் நம்பிக்கையின் அடிப்படையில் வருண பகவானுக்குப் பூசை செய்து மழையைப் பெறுகின்றனர் நாட்டுப்புறத் தொழிலாளர்கள்.

நாட்டில் மழை இல்லாத போது அது மன்னனது செங்கோல் இன்மையினாலே ஏற்பட்டது என்றும் மக்கள் அறநெறியில் இருந்து தவறியதாலும் என்று, ***முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி ஒல்லாது வானம் பெயல்*** (1 : 256) வள்ளுவர் படம்பிடித்துக் காட்டுகிறார். மழை பொழியாதபோது பஞ்சத்தாலும் பட்டினியாலும் நோய்க்கொடுமை யாலும் அவதிப்பட்டனர். இத்துன்பத்திலிருந்து விடுபட வருண பகவானை வணங்கினர். நாட்டுப்புற மக்கள் முதல்நாளில் ஊரில் உடைந்துபோன உரல்களை எல்லைதாண்டி வீசுவர். அன்று இரவு கன்னிப்பெண் அல்லது ஒழுக்கம் உள்ள சிறுவர்களிடம் விரதம் இருக்கச் செய்வர். தவளையைப் பிடித்து வருவர் அதை நெல் குற்றும் உலக்கையோடு சேர்த்துக் கட்டுவர். அத்தவளை கப......... கப.......... என்று

கத்திக் கொண்டே இருக்கும். இந்த உலக்கையைக் காவடி தூக்கி வருவதைப் போல் ஒவ்வோர் வீடாக உலா வருவர். அச்சிறுவர்களுக்குப் பாத பூசை செய்து பணம் அல்லது தானியங்கள் கொடுப்பர். இவ்வாறு திரட்டியதை ஊர் பெரியவர்களிடம் கொடுப்பர். அவர்கள் இரவில் ஏரியில் வருணபகவானுக்குப் பூசை செய்வர். பூசையின் போது உடுக்கை மேளம் போன்ற பேரொலிகள் ஒலிக்கும். வருணனை,

*மேகமெல்லாம் திரும்புதையா /வாருமையா வாருமையா*
*வருண பகவானே! / தீருமையா தீருமையா*
*தென்னாட்டு பஞ்சமெல்லாம்* (7 : பேட்டி)

என வேண்டுவர். மழையைத் தருவிப்பவன் வருணபகவான் என நம்புகின்றனர். ***தருமையாதீனத்தில் பதினைந்தாவது பட்டமாக எழுந்தருளிய தவமுனிவர் மாசிலாமணி தேசிகர் காலத்தில் பயிர் வாடியமையால் மக்கள் வேண்டுகோளின்படி புலனைந்தும் பொறிகலங்கி எனத் தொடங்கும் மேகராகக் குறிஞ்சிப் பண்ணைச்சாரங்கி என்னும் இசைக்கருவியால் இசை மழைப்பெய்தது(4 : 110)*** என்னும் குறிப்பு இத்தகைய மழை வழிபாட்டு தொன்மையை அறியமுடிகிறது. ***வளம் பிழைப்பறியாது வேந்தரது கொற்றம் சிதையாது சிலம்பு*** (15 : 145 - 147) ***பத்தினிப் பெண்டிர் நாட்டில் வானம் மழையைப் பொழியும் என்றும் மழைதரும் தன்மையளே இவள்*** (6:203) என்று உரைக்கும் மணிமேகலையையும் மழைப் பொழியச் செய்யும் வழிபாடுகள் உள்ளதைக் காட்டுகின்றன. வருண பகவான் பூசையின் போது பெண்கள் ஒப்பாரி வைப்பதுண்டு. அப்பொழுது சாமி வந்தபெண் ஆடுவதுண்டு.

*பொன்னேர் வழிபாடு :* வைகாசி மாதத்தில் மழை பொழியும். உழவர்கள் மகிழ்ச்சிப் பொங்க பொன்னேர் ஓட்டுவதற்கு தயார் செய்வர். ஆண்டின் முதல் ஏர் இதுவே. பொன் + ஏர் = அதாவது பொன்னால் செய்த கலப்பையால் ஏர் உழுவது தொல்கால மரபாகும். நாளடைவில் பொன் கலப்பைகளுக்குப் பதில் இரும்புக் கலப்பைகள் உருவாயிற்று. இதனை நாட்டுப்புற வழக்கத்தில் கார் என்று கூறுகின்றனர். பொன்னேர் பூட்டிய உழவர்கள் தொழிலுக்கு அதிபதியான விநாயகரை வழிபடுவது தொன்றுதொட்டு வரும் மரபாகும். முதலில் மாடுகளைத் தூய்மை செய்து மஞ்சள் குங்குமம் வைப்பர். இதே போன்று ஏர் கலப்பைக்கும், நுகத்தடி, பூட்டாங்கயிர், சாட்டை போன்றவைகளுக்கும் குங்குமம், மஞ்சள் இடுவர். களிமண்ணால் பிள்ளையார் சிலை செய்து அதற்கு அருகம்பு குத்தி வைப்பர். பிள்ளையாருக்குப் பிடித்த எள்ளுருண்டை அரிசி மாவு, பொறி தேங்காய், பழம் போன்ற தின்பண்டங்களைப் படைப்பர். பிள்ளையார்

சிலைக்கு அருகில் மூன்று பாத்திரக் குழிகளைத் தோண்டுவர். அக்குழிகள் நிரம்பும்படி விதைக்கும் தானியங்களை அதில் இடுவர். பாத்திரக்குழியில் தானியங்கள் நிரம்பினால் நல்ல விளைச்சல் விளையும் என்று நம்புகின்றனர். சணல்பைகள் உருவாவதற்கு முன்பு பூமியில் பாத்திரக் குழிகள் அமைத்து அதனுள் தானியங்களைச் சேர்த்து வைத்துள்ளனர். மழைபெய்யும் பொழுது அதனுள்ளே செல்லாமல் பாதுகாப்பாக வைத்துள்ளனர். இன்று இப்பாத்திரக் குழிகள் அழிந்த நிலையில் உள்ளது. எல்லா பூசைகளும் முடிந்த பின்னர் சூரியன் விடிவதற்கு முன்னர் நன்கு கைராசியான ஏர்க்காரன் வணங்கி மேழிச் செல்வத்தை பிடித்து ஓட்டுவர். ஏர் ஓட்டும் போது கவனமாக ஓட்டுவர். அப்பிள்ளையார்சிலை சாலின் வலப்பக்கம் சாயவேண்டும். இது நன்மை ஏற்படும். மாறாக இடப்பக்கம் சாய்வதால் தீமை ஏற்படும் என்று நம்புகின்றனர். கவனக் குறைவால் இடப்பக்கம் சாய்வோரைச் சாட்டை அடி கொடுத்தலும், கடுஞ்சொற்களாலும் ஏசுவர்.

*சப்பாணி பிள்ளையார் :* பொன்னேர் பூட்டிய உழவன் ஒருவன் தொழிலுக்கு அதிபதியான விநாயகப் பெருமானை வணங்கி அப்பிள்ளையாரை தன் குழந்தைப் போல் வர்ணித்து,

> *சோ....................... காளையிரே / கற்பூரம் தேங்காயும்...............*
> *எங்க சப்பாணி பிள்ளையாருக்கு / காளையிரே நீ புடிச்சாட*
> *பொடி எருது / பூட்டுங்கடா பொன்னேரு* (9 : பேட்டி)

எனப் பாடுகிறான். பாடல் முழுவதும் பக்திச் சுவை காணப்படுகிறது.

## ஏற்றத்தில் வழிபாடு

ஏற்றம் இறைக்கும் போது பாடப்படும் பாட்டே ஏற்றப்பாட்டாகும். இது கட்டுக்கு அடங்காதது. கம்பி போல் நீளும் தன்மை உடையது. மற்றவரை ஈர்க்கும் காந்தமுடையது. தெய்வபக்தி, காதல் வறுமை போல்வன தன்னகத்தே வைத்திருக்கும் பெட்டகம். ஏற்றத்தில் ஒற்றை ஏற்றம் இரட்டை ஏற்றம் என்று இரண்டு வகைப்படும். தருமபுரி மாவட்டத்தில் தண்ணீர் பாயாத மேடான பகுதியில் இன்றும் பயன்பாட்டில் உள்ளது. ஒற்றை ஏற்றம் சிறியதாக இருக்கும். இதில் ஒருவரே தண்ணீரை இரைப்பர். இரட்டை ஏற்றத்தில் இரண்டு பேர் அல்லது மூன்று பேர் சேர்ந்து தொழிலில் ஈடுபடுவர். இது ஆபத்தானது. மரத்தின் மீது மேலே ஏறிச்செல்லும் போது தவறி கீழே விழுந்தால் உயிருக்கு உத்திரவாதம் இல்லை. கீழே சால்பிடித்து இறைப்பவர் கால் தவறி கீழே விழுந்தால் உயிர் பிழைப்பது கடினம். இக்காரணத்தினால் ஒவ்வொரு வரியின் தொடக்கத்திலே பல்வேறு தெய்வங்களை வழிபட்டு

தொழிலில் ஏற்படும் ஆபத்துக்களை நீக்கி தங்களைக் காக்குமாறு வணங்குகின்றனர். தருமபுரி மாவட்டத்தில் ஆண்மை என்பது எது எனில் ஏற்றம் இறைப்பதுதான் என்று கூறுகின்றனர். இத்தகைய ஆடவரைப் பெண்கள் மணமுடித்து கொள்வார்களாம். ஏற்றம் இறைக்காத ஆண்களை மணம் முடிக்காமல் மறுத்து உள்ளதாக களஆய்வு செய்தபோது அறிய முடிந்தது. ஏற்றம் இறைக்கும் பொழுது தெம்மாங்கு இசையும் பிறந்து வருகிறது.

சால் பிடிப்பவர் : *ஏத்த கார மாமா உனக்கு*
*எந்தப் பொண்ணு வேணும்*

சால் மிதிப்பவர் : *சாய சீலக்காரி*
*சமிஞ்ச பொண்ணு குப்பாயி*
*வடுகு பொண்ணு குப்பாயி......*

சால்பிடிப்பவர் : *மொள்ள மொள்ள கேளு / மோசம் வரப் போகுது*
*பிள்ளையாரே வாரும் / பெருமாளே! வாரும்*

(7:பேட்டி) எனப் பாடுகின்றனர். இறைவனிடம் தங்களைக் காக்குமாறு வேண்டுகின்றனர். பாடல் முழுவதும் சிவபெருமான், விநாயகர், முருகர், பெருமாள், ஐயனார் போன்ற தெய்வங்களை வணங்கியபடியே பாடுகின்றனர்.

## நடவு வழிபாடு

நன்கு பரம்படித்து விட்ட பிறகு நடவுக் காலில் நெற்பயிர் நடவு செய்வர். நாற்று நடும் கழனியில் நான்கு மூலைகளும் செவ்வகமாக அமைத்து வரப்பை உயர்த்திக்கட்டுவர். நாள் முழுவதும் குனிந்தும், நிமிர்ந்தும், வேலைசெய்யும்போது களைப்புத் தெரியாமல் இருப்பதற்காகப் போட்டி போட்டு பாடல்களைப் பாடுவர். இப்பாடல்களில் பக்தியும் காதலும், மாறாமல் மனதில் ஒட்டிக் கொண்டிருக்கும். நடவு நடும்போது கைராசியான ஆண் முதன் முதலில் வடகிழக்குப் பகுதியில் குபேந்திரனை வணங்கி மூன்று குத்து பயிர் நடுவர். அதன்பின்னர் மற்ற பெண்கள் வயலில் இறங்கி நடுவர். பணத்தில் பெரியவன் குபேந்திரன் ஒருமுறை ஏழுமலையான் திருமணத்திற்கு பணமில்லாமல் மிகவும் அவதிப்பட்டான். அந்த நேரத்தில் குபேந்திரனிடம் கடன் வாங்கித் திருமணத்தை முடித்தார். வாங்கிய கடன் அடைக்கவே திருப்பதியில் குடிகொண்டுள்ளார். இன்றும் கடன் அடைக்க முடியாமல் இருப்பதாகக் கதை உண்டு. இத்தகைய செல்வந்தனை நினைத்து ஈசானமூலையில் வணங்குகின்றனர்.

*சந்திரரே சூரியரே / சாமி எங்கள் பகவானே*
*இந்திரரே நோக்கியல்லோ / எடுக்கப் போறோம் தெம்மாங்கு*

எனப்பாடுகின்றனர்.

## தினை வழிபாடு

நடவு நட்டு ஐந்து மாதம் கழிந்து தினைமுற்றி வரும். இக்கதிரைக் காவல் காப்பர். ஆடு, மாடு, அணில், காகம் குருவிகள் போல்வன தினைப்பயிரைச் சேதப்படுத்தும். இக்காவலுக்குக் கெட்டிக்காரன் முனீஸ்வரன் ஆவார். வைகோற்பில்லில் பொம்மை செய்வர். மண்சட்டியை எடுத்துச் சுண்ணாம்பு பூசுவர். கரும்புள்ளி செம்புள்ளி வைத்துக் காவல் பொம்மையாக வைப்பர். இந்தப் பொம்மையைப் பார்த்து விலங்கினங்கள் அஞ்சி ஓடிவிடும். தினை காக்கும் சிறுவர்கள் காவலுக்கு உதவிசெய்யும் முனிஸ்வரனை வணங்கி,

*ஓரான கரும்புத் தோட்டம் / யாராரு காவலுண்டு*
*முனியப்பன் காவலுண்டு / இராக்காசி காவலுண்டு*
*இத்தனைக் காவலிலே - நான் / எப்படி வருவேனம்மா*

என்று பாடுவர். தினைகாக்கும் போது கூடவே காதலும் பொங்கி எழும்.

## பலியிடுதல்

காவல் காத்த தெய்வத்திற்கு கிடா வெட்டுதல் மரபாகும். இல்லையெனில் கோபித்துக் கொண்டு அதிக மகசூல் தராமல் போய்விடுவான் என்று நம்பிக்கை காணப்படுகிறது. கிடாவிற்கு மஞ்சள், குங்குமம் வைத்து அலங்காரம் செய்வர். பொங்கல் கூடை பின் செல்ல ஆட்டுக் கிடா தலை ஆட்டியவாறும் சிறுவர்களை இடித்துக் கொண்டு செல்லும். நெற்கழனி வரப்பில் சிறு பந்தல் போடுவர். ஏழு பொம்மைகள் செய்து அதற்குப் பொட்டிடுவர். பெண்கள் பொங்கலிடுவர். அனைத்துப் பூசைகள் முடிந்ததும் ஆட்டிற்குத் தண்ணீர் தெளித்து ஊதுவத்தியைக் காட்டுவர். ஆடு சிறிது நேரம் உடம்பைச் சிலிர்க்காமல் இருந்தால் ஏதோ தெய்வக் குற்றம் ஏற்பட்டது என்று முனிஸ்வரனிடம் மன்னிப்பு வேண்டுவர். உடனே தலையாட்டிச் சிலிர்க்கும். அடுத்து தலை கீழே விழுந்துவிடும். குருதியைச் சோற்றில் பிசைந்து ஊதுவத்தியை எடுத்து ஒருவர் முன்செல்ல அடுத்தவர் குருதியை மேலே தூக்கி எறிவர். இவ்வாறு வீசியதை முனிஸ்வரன் கீழே விடாமல் தின்றுவிட்டான் என்று நம்பிக்கையோடு செல்வர்.

## களத்து மேட்டு வழிபாடு

நெல்லை அறுவடை செய்து களத்து மேட்டிற்கு எடுத்துவருவர். உழவர்கள் நெல்லை அடிக்கவும் அது குவியலாக இருக்கும். இதனை இராசி என்று கூறுவர். இதை, சாமிக்கு, விதை நெல்லிற்கு, உரிமையாளர்க்கு என்று மூன்று பங்காகப் பிரிப்பர். பிரித்ததை மூன்று முறை குவியலாகச் சேர்ப்பர். மீண்டும் பிரிப்பர். குவிலாக இருக்கும் நெற்குவியின் மீது சாணத்தால் பிள்ளையார் சிலை செய்து வைப்பர். மூன்று நாள் களத்திலே இருக்கும். அதன் பின்னர் வண்டிமாட்டில் ஏற்றிச் செல்வர். பாரத்தை ஏற்றிய பின்னர் எருதுகள் கோமியம் பெய்ததா என்று உற்று நோக்குவர். கோமியம் பெய்தால் நல்ல சகுனம் போகும் வழியின் துன்பம் ஏற்படாது என்று நம்புகின்றனர்.

எத்தொழிலைச் செய்தாலும் அதில் தெய்வ வழிபாட்டு மரபுகள் மாறாமல் நிற்கிறது. இது இயற்கையாகவே நடப்பது போல தொழிலாளர் வாழ்வோடு நடைபோடுகிறது. அவர்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்து அவர்களையும் தாண்டி அடுத்த மரபினங்களைத் தேடி அணிகிறது.

## துணை நூல்கள்


1. *திருவள்ளுவர்.* திருக்குறள்
2. தருமபுரி நாட்டுப்புறத் தொழிற்பாடல்கள், ஆய்வேடு.
3. *தொல்காப்பியனார்* : தொல்காப்பியம்
4. *அருட்கலை. கோ.* : மழையும் வழிபாடும்
5. *இளங்கோவடிகள்.* சிலப்பதிகாரம்
6. *சீத்தலைச்சாத்தனார்* : மணிமேகலை
7. பேட்டி : கன்னியப்பன், சமயபுரம், நாள் : 2.3.1998
8. பேட்டி : முனியம்மாள் கோட்டூர், நாள் : 2.3. 1998
9. பேட்டி : தீத்து, நாள் : 5.3.2000

# அய்யலூர் வண்டிக்கருப்பசுவாமி வழிபாட்டு மரபுகள்

**நா. வேல்முருகன்,** எம்.ஏ.,எம்.ஃபில்.,
*ஜமால் முகமது கல்லூரி, திருச்சி.*

## முன்னுரை

வேடசந்தூர் வட்டம், திண்டுக்கல் மாவட்டத்தில் அமைந்துள்ளது அய்யலூர் கிராமம். இக்கிராமத்தில் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் வசித்து வருகின்றனர். இவ்அய்யலூரில் இருந்து ஒரு கல் தொலைவில் மிவும் பிரசித்துப் பெற்ற வண்டிக் கருப்ப சுவாமி கோவில் உள்ளது. அய்யலூர் அருகில் உள்ள குறுந்தம்பட்டி கிராமத்து நாயக்கர்களின் மேற்பார்வையில் திருவிழாக்களும், கோயிலின் பராமரிப்பும் நடத்தி வருகிறார்கள். அக்கோவிலின் வழிபாட்டு மரபுகள் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

## வண்டிக் கருப்பின் பிறப்பு வரலாறு

திருச்சிக்கு வடக்கே கொல்லி மலையில் தொட்டியம் பகுதியைச் சேர்ந்த அய்யலூரில் அய்யனார், பெரிய கருப்பு, சின்னக் கருப்பு அதோடு சேர்ந்த 27 பாளையப்பட்டு தெய்வங்கள் அம்பல இனத்தாரால் வழிபாடு செய்யப்பட்டு வந்தன. இத்தெய்வங்களுக்கு வழிபடு பூசாரிகளாக அமைந்தவர்கள் கண்ணப்பக் கோத்திரத்தைச் சேர்ந்த அம்பலங்கள். மாலிக்காபூர் படையெடுப்பை ஒட்டி இந்நிலப்பகுதி இஸ்லாமிய ராஜாக்களின் கைகளில் சென்றது. அதில் ஒரு இஸ்லாமிய ராஜா அம்பல இனத்தைச் சேர்ந்த பெண்ணை மணக்க விரும்பிப் பெண் கேட்க அவர்களோ புற சமயத்தார் எனக் கூறித் தர மறுக்கின்றனர். இதனால் இஸ்லாமிய ராஜாவின் கோபத்துக்கு இரையாகிப் பல இன்னல்களுக்கு ஆளாகின்றனர். துன்புறுத்தல் தாங்காமல் தங்கள் குலப் பெண்ணை மணம் முடித்துத் தர சம்மதம் தெரிவிக்கின்றனர். அதையொட்டி திருமண விருந்தும் சிறப்பாக நடைபெற அம்பல இன மக்கள் மணப்பெண்ணுடன் கலந்து கொள்கின்றனர். விருந்தில் உணவோடு சிறப்பாக கறியும் பரிமாறப்படுகிறது. அம்பல இனமக்கள் இது மாட்டுக்கறி என்று தெரிந்து உண்ணாது, மாட்டுக் கறி உண்ணும் இனத்தார்க்குப் பெண் கொடுப்பதா

என்று நினைத்து மணப் பெண்ணை அழைத்துக் கொண்டும், அவர்கள் வணங்கும் தெய்வங்களையும் எடுத்துக் கொண்டு வேறு ஊர் செல்ல முடிவு செய்தனர். அன்று இரவே செல்கின்றனர். திருமண நேரம் நெருங்கி வரும் போது மணப்பெண்ணை அழைத்து வரச் சென்ற இஸ்லாமிய படைவீரர்கள் மணப்பெண்ணிற்கு பதில் நாய் அமர்ந்து இருப்பதைப் பார்த்து ஏமாற்றப்பட்டதை அறிகின்றனர். அவர்களைப் பழிவாங்க குதிரைகளில் ஏறி விரட்டுகின்றனர். விருந்து மண்டபத்தில் இருந்து தப்பித்த அம்பலங்கள் தங்களுடைய குலத்தெய்வங்களான அய்யனாரையும் பெருமாளையும், பில்லுக் கோட்டையில் (வைக்கோல் கட்டு) சுற்றித் தூக்கிக் கொண்டு தெற்கு திசை நோக்கி தப்பிச் செல்கின்றனர். இடையில் இஸ்லாமியப் படைவீரர்களிடம் மாட்டிக் கொண்டு மணப்பெண் உட்பட பலர் போர் புரிந்து மடிகின்றனர். அவர்களிடம் இருந்து தப்பிய 9 பேர் மட்டும் மழை பெய்யும் இரவுப் பொழுதில் காவிரிக்கரையில் வந்து நிற்கின்றனர். காவிரியில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகின்றது. முதுகுக்கு பின்புறம் இஸ்லாமிய படைவீரர்களின் ஆவேச விரட்டல் சிக்கி தவிக்கின்றனர். அப்போது அந்த ஒன்பது பேரும் கொல்லிமலை அய்யனார், பெரியண்ணன், சின்னக் கருப்பு, பெருமாள் மூவரையும் கும்பிட்டு காவிரி வெள்ளத்தைக் கடத்திவிட வேண்டும் என்று வேண்டுதல் வைக்கின்றனர். வேண்டுதலின் அற்புதமாக வடகரையில் இருந்த புங்க மரமும், தென்கரையில் இருந்து மூங்கில் மரமும் பாலமாக மாறி வளைந்து கொடுக்க அதன் மேல் ஏறி தென்கரைக்குத் தப்பி விடுகின்றனர். ஒன்பது பேரில் சாமி சிலைகளைத் தூக்கி வந்த கோட்டை கட்டி என்பவன் இறுதியாகத் தென்கரையில் கால் வைக்க வளைந்த மரங்கள் மீண்டும் பழையபடிக்கு நிமிர்ந்து நின்றன. விரட்டி வந்த இஸ்லாமியப் படைவீரர்கள் அவர்களைத் தொடர முடியாமல் தேங்கிப் போய் வடகரையிலே நின்று விடுகின்றனர்.

தப்பி வந்த ஒன்பது பேரும் கால்நடையாகத் தென்திசை நோக்கி நடந்து வரும் போது எதிர்பட்ட கணவாய்க்கு அருகில் பில்லுக்கோட்டையில் இருந்து சின்னக் கருப்பு மட்டும் தப்பி கீழே விழுந்துவிடுகின்றது. சுமந்து வந்த கோட்டை கட்டி தூக்கிப் பார்த்தும் எழுப்ப முடியவில்லை. ஒன்பது பேரும் சேர்ந்து முயற்சி பண்ணித் தூக்க முயன்றும் முடியவில்லை. அப்போது அவர்களில் ஒருவருக்குச் சாமி வந்து ***எனக்கு இந்த இடமே சரியானது இனி நான் எங்கும் வரமாட்டேன். நீங்கள் அருகில் உள்ள ஊரில் சென்று குடியேறவும்*** என அருள் வாக்கு கொடுக்கின்றார். அதுபடியே ஒன்பது பேரும் தங்கள் குடியிருப்புக்கு அய்யலூர் எனப் பெயர்வைத்துக் குடியேறுகின்றனர்.

வெள்ளைக்காரர்கள் வடதிசையில் இருந்து தென்மார்க்கமாக இரும்புப் பாதை அமைக்க சர்வே எடுக்கின்றனர். அவர்களின் சர்வே குறியீடு சின்னக்கருப்பின் சிலையை ஒட்டி வந்தது. அந்த இடத்தில் சர்வே செய்ய வந்த வெள்ளைக்காரனை சின்னக் கருப்பு துள்ளி விழச் செய்தது. அதன்பின் சர்வே அவ்விடத்தை விட்டுச் சிறிது தொலைவில் அமைந்து உள்ளது. இதன்பின் புகை வண்டி முதன் முதலாக விடும் பொழுது அந்த வண்டியைத் தடுத்து நிறுத்தியதால் அக்கோவிலில் உள்ள சின்னக் கருப்பை வணங்கி சென்றனர். அக்கோவில் இருக்கும் சாமிக்கு வண்டிக் கருப்பு எனவும் வெள்ளையர்கள் பெயர் இட்டனர் அதன்பின் இப்பெயரே தற்போது இருந்து வருகின்றது.

## கோயிலின் உட்புற அமைப்பு

கோவிலின் உட்புறத்தில் இரண்டு பாய்ந்து செல்லும் குதிரைகளில் சின்னக்கருப்பு அமர்ந்து வேட்டைக்கு செல்வது போன்று பெரிய தோற்றத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இவருக்குப் பணிவிடை புரியும் பணிப்பெண் ஆளாத்தி அம்மாள் உருவம் குதிரையின் அருகில் வைக்கப்பட்டுள்ளது. இக்கருப்பசாமி அமர்ந்திருக்கும் பாய்ந்து செல்லும் குதிரைகளின் முன்புறக் கால்களை நான்கு பூத கணங்கள் தலைமீது தாங்கியிருக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. கருப்புசாமியின் உருவங்கள் மண்ணால் செய்யப்பட்டு வர்ணம் பூசப்பட்டதாகக் காட்சியளிக்கின்றன. இதன் வலதுபுறமாக ஏழு சப்த கன்னிமார் சிலைகள் சிறியது மூன்று, பெரியது மூன்றும் வைக்கப்பட்டுள்ளன. மக்கள் நேர்த்திக் கடனுக்காக அளித்துள்ள வேட்டைநாய்கள், பாய்ந்து செல்லும் குதிரைகள், ஆளாத்தியம்மன், இரண்டு முனிகள், இடதுபுறம் ஆட்டின் இலைகள், சின்னக் கருப்பின் அருகில் தீப கலசங்கள், கிளிக்கூண்டும் வைக்கப்பட்டுள்ளன.

## வழிபாட்டு முறைகள்

ஏழு வருடத்திற்கு ஒரு முறை *பெரிய குப்பிடு* எனப்படும் திருவிழா நடைபெறும். வருடத்திற்கு ஒரு முறை ஆடிமாதம் 18-ம் நாள் இரண்டு ஆடு வெட்டிப் படையல்போட்டு வழிபடும் முறையும் நிகழ்ந்து வருகின்றது. இது தவிர நேர்த்திக் கடன்களுக்காகப் பொங்கல் கிடா வெட்டுவது போன்றவை தினந்தோறும் இக்கோயிலில் நடைபெறுகிறது. படையல் போடுவது என்றால் இருபத்தொரு பகுதியாகப் படையல் பொருள்களை இலைகளில் அமைத்துக் கருப்பின் முன் படைக்கப்படும்.

கருப்பிற்கு வெண்பொங்கல் மட்டுமே வைப்பர் பின்பு பூசைக்கு நறுமண மலர்கள், தேங்காய், வாழைப்பழம், சூடம், சாம்பிராணி,

எலுமிச்சை பழம், ஈரல், பொங்கல் போன்றவற்றைப் பூசாரி, கருப்பின் முன் படைத்து வழிபாடு நடத்துவார். பக்தர்களுக்கு எலுமிச்சை பழமும், புளியம்பட்டையில் அரைத்த திருநீறையும் பூசாரி வழங்குவார்.

## நேர்த்திக் கடன்கள்

சின்னக் கருப்பிடம் வேண்டுதல்செய்து செயல் நிறைவடைந்தவர்கள் மண்குதிரை பொம்மைகளைச் செய்து வைப்பர். இச்சிலைகளே இக்கோயிலில் அதிகம் காணப்படுகின்றது. கருப்பின் அருள் பெற்றுக் குழந்தைப் பாக்கியம் பெற்ற மங்கைகள் மல்லுத் துணியில் (வெள்ளை வேட்டி) கல்லை வைத்து சுற்றியுள்ள மரங்களில் தொட்டில் அமைப்பார். நாய், ஆடு, கன்னிமார் போன்ற சிலைகளையும் நேர்த்திக் கடன்களுக்காகச் செய்து வைப்பதும் உண்டு.

## வண்டிக் கருப்பு கோயிலின் சுற்றுப்புற அமைப்பு

கோயிலின் புறப்பகுதியில் பல்வேறு மரங்கள் காணப் படுகின்றன. சின்னக் கருப்பு இருக்கும் இடத்தை ஒட்டி உசிலை மரம் ஒன்றுண்டு. அடுத்து கருக்காவாட்சி, வக்கணாச்சி, ஆவி போன்ற மரங்களும் உள்ளன. ஆலமரம் ஒன்றும் உள்ளது. இதன் அடியில் முன்னாடி கருப்பின் சிலை அமைக்கப்பட்டுள்ளது. சின்னக்கருப்பு கிழக்கு நோக்கி அமர்ந்து அருள் செய்கின்றார். கருப்பை வணங்குபவர்கள் வடக்கு நோக்கி வழிபடுவர். கோயிலின் முன்புறம் மண்டபம் அமைந்துள்ளது. கோயிலின் மேற்புறம் கோபுரம் ஏதுமின்றி இருக்கின்றது. கோயிலைச் சுற்றி மூன்றுபுறமும் காடுகள்தான் அமைந்துள்ளன.

## முடிவுரை

தினந்தோறும் செல்லும் வாகனங்கள் அக்கோயிலில் சென்று வணங்கிச் செல்வர். இக்கோயிலில் நடைபெறும் திருவிழாக் காலங்களில் வெட்டிய கிடாவை தோல் உரிக்காமல் அப்படியே சுட்டுத்தின்பர். இக்கோயிலுக்குப் பூசாரி அம்பலக்காரர்கள்தான். மற்ற யாரும் பூசாரி ஆகமுடியாது. இக்கோவிலுக்கு ஆண்டு திருவிழா அல்லாது சிறப்பான திருவிழா ஏழு ஆண்டுக்கு ஒருமுறை நடைபெறும். ஆடிமாதம் 18-ம் தேதி தான் திருவிழாக் காலமாக அமையும் என்று கூறுவர்.

# நடுகல் வழிபாடும் நாட்டுப்புறக் கதைப்பாடல்களும்

**க. ஜெயலட்சுமி,** எம்.ஏ.,எம்.ஃபில்.,
*சுவடியியல் துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.*

வீரவழிபாடு என்பது பண்டைய நாகரீக மக்களிடையே காணப்படும் பொதுவியல்பாகும். போரில் இறந்தவனுக்கென்று மிகச் சிறப்பு வாய்ந்த உலகம் ஒன்று உண்டு என்பது பண்டைய நாகரீக மக்கள் அனைவருடைய நம்பிக்கையாகும். கிரேக்கர், பண்டைய ஜெர்மானியர், ரோமானியர், எகிப்தியர், தமிழர், சீனர் அனைவரும் வீரசுவர்க்கம் என்ற கருத்தில் நம்பிக்கை கொண்டிருந்தனர் (1 - 53). போரில் வீரமரணம் அடைந்தோர், சிறந்த செயல் புரிந்தோர், புகழ், உலகில் நிலைத்து நிற்க நடுகல் நடுவர். ஆதிமனிதன் ஆவியின் சீற்றத்தைத் தணிக்கவே ஆவியை வழிபட ஆரம்பித்தான். ஆவிகள்தான் அவனது செயல்களைக் கட்டுப்படுத்துவதாக நம்பினான். நடுகல் வழிபாடு இதன் எச்சமே. இறந்து போனவர்களுக்குக் கல் நாட்டிப் பூசை செய்தல் நடுகல் வழிபாடாகும். இறந்தவர்களை வழிபடுகின்ற வழிபாடானது வீரயுகக் காலத்திலிருந்து காணப்படுகிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாக தமிழர்களிடத்துத் தோன்றிய வீரவழிபாட்டு மரபு நடுகல் வழிபாடாக தொடர்ந்து வந்துள்ளது. அதுவே இன்று கதைப்பாடல்களில் வழங்கும் சிறுதெய்வ வழிபாடாகவும் வளர்ந்து வந்துள்ளது என்பதை விளக்குவது இக்கட்டுரையின் நோக்கம்.

***நடுகல் வழிபாடு :*** நடுகல் என்பது வென்றியான் மேம்பட்டத் துறக்கம் புக்க பெருவீரர் பெயரையும் அவர்கள் ஆங்காங்கு புரிந்த போர்ச் செயல்களையும் ஒரு நெடுங்கல்லில் எழுதி, அதனை நாட்டி அதில் அவர்களின் உருச்செய்து மாலை, பீலி, புனைந்து வழிபடுதல் என்று அபிதான சிந்தாமணி பொருளுரைக்கும் (2:2110). கிரேக்க நாட்டில் எதென்சு நகரில் இறந்த வீரர்களின் நினைவுச் சின்னங்களாக நெடுங்கற்கள் எழுப்பப்பட்டன. ***ஒயின் வண்ணக் கடற்பரப்பில் கப்பல் வரும் பொழுது வழியில் தென்படும் கரையோரங்களில் மறவர் நினைவுக் கற்கள் (ஆநஅடிசயைடள டிக றுயசசஙைசள)*** ***நிறுத்தப்பட்டிருக்கும். அவையெல்லாம் போரில் மடிந்த மறவர்களின் நினைவாக எழுப்பப்பட்டவை. அவர்கள் எல்லாம் தம் புகழ் நிறுத்தித்***

***தாம் மாய்ந்தவர் ஆவார்*** (3:263) என இலியட் இதிகாசம் கூறும் என ***க.ப.அறவாணன்*** தமது நூலில் குறிப்பிடுவார். பல்வேறு துறைகளில் வீரங்காட்டியோர்க்கு நடுகல் எடுத்து வழிபடும் வழக்கமே பின்னர் கிராம தேவதை வழிபாடாக வளர்ந்தது. பாண்டி நாட்டில், மதுரை வீரன் வழிபாடு நடுகல் வழிபாட்டிலிருந்து வளர்ச்சியடைந்திருக்கலாம் (3:73) என்று நாகசாமி குறிப்பிடுவார். சங்க காலத்தில் மலரும் மதுவும், ஊனும் சோறும், நடுகற்களுக்குப் படைக்கப்பட்டதை நோக்குமிடத்து பிற்காலத்தில் (இன்றுவரை) தாழ்ந்த சாதியினர் எனக் கருதப்படுவோர் வேள்வி நடத்தி மடை கொடுத்து சிறுதெய்வங்களை வழிபடுவது எமது நினைவிற்குவரும். ஐயனார், மதுரைவீரன், இருளன், கருப்பன், நொண்டி முதலியன நடுகற் தெய்வங்களை ஒத்தனவாயுள்ளன என்பார் ***வித்தியானந்தம்*** (4:112).

## தொல்காப்பியர் கூறும் நடுகல்

தொல்காப்பியர்,

***காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல்***
***சீர்த்தக சிறப்பிற் பெரும்படை வாழ்த்தலென்று***
***இருமூன்று வகையிற் கல்லொடு புணரச்***
***சொல்லப்பட்ட எழுமூன்று துறைத்தே***

என்று நடுகல் அமைப்பதற்குரிய முறைகளை விளக்குவார். ***காட்சி*** : போரில் இறந்து வீரனுக்கு கல்லை எடுத்து வரலும், கல்லைத் தேர்ந்தெடுத்தலும். ***கால்கோள்*** : தேர்ந்தெடுத்த கல்லை எடுத்து வரலும், நடுதற்குரிய நிமித்தம் பார்த்தலும், ***நீர்ப்படை***: எடுத்து வந்த கல்லினை மங்கள நீராட்டல், ***நடுதல்:*** நீராடிய கல்லினை நடுதல். ***பெரும்படை*** : நட்ட கல்லிற்கு கோட்டம் செய்தல். ***வாழ்த்தல்*** : கல்லினை வணங்குதல்.

***சங்க இலக்கியத்தில் நடுகல் :*** நடுகல் வழிபாடு பற்றிய செய்திகளைச் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. ***கைலாசபதி***, தமிழ்நாட்டில் வீரவணக்கம் சங்ககாலத்தில் பெருவழக்குற்றிருக்கச் கூடும் எனக் கருதுவார் (5:53) அகநானூறு, ஆநிரை மீட்கும் போரில் மடிந்த வீரனுக்கு நடுகல் எழுப்பப்பட்டு, அதில் அவர்கள் பெயரும் புகழும் எழுதப்பட்டும் என நடுகல் பற்றிக் கூறும். இதன் வளர்ச்சிதான் நாட்டுப் புறத்தெய்வ வழிபாடாகும். இது ஆவியினைத் திருப்திப்படுத்தும் நோக்கமாகும். போரில் இறந்தவர்களுக்கு நன்றி செலுத்தவும், அவர்கள் மற்றவர்களுக்கு உதாரண புருசர்களாகத் திகழவும் நடுகல் எழுப்பப்பட்டது. சங்க இலக்கியத்தில் ஔவையார் பாடல்கள் அதியமானுக்கு நடுகல் எழுப்பப்பட்ட செய்தியைத் தெரிவிக்கின்றது.

*இல்லாகியரோ, காலை மாலை*
*அல்லாகியர் யான் வாழு நாளே*
*நடுகற் பீலி சூட்டி நாரறி*
*சிறுகலத்து உகுப்பவுங் கொல்வன் கொல்லோ*
*கோடுயர் பிறங்க மலை கெழீ இய*
*நாடுடன் கொடுப்பவுங் கொள்ளாதோனே* (புறம். 223)

போரில் வீரம் விளைவித்த மறவர்க்கு மட்டுமல்லாமல் வடக்கிருந்து உயிர் நீத்த கோப்பெருஞ்சோழனுக்கு நடுகல் எடுத்த செய்தியைக் கீழ்வரும் பொத்தியார் பாடல் மூலம் தெளியலாம்.

*பலர்க்கு நிழலாகி உலகம் மிக்கூறித்*
*தலைப் போகன்மையிற் சிறுவழி மடங்கி* ......
*தொன்னட்புடையார் தம் உழைச் செலினே*

நடுகற்களுக்குப் பீலிசூட்டி, கள்படைத்து, செம்மறியாட்டுக் குட்டியைப் பலி கொடுத்து, கைகூப்பி வழிபட்ட செய்தியை சங்கப்பாடல்கள் பலவற்றின் மூலம் அறியலாம். தொல்காப்பியத்தைத் தொடர்ந்த புறப்பொருள் வெண்பா மாலை, வீரசோழியம், இலக்கண விளக்கம், நேமிநாதம் ஆகிய இலக்கண நூற்களில் நடுகல் எடுக்கப்படும் முறைகள் கூறப்படுகின்றன. சங்க இலக்கியத்திற்குப் பின் குறள், ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, சிலம்பு, மணிமேகலை, பெருங்கதை, சிந்தாமணி, திருவாரூர் மும்மணிக்கோவை ஆகிய இலக்கியங்களில் நடுகல் பற்றிய செய்திகள் இடம்பெறுகின்றன. வீரர்களின் வீரத்தைப் பாராட்டும் வண்ணம் தோன்றிய நடுகல் காலப்போக்கில் மனிதனின் மற்ற பண்புகளையும் பாராட்டும் நிலையில் அமைந்தது. பெண்களுக்கு நடுகல் எடுத்ததைப் பற்றிச் சங்க இலக்கியங்களில் குறிப்பெதுவும் இல்லை தென்னிந்தியாவில் கணவனை இழந்த பெண்டிர் தீப்பாய்ந்து இறந்த பின் அவர்களுக்குக் கல்நடும் வழக்கம் பரவலாக இருந்தது. சிலப்பதிகாரத்தில் தான் பெண்ணுக்கு நடுகல் எடுத்தாகக் குறிப்புக் கிடைக்கிறது. உயிருடன் மேலுலகம் சென்று கண்ணிக்கு நடுகல் எடுக்கப்பட்டுள்ளது. கண்ணகிக்குச் சிலை செய்ய கல்லைத் தேர்ந்தெடுக்க இடம் தேடுதலைக் கூறும் காதையே காட்சிக் காதையாகும்.

## நாட்டுப்புறக் கதைப்பாடல்களில் வழிபாடு

நடுகல்லில் தங்கும் ஆவி, நன்மையே செய்ய வேண்டும் என்பதற்காக அதனை வழிபட்டனர். இன்றைய நாட்களில் மக்கள் வழிபடும் சிறுதெய்வங்கள் நடுகல் வழி வந்தனவே. நட்டுப்புறக் கதைப்பாடல் தலைவர்கள் பீடங்களிலும், பெரிய கோவில்களிலும்

வழிபடப்படுகின்றனர். இந்து சமயக்கோட்பாடுகளை பெருநெறி, சிறுநெறி என்று இருவகையாகப் பகுப்பர். சிறுதெய்வ வழிபாடு சிறுநெறியில் அடங்கும். பிராமணரல்லாதார் இவ்வழிபாட்டை நடத்துவர். கதைப்பாடல்கள் சிறுதெய்வங்களின் தோற்றம், தன்மைப் பண்பு குறித்த செய்திகள், சிறுதெய்வங்கள் சிவனிடம் வரம் பெறுதல், மக்கள் வழிபடச் செய்தல், சிறுதெய்வங்களை அடக்குதல் ஆகிய குறித்த செய்திகள் இடம்பெறுகின்றன. வீரதீரச் செயல்கள் புரிந்து நடுகல்லாக வழிபடப்படும் கதைப்பாடல் தலைவர்கள் முத்துப்பட்டன், காத்தவராயன், மதுரைவீரன் போன்றோர் குறிப்பிடத்தக்கவர். பெண்களில், நல்லதங்காள், இசக்கி, நீலி, பொன்னிறத்தாள், தோட்டுக்காரி எனத் தெய்வப்பட்டில் நீளும். பெண் தெய்வங்களின் தோற்றங்களுக்குக் காரணமாக கன்னி மரணமடைதல், கர்ப்பிணி மரணமடைதல் முதலியன அமைகின்றன. நாட்டார் கதைகளில் அகால மரணமடைந்தவர்கள் தெய்வ நிலைக்கு உயர்த்தப்படுகின்றனர். அகால மரணமடைந்தவர்கள் இறந்த பின் கொடிய செயல்களைச் செய்ய, அதற்கு அஞ்சிய மக்கள், அவர்களை வழிபாடு செய்தனர். மதுரைவீரன், இருளன், கருப்பன், நொண்டி முத்துப்பட்டன் போன்றோர் நடுகல் மரபில் வணங்கப்பெறும் சிறுதெய்வங்களாகும்.

***அகால மரணத்தெய்வங்கள் :*** பாளையக்காரர்களின் ஆட்சிக்காலத்தில் பிற்காலத் தெய்வங்களின் வழிபாடு தொடங்குகிறது. இவர்கள் கொல்லப்பட்டவர்களின் ஆவிகளும். அதிகாரம் படைத்தவர்கள் பிறசாதிகளில் உள்ள பெண்களை விரும்பிக் கைப்பற்றும் செயல்களில் ஈடுபட இதனால் எழுந்த போராட்டங்களில் கொல்லப்பட்டவர்கள், தெய்வங்களாக வழிபடப்படுகின்றனர். ***பாலம்மாள் வழிபாடு*** கற்புடைய பெண்ணின் மரணத்திலிருந்து தோன்றியதாகும். இது கொலையாகும். வெள்ளைக்கார அதிகார வர்க்கத்தின் பகைமையைச் சமாளித்து காமுகன் துரையிடமிருந்து மகளைக் காப்பாற்றி, சாதி மீறிய காமத்திற்கு ஆட்படாமல் இருக்கவே பாலம்மாள் கொலை செய்யப்படுகிறாள். அவள் கன்னித் தெய்வமாக வணங்கப்படுகிறாள். அகால மரணமடைந்ததோர் ஆவியாக வந்து மரணத்துக்குக் காரணமானவர்களைப் பழி வாங்கியதாகப், பெரும்பாலான கதைப்பாடல்கள் காணுகின்றன. நியாயமற்ற முறையில் கொல்லப்பட்டால், கொலையுண்டவர், கொலை செய்தவரைப் பழிவாங்கும் என்ற எண்ணம் மக்களிடம் வேரூன்றியிருந்தது.

| | |
|---|---|
| ***தடிவீர சுவாமிகதை*** | ***8440*** |
| ***சின்னத்தம்பி கதை*** | ***11613*** |

| | |
|---|---|
| *முத்துப்பட்டன் கதை* | *8018* |
| *வன்னிராயன் கதை* | *8017* |
| *தோட்டுக்காரியம்மன கதை* | *316* |
| *பொன்னிறத்தாள் கதை* | *1340* |

எனக் கொல்லப்பட்டவர்கள் பழிவாங்கியதாகக் கதைப்பாடல்கள் கூறும். ***கொல்லவரம், வெல்லவரம் கணபூசை கொள்ளவரம்*** என இறைவனிடம் வரம் பெற்றதாகக் கதைப்பாடல் கூறும்.

## சிறுதெய்வங்கள் வரம்பெறுதல்

அகாலமரணச் சிறுதெய்வங்கள் பூவுலகில் கோவில்கொண்டு நிலையான வழிபாடு பெறச் சிவனிடம் வரம் கேட்கின்றன. பூவுலக மாந்தர்கள் பூப்பொரியும், பொங்கலும் படைத்துப் பூசை செய்யவும், மதுரை நகரில் கோவில் கொள்ளவும், ***வாவறை இயக்கி, பேச்சு முத்து இயக்கி, வரித்தலை இயக்கி*** என்றும் பெயர்களைப் பெறவும் தங்கள் பெயரைச் சொன்னவருக்குப் பிணிகள் அகலவும், குழந்தைப்பேறு கிடைக்கவும், திருவனந்தபுரம் முதல் திருச்செந்தூர் வரை புகழ் பரவவும், கன்னியாகுமரிலிருந்து திருவனந்தபுரம் வரை பூசை பெறவும், சொரி முத்தையன் கோவிலில் துணைத் தெய்வங்களாக வீற்றிருக்கவும் திருச்செந்தூர் கொடிமரத்தில் உறையவும், தேரடிமாடன் எனப் பெயர் பெறவும், சிறுதெய்வங்கள் சிவனிடம் வரங்கள் கேட்கின்றன.

## மரங்களும் சிறுதெய்வங்களும்

இறந்தவர்களின் ஆவி, மரங்கள் வாழும் என்ற நம்பிக்கை சிந்துவெளி மக்களிடம் உண்டு (6:199) மரங்களுக்கும், சிறுதெய்வங்களுக்கும் உள்ள தொடர்பு குறித்து சங்க இலக்கியங்கள் விரிவாகக் கூறும் (7 : 10 ) ***சுடலைமாடன் மரத்தில் உறைந்தது நீலியும் நீலனும் வேப்பமரத்தில் உறைந்தது பூதங்கள் பேய்கள் மரத்தில் நிலைபெற்றது*** (8 : 18) என்றும் கதைப்பாடல்களில் கூறப்படும் சிறு தெய்வங்களுக்கும் மரங்களுக்கும் தொடர்பு காணப்படுகின்றது.

***பலி கொடுத்தல் :*** சிறுதெய்வங்களுக்குப் பலி கொடுத்தால் அதிக சக்தி கிடைக்கும் என்ற நம்பிக்கை நாட்டுப்புற மக்களிடம் உண்டு. தமிழகத்தில் 6,7,8 ஆம் நூற்றாண்டுகளிலும் கொங்கு நாட்டில் சென்னிமலை, பேரூர், அவினாசி, அன்னூர் ஆகிய இடங்களிலும் நரபலி கொடுக்கப்பட்டது (9: 41) நாட்டுப்புறக் கதை சங்ககால நடுகல் வழிபாட்டின் போது செம்மறி ஆட்டுப் பலியினை நமக்கு வேலத்தி தன் மகள் செண்பகக் குட்டியைப் பலிகொடுப்பதாகக் கூறப்படுகிறது. சுடலைமாடசாமி கதை.

சுடலைடாமன் வேள்விக் குழியிலிருந்து தோன்றி, கிடா, பன்றி, கோழி ஆகியவற்றைப் பலி கேட்கின்றான். மேலும், களிப் பெரும்புலையன் என்ற மந்திரவாதியிடம் சூல்கொண்ட ஆடு, சூல் கொண்ட பன்றி ஆகியவற்றைப் பலியாகக் கேட்கிறான். மந்திரவாதி சுடலைமாடனுக்கு அவன் கேட்ட பலியுடன் ஏழுமாதக் கர்ப்பிணியைப் பலி கொடுக்கிறான்.

பெண் தெய்வங்கள் : பெண்ணைத் தெய்வமாகவும் கன்னியாகவும் உருவகப்படுத்திக் கூறுவது மிகப் பழங்கால மரபாக உள்ளது. எல்லோரையும் பெற்ற தாயாகவும், அழியாத கன்னியாகவும் கருதுவது தமிழகத்தில் மட்டுமல்லால் சுமேரியா, எகிப்து, சிரியா, இந்தியா ஆகிய நாடுகளின் பழைய நாகரிகங்களில் காணப்படும் என்பார் பி.எல்.சாமி. பயிர்த்தொழிலில் ஈடுபடத் தொடங்கிய காலத்தில் இனக்குழுக்கள் செழிப்பைப் பெண் தெய்வமாக வழிபடத் தொடங்கினார். இதனால் தாய்த் தெய்வ ழிபாடு தொடங்கியது என்பார் பே.ரா. வானமாமலை. தமிழகத்துத் தென்பகுதியில் உள்ள பெண் தெய்வங்களை ஆராய்ந்து அவர்களை ஐந்துவகைப்படுத்தலாம் என்பார் பொன் கோவிந்தாமி, பாரதி வழிபாடு, பத்ரகாளி வழிபாடு, முத்தாலம்மன் வழிபாடு, சக்தி வழிபாடு, பிற்காலப் பெண் தெய்வங்கள் எனப் பகுக்கலாம்.

## முடிவுரை

நடுகல் வழிபாடு தொன்றுதெட்டு இருந்துவருகிறது என்பதை பண்டைய இலக்கியங்கள் வழி அறியலாம். பல்வேறு துறைகளில் வீரங்காட்டியோர்க்கு நடுகல் எடுத்து வழிபடும் சங்ககால வழக்கமே பிற்காலத்தில் கிராம தேவதை வழிபாடு என வளர்த்தது எனலாம். கற்புடைய பெண்கள் கன்னியாகவோ, கர்ப்பிணியாகவோ, கொலையுண்டு அல்லது தற்கொலை செய்து இறந்துபட அவர்கள் தெய்வமானார்கள். பாண்டி நாட்டில் மதுரை வீரன் வழிபாடு நடுகல் வழிபாட்டிலிருந்து வளர்ச்சியடைந்து என அறிஞர்களும் கருதுவர். 2000 ஆண்டுகளுக்கு முன்னதாகத் தமிழர்களிடத்துத் தோன்றிய வீர வழிபாட்டு மரபே நடுகல் வழிபாடாகத் தொடர்ந்து. அதுவே இன்றைய சிறுதெய்வ வழிபாடாகவும் வளர்ந்துள்ளது.

# காட்டுநாயக்கர் வழிபாட்டு நெறி

**முனைவர் வெ. ஜெயலெட்சுமி**, எம்.ஏ., எம்.ஃபில்.,பிஎச்.டி.,
*அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்*

காட்டுநாயக்கன் என்ற பழங்குடி இனத்தைச்சேர்ந்தோர் இன்று தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் பரவலாக வாழ்கின்றனர். ஆந்திர மாநிலத்தைப் பூர்வீகமாகவும், தெலுங்கைத் தாய்மொழியாகவும் கொண்டுவாழும் இவ்வினத்தவர் மதுரையில், எல்லீஸ்நகர், முனிச்சாலை, தெற்குவாசல், கிழவாசல், சிம்மக்கல், திருப்பரங்குன்றம், புட்டுத்தோப்பு ஆகிய பகுதிகளைத் தமது வாழிடமாகக் கொண்டுள்ளனர் இவர்கள் மலைகளிலும், காடுகளிலும் நாடோடியாக வேட்டையாடி வாழ்ந்தனர் வேட்டையாடிப் பெற்றவைகளை உண்டு மகிழ்ந்தனர். நாகரிகம் செல்லச் செல்லக் காடுகளை விட்டு நாடுகளில் வாழத் தலைப்பட்டனர். இருந்தபோதிலும் இவ்வினத்தவர் தங்களுக்கே உரித்தான பண்பாடு, பழக்கவழக்கம், வழிபாட்டு முறை ஆகியவற்றைக் கடைப்பிடிக்கத் தவறுவதில்லை. நாடுகளில் பல்வேறு பணிகளில் ஈடுபட்டபோதும் தமது குலமுறைச் சடங்குகளிலும், குல தெய்வ வழிபாட்டிலும் பெரிதும் நம்பிக்கை கொண்டிருக்கின்றனர். பிற சமூக இனத்தினர்போல சிறு தெய்வ வழிபாட்டினை இவ்வினத்தவர் மேற்கொண்டிருந்தாலும், இவர்களது வழிபடும் முறை, பலியிடும் வழக்கம், வழிபாட்டின்போது பூசாரியின் சொல் கேட்டு நடத்தல், வழிபாட்டின் போது தவறு செய்தால் தண்டனை வழங்குதல், வழிபாட்டு முறைகள் ஆகியவை முற்றிலும் மாறுபட்டுக் காணப்படுகின்றன. இந்தப் பழங்குடி மக்களின் வாழ்க்கை முறையை அறிவதையும், வழிபாட்டு முறையினை விளக்குவதையும், அவர்களின் தனிப்பட்ட கலாச்சாரக் கூறுகளைக் கண்டறிந்து வெளிப்படுவதையும் நோக்கமாகக் கொண்டு இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.

## வழிபாடு

காட்டு நாயக்கப் பழங்குடியினர் காடுகளிலும், மலைகளிலும் வேட்டையாடி உணவு பெற்றிருக்கின்றனர். வேட்டையாடும் பொழுது வேட்டை விலங்கினங்கள் கிடைக்க வேண்டும், வேட்டைக்குச் செல்பவருக்கு எந்தவிதத் தீங்கும் நேரக்கூடாது என்பதற்காகக் ***காட்டுச்சாமி*** என்ற தெய்வத்தை வணங்கினர். இன்றும் இவ்வினத்தவர்

ஊருக்குள் வாழ்ந்தபோதும் தமது பண்பாட்டு மரபினை மீறாது இக்காட்டுச்சாமியை வழிபட்டு வருகின்றனர். இதுதவிர மாரியம்மனுக்கும் விழா எடுத்து வழிபடுகின்றனர். தங்களது இருப்பிடத்திற்கு அருகில் மாரியம்மன் கோயில் அமைத்து வழிபடுகின்றனர். இவ்வினத்தவரில் 1. ஆய்டொடு, 2. கூன்றொடு, 3. செராஓடு, 4. செருக்கோடு, 5. அய்யம்பாளையங்கோடு என்ற உட்பிரிவுகள் காணப்படுகின்றன. செராடும், செருக்கோடும், அய்யம்பாளையங்கோடும் பங்காளிகள். கூன்றொடு - சின்னக்கூன்றொடு, பெரிய கூன்றொடு, செராஓடு செருக்கோடு உடன் சம்பந்தம் செய்வார்கள். ஆய்ரொடும் இவர்களுடன் சம்பந்தம் செய்வர்.

## காட்டுச்சாமி வழிபாட்டு முறை

வருடத்திற்கு ஒருமுறை சித்திரை மாதத்தில் அழகர் ஆற்றில் இறங்கும் நாளன்று (சித்திரா பௌர்ணமி) இவ்விழா எடுக்கின்றனர். வழிபாட்டு நாளன்று காலையில் காட்டுச்சாமியாகக் கருதப்படும் கல்லை வைத்துத் தேங்காய், பழம், மஞ்சள், குங்குமம் போன்ற மங்கலப்பொருட்களோடு படையலிட்டுப் பஞ்சாயத்து போன்ற காரியங்கள் நடைபெறும் பொது இடங்களில் வழிபடுகின்றனர். ஊர் பூசாரி வழிபாடு நடத்திய பிறகு பலி கொடுப்பதாக நிற்கும் கரும்பன்றியை வெட்டி அதன் இரத்தத்தை இரண்டு கைகளிலும் தடவி இவ்வினத்தவரின் வீட்டுவாசல் சுவற்றில் அடிப்பார். இவ்வாறு அடிப்பதால் தமது இருப்பிடத்திற்குள் பேய், பிசாசு, பில்லி, சூன்யம், காலரா போன்றவை நெருங்காது என்பது இவர்களது நம்பிக்கை. பலியிட்ட பின் பலியிட்ட பன்றியின இறைச்சியை ஒவ்வொரு வீட்டிற்கும் பகிர்ந்து கொடுப்பர். அன்று இரவு ஓடும்பிள்ளையுடன் (தண்டல்) பத்து ஆண்கள் சேர்ந்து ஒவ்வொரு வீட்டிலும் சென்று உணவு வாங்கி வருவர். வாங்கிய உணவைப் பெரிய பாத்திரத்தில் கொட்டி ஒன்றாகக் கலந்துவைப்பர். இவ்விழாவில் உணவைப் பூசாரி ஒவ்வொருவருக்கும் கையில் கொடுப்பார். அதனைக் கையில் வாங்கி வைத்துக்கொண்டு சாமியை நினைத்து வழிபட வேண்டும். இவ்வாறு வழிபடும் போது தேள் கொட்டினாலும் கையில் உள்ள சோற்றைக் கீழே போடக்கூடாது என்பது இவர்களது ஐதீகம். அப்படியேனும் கொட்டிவிட்டால் அவர்களுக்குப் பஞ்சாயத்து அபராதம் வழங்கும். உணவு வாங்குதல், உண்ணுதல் போன்ற விழாச்சடங்குகளில் பெண்களைக் கலந்துகொள்ள அனுமதிப்பதில்லை. அச்சடங்குகளைப் பெண்கள் பார்ப்பதற்குக் கூட அனுமதிப்பதில்லை. பிற இனத்தவரையும் பார்ப்பதற்கு அனுமதிப்பதில்லை. கையில் உள்ள உணவினை பூசாரி சாப்பிடச்

சொன்னவுடன் சாப்பிட்டு கைகழுவச் சொல்லும் போது கையைக்கழுவ வேண்டும். உணவு உண்டபின்னர் வேட்டைக்குச் செல்லும் நாள் அறிவிக்கப்படும். அதன்பின்னர் ஒவ்வொருவரும் வேட்டைக்குச் செல்லும் நாள் அறிவிக்கப்படும். அதன்பின்னர் ஒவ்வொருவரும் மற்றவர்களுக்கு பட்டப்பெயர் சூட்டி விளையாடி மதுவருந்தி ஆடல் பாடலோடு மகிழ்வர். இவ்விழாவில் கலந்துகொண்டு உணவு உண்ண வராதவர்கள் தண்டனைக்குரியவர் ஆவர். வராதவர் வீட்டு வாசலில் அவர்களுக்குச் சேர வேண்டிய உணவினை மூட்டையாகக் கட்டித்தொங்கவிடுவர். ஊர்த்தலைவர் சென்று பார்வையிடுவார். உணவுப்பொட்டலம் உள்ள வீட்டில் உள்ளவர்களை அழைத்து அபராதம் வழங்கச் செய்வார். இவ்விழா முடிந்து ஒரு வாரம் கழித்து ஆண்கள் சிலர் வேட்டையாடச் செல்வர். அரிசி, சமையல் பொருட்கள், பாத்திரம் ஆகியவற்றை எடுத்துச்சென்று காட்டில் வேட்டையாடிப் பெறும் காட்டுப்பூனை, காட்டுப்பன்றி, எலி, பெருச்சாளி, நத்தை, கீரி, நரி, காட்டுப்பறவைகளின் முட்டை போன்றவற்றைச் சமைத்து உண்டுவிட்டு இருப்பிடம் திரும்புவர். வேட்டைக்குச் செல்லும்போது வேட்டை நாய்களையும் உடன் அழைத்துச்சென்று வேட்டையாடுகின்றனர். காட்டு நாயக்கன் இனத்தினர் விலங்குகளை மட்டுமின்றி ஈசலையும் பச்சையாக உண்கின்றனர். புரட்டாசி மாதத்தில் ஈசல் பிடிப்பதை ஒரு தொழிலாகக் கொண்டுள்ளனர். புரட்டாசி மாதத்தில் இடிமின்னலோடு கூடிய காலமாக இருப்பதால் அதிகளவில் ஈசல் வெளி வருகிறது. எனவே, அக்காலத்தில் ஈசலைப்பிடித்து உண்பதிலும், விற்பதிலும் அதிக ஈடுபாடு காட்டுகின்றனர். ஈசலைப்பிடித்துப் பிற இனத்தவரிடம் சென்று விற்கின்றனர்.

## மாரியம்மன் வழிபாடு

காட்டுநாயக்கப் பழங்குடியினர் தமது இருப்பிடத்தினைத் தனியாக அமைத்து வாழ்கின்றனர். தமது இனத்தினரோடு பிற இனத்தவர் கலந்துவிடாமல் இருப்பதில் மிகுந்த கவனத்துடன் செயல்படுகின்றனர். இல்ல விழாக்கள், வழிபாட்டு விழாக்கள் போன்றவற்றையும் தமது இருப்பிடத்திலேயே நடத்துகின்றனர். வருடத்திற்கு ஒருமுறை காட்டுச்சாமி கொண்டாடி வேட்டைக்குச் சென்று திரும்பிய பின்னர் வைகாசி மாதத்தில் மாரியம்மன் வழிபாடு நடத்துகின்றனர்.

மாரியம்மனுக்கு முளைப்பாரி எடுத்தல், படையலிடுதல், பலியிடுதல் போன்றவை நிகழ்த்துகின்றனர். இவ்வழிபாட்டு விழாவன்று தண்டல் மூலம் ஊர்மக்கள் அனைவரும் அழைக்கப்படுகின்றனர். உறவினர்களுக்கும் செய்தியனுப்பி அவர்களையும் விழாவில்

கலந்துகொள்ளச் செய்கின்றனர். இவ்விழாவில் மாரியம்மனுக்குத் தேங்காய், பழம், பூ, மஞ்சள், குங்குமம், பட்டாடை போன்ற பொருட்களை வைத்து வழிபாடு நடத்திய பின்னர் ஆடு, கோழி, பன்றி போன்றவற்றை அவரவர் நேர்த்திக் கடனிற்கு ஏற்பப் பலி கொடுக்கின்றனர். இவ்வினத்தவர் மாட்டைப் பலி கொடுப்பதுமில்லை; உண்பதுமில்லை. இவர்கள் பசுவினைத் தெய்வமாக மதிப்பதாகக் குறிப்பிடுகின்றனர். 15 நாட்களுக்கு முன் விரதமிருந்து வளர்த்த முளைப்பாரியை வழிபாடு, பலியிடுதலுக்கு முன் முதல் நாள் இரவில் தூக்கி ஊர் முழுவதும் சுற்றி மாரியம்மன் கோயில் முன் வைத்துக் கும்மியடித்து வணங்கிக் காலையில் அவற்றை நீர் நிலையில் கரைத்து விடுவர். அதன் பின்னர் மாரியம்மனுக்குப் பூஜைப்பொருட்களைப் படையலிட்டுப் பொங்கலிட்டுப் படையல் வைத்து உயிரினங்களைப் பலி கொடுத்து வழிபடுகின்றனர். இவ்விழாவினை இவ்வினத்தவர் பெண் பார்க்கும் நாளாகக் கருதுகின்றனர். உறவினர்கள், ஊரில் உள்ள அனைவரும் இதில் கலந்துகொள்வதால் பெண் பார்க்கும் சந்தர்ப்பம் இவ்விழாவன்று அமைகின்றது.

மேலும், முன்பே பெண் பார்த்துப் பரிசம் போட்ட மாப்பிள்ளை பெண்ணிற்கு இவ்விழாவன்று திருமணம் நடத்தி வைத்தலும் உண்டு. காட்டுநாயக்கன் இனத்தவர் தமது குல தெய்வமாகக் காட்டுச்சாமியையும், மாரியம்மனையும் கருதுகின்றனர். இவற்றைத் தமது இல்லத்திற்கு அருகிலேயே வைத்து வழிபடுகின்றனர். பெரும்பாலும் இவ்வினத்தவர் பிற இனத்தவரைப் போன்று இத்தகைய பலியிடும் வழிபாட்டு முறையினைக் கொண்டிருந்தாலும் தற்பொழுது பிற இனத்தவரைப் போல இவ்வினத்தவர் அவ்வப்போது முருகனுக்கு மாலை போடுதல், ஐய்யப்பனுக்கு மாலை போடுதல் போன்ற பெருந்தெய்வ வழிபாட்டினையும் மேற்கொள்கின்றனர். இன்று படித்துப் பல்வேறு துறைகளிலும் பணியாற்றும் இக்காட்டு நாயக்கன் இனம் நாகரீகத்தின் கீழ்நிலையிலிருந்து சற்று முன்னேறிய நிலையில் காணப்பட்டாலும், தமது இனத்தின் பண்பாடு, பழக்க வழக்கம், வழிபாட்டு மரபுகள் ஆகியவற்றை விடாது கடைப்பிடிப்பவராகப் பெரும்பாலும் இருந்து வருகின்றனர்.

1. காடுகளில் வாழ்ந்த காலத்தில் வேட்டைக்காக வழிபட்ட செயலை இன்றும் காட்டு நாயக்கன் இனத்தவர் குலதெய்வ வழிபாடாக நிகழ்த்துகின்றனர்.

2. இவ்வினத்தவர் வணங்கும் காட்டுச்சாமி எனப்படும் குலதெய்வத்திற்கு உருவம் கிடையாது. முன்னோர் பயன்படுத்திய கல்லை வழிவழியாக வணங்கிவருகின்றனர்.

3. வேட்டைக்கு விலங்கினங்கள் கிடைக்க வேண்டும் என்பதற்காக ஏதேனும் ஒன்றைப் பலியிட்டு வழிபட்டு வந்த மரபைப் பின்பற்றி நாகரிகம் கருதி வருடம் ஒருமுறை பன்றியைப் பலியிட்டு வழிபடுகின்றனர்.

4. வேட்டையாடி உயிரினங்களை இனத்தவர் அனைவரும் கூடிப் பங்கிட்டு உண்பது பழங்குடியினரின் பழக்கம். இப்பழக்கத்தினைக் காட்டு நாயக்கன் பழங்குடி இனத்தவரும் முன்பு கடைப்பிடித்திருந்தனர். அதன் நினைவாகப் பலியிட்ட விலங்கினை இவ்வினத்தவர் அனைவருக்கும் பங்கிட்டு சமைத்து ஒன்றாக அமர்ந்து உண்டு உணவு கிடைத்த மகிழ்ச்சியில் ஆடிப்பாடி மகிழ்கின்றனர் போலும்.

5. பழங்குடிகள் இரவில் வேட்டையாடுவதில் பெரும்பாலும் பௌர்ணமி நாளைத் தேர்தெடுப்பர். அதனால் காட்டு நாயக்கரும் பௌர்ணமி நாளன்று வழிபாடு நடத்துகின்றனர். அடுத்து ஒரு மாதம் கழித்து அடுத்த பௌர்ணமியில் வேட்டைக்குச் செல்கின்றனர்.

6. குலத்தொழிலான வேட்டையாடுதலின் நினைவாக நாடுகளில் பல்வேறு தொழில்களில் ஈடுபட்ட போதிலும் பலியிடு விழா முடிந்த பின்னர் வேட்டைக்குச் செல்லுதலையும் தமது இனத்தின் பழக்கமாகக் கொண்டுள்ளனர்.

7. சிறுதெய்வ வழிபாடு மலிந்துள்ள இக்காலக்கட்டத்தில் காட்டுச்சாமியைத் தமது குலதெய்வமாக நினைத்தாலும் பிற இனத்தவரைப் போல மாரியம்மனையும் இவ்வினத்தவர் வழிபடுகின்றனர். இதற்குப் பலி கொடுத்து பொங்கலிட்டு வழிபட்டு வருகின்றனர். இம்மாரியம்மனுக்குக் கோடைவிழா எடுத்தல் போன்றவற்றையும் செய்கின்றனர்.

8. காட்டுச்சாமி கும்பிடுவதில் பெரும்பாலும் ஆண்கள் மட்டுமே பங்கேற்பதால் மற்ற உறவுக்காரப் பெண்களைப் பற்றி விபரம் அறிய முடியாமல் போய்விடுகிறது. பெண்களைப் பற்றி விபரம் அறிந்துகொள்ளவும், பெண்களும் கலந்துகொள்ளவும் விழா எடுக்க வேண்டும். அதற்காகக் காட்டுச்சாமி கும்பிடும் பரம்பரைப் பழக்கத்தினை முறியடித்துப் பெண்களைக் கலந்துகொள்ளச் செய்ய இயலாது. எனவே. மாரியம்மன் வழிபாட்டு விழாவை ஏற்படுத்தியிருக்கலாம் என்று எண்ணத்தோன்றுகிறது.

